No. 49 ஜூன் 1910

# வேதியர் விளக்கு

## THE HERMIT ON THE PILLAR

*Translated by*

**Miss Clegg, Kalmanai**

## உயர்ந்த ஸ்தம்பத்தின்மேல் தபம்புரிந்த முனிவர்

### ஆதிகிறிஸ்தவ பக்தனாகிய ஒருவனைப்பற்றிய சரித்திரம்

ஒரு சன்னியாசி தன் பாவங்களுக்கும், மற்றச் சனங்களின் பாவங்களுக்குமாக அழுதுகொண்டு நாற்பதுநாள் இரவு பகலாய் ஓர் ஸ்தம்பத்தின்மேல் தபஞ்செய்து நின்றான். ஆகாயத்தில் அதி உன்னத உயரமாய்த் தோன்றிய அத்தூணின்மேல் நின்றது சனங்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டுமென்பதைக் குறிப்பாய்க் காட்டினது. உலக சிற்றின்பங்களிற் பிரீதியுள்ள அப்பட்டணத்தாரோ அவ்வாச்சரியமான காட்சியைப் பார்க்க வந்ததேயன்றி, அவனுடைய எச்சரிப்புக்குச் சற்றென்கிலும் செவிகொடுத்தவர்களல்ல.

மூன்று வருஷங்களின்பின் ஓரிராத்திரி அமைதியான நட்சத்திரங்கள் நிறைந்து பிரபைகாலும் ஆகாயத்திற்கு நேராய் அவன் அண்ணாந்து பார்த்தபொழுது, அவனுக்குமுன் ஓர் தேவதூதன் தோன்றி 'நீ தூணை விட்டிறங்கி மேற்குத்திசை நோக்கி வெகுதூரம் போவாயாகில் அங்கே நன்மைக் கேதுவானவைகளைக் கற்றுக்கொள்வாய்' என்றார். அந்தட்சணமே அவன், தாமதமும் சந்தேகமுமில்லாமல் இறங்கி, கிழக்கு வெளுக்குமுன் அமைதியாய் மலைகளைச் சுற்றிப் போகிற குறுக்கு வழியாய் அம்மலைகளைக் கடந்தபின், கடற்

161287



கரை ஓரமாயுள்ள வெளியான ஓர் இடத்தைக் கிட்டி, கடைசியாய்க் கரையருகிலிருந்த ஒரு பட்டணத்தைச் சேர்ந்தான். அங்கேயும் நகரத்தையும் கடலையும் நோக்கியிருந்த இன்னொரு தூணின்மேல் நாலு மாசங்களாய் நின்று: பாவத்தின் தண்டனையையும், உபத்திரவத்தையும் பற்றித் தெளிவாயும், வைராக்கியமாயும் கூறினான்.

நாலாம் மாதத்தின் கடைசியில் இன்னுமொருமுறை அந்தத் தேவதூதன் தரிசனமாகி ‘இதை விட்டிறங்கி இன்னுங் கொஞ்சத் தூரம் போ’ எனக் கற்பித்தார். அப்படியே தபோதி பொறுமையோடும், ஊக்கத்தோடும் புறப்பட்டு, இன்னொரு பட்டணத்தைச் சேரும்வரைக்கும் அநேக மாதங்களாய்ப் பயணம்பண்ணி, பாழாய்க் கிடக்கிற கோயிலொன்றுள் மகாபெரிய ஸ்தம்பம் ஒன்றில் தங்கினான். சில நாட்களில் அவனுடைய தபத்தின் கீர்த்தி அத்தேசமெங்கும் பிரசித்தமாகவே திரளான ஜனங்கள் அவனைப் பார்க்கும்படி கூடி வந்தார்கள்.

அதற்குப்பின் அநேகர் தங்கள் பாவத்தினிமித்தம் துக்கமுடையவர்களாய் பரிசுத்தத்தை நாடிவந்தார்கள். இன்னுஞ் சிலர், சன்னியாசி வியாதிஸ்தர்களைச் சுகமாக்கக்கூடுமென்று நம்பி, பல பிணியாளிகளையும், சப்பாணிகளையும் அவனிடத்திற் கொண்டுவந்தார்கள். இதோ, அவர்கள் தபோதனர் கொடுத்த ஆசீர்வாதத்தினால் சுகம் அடைந்து அகமகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் ஊருக்குத் திரும்பினர். அம்முனிவர் இராப்பகலாய் அத்தூணின்மேல் நின்று, மழை, வெயில், குளிராதியாம் வசதியீனம் ஒன்றையும் பாராமல் போதனையிலும், ஜெபத்திலும் தரித்திருந்தது மனுஷருக்கு ஆச்சரியமாய் இருந்திருக்கும்.

தூண் அதிக இடுக்கமுள்ளதாய் இருந்ததினால் சிறிது நேரந் தானும் படுத்துக்கொள்ளக் கூடாததாய் இருந்ததுமன்றி, காற்றுக்கு ஒதுக்கிட மில்லாததால் கற்களின்மேல் மழை மோதுவதுபோல் அது அவன்மேல் மோதும். தவிர மத்தியான வெயிலில் வாடி வதங்கிக் கோடைகாலத்தில் பனியினால் உறைத்துப் போவான். அவனுக்கு உடையாயிருந்தது வெள்ளாட்டுத்தோல் மாத்திரமே. இவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தாசன் என்பதைக் காட்டுமாறு தன்னுடைய கழுத்தில் ஒரு பாரித்த இருப்புச் சங்கிலியை மாட்டியிருந்ததுமன்றி ஆண்டவராகிய இயேசுவின் சிலுவை மரணத்தையும், வேதனையையும் துக்கத்தோடு நினைவுகூரும்பொருட்டு, வெள்ளிக்கிழமைதோறும் இரும்பினால் இயற்றப்பட்ட ஒரு முள்முடியுந் தரித்துக்கொள்வான்.

JL
O6 m211, N10VE
N12



இத்தபோதி சந்திபோஜனம் செய்கிறவனானதினால், நாள்தோறும் ஒருதரம் ஏதும் கொஞ்சம் புசித்துச் சொற்ப தண்ணீரும் பானம் பண்ணிக்கொள்வது வழக்கம். என்றாலும் அவனது தோற்றம் வயோதிபனோ இளைஞனோ என்று ஒருவராலும் மதிக்கக்கூடாதிருந்தது. சங்கிலி வளையங்கள் அவனுடைய கழுத்தையும், புயத்தையும் புண்ணாக்க, முள்முடி அவன் சிரசைக் காயப்படுத்திவிட்டது. இதுகாரணம் பற்றியே, அவன் தன்னைச் சிறு பாலனாய்த் தன் மார்பிலே கொண்டு திரிந்தவளும், வாலிபனாகுமட்டும் பராமரித்தவளுமான தன் அருமையான அன்னையும் அவனை அறிந்துகொள்ளக் கூடாத அவ்வளவு கேவலமான நிலைபரத்திலிருந்தான்.

மூன்று வருஷங்களாய் அவன் இந்த வருத்தமான ஜீவியத்தை உறுதியான சந்தோஷத்துடன் சகித்து, கிறிஸ்து தருகிற மகிமையின் கிரீடம் தன்னுடைய பாடுகளுக்கு இலாபமென்று தனக்குள்ளே எண்ணினான். அன்றியும் ‘கர்த்தராகிய இயேசுவே என்னைப்போல் யார் உமது சிலுவையைச் சுமந்தார்? சூரிய சந்திர நட்சத்திரங்களும் நாற்றிசைக் காற்றுங்காண, வானத்திற்கும், பூமிக்குமிடையில் நின்று உம்முடைய வேதனையையும், தாகத்தையும், காயங்களையும் என்னைத் தவிர மனுஷருக்கு யார் காண்பித்தார்? தேவரீர் உம்முடைய ஜீவபுஸ்தகத்தில் நிச்சயமாய் என்னுடைய பெயரை எழுதி எனக்காக மோட்சத்தில் பாக்கியம் நிறைந்த ஒரு இடத்தை வைத்திருப்பீர். என்னையும், எனக்குண்டான எல்லாவற்றையும் உமக்கு முழுவதும் ஒப்படைத்து, பூமியிலுள்ள ஒரு புழுப்போன்ற நானும் செய்யக்கூடியதெல்லாஞ் செய்து முடித்தேன். யாதேனுமோர் காரியத்தில் நான் குறைசெய்திருந்தால், தேவரீர் அக்குறையைத் தயவாய் அடியேனுக்குக் காண்பியும். தேவரீரின் பார்வையில் யாராகிலும் என்னைப்பார்க்கிலுந் தகுதியுள்ளவனாயிருந்தால், உம்மைப் பிரியப்படுத்தும் விதத்தை அடியேன் அவனிடத்திற் கற்றுக்கொள்ளும்படி அப்புண்ணியவானை எனக்குக் காண்பியும். கர்த்தாவே! நான் அறியாததை எனக்கு அறிவியும். உமக்கு மாத்திரமே அறிவும், ஞானமுமுண்டு’ என்று உற்சாகமாய் ஜெபம் பண்ணினான்.

இவ்விதமாய் அதிகாலைவரைக்கும் அம்முனிவர் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, இன்னுமோர்முறை தேவதூதன் தோன்றி ‘உனது கையைத் தா’ என்று சொல்ல, தபோதி அவனது திவ்விய கரத்தைப் பிடித்தான். தேவதூதன் அவனுடைய தூணிலிருந்து அவனை இழுத்து நிலத்தில் நிறுத்தி ‘உன் நன்மைக்கானவைகளைக் கற்றுக்கொள்ளக் கூடிய தேசம் இதுதான். உனக்குமுன் இருக்கும் பாதையாற் செல்

வாயாக. விடியற்காலையில் உன்னைப் போதிக்கக்கூடியவனைச் சந்திப்பாய். இதற்கு அடையாளமாக, ஏழுவயதுப் பெண்பிள்ளை ஒருத்தி அவனுக்கு உதவிக்காக வாத்துக்களை நடத்திக்கொண்டு போவாள். அவன் இளைஞனாயிருந்தாலும், கடவுளுடைய அருள் அவனில் இருப்பதினால் பெரியோர்களுக்கும் உபதேசம் கொடுக்கக் கூடியவனாயிருக்கிறான்' என்று சொல்லி மறைந்தார்.

தபோதி அவ்வழியில் போகும்பொழுது புற்களிலும் செடிகளிலுமுள்ள பனித் துளிகள் முத்துக்களைப்போல் காலை வெளிச்சத்திற் பிரகாசிக்க, தூரத்தில் ஒரு மேய்ப்பன் புல்லாங்குழல் ஊதும் இனிமையான சத்தத்தைக் கேட்டான். அன்றியும், அவனுக்கு முன் கூட்டங் கூட்டமாய்த் திரளான வாத்துக்கள் வருவதையுங் கண்டான். அவைகள் புல்லுக்குள்ளும், நாணலுக்குள்ளும் மேய்ந்து 'குவாக், குவாக்' என்று சத்தம் போட்டு ஒன்றையொன்று நெருக்கித்தள்ளி, பட்டணத்துக்கு நேராய் அசைந்தசைந்து வெகு விநோதமாய்ச் சென்றன. ஏழுவயதுள்ள ஒரு அழகான பெண்பிள்ளை, பச்சை நிறமான உடுப்பைத் தரித்துக்கொண்டும் வாத்துக்களை மேய்க்கிறதற்கு தன் கையில் ஒரு சிறு மரக்கிளையைப் பிடித்துக்கொண்டும் நடந்து வந்தாள்.

இவர்கள் கிட்டினவுடனே, அச்சிறுபெண் தபோதியை உற்றுப் பார்த்தாள். ஆட்டுத்தோல் உடை தரித்து, இரும்புச் சங்கிலியும் முள் முடியும் அணிந்து, கறுப்புத் தோலும் வெள்ளை மயிருமுள்ள இவ்வித பயங்கர ரூபியான மனுஷனை அவள் முன்னொருபொழுதுங் காணாததினால் அவள் பயத்தினால் திகைத்து நின்றனள். அந்த முனிவரோ மலர்ந்த முகத்துடன் அவளை ஆசீர்வதிக்கவே, அப்பிள்ளை சிரித்துக்கொண்டு தன் வழிசென்றாள். வாத்துக்களின் பின்னே ஒரு வாலிபன் வந்தான். இவனே குழல் ஊதி வந்தவன். இவன் தபோதியைக் கண்டவுடன், ஜனங்களெல்லாரும் சொன்ன ஆச்சரியமான செய்கைகளையும், அதிசயமான தபத்தையுஞ் செய்த மனுஷன் இவன்தானென்று தன்னுள்ளத்தில் நினைத்தான்.

அவர்கள் ஒருவரையொருவர் கிட்டிச் சேர்ந்தவுடன், முனிவர் வாத்துக்காரனை வணங்கி, அவனைப்பார்த்து: 'பரலோகத்திலிருந்து வந்த ஒரு தேவதூதன் உம்மைப்பற்றி என்னோடு பேசியிருக்கிறான்; தயவுசெய்து உம்மோடு பேசும்படி எனக்கு உத்தரவு தாரும். அன்றியும், இருபத்திமூன்று வருஷங்களாய் ஆவியின் உபத்திரவத்தோடும், ஜெபத்தோடும், உபவாசத்தோடும், மகிமையின் இராஜாவை நான் சேவித்து வந்தேன். ஆனால் என்னில் இருக்கிற குறைவுகளை நீர்



தான் காட்டவேண்டும். தேவனைப் பிரியப்படுத்துவதற்கு நீர் செய்த தபங்கள், புண்ணியங்கள், ஜெபங்கள் எவையென்று தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டும்' என்று கெஞ்சிக்கேட்டான். இதைக் கேட்டவுடன், வாத்துக்காரனின் மலர்ந்த முகம் குன்றிப்போனது. ஆனாலும் அவன் அமைதலான சத்தத்தோடு தபோதியை நோக்கி: 'வாலிபரை இப்படிக் கேலிபண்ணுவது வயோதிபருக்குத் தகுதியன்று; பரிசுத்தமுள்ளவர்கள் ஏழைகளை நிந்திக்கிறது அவர்களுக்கு அழகல்ல' என்று சொன்னான். இதைக் கேட்ட தபோதி சாந்தத்தோடு: 'நான் உம்மைப் பழிக்கவே பழிக்கவில்லை. சென்ற இராத்திரி ஓர் தேவதூதன் உம்மிடம் என்னை அனுப்பினான். ஆகையால் கோபங்கொள்ளாமல் எனக்கு உண்மையைச் சொல்லவேண்டும்' என்று தாழ்மையாய் மன்றாடினான்.

வாத்துக்காரன் தலையை அசைத்துக்கொண்டு:— இது என்னுடைய எண்ணத்திற்கு மிஞ்சின ஒரு காரியமாயிருக்கிறது, என்றாலும், நீர் என்னுடைய வேலையைப் பற்றிக் கேட்கிறதானால்: நான் வாத்துக்களை வளர்த்துப் போஷித்து, சந்தைக்குக் கொண்டு போகிறதுதான் எனது வழக்கம். மேற்கு மலைகளின் அடிவாரத்திலுள்ள சகதியான இடங்களிலிருந்து அவைகளைக் கொண்டு வருகிறேன். தூரம் அவ்வளவு சிறிதல்ல. ஏனென்றால், நான் மர நிழலிலே படுத்து, இளைப்பாறி வருவதினால் ஐந்து நாட்செல்லும். வழியில் வாத்துக்களைப் பையப்பையக் கொண்டுவந்து மேயவிடாவிட்டால் என் எசமானுக்கு பலனில்லை. ஒரு வாத்தும் மோசம் போகாமல் கடைக்குக் கொண்டுபோய்ச் சீக்கிரமாக நல்ல விலைக்கு விற்று, மறுபடியும் ஊருக்குத் திரும்பவேண்டுமென்பதே என்னுடைய முழுநோக்கம்.

தபோதி:—இப்படித் தாழ்மையாய்ப் பேசுவதில் ஏதோ நீர் செய்த ஒரு பெரிய காரியத்தை எனக்கு மறைக்கிறீர்.

வா—ன்:—இல்லைப் பெரியவரே! உமக்குச் சொல்லவேண்டியதையெல்லாம் நான் சொல்லியாயிற்றென்று எண்ணுகிறேன்.

த:—நீர் எப்பொழுதும் இவ்வித ஜீவியத்தில்தான் இருந்தீரா?

வா—ன்:—நமக்கு முன் போகிற பெண்பிள்ளையைப்போல், நான் ஒரு சிறு பையனாயிருந்த காலம் துடங்கி, இவ்வித தொழிலே புரிந்துவந்தேன். அவளுக்கு இப்பொழுது வயது ஏறக்குறைய ஏழு. எனக்குமுன், என் தகப்பனும் ஒரு வாத்துக்காரனாகவே இருந்தார். அவரே பட்டணத்துக்குப் போகிற வழியையும், தங்குதற்கு வசதியான இடங்களையும், வாத்துக்களின் பழக்கத்

தையும், அவைகளின் சத்தக் கருத்தையும் எனக்குத் தெரிவித்தார். இப்பொழுது நான் இக்காரியங்களை யெல்லாம் அப்பிள்ளைக்குச் சொல்லி வருகிறேன்.

த :—அப்படியானால், அவள் உமது இளைய சகோதரியா? மகளா?

வா—ன் :—ஆம், அவள் எனக்குச் சகோதரியும், மகளும்போல் இருக்கிறாள்.

த :—அது எப்படியிருக்கக் கூடுமென்று எனக்குச் சொல்லுவீரா?

வா—ன் :—ஆம், நான் சுருக்கமாய்ச் சொல்லுவேன். வழியோரத்திலிருந்த ஒரு ஏழையின் வீட்டைத் திருடர் கொள்ளையிட்டு, அவளுடைய தாயையும் தகப்பனையும் கொலைசெய்து தாயின் கையிலிருந்த குழந்தையை விட்டுவிட்டார்கள்; அப்பிள்ளைதான் இவள்.

த :—நீர்தான் அவளைக் கண்டுபிடித்தீரா?

வா—ன் :—ஆம், அந்தத் திருடர் போனபிறகு நான் வந்து மரித்த தாயின் பக்கத்தில், அழுதுகொண்டு ஆட்டுக்குட்டியைப்போல் அவள் அங்கே இருந்ததைக்கண்டு அவளை இரட்சித்து, அந்நாள் முதல் இதுவரையும் அவளைப் பாதுகாத்து வருகிறேன்.

த :—அப்படியானால், உமது தாய் அல்லது மனைவிதான் அவளை வளர்த்திருக்க வேண்டுமல்லவா?

வா—ன் :—எனது தாய் அதற்கு முந்திச் செத்துப்போனாள்; எனக்கு மனைவியுமில்லை; நான்தான் அவளை வளர்த்தேன். அவள் வளர்ந்து இப்பொழுது நீர் காண்கிறபடி சுகமும், பெலமும், சந்தோஷமு முள்ளவளாயிருக்கிறாள்.

த :—நீர் அப்பொழுது ஒரு சிறு பையனாய்த்தான் இருந்திருப்பீர் அல்லவா?

வா—ன் :—ஆம், ஆம், இப்போதிருக்கிறதைப் பார்க்கிலும், இளைஞனாய்த்தான் இருந்தேன்; ஆனாலும், அப்பொழுது பெலனும் பருமனு மாயிருந்தேன்.

த :—இவ்வளவு வருஷக்காலமாய், அவள் உமக்குப் பாரமும், தொந்தரவு முள்ளவளாய் இருந்தாள் என்று நீர் நினைக்கவில்லையா?

வா—ன் :—பல் முளைக்கும்போதும் குழந்தை கத்தும்பொழுதும் யார் அதற்கு உதவி செய்யக்கூடும்? அந்தக் காலம் எனக்குத் துக்கமாயிருந்ததுதான். ஆனாலும் மாரிகாலத்தில் அவளைப் பத்திரமாய்ப் பார்ப்பதே எனக்கதிக கவலையாயிருந்தது.



த :—இவற்றை யெல்லாம் ஏன் செய்தீர்? உமக்குக் கிடைத்த பிரதி பலன் என்ன?

வாத்துக்காரன் தனக்கு இது விளங்காததுபோலக் கொஞ்சநேரம் தபோதியை உற்றுப் பார்த்து, புன்னகையோடு: ‘ அவள் சந்தோஷமும், அலங்காரமுமான பிள்ளையாய் வழியில் ஓடித் திரிகிறதைக் காண்பது எனக்குச் சந்தோஷமும் பயனுமாயிருக்கிறது. அவளுடைய வளர்ச்சியையும், அவள் நடக்கக்கூடாத காலத்தில் நான் அவளைத் தூக்கிக்கொண்டு திரிந்ததையும், அவள் தத்தித்தத்தி, தக்குப் பொக்கென்று என்னிடத்தில் வந்ததையும், முதன் முதல் நாங்களிருவரும் வாத்துக்களைக் கடைக்குக் கொண்டுபோனதையும் நினைக்க நினைக்க, மெய்யாகவே நான் அவளைக் கண்டுபிடித்த நாள்முதல் இதுவரையும் பாக்கியனாய் இருக்கிறேன் ’ என மாறுத்தர முரைத்தான்.

இதைக் கேட்டு தபோதி கண்களிலிருந்து கண்ணீரானது, தாரை தாரையாய்க் கன்னத்தில் வடிய, அவனைப் பார்த்து: ‘ ஆ, என் மகனே, நீர் தேவனுடைய பார்வையில் பிரியமுள்ளவரா யிருக்கிறீரென்று இப்பொழுது நான் பூரணமாய் அறிந்தேன். பதிற் பலன் நாடாத அன்பையும், எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளுகிற பட்சத்தையும் இளமையில் நீர் அடைந்துகொண்டீர். நானோ இவைகளை அடையவில்லை. நான் முக்கியமானதை அற்பமாய் எண்ணினேன். நீர் காட்டின அன்பு எல்லாத் தடத்திலும் பரிசுத்தமுள்ளதும், எல்லா உபவாசத்திலும் வல்லமையுள்ளதும், எல்லாச் செபங்களிலும் மேலானதுமாயிருக்கிறது. நீர் அச்சிறுபெண்மேல் அனுதாபமும், இரக்கமு முள்ளவராய் இருந்ததுபோல, கடவுள் உம்மேல் இரக்கமும், அனுதாபமு முள்ளவராய் இருப்பாராக, தம்பியே! போய் வருகிறேன் ’ என்று ஆசீர்வாதம் கூறி தன் வழி சென்றான்.

வாத்துக்காரனும் இனிய ஓர் பாட்டைப் பாடிக்கொண்டு போனான்.

## A BIBLE READING — EXODUS 32

By

The Rev. T. Walker, M.A.

## யாத்திராகமம் 32-ம் அதிகாரம்

### சபை தீட்டுப்பட்டுப் போகுதல்

**கவனிப்பு** :—மலையின்மேலே கர்த்தர் காண்பித்த பரிசுத்த வாசஸ்தலத்தின் மாதிரிக்கும் கீழே ஜனங்களுக்குள் நடந்த அசுத்

தங்களுக்கும் எவ்வளவோ பெரிய பேதமுண்டு (மத். 17. 1—8; 14—18 ஒத்துப்பார்க்க). பாவத்தினால் கறைப்பட்ட சபைதானோ ஆண்டவருக்கேற்ற வாசஸ்தலம்?

1. **கள்ள ஆராதனை நடப்பது.** வாக். 1–6.

(1) **கள்ளத் தெய்வங்கள்.** வாக். 1–4.

மேலே.—மெய்த்தேவன் தமது விசேஷங்களை வெளிப்படுத்துகிறார் (29. 45, 46).

கீழே.—ஒரு பொற் கன்றுக்குட்டியை வார்ப்பித்து வணங்கி, '**இஸ்ரவேலரே,** உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே' என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

(2) **கள்ளக் காணிக்கைகள்.** வாக். 2.

மேலே.—பரிசுத்த கர்த்தர் தமது வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவதற்குப் பொன் முதலிய பரிசுத்த காணிக்கைகளைக் கொண்டுவர உத்தரவு அருளுகிறார் (25. 1—9).

கீழே.—தங்கள் பொன்னணிகளைக் கழற்றிக் கள்ளத் தெய்வங்களுக்குக் கள்ளக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்.

(3) **கள்ளப் பலிபீடம்.** வாக். 5.

மேலே.—கர்த்தர் பரிசுத்த பலிபீடத்தின் மாதிரியைக் காண்பித்து அதற்கடுத்த பிரமாணத்தையும் அருளிச்செய்கிறார் (27. 1—8; 29. 38—44).

கீழே.—தங்கள் விக்கிரகத்துக்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி அதை நமஸ்கரிக்கிறார்கள்.

(4) **கள்ளப் பண்டிகை.** வாக். 5.

மேலே.—மகா தயாபரராகிய தேவன் பக்திவிருத்திக்கு ஏதுவாகப் பரிசுத்த பண்டிகைகளை ஏற்படுத்துகிறார் (23. 14—19).

கீழே.—தங்கள் விக்கிரகத்துக்கு மகிமையாக ஓர் பண்டிகையை நியமித்து அவலட்சணமான காரியங்களைச் செய்து அதை ஆசரிக்கிறார்கள் (வாக். 25. 1 கொரி. 10. 6, 7).



(5) **கள்ளப் பலிகள்.** வாக். 6.

மேலே.—கர்த்தர் சர்வாங்க தகனபலி முதலிய பரிசுத்த பலிகளுக்கு ஏற்பாடு செய்கிறார் (29. 1—44).

கீழே.—ஜனங்கள் தங்கள் கன்றுக்குட்டிச் சுவாமிக்குச் சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார்கள்.

இவ்விதமாய், கர்த்தர் ஏற்படுத்தும் மெய்யான ஆராதனை விஷயங்களைப் பிசாசானவன் கண்டு அவைகளுக்குப் பதிலாகப் பொய்யான ஆராதனை விஷயங்களை அனுசரிக்க ஜனங்களை ஏவிவருகிறான் (மத். 6. 1, 2, 5; 15. 8, 9; ஏசா. 1. 12, 13; லூக். 18. 11, 12; அப். 5. 1—5).

கள்ளத்தனமான ஆராதனை, காணிக்கை, ஜெபம் முதலியவற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக.

2. **கர்த்தருடைய விசனம் மூளுவது.** வாக். 7–14.

(i) **தேவனுடைய கோபம்.** வாக். 7–10.

a. **பார்த்தார்.** வாக். 9. அவர்களை எப்படிப்பட்டவர்களென்று கண்டார்?

- தங்களைக் கெடுத்துக்கொண்டவர்கள் (வாக். 7).
- சீக்கிரமாய் வழியைவிட்டு விலகினவர்கள் (வாக். 8).
- வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் (வாக். 9.)

ஐயோ! மீட்கப்பட்ட சபை பாவம் நிறைந்த சபையாகக் காணப்பட்டது.

b. **விசனப்பட்டார்.** வாக். 10. அவருடைய பரிசுத்த கோபம் மூண்டெரிந்தது. (ஆபகூக். 1. 13; சங். 7. 11; வெளி. 6. 16—17).

c. **அழிக்க இருந்தார்.** வாக். 10. '**நான் இவர்களை அழித்துப்போட நீ என்னை விட்டுவிடு,** (சங். 7. 12, 13; எபி. 12. 29).

**கவனிப்பு:—உத்தம தாசருடைய விசுவாசமும் வேண்டுதலும் தேவனுக்கு அருமையானது. அவர்கள் நிமித்தம் பாவிகளுக்குப் பொறுத்துக்கொண்டே வருகிறார் (ஆதி. 19. 29; 1 சாமு. 7. 8—10; 1 இரா. 18. 42—45).**

(ii) **மத்தியஸ்தனுடைய விண்ணப்பம். வாக். 11–13.** மூன்று முகாந்தரங்களை எடுத்துக் காட்டி இரக்கஞ்செய்யக் கெஞ்சுகிறான்.

a. **ரட்சணிய கிரியைகளினிமித்தமும்** (வாக். 11)

b. **திவ்விய மகிமையினிமித்தமும்** (வாக். 12)

c. **வாக்குத்தத்தங்களினிமித்தமும்** (வாக். 13)

இரங்கவேண்டுமென்று மன்றாடுகிறான்.

நாமும் கிறிஸ்துவினாலுண்டான ரட்சிப்பையும் (1 தீமோ. 1. 15; 1 யோவா. 2. 2).

தேவனுடைய மகிமையையும் (லூக். 15. 7, 10; வெளி. 5. 9–14) அவர் அருளின வாக்குத்தத்தங்களையும் (யோவா. 3. 16; 1 தீமோ. 2. 4, 5) முகாந்தரமாகக் காட்டிப் பாவிகளுக்காக வேண்டுதல் செய்யத் தகும்.

(iii) **கர்த்தருடைய பரிதாபம்.** வாக். 14. பாவிகளைத் தண்டியாமல் விடுவார் என்றல்ல. அந்தப் பாவிகள்மேல் தண்டனை வந்துவிட்டது (வாக். 25–29).

ஆகிலும், அந்த ஜாதியை முற்றிலும் அழிக்காதபடிக்கு, மோசே எடுத்துரைத்த முகாந்தரங்களை அங்கீகரித்து இரக்கம் பாராட்டினார். அவருடைய திரு உள்ளத்தில் எப்பொழுதும் பொங்கிக்கொண்டே யிருக்கிற பரிதாபங்கள் (ஓசியா. 11. 8) மேலிட்டன.

(இன்னும் வரும்.)

# ADVICE TO PREACHERS

**By**

**The Rev. H. Rice**

## பிரசங்கிகளுக்கு ஆலோசனை

I. பிரசங்கியானவன் தேர்ந்த வேதபாரகனா யிருக்கவேண்டும். போதகத் தொழிலுக்குப் பூரணமான வேத அறிவு இன்றியமையா அவசியம். இதன்றி அவன் உத்தம பிரசங்கியாக முடியாது. 'நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனா யிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்.' ஓசி. 4. 6. போதகனிடத்தில் சரிப்படுத்த முடியாத பெருங்குறை அறிவின்மையே. அவன சாந்தம், பொறுமை, குற்றங் கூறப்படாமை முதலிய சுசீலங்க ளமைந்தவனாயிருப்பினும், தேவ வசனத்தைச் சரியானபடி பகுத்துக்காட்டும் திறமை இல்லாதவனாயின் அவன் போதகனாயிருக்கத் தகுந்தவனல்ல. இரத்தினங்களிழைத்திருப்பினும் வெட்டாத கத்தி கத்தியாகாது. நாதமில்லாத மணி மணியுமாகாது. போதகனின் பெரிய வேலை மற்றவர்களுக்குப் போதிப்பதே. ஒவ்வொரு தொழிலாளியும் தன் தன் தொழிலில் கைவந்தவனா யிருக்க வேண்டியதுபோலப் போதகனும் தேவனுடைய காரியங்களில் பூரண அப்பியாசமுடையவனா யிருக்க வேண்டும். போதகர்கள் வெளிச்சமென் றழைக்கப்படுகிறார்கள். அந்த வெளிச்சமே இருளாயிருந்தால் சபையாரின் இருள் பேரிருளாகும். தேவனுடைய கரங்களிலுள்ள நட்சத்திரங்களெல்லாம் ஒரே அளவான ஜோதியுடையனவல்ல. சிலர் பெற்ற கிருபைவரங்களின் மகிமை மற்றவர்களுக்குள் இருக்கும் வரங்களின் மகிமையைவிட மேன்மையாய் விளங்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் பிறப்பில் சாஸ்திரிகளுக்கு வழி காட்டிய நட்சத்திரத்தின் ஒளி அத்தனை ஒவ்வொரு போதகனுக்கும் அவசியம். அப்பொழுது அவர்கள் வேதபுஸ்தகத்தைக் கொண்டு கிறிஸ்துவண்டைக்கும் இரட்சிப்புக்கும் நேராகப் பாவிகளை மெய்வழியில் நடத்தக் கூடியவர்களாவார்கள். மூட வைத்தியர்கள் பிணியாளிகளைக் கொன்று வயிறு வளர்ப்பார்கள். அறிவீனத்தினால் ஆத்துமாக்களை யழித்து லௌகீகப் பிழைப்பை நாடும் செய்கையோ அதைவிடத் துக்கமான காரியமே. போதகனானவன் தேவனுடைய பிரமாணத்திலே மகிழ்ச்சியுடையவனாய் இரவும் பகலும் அதைத் தியானிக்கவேண்டும். தனக்குச் சமயங் கிட்டுந்தோறும் வேளாவேளைகளில் மாத்திரம் ஒரு அதிகாரத்தை வாசிக்கப்படாது. வேதத்தைப் படித்தலே அவனது முக்கிய வேலையாயிருக்கவேண்டும். மற்றச் சோலிகளெல்லாம் இதற்கு இடங்கொடுத்து ஒதுங்கவேண்டியது. சாதாரண கிறிஸ்தவனுடைய சுறுசுறுப்பான வாசிப்பென்னப்படுவது போதகன் விஷயத்தில் சோம்பலெனக் குறைகூறப்பட வேண்டியதே. சமுசாரியானவன் இடையறாமல் தன் அன்றாடக வேலைக்குப் போகவேண்டியிராது. போதகனோ இடைவிடாமல் திருவசனச் சுரங்கத்திலிறங்கி யுழைக்க வேண்டியவன்.

II. பிரசங்கியானவன் குற்றஞ் சாட்டப்படாத குணசீலனாயிருக்க வேண்டும்.

(1) பிரசங்கியின் மேன்பாடான நிலைமையினாலேயே அவன் குறைகளைப் பிறர் கவனிக்க ஏதுவுண்டாகிறது. பிரசங்கிமார் வெகு தூரத்துக்குக் காணப்படக்கூடியவர்கள். ஆகையால் சிறு குறையும்

பளிச்சென்று தோன்றும். அவர்கள் செய்யும் செயலும் செப்பிய வார்த்தையும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. பகலிலே சூரியகிரணம் பல சாட்சிகளின் கண்காட்சியே. நீங்கள் உங்களைச் சபைகளின் தீபங்களென்றெண்ணினால், ஜனங்கள் உங்களை நோக்கிப் பார்ப்பார்கள். மற்றவர்கள் செய்யும் பாவம் ஒருவேளை மறைந்திருக்கலாம். நீங்கள் செய்வதெல்லாம் யாவரும் கவனிப்பார்கள்.

(2) மற்றவர்களைக் கண்டிக்கிறவன் தானே குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்கவேண்டாமா? நன்மனச் சாட்சியுடன் ஜீவியாதவன் பிறரைக் கண்டிக்கத்தக்க தைரியவானாயிருக்க முடியாது. குளறுவாயன் பிறருக்குச் சரியாய் வாசிக்கப் படித்துக்கொடுக்க ஏலாது. உடைந்த கோவில்மணி சபையார் செவியில் இரைச்சலோசை தரும்.

(3) பிரசங்கிகளின் நடக்கை அவர்கள் பிரசங்கங்களை விட வல்லமையுடையதாம். உங்கள் சாதனை உங்கள் போதனைக்கு எதிரிடையாகாமற் பாருங்கள். உங்கள் நடக்கை உங்கள் நாவைப் பொய்ப்பியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் வாய்களினால் இரண்டொரு மணிநேரத்தில் கட்டி முடித்ததை உங்கள் கைகளினால் ஒரு வாரமளவும் இடித்துக்கொண்டிராதேயுங்கள். பரிசுத்தமில்லாமல் கர்த்தரைத் தரிசிப்பதில்லையாதலால் நீங்கள் பரிசுத்தராவது அவசியமென்று ஜனங்களுக்குப் போதித்து பிரசங்கிகள் தாமே பரிசுத்தமற்றவர்களாயிருந்தால் கேட்கிற ஜனங்கள் உங்களை காலங்கடத்தப் பேசும் பிரசங்கிகளென்றோ வயிறு வளர்க்கும் வாசாலரென்றோ எண்ணுவார்களே. நாவினால் மோட்சவழியும் நடக்கையினால் நரகவழியும் காட்டுவது உண்டு. துன்மார்க்கனான பிரசங்கி கடவுளமைத்த இந்தப் பூமியின் மீது கேடுகெட்ட சிருஷ்டியாயிருக்கிறான். மாயக்காரரான போதகர்கள் சபையார் பாவம்செய்யும்படி ஏவுகிறார்கள். செவிலித்தாய் நோயாளியானால் அவள் பாலூட்டும் குழந்தையும் அந்நோய்க்கு இரையாகும். போதகனின் பிழை சபையாரைத் தொற்றாதிராது. அவன் பக்தியற்றவனும் அவதூறு உடையவனுமாய் ஜீவிப்பானாயின் ஊராரெல்லாம் நீருண்ணுங் கிணறு கெட்டுப்போனதுபோல் ஆவான். போதகனின் நடக்கை அவனுபதேசத்தைவிட பலமாயோசையிடும். பிரசங்கம் செய்வதோடு நல்நடக்கையும் வேண்டும்.

III. பிரசங்கி தன் சுய ஆத்தும இரட்சிப்பைக் குறித்துக் கவலையுடையவனாயிருக்கவேண்டும். மற்றவர்களை இரட்சிக்கும்படிப் பேழையுண்டாக்கித் தாங்களே ஜலத்தில் மாண்ட நோவாவின் தச்சரைப்போலிருக்கலாம். மற்றவர்களுக்குப் பந்தம்பிடித்து வெளிச்சங்காட்டித் தானே இருளில் நடப்பது எப்படி? மற்றவர்களுக்குக்



கதவு திறந்து உள்ளே போகவிட்டு தானே வெளியே நிற்கும் வாசற் காவற்காரன் போலுமிருக்கலாம். பேழையுண்டாக்கின கெட்டித்தனத்தைப் பற்றி புகழப்பட்ட நூறுபேரில் ஒருவனாயிருப்பதிலும் பேழைக்குள் இரட்சிக்கப்பட்ட எட்டுப்பேரில் ஒருவனாயிருப்பதே வாசி. பிலேயாம் பரிசுத்தனாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தும் கெட்டுப்போனான். தேவன் பட்சபாதமுடையவரல்லவே. பரிசுத்த அழைப்பு அசுத்தனை இரட்சிக்காது. கிருபையின் ராஜ்யத்தின் வாசலிலே நின்று மற்றவர்கள் உள்ளே பிரவேசிக்கும்படி ஒளிகாட்டியும் நீயே அதற்குள் செல்லாதிருந்தால் மோட்ச வாசற்படியினின்று விருதாவாகத் தட்டிக்கொண்டிருக்கிறவனாயிருப்பாய். வயிற்றுக்குள் செல்லாமல் வாயளவே நிற்கும் உணவு போஷிக்குமோவென்று நீயே யோசித்துப்பார். அந்தப்படியே கிறிஸ்துவை வாயளவில் உடையவனோ இருதயத்துட் கொள்பவனோ எவன் இரட்சிக்கப்படுவானென்பதைச் சிந்தித்துப் பார். தேசங்களைச் சுற்றிப்பாராமல் தன் வீட்டுக்குள்ளே இருந்து பூகோளசாஸ்திரம் படித்துத் தேசப்படங்களைத் திட்டவட்டமாய் ஒருவன் வரையக்கூடியதுபோல மோட்ச மார்க்கங்களை விளக்கியும் தங்கள் இருதயங்களில் அனுபவத்தில் உணராதவர்களாய் இருக்கிறார்கள். சபையாருக்கு மோட்சத்தையன்றி வேறொன்றையுமே போதியாதவன் அந்த மோட்சத்துக்கு அன்னியனாயிருக்கலாம். உலகத்துக்கு இரட்சகர் அத்தியந்த தேவையென்று பிர்சங்கிக்கிறவனே இருதயத்தில் அவரைத் தள்ளிவிடாதபடி ஜாக்கிரதையாயிரு. கெட்டழியாதேயுங்களென்று மற்றவர்களை எச்சரிக்கிறவனே நீதான் கெடாதபடி எச்சரிக்கையாயிரு. மற்றவர்களுக்கு ஆகாரம் ஊட்டுகிற நீயே பசியால் சாகாதபடி பார். நரகத்துக்குத் தப்பும்படி பெருங்கவலை கொள்ளுங்களென்று ஆயிரந்தடவை சபையாரைக் கூவியழைத்த பிரசங்கி ஒருவன் இப்போது நரகத்தில் இல்லையா? ஒரு பிரசங்கி கெட்டிக்காரனாயிருப்பதினிமித்தமே தேவன் அவனை இரட்சிப்பதில்லை. ஒருவன் பரிசுத்தமாக்கப்பட்டவனும் பரமராஜாவுக்கு உண்மையுள்ள ஊழியனுமாயிருந்தால் இரட்சிக்கப்படுவான். இகத்திலுள்ள சபையில் நமக்கு ஒரு இடமும் வேலையுமுடைத்தாயிருந்தும் பரமசபையில் பங்கற்றிருப்பது எத்தனையோ பயங்கரம்.

# THE TEACHING OF THE PROPHET AMOS

By

**Miss E. M. Swift**

## ஆமோஸ் தீர்க்கதரிசி செய்த போதனை

1. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. உற்சாகமான ஜீவியம், பாவத்தைக் குறித்த மனஸ்தாபம், ஒருவனுடைய அந்தஸ்து, கல்வி, திறமை முதலியவைகளைப் பார்க்கிலும் அதிக பிரயோஜனமுள்ளது. தேவன் தீர்க்கதரிசிகளின் புத்திரரை நோக்காமல் ஏழையான இந்த மேய்ப்பனைத் தெரிந்துகொண்டு அவன் மூலமாய் இராஜாவையும் ஜனங்களையும் கண்டித்து, அவர்களுக்கு வரும் தேவதண்டனையைக் கூறும்படி சித்தமானார். 1. 1; 7. 14.

2. எல்லா ஜனங்களுக்குள்ளும் நடக்கிற சம்பவங்களையெல்லாம் கர்த்தர் கவனிக்கிறார். யுத்தத்தில் குரூரம், உயிர்வதை, அநீதி இவைகளையும் ஜனத்திற்கு அழிவை உண்டாக்குகிற எல்லாவற்றையும் அவர் அறிவார். அதி. 1, 2.

3. ஜனத்தின் வாழ்வு கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறதினாலுண்டாகும். தாழ்வு கீழ்ப்படியாமையினாலுண்டாகும். 2. 4, 5.

4. ஒரு ஜனம் தனித்தனி ஆட்கள் சேர்ந்துண்டானது. வியாபாரத்தில் நடக்கும் அற்ப அநியாயத்தையும், கர்த்தர் கவனியாமலிருக்கிறதில்லை, அதை அவர் மறந்துபோகிறதுமில்லை. 2. 6, 7.

5. மனிதர் ஆசிக்கும் அநியாயமும் கொடுமையுமான காரியங்கள், அதாவது, திரண்ட ஐசுவரியம், டம்பம், பெருவாழ்வு, பெருந்திண்டி, களியாட்டு முதலியவைகளெல்லாம் தேவனுடைய பார்வையில் பொல்லாப்பானவைகள். 2. 8; 6. 4, 5.

6. மனுஷனுடைய ஜீவியமும் அதின் பாக்கியமும் மனிதன் சம்பாதிக்கக்கூடிய எந்தப் பொக்கிஷத்தைப் பார்க்கிலும் அருமையானது. ஆகையினாலே தேவனுடைய நியமகத்தை மனிதன் மாற்றி உயிரைப்பார்க்கிலும் ஒரு ஜோடு பாதரட்சையை அருமையானதென்று எண்ணும்போது தேவன் இதை நினையாமலிருப்பாரென்று எண்ணலாமா? மனிதன் மற்றப் பொருள்கள்மேல் வைக்கும் மதிப்பை தேவன் மெய்யாகவே கவனிக்கிறார். 2. 6; 8. 6.



7. ஒவ்வொரு சம்பவத்திற்கும் காரணமுண்டு; தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு காரணத்தோடு மனிதனை எச்சரிக்கிறாரேயொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட எச்சரிப்புகளை அசட்டை செய்கிற மனிதன் சத்துரு வந்துவிட்டான் என்று கேள்விப்பட்டும், யுத்தம் நடக்கப்போகிறதென்று அறிந்திருந்தும், சத்துருவுக்குப் பயந்து தப்பி ஓடாமலிருக்கிற மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான். 3. 1—7.

8. தேவன் தம்முடைய ஊழியர்களின் மூலமாய் முதன் முதலாகப் பாவியை எச்சரிக்காதபடிக்கு ஒரு காரியத்தையும் செய்யார். 3. 7—8. இங்கே அவர் தமது தீர்க்கதரிசியைக்கொண்டு நமக்குத் தெரிவிக்கிறதை நாம் அறிந்துகொண்டு அதற்கு உத்தரவாதிகளாகும்படி செய்கிறார்.

9. பஞ்சம், கொள்ளைநோய், யுத்தம், மற்ற ஆபத்துகளெல்லாம் ஒரு ஜனத்தின் ஒரு விசேஷித்த பாவத்தினிமித்தம் வருகிற தேவனுடைய நீதியான கோபத்திற்கு அடையாளங்களென்று நாம் தற்காலத்தில் சொல்லுகிறதில்லை. இவைகளுக்கெல்லாம் வெவ்வேறு காரணங்கள் இருக்கலாம் என்று சொல்லுகிறோம். என்றாலும் இஸ்ரவேலர் அவ்விதமாய்ப் பேசினதினிமித்தமே ஆமோஸ் அவர்களைக் கண்டிக்கிறான். 3. 6; 4. 6—11.

10. தற்காலத்தில், சகலமும் நன்மைக்கு ஏதுவாய் இருக்கிறதென்று சொல்வது வழக்கம். இஸ்ரவேலர் நன்மைக்கென்று ஜீவிக்காமல் அழிவுக்கென்று தங்களை முற்றிலும் கொடுத்து அக்கிரமத்தில் பெருகியிருந்த காலத்தில், சகலமும் வாழ்வுக்கு ஏதுவாய் நடக்கிறது என்று சொல்வார்கள் (5. 10; 6. 3). அவ்விதமாய் நம்மை வஞ்சிக்காமல் நமக்குள் இருக்கிற பொல்லாப்பு இன்னதென்று அறிந்து அதிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்வது புத்தி. 6. 1—6.

11. 5. 25, 26-ல் இஸ்ரவேலர் வனாந்தரத்தில் கர்த்தருக்கு ஆராதனை செலுத்தினார்கள். அது புறம்பான ஆராதனையாய் இருந்ததேயொழிய உண்மையான ஆராதனையாயிருக்கவில்லையென்று சொல்லியிருக்கிறது. அங்கிருந்த காலமெல்லாம் அவர்களுடைய மனது விக்ரகாராதனையை நோக்கியே இருந்தது. நாம் தேவனை அறிந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களென்றும், அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்றும் இவ்வாக்கியம் நமக்குப் போதிக்கிறது. யோ. 4. 23, 24.

12. எச்சரிப்பின் சத்தம் கேட்கும்போது அதைக் கவனியாமல் இருக்கிறவர்களுக்கு இனிக் கர்த்தருடைய வசனத்தைக் கேட்கக் கிடை

யாத பஞ்சம் உண்டாகும். அதாவது கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கிறவர்கள் இல்லாமற் போவார்கள். (8. 11.) தேவன் எந்த ஆத்துமாவுக்காவது தமது சித்தத்தை வெளிப்படுத்துவதை நிறுத்திப் போடும்போது அந்த ஆத்துமாவின் நிலைமை நம்பிக்கையில்லாதது.

13. பாவத்தின் பலன் ஆக்கினையும் அழிவுந்தான். ஆனால் தேவன் தமது ஜனங்கள் இரட்சிப்படைவதற்கான வழியை உண்டாக்கினாலொழிய பாவத்தின்பேரில் தமது கோபத்தைக் காண்பிக்கிறதில்லை. 5. 4—6.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 50 ஜூலை 1910

REGISTRAR OF BOOKS, REGISTERED 18 AUG 1910, MADRAS.

# வேதியர் விளக்கு

## A LAD'S DECISION

## ஒரு பாலியன் செய்த தீர்மானம்

ஒரு பிரசங்கி பிரசங்கம் செய்யும்போது அதைக் கேட்கும்படி கூடியிருக்கும் பிள்ளைகள் எத்தனையோ உண்டு. ஆனால் பிரசங்க வேளையில் அவர்கள் தங்கள் புஸ்தகங்களைக் கிழிக்கிறவர்களாயும், விளையாடுகிறவர்களாயும், பேசுகிறவர்களாயும், சிரிக்கிறவர்களாயும் இருப்பார்கள். ஏனென்றால் பேசப்படும் பிரசங்கத்தில் அவர்கள் விரும்பத்தக்கவைகள் இல்லை. இப்படி அவர்கள் வசனத்தை அசட்டை செய்வது துக்கமான காரியம். இப்படி அவர்கள் கூறப்படும் வசனங்களைக் கவனியாது விளையாடுவார்களானால் தேவனுடைய கட்டளைகளை மீறுகிறவர்களாய் இருப்பார்கள். இப்போதே தேவனுடைய வாக்குகளைத் தங்கள் இருதயங்களில் அமைத்து அப்படி நடக்கிறதற்கு ஏற்பாடு செய்யும்படி பிரசங்கிகள் அவர்களை ஏவி நடத்துவார்களானால் இனிமேல் அவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்கும் வரும் நன்மையை யார்தான் விபரிக்கக்கூடும்! இதைப்பற்றி ஒரு பாலியன் செய்த ஏற்பாட்டை நாம் கவனிப்பது நல்லது.

அநேக வருஷங்களுக்கு முன்னே எருசலேம் பட்டணத்திலிருந்த ஓர் பாலியன் தான் இனிமேல் நிதானிக்க வேண்டியவைகளையும் செய்யவேண்டியவைகளையும் அறிந்து, தீமையான காரியங்களையல்ல நன்மையானவைகள் எவைகளோ அவைகளை விரும்பி அப்படிச் செய்வதில் தான் கடவுளுக்கு உத்தரவாதியாய் இருக்கவேண்டும் என்று தீர்மானித்து, தான் இருந்த பெரிய நகரத்தையும் ஆலயத்தையும் விட்டுத் தனது தாய்தந்தையரோடு அங்கிருந்து வடக்கேயுள்ள ஒரு சிறு கிராமத்திற்குப் போய், அங்கே கைத்தொழிலாகிய தச்சு வேலைசெய்து தாய்தந்தையருக்கு வேண்டிய உதவிகள் புரிந்து தான்

தீர்மானித்த ஏற்பாட்டை மறந்துபோகாமல் நடந்துவந்தான். இப்பையனைக் கண்டோர் கேட்டோர் இவனது குணாதிசயங்களைப் பார்த்து நமக்குத் தேவாலயத்தில் போதிக்கத்தக்க அவ்வளவு ஞானமும் ஒழுக்கமும் உள்ளவனாய் இவனே வருகிறான் என்று சந்தோஷப்பட்டார்கள். ஆனால் இச்சிறுவன் அவ்வூரார்களுக்கு உதவி செய்வதுமல்லாமல் இவ்வுலகத்தில் உள்ள யாவருக்கும் உதவி செய்யவேண்டும் என்று விரும்பினான். இவ்வுலகத்தின் பொருள் பொக்கிஷத்தையும் கீர்த்திப் பிரஸ்தாபத்தையும் நாடாமல், அநியாயம் அசுத்தம் கபடம் குரூரம் பட்சபாதம் ஆகிய இவைகளை அவன் வெறுத்து வந்தான். எல்லாவிதமான திவ்விய குணங்களும் உடையவனாய் துக்கமுடையவர்களைக் கண்டு அவர்களுக்கு ஆறுதலையும், வியாதிஸ்தர்களைக் கண்டு அவர்களுக்குச் சுகத்தையும் அளித்தான். தீமைசெய்கிறவர்களின் மேல் பரிதாபம் உற்றவனாய் அவர்கள் நன்னெறியில் நடக்கவேண்டிய போதனைகள் செய்தான். பயமுள்ளோரைத் திடப்படுத்தினான். பெரியோரையல்லாமலும் சிறு பிள்ளைகளையும் நேசித்து வந்தான். பூமியிலுள்ள புல் பூண்டு பட்சி மிருகம் கடல் கப்பல் ஆதியாம் காட்சிகள் அவனுக்கு விருப்பமாய் இருந்தன. அப்பையன் முதல் தொடங்கித் தான் செய்த தீர்மானத்தின்படி நடந்ததினால் தனக்கு வந்த துன்பம் யாவற்றையும் பொறுமையோடு சகித்து இருதயத்தில் பரிசுத்தனாய் இருந்தமையால் இப்பொழுது அவனைத் தங்கள் கண்களினால் பாராவிட்டாலும் கோடாகோடி ஜனங்கள் பெரியோர் சிறியோர் யாவரும் அவனை நேசித்து, ஆம், அவனுக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கவேண்டுமானாலும் கொடுக்கப் பிரியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவன் கோயில்களில் நீண்ட பிரசங்கங்கள் செய்ததுமில்லை, புஸ்தகங்கள் எழுதினதுமில்லை. அவன் ஏழையாய் மரித்தான். கடவுளின் சித்தத்தின்படி நடப்பேன் என்னும் உறுதியும் அதின்படி செய்ததுமே ஜனங்கள் அவனை நேசிக்கிறதற்குக் காரணம். அவனுடைய ஜென்மதினம் எல்லாராலும் சந்தோஷமாய் நடத்தப்படுகிறது. பெரிய ராஜாக்கள் மந்திரிமார் ஆகிய இவர்களுடைய சட்டங்களுக்கு அவன் சொன்ன வார்த்தைகளே மூலாதாரம்.

அவனுடைய நாமத்திலே மகா பெரிய ராஜாக்கள் ராஜ்ய பட்டாபிஷேகம் பெறுகிறார்கள். மனுஷருக்கு ஆறுதலைக் கொடுக்கும் அவனுடைய ஜீவிய சரித்திரத்தை 418 பாஷைகளில் எழுதியிருக்கிறார்கள். அரசர், பிரசைகள், மந்திரிகள், நியாயதுரந்தரர்கள், வித்வான்கள், ஐசுவரியவான்கள், ஏழைகள் ஆகிய யாவரும் அந்த ஜீவியசரித்திரத்தை வாசித்து ஆறுதலையும் தைரியத்தையும் சுகத்தையும் அடைகிறார்கள். அந்தச் சிறு பாலியனின் ஞாபகத்திற்காக ஏழைப்பிள்ளைகள் படிப்பதற்கு எத்தனையோ பாடசாலைகளுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் தனவான்களும் மற்றவர்களும் நன்கொடை கொடுக்கிறார்கள். அவன் வியாதிஸ்தருக்கும் திக்கற்றவர்களுக்கும் காட்டின பரிதாபத்தை நினைத்துப் பரோபகாரிகளான எத்தனையோபேர் ஆஸ்பத்திரிகளைக் கட்டியிருக்கிறார்கள்.



இப்படியிருக்க, பிரசங்கிகள் கடவுளின் சித்தத்தின்படி நடப்பேன் என்று தீர்மானம் செய்த பாலியனான இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனையில் தங்களுக்குமுன் இருக்கும் பிள்ளைகளையும் கவனித்து, இயேசு பாலியனைப்போல் நல்ல பிரமாணங்கள் சில அப்பிள்ளைகளும் மனதில் உண்டாக்கும்படி அவர்களுக்கேற்ற வசனங்கள் சொல்லிப் போதனைகள் செய்யாதிருப்பானேன்?

# A BIBLE READING — EXODUS 32

**By**

**The Rev. T. Walker, M.A.**

## யாத்திராகமம் 32-ம் அதிகாரம்

## சபை தீட்டுப்பட்டுப் போகுதல்

(தொடர்ச்சி)

**3.** கற்பலகைகள் உடைக்கப்படுவது. வாக். 15–24.

(1) தேவன் அருளின பலகைகள். வாக். 15, 16.

அவைகள் அவரால் செய்யப்பட்டது; அவைகளில் எழுதிய கற்பனைகள் அவராலே எழுதப்பட்டது. இந்தப் பரிசுத்த பலகைகளை எவ்வளவாய் நன்குமதிக்க வேண்டியதோ, அவற்றில் எழுதிய கட்டளைகளை அவ்வளவாய்க் கைக்கொள்ளவும் வேண்டியது. ஆனாலும், ஐயோ, அவைகளைச் சபையின் மத்தியில் கொண்டுவரும் முன்னமே பெரிய மாறுதல் நடந்திருந்ததே.

(2) ஜனங்கள் பண்ணின ஆரவாரம். வாக். 17, 18.

யோசுவா நினைத்தபடி அது யுத்த ஆரவாரமல்ல, ஜெய ஆரவாரமுமல்ல, கர்த்தருடைய வாசஸ்தலமாயிருக்கவேண்டிய அந்தப் பாளயத்தில் எழும்பின

*சத்தம் பரிசுத்த ஆராதனையின் சத்தமுமல்ல; ரட்சணிய சந்தோஷ சத்தமுமல்ல; ஊக்கமான ஜெபத்தின் சத்த முமல்ல; அது பாவப்பாடலின் சத்தமே.*

*தீட்டுப்பட்ட சபையிலும் கறைப்பட்ட இருதயத்திலு மிருந்து தேவ சந்நிதியிலே எழும்புகிற சத்தம் தீமை யான சத்தமேயன்றி வேறல்ல.* ஆதி. 18. 21; எசே. 14. 4, 5; மத். 15. 7, 8, 19.

(3) **மோசே காட்டின வைராக்கியம். வாக். 19, 20.**

(*a*) **பலகைகளை உடைத்துப்போட்டான். வாக். 19.** *அவன் கோபங்கொண்டு அவைகளை உடைத் துப்போட்டது தப்பிதம்; என்றாலும் உடை ந்த பலகைகள் ஜனங்கள் கர்த்தருடைய கற் பனைகளை மீறிப் பாவிகளான நிலைமைக்கு எற்ற அடையாளம்.* ரோம. 3. 23; எபி. 8. 9—12.

(*b*) **கன்றுக்குட்டியை அழித்துப்போட்டான். வாக். 20. 'அதைச் சுட்டெரித்துப் பொடியாக அரைத்துத் தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.'** *இவ்வாறு, அந்தப் பாவிகள் 'தங்கள் வழி யின் பலனைப் புசித்தார்கள்.'* நீதி. 1. 31. *பாவஞ்செய்கிற மனுஷன் தன் பாவத்தா லுண்டாகும் பலனை அனுபவிக்கவேண்டியது வரும்.* ஏசா. 1. 2—6; கலா. 6. 7.

(4) **ஆரோன் சொன்ன சாக்குப்போக்கு. வாக். 21-24.**

*தன்பேரிலல்ல மற்றவர்கள்பேரில் குற்றம் இருப்ப தாகவும் (வாக். 21, 22), இந்தத் துர்க்காரியம் தானாய் நடந்ததுபோலவும் (வாக். 24) பேசுகிறான்.*

*குற்றஞ்செய்தும் தங்கள் குற்றத்தை நன்குணர்ந்து வெறுக்காதவர்களுடைய வாயில் இவ்விருவிதமான சாக் குப்போக்கு காணப்படுவது வழக்கம்* (ஆதி. 3. 12, 13; 1 சாமு. 15. 15, 20, 21; 1 இரா. 18. 17, 18.) *இதனால், மனந்திரும்பினவன் இன்னான் என்றும், மனந்திரும் பாதவன் இன்னான் என்றும் வகையறுத்து அறிந்து கொள்ளலாம். மெய்யாய் மனந்திரும்பின மனிதன் போக்குச் சொல்லமாட்டான்.* சங். 51. 1—7.



4. **கர்த்தருடைய பட்சத்தில் நிற்பது. வாக். 25-35.**

(i) **ஜனங்கள் அடைந்த அவமானம். வாக். 25. 'ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான்.'**

*அப்படியானால் அவன் சாக்குப்போக்குச் சொல்வதினால் பிரயோஜனம் என்ன?* வாக். 21-24.

*சபையார் பாவஞ்செய்யும்போது சத்துருக்கள் கெம்பீரிக் கிறார்கள். ஆண்டவருடைய திருநாமம் அதினாலே தூஷிக் கப்படுகிறது.* ஆதி. 13. 7; 34. 30; 2 சாமு. 12. 14; ரோம. 2. 24.

(ii) **லேவியர் காட்டின பக்தி வைராக்கியம்.**

*அவர்கள் அந்த விக்கிரகாராதனைக்குட்படாதவர்கள் என்று தோன்றுகிறது.*

(*a*) **தேவனுடைய பட்சத்தில் தைரியமாய் நின்றார்கள்.** வாக். 26. *மற்றவர்களை விட்டுப் பிரிந்து கர்த்த ரண்டையில் சேர்ந்து நின்றார்கள்.*

*சபை சுத்தமாக வேண்டுமென்றால் மெய்ப்பக்தர் எல்லாரும் இவ்வாறு செய்து ரட்சணியக் கொடியை அஞ்சாமல் தஞ்சமாய்க்கொள்ள வேண்டும்.* 2 கொரி. 6. 17—18; எபி. 13. 13.

(*b*) **கர்த்தருக்குத் தங்களை முற்றிலும் பிரதிஷ்டை செய் தார்கள். வாக். 28.** *அவருடைய மகிமை ஒன் றையே நாடி அவருடைய சித்தத்தை நிறைவேற் றும்படிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இவ்விதமான பிரதிஷ்டை நமக்குள்ளும் அவ சியம் வேண்டும்.* ரோம. 6. 11, 13, 22; 12. 1, 2; பிலி. 3. 7—11; 2 கொரி. 7. 11.

(*c*) **பாவத்தை அகற்றிவிட முயற்சி பண்ணினார்கள். வாக். 27.** *நாமும் தேவனுடைய வசனமாகிய பட்டயத்தை எடுத்துக்கொண்டு* (எபே. 6. 17; யோவா. 17. 17), *சபையைச் சுத்திகரிக்கும்படி பிரயாசப்படுவோமாக.*

*இவ்விதம் செய்பவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டா கும்.* வாக். 22; உபா. 33. 8—11; மல். 2. 4—7; மாற். 3. 34, 35.

(iii) மோசே செய்த ஜெபம். வாக். 30–35.

பாவத்தால் கறைப்பட்ட தன் ஜனங்களுக்காக எவ்வளவோ வாஞ்சையோடு வேண்டுதல் செய்கிறான்; அவர்களுக்காகப் பாவமன்னிப்பைக் கருத்தோடே தேடுகிறான். இவ்வசனங்களில் உணர்த்திய விசேஷங்கள் எவையென்றால் :

(a) பாவத்தை நன்றுணரவேண்டும். வாக். 30. 'நீங்கள் மகா பெரிய பாவஞ் செய்தீர்கள்.' நாம் பாவத்தை அற்பமாய் எண்ணாமல் அதின் அகோரத்தை உணருவது மிகவும் அவசியம். சங். 51. 3, 4; எஸ்றா 9. 6; தானி. 9. 5—9; லூக். 18. 13; 2 கொரி. 7. 9, 10.

(b) பாவநிவிர்த்தியைத் தேடவேண்டும். வாக். 30. 'உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய...கர்த்தரிடத்துக்கு ஏறிப்போகிறேன்.' பாவம் நீங்கும் வழியைத் தேடுவதும் அனுசரிப்பதும் அவசியம். தன் பாவத்தை உணர்ந்தவன் இரட்சகருடைய திரு ரத்தத்தின் புண்ணியத்தைச் சார்ந்து கொள்ளுவான். எபே. 1. 7; 1 யோவா. 2. 1, 2.

(c) பாவத்தை அறிக்கையிடவேண்டும். வாக். 31. 'ஐயோ, இந்த ஜனங்கள் மகா பெரிய பாவத்தைச் செய்திருக்கிறார்கள்' பாவத்தை மறைக்காமல் அறிக்கையிடுவதும் அவசியம். நீதி. 28. 13; 1 யோவா. 1. 9.

(d) பாவ மன்னிப்பைக் கேட்கவேண்டும். வாக். 32. 'மன்னித்தருளும்.' தீராத வாஞ்சையோடே மோசே தன் ஜனங்களுக்காக வேண்டுதல் செய்து அவர்களுக்கு மன்னிப்பை அருளும்படி தேவனை நோக்கிக் கெஞ்சிக் கேட்கிறான். 'இல்லாவிட்டால் உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்' என்கிறான். சங். 32. 5; 51. 7.

(e) பாவத்தினாலுண்டாகும் கஷ்டத்தைச் சகிக்கவேண்டும். வாக். 34, 35. 'அவர்களுடைய பாவத்தை விசாரிப்பேன்.' 'கர்த்தர் அவர்களை உபாதித்தார்.' அடிக்கடி, பாவத்தின் பலனை இம்மையில் அனுபவிக்கவேண்டியது வரும். 2 சாமு. 12. 13, 14; 1 இரா. 17. 17, 18; 2 நாளா. 26. 16—21.



# 'HE IS NOT HERE'

**Sermon Notes by the Rev. Z. Ross of Salem**

## 'அவர் இங்கே இல்லை' மாற். 16. 6.

நமது இரக்ஷண்ய சேனாபதியாகிய இயேசுபகவான் பாவம், மரணம், பிசாசு, நரகம் ஆகிய சத்துருக்களை ஜெயித்து உயிர்த்தெழுந்ததே கிறிஸ்து மார்க்கத்தின் மகத்துவம். 'வெற்றுக் கல்லறையே கிறிஸ்து மார்க்கத்தின் அஸ்திபாரம்' என்று இகழ்ச்சியாய்ச் சொல்லப்பட்டதுண்டு. ஆகிலும் அவ்விகழ்ச்சியே கிறிஸ்து மார்க்கத்தின் புகழ்ச்சி, அத்தூஷணமே விசுவாசியின் பூஷணம். இயேசுவின் உடல் கல்லறையிலேயே இருந்திருக்குமானால் அவரோடு கூடவே கிறிஸ்து மார்க்கமும் புதைபட்டிருக்கும். வெற்றுக் கல்லறையைப்பற்றி மூன்று குறிப்புகளைச் சுருக்கமாய்க் கவனிப்போம் :

I. வெற்றுக் கல்லறையின் சரித்திரம்.

II. வெற்றுக் கல்லறையின் மேன்மை.

III. வெற்றுக் கல்லறையின் வல்லமை.

### I. வெற்றுக் கல்லறையின் சரித்திரம்

ஏறக்குறைய 1900 வருஷங்களுக்குமுன் யூதருடைய பஸ்கா பண்டிகையை அடுத்த ஓர் ஞாயிற்றுக்கிழமை பலஸ்தீனாவின் விசேஷ நகராகிய எருசலேமில் பெரிய அமளி உண்டாயிற்று. தண்ணீர்த் துறையிலும், அன்னாவின் வீட்டிலும், மூப்பர் சங்கத்திலும், பிலாத்து ஏரோது என்பவர்கள் அரமனையிலும் 'அவர் இல்லை' என்னும் சத்தமே எதிரொலித்தது.

காரணம் என்ன? வெள்ளிக்கிழமை சாயந்தரம் கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டதால் சீஷர் வெளியே தலைகாட்டப் பயந்து மறைந்திருந்தார்கள். துக்கத்தால் நிறைந்த பக்தியுள்ள ஸ்திரீகள் அவருக்குக் கடைசி மரியாதையாகக் கர்த்தவர்க்கமிட்டு அவர் முகத்தைப் பார்த்துவரலாமென்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அவரை க்ஷேமித்த கல்லறையண்டை போனபோது, கல்லறை வாசலில் இருந்த கல் புரட்டப்பட்டிருந்தது; அவரோ அங்கே இல்லை. உடன்படிக்கையின் கர்த்தர் கல்லறையில் அடைபட்டிருப்பதெப்படி? கிறிஸ்துவோ சாத்தானைச் சாகக் காயப்படுத்தி மூன்றாம் நாள் வெளியே வந்தார்.

## II. வெற்றுக் கல்லறையின் மகத்துவம்

வெற்றுக் கல்லறை கிறிஸ்து மார்க்கம் ஒன்றுக்கே உரித்தான பிரத்தியேக சிலாக்கியம். கிறிஸ்து மார்க்கம் ஒன்றே வெற்றுக் கல்லறையைப்பார்த்து மகிழுகிறது. வெற்றுக் கல்லறையின் மகத்துவம் எதிலடங்கியிருக்கிறது?

1. அதின் வெறுமையில் அடங்கியிருக்கிறது.
   அதில் இல்லாதது என்ன?

(a) கர்த்தரின் உடல் இல்லை. எருசலேமின் வீதிகளில் திரிந்த திருப்பாதங்கள் அங்கே இல்லை; சமாரியா நாட்டிலும் கலிலேயா புறங்களிலும் நடந்துபோய் வியாதிக்காரரைத் தொட்டு குணமாக்கின திருக்கரங்கள் அங்கே இல்லை; அமிர்தமொழி வசனித்த வாய் அங்கே இல்லை; கிருபை நிறைந்த கண்கள் அங்கே இல்லை; அவருடைய மலர்ந்த முகம் அங்கே இல்லை.

(b) அவருடைய சரீரத்தோடு கல்லறைக்குள் இறங்கின சாபம் அங்கே இல்லை. அவர் கல்லறையை விட்டு நீங்கினபோதே சாபமும் நீங்கினது. தேவசமூகம் மறைபட்டதே சாபம்; அந்தச் சாபம் பூமியில் இறங்கவே அது தன் அயனத்தை விட்டுக் காரிருளை நோக்கிச் செல்லுவதுபோல் போய்க்கொண்டிருந்தது; இப்போதோ அந்தச் சாபம் நீங்கி மனிதன் தேவனோடு ஒப்புரவானான்.

(c) பாவ வல்லமை போயிற்று. விசுவாசியின் உள்ளத்தில் பாவ ஆளுகை நீங்கி, கிருபை ஆளுகை நிலைபெற்றது; பரிசுத்த விருப்பம், பாவ வெறுப்பு, தூயசிந்தை, பக்தி விருத்திக்கான சம்பாஷணை கதித்து வளரத் துவங்கிற்று.

(d) மரண வல்லமை போயிற்று. முன்மரணம் பயங்கரமான அரசன், இப்போது நல்ல வேலைக்காரன், தோழன், சிநேகிதன், சரீர சிறையிருப்பை நீக்கிப் பாதுகாக்குக் கொண்டுபோகும் வாகனம்.

2. வெற்றுக் கல்லறையின் மகத்துவம் அதின் நிறைவில் அடங்கியிருக்கிறது. வெறுமையில் நிறைவுண்டாகுமோ? என் உண்டாகாது? ஒன்றுமில்லாமையிலிருந்து சர்வசிருஷ்டியும், இருளில் இருந்து ஒளியும், மரணத்திலிருந்து ஜீவனும் உண்டாயிருக்கையில் வெற்றுக் கல்லறையில் நிறைவு உண்டாகாதா? வெற்றுக்கல்லறையில் உண்டாகும் நிறைவு என்ன?



(a) பாவக்கடன் சீட்டு, பாவியின் முறிச்சீட்டு, சிலுவையின் மேல் ஆணி அறைந்த சீட்டு கிழிக்கப்பட்டது.

(b) குமாரன் காலால் மிதித்து ஒடித்த மரண செங்கோல்.

(c) புத்திர சுவிகார ஈடு. முதற்பேறானவர் எழுந்தபடியால் புத்திரரும் எழுந்திருப்பார்கள். பிதா தமது பிள்ளையைக் கைவிடமாட்டார். விசுவாசிக்கிறவன் சுதந்தரவாளியாகிறான். யோவா. 1:12.

(d) கிறிஸ்துவின் அதரிசன சமூகம். 'நான் இருக்கிற இடமெங்கேயோ அங்கே என்னுடையவர்களும் இருப்பார்கள்.'

(e) பிதாவின் மகிமை. கிறிஸ்து பிதாவின் தற்சொரூபம்.

## III. வெற்றுக் கல்லறையின் வல்லமை

அதின் வல்லமை அதின்மேல் கட்டப்பட்ட சபையைக் கவனிப்பதால் தெரியும். கிறிஸ்து தாமே அஸ்திபாரமாயிருந்து சபையைக் கட்டியிருக்கிறார்.

(a) சபையின் வல்லமை அதின் பிரபலத்தில் தெரியும். அதின் ஜனன தினத்தில் 3,000 பேர் பிறந்தார்கள். சில வருஷங்களுக்குள் பிலிப்பு என்பவனால் சமாரியாவிலும் எத்தியோப்பியாவிலும் சபை உண்டாயிற்று. பின்பு சீரிய அந்தியோகியா, சின்ன ஆசியா, ஐரோப்பா, தீவுகள் முதலான எப்பக்கத்திலும் பரம்பினது.

(b) சபையின் வல்லமை அதின் கிரியையால் தெரியும். பாதாளத்தின் வாசல்கள் அதை ஜெயிப்பதில்லை. அது பட்டயக் கருக்கைப் பழித்தது; அக்கினி சுவாலையைப் பார்த்து நகைத்தது.

நாம் எவ்வளவு சொன்னாலும் வெற்றுக் கல்லறையை விவரிக்க முடியாது. கடைசியில் பிரதான தூதனிடம் எக்காள சத்தம் தொனிக்கும்போது பூலோக சபையும் மேலோக சபையும் ஒன்றுபடுகையில் வெற்றுக்கல்லறையின் வல்லமை பூரணமாய் விளங்கும். அப்போது மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக்களிப்புடன் சீயோனுக்குவருவார்கள். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடை

வார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். அந்நாளுக்கு நம்மை நடத்திக்கொண்டுபோம் திரியேக தேவனுக்கு மகிமையும் கனமும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

# THE TEACHING OF AMOS CONCERNING SIN

By

Miss E. M. Swift

## பாவத்தைக் குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி போதித்தது

இதைத் தெளிவாய் நாம் அறிந்துகொள்ளும்படிக்கு நாம் முதலாம் அதிகாரத்திலிருந்து துவக்கி இந்த ஆகமத்தில் குறிப்பிட்டிருக்கிற பாவங்கள் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து அதன்பின் அவைகளைப் பிரிவுபடுத்தலாம்.

**I. பலஸ்தீனாவைச் சூழவிருந்த ஜனங்களின் பாவம்.**

1. கீலேயாத்தை இருப்புக்கருவிகளினால் போரடித்தது. 1. 3.
2. அடிமைகளாய் விற்கும்படி கிராமத்தாரைச் சிறைபிடித்தது. 1. 6.
3. சகோதரருடைய உடன்படிக்கையை மறந்துபோனது. 1. 9.
4. சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து தன் மனதை இரக்கமற்றதாக்கி, கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு தன் மூர்க்கத்தை நித்தியகாலமாக வைத்திருந்தது. 1. 11.
5. தங்களுடைய எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்கு யுத்தத்தில் குரூரவதை செய்தது. 1. 13.
6. செத்த பிறகுங்கூட பழியெடுக்கும்படி பகை சாதித்தல். 2. 1.

இவ்விதமாய் இந்த ஆறு வகையான ஜனங்களும் யுத்தத்தில் குரூரம் செய்து, சகோதர ஐக்கியத்தை மறந்து, உடன்படிக்கைகளை மீறி



நெடுங்காலமாய்ப் பகை சாதித்து, எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்கு யுத்தங்களைச் செய்து, குற்றவாளிகளாகத் தேவனுக்குமுன் வந்து நிற்க வேண்டியவர்களாயிருந்தார்கள்.

தற்காலத்தில் இந்தக் குற்றங்களுக்குள் அகப்படாமல் இருக்கிற ஜனம் எதுவோ அது பாக்கியமுள்ளது. தேசாபிமானம் உள்ளவர்களென்று சொல்லிக்கொண்டு, மற்ற ஜனங்களைப் பகைத்து அவர்களுக்கு நஷ்டம்பண்ணித் தங்களுடைய இராச்சியத்தை விஸ்தரிக்க முயன்று சுயநேசம் பாராட்டின இந்த ஜனங்களைப்போல் இராதிருப்போமாக. இராச்சியத்தை விஸ்தீரணப்படுத்த வேண்டுமென்று யுத்தம் செய்வது தேவனுடைய பார்வையில் அருவருப்பானது. யுத்தத்தில் அனாவசியமான குரூரமும் அப்படியே. அடிமை வியாபாரம் ஒரு ஜனம் அழிந்து போவதற்குப் போதுமான முகாந்தரமாய் இருக்கிறதென்று கண்டிப்பாய் இங்கே பேசப்படுகிறது. அன்பு பாராட்டுவதற்குப் பதிலாக பகை சாதிப்பதும், உண்மையாய் இருப்பதற்குப் பதிலாக துரோகம் செய்து காட்டிக்கொடுப்பதும் எக்காலத்திலும் நீங்காத கறையாயிருக்கிறது.

இங்கே தேவன் தமது பிரமாணத்தைக் குறித்தாவது தமது வெளிப்படுத்தலைக் குறித்தாவது ஒன்றும் சொல்லவில்லை. இந்தக் கடமைகளைப்பற்றிய சாதாரண அறிவு எல்லா ஜனங்களுக்கும் பொதுவானது. தமது வசனத்தைக் கேளாத ஜனங்களைத் தேவன் நியாயந்தீர்க்க வருகிறார் என்று சொல்லும்போது சுபாவமாய் அவர்கள் மனதிற்குத் தெளிவுறத் தெரிந்த நன்னெறி, நல்லுணர்வு இவைகளின் பிரமாணங்களுக்கு விரோதமாய் நடந்துகொண்ட அவர்களுடைய சொந்தப் பாவத்தினிமித்தமேயென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விஷயமாய் யூதரையும் புறச்சாதியாரையும் ஒப்பிட்டுப் பேசுகிறார் (ரோம. 2. 1—16). முதலாவது நமக்குக் கிடைத்தது சுபாவப் பிரமாணத்தின் வெளிச்சமே. இது வெளிப்படுத்தலுக்கு முற்றும் பிரத்தியேகமானது. தேவனைப்பற்றிய அறிவு முதன் முதலாக நமக்கு அருள் வேதத்தினாலல்ல, இயல் வேதத்தினால் கிடைத்தது. இதை மீறி நடந்தால் பின்னால் அருளப்படும் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள அபாத்திரனாய்ப் போவாய். கிறிஸ்துவைப்பற்றிக் கேளாதிருக்கிற ஜனங்களைத் தேவன் நியாயந்தீர்க்கிற முகாந்தரம் இன்னதென்று இதனால் நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

**II. யூதாவின் பாவம்.** 2. 4, 5.

1. நியாயப்பிரமாணத்தைத் தள்ளிப்போட்டது.
2. கட்டளை மீறினது.

3. விக்கிரகாராதனை. (பொய் = விக்கிரகங்கள், வாக். 4.)
4. அதினால் அவர்கள் மெய்யான தேவனைவிட்டு வழிவிலகித் திரிந்தது.

யூதாவுக்கு விசேஷித்த சலாக்கியமும் விசேஷித்த சம்பந்தமும் இருந்தபடியினால் அவர்கள் விசேஷித்த பிரகாரமாக உத்தரவாதிகளாயிருந்தார்கள். நியாயப்பிரமாணத்தை மீறினதினிமித்தம் அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். கர்த்தர் விக்கிரகவணக்கம் தகாதென்று சொல்லியிருந்தார். இதைக்குறித்துத் தீர்க்கதரிசி அதிக தெளிவாய்ப் பேசுகிறான்.

(இன்னும் வரும்)

# THE CHIEF TEACHING OF SCRIPTURE

By

Mr. J. N. Thomas

## உத்தம வேதோபதேசம்

'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.' ஏசா. 1. 18.

'கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.' 1 கொரி. 15. 3, 4.

'இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு (பாவமன்னிப்பு) இல்லை.' அப். 4. 12.

'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.' 1 தீமோ. 1. 15.

'இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்.' அப். 10. 34.

'தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.' 1 யோவா. 1. 7.

'தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு



அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.' யோவா. 3. 16.

'மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.' மத். 20. 28.

'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.' மத். 11. 28.

'பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.' யோவா. 6. 37.

'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.' யோவா. 14. 6.

'அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.' கலா. 1. 4.

'என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.' ஏசா. 53. 11.

'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.' யோவா. 6. 47.

'என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக் குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.' யோவா. 5. 24.

'கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.' கலா. 3. 13.

'நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.' 1 பேது. 2. 24.

'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதா

னத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.' ஏசா. 53. 5.

'இழந்துபோனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.' லூக். 19. 10.

'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்.' யோவா. 8. 12.

'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்.' நீதி. 28. 13.

'துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.' ஏசா. 55. 7.

'தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றமுடிய ரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார்.' எபி. 7. 25—27.

'ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.' எபி. 10. 19—22.



# JAPAN AND INDIA

## ஜப்பானும் இந்தியாவும்

### கனம். G. S. எடி ஐயர், M.A. இயற்றின ஒரு புஸ்தகம்

தற்காலம் உலகத்தில் கல்வி நாகரீகத்தை அதிகமாய் விரும்புகிறவர்கள் ஜப்பானியரைவிட வேறொருவரும் இல்லையென்று சொல்லலாம். நாற்பது வருஷத்திற்கு முந்தி ஜப்பானியரைப்பற்றி விசேஷமாய் நாம் அறியக்கூடியவைகள் ஒன்றும் இல்லை. அக்காலத்தில் அவர்கள் தங்கள் தேசத்திற்கு மற்றத்தேசங்களிலிருந்து ஜனங்களை வரவிடாமலும், மற்றத்தேசங்களிலுள்ள கல்வி நாகரீகம் முதலியவற்றை விரும்பாமலும், தங்கள் முன்னோரின் பழக்கவழக்கங்களையே அனுசரித்து வந்தார்கள். ஆனால் இப்போதிருக்கிற ஜப்பான் சக்கரவர்த்தி தன் தேசம் கல்வி நாகரீகத்தில் இங்கிலாண்டு அமெரிக்கா முதலிய தேசங்களைப்போல் முன்னுக்கு வரவேண்டும் என்று விரும்பியதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் எல்லாம் செய்ததினாலே நாற்பது வருஷத்திற்கு இடையில் அந்தத் தேசம் எவ்வளவோ விருத்தியடைந்திருக்கிறது.

ஜப்பான் தேசத்து ஜனங்களின் தொகை சென்னபட்டண இலாக்காவிலுள்ள ஜனங்களின் தொகையவ்வளவுதான். ஆனாலும் அங்குள்ளவர்கள் மற்றத்தேசங்களில் கற்றறிய வேண்டியவைகளைக் கற்று மேலான ஸ்திதியில் வந்திருக்கிறார்கள். கிருஷி சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், புவன சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், பௌதிர சாஸ்திரம், முதலியவற்றைப் படித்து கல்வியிலும் நாகரீகத்திலும் அதிக தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பையனும் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும் என்பது கட்டாயப் பிரமாணம். அவர்கள் வியாபாரம் முதலிய தொழில் துறைகளில் அதிக முயற்சியுடையவர்களானார்கள். ஜப்பானைப் போய்ப்பார்த்தால் எங்கும் புகைரத பாதைகளையும் அலங்காரமான ரஸ்தாக்களையும் காணலாம். எத்தனையோ கப்பல்கள் அங்கே உண்டு. 'குறையற்ற வாழ்வே வாழ்வு' என்பதை அவர்களில் தான் திருஷ்டாந்தமாய்க் காணலாம்.

1907-ஆம் கனம். G. S. எடி ஐயர் அவர்கள் ஜப்பானுக்குப் போய் அங்குள்ள கல்வி நாகரீகம் பழக்கவழக்கம் ஆதியாம் அபிவிர்த்திக்குரிய இந்தக் காரியங்களைப்பார்த்து, ஜப்பானியரைப்பற்றி இந்தியர் வாசித்தறிந்து அவர்களைப்போலவே இவர்களும் முன்னுக்கு வர

வேண்டும் என்று விரும்பி இங்கிலிஷில் 'ஜப்பானும் இந்தியாவும்' (Japan and India) என்னும் புஸ்தகம் எழுதினார்கள். அதைக் கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் தமிழில் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அங்கிலேய பாஷை தெரியாதவர்களும், பள்ளிக்கூடப்பிள்ளைகளும், வாரந்தோறும் பக்தி விருத்திக்காக வைக்கும் கூட்டங்களில் ஆண்கள் பெண்கள் பிள்ளைகள் யாவரும் வாசிக்கவும், வாசிக்கிறதைக் கேட்கவும், இதிலிருக்கும் விநோதமான காரியங்களைப் பிரசங்கத்தில் விவரித்துச் சொல்லவும் இது அதிக பிரயோஜனமான புஸ்தகம். பக்கம் 141. விலை. 4 அணா.



No. 51 ஆகஸ்டு 1910

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 AUG 1910
MADRAS.

# வேதியர் விளக்கு

## SERMONS SUITED TO THE HEARER

## கேட்போரின் நிலைமைக்குத் தக்க பிரசங்கம்

பிரசங்கிமார்களில் அநேகர் செய்யும் பிரசங்கங்களை நாம்
கவனிக்கும்போது அவர்கள் தங்கள் பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்
டிருக்கும் சபையாரது பலவிதமான நிலைமையைக் கவனியாது பிரசங்
கம் செய்கிறதாகத் தோன்றுகிறது. ஏனென்றால் சபையாருக்கு
நாள்தோறும் நேரிடுகிற சோதனைகள், துன்பங்கள், கஷ்டங்கள்,
வியாதிகள் ஆகியவற்றை மறந்து பிரசங்கம் செய்கிறார்கள். கூட்டத்
துக்கு வந்திருக்கிற சபையாருடைய எண்ணங்கள் பலவகையாயும்
பல இடங்களிலும் சிதறியிருக்கிறதுண்டு. தங்களுக்கு வேலையில்லை
யே, யார் தங்களை நல்ல வேலையில் அமர்த்துவார்கள் என்ற கவலை
யில் இருப்பார் சிலர்; தங்கள் பிள்ளைகளைச் சரியாய்ப் பராமரிக்கத்தக்க
ஏதுக்கள் இல்லாதபடியால் என்ன செய்வோம் என்று அங்கலாய்ப்
பாய் இருப்போர் சிலர்; தாங்கள் விருத்தாப்பியராய்ப் போகிறதினால்
எங்கள் பிள்ளைகளுடைய கல்வி முதலியவைகளுக்கு ஒரு ஆதரவும்
இல்லையே என்று நினைப்பார் சிலர்; வீட்டிலே வியாதிப் படுக்கையி
லிருக்கும் தங்களுக்கு அன்பான உறவினரைப்பற்றித் துக்கப்படு
வோர் சிலர்; இறந்துபோன பெற்றோரைப்பற்றி அல்லது தங்க
ளுக்கு அருமையான சொந்தக்காரரை நினைத்துப் பெருமூச்செறிவார்
சிலர்; பரீக்ஷையில் தேறியிருப்போமோ என்று ஐயப்படுகிற மாணாக்
கர் சிலர்; இவ்வித துக்கம் ஒன்றுமில்லாமலிருக்கிறவர்களும் சிலர்.
இப்படியே கோவிலுக்கு வருகிறவர்கள் பலவித எண்ணங்களும்
யோசனைகளும் உள்ளவர்களாய் இருப்பார்கள். மேலும், உத்தியோக
காலத்தில் தங்கள் எஜமான்களைப் பிரியப்படுத்தி நடப்பது எப்படி
என்றும், கடைவியாபாரத்தில் ஒருவனை மோசம்பண்ணி அவன்

பொருளை அபகரிப்பது எப்படி என்றும், வேலைசெய்யும் பட்டறைகளில் தங்கள் முதலாளியறியாமல் அவன் பொருள்களைத் திருடுவது எப்படி என்றும், விபசாரம் முதலிய துன்மார்க்கமான செய்கையில் நுழைவது எப்படி என்றும் எண்ணமுற்றிருக்கிறவர்களும் இல்லையா? பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் சபையாரின் மனம் இப்படி இருக்கும்போது, பிரசங்கபீடத்தில் நின்று பேசுகிறவர் அரைமணி நேரமாய் ஆன்மார்த்தமாய்ப் பிரசங்கம் செய்கையில் அவரவர் மனதுக்கும் எண்ணத்துக்கும் ஏற்றதாய்ப் போதிக்கவேண்டும் அல்லவா? ஒருநாள் ஒரு சிறு கிராமத்திலுள்ள கோவிலில் நடந்த ஆராதனைக் கூட்டத்துக்கு நான் போயிருந்தபோது கல்வியில் சிறந்த ஒரு போதகர் சபையாருக்குப் பிரசங்கம் செய்தார். சபையாரைப் பார்த்தால் அவர்கள் நஞ்சை புஞ்சை ஆகிய பண்ணைவேலை செய்யும் கூலியாட்கள். அந்தப் பிரசங்கியையும் என்னையும் தவிர இங்கிலீஷ் தெரிந்தவர்கள் அங்கே வேறொருவருமில்லை. தமிழ் கொஞ்சம் வாசிக்கத் தெரிந்தவர்கள் இரண்டொருபேர் மாத்திரம் இருந்தார்கள். பிரசங்கியாரோ அங்குள்ளவர்களை சர்வகலாசாலை மாணவர் என்று நினைத்தாக்கும் சமஸ்கிருத சுலோகங்களும், தமிழ் அரும்பத காவியங்களும், ஆங்கிலேய புஸ்தகங்களிலிருந்து உபமான, உபமேய வாக்கியங்களும் எடுத்துரைத்து மகாசாதுரியமாய் மழைபோற் பொழிந்தார். சபையாரோ 'பனையில் அணில் ஏறவிட்ட நாய்போல்,' பிரமிப்போடு அவர் முகத்தை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்களேயொழிய அவர்கள் கண்டபலன் யாதொன்றுமில்லை. சுவிசேஷ சத்தியத்தை நாம் கேட்கிறவர்களின் மனதில் பதிக்கவேண்டுமானால் அவர்களுடைய அறிவையும் தன்மையையும் அறிந்து அவைகளுக்கேற்றபடி கருகலான பாஷையில் அல்ல, அவர்கள் கிரகித்துக்கொள்ளத்தக்க விதமாய் அவர்கள் சாதாரணமாய் வழங்கும் சொற்களை வைத்துப்பேசுவதோடு அவர்கள் ஊர்களிலும் தெருக்களிலும் வயல்களிலும் வேலைத்துறைகளிலும் காணப்படுகிறவைகளைக்கொண்டு உபமானமாய் ரூபித்துக்காட்டுவது நலமாய் இருக்கும். அவர்களுடைய மனதிலிருக்கும் கவலை, துன்பம், சோதனை நம்பிக்கை முதலானவைகளை அறிந்து பரிதாப சிந்தையோடு பேசினால் அவர்களுக்குப் பிரயோஜனமாய் முடியும். அப்போது பிரசங்கி எய்யும் போதனையாகிய அம்பு இருதயமாகிய இலக்கைச் சேரும்.

சீமை தேசத்தில் கோடாகோடி ஜனங்கள் வந்து ஆவலாய்க் கேட்டு எவ்வளவோ ஆத்துமத்துக்குரிய லாபத்தை அடைந்துபோகத்தக்கவண்ணமாய் பிரசங்கம் செய்கிற ஒரு பிரசங்கியாரிடம் ஒரு முறை இன்னொரு பிரசங்கி வந்து 'ஐயா, நீர் கூறும் பிரசங்கமெல்லாம் ஜனங்களுடைய மனதில் எழுப்புதலைக்கொடுத்து அவர்கள் ஆத்துமாக்களுக்கு எத்தனையோ நன்மைகளைச்செய்து வருகிறதே. நீர் எத்தனையோ வேதவியாக்கியானங்களையும் சாஸ்திரங்களையும் படித்திருப்பீர் அல்லவா' என்று அவரை மெச்சும்படி சொன்னான். அவரோ, 'அப்படியல்ல, நான் பிரசங்கம் பண்ணுவதற்குமுன் நான் பிரசங்கம் செய்யப் போகும் வேத வசனத்தையும், எனக்குத் தினந்தோறும் வந்துகொண்டிருக்கும் பத்திரிகைகளையும் குறித்துக் கூடியமட்டும் ஆராய்ந்தறிந்து அந்தந்தக் காலத்துக்குரிய விதமாய் ஜனங்களின் நிலைமையை அறிந்து அதற்கேற்றதாய் பிரசங்கம் செய்துவருகிறேன். முன்னிருந்த தீர்க்கதரிசிகள் ஜனங்கள் செய்யும் காரியங்களையும், அவர்கள் மனதின் நினைவுகளையும் உணர்ந்து, அவைகளைப்பற்றிக் கடவுளின் சித்தத்தைத் தேடினதைப்போல் அன்றாடகம் வருகிற பத்திரிகைகளைக்கொண்டு அந்தந்தக்காலத்திற்கும் தன்மைக்கும் தக்கதாயும் குறிப்பாயும் பிரசங்கம் செய்கிறது என் வழக்கம்' என்று சொன்னார்.



# THE TEACHING OF AMOS CONCERNING SIN

By

**Miss E. M. Swift**

## பாவத்தைக் குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி போதித்தது

(தொடர்ச்சி.)

III. இஸ்ரவேலரின் பாவங்கள். இவைகளைப் பின்வருமாறு பிரிவுபடுத்தலாம்:—

A. வியாபாரிகள் செய்த பாவம்.
B. அதிகாரிகள் செய்த பாவம்.
C. ஜனங்கள் செய்த பாவம்.
D. மார்க்கானுசாரிகள் செய்த பாவம்.

A. **வியாபாரிகள் செய்த பாவம்:**

1. நீதிமானைப் பணத்திற்கு விற்றல். 2. 6.
2. ஏழைகளை ஒரு ஜோடு பாதரட்சைக்கு விற்றல். 2. 6.
3. ஏழைகளின் தலையில் மண்ணை வாரி இறைத்தல். 2. 7.

4. அடைமானமாய் வாங்கினதைத் திருப்பிக் கொடாமை. 2. 8.
5. ஏழைகளை ஒடுக்கிக் கூக்குரலிடச் செய்தல். 3. 9.
6. கொள்ளையினாலும் கொடுமையினாலும் லாபம் சம்பாதித்தல். 3. 10.
7. ஏழைகளை மிதித்துக் கடுமையான லஞ்சம் வாங்குதல். 5. 11.
8. எளியவர்களை விழுங்கிச் சிறுமைப்பட்டவர்களை ஒழியப் பண்ணுதல். 8. 4.
9. வியாபாரத்தில் கள்ளத்தராசும் கள்ளப்படியும் உபயோகித்தல். 8. 5.
10. அகவிலையை உயர்த்துதல். 8. 5.
11. தானியத்தின் பதரைக்கூட உயர்ந்த விலைக்கு விற்றல். 8. 5.

இங்கே வியாபார ஸ்தலங்களில் வியாபாரிகளுக்குள்ளும் காசுக்காரருக்குள்ளும் நடக்கும் பாவம் இன்னதென்று தெளிவாய்க் காட்டப்படுகிறது. நமது தேசத்திலும் வியாபாரிகள் கடைகளில் கள்ளப்படிகள் உபயோகித்து, கடும் வட்டிவாங்கி, ஏழைகளை முன்னிலும் தரித்திராக்கி, பஞ்சகாலங்களில் விலையை ஏற்றிவிட்டு இவ்விதமாய் அநியாயம் செய்தால், நமது தேசம் அதே குற்றத்திற்குள்ளாகாதோ? கிறிஸ்தவ வியாபாரிகளும் காசுக்காரர்களும் தங்களிடத்தில் இப்படிப்பட்ட பாவங்கள் இல்லையென்று சொல்லக்கூடுமோ? பேராசை, பொருளாசை, அபகரிக்கும் குணம், ஒருவனைக் கெடுக்கிறதற்குப் போதுமானதல்லவோ? இவைகள் ஐசுவரியவான்களில் மாத்திரம் உண்டு என்று எண்ணுவது பிசகு. எளியவர்களும் இப்படிப்பட்ட அநியாயமும் வஞ்சனையுமான காரியங்களைச் செய்வார்கள். ஆயினும் பெரியவர்களுடைய அநியாயத்தினால் சிறுமையாக்கப்பட்ட எளியவர்களின் மேல் தேவன் அதிக உருக்கமுள்ளவராயிருக்கிறார். தரித்திரம் ஒரு மனிதனைப் புகழாது என்றும், ஐசுவரியம் அவனை இகழவுமாட்டாது என்றும் தீர்க்கதரிசி நன்றாய் அறிவான். ஐசுவரியம் எப்படி வந்தது, அல்லது தரித்திரம் எப்படி வந்தது என்பதுதான் முக்கியம்.

B. அதிகாரிகள் செய்த பர்வம்:

1. நீதிமானை விற்றல். 2. 6.
2. பறிமுதல் செய்தல். 5. 11.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 AUG 1910
MADRAS.

3. நீதிமானை ஒடுக்குதல். 5. 12.
4. பரிதானம் வாங்குதல். 5. 12.
5. ஒலிமுகவாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுதல். 5. 13, 24.
6. நியாயத்தை எட்டியாக மாற்றுதல். 5. 7; 5. 15, 24.
7. நீதியைத் தரையிலே விழப்பண்ணுதல். 5. 7; 5. 15, 24.

இவைகளெல்லாம் நியாயஸ்தலங்களில் பெரிய அநியாயங்கள் இருந்ததென்றும், நியாயாதிபதிகளுங்கூடப் பொருளாசையினால் பீடிக்கப்பட்டிருந்தார்களென்றும் காட்டுகின்றன. எளியவர்கள் தங்களை ஒடுக்குகிறவர்கள்பேரில் கலகித்தெழும்பும் கூக்குரல் பட்டணத்திலே அதிகமாயிருந்தது. 3. 9. எளியவர்கள் பெரியவர்களிடம் உதவி தேடினபோது அவர்கள் இவர்களுடைய மன்றாட்டுக்குச் செவிகொடாமல் செல்வச் செருக்கில் மூழ்கியிருந்தார்கள். 6. 1—6. இராஜாக்கள், நியாயாதிபதிகள், அதிகாரிகள் யாவரும் ஐசுவரியத்தின்பேரிலும் சிற்றின்பத்திலும் மனோபாவம் கொண்டிருந்தார்கள். ஆகையினால் ஜனங்களுக்கு நம்பிக்கையற்றுப் போயிற்று.

நியாயப்பிரமாணத்தைப் புரட்டி அநியாயமான காரியங்களுக்கு இடங்கொடுக்கிற எந்த ஜனமும் இந்தக் குற்றத்திற்குள்ளாகிறார்கள். நியாயப்பிரமாணத்தைக் கையிலே வைத்திருக்கிறவன் தாழ்ந்த உத்தியோகஸ்தனாயிருந்தாலும் அவன் இழிவான ஆதாயத்தை விரும்பி, அநீதியைக்குறித்துக் கண்சாடையாயிருந்தால், ஆமோஸ் சொல்லுகிறபடி அவனே தேவ கோபாக்கினைக்குப் பாத்திரனவான். கள்ளச்சாட்சிகளை ஏற்படுத்துவதும், அநியாயமான வழக்கென்று திட்டமாய்த் தெரிந்திருந்தும் அதற்காக வாதாடுவதும், காசுள்ளவன் எவனோ அவனுக்குச் சார்பாக நியாயந்தீர்ப்பதும், ஆகிய இவையெல்லாம் ஒரு ஜனத்தை நாசப்படுத்துகிற பழிபாதகங்களே. இன்ன உத்தியோகத்தைச் செய்தால் அதிலே அநியாயமாய் ஆதாயங்கிடைக்குமென்று அதைத் தெரிந்துகொள்வதும், பொதுஜனக் கூக்குரலைக்கேட்டு அதற்கு நிவிர்த்தியுண்டாக்காமல் இருப்பதும், ஒரு இராச்சியத்தைக் கெடுக்கக்கூடிய கொள்ளைநோயாயும் அழிவைப் பிறப்பிக்கும் வித்தாயும் இருக்கிறது.

C. ஜனங்கள் செய்த பாவம்:

1. துன்மார்க்கம். 2. 7.
2. வேசித்தனம். 2. 8.
3. மதுபானம். 2. 12; 4. 1; 6. 6.

4. டம்பம். 3. 12; 6. 4.
5. உண்டுகளித்தல். 6. 5, 6.
6. பெருவாழ்வு. 3. 11, 15.

இங்கே அநியாயத்தினாலும் வஞ்சனையினாலும் வஞ்சகத்தினாலும் சம்பாதித்த பணத்தை ஜனங்கள் உபயோகிக்கும்வகை இன்னதென்று தீர்க்கதரிசி சொல்லுகிறான். இப்படி அநியாயமாய்ப் பணத்தைச் சம்பாதிப்பதின் நோக்கம் சிற்றின்பமும் பாவமுந்தான். நமக்குள்ளும் கொஞ்சம் காசுபணம் வைத்திருப்பவர்கள் இப்படிப்பட்ட சுய இச்சையும் சோம்பலுமான ஜீவியம் செய்ய ஏவப்படுகிறதில்லையா? ஒரு நூலாசிரியன் வழிப்போக்காகிய மூன்று மனிதரைப்பற்றி பின்வருமாறு தீர்மானித்தான்: 'ஒருவன் பெரிய இரதத்தில் ஏறிப்போகிறான்; இன்னொருவன் கால்நடையாய்ப் போகிறான்; மற்றவன் நிர்ப்பந்தமான பிச்சைக்காரனாயிருக்கிறான். இந்த மூவரில் அந்தப் பிச்சைக்காரன் பாவசிற்றின்பங்களில் மூழ்கியிருக்கக்கூடுமானால் அவர்களைப் பார்க்கிலும் அவனே டம்பமானவன்.' ஐசுவரியம் தரித்திரம் இவைகளைக் குறித்ததல்ல. ஐசுவரியமுள்ளவனாயிருந்தாலும், தரித்திரனாயிருந்தாலும் ஒருவனின் நடக்கை முக்கியமானது.

D. (*a*) **மார்க்கசம்பந்தமான பாவங்கள் :**

1. தேவனுடைய வீட்டில் அசுத்தத்தை நடப்பித்தல். 2. 8.
2. ஆவிக்குரிய சலாக்கியங்களை அசட்டை செய்தல் 2. 12.
3. பொருத்தனை செய்துகொண்டவர்களை மதுபானத்தினால் அசுத்தப்படுத்தல். 2. 12.
4. தீர்க்கதரிசிகளின் போதனைகளை வேண்டாமென்று தடுத்தல். 2. 12.
5. ஒப்பாசாரமான ஆராதனை. புறம்பான சடங்காசாரங்களின்மேல் பற்றுதல், உள்ளத்தில் உலக சிந்தை. 4. 4, 5; 5. 12—23; 8. 4—6.
6. செம்மையானதைச் செய்ய அறியாமை. 3. 10.
7. பாவத்துக்காக மனஸ்தாபமின்மை. 4. 6, 8—11.
8. பொய்யான தேவர்களை நாடல். 4. 4; 5. 4, 5.
9. கடிந்துகொள்ளுதலை வெறுத்தல். 5. 10, 13.
10. தேவனை நோக்கிக் கூப்பிடாத இருதய கடினம். 6. 9, 10.
11. ஜனங்களின் பாவத்தைக்குறித்து நிர்விசாரமாய் இருத்தல். 6. 6.



12. தங்கள் சொந்த பெலத்தைக்குறித்து பெருமை பாராட்டல். 6. 13.
13. பாவத்தில் துணிகர நம்பிக்கை. 9. 10.

(*b*) **ஆவிக்குரிய சலாக்கியங்களை அசட்டை செய்தல்:**

தீர்க்கதரிசி, ஒருவன் பெற்ற சலாக்கியம் எவ்வளவோ அவ்வளவுக்கு அவன் உத்தரவாதியென்று தெளிவாய்ச் சொல்லுகிறான். 3. 12. இஸ்ரவேலருக்குக் கிடைத்த விசேஷித்த சலாக்கியங்கள் இன்னதென்று தேவன் தெரிவித்ததை நாம் பார்த்தோம். அடிமைத்தன நிலைமையிலிருந்து விடுதலைபெற்றுத் தேவனோடு விசேஷித்த சம்பந்தம் உள்ளவர்களாகி (தீர்க்கதரிசிகள் நசரேயர்கள்) ஆவிக்குரிய போதனைகளைப் பெற்றிருந்தபடியால் அவர்கள் விசேஷமான தயவு பெற்றவர்களென்று எண்ணப்பட்டிருந்தார்கள். இவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்று அனுபவிக்கக்கூடிய விசேஷித்த சலாக்கியங்கள்தான். நாம் விடுதலையாக வேண்டுமென்றே தேவன் தமது சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்தினார். (யோவா. 8. 31—52 வாசிக்க.) அவைகளை நமக்கு ஞாபகப்படுத்தப் போதகர்களையும் தீர்க்கதரிசிகளையும் கொடுத்தார். 2. 11. இயேசுகிறிஸ்துவினால் நாம் தேவனோடு சம்பந்தமுள்ளவர்களானோம். அப்படியானால் தேவன் நமக்குக் கொடுக்கிற கிருபையின் எத்தனங்களை நாம் அசட்டை செய்யாமல் மிகுந்த கவலையாயிருக்கவேண்டாமா? அவைகளினால் அதிக பிரயோஜனம் அடைய நாம் கடமைப்பட்டிருக்கிறோமே. ஆனால் சபையார் போதகருக்கு விரோதமாய் சண்டையிடவும், அல்லது சபையைச்சேர்ந்த பொல்லாத மனிதர் தங்கள் வீட்டுக் காரியங்களில் அவரைச் சம்பந்தப்படுத்தவும், அல்லது அநியாயமான வியாச்சியங்களிலும், இன்னும் சில உலக சிந்தையும் பாவமுமான காரியங்களிலும் அவரை இழுத்துப்போடவும் பிரயாசப்பட்டால் அவர்களுக்கும், கர்த்தருடைய ஊழியக்காரரைக் கெடுத்து அவர்கள் போதிக்கப்படாதென்று தடுத்த இஸ்ரவேல் ஜனங்களுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டோ? 2. 9—12; 5. 10, 13.

(*c*) **ஒப்பாசார வணக்கம் :**

அவர்களுடைய ஆராதனையைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? அவர்களது புறம்பான பக்தியில் ஒரு குறைவும் இல்லை. அவர்களுடைய பண்டிகைகளுக்கும் விசேஷ கூட்டங்களுக்கும் ஓய்வில்லை. பஜனைக்கூட்டங்கள் தவறாது. அறுப்பின் பண்டிகைகளுக்குக் கொண்டுவருகிற காணிக்கைகள் ஏராளம். தேவனோ அவர்களு

டைய நடக்கை இன்னதென்றும் அவர்களுடைய இருதயத்தின் சிந்தனைகள் இன்னதென்றும் நன்றாய் அறிந்து 'உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன், உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை' என்றும் (5. 21), 'அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒருபோதும் மறப்பதில்லை' என்றும் (8. 7) சொன்னார். இவ்விதமாய்க் கர்த்தருடைய சத்தியம் தெளிவாய் உரைக்கப்படும்போது, கிறிஸ்தவர்கள் செய்யும் அநேக காரியங்கள் இந்த ஜனங்களுடைய நடபடிக்கைகளுக்கு ஒத்ததாயிருக்கிறதென்று நாம் அறியவேண்டும். ஜெபக்கூட்டங்களுக்குப் போய்க் கோவிலுக்குக் காணிக்கை கொடுத்துவிட்டால் தங்கள் கடமை தீர்ந்ததென்று நினைக்கிற கிறிஸ்தவர்கள் இல்லையோ? இன்னும், வஞ்சித்து, பொய்சொல்லி, கொள்ளையடித்துப் பொல்லாத ஜீவியம் செய்து அநியாயமாய்ச் சம்பாதித்த தங்கள் சொத்துக்களிலிருந்து காணிக்கை கொடுத்தால் தேவன் அதில் பிரியமாய் இருப்பாரென்று நினைத்துக்கொள்ளுகிறவர்கள் எத்தனையோபேர்! தேவன் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து: 'நான் அவைகளை அங்கீகரிக்கமாட்டேன், அவைகளை நோக்கிப் பார்க்கமாட்டேன் (5. 22) என்றும், 'நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக் கடவது' (5. 24)என்றும் சொல்லுகிறார்.

(*d*) பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பாமை:

இதைக்குறித்தும் பயங்கரமான போதனைகளை இந்த ஆகமத்தில் காணலாம். தேவன் எழுத்தின்மூலமாய் மாத்திரமல்ல, தமது ஊழியர்களின் மூலமாயும் பேசுகிறார். தேவாதீனமாய்ச் சம்பவிக்கிற காரியமனைத்தும் தேவனிடத்திலிருந்து வருகிற செய்திகளே. மழைத் தாழ்ச்சி, ஒறுப்பு, பஞ்சம், தீய்ந்துபோன வெள்ளாமை, பச்சைப் புழு, வியாதி, கொள்ளைநோய், பூகம்பம் இவைகளெல்லாம் காலாகாலங்களில் உண்டாகிற ஆக்கினை என்றும், அவைகளினால் ஜனங்கள் பயமடைந்து தங்கள் பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பவேண்டுமென்றும் காட்டுகின்றன. இஸ்ரவேலரோ அவைகளைக் கவனிக்கவில்லை. இவைகளினால் அவர்களுடைய ஜீவியம் மாறவில்லை. ஆகையினாலே தேவன் இன்னும் தெளிவாகப் பேசவேண்டியதாயிருந்தது. இந்தச் சத்தம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் மனந்திரும்பாமற் போனதினால் இன்னும் அதிக பயங்கரமான ஆக்கினையுடன் புறப்பட்டு வரவேண்டியதாயிருந்தது. ஆமோஸ் எடுத்துச் சொல்லுகிற இந்தக் காரியங்களெல்லாம் நமதுதேசத்தில் மிகக் கொடூரமாய்ச் சம்பவித்திருக்கின்றன. அப்படிப்பட்ட கொள்ளைநோயும் பஞ்சமும் நம்முடைய ஆத்துமாவுக்கு



என்ன பலனைப் பிறப்பித்தது? நாம் முன்னிலும் அதிகமாய்த் தேவனைத்தேடவும் பாவத்தை விட்டுவிடவும் ஏவப்பட்டிருக்கிறோமா? இவைகளைக் குறித்து நாம் முற்றிலும் எண்ணமும் கவலையுமற்று, மனந்திரும்பாதபடிக்கு இருதய கடினமுள்ளவர்களா யிருக்கிறோமா? நீங்களோ மனந்திரும்பாமற் போனீர்கள் என்று கர்த்தர் நம்மைப் பார்த்துச் சொல்லாதபடிக்கு நாம் எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டுமல்லவா?

## DOES JESUS CHRIST LIVE IN THIS HOUSE

## இயேசுகிறிஸ்து இந்த வீட்டில் குடியிருக்கிறாரா

அநேக கிறிஸ்தவர்கள் வசித்த ஒரு ஊரிலே யாவரும் புகழ்ந்து
வந்த ஒரு தனவானும் அவன் மனைவியும் ஓர் மெத்தை வீட்டில்
குடியிருந்தார்கள். அவர்கள் அவ்வூரிலே அலங்காரமான கோவில்
ஒன்று கட்டுவதற்குத் தங்களால் இயன்றமட்டும் அதிக பணம் காணிக்
கையாகக் கொடுத்தார்கள். ஓய்வுநாள்தோறும் தவறாமல் அவர்கள்
கோவிலுக்குப்போய் வருவதுண்டு. மாசம் மாசம் தவறாமல் தேவ
ஊழியம் செய்கிறவர்களின் தாபரிப்புக்காக வேண்டிய பண உதவி
செய்துவந்தார்கள். இராப்போஜனக் கூட்டத்திற்கு ஒழுங்காய்ப் போய்
அதைப் பரிமாறுவார்கள். ஒருநாள் அவ்வூர்மார்க்கமாகப் பிரயாணம்
போன சுவிசேஷகன் ஒருவன் வழியிலே இருந்த அந்த ஐசுவரியவான்
வீட்டுக்குப்போய்த் திண்ணையில் உட்கார்ந்திருக்கும்போது அந்தத் தன
வானின் மனைவி சத்தம் கேட்டு வீட்டுக் கதவண்டை வந்து எட்டிப்
பார்த்தபோது அவனுடைய கோலத்தைக்கண்டு யாரோ ஒருவன்
பிச்சைக்காக வந்திருக்கிறான் என்று நினைத்தாள். வழக்கமாய்ப்
பிச்சைக்காரர் தமக்கடித்துப் பெருஞ்சத்தம் போட்டுப் பிச்சை கொடுக்
கும்படி பலவந்தப்படுத்துவார்கள். அவனோ சற்றுநேரம் பேசாம
லிருந்து கடைசியில் அங்கே நிற்கும் அம்மாளைப் பார்த்து, அம்மா!
இயேசுகிறிஸ்து இந்த வீட்டில் குடியிருக்கிறாரா? என்று கேட்டான்.
அவள் இந்த வார்த்தையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு மறுமொழி
ஒன்றும் சொல்லக்கூடாமல் வெட்கத்தோடு உள்ளே போனாள். சுவி
சேஷகனும் வேறொன்றும் பேசாமல் தன் வழியே சென்றான்.
வெளியிலிருந்து அந்த ஐசுவரியவான் வந்தபோது அவனுக்கு இதைப்
பற்றி அவள் சொன்னாள். இதைக்கேட்டு அவன், நாம் கோவிலைச்
சேர்ந்தவர்கள் என்று அவனுக்குச் சொல்லவில்லையா என்று கேட்

டான். அதற்கு அவள் இல்லை என்றாள். நாம் ஓய்வுநாள்தோறும் ஆலயத்துக்குப் போய்க் காணிக்கை அதிகம் கொடுத்துவருகிறோம் என்று அவனுக்குச் சொல்லவில்லையா என்று கேட்டான். அதற்கு அவள் இல்லை என்றாள். நான் சபையின் சங்கத்துக்குப் போகும் போதெல்லாம் எல்லாரும் என்னைக் கண்ணியப்படுத்துகிறார்கள், அதைப்பற்றிச் சொல்லவில்லையா என்று கேட்டான். அதற்கும் அவள் இல்லை என்றாள். என் இவைகளை அவனுக்குத் தெரிவிக்க வில்லை என்று அவன் கடைசியாய்க் கேட்டதற்கு, அவள், நாம் கொடுக்கும் காணிக்கை வேறு, கோவிலுக்குத் தவறாமல் போவது வேறு, சபையின் சங்கத்தில் உமக்குக் கிடைக்கும் சங்கை வேறு, அவனுடைய கேள்வியும் வேறு; இந்த வீட்டில் இயேசுகிறிஸ்து இருக்கிறாரா என்ற ஒரு கேள்விமாத்திரம் கேட்டான். இந்த வீட்டில் இயேசுகிறிஸ்து இருக்கிறார் என்று சொல்லத் துணியாமல் வெட்கத்தோடு ஒன்றும் பேசாமல் வந்துவிட்டேன். ஐயா, இயேசுகிறிஸ்து நமது வீட்டில் குடியிருக்கிறது நிசமா என்று சொல்லி முடித்தாள். அதுமுதல் அவனும் அவன் மனைவியும் இயேசுகிறிஸ்து தங்கள் வீட்டில் இருக்கும்படி தோற்றத்திலே அல்ல, உள்ளான மனதிலே அவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய உண்மையான சீஷராயிருந்தார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்துவும் அங்கே குடியிருந்தார் என்று நாம் சொல்லக்கூடியவர்களா யிருக்கிறோம்.

## WHO ARE OF LOW CASTE

## இழிகுலத்தோர் யார்

கல்வி நாகரீகமற்ற பறையர் பள்ளர் சக்கிலியர் ஆகிய இவர்களை இழிகுலத்தோர் என்று மற்றவர்கள் சொல்லி அவர்களை இகழ்ச்சி பண்ணுகிறார்கள். ஆனால் இதைக்குறித்துத் தீர்க்கமாய் ஆராய்ந்து அறிந்த ஒருவர் சொல்லுகிறதாவது :—

1. நிறத்தில் கறுப்பும் பிறப்பில் தரித்திர ஸ்திதியுமாய் இருப்பவனை நான் இழிகுலத்தோன் என்று சொல்லுகிறதில்லை. இழிவான நடையும் கூடாத எண்ணமும் மாசுள்ள மனமும் உடையவனே இழிகுலத்தோன்.
2. சோம்பேறியாய்த் திரிந்து மற்றவர்களுடைய கையைப் பார்த்திருப்பவனே இழிகுலத்தோன்.



3. பெண்களைப் பார்த்து துராசை கொள்ளுகிறவன் இழிகுலத்தோன்.
4. ஐம்புலன்களின் சுகானுபோகமே இகவாழ்வு என நினைக்கிறவன் இழிகுலத்தோன்.
5. வயது முதிர்ந்த தன் பெற்றோரையும், தன் மனைவி பிள்ளைகளையும் கவனியாது குடிவெறி முதலான துன்மார்க்கத்தில் தன் பணத்தைச் செலவழிக்கிறவனே இழிகுலத்தோன்.
6. ஸ்திரீகளுக்குக் கல்வி நாகரீகம் தேவையில்லை என்றும், அவர்கள் புருஷருக்குப் பெண்சாதிகளாய் மாத்திரம் இருக்கிறார்கள் என்றும் நினைக்கிறவன் இழிகுலத்தோன்.
7. ஏழைகளையும் திக்கற்றவர்களையும் வருத்தித் தனவான்களின் தயவை நாடி அவர்களுக்கு இதம் பேசுகிறவனே இழிகுலத்தோன்.
8. தன்னயத்தையே கருதி மற்றவர்களைக் கவனியாது விடுகிறவன் இழிகுலத்தோன்.
9. உள்ளுக்கு வைரியும் வெளிக்குச் சிநேகிதனுமாய் இருக்கிறவன் இழிகுலத்தோன்.
10. நியாயஸ்தலங்களிலும் மற்றும் இடங்களிலும் தன்னயத்திற்காக அல்லது பிறனயத்திற்காகப் பொய்யுரைக்கிறவன் இழிகுலத்தோன்.
11. தாழ்குடியில் பிறந்தவன் அல்ல, மற்றவர்களுடைய பொருட்களை அபகரிக்கும் திருடனே இழிகுலத்தோன்.
12. கற்பு நெறியை அழிக்கிறவனும் விபசாரம் செய்கிறவனுமே இழிகுலத்தோன்.
13. பொய்ச்சத்தியம்பண்ணி, பொய்ப்பத்திரம் பிறப்பிக்கிறவனே இழிகுலத்தோன்.
14. கொலைபுரிகிறவனும், திருடனும் கள்ளநாணயம் அடித்துப் பரப்புகிறவனுமே இழிகுலத்தோன்.
15. புறங்கூறியும் விசுவாசகாதகனுமாய் இருக்கிறவனே இழிகுலத்தோன்.
16. நெஞ்சினில் நஞ்சும் பேராவும் உடையவனே இழிகுலத்தோன்.

17. பிறப்பில் பிராமணனாயிருந்தாலும் நடையில் துர்ச்சனனாய் இருக்கிறவனே இழிகுலத்தோன்.
பிறப்பில் பறையனாயிருந்தாலும் நடையில் சற்சனனாய் இருக்கிறவனே மேல்குலத்தோன்.

18. ஆகவே சன்மார்க்கத்தில் நடந்து தன் தேசத்துக்கு நன்மை செய்யவேண்டும் என்று விரும்புகிற ஒருவன் தாழ்வான குடியிற் பிறந்தவர்களைப் புறக்கணியாமல், உயர்குடியிற் பிறந்து கிரியைகளில் துர்ச்சனராய் இருக்கிறவர்களை விட்டுத் தூரத்தே நிற்பானாக.

*Adapted from 'The Theist.'*

# THE LATE Rev. G. N. PAKKIANATHAN OF KODAIKANAL

## காலஞ்சென்ற

## கனம். G. N. பாக்கியநாதன் போதகர்

இவருடைய தாய் தந்தையர் திருநெல்வேலி ஜில்லா மெய்ஞ்ஞானபுரத்தைச் சேர்ந்த நெடுவிளையிற் குடியிருந்தவர்கள். இவர் தந்தையர் இந்து மதத்தில் அதிக வைராக்கியமுள்ளவராய்க் கோயிற் பூசாரியாய் இருந்தும், இந்து மார்க்கத்தில் தமக்கு மன ஆறுதல் இல்லையெனக் கண்டு சிலகாலம் கிறிஸ்தவ உபதேசத்தைக் கேட்டு, கிறிஸ்தவ மார்க்கத்தில் பாவ நிவிர்த்திக்கேற்ற போதனைகள் உண்டு எனத் தீர்மானித்துக் கனம். தோமஸ் ஐயர் காலத்தில் தமது மனைவியோடு ஞானஸ்நானம் பெற்றார். பிறகு கனம். தோமஸ் ஐயர் அவரைப் பெரியகுளத்திலிருந்த கனம். நாய்ஸ் ஐயரிடம் அனுப்பினார். அங்கே அவர் தோட்டவேலை செய்து வந்தார். அங்கே அவருடைய மனைவி இறந்துபோக, அவர்களுடைய மகனாகிய பாக்கியநாதனையும் இரண்டு பெண் குழந்தைகளையும் கனம். நாய்ஸ் ஐயர் தமது பிள்ளைகளைப்போல் பாதுகாத்து அவர்களைப் போர்டிங் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினார்.

கனம். பாக்கியநாதன் போதகர் 1857௵ பிறந்தார். அவர் எட்டு வயதில் வத்தலக்குண்டு போர்டிங் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்து வருகையில் 1872-ல் உட்சபையிற் சேர்ந்தார். அதுமுதல் இவருடைய கிறிஸ்தவ ஜீவியம் துவங்கிற்று. இவர் முதல் திண்டுக்



கலில் ஸ்தாபித்திருந்த நார்மல் பள்ளிக்கூடத்தில் பரீட்சை கொடுத்து, கொடைக்கானலைச்சார்ந்த வில்பட்டி முதலிய ஊர்களில் பள்ளிக்கூட வேலைபார்த்து வந்தார். இன்னும் கல்வி விருத்தி வேண்டுமென்கிற ஆசையினால் சிலகாலம் பசுமலையிலும் பாளையங்கோட்டையிலும் படித்து, 1879௵ நார்மல் சர்டிபிகேட் பெற்றுக்கொண்டு மறுபடியும் உபாத்தியார் வேலையில் அமர்ந்திருந்தபோது, இவர் தமது கடமையில் அதிக உற்சாகமும் உண்மையும் உள்ளவராக இருக்கிறதைக் கண்டு கனம். நாய்ஸ் ஐயர் இவரை இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர் ஆகவும் உபதேசியாராகவும் நியமித்தார். அவ்வூழியத்தை எழு வருஷம் பார்த்து வந்தார்.

1889௵ கொடைக்கானலுக்கு உபதேசியாராய் அனுப்பப்பட்டு அங்கேயும் இவர் காட்டிய வாஞ்சையையும் பிரயாசத்தையும் கண்டு கொடைக்கானல் சபையார் இவரைத் தங்களுக்குப் போதகராக நியமிக்கும்படி கேட்டதினால் சங்கத்தார் 1889௵ அக்டோபர் ௴ 15௳ இவருக்கு குரு அபிஷேகம் செய்து அச்சபைக்குப் போதகராக்கினார்கள். அதுமுதல் தமது மரணபரியந்தம் இருபத்தொரு வருஷமாக அதேயிடத்தில் போதகராய் இருந்தார். இவர் சபையில் நேரிட்ட தொந்தரவுகளுக்கும், மலை தேசத்தில் அனுபவிக்கவேண்டிய குளிர் பனி அடிகாற்று புயல்காற்று ஏற்றம் இறக்கம் ஒன்றுக்கும் அஞ்சாமல் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு கலப்பையிலிட்ட கைவிடாது பின்பாராது தேவனுடைய வார்த்தையை விதைத்து அந்த இடத்திலே 1910௵ ஜூன் ௴ 18௳ தமது ஜீவிய ஓட்டத்தையும் முடித்தார். இவர் இவ்வளவு காலமாய்த் தமது சபையாரால் நன்குமதிக்கப் பட்டதுமல்லாமல் எல்லாராலும் அருமையாய் நேசிக்கப்பட்டவர். கொடைக்கானலிலும் இதைச்சேர்ந்த மலைக்கிராமங்களிலும் உள்ள பிள்ளைகள் முதலாய் யாவரும் இவரை அறிந்தவர்களும் போதிக்கப் பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். அங்கேயுள்ள அரதேசிகளும் பரதேசிகளுமான குடிகள் யாவருக்கும் இவர் பரோபகாரியாயிருந்தார்.

இவர் எப்பொழுதும் ஜெபவாஞ்சையும் சத்தியவேத ஆராய்ச்சியும் உள்ளவர். வேதத்தில் எத்தனையோ பாகங்கள், பிரதானமாய்ச் சங்கீதங்கள் முழுதும் மனப்பாடமுள்ளவர். பிரசங்கங்களும் வியாக்கியானங்களும் அவைகள் என்னவிலையாயிருந்தாலும் வாங்கி வாசிக்கிறவர். மோட்சபிரயாணி என்னும் புத்தகம் இவருக்கு அருமையான புத்தகம். எப்பொழுதும் அப்புத்தகத்தைக் கொண்டுவந்து தமக்கு முன்பாக வாசிக்கும்படி தமது பிள்ளைகளுக்குச் சொல்லுவார். இவர் எப்பொழுதும் ஜெபத்தோடு தேவனுடைய சித்தத்தை நாடி அதின்

படி செய்ய விரும்புவார். 'நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதின்படி நடக்கவேண்டும்' என்றும், 'அவருடைய சித்தமே ஆகக் கடவது' என்றும் இவர் கடைசியாய்ப் பிரசங்கம் செய்தார்.

## WHY I BECAME A CHRISTIAN

## நான் கிறிஸ்தவனான முகாந்தரம்

பாளையங்கோட்டைவாசியும் அங்குள்ள ஜில்லா கோர்ட்டு வக்கீலும் ஆகிய கனம். A. S. அப்பாசாமிபிள்ளையவர்கள் எழுதிய நான் கிறிஸ்தவனான முகாந்தரம் என்னும் புத்தகத்தில் அவர் தமது ஜிவிய விருத்தாந்தத்தைச் சொல்லி, அதினால் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் தங்கள் ஆத்துமாவுக்குரிய நன்மையை அடையும்படி அநேக காரியங்களை உரைத்திருக்கிறார்.

அவர் வாலிபப் பிராயத்தில் இருந்தபோது தாமும் தமது தாய் தந்தையரும் வணங்கின தேவர்கள், தென் இந்தியாவில் அநேகர் கைக்கொள்ளும் சிவமார்க்க பக்தி, வித்துவான்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் போற்றிப் புகழும் சைவ சித்தாந்தங்கள், தாம் கல்வி கற்கும்போது தமக்கு உண்டான மார்க்க சந்தேகங்கள் ஆதியாம் விஷயங்களைக்குறித்துத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.

இப்புத்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தில் மார்க்க ஆராய்ச்சி என்னும் விஷயத்தைப் பார்த்தால் அவர் வாலிபனாய் இருக்கும்போது இந்துமார்க்கசாஸ்திரங்களை நன்றாய்ப்படித்துவரவரமெய்ஞ்ஞானத்தை அடைய விரும்புகிறதை நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிச் சாஸ்திரங்களாதியவற்றை அவர் ஆராயும்போது, அவர் அவைகளிலுள்ள கொள்கைகளை விட்டு பொறுமையோடு இன்னும் மெய்மார்க்கத்தைக் குறித்துச் சிந்தித்துக் கடைசியாய்த் தாம்செய்த தீர்மானத்தைக் கூறுகிறார்.

மூன்றும் அதிகாரத்தில் அந்தத் தீர்மானத்தை நாம் காணலாம். அதில் கடவுள், கடவுளை வணங்கும் விதம், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அருளின பாவ நிவிர்த்தி ஆகிய இவைகளைப்பற்றி விபரமாய் எழுதியிருக்கிறார்.

கிறிஸ்துவின் அவதாரம், உயிர்த்தெழுதல், பகவத்கீதத்தில் சில பாட்டுகளின் பொருள்கள், கிறிஸ்துமார்க்க சித்தாந்தம், விசுவாசம் முதலியவைகளைப்பற்றி அவர் சொல்லியிருப்பவைகள் விசேஷமாய் இந்துக்களுக்கு உபயோகமாய் இருக்கும். ஏனென்றால், இந்துமார்க்



கத்திற் பிறந்து வளர்ந்து, அதில் தமது ஆத்துமாவுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடிய போதனைகள் உண்டோ என்று தேடிப்பார்த்தும் திருப்தியில்லாததினால் கனம். அப்பாசாமிபிள்ளையவர்கள் அதிலுள்ள வேதாந்த சித்தாந்த கொள்கைகள் என்று சொல்லப்படுகிறவைகளை விட்டு, பூரண திருப்தியும் மனப்பாக்கியமும் கிடைக்கும் கிறிஸ்தவ மார்க்கத்தை அனுசரிக்கலானார். இந்தப் புஸ்தகத்தில் அவர் கொடுக்கும் சாட்சி யாவருக்கும் நன்மை அளிக்கும் என்பது நமது நம்பிக்கை.

இப்புத்தகம் யாவரும் லேசாய் வாசித்தறியக்கூடிய நடையில் இந்துசாஸ்திர செய்யுட்களின் பொழிப்புரையோடு எழுதியிருக்கிறது.

பக்கம் 112, விலை 4 அணா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 24 AUG 1910 MADRAS.

## SIMPLE PARABLES

## சாமானிய உபமானங்கள்

### கசப்பு மருந்து

சுகவீனமுள்ளவன் மருந்தை அருந்தவேண்டும்; அம்மருந்து கசப்பு என்று விடலாகாது.

மனிதன் ஆத்தும வியாதியுள்ளவன் என்பது சந்தேகமற்ற சத்தியமாயிருக்கிறது. அவன் சுகமடைய வேண்டுமானால் சபையில் அவனுக்கு உண்டாகும் கண்டிப்பையும் சிட்சையையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சிநேகிதா! சபையால் நீ கண்டிக்கப்பட்டால் அதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறாயா? 'நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?' எபி. 12. 5.

### இரவில் பெய்யும் பனி

பனியானது இரவில் விழுகிறது. விடியற்காலத்தில் வீட்டைச் சுற்றிலும் இருக்கும் இலை, செடி, புல் பூண்டு முதலியவைகளை நாம் பார்த்தால் மனம் பூரித்துப்போகிறது.

பனியாகிய பரிசுத்தாவி இரவாகிய கஷ்டகாலங்களில் செடி, இலை, புல் பூண்டுகளாகிய கிறிஸ்தவர்களின்மேல் இறங்க, அவர்கள் எவ்வளவோ சந்தோஷமுடையவர்களாய்க் காணப்படுவார்கள்.

துன்பவாளியே! துன்பம் உனக்கு இன்பமாய் மாறத்தக்கதாக உனக்குள் பரிசுத்தாவி என்னும் பனி உண்டா? 'புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார். அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.' சங்கீதம் 72. 6.

## மின்மினிப் பூச்சி

இருட்டான சமையங்களில் அங்குமிங்கும் பறந்துதிரியும் மின்மினிப் பூச்சியின்மேல் மழைத்துளிகள் விழுந்தாலும் அதின் பிரகாசம் கெட்டுப்போகாததை நாம் பார்த்திருக்கிறோம்.

பரிசுத்தாவியினாலுண்டாகும் பிரகாசமான சுகுணங்களால் ஒருவன் நிறைந்திருப்பானானால் அவன்மேல் எவ்வளவு உபத்திரவங்களும் துன்பங்களும் வந்தாலும் அவன் பிரகாசமயமாகவே இருப்பான்.

**ஆப்தனே!** உனக்குள் திவ்விய பிரகாசம் அடங்கியிருக்கிறதா? துன்பகாலத்தில் அது விளங்குகின்றதா? 'நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்திற்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.' சங்கீதம் 138. 7.

## ருசிக்குதல்

ஒருவன் மதுரமான ஒரு பொருளைச் சும்மா விழுங்கினால் அதின் ருசி தெரியாது. அதை மென்று சாப்பிட்டால் அப்போது அதின் ருசி தெரியும்.

ஒருவன் தான் கேட்கும் வேதவசனத்தைக் காதினால் கேட்டால் போதாது. அதை நன்றாய்த் தியானித்து அதைக்கொண்டு தன்னைச் சோதித்தறியவேண்டும்.

நண்பனே! நீ திவ்விய வசனங்களைத் தியானம்பண்ணி வருகிறாயா? 'அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். அப். 17. 11.

---

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 52 செப்டெம்பர் 1910

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 26 SEP 1910 MADRAS

# வேதியர் விளக்கு

## Advice to Preachers

By

The Rev. H. Rice

## பிரசங்கிகளுக்கு ஆலோசனை

### II. அதைரியமும் தைரியமும்

ஒரு பிரசங்கியானவன் தன் ஊழியத்தில் சித்தியில்லாமையினால் அடிக்கடி மிகுதியும் தைரியம் குன்றிப்போகிறான். அவன் இவ்விஷயத்தில் ஒரு வைத்தியனுக்கு ஒத்திருக்கிறான். ஒரு வைத்தியசாலையில் அநேகமான ரோகங்கள் கொண்ட பிணியாளிகளிருக்கிறார்கள். அந்த வைத்தியன் அவர்கள் புண்களைக் கட்டவும், அவர்களைப் பேணவும் வருகையில் அவர்களெல்லாரும் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறார்கள். ஒருவன் தன் புண்களை மறைத்துவிடுகிறான். மற்றவன் நான் சுகமாயிருக்கிறேன் என்கிறான். இப்படியே பிரசங்கியுமிருக்கிறான். யூதர்கள் எரேமியா தீர்க்கதரிசியை நடத்ினதைவிட மேலான நடத்துதலைப் பிரசங்கிகள் எதிர்பார்க்கக்கூடாது. அந்த யூதர் எரேமியாவை நோக்கி: 'நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல் எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்வோம்' என்று சொன்னார்கள். ஒரு பிரசங்கிக்கு இதெல்லாம் பெரிய வேதனையே. அவன் தன் பலத்தையெல்லாம் செலவழித்துத் தனக்குமுன் கல்லுகளைப்போல் உட்கார்ந்திருக்கிற கவலையீனமான ஜனங்களுக்குப் பிரசங்கிக்கிறான். அவர்கள் உட்கார்ந்திருக்கிற நாற்காலிகளும், அவர்கள் ஆராதிக்கிற கோவில் சுவர்களும் அசைந்தாலும் அவர்களிருதயம் அசையாதிருக்கிறது. ஓர் உயிருள்ள குழந்தையைப் பெறும்

போது தாய்க்கு எவ்வளவோ வேதனையுண்டானாலும் அது அவளுக்கு ஆறுதலைக் கொடுக்கும். அவள் ஒரு செத்த குழந்தையைப் பிரசவித்தாளானால் அவள் மனவியாகுலம் எவ்வளவோ அதிகமிருக்கும். ஆத்துமாவில் செத்த ஜனங்களுக்குள் ஊழியம் செய்கிற போதகனின் மனவியாகுலமும் அப்படியே யிருக்கிறது.

1. இவ்வித வியாகுலத்தைக் குறைத்து ஆத்துமாவைத் தைரியப்படுத்துகிறது யதார்த்தமும் உண்மையுமே. அப்போஸ்தலனாகிய பவுல் தன் பிரசங்கத்தைக் கேட்டவர்களை யெல்லாம் மோட்சத்துக்குக் கொண்டுபோகக் கூடாதவனாயிருந்தான். அநேகருக்கு சுவிசேஷமானது மரணத்துக்குரிய வாசனையாயிருந்தது. சுவிசேஷத்தின் நற்கந்தமானது அவர்களுடைய ஆக்கினையை அதிகப்படுத்துகிற மரண வாசனையாகவே தீர்ந்தது. என்றாலும் கிறிஸ்து இயேசுவில் தன்னை வெற்றி சிறக்கப்பண்ணின தேவனை அவன் ஸ்தோத்தரித்தான். (2 கொரி. 2. 16.) அவர்கள் கெட்டுப்போனதினிமித்தம் அவன் வெற்றிசிறந்தவனாகாமல் அவர்களுடைய இரத்தப்பழிக்கு அவன் நீங்கினதினாலேயே அப்படியானான். ஏனென்றால் நாங்கள் அநேகரைப் போல தேவ வசனத்தைக் கலப்பாய்ப் போதியாமல் உண்மையாகப் போதிக்கிறோம். தேவசந்நிதானத்தில் கிறிஸ்துவுக்குள் தேவ வசனத்தைப் பேசுகிறோம் என்று சொல்லுகிறான். தேவன் மனிதருடைய சித்தியை நோக்கியல்ல அவர்களுடைய உண்மைத் தன்மையை நோக்கியே மனிதருக்குப் பதிலளிக்கிறார். 'நல்லது உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே (சித்தியுள்ள ஊழியக்காரனே என்றல்ல.) உன் ஆண்டவருடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி' என்கிறார். மத். 25. 21.

2. மேலும் பிரசங்கத்தினாலான பலன்கள் அடிக்கடி மறைக்கப்பட்டிருக்கின்றன. பிரசங்கி விதைத்ததாலான அறுப்பின் முதற்கனிகளையும் சில பலகுறிப்புகளையும் தவிர அதிகமான ஒன்றையும் ஒரு கிறிஸ்தவ ஊழியன் இம்மையில் காண்கிறதில்லை. அப்படியிருப்பது அவனுக்கு நன்மைதான். ஏனென்றால் ஒரு மனிதனுடைய பெருமை சித்தியென்னும் மதுபானத்தால் வெறிகொண்டுவிடுகிறது. அவன் அளவுக்கு மிஞ்சி உயர்த்தப்படுகிறான்; ஆனால் தேவன் அதை அறிகிறார். கணக்கிடுங்காலமும் அறுப்பின் நாளும் வரப்போகிறது. அப்பொழுது உத்தமர் மோக்ஷத்துக்குப் போய் அறுப்பைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். அதற்காக அவர்கள் இம்மையில் விதையைமாத்திரம் போட்டார்கள். கொஞ்சத்திலிருந்து அதிக பலன் வரும். 'இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையா யிருங்கள். இதோ பயிரிடுகிறவன் பூமியின் நற்



REGISTERED 28 SEP 1910 MADRAS.

பலனை அடையவேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்' (யாக். 5. 7). தேவாலயம் கட்டுகிறதற்கு தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்காகத் தளவாடங்களைச் சேர்த்து வைத்ததுபோல அடிக்கடி பிரசங்கியானவன் தன் பிரசங்கத்தாலும் போதனையாலும் சபையைக் கட்டுகிற இன்னொருவனுக்காகத் தளவாடங்களை ஆயத்தம் பண்ணவேண்டியவனாயிருக்கிறான். மனிதர் அடிக்கடி அறுக்கிறவனைப்போலிருக்கிறார்கள். தேவனோ ஒருவரும் எதிர்பாராத வண்ணமாய் விதைக்கிறவன் மேலே உன்னத மரியாதைகளைச் சொரிகிறார். விதைக்கிறவன் ஒருவன், அறுக்கிறவன் ஒருவன். அறுக்கிறவனும் கூலியைப்பெற்று நித்திய ஜீவனுக்காகப் பலனைச்சேர்த்து வைக்கிறான். ஞான அறுப்பின் பிரதி பலன்கள் மகிமையுடையதாயிருந்தால், ஞானவிதைப்பின் பலன்களும் அதிக மகிமையுடையதாயிருக்குமே.

3. அநேகருடைய முறைப்பாடு என்னவென்றால், 'நாங்கள் இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை' என்பதே. தேவன் தம்முடைய ஊழியரின் பொறுமையை இவ்விதமாய்ச் சோதிப்பது அவருக்குப் பிரியமாயிருக்கிறது. ஆனால் நாம் இன்னும் ஆழத்தில் தள்ளிக்கொண்டுபோய் எஜமானுடைய கட்டளைப்படி இன்னும் ஒருமுறை நமது வலைகளைப் போடுவோமாக. நமக்குச் சித்தியில்லாமற் போனாலும் நமது கடைசிப் பிரயாசம் சிலரை கிருபைக்கும் மகிமைக்கும் கொண்டுவரும். நாம் சீமோன் பேதுருவோடு சேர்ந்து, 'ஐயரே நாங்கள் ராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; என்றாலும் உம்முடைய வார்த்தையின்படியே வலைகளைப் போடுகிறோம், என்று சொல்லுவோமாக. இப்படிச் செய்யும் பட்சத்தில் மெய்யாகவே நமது பணிவான கீழ்ப்படிதல் அதிக ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாகக் காண்போம். ஏனென்றால் சீஷர் அப்படிச் செய்தபொழுது ஏராளமான மீன்கள் அகப்பட்டு வலை கிழியத்தக்கதாக இருந்தது. அவர்கள் படவு நிறைந்து அமிழத்தக்கதாய் இருந்தது (லூக். 7. 4–5). அப்படியானால் நாம் பிரசங்கிக்கிறோம், மனிதர் மனந்திரும்புகிறார்களில்லை. நாம் நன்மை செய்வதில் சோர்ந்துபோகாதிருப்போமாக. 'நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள் உங்கிரியைகளுக்குப் பலனுண்டு' (2 நாளா. 15. 7). ஒருவரும் தண்ணீர் மொள்ளாவிட்டாலும் ஒரு ஊற்றானது தன் தண்ணீரைச் சுரந்துகொண்டிருப்பதுபோலும், ஒருவரும் அருந்தாவிட்டாலும் ஒரு நதியானது ஓடிக்கொண்டிருப்பதுபோலும், ஒரு பிரசங்கியானவன் ஜனங்கள் நிர்விசாரிகளா யிருந்தபோதிலும் தன்னால் கூடியதையெல்லாம் செய்துகொண்டிருக்கவேண்டும். ஒரு

வைத்தியனானவன் அநேக மருந்துகளைப் பிரயோகித்தும் ஒரு பிணியாளியைக் குணப்படுத்தும் விஷயத்தில் யாதொரு தேற்சியையும் காணுதிருந்தும் அணுவளவு நம்பிக்கை யிருக்கிறவரையில் அவனைச் சந்தித்துக்கொண்டே யிருப்பான். அப்படியே ஆத்தும வைத்தியனும் தேவன் கடைசிக்காலத்தில் தன் சுறுசுறுப்பையும் உண்மையையும் ஆசீர்வதிப்பார் என்கிற நம்பிக்கையுடையவனும் ஆறுதல் சொல்லுவதிலும் எச்சரிப்பதிலும் தொடர்ந்து செல்லவேண்டியது. சகல நல்லூழியத்திற்கும் சுறுசுறுப்பும் பொறுமையுமே இரண்டு கருவிகளாயிருக்கிறது. கடமை நம்முடையது, பலனோ தேவனுடையது. 'இதோ வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கி யிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கி யிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும்வரைக்கும் எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.'

## A Bible Reading — Exodus 33

By

**The Rev. T. Walker, M.A.**

### யாத்திராகமம் 33-ம் அதிகாரம்

### தேவசமுகம் தூரமாய் நீங்கிப்போகுதல்

பரிசுத்தமுள்ள தேவன் பாவத்துக்கு இடங்கொடுக்கிற ஜனங்களுடைய மத்தியில் வாசம்பண்ணுவது கூடாதகாரியம் என்பதே இவ்வதிகாரத்தின் முக்கிய போதனை.

1. துக்கமான வசனம். வாக். 1–6. (வாக். 4 காண்க.)

(1) கர்த்தருடைய தீர்மானம். வாக். 1–3.

*a.* தேசம் கொடுப்பேன். (வாக். 1.)
*b.* ஓர் தூதனை அனுப்புவேன். (வாக். 2.)
*c.* சத்துருக்களைத் துரத்திவிடுவேன். (வாக். 2.)
ஆகிலும், *d.* நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன் என்பதே. (வாக். 3.)



ஐயோ! ரட்சகராகிய தேவன் கூடவே இராவிட்டால், தேசம் இருந்தாலும் என்ன? தூதன் இருந்தாலும் என்ன? ஜெயம் கிடைத்தாலும் என்ன? மழை முகங் காணாத பயிர்போலவும் அன்னையில்லாத சேய்போலவும் வருத்தம் அடைவார்களே!

மேலும், முந்தின அதிகாரங்களில் கர்த்தர் காண்பித்த திவ்விய வாசஸ்தலத்தின் மாதிரி பிரயோஜனப்படாமற்போகுமே! ஏனெனில், அரசன் வசிக்கும் மாளிகையை அல்லவா அரமனை என்று சொல்லத்தகும்? தேவன் வாராத ஆசரிப்புக்கூடாரம் வாசஸ்தலமாகுமோ?

தேவனாலேமாத்திரம் நம்முடைய ஆத்தும தாகம் தீரும்; நமக்கு மெய்ப்பாக்கியமும் உண்டாகும். ஆதலால் அவர் அருளும் நன்மைகளையாவது அவர் அனுப்பும் பணிவிடைக்காரரையாவது அவர் அனுக்கிரகிக்கும் அனுகூலங்களையாவது முக்கியமாய் நாடாமல், அவரையே பிரதானமாய் நாடி அவரோடே ஐக்கியப்பட்டு ஜீவிப்போமாக.

(2) ஜனங்களுடைய துக்கம். வாக். 4–6.

*a.* அவர்களுக்கு சந்தோஷமுமில்லை 'துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.' (வாக். 4.)
*b.* அவர்களுக்கு அலங்காரமுமில்லை 'ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல்.' (வாக். 4–6.)
*c.* அவர்களுக்குத் தைரியமுமில்லை 'கர்த்தர் தங்களை நிர்மூலம் பண்ணுவார் என்று பயந்து நடுங்கி நின்றார்கள்.' (வாக். 5.)
ஆதினிமித்தம் தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள். (வாக். 6.)

கவனிப்பு.—வாக். 6. 'ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் மலை
முதற்கொண்டே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்
டார்கள்' என்றே திருப்பவேண்டும். அதாவது ஓரேப்
மலையண்டை அவைகளைக் கழற்றிப்போட்டதுமன்றி, அது
முதல் அவைகளை அணிந்துகொள்ளாமலே பிரயாணம்பண்
ணினார்கள் என்றறிக. அவ்வித ஆபரணங்கள்தான் சபையின்
ஓர்கேட்டுக்கும் விக்கிரகாராதனைக்கும் ஏதுவாயிருந்ததினிமித்
தம் (32. 2.) தேவன் இவ்வாறு கட்டளையிட்டிருக்கலாம்.

நமக்குத் தேவசமுகமும் திவ்விய ஐக்கியமும் இல்லாத சமயத்தில் சந்தோஷம் ஏது? அலங்காரம் ஏது? மனோதைரியம் ஏது? திக்கற்றவர்களாய் நிற்கிறோமே. பாவத்தினால் பயக்கும் பலன் வெட்கமும் வருத்தமுமாமே.

அதுவுமல்லாமல், நகையாசையும் அலங்காரப் பிரியமும் அநேக தீமைகளுக்குக் காரணமென்பதற்குச் சந்தேகமுண்டா? 1 தீமோ. 2. 9. 10; ரோ. 12. 2.

2. தூரத்திலேபோன தேவ சமுகம். வாக். 7–11. பாவம் உள்ளே வந்தால் தேவன் வெளியே போவார்.

(i) கறைப்பட்ட சபையாருடைய நிர்ப்பந்தம். வாக். 7–8.

*a.* தேவசமுகம் தூரத்திலே நீங்கிப்போனது. (வாக். 7.) 'பாளயத்துக்குப் புறம்பே' மோசே கூடாரத்தைப் பெயர்த்து அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்ட விசேஷம் கர்த்தருடைய சமுகம் அந்த ஜனங்களைவிட்டு நீங்கிப் போனதற்கு அடையாளம் என்றறிவோமே. அசுத்தமான பாளயத்தில் தேவன் தங்கமாட்டார். மத். 23. 37-39; 24. 1. 2.

கவனிப்பு.—இங்கே சொல்லிய 'ஆசரிப்புக்கூடாரம்' தற்காலத்துக்குமாத்திரம் தேவ ஆராதனைக்கென்று உபயோகமான கூடாரமா யிருந்திருக்கவேண்டும். சீனாய்மலையில் தேவன் காட்டின மாதிரியின்படி பெரிய ஆசரிப்புக்கூடாரம் இன்னும் கட்டப்படவில்லை. ஆகிலும், தேவ ஆராதனை முதலியவைகள் நடப்பதற்கு ஓர் கூடாரம் துவக்க முதல் அவசியமாயிருக்கும்.

*b.* ஜனங்கள் தூரத்திலே நின்று பார்ப்பது. (வாக். 8.) வெட்கத்தோடும் பயத்தோடும் நின்று பார்த்தார்கள். அதிகமானபேர் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போகத் துணியவில்லை. கர்த்தருடைய தாசனாகிய மோசே அங்கே போகையிலுங்கூட, அவர்கள் பயமும் திகிலுங் கொண்டவர்களாய் நடுங்கி நின்றார்கள். துர்மனச்சாட்சிக்காரருக்கு சமாதானமுமில்லை, தைரியமுமில்லை. பாவமானது அவர்களுக்கும் பரிசுத்த தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்



டாக்கிற்று (ஏசா. 59. 2). அவரண்டையில் சமீபமாயிருக்கவேண்டிய அவர்கள் பாவத்தினால் தூரமானார்கள்.

(ii) மெய்ப்பக்தனுடைய பரிசுத்த சகவாசம். வாக். 9–11.

*a.* பாளயத்திற்குப்புறம்பே கர்த்தரிடத்தில் போவது. அவரைத் தேடுகிறவன் ஜனங்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போகவேண்டியதிருந்தது. (வாக். 7.)

அப்படிப்போல, உத்தம கிறிஸ்தவர்களும் தீயோருடைய ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து தங்கள் இரட்சகரண்டையில் சேருவது அவசியம். 2 கொரி. 6. 17; எபி. 13. 13.

*b.* கர்த்தரோடு இன்பமாய்ச் சகவாசஞ் செய்வது. மேகஸ்தம்பம் இறங்கிநின்றது தேவன் எழுந்தருளிப் பிரசன்னமாவதற்கு அடையாளம். தம்மை உண்மையோடு தேடுகிறவர்களுக்குக் கிருபையளிக்கப் பிரசன்னமாகிறார். மத். 7. 7–8; யோவா. 20. 11–16.

ஒருவன் தன் சிநேகிதனோடு பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார். உலகத் தீட்டுகளுக்கு விலகிநிற்கிற விசுவாசிகளுக்குமாத்திரம் இந்தத் திவ்விய ஐக்கியமும் இன்பமான சகவாசமும் தெரியும். யோவா. 15. 15; 1 யோவா. 1. 3–7; 2 கொரி. 3. 18.

பின்பு அவன் பாளயத்துக்குத் திரும்பினான். புதுப்பெலனும் கிருபையும் பெற்று, பின்பு தன் வேலைக்குரிய கடமைகளை நிறைவேற்றத் திரும்பிப்போனான். அவ்வாறு, நாமும் தனித்த இடத்தில் நமதாண்டவரைச் சந்தித்து அவருடைய சித்தத்தை அறிந்து, பின்பு மாத்திரம் ஊழியஞ் செய்யக்கடவோம். லூக். 5. 16–17 9. 28–42; அப். 4. 31–33.

(இன்னும் வரும்.)

# The Teaching of the Prophet Amos

By

**Miss E. M. Swift**

## ஆமோஸ் தீர்க்கதரிசி செய்த போதனை

(தொடர்ச்சி)

### பாவத்திற்கு வரும் தண்டனையைப்பற்றியது :—

இந்த ஆகமத்தின் முக்கியமான பொருளை நாலுவார்த்தையில் எடுத்துரைப்போம் :—தேவன் பாவத்தினிமித்தம் மனிதனைத் தண்டிப்பார். இது பல சமயங்களில் கூறப்பட்டிருக்கிறது. 'நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்,' 'தீக்கொளுத்துவேன் ; அது அரமனைகளைப் பட்சிக்கும்' (1. 3 ; 2. 5) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். தீர்க்கதரிசி, ஜனங்கள் தங்கள்இயற்கை அறிவை உபயோகித்து, ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு காரணம் உண்டு என்ற பிரமாணத்தின்படி தேவனுடைய நியாயத்தீர்ப்பும் ஜனங்களுடைய பாவத்தினால்தான் வருகிறதென்று உணராததினால் அவர்களைக் கண்டிக்கிறான் (3. 1-8). 9 அதிகாரங்களடங்கிய இந்தச் சின்னப்புத்தகம் முழுவதும் பாவத்திற்கு வரும் நிச்சயமான ஆக்கினையைக் குறித்த எச்சரிப்புகள் அடங்கியதாயிருக்கிறது.

பாவத்திற்கு வரும் பலன் ஆக்கினைத்தீர்ப்பு (4. 12. 13). மனிதன் தன்னை ஒளித்துக்கொள்ளத் தக்கதான இடம் எங்கும் கிடையாது. 9. 1-4.

தப்புவதற்கான வழிவகைகளும் இல்லை (2. 13-16). இவைகளைப் பற்றிப்பேசும்போது தீர்க்கதரிசி தன்னால் வேண்டியமட்டும் தாராளமாய்ப் பேசுகிறான். மனிதர் தங்கள் சத்துருவின் கையினின்று தப்பிக்கொள்ளுவதற்குத் தங்கள் சொந்த தைரியம், தீவிரம், பெலன், வல்லமை, பட்டயத்தை உபயோகிக்கும் சாமர்த்தியம், குதிரை, சண்டை இவைகளின்பேரில் நம்பிக்கை வைக்கிறார்கள். என்றாலும், தேவனோடு சண்டையிட இவைகள் ஒன்றுக்குமுதவாது. பாவஜீவியம் செய்துகொண்டு தேவனோடு யுத்தஞ் செய்வதினால் பிரயோஜனம் யாது? இன்னும், மனிதர் தங்கள் சத்துருவுக்கு மறைந்து ஓடி ஒளிந்துகொள்ளுவதற்கான வல்லமையுண்டென்று நம்புகிறார்கள். அதுவும் கூடாத காரியம். ஏனென்றால் பாதாளத்திலும், சமுத்திரத்தின் ஆழத்திலும் மலையின் கொடுமுடியிலும் தூரமான தேசத்திலும் தேவன் நம்மைத் தொடர்ந்து பிடிக்கக்கூடாதபடி ஒளிந்துகொள்ளத்தக்க இடம் உண்டோ? இல்லையே. ஆகையினாலே, தேவாதீனமாய் நடக்கும் காரியங்களை அறியாமலும், தேவனுடைய பிரமாணத்தை உணராமலுமிருந்து அவருடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்கமாட்டோமென்று அதைத் தடுக்கிறவர்கள் தங்கள் பாவத்திற்கேற்ற நீதியான தண்டனையைப் பெற்றுக்கொள்ள முகமுகமாய்த் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படவேண்டுமென்று தீர்க்கதரிசி சொல்லுகிறான். 4. 12.



### தேவனைப்பற்றியது :—

சங்கீதக்காரன் சொன்னதுபோலத் தீர்க்கதரிசியும், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் (சங். 96. 13.) என்று சொல்வதைக் கவனித்தோம். ஆனால் தேவனைப்பற்றி அவன் சொல்லுகிறது இம்மட்டுமல்ல.

கர்த்தராகிய ஆண்டவர் மூன்றுதரம் ஆணையிடுகிறதாகவும் சொல்லுகிறான் (4. 2 ; 6. 8 ; 8. 7). ஆணையென்பது மாறுதலில்லாத ஒரு வஸ்துவின்பேரில் சொல்லும் சத்தியமான வார்த்தைகளேயொழிய வேறல்ல. கர்த்தர் தமதுபேரில் இரண்டுதரமும், தமது பரிசுத்தத்தின்பேரில் ஒருதரமும் ஆணையிடுகிறார். ஆகவே,

தேவன் இருக்கிறார்.
தேவன் பரிசுத்தர்.

இந்த இரண்டு விசேஷித்த காரியங்களில் மெய்த்தேவனுக்கும், வழுவிப்போகிற இந்த ஜனங்கள் கர்த்தருக்குப் பதிலாய் தங்களுக்கென்று ஏற்படுத்திக்கொண்ட தேவர்களுக்கும் வித்தியாசமிருக்கிறது. அவைகள் பொய்யானவைகளாயிருந்து இஸ்ரவேலரை மோசம்போக்கினவைகள் (2. 4). தேவனுடைய 'பரிசுத்தத்திற்கும்' (4. 2), சமாரியாவின் 'பாவத்திற்கும்' வித்தியாசம் காண்க. தேவனுடைய ஜீவனைக் குறித்தும் (Existence), அவருடைய பரிசுத்தத்தைக் குறித்தும் சொல்லுகிற இந்த இரண்டு காரியங்களை வைத்துக்கொண்டு தேவன் பாவத்திற்குத் தண்டனை விதிக்காமல் விடார் என்பதை நாம் அறிந்துகொள்ளுவோமாக.

தேவன் இருக்கிறார்.
தேவன் பரிசுத்தர்.
தேவன் பாவத்திற்குத் தண்டனை விதிக்கிறவர்.

இவைகளோடு பின் வரும்பவைகளையும் சேர்த்துக்கொள்ளுக.

தேவன் எல்லா ஜனங்களுக்கும் தேவனாகவும் ஆண்டவராகவு மிருக்கிறார். அதி. 1, 2.

அவர் ஜீவனுக்கு உற்பத்தி. 5. 4. 6.

தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தவர். 4. 13.

தேவன் தம்மை வெளிப்படுத்துகிறவர். 3. 7; 4. 13.

தேவன் தமது ஜனங்களை நடத்துகிறவர். 2. 10.

அவர் சேனைகளின் தேவன், அதாவது:

ஜெயிக்கிறவர். 4. 13; 5. 8.

அவர் சர்வ வல்லவர். 4. 13; 8. 8.

அவர் சர்வ ஞானமுள்ளவர். 4. 13.

அவர் சர்வ வியாபகர். 9. 6.

அவர் நீடிய பொறுமையுள்ளவர். 4. 6–11.

தம்மைத் தேடுகிற யாவர்க்கும் நீதி நடப்பிக்க விரும்புகிறவர். 5. 14, 21–24.

தீமையை வெறுத்து நன்மையை விரும்புகிறவர்களோடு இருக்கிறவர். 5. 14, 15.

மாய்மால வணக்கத்தை வெறுக்கிறவர், கவலையீனத்தையும் நிர்விசாரத்தையும் வெறுக்கிறவர். 6. 1–8.

அவர் ஜெபத்தைக் கேட்கிறவர். 7. 2. 3. 5. 6.

அவர் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவர். தமது ஜனங்களை ஆசீர்வதிக்கிறவர். 9. 11–15.

## The Lord's Prayer in High Tamil

### கர்த்தருடைய ஜெபம்

அநேக வருஷங்களுக்கு முன் தமிழ் பாஷையில் பேர்போன தீ. எம். ஸ்காத்தியர் (T. M. Scott) கர்த்தருடைய ஜெபத்தைப் பின்வருமாறு செய்யுளில் எழுதினார். வேதியர் விளக்த வாசிப்போர் அதைப் பிரியமாய்ப் படிப்பார்கள் எனக்கருதி இதை இங்கு சொல்லுகிறோம்:

இயேசுநாதர் அருளிய ஜெபம்

எம்மையும் வான்மன் னெமது பிதாவே,
உம்மரும் பேர்தாய் துளதென லாக,
உம்மர சான்கய் உதித்திவண் சேர்க,
உம்முளம் வான்போ லுலகினு மேல்க,



இன்றொரு போழ்தே யெமக்குண வீக,
மன்றவ றோரேம் மனித்தெம யேற்க,
நன்றல தாமோர் நடலையுட் போக்கேல்,
என்றுமாள் பேண் மாண் பிவயுமதாமே. ஆமென்.

## Illustrations of the Truth

**By**

**The Editor**

### வேதத்தை விளக்கும் உதாரணங்கள் சில

#### பொலிகார்ப்பின் நிலை தவறாத உண்மை

பொலிகார்ப்பு என்னும் பக்தன் ஒருவன் சொன்ன வார்த்தைகள் கீழ்ப்படிதலுள்ள அன்புக்கும் விருப்பத்தோடு செய்யும் பணிவிடைக்கும் திருஷ்டாந்தமாம். இந்த பக்தன் சிறுவயதில் கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்து, பரி. யோவானால் ஆதி சபைக்குக் கண்காணியாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்டு பலவருஷங்களாக அவ்வூழியத்தை பயபக்தியோடு நடத்தி வரும்போது அவன் அனுசரித்த கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்கும்படி எண்ணங்கொண்ட விரோதிகள் அதிற் சேர்ந்திருந்த பெரியோர்களைப் பிடித்து அம்மார்க்கத்தை விட்டு மறுபடியும் அவர்களை முன்னிருந்த பழைய மார்க்கத்திற் சேர்க்கும்படி முயன்றார்கள். அக்கிறிஸ்தவர்களில் பொலிகார்ப்பு ஒருவன். கிறிஸ்தவ மார்க்க சத்துராதிகள் அவனைப் பயமுறுத்திக் கிறிஸ்துவை மறுதலிக்கும்படி தொந்தரவு பண்ணினார்கள். அப்போது அவன் உதவியற்றவனும், அதிக விருத்தாப்பியமுள்ளவனும், பலக்ஷயமுள்ளவனும் இருந்தும் அவர்கள் மத்தியில் பாலசிங்கம்போல் தைரியஸ்தனாய் நின்று 'எண்பத்தாறு வருஷமாய் நான் கிறிஸ்துவின் ஊழியனாய் இருக்கிறேன். இவ்வளவுகாலமாய் அவர் யாதொரு விக்கினமும் எனக்கு நேரிடவிடவில்லை. என்னை இரட்சித்த என் ராஜாவை நான் தூஷித்து மறுதலிப்பது நியாயமா?' என்று சந்தோஷத்துடன் தனக்காக மரித்த இயேசு கிறிஸ்துவுக்காக இரத்தச்சாட்சியாய் மரித்தான்.

#### உத்தம வாக்குத்தத்தம்

அநேக வருஷங்களுக்குமுன்னே சில பக்தர்கள் கூடி பரி. யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புத்தகத்தை வாசித்துத் தியானித்து வருகையில் ஒருநாள் அதிற் சொல்லியிருக்கும்

வாக்குத்தத்தங்களில் எது உத்தமம் என்பதில் அவரவருடைய எண்
ணங்களைத் தெரிவித்தார்கள். அவர்களில் ஒருவன் 'தேவன் தாமே
இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்' (7. 17; 21. 14.)
என்பது முக்கியமான வாக்குத்தத்தம் என்று சொன்னான்.

இரண்டாம் பக்தன் 'ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனும்
என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு
அருள் செய்வேன்' (3. 21.) என்பது எல்லாவற்றிலும் பிரதான
மானது என்றான்.

மூன்றாம் பக்தனாகிய தொமஸ் அக்கெம்பிஸ் (Thomas à Kempis)
என்பவன் 'அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து அவ
ருடைய சுமுகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்க
ளுடைய நெற்றிகளில் இருக்கும்' (22. 4.) என்பது உத்தமமான
வாக்கு என்று சொன்னான். இவன் சொன்னதை மற்றவர்கள் சற்று
நேரம் ஆழமாய் யோசித்து அதை ஏற்றுக்கொண்டார்கள்.

## மனத்தாழ்மையில் சிறந்தவனுடைய நிழல்

முன்னோர் காலத்தில் ஒரு ஊரில் மகா பக்தனாய் இருந்த
ஒருவனைப்பார்த்து தேவதூதர்கள் இவனுக்கு விநோதமும் நவீனமு
மான வரம் கொடுக்கும்படி கடவுளின் சன்னிதானஞ்சென்று அவரைப்
பிரார்த்தித்தார்கள். கடவுள் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு,
நீங்கள் போய் அவனுக்கு விருப்பமான வரம் இன்னதென அறிந்து
வாருங்கள் என்றார். தூதர்கள் அப்பக்தனை விசாரித்தபோது அவன்,
தேவன் தனக்கு முந்தி அருளினது எதுவோ அதே போதும்.
அதைப்பார்க்கிலும் வேறொன்றும் வேண்டாம் என்று சொன்னான்.
அதற்குத் தூதர்கள் நீர் மனுஷருக்கு உதவிபுரியும்படி அற்புதங்களைச்
செய்யும் வரத்தை விரும்பமாட்டீரோ என்று கேட்டார்கள். அதற்கு
அவன் அற்புதம் செய்வது இயேசு கிறிஸ்துவின் ஊழியம். அதைச்
செய்வதற்கு நான் பாத்திரன் அல்ல என்றான். அதற்கு அவர்கள்
அநேகரைக் கிறிஸ்துவின் மார்க்கத்தில் சேர்க்கும்படி வல்லமையின்
வரம் வேண்டியதில்லையா என்று கேட்க, அவன் மனுஷர் இரட்சிப்
படையும்படி அருள்செய்வது பரிசுத்தாவியின் ஊழியம், அவ்வூழி
யத்தை நான் செய்வதற்குப் பாத்திரன் அல்ல என்றான். தேவதூதர்
கள் எப்படியாவது ஒரு புதிய வரம் கேட்கவேண்டும் என அவன்,
கடைசியிலே நான் புதியவரம் கேட்கவேண்டும் என்பது கட்டாய
மானால் எனக்குத் தெரியாமல் மற்றவர்களுக்கு நன்மைசெய்யத்தக்க
வரத்தைச் சிலகாலம் விரும்புகிறேன் என்றான். தேவன் இதைக்



கேட்டு இவன்பேரில் பிரியமுள்ளவராய் இவனது நிழல் இவனுக்குப்
பின்னாக விழும்போது இவனுக்குத் தெரியாமல் வியாதிஸ்தர்களின்
மேல் அது பட்டால் ஆரோக்கியமாவார்கள் என்று சொல்லி அவனை
ஆசீர்வதித்தார்.

இது உதாரணமாகச் சொல்லியிருந்தாலும் எல்லாரும் கவனிக்க
வேண்டிய பொருள் இதில் அடங்கியிருக்கிறது.

## வேதாகமத்தைக் குறித்துக் கைசர் சொன்ன சாட்சி:

சென்ற ஜூன் மீ ஜெர்மனி தேசத்திலிருந்துவந்த பத்திரிகை
யில் அப்பெரிய தேசத்தையாளும் கைசர் (Kaiser) என்று சொல்லப்
படும் சக்கிரவர்த்திக்கும் அத்தேசத்துக் கிறிஸ்தவ சபையின் பிரசங்கி
யாருக்கும் சத்திய வேதத்தைப்பற்றி நடந்தவோர் சம்பாஷணை
எழுதப்பட்டிருக்கிறது.

கைசர் தாம் சத்தியவேதத்தை வாசிக்கிறதினால் தமது ஆத்து
மாவில் அளவிறந்த சந்தோஷம் உண்டாகிறது என அப்பிரசங்கி
யாருக்கு அறிவித்து, பின்வருமாறு சொன்னார்.

நான் படுக்கும் கட்டிலின் பக்கத்தில் இருக்கும் சிறு மேசையின்
மேல் வேத புத்தகம் ஒன்று எப்பொழுதும் வைத்திருக்கிறேன். நீர்
அந்தப் புத்தகத்தைத் திறந்துபார்த்தால் அதில் பிரதானமான வாக்கி
யங்கள் வரிகளினால் குறிக்கப்பட்டிருக்கிறதைக் காண்பீர். இந்தப்
பெரிய ராஜ்யபாரத்தைச் சுமந்தவனாய் நான் செய்யவேண்டிய
எந்தக் காரியத்தைப்பற்றியும் எந்தத் தீர்மானத்தைப்பற்றியும் வேதா
கமம் என்ன சொல்லுகிறது என்பதை எப்பொழுதும் யோசிப்பேன்.
அப்பொழுது வேதத்திலிருந்து வேண்டிய உதவிபெற்று அதிலிருந்து
வரும் ஒளியில் யாதொரு பயமுமின்றி நடந்துவருகிறேன். எனக்கு
ஏதேனும் திகில் சந்தேகம் நேரிடும்போது வேதத்திலே மனவாறுதலைத்
தேடுகிறேன். வேதத்தை வாசிக்கிறவர்கள் அதிலிருக்கிற பொக்
கிஷங்களைச் சிலகாலம் மறந்துபோனவர்களா யிருந்தாலும், மறுபடியும்
அதைப் பார்ப்பார்களானால் அதின்மூலமாய்த் தங்களுக்கு உண்டாகும்
நம்பிக்கையைக் கிரகித்துக்கொள்வார்கள் என்பது நிச்சயம். திருச்
சபையின் சரித்திரத்தை நாம் ஆராயுமிடத்து வேதவிரோதிகளா
யிருந்தவர்களின் பிரயத்தனங்கள் எல்லாம் பலனற்று வியர்த்தமாய்ப்
போனது என்றும், அதை நம்பினவர்களுக்குத் தைரியமும் மனப்பாக்
கியமும் உண்டாயிருந்தது என்றும் அறிவோம்.

மேலும் கைசர் சம்பாஷணை நடந்த அச்சமயத்திலே நாம் கவனிக்க
வேண்டிய இன்னொருகாரியம் சொன்னார். அதாவது:

'நாம் நமது சித்தத்தின்படி நடக்க விரும்புகிறோம். சுய சித்தத்தில் தாழ்மையுள்ளவர்களாய்ப் பொறுமையோடு நடப்பது எவர்க்கும் அரிது. ஆகையால் நம்மிலிருக்கும் சுயசித்தம் சுய வல்லமையை அகற்றும்படி நாம் எல்லாரும் கெத்சமனே தோட்டத்துக்குப் போக வேண்டியது அவசியம்.'

# 'Christian'

## 'கிறிஸ்தவன்'

I. இப்பதத்தின் உற்பத்தி.

புதிய ஏற்பாட்டில் இது மூன்றுதரம் மாத்திரம் சொல்லியிருக்கிறது: அப். 11. 26; 26. 28; 1 பேது. 4. 16.

கிறிஸ்தவர்கள் முதலில் இப்பெயரைத் தங்களுக்கு இட்டுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்களுக்கு இட்டுக்கொண்ட பெயர்கள்: 'சீஷர்கள்,' அப். 11. 26;
'சகோதரர்,' அப். 9. 30;
'தேவன் தெரிந்துகொண்டவர்கள்,' ரோ. 8. 33;
'பரிசுத்தவான்கள்,' ரோ. 12. 13;
'விசுவாசிகள்,' 1 தீமோ. 4. 12;
'மார்க்கம்,' அப். 19. 9.

யூதர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று ஒப்புக்கொள்ளாததினால் அவர்கள் அவருடைய சீஷர்களைக் 'கிறிஸ்தவர்கள்' என்று சொல்லாமல் 'மதபேதம்,' (அப். 28. 22) அல்லது 'நசரேயர்,' (அப். 24. 5) என்று அழைத்தார்கள். ஆகையால் அக்காலத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தின் உற்பத்தியைத் திட்டமாய் அறிந்த பரி. லூக்கா எழுதினதின்படி அந்தியோகியாவின் ஜனங்கள் முதலில் இயேசுவின் சீஷருக்கு இப்பெயர் கொடுத்தார்கள் என்று நாம் நம்ப வேண்டும். எப்படியென்றால் ஏறக்குறைய கி. பி. 40-ல் பர்னபாவும் பவுலும் அந்தியோகியாவின் சந்தைத் தெருக்களில் செய்த பிரசங்கங்களில் 'கிறிஸ்து' என்னும் சொல்லை அவ்வூரார் அடிக்கடி கேட்டு, அதின் அர்த்தம் தெளிவாய்த் தெரியாவிட்டாலும் அவர்கள் இந்த நவீன மார்க்கக் கொள்கைக்காரருக்கு இப்பெயர் தகுந்தது என்று நினைத்து அவர்களுக்கு இப்பெயர் இட்டுக்கொண்டார்கள்.



II. இப்பெயர் பிரபல்யமானது.

அந்தியோகியர் இப்பெயரை பரிகாசத்திற்காக இட்டிருந்தாலும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனுக்கு 'கிறிஸ்தவன்' என்று சொல்வது தகுமானதினால் சீக்கிரத்தில் சில வருஷங்களுக்குள்ளாக இது எங்கும் தெரியவந்தது. கி. பி. 57-ல் அகரிப்பா ராஜாவும் ரோமை உத்தியோகஸ்தர்களும் இப்பெயரை அறிந்திருந்தார்கள் (அப். 26. 28). அதற்குச் சில வருஷங்களுக்குப்பின் சின்னாசியாவிலே இப்பெயர் எல்லாருக்கும் தெரிந்தது (1 பேது. 4. 16). கி.பி. 64-ல் ரோமைராயனாகிய நேரோவின் காலத்தில் இப்பெயர் ரோமைராஜ்யம் எங்கும் பரம்பினது. அப்போது ஒருவன் கிறிஸ்தவனாவது பலவிடங்களிலும் மரண தண்டனைக்குரிய குற்றமாயிருந்தது. கி. பி. 150-ல் பொலிக்கார்ப் (Polycarp) தைரியமாயும் சந்தோஷமாயும் தான் கிறிஸ்தவன் என்று சொன்னான். அதற்குப்பின் வரவர பலதேசங்களிலும் இப்பெயர் நற்கீர்த்தியடைந்தது.

III. கிறிஸ்தவன் என்பதின் அர்த்தம்.

i. முதலில் ஜனங்கள் ஏரோதின் பக்கத்தாருக்கு ஏரோதியர் என்று எப்படிச் சொன்னார்களோ அப்படியே கிறிஸ்துவைச் சார்ந்தவர்களுக்கு 'கிறிஸ்தவர்கள்' என்று சொன்னார்கள். முதலில் பரிகாசமாய்ச் சொல்லப்பட்ட 'கிறிஸ்தவர்கள்' சிலவருஷத்திற்குப் பிற்பாடு பல இடங்களிலும் கொலைபாதகருக்குச் சமானமாய் இருக்கிறார்கள் என அதிபதிகள் தீர்மானித்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் அருளாபிஷேகம் செய்யப்பட்ட கிறிஸ்துவைப்போல் தாங்கள் தேவ அருளினால் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் அபிஷேகம் பெற்றவர்கள் என நம்பினார்கள்.

ii. மேலும் புறமதஸ்தர்கள் சிலசமயங்களில் கிறிஸ்து என்னும் சொல்லைச் சரியாய் உச்சரிக்கத் தெரியாமல் 'கிரெஸ்து' என்று சொன்னார்கள். 'தயை உள்ளவர்' என்பது இதின் அர்த்தம். அப்படியே ஆதிபிதாக்கள் கிறிஸ்துவுக்கு அந்தப் பெயரிட்டு அவரைப்போல் கிறிஸ்தவர்கள் எல்லாரும் தயை உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

iii. முதலில் கிறிஸ்தவமார்க்கம் யூதமார்க்கத்தில் ஓர் கொள்கையைப்போலத் தோன்றினது. கிறிஸ்தவன் என்னும் பெயர் பலவிடங்களிலும் பாம்பினதினுலே அது யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவமார்க்கம் பிரிக்கப்பட்டது என்பதற்கு அத்தாட்சியே.

iv. கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இப்பெயர் சொல்லும்போது அவர்கள் புறஜாதியாருக்கு யூதமார்க்கமல்லாத ஒரு புதிய மார்க்கத்தைக் காட்டினுர்கள் எனக்குறித்தது.

v. கிறிஸ்தவர்கள் இப்பெயரைத் தங்களுக்குச் சொல்வதினுல் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு ஒரு புஸ்தகம் அல்லது தத்வ ஞானம் அல்லது ஓர் காட்சி ஆகிய இவைகள் அல்ல, கிறிஸ்துவே காரணம் எனக்குறித்தார்கள்.

A. C. C.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS.

No. 53 அக்டோபர் 1910

THE REGISTRAR OF B... REGISTERED 8 OCT 1910 MADRAS.

# வேதியர் விளக்கு

## Notes of a Sermon

by

The Rev. J. Breeden

### துன்பமும், உறுதியும், வாஞ்சையும்

I. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானுல், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? 1 பேது. 3. 13.

1. முதலில் இவ்வசனத்தை வாசிக்கிறவர்கள் இதைக்குறித்து
ஆச்சரியப்பட்டு நமக்குத் தீமைசெய்கிறவர்கள் இருக்கிறுர்கள் என்
பதை அறிந்திருக்கிறுேமே. இயேசு 'நீதியினிமித்தம் துன்பப்படுகிற
வர்கள் பாக்கியவான்கள்' என்று சொன்னபோது தீமைசெய்கிறவர்
கள் இருப்பார்கள் என்று அவர் அறிந்தார் அல்லவா எனச் சொல்லு
வார்கள்.

2 பேதுரு 'உங்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் யார்' என்று
கேட்கும்போது அவனுடைய அர்த்தம் என்னவென்றுல்: கிறிஸ்த
வனைத் துன்பம் சிலகாலம் கஷ்டப்படுத்தினுலும் அது அவனை மேற்
கொள்ளமாட்டாது.

சிலசமயங்களில் அதற்குச் ஜெயம் கிடைக்கும் எனத் தோன்றி
னுலும் கடைசியில் அது முழுதும் அற்றுப்போகும். இயேசு திரளான
சத்துருக்களால் வாதிக்கப்பட்டு மரித்தார். ஆனுல் அவர் மகிமை
யோடு மூன்றும்நாள் உயிர்த்தெழுந்தார். அப்படியே கிறிஸ்தவர்
களும் சிலசமயங்களில் துன்பத்துக்குட்பட்டாலும் அதினுல் ஜெயிக்
கப்படமாட்டார்கள். துன்பம் அனுபவித்த கிறிஸ்தவனுக்கு அடைக்
கலப்பட்டணம் சமீபமாய் இருக்கிறது. 'தேவனுடைய ராஜ்யம்
அவர்களுடையதே.'

3. இவ்வசனத்தில் பேதுரு தன் அனுபவத்தைச் சொல்லு
கிறுன். முதலில் அவன் பாவச் சுபாவத்தினுல் மேற்கொள்ளப்பட்ட

வனைப்போலிருந்து இயேசு தனக்கிட்ட ஊழியத்தைச் செய்வதற்குத் தன் குற்றம் தன்னை அபாத்திரனாக்கினது என்று நினைத்துத் தன் ஊர் சென்று திரும்பவும் மீன் பிடிக்கிற வேலையிலிருந்தான். ஆனால் அவன் நன்மை செய்வதின்பேரில் மறுபடியும் வாஞ்சையுள்ளவனாயிருந்தபடியால் இயேசு அவனை யேற்றுக்கொண்ட நாள்முதல் தனக்குத் தீமைசெய்கிறவர்கள் இல்லையெனத் தீர்மானித்து ரோமாபுரியில் சிலுவைமரத்தில் அறையுண்டு அகோர வேதனையடைந்து மரிக்கும்வரையும் அவரில் உறுதியுடையவனாய் நடந்தான்.

4. நமது விசுவாசம் பலவீனம் அடைகிறது. கடவுளின் சித்தம் நமது பாக்கியம் என்பதைக்குறித்து நமக்குள் சந்தேகம் உண்டாகிறது; வீட்டிலும் தெருவிலும் கலாசாலைகளிலும் தொழில்துறைகளிலும் நமக்கு நேரிடும் துன்பத்தினாலும் துயரத்தினாலும் மனம் இளக்கரித்துப்போகிறது; நம்மில் பக்தியும் நம்பிக்கையும் அடிக்கடி குறைந்துபோகிறது என நமக்குக் காணப்பட்டாலும் நமக்குத் தீமை செய்கிறவர்கள் இல்லையென்று பேதுருவைப்போல் தீர்மானித்து அவனைப்போல நடக்கமுடியுமா? பேதுரு நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் அப்படியே சமாதானத்தைக் கொடுக்கிற இந்த உறுதி உங்களிடத்தில் இருக்கும் என்கிறான்.

II. உறுதி உண்டாகும்படி நன்மையைப் பின்பற்றுகிற வாஞ்சை யாவது என்ன?

1. எனக்காகவும் சகோதரனுக்காகவும் பிறனுக்காகவும் இயேசுவின் சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்றும் அதை நிறைவேற்றும்படி என்னால் கூடியமட்டும் பிரயாசப்படவேண்டுமென்றும் விரும்புவதே இந்த வாஞ்சை. நாம் அதின்படி செய்தால் வரவர அந்த வாஞ்சை அதிகரிக்கும். அப்பொழுது நமக்கு விரோதமாயிருக்கும் எந்தத் தீமையும் நம்மை ஜெயிப்பதற்கு இடம் உண்டாவது எப்படி?

'உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்.' உபா. 4. 29.

2. இயேசு 'என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்' என்று விளம்பினார். அதைப்போன்ற வாஞ்சை நம்மில் இருக்கவேண்டியது. நாம் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தால் துன்பத்திலே ஜெயமடைவது எப்படி? வெளி. 3. 16.

இயேசுவிலுண்டான நன்மையைப் பின்பற்றுகிற வாஞ்சை பரி. பவுலில் இருந்தபடியால் 'உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்' ரோ. 5. 3. என்று சொல்லத் துணிந்தான்.



3. நமக்குத் துன்பம் வரும். அத்துன்பம் நமக்கு விசனமாயும் கசப்பாயும் இருக்கும். ஆனால் அவைகளைப் பரமபிதா நமக்குச் சிட்சையாகக் கொடுத்திருக்கிறார். இவைகளினால்தான் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்னும் வாஞ்சையுடையவர்களாயிருந்தால் பரி. பேதுருவைப்போல் நன்மையைப் பின்பற்றுகிறவர்களாகிய நமக்குத் தீமைசெய்கிறவன் யார் என்று நாம் ஆரம்பித்த மோட்ச பிரயாணம் முடியும்வரையும் மகிழ்ச்சியும் உறுதியுமுள்ளவர்களாயிருப்போம்.

REGISTRAR OF BOOKS
REGISTERED
8 1910
MADRAS.

# A Bible Reading — Exodus 33

By

The Rev. T. Walker, M.A.

## யாத்திராகமம் 33-ம் அதிகாரம்

### தேவசமுகம் தூரமாய் நீங்கிப்போகுதல்

(தொடர்ச்சி)

6. திட்டமான ஜெபம். வாக். 12–23. இந்தப் பாகத்தில், மோசே வேண்டுதல் செய்து இரண்டு விசேஷித்த விண்ணப்பங்கள் பண்ணுகிறான்.

(1) முதலாம் விண்ணப்பம். 'உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்.' வாக். 15.

அந்தத் திவ்விய சமுகமில்லாமல் காரியம் தீராதென்று இவ்வுத்தம பக்தன் நன்குணர்ந்து ஊக்கத்தோடே விண்ணப்பஞ் செய்தான். தேவசமுகம் கூடவே இருப்பது தீராத அவசியம் என்பதற்குச் சில நியாயங்களையும் காட்டுகிறான்.

a. அருள்வாக்கு நிறைவேறுவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும். வாக். 12.

'உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேனென்றும் என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்ததென்றும் தேவரீர் சொன்னதுண்டே.'

கர்த்தர் கூட வராவிட்டால் திருமொழி நிறைவேறுவது எப்படி? மெய்விசுவாசி அருள்வாக்கியங்களை ஆதாரமாகக் காட்டுவது நலம் (எண். 23. 19; மத். 24. 35).

*b.* திருச்சித்தம் தெரிவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும். வாக். 13.

'உம்முடைய வழியை எனக்கு அறிவியும்.' கர்த்தர் கூட வராவிட்டால் போகவேண்டிய பாதை இன்னதென்றும் செய்யவேண்டிய காரியம் இன்னதென்றும் நமக்குத் தெரியாது.

*c.* தேவனுடைய ஜனமென்று விளங்குவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும். வாக். 13.

அவர் கூட வந்தால் மாத்திரம் நாம் அவருடைய ஜனங்கள் என்று உலகத்தார் அறிந்துகொள்வார்கள் (மத். 28. 19-20; மாற். 16. 20; அப். 4. 29-30; 14. 27).

*d.* கர்த்தருடைய தயவுண்டென்று காணப்படுவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும். வாக். 16.

உம்முடைய கண்களில் கிருபை கிடைத்ததென்று எதினால் அறியப்படும்? நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? (அப். 11. 22-23; 19. 17-19).

*e.* இளைப்பாறுதல் கிடைப்பதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும். வாக். 14.

'உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.' கர்த்தர் கூடவே வந்தால், மனக்கவலை நீங்கும்; பூரண சமாதானமுண்டாகும்; காணன் சுதந்தர இளைப்பாறுதல் கிடைக்கும் (அப். 7. 55-56; 12. 6; 16. 25; 18. 9-10; 23. 11; எபி. 4. 3).

**கவனிப்பு.** இந்த விண்ணப்பத்துக்குக் கர்த்தர் உத்தரவருளினார் (வாக். 14).



(2) இரண்டாம் விண்ணப்பம். 'உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்.' வாக். 18.

தேவசமுகம் கிடைக்கப்பெற்ற தாசன் அவருடைய மகிமையையும் காண விரும்புகிறான்.

இந்த விண்ணப்பத்துக்கும் கர்த்தர் உத்தரவருளினார். எப்படியெனில்:—

*a.* 'என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணுவேன்' என்றார். வாக். 19.

திவ்விய மகிமையானது விசேஷமாய்க் கிருபையினாலேதான் மனிதருக்கு வெளிப்படுத்தப்பட்டது (யோ. 1. 14-17).

*b.* 'கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்' என்றார். வாக். 19.

நாமம் என்பது அந்த நாமத்தையுடையவரின் குணாதிசயங்களைக் குறிக்கிறது (34. 6-7 பார்க்க).

மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தின கர்த்தர் நமக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அதிக தெளிவாய்த் தம்மை வெளிப்படுத்தி யிருக்கிறார் (எபி. 1. 1-4; யோவா. 14. 9).

'எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் கிருபையாய் இருப்பேன் ம்' என்பதில் அவருடைய மகா லட்சணங்களாகிய நீதியும் இரக்கமும் குறிப்பிக்கப்பட்டன.

**கவனிப்பு.** தேவமகிமையில் காணக்கூடியதைத் தரிசிக்கத்தக்கதாக மோசே 'கன்மலையின் வெடிப்பிலே' வைக்கப்பட்டது போல,—நாமும் பிளவுண்ட மலையாகிய கிறிஸ்துவுக்குட்பட வேண்டும். அவருக்குட்பட்டவர்களுக்கு மாத்திரம் தேவனுடைய கிருபையும் மகிமையும் வெளிப்படும் (யோவா. 14. 6. 20-21).

மேலும்,—'என் கரத்தினால் உன்னை மூடுவேன்' என்பதினாலே நமக்குப் பயபக்தி அவசியம் வேண்டும் என்று காண்கிறோம்.

# The Teaching of the Prophet Amos

by

Miss E. M. Swift

## ஆமோஸ் தீர்க்கதரிசி செய்த போதனை

(முடிவு)

ஆமோஸ் இரட்சிப்பின் வழியைக் குறித்துப் போதிக்கிறவைகள்:—

பழைய ஏற்பாட்டின் போதனையும் புதிய ஏற்பாட்டின் போதனையும் ஒன்றுக்கொன்று விகற்பமாயிருக்கின்றனவென்றும், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை நீக்க வந்ததென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இக்குறிப்புகளை எழுதுகிறவரின் எண்ணம் அவ்வாறல்ல. நாம், கிறிஸ்து உலகத்தில் தோன்றி அநேக வருஷங்கள் சென்றபின் பிறந்திருக்கிறோம். நாம் கிறிஸ்து பிறந்த சம்பவத்திற்குப்பிறகு பிறந்து அக்காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கிறோம். அவர்கள் அவர் வருகைக்கு முன்னுள்ளவர்களாய் அந்தக் காலத்தை முன்னோக்கிப் பார்த்தார்கள். நாம் நம்முடைய விசுவாசத்தை ஞானஸ்நானத்தினாலும் திவ்ய நற்கருணையினாலும் காட்டுகிறோம். அவர்கள் தங்கள் விசுவாசத்தை தாங்கள் இட்ட பலிகளினாலே காண்பித்தார்கள். பவுல் அப்போஸ்தலன் இரட்சிப்பு விசுவாசத்தினால் வருகிறதென்று சொல்லுகிறான்; யாக்கோபு கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறதென்று சொல்லுகிறான். தேவன் ஆமோஸ் மூலமாய் ஜனங்களின் குணப்படாமையைக்குறித்து அவர்களைக் கண்டிக்கிறார். 'நீங்களோ என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள்' என்று அவர்களைப் பார்த்து ஐந்துதரம் சொல்லுகிறார். வானலோகத்திலிருந்து வந்த கர்த்தர் சொல்லிய முதற்செய்தி 'மனந்திரும்புங்கள்' என்பதுதான். அவரிடத்திலிருந்துதான் 'காணாமற்போன ஆடு,' 'கெட்ட குமாரன்' ஆகிய உவமைகளைப் பெற்றுக்கொண்டோம். இதைப்பற்றிச் சத்தியவேதம் அருளும் போதனை ஒன்றுதான். ஒரு தீர்க்கதரிசி சத்தியத்தில் ஒருபாகம்மாத்திரம் பேசுகிறான். இன்னொருவன் மறுபாகத்தை எடுத்துக் காட்டுகிறான். ஆனால் சத்தியம் ஒன்றே. ஆமோஸ் தீர்க்கதரிசனத்தில் மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள சம்பந்தம் தெளிவாய்க் காட்டப்படுகிறது. ஆனால் ஆமோஸ் அதைக்குறித்துச் சவிஸ்தாரமாய்ப் பேசவில்லை. அவன் கூறினது ஆக்கினையைக் குறித்த செய்தியாயிருந்தபோதிலும் மற்றத்



தீர்க்கதரிசிகளைப்போலவே பாவியின்பேரில் தேவனுக்கு இருக்கும் கரிசனையையும் வாஞ்சையையும் தெளிவாய் எடுத்துக் காட்டுகிறான். எப்படியென்றால்:

1. பாவி தேவனைத் தேடும்படி அழைக்கப்படுகிறான். 5. 4, 6.
2. பாவி தேவனிடம் திரும்பும்படி அழைக்கப்படுகிறான். 4. 8-11.
3. தேடுகிற பாவிக்கு ஜீவனைக் கொடுப்பதாக தேவன் வாக்களிக்கிறார். 5. 4-6.

இவைகளை நாம் பார்க்கும்போது என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை, என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு, தேடுகிற எவனும் கண்டடைவான், என்று கிருபாகரன் சொன்ன வார்த்தை உடனே நம்முடைய ஞாபகத்தில் வருகிறதில்லையா?

தேவனைத் தேடுவதென்றால் என்ன? தீர்க்கதரிசி நாம் அதைக் குறித்துத் தப்பான கருத்துக் கொள்ளாதபடிக்கு மிகத் தெளிவாய்ச் சொல்லுகிறான்:—

தேவனைத் தேடுவது நன்மையைத் தேடுவதாம்.
தேவனைத் தேடுவது நன்மையை ஆசிப்பதாம்.
தேவனைத் தேடுவது தீமையை வெறுப்பதாம்.
தேவனைத் தேடுவது தீமையை விட்டுவிடுவதாம்.

புதிய ஏற்பாட்டின் போதனை இதினுடைய விஸ்தரிப்பேயொழிய வேறல்ல. மனிதன் தேவனோடு சம்பந்தப்படுவதற்காக அஸ்திபாரம் கிறிஸ்துவின் பிராயச்சித்தபலியே. இஸ்ரவேலர் பலியாகச் செலுத்தி வந்த ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் அதற்கு அடையாளம். நாம் மனந்திரும்பி தேவனைத் தேடவேண்டுமென்றும், இந்த மனந்திரும்புதல் தீமையை வெறுத்து நன்மையைப் பின்பற்றுவதுதானென்றும் புதிய ஏற்பாடு திரும்பத் திரும்பச் சொல்லுகிறது. இவ்விதமாய் தீர்க்கதரிசிகள் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளும்படி மனிதரை மறுபடியும் மறுபடியும் அழைக்கிறார்கள். அப்போஸ்தலர்களும் நாம் நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு தேவன் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறாரென்றும், பரிசுத்த ஜீவியம் செய்யும்படிக்கு அவர் நம்மை ஏவுகிறாரென்றும் சொல்லுகிறார்கள். புதிய ஏற்பாட்டைப் போலவே பழைய ஏற்பாடும் நாம் பரிசுத்த ஜீவியத்திற்கென்று விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோமென்ற நற்செய்தியைக் கூறுகிறது.

# Four Rules

## நான்கு பிரமாணங்கள்

ஒரு ராஜா அதிக அன்பான தனது குமாரன் குணத்திலும் கல்வியிலும் சிறந்தவனாய் வளரும்படி அவனுக்குக் கல்வி பயிற்றுவதற்காக நல்லாசிரியனை நியமித்தான். ஆசிரியனும் மாணாக்கன் நற்புத்தி நல்லொழுக்கம் அடையும்படி பிரயாசப்பட்டு ஒருநாள் ராஜகுமாரனைப் பார்த்து ‘இவ்வுலகத்தில் ஜனங்கள் தாங்கள் பிழைப்பதற்கு வேண்டிய முறைகளை விசாரித்தறிந்து நான்கு பிரமாணங்களைக் கண்டிருக்கிறார்கள். அவைகள் இன்னதென நாலு நாட்களில் அறிவிப்பேன்’ என்று சொன்னான்.

அடுத்தநாள் ஆசிரியன் ராஜகுமாரனை அவன் தகப்பனுடைய அரமனையிலுள்ள சிறைச்சாலைக்கு இட்டுக்கொண்டுபோய், அங்கே சங்கிலியினால் கட்டுண்டிருக்கும் ஒரு குற்றவாளியை அவனுக்குக் காண்பித்தான். ராஜகுமாரன் அந்தக் கைதியினுடைய பயங்கர ஸ்திதியைப் பார்த்து அதிக வெறுப்படைந்தவனாய் நிற்கையில், ஆசிரியன் ‘இவனை நன்றாய்க் கவனித்துக்கொள். பிழைப்பதற்கு மனுஷர்கள் விரும்பும் நாலு பிரமாணங்களில், இவன் என்னிஷ்டம் என் பாக்கியம் என்பதைத் தனக்குப் பிரமாணமாகக் கொண்டிருக்கிறான். தங்கள் இஷ்டத்தின்படி நடக்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே சத்துராதிகளாய் இருக்கிறதுமல்லாமல் தங்களுக்கும் கடவுளுக்கும் இடையில் விரோதத்தை உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். இவன் இந்தப் பிரமாணத்தை யுடையவனாதலால் இவன் கைக்குக் காப்புக் கிடைத்தது பெரிய காரியம் என்று நாம் நினைக்கவேண்டும். இப்பிரமாணத்தை நாடித் தேடுகிற எத்தனையோ பேர் இதிலும் கேவலமான என்னென்ன அவஸ்தையில் இருப்பார்களோ நாம் அறியோம்’ என்றான்.

அடுத்தநாள் ஆசிரியன் ராஜகுமாரனை அழைத்துக்கொண்டு தெருவீதியில் போகும்போது ஒரு தனவான் வீட்டண்டை வந்தான். அங்கே அந்தநேரம் வீட்டெஜமானாகிய தனவானும் பிள்ளைகளும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அங்குள்ள நாய் ஒன்று தனக்குப் போட்டிருந்த தீனியைத் தின்றுகொண்டிருந்தது. அத்தருணத்தில் ஒரு பிச்சைக்காரன் ‘பிச்சை, ஐயா!’ என்று உரத்துக் கூப்பிட்டான். அதுகேட்டு அந்த நாய் பெரிய சத்தம் போட்டுக்கொண்டு அந்தப் பிச்சைக்காரனைக் கடிக்கவர, அவன் கத்திக் கதறி யோடிவிட்டான். இப்படி நடந்ததை ராஜகுமாரன் கண்டபோது ஆசிரியனைப் பார்த்து



‘எல்லாரும் சாப்பிடும் தருணம் இந்த ஏழைப் பிச்சைக்காரன் வந்தானே. நாயும் சாப்பிடுகிற நேரமாயிருந்ததே. ஒருவேளை இந்த நாய் பிச்சைக்காரன் தனக்கிட்ட தீனியை எடுத்துக்கொள்வான் என்று நினைத்து இரக்கம் அற்று இவனைக் கடிக்கப்போனதோ?’ என்று கேட்டான். அதற்கு ஆசிரியன் ‘நீ சொன்னது சரிதான், இப்படிச் செய்வது நாயின் குணம். இந்த நாய் நான் சொல்லப்போகிற இரண்டாம் பிரமாணத்துக்கு உதாரணம்’ என்றான்.

ராஜகுமாரன் அது என்னவென, ஆசிரியன்: ‘இது தன்னயப் பிரமாணம். இந்த நாய் தானும் வீட்டாரும் சாப்பிட்டாற்போதும் என்று எப்படி நினைத்ததோ, அப்படியே அநேகர் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் பார்க்கிறார்களேயொழிய, தங்கள் ஊரிலிருக்கும் ஏழைகள்மீது இரக்கம் வைத்து யாதொரு நன்மையும் செய்யாமல் இருக்கிறார்கள். இவர்கள் தன்னயம் என்னும் பிரமாணத்தின்படி நடக்கிறவர்கள்’ என்றான்.

மூன்றாம்நாள் ஆசிரியன் ராஜகுமாரன் ஒருக்காலும் கால் மிதித்திராத அசங்கியமான ஏழை ஜனங்கள் வசிக்கும் ஒரு பறைச்சேரிக்கு அவனைக் கொண்டுபோனான். அங்கே யொரு வீட்டில் அதிகம் வயதுசென்ற ஒரு கிழவி இரண்டு குழந்தைகளுக்கு அன்பாயும் ஆதரவாயும் சாதம் ஊட்டுகிறதை ராஜகுமாரன் பார்த்து ‘பாட்டி, இக்குழந்தைகள் உன் பேரப்பிள்ளைகளா?’ என்று கேட்டான். கிழவி, ‘இல்லை, இவர்கள் இந்த ஊரில் வயிற்றுக்கில்லாமல் பசியினால் வாடி வதங்கி அலைந்து திரிந்தார்கள். இவர்களைக் காப்பாற்றும்படி இங்கே கொண்டுவந்து என்னிடமுள்ள கஞ்சி பருக்கை ஊட்டுகிறேன்’ என்றாள். ராஜகுமாரன் அவள் வயோதிப ஸ்திதியிலும் வறுமையிலுமிருந்தாலும் இப்படிச் செய்கிறதைக் கண்டு அவளுடைய பரோபகார சிந்தையை வியந்து அவளுக்குச் சில உதவி செய்தான். பிறகு ஆசிரியனும் ராஜகுமாரனும் அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் ஆசிரியன் ‘இந்த வயோதிப ஸ்திரீ நான் சொல்லப்போகும் மூன்றாம் பிரமாணம் உடையவள். அதென்னவென்றால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய நீங்கள் விரும்புவீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத். 7. 12) என்பதே.’

பிற்பாடு ராஜகுமாரன் தன் வீடு சென்று இவைகளையெல்லாம் யோசித்து மனதில் வைத்துக்கொண்டு, நாலாவது பிரமாணத்தை யறியும்படியான ஆவலுள்ளவனாய் நான்காம்நாள் தானே ஆசிரியன் வீட்டுக்குப் போய் மிகுந்த பணிவோடு ‘இன்று நாம் எங்கே போவோம்?’ என்று கேட்டான். ஆசிரியன் ‘இன்று நாம் எங்கும் போகவேண்டியதில்லை, இன்று நான் உனக்கு ஓர் சரித்திரம் சொல்லப்போகிறேன்.

அது என்னவென்றால்: அநேக வருஷங்களுக்கு முன்னே அன்பே திரு அவதாரமாய்க்கொண்டு இவ்வுலகத்திற்கு வந்த பரம சற்குருவாகிய இயேசுகிறிஸ்து ஏழைகளின்மேல் இரக்கமுடையவராய் அவர்களுக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்தார். சாக்ஷாத் பெருமானாகிய அவர் பரலோகத்தின் மகிமையெல்லாம்விட்டு இப்பூமியில் வந்து ஆடம்பரமான தோற்றத்தோடு திரிந்தவரல்ல. அவர் ஏழைக் குடும்பத்தில் அவதரித்து, ஏழையாய் வளர்ந்து, ஏழைகளுக்கிரங்கி, ஏழைகளைச் சீஷர்களாகத் தெரிந்து, அவர்களுக்கு அநேக உபதேசங்கள் செய்து, உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாய் இருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன் (மாற். 10. 44.)' என்றார். இது நான்காம் பிரமாணம். இந்தக் கடைசி இரண்டு பிரமாணங்களும் இன்னும் அவர் உபதேசித்த போதனைகளுமுள்ள நாலு சுவிசேஷங்களை அவருடைய சீஷர்களில் சிலர் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகம் என்னிடமிருக்கிறது' என்று சொல்லி ஒரு சிறு புத்தகத்தை ராஜகுமாரனிடம் கொடுத்து 'நீ இதை வாசித்துப் பார்த்தால், அவருடைய போதனைகளையும் போதனைகளுக்கேற்க அவர் நடந்துகொண்ட சாதனைகளையும் காண்பாய்' என்றான். ராஜகுமாரன் அப்புத்தகத்தை அதிக ஆவலோடும் சந்தோஷத்தோடும் கையில் வாங்கிச் சொன்னதாவது: 'நீங்கள் நேற்றுச் சொன்ன மூன்றாம் பிரமாணத்தைத் தங்கப் பிரமாணமாக என் மனதில் வைப்பேன். கிருபாநிதியும் சற்குருவுமாகிய இயேசுகிறிஸ்து உரைத்த உபதேசங்கள் அடங்கிய இப்புத்தகத்தை இன்றுமுதல் வாசித்துத் தியானம்பண்ணுவேன். இன்று நீங்கள் சொன்ன அவருடைய திருப் பிரமாணத்தைத் தங்கப் பலகையில் வச்சிர அட்சரங்களாற் பதித்து, தினந்தோறும் நான் நடக்கவேண்டிய ஞாபகப் பிரமாணமாக என் அரமனையில் அதை என்னோடு எப்பொழுதும் வைத்திருப்பேன்' என்றான்.

# Illustrations of the Truth

## வேதத்தை விளக்கும் உதாரணங்கள் சில

### காதுகளும் நாவுகளும்

ஜப்பானியர் தங்கள் முன்னோர் சொன்ன உவமைகளிற் சில பலமுறையும் எடுத்துப் பேசுவார்கள். அவைகளில் ஒன்று 'காதுகளும் நாக்குகளும்.' ஒருநாள் ராத்திரி பக்தன் ஒருவன் நித்திரை



செய்யும்போது சொப்பனத்தில் தான் மோட்சலோகத்திற்குப் போனதாகவும் அங்கே யொரு தேவதூதனைத் தரிசித்ததாகவும் கண்டான். அந்த பக்தன் அந்தத் தேவதூதனோடு மோட்சத்தில் உலாவி அங்குமிங்கும் அநேக விநோதங்களைப் பார்த்துக்கொண்டு போகிறபோது அங்கே பெருங்குவியல் ஒன்றைப் பார்த்து அதற்குச் சமீபமாய்ச் சென்று அது மனுஷருடைய காதுகள் என்று கண்டு, பயத்தோடு தேவதூதனை நோக்கி 'இவைகள் இங்கே எப்படி வந்தன' என்று கேட்டான். தேவதூதன் 'நீ பயப்படாதே. நீ இருந்த உலகத்தில் இந்தக் காதுகளையுடையவர்களாய்க் கோவில்களிற் பிரசங்கங்களைக் கேட்டும் அவைகளின்படி நடவாமல் தங்கள் இஷ்டமே பிரமாணமாய்த் திரிந்தவர்கள் தங்கள் செய்கைக்குப் பலனாக நரகத்தையே அடைந்தார்கள். பிரசங்கங்களைக் கேட்ட அவர்களுடைய காதுகள்மாத்திரம் இங்கே கிடக்கின்றன' என்றான். பிறகு அவ்விடத்தைவிட்டுக் கொஞ்சம் தள்ளிப்போனபோது இன்னொரு குவியலை அந்த பக்தன் பார்த்தான். அது சிவப்பு நிறமாயிருந்தது. அது என்னவென்றுயறியும்படி அதற்குச் சமீபமாயோடி அதை உற்றுப்பார்க்கையில், ஐயோ, இவைகள் மனுஷனுடைய நாவுகள்தான், வேறொன்றுமல்ல எனக் கண்டு தேவதூதனை நோக்கி 'ஐயா, இவைகள் இங்கே வந்ததற்குக் காரணம் என்ன?' என்று கேட்டான். அதற்குத் தேவதூதன் 'பூலோகத்தில் மனுஷர் கடவுளுக்குச் செய்யும் வணக்கம், அவருக்குக் காட்டும் பக்தி முதலிய பரமகாரியங்களைப்பற்றி அதிக ஆவலோடு அலங்காரமாயும் சாதுரியமாயும் போதித்தும் தாங்களே அவைகளின்படி நடவாமலிருந்த பிரசங்கிகள் சிலர் இருந்தார்கள். அவர்கள் இப்போது நரகத்தில் தள்ளுண்டவர்களாய் அங்கே கிடக்கிறார்கள். அவர்களுடைய நாவுகள் மாத்திரம் இங்கே யிருக்கின்றன' என்றான்.

### புலவனும் புஷ்பமும்

மகா கவிவல்லோனாகிய டென்னிசொன் (Tennyson) ஒருநாள் தன் சிநேகிதனாகிய ஒரு வித்துவானோடு காட்டில் நடந்துபோகும்போது வித்துவான் அவரை நோக்கி 'இயேசுகிறிஸ்துவைப்பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டான். அதற்கு அப்புலவன் வழியோரத்திலிருந்த வோர் சிறு புஷ்பத்தைக் காட்டி 'சிநேகிதனே, சூரியனுடைய வெளிச்சம் இப்புஷ்பத்திற்கு ஜீவாதாரமாய் இருக்கிறது என்பது உமக்கு நன்றாய்த் தெரியுமே; சூரியன் இல்லாவிட்டால் இது வளரமாட்டாது. அதுபோல இயேசுகிறிஸ்து சிறு புஷ்பமாகிய என் இருதய கமலத்திற்குச் சூரியனாய் இருக்கிறார்' என்றார்.

## கெடுதி செய்யக் கூடியவன் யார்?

கிரிசொஸ்தம் (Chrysostom) என்பவன் கிறிஸ்துவில் பக்தியில்லாதவர்களிலுள்ள தீமைகளை விலக்கும்படிக்கும் அவர்களைக் குணப்படுத்தும்படிக்கும் பலமுறையும் மகா தைரியத்தோடு பிரசங்கஞ் செய்து அவர்களை யெச்சரித்தபோது, அவர்கள் அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனைத் துன்பப்படுத்தி மிலேச்சர் வசிக்கும் நாட்டுக்கு அவனைத் துரத்திவிட்டார்கள். அவனுடைய சிநேகிதர் அதைக் கேட்டு அவன்பேரில் பரிதாபங்கொண்டபோது 'நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?' என்று பரி. பேதுரு சொன்னதுபோல் 'ஒருவன் தன்னைத்தான் கெடுத்துக்கொள்ளாவிட்டால் அவனுக்குக் கெடுதி செய்கிறவன் யார்?' என்றான்.

# Biblical

## வேதாகம விசேஷங்கள் சில

### வேதாகமத்தில் சொன்ன இரத்தினங்கள்

வேதாகமத்தில் பிரதான ஆசாரியன் தரிக்கும் மார்ப்பதக்கம் (யாத். 28. 17; 39. 10), தீரு ராஜா தரிக்கும் அலங்கார 'மூடி' (எசே. 28. 13), புதிய எருசலேமின் அஸ்திபாரம் (வெளி. 21. 10), இவைகளிற் சொல்லிய பலவிதமான இரத்தினங்களின் அட்டவணைகள் மூன்று.

இந்த மூன்று அட்டவணைகளைச் சேர்த்து வேதத்தில் குறித்திருக்கும் இரத்தின வகைகளின் பெயர்களைப் பின்வருமாறு எழுதியிருக்கிறோம். ஆனால் இதில் 'இந்திர நீலம்,' 'வைடூரியம்' முதலிய பதங்களை நாம் வாசிக்கும்போது நமக்குத் தெரிந்த இந்த இரத்தின வகைகளுக்கும், எபிரெயருக்குத் தெரிந்த இந்த இரத்தின வகைகளுக்கும் வித்தியாசமிருக்கலாம் என்று நினைக்கவேண்டும்.



### இரத்தின அட்டவணை

| தமிழ் | இங்கிலிஷ் | வசனங்கள் |
|---|---|---|
| அக்கிக்கல் | Chrysolite | வெளி. 21. 20. மூன்றின மொழிபெயர்ப்பு. |
| இந்திர நீலம் | Sapphire | யாத். 28. 18; 39. 11; எசே. 28. 13; வெளி. 21. 19; உன். 5. 14. |
| கெம்பு | A. V. Ligure<br>R. V. Jacinth | யாத். 28. 19; 39. 12. |
| கோமேதகம் | Onyx, Sardonyx | ஆதி. 2. 12; யாத். 28. 20; 39. 13; எசே. 28. 13; யோபு 28. 16; வெளி. 21. 20. |
| சந்திரகாந்தம் | Chalcedony | வெளி. 21. 19. |
| சுகந்தி | Amethyst | யாத். 28. 19; 39. 12; வெளி. 20. 21. |
| சுநீரம் . | Jacinth | வெளி. 21. 20. |
| சுவர்ணரத்தினம் | Chrysolite | வெளி. 21. 20. |
| சொகுசா | R. V. Amber | எசே. 1. 4. 27; 8. 2. சிலர் மூலபாஷையில் இப்பதத்தின் அர்த்தம் 'தம்பாக்கு' என்று நினைக்கிறார்கள். |
| படிகப்பச்சை | Beryl | யாத். 28. 20; 39. 13; எசே. 28. 13; வெளி. 21. 20. |
| பத்மராகம் | Sardius | யாத். 28. 17; 39. 10; எசே. 28. 13; வெளி. 21. 20. |
| பவளம் | Coral | யோபு 28. 18; எசே. 27. 16. |
| பளிங்கு | Crystal | யோபு 28. 17. |
| புஷ்பராகம் | Topaz | யாத். 28. 17; 39. 10; எசே. 28. 13; யோபு 28. 19; வெளி. 21. 20. |
| மரகதம் | Emerald | யாத். 28. 18; 39. 11; எசே. 27. 16; 28. 13; வெளி. 21. 19. |

| தமிழ் | இங்கிலீஷ் | வசனங்கள் |
|---|---|---|
| மாணிக்கம் | Carbuncle | யாத். 28. 17; 39. 10; எசே. 28. 13. |
| முத்து | Pearl | யோபு 28. 18; மத். 13. 45; 1 தீமோ. 2. 9; வெளி. 21. 21. |
| யஸ்பி | Jasper | யாத். 28. 20; 39. 13; எசே. 28. 13. |
| ரத்தினம் | Ruby | நீதி. 3. 15; 8. 11; 20. 15; 31. 10. |
| வச்சிரம் | Diamond | யாத். 28. 18; 39. 11; எசே. 3. 9; வெளி. 21. 19. |
| வெள்ளைக்கல் | Alabaster | மத். 26. 7; மாற். 14. 3. |
| வைடூரியம் | Agate<br>Chrysophrase } | யாத். 28. 19; 39. 12; வெளி. 21. 20. |
| வைரம் | Carbuncle | எசே. 28. 13. |

## ஆதிக் கிறிஸ்தவர்கள் பாடின கீதங்கள்

மத். 26. 30; எபே. 5. 19; கொலோ. 3. 16. எபிரெயர்கள் ஆராதனை நடத்தும்போது கீதங்கள் வழக்கமாய்ப் பாடுவார்கள். சங்கீத புத்தகம் தேவாலயத்திலும் வீடுகளிலும் பாடுகிற பாட்டுகள் நிறைந்த புத்தகம். கிறிஸ்தவ சபையாரும் அப்படியே ஆராதனையில் பாட்டுகள் பாடுவது வழக்கம். புதிய ஏற்பாட்டிலும் சில கீதங்கள் இருக்கின்றன. அவையாவன; Magnificat, Benedictus, Gloria in Excelsis என்னும் பாட்டுகள். லூக். 1. 46-55; 1. 68-79; 2. 29-32.

மேலும் சிலர் நினைக்கிறபடி ஆதிக் கிறிஸ்தவர்கள் பாடின பாட்டுகளிற் சில புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. 1 கொரி. 13. 1-13; எபே. 5. 14; 1 தீமோ. 1. 17; 3. 16; 6. 16; 2 தீமோ. 4. 18.

## கை.

கையை விரித்து அல்லது ஏறெடுத்து ஜெபம்பண்ணுவது. யாத். 17. 11; 1 இரா. 8. 22.

கையை உயர்த்துகிறது பிரதிக்கினையைக் குறிக்கிறது. ஆதி. 14. 23.



'தொடையின்கீழ் கையை வைக்கிறது' என்பது ஆணையிடுவதைக் குறிக்கிறது. ஆதி. 24. 3; 47. 29.

உச்சந்தலைமேல் கைகளை வைப்பது ஆசீர்வாதத்தைக் காட்டுகிறது. ஆதி. 48. 14.

ஒருவன் தான் பலியாகச் செலுத்தும் ஆட்டின் தலையின்மேல் தன் கைகளை வைப்பதினால் தன் பாவ தோஷம் அந்த ஆட்டில் சுமத்துகிறான். யாத். 29. 10; லேவி. 16. 21.

கையைக் கழுவுவது குற்றம் இல்லாமையைக் காட்டுகிறது. உபா. 21. 6; சங். 26. 7; மத். 27. 24.

கைகளின் சுத்தம் நீதிக்கு அடையாளம். யோபு 22. 30; சங். 18. 20.

கையோடே கைதட்டுவது கோபத்துக்கு அடையாளம். எண். 24. 10.

ஒருவனுடைய கைகளுக்கு தண்ணீர் வார்க்கிறவன் தான் அவனுக்கு வேலைக்காரன் என்பதைக் காட்டுகிறான். 2 இரா. 3. 11.

கையடித்துக் கொடுப்பது ஏற்பாடு பண்ணுகிறதைக் குறிக்கிறது. நீதி. 6. 1; 11. 21.

கை முடக்கிக்கொள்வது சோம்பலைக் காட்டுகிறது. நீதி. 24. 33.

இடதுகையால் கவண்கல் எறிகிறவர்கள். நியா. 20. 16.

இடதுகைப் பழக்கம். நியா. 3. 15, 21.

'கர்த்தரின் கை' என்பது அவருடைய சர்வவல்லமையைக் குறிக்கிறது. உபா. 2. 15.

'கர்த்தருடைய கரம் என்மேல் இருந்தது' என்பதினால் தீர்க்கதரிசி பரிசுத்தாவி தன்னை ஏவுகிறது எனக் காட்டுகிறான். எசே 8. 1.

'கர்த்தருடைய கரம்' 'என் கை' 'என் பிதாவின் கை' என்பவைகள் தேவனுடைய பராமரிப்பைக் குறிக்கிறது. எஸ்றா, 7. 6; யோவா. 10. 28, 29.

நியாயஸ்தலத்திலே சத்துராதி வலதுபக்கத்தில் நிற்பான். சங். 109. 6; சகரி. 3. 1.

காக்கிறவர் வலதுபக்கத்தில் நிற்பார். சங். 109. 31.

நமது இரட்சகர் பரமபிதாவின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருப்பார். சங். 110. 1; ரோ. 8. 34.

## ‘The Teaching of Jesus Christ in His own words’

### கிறிஸ்துவின் போதகம்

இயேசுகிறிஸ்து அருளிய திவ்விய போதனைகளை அறிய விரும்புவோர் அவைகளடங்கிய நாலு சுவிசேஷங்களையும் வேறு வேறாகப் பார்க்கிறதினால் சிலவேளைகளில் அவைகளின் உத்தம மகத்துவத்தைப் பூரணமாய்க் கிரகித்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள்.

தொண்ணூறு வருஷங்களுக்கு முன்னே வித்வ சிரோமணிகளிலொருவராகிய ராஜாராம் மோகனராய் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வாராதவராய் இருந்தாலும் கிறிஸ்து உரைத்த போதனைகள் எல்லாம் அதிக உத்தமானவைகள் எனக் கண்டு அவைகளை முறையே சேர்த்து ‘இயேசுவின் கட்டளை’ என்று பெயருள்ள ஒரு புத்தகம் இயற்றி அப்போதனைகள் அதிக முக்கியமானவைகள் என ரூபித்திருக்கிறார். 1872–76-ஆ இந்தியாவுக்கு ராஜபிரதிநிதியாயிருந்த நோர்துபுரூக் (Northbrook) பிரபு இதே நோக்கத்தோடு ‘இயேசுகிறிஸ்துவின் போதகம்’ என்னுமோர் சிறிய புத்தகத்தை எழுதினார். அவர் நாலு சுவிசேஷங்களிலும் சொல்லியிருக்கும் இயேசுவின் திவ்விய வாக்குகளை வெவ்வேறு விஷயங்களாக ஒழுங்குபடுத்தி யாவரும் வாசித்து அறியத்தக்க வண்ணமாய்க் காட்டியிருக்கிறார். அவைகளாவன: இயேசு தம்மையும் தமது உத்தியோகத்தையும்பற்றிச் சொல்லியவை, பரமராஜ்யம், மனத்தாழ்மை, துராசையைக் கண்டித்தல், உத்தம ஜீவியம், நியாயத்தீர்ப்பு, ௵. இப்புத்தகம் சுவிசேஷகர்களும் வேதாகமஸ்திரீகளும் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றி அறியாதவர்களுக்கு வாசித்துக்காட்டிப் போதிக்கிறதற்கு அதிக உபயோகமுள்ளது. பக்கம் 129, விலை அணா 1.



No. 54 நவம்பர் 1910

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 18 NOV 1910 MADRAS.

# வேதியர் விளக்கு

## Evil Companionship

by

The Rev. H. Rice

### தீய கூட்டுறவு

‘நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால், கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப்போட்டார்.’ 2 நாளா. 20. 37.

‘தன் தகப்பனாகிய ஆசாவின் வழியிலே நடந்து, அதை விட்டு விலகாதிருந்து கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்த’ யோசபாத்தைக்குறித்து இவ்வார்த்தைகள் சொல்லப்பட்டது. அவன் தன் 35 வயதுமுதல் 25 வருஷம் எருசலேமில் அரசாண்டான். அவன் நற்குணமுடையவனும் அனுபவசாலியுமாயிருந்தும் துன்மார்க்கமாய் நடந்த இஸ்ரவேலின் இராஜாவாகிய அகசியாவோடே கப்பல் செய்யும் வேலையில் சம்பந்தப்பட்டான். கப்பல்கள் செய்து முடிந்தன. அவைகள் தர்ஷீசுக்குப் போகப் புறப்பட்டன. ஆனால் கடவுள் அவற்றை யுடைத்துச் சின்னாபின்னப்படுத்திவிட்டு யோசபாத் துஷ்டனுடைய பங்காளியாக அவனுடன் ஐக்கியப்பட்டதே நஷ்டத்திற்குக் காரணமென்று சொன்னார். ‘நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால் கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப் போட்டார்.’

நமக்கும் பலவிதமான கூட்டுறவுகளுண்டு. நமது கிரியைகளையும் முறித்துப்போடாதபடிக்குக் கடவுள் நமது செய்கைகளை எவ்வளவாய்க் கவனித்து வருகிறார் என்பதைப் படித்தறிவது ஞாயமே.

#### I. கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் கூட்டுறவு.

பொதுவாக நன்னடக்கையுள்ளவர்களும் கோவிலுக்குப் போவதில் தவறாதவர்களுமான அநேக கிறிஸ்தவர்களுண்டு. ஆனால் அவர்

கள் கொடுக்கல் வாங்கல் முதலான பணவிஷயங்களில் யதார்த்தமற்ற வஞ்சக நடபடிக்கையுடையவர்களும் பொய்யரும் வாக்கு நாணயம் தவறுகிறவர்களும் அநியாயவட்டி வாங்குகிறவர்களுமான ஜனங்களோடே புழங்க நேரிடுகிறது. இது சரியோ? தூய தன்மையோ? கிறிஸ்தவ ஒழுக்கமோ? பக்திமார்க்கம் வேறு, வியாபாரம் வேறு என்று சிலர் சொல்லத் துணியலாம். வியாபாரத்தில் மாத்திரம் கூட்டுறவேயொழிய அவர்களின் தீய வழிகளை நாங்கள் உவந்துகொண்டாடுகிறதில்லையென்று நீங்கள் பேசலாம். ஒரு மனுஷன் இரண்டு அங்கிகளை யுடையவனாயிருப்பதுபோல இரண்டு குணங்களுடையவனாய் இருப்பது எப்படி? ஒரு கிறிஸ்தவன் ஒருகையால் தேவனையும் மறுகையால் பிசாசையும் சேவிப்பது எப்படி? ஒருவன் தொழில் துறைக்குப் போகும்போது தன் குணத்தை வைத்துவிட்டுப் போக முடியாது. பொய்வார்த்தைபேசி ஈனத்தனமாய் நடக்கிற ஒரு மனுஷனோடு நீ எவ்வளவுக்கு நடமாடுகிறாயோ அவ்வளவுக்கு அவனது தீய வழிகள் முழுவதிலும் நீ சிக்குண்டிருப்பது நிச்சயமே. மேற்சொன்ன கப்பல் கட்டும் தொழிலைப்பார். இருபங்காளிகளும் அரசர்கள். ஜனங்கத்தில் உயர்பதவியுடையவர்கள். அவர்களுடைய கப்பல்களும் உள்ளபடி கட்டிமுடிந்து கடற் பிரயாணத்துக்காயத்தமாயிருந்தன. கர்த்தரோ அவைகள் நோக்கியதிசை போகாதபடி தடைசெய்தார். ஒருவனுடைய பிரயாசத்துக்கு விரோதமாய் தேவன் சண்டமாருதங்களையும் இயற்கைச் சத்துவங்களையும் ஏவிவிடும்பொழுது அவருக்கு விரோதமாய் அவன் போர்செய்வது வியர்த்தமே. நீ காரியசித்தியுடையவனாகும்படி விரும்பினால் தேவனையே உன் பங்காளியாக்கு. 'தேவன் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்.'

## II. விவாக சம்பந்தக் கூட்டுறவு.

நமது ஜீவியத்தின் பாக்கிய வாழ்வில் மிகுதியாக நமது விவாக சம்பந்தத்தை ஒட்டியிருக்கிறது. மனைவியும் புருஷனும் பக்திக்குரிய எண்ணங்களில் இசைந்திராவிட்டால் அவர்கள் பாக்கியசாலிகளாயிருக்க ஏலாது என்றாலும் எத்தனையோ கிறிஸ்தவப் பெற்றோர்கள் கிறிஸ்தவப் போதனைகளிலும் உணர்வுகளிலும் ஒழுக்கங்களிலும் வளர்க்கப்பட்ட தங்கள் குமாரத்திகளை உலகசிந்தையுடையவர்களும் பக்தியுணர்வுகள் மார்க்காபிமானங்கள் அற்றவர்களுமான புருஷர்களுக்கு மணமுடிக்கிறார்கள். ஒரு மாப்பிள்ளை படிப்பாளியாயும் நல்ல அந்தஸ்துடையவனாயும் இருந்தாலும் அவன் கிறிஸ்தவ சீலமற்றவனாயின் இச்சம்பந்தத்தில் உத்தம பாக்கியம் இராது. நாம் உலக



MADRAS.

மேன்மையையும் வசியத் தோற்றத்தையுமாத்திரம் பார்க்கப்படாது. குணசீலத்தையும் நடக்கையையுமே முக்கியமாய்த் தேடவேண்டியது. 'இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ' 'அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?' 'இதினிமித்தமே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின்மேல் தேவகோபாக்கினை வரும்.'

## III. தீய தோழமை.

'என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும், நீ சம்ம, யாதே. நீ எங்களோடே வா. நம்மெல்லாருக்கும் ஒரே பையிருக்கும் என்றவர்கள் சொல்வார்களானால், என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக. அவர்கள் கால்கள் தீங்குசெய்ய ஓடி இரத்தம் சிந்தத் தீவிரிக்கிறது.' நீதி. 1. 10-15.

பிசாசானவன் மனிதனிடத்தில் பலவகையாக வருகிறான். சில வேளைகளில் அவன் ஒளியின் உடையைத் தரித்துத் தான் குறித்த ஆளின் நிலைமைக்கும் தேட்டத்துக்கும் தக்கபடி தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ளுகிறான். உன் தோழமையை விரும்பும் ஒருவனுடைய குணம் சரியாயிராமல், அவன் வெறியனாய் அல்லது பொய்யாணையிடுகிறவனாயிருந்தால் நாளுக்குநாள் உன் சுசீலங் குன்றிக் கெட்டுப்போவது நிச்சயமே.

என் தோழர்களுடைய நடக்கைகள் நான் விரும்பினபடியிராவிட்டாலும் என் செல்வாக்கினால் அவர்களைச் சீர்திருத்திவிடுவேன் என்று ஒருவன் நினைக்கலாம். ஆனால் ஒரு நல்ல வாலிபன் தன் தீய தோழனைச் சீர்ப்படுத்துவதில் சித்தியடைந்திருப்பினும் அநேக வாலிபர்கள் தங்கள் தீய கூட்டாளிகளால் வசியப்படுத்தப்பட்டு மோசமான செல்வாக்கினால் மூச்சொடுங்கினதுண்டு. தீய சிந்தையுடையவனை ஒருவனை இரட்சிக்கும்படி அவனுக்கு நெருங்கிய சிநேகிதனாயிருப்பது அவசியமன்று. அவனிருக்கும் கும்பில் நீ காணப்பட்டபோதிலும் நீ அவனோடே ஒட்டாதவனாயிருக்கலாம். அப்படியே கிறிஸ்துவும் 'பாவிகளுக்கு விலகினவராயிருந்தார்.' இயற்கையில் நம்முடன் இனமானவர்கள் தானும் தீவினைசெய்ய நம்மை அழைக்கும்போது நாம் அவர்களை விட்டுவிடவேண்டியது. இரத்தக் கலப்பைவிட உயர்ந்த ஒரு சம்பந்தமுண்டு. 'உன் தாய்க்குப் பிறந்த உன் சகோதரனாகிலும், உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும், உன் மார்பிலுள்ள உன் மனைவியாகிலும், உன் பிராணனைப்போலிருக்கிற

உன் சிநேகிதனாயினும், இரகசியமாயுன்னை யேவிவிட்டால், நீ அவனுக்குச் சம்மதியாமலும், உன் கண் அவன்மேல் இரக்கங்கொள்ளாமலும், அவனைத் தப்பவிடாமலும் அவனை ஒளித்துவைக்காமலுமிருப்பாயாக.' உபா. 13. 6-8.

கிறிஸ்தவனாயிருக்கும் நிலைமை மகா வித்தியாசமானது. 'கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்குடன்படாமல் அவைகளைக் கடிந்துகொள்ளவேண்டும்.' 'நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'

கிறிஸ்தவன் ஒருவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிடுகிறதுமாத்திரமல்ல, அவற்றுக்கு விரோதமாய்ச் சாட்சியிடவும் வேண்டியவனாயிருக்கிறான். அவன் சத்தியத்துக்குச் சாட்சியாகவும், கர்த்தருடைய யுத்தகளத்தில் போராடுகிறவனாகவும் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறான்.

நாம் இதில் அறியவேண்டிய விசேஷம் என்னவெனில் :—

'கையோடே கைகோத்தாலும் துஷ்டன் தண்டனைக்குத் தப்பான்.' தேவனுக்கு விரோதமாய் மனிதர் திரண்டு வந்தாலும் சித்தியடையமாட்டார்கள். 'ஜனங்களே, நீங்கள் கூட்டங் கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்.' ஏசா. 8. 9. 'உலகமெல்லாம் ஒரே பாஷையும் ஒரே பேச்சுமாயிருந்தது.' தேவனுடைய வல்லமைக்கு நீங்கித் தங்கள் சுய நன்மையைக் காக்கும்படி ஜனங்கள் திரண்டு பெரிய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள் என்பது நமக்கு ஞாபகமிருக்கும். அவர்கள் எப்படி ஒரு உன்னதமான மகா பெரிய கோபுரத்தைக் கட்டினார்களென்றும் பின்பு கடவுள் அதைச் சிதறடித்து அவர்கள் பேசின பாஷைகளைத் தாறுமாறாக்கி அவர்கள் ஒருவரையொருவர் எப்படி விளங்கிக்கொள்ள முடியாமல் பண்ணினாரென்றும் நினைத்துப் பார்ப்போமாக. இன்னும் நாம் திரண்டு அவர் வழிகளை யெதிர்த்தால் அவர் மறுபடியும் அப்படியே செய்வார். நமது பணக் கணக்குகளையெல்லாம் அவர் பரிசோதிப்பார். நமது ஜன சம்பந்தங்களெல்லாம் நியாயத்தீர்ப்புக்கு ஒப்புவிக்கப்படும். நமது கூட்டுறவுகள் யாவும் தேவனால் உற்றுராயப்படும். அவர் பூமியை நியாயந்தீர்க்க வரும்போது அவருடைய கோபத்துக்குமுன் ஒருவனும் நிலைநிற்பதில்லை.



# A Bible Reading — Exodus 34

By

**The Rev. T. Walker, M.A.**

## யாத்திராகமம் 34–ம் அதிகாரம்

முதல் பாகம்

## தேவகிருபையை மறுபடியும் பெற்றுக்கொள்ளுதல்

கவனிப்பு.—இவ்வதிகாரத்தில், மோசே மத்தியஸ்தனாக நின்று தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவாக வந்த பிரிவினையைத் தன் ஊக்கமான வேண்டுதலினாலே நீக்கிவிடுகிறான்.

I. புதுப்பலகைகள். வாக். 1-4.

1. புதுப்பிக்கப்படுவது. வாக். 1. 4. முந்தின பலகைகள் உடைந்து கிடந்தன. அவைகள் இஸ்ரவேலர் மீறிப்போட்ட நியாயப்பிரமாணத்துக்கு அடையாளம் என்னலாம். தேவன் அவர்கள் நடுவில் மறுபடியும் எழுந்தருளி வாசம்பண்ணவேண்டுமானால் அம்மீறுதல் மன்னிக்கப்படுவதும் நீதிபிரமாணம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவதும் அவசியம். இதற்குக் குறிப்பாகப் புதுப் பலகைகள் அகத்தியம் வேண்டும் என்கிறார். தவறிப்போன பாவிக்குப் புது இருதயம் வேண்டுமென்றறிக (எபி. 8. 10; சங். 51. 10-12).

2. தேவசமுகத்தில் கீழ்ப்படிந்து நிற்பது. வாக். 2–4. 'என் சமுகத்தில் வந்துநில்' என்று கர்த்தர் கற்பித்தபடியே, மோசே 'சீனாயி மலையில் ஏறினான்.'

மோசே இஸ்ரவேலருடைய தலைவனாய்,—அவர்களுக்குப் பதிலாக,—அப்படி ஏறித் தேவசமுகத்தில் நின்றான் என்று சொல்லத்தகும்.

அவன் முன்போலவே, பழைய இடத்திலேதானே, போய் நிற்கவேண்டியதாயிருந்தது. திரும்பவும், தேவசித்தத்துக்கு இணங்கவேண்டும்; திவ்விய கட்டளைகளைப் பெற்று அவைகளைக் கைக்கொள்ளவும்வேண்டும்.

தவறிப்போன பாவிகளுக்குத் தேவன் கட்டளையிடுகிற விசேஷித்த உத்தரவு என்னவென்றால் 'திரும்புங்கள்' என்பதே (எரே. 3. 22; ஓசி. 14. 1; 1 பேது. 2. 25).

எந்தப் பரிசுத்த சந்நிதானத்திலிருந்து விலகிப்போனோமோ அந்தப் பரிசுத்த சந்நிதானத்திலே, திருச்சித்தத்துக்கு முற்றிலும் இணங்குவோராய், நாம் திரும்பிவந்து நிற்கவேண்டும் (யோவா. 21. 15–19).

II. பரிசுத்த நாமம். வாக். 5–9. 'கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.' தேவன் தம்மை இப்படிப்பட்டவரென்றும் தமது திவ்விய இலட்சணங்கள் இன்னவையென்றும் வெளிப்படுத்தினார்.

(1) கர்த்தருடைய நாமம். வாக். 5–7.

*a.* இரக்கமுள்ளவர். வாக். 6, 7. 'இரக்கம்,–கிருபை,–நீடியசாந்தம்.'

*b.* சத்தியமுள்ளவர். வாக். 6. 'சத்தியமுள்ள தேவன்.'

*c.* மீறுதலை மன்னிக்கிறவர். வாக். 7. 'அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்.'

*d.* பாவத்தை விசாரிக்கிறவர். வாக். 7. 'குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தை...மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்.'

மொத்தமாகச் சொன்னால்,–தமது இரக்கத்தையும் கூறினார்; தமது நீதியையும் கூறினார். அதற்காவது இதற்காவது யாதொரு குறைவும் பங்கமும் வரலாகாது. ஆதலால்,–மனிதனுடைய இரட்சிப்புக்கு அவ்விரண்டையும் சமரசப்படுத்துவது அவசியம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அவ்வாறான நீதி இரக்க சமரசம் நடந்திருக்கிறது (ரோ. 3. 25; 1 யோவா. 1. 9).

(2) மோசேயினுடைய ஜெபம். வாக். 8, 9.

*a.* தேவ பிரசன்னத்துக்காக மன்றாடுகிறான். 'எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்.'

அவருடைய சமுகம் கூடவே இருப்பது இன்றியமையாத அவசியம். 33–ம் 34–ம் அதிகாரங்களில் நடக்கும் ஜெபபோராட்டம் அதற்காகவே! 25–31 அதிகாரங்களில் விவரித்த வாசஸ்தல விசேஷங்களும் அதற்கென்றே!



ஆகையால்,–மோசே இந்தக் காரியத்தை விடாமல், கர்த்தருடைய சமுகம் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு மறுபடியும் பிரத்தியட்சமாய்க் கிடைக்குமட்டும் ஊக்கத்தோடே விண்ணப்பஞ் செய்கிறான்.

என்றாலும்,–பாவம் நீங்குமளவும் அந்தத் திவ்விய சந்நிதானத்துக்குப் போவதற்கு ஏதுவில்லை ஆதலால்,

*b.* பாவ மன்னிப்புக்காக மன்றாடுகிறான். 'எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும்.'

இதிலே,–நாம் கவனிக்கத்தக்க இரண்டு குறிப்புகளுண்டு.

(i) பாவ அறிக்கை. 'இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள்' என்பதில் இஸ்ரவேலருடைய பாவத்தை அறிக்கையிட்டபின்பு, 'எங்கள் அக்கிரமம், எங்கள் பாவம்' என்பதில் ஜனங்களோடு தன்னையும் சேர்த்து மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறான். பாவ மன்னிப்பை நாடுகிறவர்கள் தங்கள் பாவத்தை உண்மையோடு அறிக்கையிடுவதும் வெறுத்துவிடுவதும் தீராத அவசியம் (நீதி. 28. 13; 1 யோவா. 1. 9).

(ii) மெய் விசுவாசம். கர்த்தர் 'அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்' என்று தம்மை வெளிப்படுத்தியிருந்தார் (வாக். 7).

மோசே உடனே அந்தத் திருவார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு அவைகளைத் தனக்கு ஆதாரமாக வைத்து, 'சத்தியவாசகரே! நீர் சொன்னபடி செய்யும். எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னியும். இப்படிச் செய்வது உமது விசேஷித்த இலட்சணமல்லவா?' என்று விண்ணப்பம் பண்ணுகிறான். அதாவது, கர்த்தருடைய உறுதிவாக்கை நம்பிச் சார்ந்து மெய்விசுவாசத்தோடே மன்றாடுகிறான்.

அவ்வாறு, நாமும், பாவத்தை உண்மையோடு அறிக்கையிட்டபின்பு, தேவனுடைய அருள்வாக்கை

நம்பி விசுவாசித்துப் பூரண மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையில்லை (லூக். 7. 48; சங். 32. 5; 1 யோவா. 1. 9).

கவனிப்பு.—மோசேயின் ஊக்கமும் ஜெபபோராட்டமும். உபா. 9. 18, 19லே நன்றாய் விளங்குகிறது.

# The Crown of Life

## ஜீ வ கி ரீ ட ம்

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். வெளி. 2. 10.

சிமிர்னாசபை மற்றச் சபைகளைவிட அதிக உறுதியாயிருந்தும் இப்போது சோதிக்கப்படபோகிறது என்று அறிந்து ஆண்டவருடைய வாக்கைக்குறித்துப் பரி. யோவான் இவ்விதமாய் எழுதுகிறான். இந்த வசனத்தில் எச்சரிப்பும் வாக்குத்தத்தமும் கூறி இருக்கின்றன. இதில் கிறிஸ்தவர்களிலிருக்கவேண்டிய உண்மையைப்பற்றியும் அதனால் வரும் நயத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறது.

I. போர்வீரர்.

1. இயேசுவை மறுதலிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அநேகம் நேரிடும். அக்காலத்தில் அரங்கசாலையில் சத்துருக்களுக்கு முன்நின்ற கிறிஸ்தவன் ஒருபக்கத்தில் இவ்வுலகத்துக்குரிய சுகம் செல்வத்தையும் மற்றப்பக்கத்தில் உபத்திரவங்களையும் பார்த்தான். இயேசுவை மறுதலிக்கிறேன் என்று ஒரு வார்த்தைசொன்னால் உயிர்பிழைப்பான். அந்த வார்த்தையைச் சொல்லாவிட்டால் சிங்கத்தின் வாயில் போடப்படுவான், அல்லது சிலுவையில் அறையுண்டு அகோரமான மரணம் அடைவான்.

2. யாருக்கு உண்மையாயிருக்கவேண்டும்?

இயேசுகிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவ சபைக்கும், நமது மனச்சாட்சிக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(1) கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தல்.

போர்வீரர் தங்கள் சேனாபதியின் கட்டளைகளுக்கு விரோதமாய் வாக்குவாதம்செய்துகொண்டிருக்கக்கூடுமோ? அவனுடைய கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து எப்படி நடக்கிறார்களோ அப்படியே கிறிஸ்தவர்களும் இயேசு அருளும் பிரமாணங்களின்படி யாதொரு வாக்குவாதமும் செய்யாமலும் இப்பிரபஞ்சத்தில் சிக்குண்டிராமலும் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். 2 தீமோ. 2. 4.



(2) கிறிஸ்தவ சபைக்கு உண்மையாய் இருத்தல்.

போர்வீரனொருவன் தன் பட்டாளத்திலுள்ள இன்னொருவனைச் சத்துரு பிடித்துக் கொண்டுபோவதைக் கண்டால் அவனை இரட்சிக்கும்படி அதிக தைரியத்தோடு போவதுபோல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றக் கிறிஸ்தவன் துன்பத்திலும் துயரத்திலும் அல்லது எந்த விதமான சங்கடத்திலும் அகப்பட்டிருப்பதைக் கண்டால் அவனுக்கு உதவி செய்யவேண்டும்.

(3) மனச்சாட்சிக்கு உண்மையாயிருத்தல்.

மின்சாரத் தந்திவழியாய் ஏழாயிரம் மைலுக்கப்பால் இருந்தும் சமாச்சாரம் நமக்கு உடனே வந்து சேருகிறது. அதிலும் வேகமாய்க் கடவுளின் வார்த்தை நமக்கு மனச்சாட்சியின் மூலமாய் வருகிறது. இராக்காலத்தில் நாம் காட்டுவழியாய் நடக்கும்போது மின்னொளியினால் பாதையையும் மரஞ்செடிகளையும் க்ஷணநேரத்தில் எப்படி பார்க்கிறோமோ அப்படியே நமது மனச்சாட்சியானது கொடுக்கும் அறிவினால் நாம் செய்யவேண்டிய கடமைகளையும் நம்மைச் சுற்றியிருக்கும் சோதனைகளையும் நமக்குக் கிடைக்கும் உதவியையும் ஒவ்வொரு நிமிஷமும் தெளிவாய்க் காண்கிறோம்.

II. வாக்குத்தத்தம்.

1. அரங்கச்சாலையில் உட்கார்ந்திருக்கும் சத்துருக்கள் அவ்விடத்தில் உபத்திரவப்படப்போகிற கிறிஸ்தவர்களைப் பார்த்து: ஆ, இவர்கள் நீசர்களும் சண்டாளர்களுமாய் இருக்கிறார்கள் என்று நினைப்பார்கள். ஆனால் உண்மையில் உறுதியாயிருக்கும் கிறிஸ்தவர்கள் தரிக்கும் ஜீவகிரீடம் அவர்கள் கண்களுக்குத் தெரியாது. முற்காலத்தில் கவிவல்லோரும் போர்வீரரும் விருந்தாளிகளும் ஜெயக்கீர்த்தி சின்னமாய்த் தரிக்கும் வாடிப்போகிற கிரீடத்தையல்ல, ஜீவகிரீடத்தை அதாவது நித்திய ஜீவனாகிய கிரீடத்தை உங்களுக்குத் தருவேனென்று இயேசு அந்தக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லுகிறார். கிரீடத்தைப்பற்றி யறியவேண்டுமானால் அடியிற்கண்ட நிபந்தம் காண்க.

2. உலகவழக்கத்தின்படி சிலர்மாத்திரம் கிரீடம் தரிப்பார்கள். கிறிஸ்துவோ அதை எல்லாருக்கும் கொடுப்பேன் என்று வாக்களித்திருக்கிறார்.

பத்துவருஷத்துக்குமுன் சீனா தேசத்தில் சௌஷிமாவ் என்னும் பெயர்கொண்ட கிறிஸ்தவனும் அவன் தாயும் அவன் மனைவியும் மூத்த சகோதரியும் இருந்தார்கள். கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதிகளாயிருந்த சண்டாளர் சிலர் அந்தக் கிறிஸ்தவனுடைய வீட்டினுட் புகுந்து அங்கிருந்த அவனுடைய பொருட்களையெல்லாம் அபகரித்ததுமல்லாமல் அவனையும் அவன் தாய், மனைவி, சகோதரி இவர்களையும் பிடித்துக் கட்டி இன்னொரு ஊரிலிருக்கும் தங்கள் தலைவனிடம் இழுத்துக்கொண்டு போனார்கள். அத்தலைவன் இவர்களை இவர்கள் ஊருக்குக்கொண்டுபோய் அங்குள்ளவர்களையும் பயமுறுத்தும்படி இவர்களை அங்கேதானே கொன்றுபோடுங்கள் என்று உத்தரவு கொடுத்தான். அந்தச் சண்டாளர் இவர்களைத் திரும்ப இவர்கள் ஊருக்குக் கொண்டுபோகும்போது இவர்கள் 'இயேசு நம்மை நடத்துகிறார்' என்ற பாட்டைப் பாடிச் சந்தோஷமாய்ப் போனார்கள். ஊருக்குவந்ததும் எல்லாரும் பார்க்க அந்தச் சண்டாளர் பட்டயத்தையுருவி அந்தக் கிறிஸ்தவனைச் சிரச்சேதம் செய்தார்கள். இதைப் பார்த்து அவனுடைய மாதா பயந்து இயேசுவை மறுதலிப்பாள் என்று நினைத்து அந்தக் கன்னெஞ்சர் அவளைப் பார்த்து: நீ இயேசுவை மறுதலிக்கிறாயா இல்லையா? என்று கேட்க, அவள்: என் மகனை நீங்கள் கொன்றுபோட்டீர்கள். அந்தப் பயத்தினால் என் இயேசுவை நான் மறுதலிக்கவேமாட்டேன். நீங்கள் என்னைக் கொல்லலாம் என்று சொன்னாள். அப்பொழுது அவர்கள் பட்டயத்தினால் வெட்டிப் போட்டார்கள். பிற்பாடு அவர்கள் அவன் சகோதரியைப் பார்த்து: நீ கட்டாயம் இயேசுவை மறுதலிக்கவேண்டும் என்றார்கள். அவளோ: நீங்கள் என் தாயையும் என் தம்பியையும் கொன்றுபோட்டீர்கள். இவர்கள் இயேசுவிடம் போய் இருக்கிறார்கள். நான் பிழைக்கவேண்டியதேன்? நானும் என் அருமை இரட்சகரிடம் போகவேண்டும். நான் அவரை மறுதலிக்கவேமாட்டேன் என்று முழுத்தைரியத்தோடும் சொன்னாள். அவர்கள் இதைக் கேட்டு உக்கிரமூண்டவர்களாய் அவளையும் வாளுக்கிரையாக்கினார்கள். கடைசியாய் அந்தப் பாதகர் சௌஷிமாவின் மனைவியைப் பார்த்து: நீ இப்போது நடந்ததெல்லாம் கண்டாயே. நீ வயது சென்றவள் அல்ல. இன்னும் பல வருஷம் இருக்கக்கூடிய இளம்பெண். இவர்கள் மரித்ததுபோல் நீயும் மரிக்கமாட்டாய் என்று நம்புகிறோம் என்று தங்களாற்கூடிய தந்திரோபாயமெல்லாம் செய்து பார்த்தார்கள்.



அவளுடைய புருஷன், மாமி, புருஷன் சகோதரி இவர்களுடைய தேகத்திலிருந்து இரத்தம் குபீர் குபீரென்று பாய்கிறதைக் கண்டு அவள் பயந்து இயேசுவை மறுதலிப்பாள் என்றும், எல்லாரும் செத்துப்போனார்கள், இந்தப் பயங்கரக்காட்சி அவளை நடுங்கச் செய்யும் என்றும், இனி அவளுக்கு என்னதான் உறுதி உண்டாகும் என்றும் அந்தத் துஷ்டர்கள் நினைத்தார்கள். அவளோ தன் பரம பராக்கிரம கர்த்தாவாகிய இயேசுவின் வாக்கை நினைவுகூர்ந்து அவரை நான் மறுதலிக்கமாட்டேன். நான் கிறிஸ்தவளாயிருக்கிறேன், கிறிஸ்தவளாய் மரிப்பேன் என்று சொல்லி மரித்தாள்.

உண்மையும் உறுதியும் உள்ள இந்த ஏழைக் கிறிஸ்தவர்கள் மரிக்கும் தறுவாயில் தமது தொண்டருக்கு எஜமானும் இராஜாவுமாகிய இயேசு பெருமான் நித்திய ஜீவகிரீடத்தை அவர்களுக்குக் கொடுத்தார் என்பதில் சந்தேகமேயில்லை.

3. நமது ஆண்டவர்கூட மரணத்தில் சோதிக்கப்பட்டும் உண்மையுள்ளவராய் நித்திய கிரீடத்தை அடைந்ததினால் தம்மை நம்பி தமக்கென்று இந்த உலக ஆசாபாசத்தை வெறுத்துப் பசாசையும் அவன் தூதர்களையும் ஜெயித்த தமது தொண்டரை நோக்கி: நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (அப். 14. 20) என்று சொல்லுவார்.

4. உபத்திரவமோ வியாகுலமோ என்ன இருந்தாலும் நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நமக்கும் ஜீவகிரீடம் கிடைக்குமோ? என்று சந்தேகிக்கவேண்டாம். ஆம், முற்காலத்தில் சிங்கத்தின்வாயில் போடப்பட்டு இரத்தச்சாட்சிகளாய் மரித்த தமது தொண்டருக்கு இயேசுரட்சகர் ஜீவகிரீடத்தைக் கொடுத்ததுபோல் நாமும் எந்தச் சத்துருவுக்கும் பயப்படாமல் கபடு, பொய், கோபம் முதலியவற்றை ஜயிப்போமானால் நமக்கும் வாடாத நித்திய ஜீவனாகிய கிரீடத்தை அவர் கொடுப்பார் என்பது நிச்சயம்.

## Corinth

## கொரிந்து

வேதத்தை வாசிக்கிறவர்கள் கொரிந்துபட்டணம் தனசம்பத்தும் பெருங்கீர்த்தியு முள்ளதுமாய் இருந்தது என்பதையும், அதிலுள்ளவர்கள் அக்காலத்து நாகரீகத்தில் பேர்போனவர்களாய் இருந்தார்கள் என்பதையும் அறிந்துகொள்வது அவசியம்; இல்லாவிட்டால் பரி. பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபங்களில் அநேக காரியங்

கள் அவர்களுக்கு விளங்காது. கொரிந்து குடாக்கடல் கிரேக்க தேசத்தை இரண்டு பாகமாகப் பிரிக்கிறது. அந்த இரண்டு பாகங்களும் கொரிந்து பூசந்தியினால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தாலியாவின் பட்டணங்களிலிருந்து சின்ன ஆசியாவுக்குப் போக விரும்புவோர் முதலில் ஒரு கப்பலில் ஏறிக் கொரிந்து குடாக்கடலில் பிரவேசித்து அங்கே இறங்கி பூசந்தியைத் தாண்டி அதற்குத் தென் மேற்கிலுள்ள கெங்கிரேயா துறைமுகத்தில் இன்னொரு கப்பலில் ஏறிச் சின்னாசியாவுக்குப் போவார்கள். அப்படியே இத்தாலியாவுக்கும் சின்னாசியாவுக்கும் ஜனங்கள் போக்குவரத்தா யிருந்தபடியினால் கொரிந்துபட்டணத்தில் வியாபாரம் அதிகமாய் நடந்தது.

மேலும் அவ்விடத்தில் உலகத்தில் பேர்போன சர்வகலாசாலை இருந்ததினால் பலதேசங்களிலுமிருந்து கல்வி கற்கும்படி அநேக மாணக்கர் அங்கே வருவார்கள்.

இவைகளைத்தவிர அப்பட்டணத்தில் காமதேவிக்கென்று ஒரு பெரிய கோவில் கட்டப்பட்டிருந்தமையால் வேசிகள் அநேகர் அங்கே இருந்தார்கள். இதினால் எல்லாத் துன்மார்க்கத்துக்கும் கொரிந்து இருப்பிடமாய் இருந்தது.

மேலும் அந்தப் பட்டணத்தில் இரண்டு வருஷத்துக் கொருமுறை பந்தயவிளையாட்டுக்கள் நடந்தனவாதலால் ரோமை ராஜ்யத்தின் எத்திசையிலுமிருந்து அவ்விளையாட்டுக்களைப் பார்க்கிறவர்களும் நடத்துகிறவர்களுமான கோடாகோடி ஜனங்கள் அங்கே வந்து கூடுவார்கள்.

கி. மு. 146 ஆம் அப்பட்டணத்தை ரோமர்கள் அழித்தாலும் ஜூலியு கைசர் (*Julius Caesar*) அதைத் திரும்பவும் கட்டினதினால் சீக்கிரத்தில் அது முன்னிருந்ததுபோல் பெரிதாயும் தனசம்பத்துள்ளதாயும் வந்தது. பவுலின்காலத்தில் அதில் குடியிருந்தவர்கள் யார் என்றால்: அந்தப் பட்டணத்தை இரண்டாந்தரம் ஸ்தாபித்த ரோமர்களின் சந்ததியார்; ரோமைராஜ்யத்திலுள்ள உத்தியோகஸ்தர், வியாபாரிகள், கிரேக்கர்கள், யூதர்கள், அன்னியர்கள் ஆகிய இவர்களே.

பரி. பவுல் முதல் அங்கே வந்தபோது கிறிஸ்தவ சபையை ஸ்தாபிக்கவேண்டுமென்று அவன் கருதவில்லை எனத் தோன்றினாலும், அவன் கண்ட தரிசனத்தினால் அங்கே அவன் ஊழியம்செய்து ஒரு விசேஷித்த சபையை ஸ்தாபித்தான். அங்குள்ள யூதர்கள் முதலில் பவுலை ஏற்றுக்கொண்டாலும் இயேசுகிறிஸ்துவைக்குறித்து அவன் செய்த பிரசங்கத்தைக் கேட்டு அவனுக்கு விரோதிகளானார்கள். சிலரோ அவனுடைய போதனையைக் கேட்டு அவன் பக்கம் சேர்ந்தார்கள். அப். 18. 1; ரோ. 16. 21; 1 கொரி. 9. 20.



நாம் கொரிந்து சபையிலுள்ளவர்களின் பேர்களைப் பார்த்தால் புறமதங்களிலிருந்து வந்தவர்கள் அனேகர் என அறிவோம். 1 கொரி. 12. 2; 16. 17; ரோ. 16. 21; அப். 18. 7.

பரி. பவுல் சிலகாலம் அங்கே இருந்தபிறகு அவனுக்கு உதவியாகச் சீலாவும் தீமோத்தேயுவும் வந்தார்கள். அவ்விடத்தில் அவன் தெசலோனிக்கேயருக்கு முதலாம் நிருபம் எழுதி அதற்குப் பதில் வந்தபிற்பாடு இரண்டாம் நிருபத்தையும் அவர்களுக்கு எழுதினான் என்று தோன்றுகிறது. 1 தெச. 3. 6.

அவன் கொரிந்துபட்டணத்தில் இருந்தபோது அவனுக்கு விரோதிகளான யூதர்கள் கல்லியோன் அதிபதிக்குமுன் (கி. பி. 52 ஆம்) அவனை விசாரணைக்காகக் கொண்டுவந்தார்கள். இதினால் கொரிந்து பட்டணத்தில் கிறிஸ்தவ சபை விருத்தியடைந்ததையும், அதற்கு விரோதமாய் யூதர்கள் வெறுப்பும் விரோதமும் கொண்டதையும், அப்பட்டணத்திலுள்ள மற்றவர்கள் யூதர்களுக்கு விரோதமாய் நடந்ததையும் நாம் அறிந்துகொள்ளலாம். அப். 18. 17.

இங்கே கூடாரம் செய்கிறவர்களாயிருந்த பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்பவர்களுடைய வீட்டில் பவுலும் கூடாரவேலை செய்துகொண்டிருந்தான். அங்கே பவுல் இழந்துபோன நிருபம் ஒன்றையும் (1 கொரி. 5. 9) இப்போது வேதத்தில் இருக்கும் இரண்டு நிருபங்களையும் எழுதினான். அவன் மறுபடியும் 56 ஆம் கடைசியிலும் 57 ஆம் முதலிலும் மூன்று மாதமாகக் கொரிந்துவிலே இருந்தான்.

துன்மார்க்கமும் பற்பல மதங்களும் நிறைந்த அப்பட்டணத்தில் பரி. பவுல் கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தது சுவிசேஷத்தின் வல்லமைக்குச் சிறந்த அத்தாட்சியாய் இருக்கிறது.

## Some Rules of Courtesy

### நன்னெறிகள்

இந்தப் பத்திரிகையை வாசிப்பவர்களாகிய குருமார் உபாத்திமார்களில் அநேகர் பாடசாலைகளிற் படிக்கும் மாணவருக்கு நல்ல புத்திபோதனைகள் சொல்லிவருவது வழக்கம் ஆனதினால், அவர்கள் அம்மாணவருக்கு தெரிவிக்கவேண்டிய விசேஷம் ஒன்றை அறிய விரும்புவார்கள். அதென்னவெனில்:

லண்டன்மாநகரிலுள்ள அநேக பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் 'நல்லொழுக்கச் சங்கம்' ஒன்று ஏற்படுத்தி அதிக உற்சாகமாய்

அதை நடத்தி வருகிறார்கள். அச்சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் எல்லாரும் அடியிற்கண்ட பிரமாணங்களின்படி நடப்பதற்கு வாக்குக் கொடுப்பார்கள்.

1. தனக்குத்தானே செய்யவேண்டிய மரியாதை.

நேர்மையும் யோக்கியமும் இருதயசுத்தமும் உள்ளவனாயிரு. அசங்கியமான வார்த்தைகளைப் பேசாதே. உன் முகத்தையும் கை கால்களையும் எப்பொழுதும் சுத்தப்படுத்துவதுமல்லாமல் உன் உடுப்புகளையும் சுசிகரமாய் வைத்துக்கொள்.

2. வீட்டில் அனுசரிக்கவேண்டிய மரியாதை.

உன்னால் இயன்றமட்டும் பெற்றாருக்கு உதவிசெய். உன் சகோதரர் சகோதரிகளுக்குப் பட்சம்காட்டு.

தன்னயமற்றவனாயிருந்து உனக்கேதும் பழம், மிட்டாய், காசு கிடைத்தால் அவற்றில் உன் சகோதரர் சகோதரிகளுக்கும் கொடு.

உன்னால் இயன்றமட்டும் உன் பெற்றாருக்குப் பிரியமுள்ளவனாய் நடந்துகொள்.

3. பாடசாலையில் அனுசரிக்கவேண்டிய மரியாதை.

உபாத்திமாரைக் கனப்படுத்து. அவர்களுக்குத் தொந்தரவு கொடாதே. பள்ளிக்கூடச் சட்டங்களைக் கவனித்து நட. ஒருபோதும் இன்னொருவன் எழுதினதைப்பார்த்து எழுதாதே. பள்ளிக்கூடத்திலிருக்கும் நாற்காலிகள் மேசைகள் முதலியவற்றைச் சேதப்படுத்தாதே. எந்தப் புத்தகங்களிலும் கிறுக்காதே. நீ தப்பிதம் செய்திருக்க உபாத்தியாயர் இன்னொருவன் அதைச் செய்தான் என்று நினைத்து அவனைத் தண்டிக்கத்தக்கதாய் உன் தப்பிதத்தை மறையாதே. அப்படிச்செய்வது கோழைத்தனமாம்.

4. விளையாட்டில் அனுசரிக்கவேண்டிய மரியாதை.

விளையாட்டில் ஒருவனையும் ஏமாற்றாதே. வாயாடியும் உன்னிலும் சிறியவர்களைப் பயமுறுத்துகிறவனுமாயிராதே. சண்டைக்குணமுள்ளவனாயல்ல சந்தோஷகுணமுள்ளவனாயிரு. ஒருவனையும் கேலி பண்ணாதே. உன் தோழரை வசைப்பேர் சொல்லி அழையாதே.

5. வீதியில் அனுசரிக்கவேண்டிய மரியாதை.

உன் குருமாரையும் உபாத்திமாரையும் இன்னும் பெரியோர்களையும் தெருவீதியிற் சந்திக்கும்போதெல்லாம் அவர்களுக்கு வணக்கஞ் செய். ஜனங்களை நெருக்கித் தள்ளி இடித்துக்கொண்டு போகாதே.

சுவர்களையும் தெருக்கதவுகளையும் கிறுக்கி அவைகளை அலங்கோலப்படுத்தாதே. தெருவீதிகளிலுள்ள கடைவாசல்களுக்குமுன்



நின்று ஊசாட்டம் போட்டுக் கடைக்காரருக்குத் தொந்தரவு கொடாதே. ஜனங்கள், மிருகங்கள், பட்சிகள், வண்டிகள் முதலியவற்றின் மேல் கல்லெறியாதே. வேறெந்த உபாயங்களினாலும் பிறர்சொத்துக்களைச் சேதப்படுத்தாதே. முதியோரையும் முடவரையும் பரிகாசம் பண்ணாதே. அறிமுக மற்றவர்களிடத்திலும் அன்னியரிடத்திலும் விசேஷித்த மரியாதை காட்டு.

6. எவ்விடத்திலும் அனுசரிக்கவேண்டிய மரியாதை.

'தயவுசெய்து' என்று சொல்லவும் நன்றிகாட்டவும் ஒருபோதும் மறவாதே. மற்றவர்கள் காரியங்களில் அநாவசியமாய்த் தலையிடாமல் உன் காரியத்தை நீயே பார். உத்தரவின்றி ஒருவர் வீட்டிலும் உட்பிரவேசியாதே. மிருகஜீவன்களிடத்தும் பட்சிகளிடத்தும் அனுதாபமும் பட்சமும் காட்டு. பெரியோர் சிறியோர், தனவந்தர் தரித்திரர், யாராயிருந்தாலும் சரி, ஒருவரோடும் முரண்டுபண்ணாதே. முதியோர்களுக்கும் முகப்பழக்கமற்றவர்களுக்கும் நீ செய்யவேண்டிய கடமைகளை அறிந்து உன்னால் இயன்றமட்டும் அவர்களுக்கு உதவி செய். யாரும் பேசிக்கொண்டிருக்கையில் இடையிற் பேசாதே. ஒருக்காலும் நேரம் தப்பாதே.

## Biblical Notes

### வேதாகம விசேஷங்கள் சில

### கிரீடம், முடி Crown.

I. பழைய ஏற்பாட்டில்: கிரீடம், முடி இவைகள் மூல பாஷையில் மூன்று பதங்களைக் கொண்டிருக்கிறது.

1. ஆசாரியர்கள் இராஜாக்கள் தாங்கள் அபிஷேகம் பெற்றதைக் குறிக்கும்படி முதலில் தலையைச்சுற்றி நாடாக் கட்டுவார்கள். பிரதான ஆசாரியன் நாடாவினால் நெற்றியில் பொற்றகடு கட்டுவான். 2 சாமு. 1. 10; 2 இரா. 11. 12; யாத். 29. 6; 39. 30.

2. அலங்காரத்துக்காகப் பெர்சியா இராஜாக்கள் தலைப்பாகை தரிப்பார்கள். எஸ்தர், 1. 11; 2. 17.

3. யூத இராஜாக்களும் அன்னிய இராஜாக்களும் விருந்தாளிகளும் மாலை அல்லது முடி சூடுவார்கள். 2 சாமு. 12. 30; 1 நாளா. 20. 2; ஏசா. 28. 1. 'கிரீடம்' பலவசனங்களில் உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது. நீதி. 12. 4; ஏசா. 28. 5.

II. புதிய ஏற்பாட்டில்: கிரேக்க பாஷையில் வித்தியாசமான கிரீடத்தைக்குறிக்கும் இரண்டு பதங்கள் தமிழில் பொதுவாய்க் 'கிரீடம்' என மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

1. *Stephanos.* ஸ்தெபனோஸ். இது பொன்னினால் செய்தது மல்ல, இராஜத்துவத்துக்காகப் போடப்படுகிறதுமல்ல. இது கிரேக்கர்களும் ரோமர்களும் பந்தயங்களிலும் யுத்தங்களிலும் வெற்றியடைந்தவர்களுக்கு ஜெய சின்னமாய்ப்போடும் இலைகளினால் செய்த மாலை. 1 கொரி. 9. 25; 2 தீமோ. 2. 5; 4. 8. 'ஜீவகிரீடம்' யாக். 1. 12; வெளி. 2. 10. 'வாடாத கிரீடம்' 1 பேது. 5. 4. இப்பதம் இயேசுவின் தலைமேல் போட்ட முள்முடி அல்லது முட்கிரீடத்தைக் குறிக்கிறது. மத். 27. 29. இது அடிக்கடி உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது. பிலி. 4. 1; 1 தெச. 2. 19; வெளி. 4. 4; 9. 7; 14. 14.

2. *Diadema.* டியாதேமா. இராஜத்துவத்தைக் குறிக்கும் இக்கிரீடம் மூன்று இடங்களில் மாத்திரம் சொல்லியிருக்கிறது. வெளி. 12. 3; 13. 1; 19. 12.

### வெள்ளைக்கல்

ரோமர்கள் முற்காலத்தில் விளையாடும் பலவிதமான பந்தயங்களில் யுத்த பந்தயம் முக்கியமானது. அரங்கச்சாலையில் இலட்சக்கணக்கான ஜனங்கள் கூடிவந்திருக்கும்போது அவர்களுக்கு முன்பாக ஈட்டி, பட்டயம் முதலான யுத்தாயுதங்களோடு போர்செய்வதற்குத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கட்சி கட்சியாக வந்து நிற்பார்கள். ஒரு கட்சி இன்னொரு கட்சியோடு யுத்தம்செய்யும்போது எந்தக் கட்சி ஜெயம் கொள்ளுமோ அந்தக் கட்சியோடு ஜெயம்கொண்ட இன்னொரு கட்சி யுத்தம்செய்யும். இப்படியே யுத்தம்செய்து கடைசியாக எவன் ஜெயவீரனாய்க் காணப்படுவானோ அவனுக்கு யானைத்தந்தம் இழைத்த பலகை ஒன்றில் 'சிறப்போங்கியவன்' என்று எழுதி அதை அவனுக்கு ஜெயசின்னமாய்க் கொடுப்பார்கள். அதற்குப் பிற்பாடு இவனை யாவரும் 'சிறப்போங்கியவன்' என்ற பட்டப்பேரால் அழைப்பார்கள். 'வெள்ளைக்கல்' என்று சொல்லப்படும் இந்தத் தந்தாபரணத்தைப்பெற்ற இவன் அத்தேசத்துப் பெரியோர்கள் பிரஜைகளுக்கு இடும் எந்த விருந்திலும் பந்தியிருக்க உத்தரவுண்டு. இந்த ஜெயசின்னத்தை உதாரணமாகக்கொண்டு பரி. யோவான் 'வெண்மையான குறிக்கல்லையும் புதிய நாமத்தையும் கொடுப்பேன்' என்று எழுதியிருக்கிறான். வெளி. 2. 17.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

REGISTERED 13 DEC 1910 MADRAS

No. 55 டிசெம்பர் 1910

# வேதியர் விளக்கு

## The Good Tree — Notes of an Address

### நல்விருக்ஷம்

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங். 1. 3.

இச்சங்கீதம் நாம் இம்மையிலே நடக்கவேண்டிய நல்லொழுக்கத்தையும் அதின் பலனையும் காட்டுகிறது. இதின் முதற்பாகம் நல்லவனுடைய ஜீவியத்தைப்பற்றிக் கூறுகிறது. அவன் நல்விருக்ஷத்தைப் போல் இருக்கிறான்.

இந்தச் சங்கீதத்தினால் நாம் அறியவேண்டியவைகள்:

I. நல்ல விருக்ஷம் அழகும் பலனுமுடையது.

1. பகலில் சூரியனின் ஒளியினாலும் வெயிலினாலும் இன்பமும்
இரவில் ஆறுதலும் அதற்குண்டு. காற்று வீசும்போது அது அக
மகிழ்ந்து பாட்டுப்பாடுவதுபோ லிருக்கிறது. அது ஒருநாளிருந்து
மற்றநாள் இல்லாமற்போகிற மரமல்ல. வருஷக்கணக்காய் நிற்கும்.
சங்கீதக்காரன் இவ்விடத்தில் சொல்லும் மரம் பேரீந்துமரம். பேரீந்து
எங்கே நிற்குமோ அங்கே நீரூற்றுமுண்டு. அது முதல்தரமான
விருக்ஷமாய் வளரவேண்டுமானால் நீர்வாய்க்கால்களிலே நடுவார்கள்.
2. ஒருவன் அது நன்றாய் உண்டாகத்தக்க இடம் பார்த்து அதை
வைப்பான். அந்த இடத்தில் அது நல்ல பலனைக் கொடுக்கும். அப்
படியே கடவுள் நாம் உத்தம பலனைக் கொடுக்கக்கூடிய இடம் இன்
னது என்று தீர்மானித்து அந்த இடத்திலே நம்மை வைத்திருக்கிறார்.
3. நாம் ஒரு சிறு வாய்க்காலின் ஓரத்திலல்ல கிருபையென்
னும் பேராற்றின் ஓரத்திலிருக்கிறோம். சங். 46. 4; வெளி. 22. 1.

II. ஆற்றோரத்தில் வளரும் விருக்ஷம் பலன் கொடாமல் நெடுங் காலம் சும்மாய் நிற்கிறதில்லை. தகுந்த காலத்தில் தகுந்த பலனைக் கொடுக்கும். இத்தேசத்தில் மலைநாடுகளில் 11 வருஷம் வளர்ந்து பல மடைந்து 12-ம் ஆண்டு பூத்துக் காய்க்கும் குறிஞ்சி மரத்தை நாம் பார்த்தால் அது எவ்வளவோ சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கும். அப்படியே ஒரு சுவிசேஷகன், வேதாகம ஸ்திரீ, உபாத்தி, தங்கள் பிள்ளைகளைப்பற்றிக் கவலையுற்றிருக்கும் பெற்றோர் தாங்கள் செய்யும் புத்தி போதனைகளுக்கேற்ற பலனை உடனே பெறாவிட்டாலும் தகுந்த காலத்தில் நிச்சயமாய்ப் பலன் கிடைக்கும் என்று பொறுமையாய் இருக்கவேண்டும்.

III. இந்த விருக்ஷம் வாடாத தன்மை உடையது.

ஆற்றங்கரையில் நிற்கும் பேரீச்சமரமானது எப்பொழுதும் பசுமை பொருந்தியதாய் இருக்கும். அப்படியே கிருபையென்னும் ஆற்றோரத்தில் வாழும் கிறிஸ்தவனின் ஜீவியம் பார்த்தவர்களுக்கு அழகாயும் விரும்பத்தக்கதாயும் இருக்கிறது. மரமானது பசுந்தளிர்களுள்ள முடி சூடியிருப்பதுபோல் கிருபையில் வளரும் கிறிஸ்தவனுடைய நல் வார்த்தை, நன்னடக்கையெல்லாம் அவனுக்கு அலங்கார பூஷணமாகிய முடியாய் இருக்கிறது.

IV. குறையாத வாழ்வு.

1. உத்தம கிறிஸ்தவனுக்குச் சிலகாலம் துன்பம் துக்கம் உண்டாகிறதுண்டு. அவனுக்குப் பெருமுத்தியோகம் இல்லாமலிருக்கலாம். இதினால் அவன் வாழ்வு சுகமற்றது என்று சொல்லக்கூடாது. மழை, பனி, காற்று மரத்துக்கு எப்படிச் செழிப்பை உண்டாக்குகிறதோ அப்படியே ஒருவனுக்கு வரும் துன்பம் துக்கமெல்லாம் அவனைப் பாக்கியஸ்தனாக்குகிற நல்லேதுகாரணங்களேயொழிய வேறொன்று அல்ல.

2. மனுஷனுக்கும் மரத்துக்கும் வித்தியாசம் உண்டு. மனுஷன் சுறுசுறுப்புள்ளவனாய்க் கஷ்டத்தோடு வேண்டிய முயற்சிசெய்து பலனைக் கொடுக்கவேண்டும். அவன் தான் செய்யப்போகிற காரியம் அல்ல, நம்புகிற காரியம் அல்ல, உண்மையோடும் முழுச்சித்தத்தோடும் கடவுளுக்கென்று செய்யுங் காரியமே நற்பலன் கொடுக்கும்.



# A Bible Reading — Exodus 34

**By**

**The Rev. T. Walker, M.A.**

## யாத்திராகமம் 34-ம் அதிகாரம்

### இரண்டாம் பாகம்

### தேவகிருபையை மறுபடியும் பெற்றுக்கொள்ளுதல்

கவனிப்பு.—இவ்வதிகாரத்தில், மோசே மத்தியஸ்தனாக நின்று தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவாக வந்த பிரிவினையைத் தன் ஊக்கமான வேண்டுதலினாலே நீக்கிவிடுகிறான்.

III. பலவித கட்டளைகள். வாக். 10–28. தேவன் நம்முடைய மீறுதலை மன்னித்தாலும், இனிமேலாவது தமது சித்தத்தின்படி நடக்க நமக்குக் கட்டளை கொடுக்கிறார்.

கவனிப்பு.—இஸ்ரவேலர் வார்ப்பிக்கப்பட்ட ஒரு சுரூபத்தை உண்டுபண்ணி விக்கிரகாராதனையில் அகப்பட்டுத் தவறிப்போயிருந்தபடியினாலும் கள்ள ஆராதனை, கள்ளப் பண்டிகை, கள்ளக் காணிக்கைகளை ஏற்படுத்தி அக்கிரமஞ் செய்திருந்தபடியினாலும், கர்த்தர் இங்கே அந்தத் தீட்டுகளையெல்லாம் கண்டித்து விலக்கி, தமது பரிசுத்த ஆராதனை, பண்டிகை, காணிக்கைகளை மறுபடியும் ஸ்தாபிக்கிறார் என்று நாம் காணலாம். இந்தப் பாகத்தில் வருகிற கட்டளைகள் (கொஞ்சங்குறைய) எல்லாம் அதி. 23. 13-33-லே முந்தி வந்தவைகள் என்றாலும் இடையில் நேரிட்ட தவறுதலினாலே அவைகளை இரண்டாந் தரமும் வற்புறுத்திக் காட்டவேண்டியிருந்தது.

1. உடன்படிக்கை. வாக். 10, 27, 28. 'இதோ, நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்.' இவ்விதமாய்,—ஜனங்கள் மீறியிருந்த உடன்படிக்கையை அவர் தயவாகப் புதுப்பிக்கிறார். அதினுடைய நிச்சயத்தை உணர்த்தும்படி எழுதி வைக்கவும் சொல்லுகிறார் (வாக். 27).

 a. 'உன்னோடேகூட இருப்பேன்' என்பதில் தமது சமுகத்தையும்,

*b.* ‘அதிசயங்களைச் செய்வேன்’ என்பதில் தமது சகாயத்தையும்,

*c.* சத்துருக்களைத் ‘துரத்திவிடுகிறேன்’ என்பதில் பூரண ஜெயத்தையும் அனுக்கிரகிப்பதாக வாக்கருளுகிறார்.

இவ்விதமாய்,—மீறுதலை மன்னிக்கிற கருணாகராகிய தேவன் அதோடுகூட வேண்டிய ஒத்தாசை, வல்லமை முதலான நன்மைகளை எல்லாம் அருளிச் செய்கிறார் (எசா. 44. 22-26; எசே. 36. 25-38; எபி. 8. 8-12).

2. நிபந்தனை. வாக். 12-26.

*a.* உலகத்தாரோடு கலவாதவர்களா யிருக்கவேண்டும். வாக். 12, 15, 16. தீயோருடைய சகவாசத்தினால் கன்றுக்குட்டி வணக்கம் பாளயத்தில் நுழைந்திருந்ததே (யாத். 12. 38). இனிமேல் எச்சரிக்கையாயிருப்பது அவசியம்.

அவ்வாறு,—நாமும் உலக மக்களோடு ஐக்கியப்படாமல் பிரிந்துபோய்ப் பரிசுத்தமாய் நடப்போமாக (2 கொரி. 6. 17, 18; எபே. 4. 17; வெளி. 18. 4).

*b.* கர்த்தரையே சேவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். வாக். 13, 14, 17. இதின் சம்பந்தமாக, — அவர்கள் தவறிப்போன விஷயம் 17-ம் வசனத்தில் உணர்த்தப்பட்டதைக் காண்க.

அவ்வாறு,—நாமும் விக்கிரகாராதனை என்னப்பட்ட பொருளாசை முதலான கண்ணிகளுக்கு விலகி நம்முடைய இரட்சகராகிய தேவனை முழு மனதோடே பற்றிக்கொள்ளக்கடவோம் (கொலோ. 8. 5; 1 யோவா. 5. 20, 21).

*c.* பாவத்தை முற்றிலும் அகற்றிவிட்டவர்களாய் நடக்கவேண்டும். வாக். 18, 25. புளித்தமா ஆகாது.



அவ்வாறு,—நாமும் பாவத்தின்மேல் வெறுப்பும் பரிசுத்தத்தின்மேல் விருப்பும் கொண்டவர்களாய் உண்மையோடு நடப்போமாக (1 கொரி. 5. 7, 8).

*d.* மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாய் நடக்கவேண்டும். வாக். 19, 20. மீட்கப்பட்ட யாவும் கர்த்தருக்குச் சொந்தம்.

அவ்வாறு,—திரு ரத்தத்தினாலே மீட்கப்பட்ட நாமும் இரட்சகருக்குச் சொந்தமான ஜனங்களாய் விளங்கக்கடவோம் (1 கொரி. 6. 19, 20; 1 பேது. 1. 17-19).

*e.* இளைப்பாறுதலைக் கைக்கொள்ளுகிறவர்களாய் நடக்கவேண்டும். வாக். 21.

அவ்வாறு,—நாமும் ஆத்தும சமாதானமும் இளைப்பாறுதலும் அடைந்து வீண்கவலை யற்றவர்களாய் ஜீவிப்போமாக (மத். 11. 29, 30; எபி. 4. 3).

*f.* ஸ்தோத்திரஞ் செலுத்துகிறவர்களாய் நடக்கவேண்டும். வாக். 22, 26. முதற்பலனைத் தவறாமல் செலுத்தவேண்டும்.

அவ்வாறு,—நாமும் நன்றியறிந்த இருதயத்தோடு ஸ்தோத்திரஞ் செலுத்த ஜாக்கிரதையாய் இருப்போமாக (கொலோ. 3. 15-17).

*g.* திவ்விய சந்நிதானத்தை நாடுகிறவர்களாய் நடக்கவேண்டும். வாக். 23, 24. எல்லாரும் கர்த்தருக்கு முன்பாக வந்து ஆராதனை செய்யவேண்டும்.

அவ்வாறு,—நாமும் அவருடைய முகத்தை நாடி, அடிக்கடி அங்கே வந்து ஜெபத்திலும் ஸ்தோத்திரத்திலும் தரித்திருக்கக்கடவோம் (கொலோ. 4. 2; சங். 73. 28).

# The Desire for the True Path

## மெய்மார்க்க விருப்பம்

சத்திய மார்க்கத்தின்பேரில் தாகம் உள்ள வித்துவான் ஒருவன் பல நூல்களை வாசித்துப் பல மார்க்கங்களையும் ஆராய்ந்து அறிய வேண்டும் என்று தீர்மானித்துத் தன் வீடு, வாசல், இனம், ஜனம் எல்லாம் விட்டுப் புறப்பட்டுபோனால் அவன் பல இடங்களிலும் கவனிக்க வேண்டிய அநேக விஷயங்களைப் பார்ப்பான். அவன் ஆபிரிக்கா கண்டத்துக்குப்போய் அங்கே சிலகாலம் தங்கி மார்க்க ஆராய்ச்சி செய்தால் அங்குள்ளவர்கள் ஒரு கட்டையை அல்லது கல்லைக் குடிசையில் வைத்து அவைகள் அற்புதமான காரியங்களை நடத்தும் வல்லமையுடையவைகள் என்று எண்ணி அவைகளைப் பூசித்து வருகிறதைக் காண்பான். இந்த மந்திரவித்தையான வணக்கத்தை அந்த வித்துவான் அனுசரிப்பானா? அது அவனுக்கு வீணாய்த் தோன்றுமாகையால் அதை வெறுப்பான். அப்படி அவன் செய்வது சரியல்லவா?

மறுபடியும் அந்த வித்துவான் அங்கிருந்து புறப்பட்டு வேறொரு தேசத்தில் காட்டுவழியாய்ப் போகும்போது, காட்டுஜாதிகள் வசிக்கும் இடத்தைச் சந்தித்து அங்கே அந்த வனவாசிகள் தங்கள் சொப்பனத்தில் காணப்படும் ஆவிகளினால் சிலநேரம் சந்தோஷத்தையும் சிலநேரம் துக்கத்தையும் அடைகிறதையும், அவர்கள் அங்கே நடமாடுகிற காடிகள் நீர்நாய்கள் அந்த ஆவிகளின் அவதாரங்கள் என்று நினைத்து அவைகளை வணங்குகிறதையும் பார்ப்பான். இவர்களுடைய பேதைமையை அந்த வித்துவான் அனுசரிப்பானா? இது குழந்தைகள் மண் சோறு கறி செய்து விளையாடும் விளையாட்டைப்போல் இருக்கிறது என்று எண்ணுவான் அல்லவா?

பிறகு அவன் இந்தியா தேசத்துக்குப் புறப்பட்டு அங்கே முக்கிய தேவஸ்தலங்கள் என்று சொல்லப்படும் மதுரை, கும்பகோணம், திருப்பதி, திருச்சினாப்பள்ளி முதலான இடங்களுக்குப்போனால், அவன் முதல் திருச்சினாப்பள்ளியிலிறங்கி அங்கே சிலநாள் தங்கி அவ்விடத்தில் வருஷாவருஷம் மகா உற்சவம் என்று சொல்லப்படும் குழுமாயி உற்சவம் ஒன்று நடக்கிறதைப் பார்த்தால், ஜனங்கள் அதில் ஆயிரக் கணக்கான ஆட்டுக்குட்டிகளைக் கொண்டுவந்து குழுமாயி அம்மனுக்குப் பலியிடுகிறதையும் பூசாரி அவைகளின் இரத்தம் குடிக்கிறதையும் ஜனங்களின் சன்னத விளையாட்டுகளையும் கண்டவுடனே அது நல்ல வணக்கம் என்று சொல்லுவானா?



இப்படியே அந்த வித்துவான் பல தேவஸ்தலங்களுக்கும் போய்ப் பார்க்கும்போது எங்கும் ஜனங்கள் பல தேவர் தேவிகளையும் தேவதைகளையும் வணங்குகிறதையும், அவைகளைப்பற்றிய எத்தனையோ கதைகளையும் கண்டும் கேட்டும் அவன் மனம் சலித்துப்போய் 'ஐயோ, என் ஆறுதலுக்கான மார்க்கம் எனக்குக் கிடைக்கவில்லையே; எங்கே போவேன்? என் கதி எப்படித்தான் முடியுமோ?" என்று புலம்பிக்கொண்டு இலங்காபுரிப் பக்கமாய்ப் போனால், அங்கே புத்தசமயத்தார் கடவுள் ஓர் பெரிய சமுத்திரம் என்றும், நமது ஆத்துமா அதில் சிலகாலம் தோன்றி நீரிலே யழிந்துபோகும் நீர்க்குமிழியைப்போலிருக்கிறது என்றும் சொல்லும் மார்க்கத்தை அறிவான். சுருக்கத்தில் சொன்னால் அந்த மார்க்கம் அவனுக்கு ஆறுதல் கொடுக்கிறதேயில்லை.

இப்படி யிருக்கும்போது மகமதிய வணக்கம் ஒன்று இருக்கிறதே, அதை ஆராய்ந்து பார்ப்போம் என்று எண்ணி அந்த மார்க்க புத்தகத்தை அவன் வாசித்து வருகையில் அது மோக்ஷத்திலுள்ளவர்களுக்கு சிற்றின்பங்களுக்கு இடங்கொடுக்கிறதாகவும், ஒருவன் அம்மார்க்கத்துக்காகச் செய்யும் போரில் மடிந்தால் அவன் சுவர்க்கம் சேர்வதாகவும், அது போதிக்கிறதை கண்டு அதிலும் சமாதானமில்லை என்று தீர்மானிப்பான்.

இப்படி அவன் மனம் நொந்தவனாயும் ஆறுதல் அற்றவனாயும் இருக்கும்போது, ஆதிதொடுத்து ஒரே கடவுள் என்று சொல்லும் யூதமார்க்கத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து, அது மறுமையைப்பற்றிய நம்பிக்கையில் குறைவாயும் சந்தேகத்திற்கிடமாயும், ஒரு பயனும் அற்ற கிரியாசாரம் உள்ளதாயும் இருக்கிறது எனக் காண்பான். அப்போது அந்த வித்துவான் இந்த மார்க்கம் கடவுளுடைய நீதியைக்குறித்துச் சொல்லுகிறது சரி, அதிலும் மேன்மையான அவருடைய இரக்கத்தைச் சொல்லும் மார்க்கம் ஒன்று இல்லையா என்று யோசித்து தன்னை நேசித்து, தனக்குச் செவி சாய்த்து தனக்காகக் கவலையெடுத்து, தனக்குப் பிதாவாயிருந்து போதித்து உதவிசெய்யக் கூடிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும், நித்திய ஜீவன் உண்டு என்பதையும் சொல்லுகிற மார்க்கத்தை விரும்புவான்.

அந்த வித்துவானுக்குக் கடவுளுடைய நீதியைக் காட்டும் மார்க்கம் போதுமானதல்ல. மட்டுக்கடங்காததும் முடிவில்லாததுமான அவருடைய அன்பின் மார்க்கத்தின்பேரில் அவனுக்கு விருப்பம். ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கவேண்டிய பாத்தியங்களைமாத்திரமல்ல அவன் செய்யவேண்டிய ஊழியத்தின் கடமையைப்பற்றியும், பிறருக்குத் தன்னை யொப்புக்கொடுக்கிற ஊழியத்தின் மேன்மையைப்பற்றியும், அன்பின் ஜீவியத்தைப்பற்றியும் சொல்லுகிற மார்க்

கத்தை அவன் தேடுகிருன். தன்னுடைய தீமையை வேரோடே பிடுங்கி தன்னுள்ளத்தில் புதிய குணத்தை யுண்டாக்குகிறதாயும், தனக்கு நித்திய பேரின்ப வாழ்வை யுண்டாக்குகிறதாயும் இருக்கிற மார்க்கமேயொழிய வேருெரு மார்க்கமும் தனக்குத் திருப்தியைக் கொடுக்கமாட்டாது என்று தீர்மானிப்பான்.

அந்த வித்துவானைப்போல இவ்வுலகத்தார் யாவரும் இந்த நோக்கத்தையுடையவர்களாய் இருப்பார்கள். அவர்கள், சங்கீதம் பாடினவனைப்போல 'என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?' என்று மன்ருடுவார்கள். அவ்வித மார்க்கம் இல்லையா? உண்டு. கிறிஸ்தவ மார்க்கமே அந்த மார்க்கம். மனிதனுடைய ஆத்தும தாகத்தையும் விசாரத்தையும் பூரணமாய்த் தீர்க்கக்கூடியது அந்த மார்க்கமே. கடவுள் நமது பரமபிதாவாய் இருக்கிருர் என்றும், மிகவும் மேன்மையும் தன்னயமற்றதுமான நீதிநெறிகளைத் துலாம்பரமாய்க் காட்டுகிறது என்றும், ஜீவியத்திலும் போதனையிலும், ஆம், நமக்காக மரித்த மரணத்திலும் கடவுளின் பரிதாபத்தையும் அளவற்ற அன்பையும் விளம்பின இரட்சாபெருமானுகிய கிறிஸ்து எல்லாருக்கும் உத்தம முன்மாதிரியாய் இருக்கிருர் என்றும் கிறிஸ்துமார்க்கமே கூறுகிறது. அவரை நம்புகிறவர்ளுக்கு அது உத்தம தைரியத்தைக் கொடுக்கிறது. இதினல் யாவரும் தங்களிலிருந்து தீமையை நீக்கவும், நற்குணத்தை உண்டாக்கவும், சசிந்துபோன ஆத்துமாவில் நித்திய பாக்கியத்தை அளிக்கவும் கடவுள் அளவற்ற கிருபையுள்ளவர் என்பதை அறிவார்கள். நாம் இத்தேசத்திலும் மற்றத் தேசங்களிலும் உள்ள மார்க்கங்களை எவ்வளவு ஆராய்ந்து பார்க்கிருேமோ அவ்வளவுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் மகத்துவத்தை அறிவோம்.

---

# The First Epistle to the Corinthians

## கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம்

### 1. காரணம்.

கி. பி. 52 ளு பவுல் கொரிந்து பட்டணத்தில் கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தான். அவன் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுப் போய் மற்ற ஊர்களுக்குப் பிரயாணம் பண்ணுகையில் அச்சபைக்கு அடிக்கடி சமாச்சாரங்கள் நிருபங்கள் மூலமாய் அறிவித்துக்கொண்டிருந்தான் என்று நாம் நினைக்கவேண்டும்.



உதாரணமாக: விபசாரத்தைக் கண்டித்து ஒரு நிருபம் எழுதினுன்.
1 கொரி. 5. 9.
இப்போது நாம் யோசிக்கும் நிருபம் கொரிந்தியருக்கு முதல்
எழுதப்பட்டதால் புதிய ஏற்பாட்டில் இதற்குக் கொரிந்தியருக்கு எழு
தின முதலாம் நிருபம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1 கொரி. 7. 1.
மேலும் சபையார் அல்லாமலும் அப்பட்டணத்தைச் சந்தித்த
பிரயாணிகளும் அங்கே நடந்த சங்கதிகளைப் பவுலுக்கு அறிவித்திருப்
பார்கள். இவ்விதமாய்க் குலோவேயாளின் வீட்டார்களும் பல சமாச்
சாரங்களையும்பற்றி அவனுக்குச் சொல்லியிருப்பார்கள். 1 கொரி. 1. 11.

### 2. கொரிந்து சபையின் நிலைமை.

அச்சபையில் யூதர்களிருந்தாலும் அவர்கள் பெரும்பாலும் கிரேக்க
சபையிலிருந்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. ரோ. 16. 29;
1 கொரி. 6. 9; 7. 18; 9. 20; 12. 2-13. இதினிமித்தம் சபையில்
கற்புநெறி சன்மார்க்கம் இவைகளைப்பற்றி அவர்கள் அவ்வளவு
கவலையெடுத்துக்கொள்ளாததினுல் துன்மார்க்கமும் தீமையும் அச்
சபையில் உண்டானது என்று அறிந்து பவுல் அவர்களுக்குச் சன்மார்க்
கத்தைப்பற்றித் தெளிவாய்த் தெரிவித்தான். 1 கொரி. 1. 17.

### 3. கட்சிக்காரர்.

கிரேக்கர் எப்பொழுதும் கட்சிக்காரர் என்பது உலகப் பிரசித்தம்.
ஆகையால் அச்சபையிலுள்ளவர்கள் நாலு கட்சிகளாய்ப் பிரிந்தார்கள்.
அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் தத்துவஞானம் முக்கியமானது
என்றும், கேபாவைச் சேர்ந்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணம்
முக்கியமானது என்றும், கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் பவுலின் அதி
காரத்தை நீங்கினவர்களாயிருந்தார்கள் என்றும், பவுலைச் சேர்ந்தவர்
கள் பவுலின் அதிகாரத்தை நன்குமதித்து மற்றவர்களை விரோதித்
தார்கள் என்றும் தோன்றுகிறது. பவுல் இதெல்லாவற்றையும் அறிந்து
இதனுல் உண்டாகும் மோசத்தை அவர்களுக்குத் தெரிவித்துச் சபை
யானது எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அதிற் பிரிவினையிருந்தால்
அது விருத்தியடைவது கூடாத காரியம் என்று காட்டுகிருன்.
1 கொரி. 1. 12.

### 4. முறைகேடுகள்.

கொரிந்து சபையில் கட்சிகளைத்தவிர முறைகேடான செய்கையு
மிருந்தது. ஒருவன் தன் தகப்பனின் மனைவியை வைத்திருந்தும்
அவனை அச்சபையிலிருந்து விலக்காததினுல் சன்மார்க்க நெறியைப்
பற்றி அச்சபையார் அதிகமாய்க் கவனிக்கவில்லையென்று தோன்று

கிறது. இந்த விதமான முறைகேடு யூதருக்கு அருவருப்பான செய்கை. ஆமோஸ் 2. 7. பவுல் இப்படி நடந்தவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்வதினால் அவன் இவனைச் சபையிலிருந்து நீக்கிச் சன்மார்க்கத்தின் மேன்மையை அவர்களுக்குக் காட்டுகிறான். 1 கொரி. 5 அதி. என்று நாம் நினைக்கவேண்டும்.

5. கோரிந்து சபையாரின் வழக்கு.

அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாய் ரோமை நியாயாதிபதிகளுக்கு முன்பாகப் பிராது செய்ததினால் அவர்கள் கிறிஸ்தவ சபைக்கிருக்கவேண்டிய மேன்மையைப் புறமதஸ்தர்களுக்கு முன்பாகக் குறைக்கிறார்கள் என்றும், அப்படியிராதபடிச் சபையில் உத்தமரும் அறிவாளிகளுமாயிருக்கிறவர்கள் அவர்களுக்குள்ள பிராதுகளை விசாரித்துத் தீர்க்கிறது நல்லது என்றும் பரி. பவுல் போதிக்கிறான். 1 கொரி. 6. 1-11.

6. விவாகத்துக்குரியவை.

இதற்கு அடுத்த பாகத்தில் (1 கொரி. 6. 12-7. 40), அப்போஸ்தலன் விவாக நிலைமைக்குரிய ஒழுங்கைப்பற்றி விபரமாய்ச் சொல்லிக் கற்புக்கு விரோதமான எந்தவித துன்மார்க்கமும் செய்யப்படாது என்றும், விவாகம் செய்யாமலிருப்பது நல்லதானாலும் துராசையினால் இழுக்கப்படாதபடி விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்றும், கிறிஸ்தவனாய் இருக்கிறவன் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வராத தன் மனைவியைத் தள்ளிவிடவேண்டியதில்லை என்றும், அப்படியே கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்த மனைவியும் கிறிஸ்தவனாகாத தன் புருஷனைத் தள்ளிவிடவேண்டியதில்லை என்றும், கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வராத புருஷனாவது மனைவியாவது பிரிந்துபோகப் பிரியப்பட்டால் போகலாம் என்றும், கன்னிகை விவாகம் செய்வது நியாயந்தான் என்றும், கால கஷ்டத்தினால் குடும்பத்தில் துன்பம் வருவதுண்டு என்றும், கர்த்தருக்குட்பட்ட எவனும் விவாகம் செய்துகொள்ளப் பாக்கியம் பெற்றிருக்கிறான் என்றும், அப்போஸ்தலன் விவாகத்தைக்குறித்து ஆலோசனை செய்கிறவர்களுக்குச் சொல்லுகிறான்.

7. (a) பிற்பாடு விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் கிறிஸ்தவர்கள் சாப்பிடுகிறதினால் அறிவிற் பூரணமற்ற சகோதரனுக்கு அது இடறலாய் இருக்குமாகையால் அதைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறான். 1 கொரி. 8. 1-13.

(b) தேவாலயங்களில் கிரேக்கர்களில் அநேகர் இருக்கும் பந்தியில் கிறிஸ்தவர்களிலும் சிலர் பந்தியிருந்தார்கள். இப்படிப் பந்தி



யிருக்கிறவர்கள் விக்கிரகங்களை வணங்கிச் சாப்பிடுவார்கள் என்று அறிவீனமுள்ளவர்கள் சந்தேகிப்பார்களாகையால் அப்படிப்பட்ட விருந்துகளுக்குக் கிறிஸ்தவர்கள் போகப்படாது என்று பவுல் தீர்மானித்தான். 1 கொரி. 8. 10-13; 10. 14; 11. 1.

(c) கொரிந்து சபையாருக்கு விசேஷமாய்ச் சொல்லுகிற இந்தக் காரியங்கள் கிறிஸ்தவர்கள் எல்லாரும் எப்பொழுதும் மற்றவர்களுக்கு இடறலாய் இராதபடி கைக்கொள்ளவேண்டும் என்பதாகச் சொல்லுகிறான். 1 கொரி. 9. 1; 10. 13.

8. ஆராதனை.

(a) ஸ்திரீகள் அக்காலத்து ஆசாரத்தின்படி தேவாலயத்தில் முக்காடு இட்டுக்கொள்வது நல்லது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். 1 கொரி. 11. 2-16.

(b) நற்கருணை.

அன்பு விருந்து கர்த்தருடைய இராப்போஜனம் இவைகளின் ஸ்தாபனத்தைக்குறித்து விபரமாய்ச் சொல்லி அவர்களிற் சிலர் இவைகளைத் தப்பிதமாய் நடத்திவந்ததைக் கண்டித்து புத்திமதிகள் கூறுகிறான். 1 கொரி. 11. 17-34.

(c) வரங்கள்.

கடவுளைப் பற்றினவர்களுக்கு அவர் அருளும் பரிசுத்தாவியின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளும் அன்னிய பாஷைகளைப் பேசும் வரங்கள் சந்தோஷத்துக்காகவல்ல, கிறிஸ்தவ மார்க்க திறமை முதலிய வரங்கள் விருத்திக் கேதுவானவைகள் என்று சொல்லுகிறான். பெண்கள் சபையில் மௌனமாய் இருப்பது நல்லது என்று சொல்லுகிறான். 1 கொரி. 12. 1-14. 40.

இந்தப் பாகத்தில் பரி. பவுல் அன்பைப்பற்றிச் சொல்லிய பாட்டு விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது. 13 அதி.

9. சரீர உயிர்த்தெழுதல்.

கொரிந்தியர் சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிச் சந்தேகப்பட்டிருந்ததினால் பவுல் அதைக்குறித்து விபரமாய்ச் சொல்லி இயேசுவின் உயிர்த்தெழுதலை அதற்கு அத்தாட்சியாகக் காட்டுகிறான்.

கடைசியாக யூதேயாவிலுள்ள ஏழைகளுக்குக் காணிக்கை சேர்ப்பதைப்பற்றி ஏற்பாடு பண்ணிப் பல புத்திபோதனைகள் செய்து முடிக்கிறான்.

10. காலம், உண்மை.

கி. பி. 95-ல் கிலேமேந்து முதலாய் ஆதிபிதாக்கள் அநேகர் கொரிந்தியருக்குப் பவுல் எழுதின நிருபங்களைப்பற்றிச் சொல்லுகிறார்கள். இதற்கும் அப்போஸ்தலர் நடபடிகளுக்குமுள்ள சம்பந்தங்கள் பல. கொரிந்தியர் இரண்டு நிருபங்களையும், ரோமர், கலாத்தியர் இவர்களுக்கெழுதிய நிருபங்களையும் பரி. பவுல் எழுதினான் என்பதே நிச்சயம். கி. பி. 53-ல் பரி. பவுல் எருசலேமுக்கு நாலாம் தடவை போனான். அதற்குபிறகு அவன் மூன்றாம் பிரயாணத்தில் எபேசு பட்டணத்திற்கு வந்து (அப். 18. 23) அங்கே 2¼-வரு தங்கினான். அப்போது 57-வரு முதலில் கொரிந்தியருக்கு இந்த முதலாம் நிருபத்தை எழுதினான்.

# The Son of Man

## மனுஷ குமாரன் என்பதைக்குறித்து மூன்று வேத ஆராய்ச்சி பாடங்கள்

பல்லாவரத்தில் Y. M. C. A. மாணவர் கூட்டத்தில்
கனம். L. P. லார்சன் (L. P. Larsen) அவர்கள் செய்த
வேதவியாக்கியான போதனையின் சுருக்கம்

### முதல் பாடம்

கிறிஸ்துவானவர் தம்மை மனுஷ குமாரன் என்று அழைத்ததில் அவர் கருத்து என்ன?

1. புதிய ஏற்பாட்டில் இந்த நாமம் கிறிஸ்துவானவருக்கு ஏறக்குறைய 80 தடவை வழங்கப்படுகிறது. இதைத்தான் கிறிஸ்துவானவர் தமக்குப் பிரியமான நாமமாக பெரும்பாலும் வழங்குகிறார் என்பது கவனிக்கப்படத்தக்கது. சில வேளைகளில் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அழைத்தாலும் அவர் வெகு சாதாரணமாய் வழங்கின நாமம் மனுஷ குமாரன் என்பதே.

குறிப்பு. a. ஒரே ஒரு தடவை தவிர (அப். 7. 56) மற்றெல்லா சமயங்களிலும் இந்த நாமம் கிறிஸ்துவானவரால் மாத்திரம் தமக்கு உபயோகிக்கப்படுகிறது. சீஷர்கள் தாமும் அவர் பூலோகத்திலிருந்த காலத்திலாவது அல்லது அவர் பரத்துக்கேறின பின்பாவது இந்த நாமத்தை அவருக்கு வழங்கினதேயில்லை.



b. அப். 7. 56-ல் ஸ்தேவான் மாத்திரம் இதை உபயோகிக்கிறார். [உபயோகித்த சமயத்தை கவனிக்க வேண்டும்.] இதுவும்கூட இயேசுவானவர் தம்மைக் குறித்து மாற்கு 14. 62-ல் சொன்னதைத் திருப்பிச் சொன்னதுபோலிருக்கிறது.

c. தவிரவும் பரி. பவுலாவது பரி. யோவானாவது பிற்காலத்தில் இதை வழங்கவுமில்லை. அவர்கள் எல்லாரும் 'தேவனுடைய குமாரன்' என்பதையே சாதாரணமாய் வழங்கினார்கள்.

ஆகையால் கிறிஸ்துவானவர் தமக்கு சாதாரணமாய் வழங்கின நாமம் 'மனுஷ குமாரன்' என்பதே. இப்படிக் கிறிஸ்துவானவர் இந்தப் பெயரை இவ்வளவு பிரியமாய் வழங்கினதற்குக் காரணமென்ன? அவருடைய சீஷர்கள் இதை வழங்காததேன்?

2. சீஷர்கள் தங்கள் குருவுக்கு இதை ஏன் உபயோகிக்கவில்லை? ஒருவேளை தங்கள் குருவை மனுஷ குமாரன் என்று சொல்வது தாழ்வு என்று நினைத்தார்களோ? இல்லை.

குறிப்பு. தேவனுடைய குமாரன் என்பதைவிட மனுஷ குமாரன் என்பது தாழ்வானதாயிருக்கவேண்டும் என்றல்ல. ஏனெனில் கிறிஸ்துவானவர் இதை உபயோகிக்கும்போது, தம்முடைய மனுஷீகத்தின் தாழ்மையை மாத்திரம் குறிக்கும்படி வழங்கினார் என்று தோன்றவில்லை. ஆனால் அதற்கு மாறாக, இப்பெயர் வழங்கப்படுகிற அநேக சமயங்களில் அவருடைய மிக்க ஆச்சரியமான தெய்வீக வல்லமை வெளிப்பட்டதாக காண்கிறோம். உதாரணமாக:

மாற்கு 2. 10.
மத். 25. 31.
யோவா. 5. 27.
மாற்கு 14. 62.

இவைகளில் காணப்படுகிற தெய்வீக வல்லமை எவை?

ஆகையினால் இந்தப் பெயர் அவருடைய மனுஷீகத்தில் அணியப்பட்ட தாழ்மையை மாத்திரம் குறிக்கும் ஒரு பதமாக எண்ணக்கூடாது.

3. கிறிஸ்துவானவர் இந்த நாமத்தை உபயோகித்தபொழுதெல்லாம் அவர் மனதிலிருந்த முக்கிய நோக்கமென்னவென்றால், தமக்கும் மனிதருக்கும் இருந்த நெருங்கிய சம்பந்தத்தைக் காட்டுதலேயாம். தாம் மனிதர்களைவிட முற்றிலும் வித்தியாசமான ஓர் ஆள் என்று தம்மைக் குறித்து அவர்கள் நினையாமல், தம்மை மனுஷர்களில் ஒருவராகவே நினைக்க விரும்பினார்.

(a) மாற்கு 10. 45 பார்க்கவும். அவர் நமக்கு மாதிரி. பூரண மனுஷன் (The Ideal Man) மனுஷர்கள் இருக்கவேண்டியதும், இருக்கக்கூடியதுமான விதத்தை மேற்காட்டிய வாக்கியத்தினால் காண்கிறோம்.

(b) ஆனால் இன்னும் அநேக சமயங்களில் மனுஷ குமாரன் என்னும் பதம் மாதிரியைக் குறிக்காமல் ஒரு சிநேகிதனையும் துணைவனையும் குறிக்கிறது. கிறிஸ்துவானவர் தம்மை மனுஷ குமாரன் என்று அழைத்தபொழுது 'நான் உங்களில் ஒருவன். அந்நியனல்ல. உங்களோடு சேர்ந்தவன். ஒரு சிநேகிதன். துணைவன். சகோதரன்' என்பதையே ஜனங்களுக்குச் சொல்லுகிறவராயிருந்தார். இதை அவர்கள் அவசியம் அறியவேண்டும் என்று விரும்பினார். மற்றப்படி தாம் விரும்புகிற பிரகாரம் அவர்களுக்கு உதவிபுரியக் கூடாது என்றும் தம்மை அவர்களில் ஒருவராக அறிந்தால்மட்டும் தம்மிடத்தில் அவர்கள் தாராளமாய் வந்து தங்கள் இருதயங்களைத் திறந்து சொல்லுவார்கள் என்றும் அறிந்தார். ஒருவனுக்கு எந்த விஷயத்திலாவது சகாயம் தேவையானால் தன்னை நன்றாய் அறிந்து அனுதாபப்படக்கூடிய ஒருவரிடம் போவது இயற்கையல்லவா. (திருஷ்டாந்தப்படுத்தவும்) அப்படிப்போல கிறிஸ்துவானவர் தம்மை மனித குமாரன் என்று அழைத்தபொழுதெல்லாம், தாம் மனுஷருடைய எல்லா அவசரங்களிலும் அவர்களுக்கு உதவிபுரிய ஆயத்தமாயிருக்கிற ஒருவராக காண்பிக்கிறார் என்பதைக் கவனிக்கிறோம். சுருக்கிச் சொல்லவேண்டுமானால் மனுஷ குமாரன் என்றழைப்பதினால் தாம் மனுஷர்களுக்குச் சகோதரனாக இருக்கிறார் என்பதே அவர் கருத்து.



4. இதை விளக்கிக் காட்டும் வசனங்களாவன.

| | |
|---|---|
| மத். 20. 28. | யோவா. 6. 27. |
| லூக். 19. 10. | யோவா. 5. 27. |
| யோவா. 3. 14, 15. | மத். 25. 31. |
| மாற்கு 2. 10. | |

மேற்சொல்லிய பாகங்களை கவனமாய் வாசித்து, மனுஷ குமாரன் என்ன செய்ய வந்தார், என்ன கொடுக்க வந்தார் என்று கவனிக்கவும்.

இந்த வாக்கியங்களில் உமக்கு என்ன சுவிசேஷம் அடங்கியிருக்கிறது?

இந்த மனுஷ குமாரனிடத்தில் நீர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

## Biblical Notes

### வேதாகம விசேஷங்கள் சில

### கொம்பு. Horn

இஸ்ரவேலர் ஆட்டுக்கொம்பு மாட்டுக்கொம்புகளைப் பலவிதமான வேலைக்கும் உபயோகித்தார்கள். கொம்புகளாற் செய்த பாணிகளில் எண்ணெய் வைப்பார்கள். 1 இரா. 1. 39; 1 சாமு. 16. 1. ஆட்டுக்கடாவின் கொம்புகளினால் ஒரு மாதிரியான எக்காளவாத்தியம் செய்வார்கள். யோசு. 6. 4. வல்லமையைக் குறிப்பதற்குக் கொம்பு உவமானமாய்ச் சொல்லியிருக்கிறது. உபா. 33. 17; சங். 18. 2. 'கொம்பு உயர்ந்திருக்கிறது' என்பது சுகம் அல்லது ஜெயம் வந்திருக்கிறது என்பதைக் குறிக்கிறது. 1 சாமு. 2. 1; எசே. 29. 21. 'கொம்பை உயர்த்தாதே' என்பதற்குப் பொறுமைக்கு இடம்கொடாதே என்று அர்த்தமாம். சங். 75. 4. 'கொம்பு வெட்டுகிறது' என்பது ஒருவனைத் தாழ்ந்துபோகவும் அழிந்துபோகவும் பண்ணுவதைக் குறிக்கிறது. எரே. 48. 25.

கொம்பு அரசனை அல்லது பெரியவனைக் குறிக்கிறது. தானி. 7. 8. பலிபீடத்தின் நான்கு மூலைகளில் கொம்புகள் வைக்கப்பட்டிருந்தன. 1 இரா. 1. 50.

## ஆரோகண சங்கீதம். A Psalm of Ascents.

120–134 சங்கீதங்கள். 'ஆரோகண' என்பதற்கு 'மேலே ஏறிப் போகிற' என்றர்த்தமாம்.

ஒருவேளை இஸ்ரவேலர் பாபிலோனியாவின் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்ப 'ஏறிப்போகும்' போது அல்லது அவர்கள் வருஷந்தோறும் பண்டிகை காலங்களில் எருசலேமை நோக்கி 'ஏறிப் போகும்' போது இந்தச் சங்கீதங்களைப் பாடினார்கள் என்று தோன்றுகிறது.

ஸ்திரீ பிராகாரத்திலிருந்து மேலே இஸ்ரவேலர் பிராகாரத்திற்குப் பதினைந்து படிகள் இருந்தன. சில வேதசாஸ்திரிகள் இவைகளின்மேல் பிரயாணிகள் 'ஏறிப்போகும்' போது ஒவ்வொரு படியிலும் நின்று ஒவ்வொரு சங்கீதம் பாடுவார்கள் என்று நினைக்கிறார்கள்.

## கோர்பான். Corban.

இப்பதம் பாபிலோனியரும் யூதரும் கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய காணிக்கையையும், அவர்கள் செய்யும் பொருத்தனையை நிறைவேற்றும்படி செலுத்துகிற காணிக்கையையும் குறிக்கிறது. 'காணிக்கை,' எசே. 20. 28. 'பலி,' எசே. 40. 43. 'கொர்பான்,' மாற். 7. 11. எபிரெயர்கள் சரியாய் யோசிக்காமல் தங்களுக்கும் தங்கள் தாய்தந்தையருக்கும் சம்ரக்ஷணைக்காக வைத்திருக்கிறவைகளைக் கடவுளுக்குக் கொடுப்பதாகப் பொருத்தனைசெய்து இவ்விதமாய்ப் பெரும்பாலும் தங்கள் பெற்றோரைக் கஷ்டத்தில் போடுகிறதினால், அவர்களுக்கு அநியாயம் செய்கிறதுபோலிருந்தது. யூத வேதசாஸ்திரிகள் இது அநியாயம் என்று அறிந்தும், இதனால் தாய்தந்தையருக்குக் கஷ்டம் வந்தபோதிலும் செய்த பொருத்தனையை நிறைவேற்றவேண்டும் என்று தீர்மானித்தார்கள். உபா. 23. 21. கி. பி. 90-ஆ யூத வேதசாஸ்திரிகள் பெற்றோரைச் சம்ரக்ஷணை செய்வது உத்தம கடமை என்று அறிந்து இப்படிப் பொருத்தனை செய்வதை விலக்க வேண்டும் என்று உத்தரவு கொடுத்தார்கள்.



No. 56 ஜனுவரி 1911

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1911
MADRAS.
161287

# வேதியர் விளக்கு

## The Message of Habakkuk

By the Rev. W. S. Dodd

## ஆபகூக் தீர்க்கதரிசி செய்த போதனை

ஆபகூக் தீர்க்கதரிசியைக்குறித்து நமக்குத் தெரிந்திருக்கிறது மிகவும் சொற்பம்; என்றாலும் அவன் எழுதின ஆகமம் நமக்கு மனோகரமாயிருக்கிறது.

1. அதின் அடக்கம் சரித்திரமாகவும் நாடகப் போங்காகவும் இருக்கிறது.
2. அதினுள் எக்காலத்திலும் லேசாய் நிவிர்த்தியாகாத ஓர் பலத்த சந்தேகம் அடங்கியிருக்கிறது.
3. அது கிறிஸ்தவ முக்கிய உபதேசத்தை முன் குறிப்பிடுகிறது.

1\. அந்த ஆகமத்தின் அடக்கம் சரித்திரமாகவும் நாடகப் போங்காகவும் இருக்கிறது. கற்றோருக்கு இவ்வாகமம் மனச்சந்தோஷத்துக்குரிய இனிமையை உண்டாக்கும். சிலர் உத்தேசிக்கும் பிரகாரம் ஆபகூக் தேவாலயத்திலுள்ள பாடகர்களில் ஒருவன்; வேறு சிலர் நினைக்கிறபடி அவன் அந்நிய தேசத்திற்குத் தூரத்தப்பட்டிருந்தவன்; எப்படியிருந்தாலும் அவன் கீர்த்திப் பெறக்கூடிய கவிவல்லோனாயிருந்தான் என்று தீர்க்கமாக விளங்குகிறது.

(a) இவ்வாகமத்தின் சரித்திர பாகம். அநேக இராஜாக்களின் பொல்லாப்பினால் யூதேயாநாடு பிரமாணமற்றதாயும் துன்மார்க்கத்தில் அமிழ்ந்தினதாயுமிருந்தது. பயபக்தியுள்ள யோசியா அரசன் ஆனபோதோ யூதேயாவுக்கு நல்ல நாள் வந்திருக்கிறதென்று தோன்றினது. ஆனால் அவன் சில சீர்திருத்தங்களைத் துவக்கி ஜனங்கள் நெடுங்காலமாய் அசட்டைபண்ணப்பட்ட தேவபிரமாணத்தைக் கற்றுக்கொள்ளும்

TL
AVbm 2n, N1OVE
N12

படி எவினாலும் பிரஜைகள் குணப்படாததினால் அவன் மரித்தவுடனே அச்சீர்திருத்தத்திற்கும் முடிவுவந்தது. அவன் மூத்த குமாரனாகிய யோவாகாஸ் சிம்மாசனத்துக்கு வந்து மூன்று மாதமாக இராஜாவாயிருந்து எகிப்தின் இராஜாவாகிய பார்வோன்நேகோவினால் தள்ளப்பட்டான். அவனுக்குப்பின் அவன் தம்பியாகிய யோயாக்கீமும், யோயாக்கீமின் குமாரனாகிய யோயாக்கீனும், யோயாக்கீனின் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவும் தொடர்ந்தேர்ச்சியாய் இராஜாபிஷேகம் பெற்றார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தன்னயம், குரூரம், அவபக்தி முதலிய துர்க்குணங்கள் இருந்தபடியால் யூதா இராஜ்யம் மறுபடியும் அதிக நிர்ப்பந்தமான ஸ்திதிக்குள்ளாயிற்று.

இடையில் ஓர் புதிய அரசாட்சி அந்நிய இராஜ்யங்களுக்குள் மேன்பாடாய் தோன்றினது. வடகிழக்கிலிருந்து கல்தேயர் அசீரியா தேசத்துக்குள் வெள்ளம்போல் பாய்ந்து எகிப்து தேசத்தை மேற்கொள்ள வந்தார்கள். யூதேயாநாடு அசீரியாவுக்கும் எகிப்துக்கும் இடையிலிருந்து அதிக அவஸ்தைப்பட்டது. கல்தேயர் குரூரமும், இரக்கமின்மையும், பெருமையும், ஆவலாசையுமுள்ளவர்கள். ஆப. 1. 5–10 வசனங்களிலுள்ள இந்த யுத்தவீரரின் சேனைகளைக்குறித்த விவரம் அதிக தெளிவாயிருக்கிறது. காட்டிலுள்ள நாணலை ஓர் பெரிய மிருகம் மிதித்துத் தள்ளுவதுபோல் இராஜாக்கள், அதிகாரிகள், இவர்களை நிந்தித்து நிர்த்தூளியாக்கி வந்தார்கள். ஒருவனும் அவர்களுக்கு எதிர்த்துநிற்க முடியவில்லை. மெய்யாகவே அந்தக்காலம் பக்திமான்களுக்குச் சங்கடமும் கலக்கமுமான சமயமே. தங்கள் சுய நாட்டில் பொறுமையான அநியாயமும் பிறதேசங்களில் பொல்லாப்பும் அழிவும் காணப்பட்டன.

ஆபகூக் இவ்வாகமத்தில் யூதேயா நாட்டிலுள்ள சில பக்திமான்களுக்குளிருந்த சந்தேகங்களையும், நம்பிக்கைகளையும் விளக்கிக் காட்டுகிறான். மற்றத் தீர்க்கதரிசிகள் தேவனுக்காக ஜனங்களிடத்தில் பேசினார்கள். இவனோ ஜனங்களுக்காகத் தேவனிடத்தில் பேசி, மற்ற தேவ ஊழியர்களால் உரைத்த தீர்க்கதரிசனங்கள் ஏன் நிறைவேறவில்லை என்று விசாரித்தான்.

(b) இவ்வாகமம் நாடகப்போங்கு. முதல்பாகம் தீர்க்கதரிசிக்கும் தேவனுக்கும் நேரிட்ட சம்பாஷணை.

(தமிழ் வேதத்தில் இது தெளிவாய்த் தோன்றாததினால் பின்வருகிறபடி வேத புத்தகத்தில் பேசோன் இன்னார் என்று குறிக்கும்படி ஆபகூக் என்னும் பதத்தையும் கர்த்தர் என்னும் பதத்தையும் எழுதினால் தெளிவாகும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
16 JAN 1911
MADRAS.

ஆபகூக், 1–ம் அதி. 1–4 வச.
கர்த்தர், 1–ம் அதி. 5–11 வச.
ஆபகூக், 1–ம் அதி. 12–17 வச.
ஆபகூக் (தனக்குள்), 2–ம் அதி. 1 வச.
கர்த்தர், 2–ம் அதி. 2–5 வச.
2–ம் அதி. 6–20 வசனங்களில் ஐந்து பழமொழிப் பாட்டுகளும் அவைகளின் அர்த்தமும் அடங்கியிருக்கிறது.
3–ம் அதி. யேகோவாவின் நீதியையும் தீர்க்கதரிசியின் நம்பிக்கையையும் குறிக்கிற ஓர் இனிய பாட்டு.)

கொடுமை, கொள்ளை, வழக்கு, வாது இத்தீமைகளைக்குறித்து தான் தேவனை நோக்கிக் கூப்பிட்டாலும், அவைகள் அதிகமதிகமாய் உண்டானதே ஒழிய அவைகளை நிறுத்தும்படிக்கு ஓர் இரட்சகனும் வரவில்லை என்று ஆபகூக் முறையிட்டான். அதற்குக் கர்த்தர் தீயோரை அழித்து ஜனங்களுக்குள் சற்குணங்களைக் கற்பிக்கும் பொருட்டாகத் தண்டனைசெய்யும் ஓர் கருவியாகக் கல்தேயரை அனுப்புகிறேன் என்று அறிவித்தார். இந்த சமாச்சாரம் ஆபகூக்குக்கு இருந்த சந்தேகத்தை அதிகரிக்கச் செய்ததே ஒழிய அவனுக்குத் திருப்தியைக் கொடுத்ததில்லை. நீதியுள்ள தேவன் துரோகமும் குரூரமுமுள்ள விக்கிரகாராதனைக்காரரான கல்தேயரின்மூலமாய்த் தமது சித்தத்தை நிறைவேற்றுகிறதெப்படி? வியாதியைப்பார்க்கிலும் மருந்து கேவலமானதாய் தோன்றும். ஆதலால் அவன் 'தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணரே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?' என்று கேட்கிறான்.

இந்தக் கேள்வியைக் கேட்டபின் ஆபகூக் தனக்குள்ளே தியானித்து, 'நான் என் காவலிலே தரித்து அரணிலே நிலைகொண்டிருந்து அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும் அவர் என்னைக் கண்டிருக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன்' என்றான். பின்பு கர்த்தர் அவனுடைய சந்தேகத்தை நிவிர்த்திசெய்யும்படி சில நியாயங்களைச் சொல்லி 'இதோ அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்' என்று கூறுகிறார்.

நீதியுள்ள தேவன் தமது திவ்விய கோபத்துக்கேதுவான கருவியாக அநீதியுள்ள கல்தேயரை உபயோகிக்கிறதெப்படி என்று ஆபகூக் ஆச்சரியத்தோடு கேட்டான். இந்த வாக்கியத்தில் பொல்லாத

வர்களைப் பயப்படச்செய்வது அவசியமில்லை என்று கர்த்தர் தைரியப்படுத்துகிறார். மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும் என்றபடி தமது சித்தத்துக்கு அமைந்த அடிமைகளாகத் தேவன் தீயோரை உபயோகிக்கிறார். தீமையானது நன்மையை நிர்மூலமாக்கி மேற்கொள்வதாயிருந்தாலும் அது தேவனுடைய சித்தத்தை எப்படியாவது நிறைவேற்றுவது வாஸ்தவமே. அதுமட்டுமல்ல, தீமையானது தன் ஆடம்பரத்தோடே இராஜரீகம்பண்ணும்போது அது வியாதியால் நிறைந்து பலட்சயமாயிருக்கிறதே. 'இதோ அகங்காரியா யிருக்கிறானே' அல்லது மூலபாஷை அர்த்தத்தின்படி, 'அவனுடைய ஆத்துமா வீக்கமுள்ளதாயிருக்கிறதே.' அதாவது அவன் ஆத்துமா வீம்பும் விபரீதமுமான வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறதே. அதினால் அது இயல்பாகவே செத்துப்போகும். நீதிமானோ ஜீவியத்தின் மாறுதல்களினால் சிதறடிக்கப்பட்டவனும் நிர்மூலமாக்கப்பட்டவனுமாயிருந்தாலும் எப்படியாவது தன் விசுவாசத்தினால் பிழைப்பான்.

சில வருஷங்களுக்குமுன் நான் ஒரு பட்டடைக்குப்போய் அங்கேயிருந்த கொல்லன் தன் வேலையைச் செய்கிறதைப் பார்த்தேன். மேஸ்திரியின் கையில் ஓர் சின்னச் சம்மட்டி இருந்தது. அவன் பட்டடைக் கல்லின்மேல் நெருப்பனக் காய்ச்சின இரும்பை வைத்து அதைக் கிரமப்பிரகாரம் தட்டித் தட்டிப் பெருஞ்சம்மட்டிக்காரனை எவி அடிக்கவேண்டிய சமயத்தையும் அடிக்கவேண்டிய இடத்தையுஞ் சுட்டிக் காட்டினான். மேஸ்திரி காய்ந்த இரும்பைத் தன் இஷ்டப்படி உருவாக்கத்தக்கதாக பெருஞ்சம்மட்டியால் குறித்த இடத்தில் வேலைக்காரன் அதிக பலத்துடன் அடித்தான். அவ்வண்ணமே அடிக்கவேண்டிய இடத்தையும் அடிக்கவேண்டிய சமயத்தையும் குறிப்பிட்டுத் தேவன் தீமையை உபயோகித்துத் தமது சித்தத்தை நிறைவேற்றுகிறதேயன்றி அதை அடக்க முடியாததாய் விடுகிறதில்லை.

ஆபகூக் கர்த்தருடைய வார்த்தையின்மூலமாய் இந்தச் சத்தியத்தை அறிந்தவுடன் (ஆப. 2. 6–19) தீயோரின் அழிவு நிச்சயமே என்பதைக்காட்டி, (வச. 20.)

"கர்த்தரோவென்றால் தமது பரிசுத்த
ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம்
அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது"

என்று உரைக்கிறான். ஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்தித்தாலும் தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். இதைத் திருஷ்டாந்தப்படுத்தும்படி 3–ம் அதி. யேகோவா



வின் நியாயத்தை நன்றியறிதலோடும் நம்பிக்கையோடும் ஞாபகப்படுத்தி இஸ்ரவேலின் சரித்திரத்திலுள்ள தேவனுடைய இரட்சணிய வல்லமையைத் தியானிக்கிறான். சீனாய் மலையில் தேவன் தமது மகிமையைக் காண்பித்தல், சிவந்த கடலைப் பிரித்தல், பராக்கிரம சத்துருக்களை அற்புதமாய் மேற்கொள்ளுதல், மீதியான் முதலிய கோத்திரத்தார் கீழ்ப்படுத்தப்படுதல், வாக்குத்தத்தத்தின் தேசத்தை ஜெயித்தல் முதலிய தேவனுடைய மாட்சிமையான கிரியைகளை ஞாபகப்படுத்துகிறான். தேவன் இந்த அற்புதங்களைச் செய்த காரணம் தீயோரைத் தண்டிக்கவும் தாம் தெரிந்துகொண்டவர்களை இரட்சிக்கவுமே. (வச. 13) இப்படிச் செய்த கர்த்தர் தமது பரமசித்தத்தை நிறைவேற்றுவார் என்பது நிச்சயம். சென்றகாலத்தில் காண்பிக்கப்பட்ட இரட்சணியம் வருங்காலத்திலிருக்கும் இரட்சணியத்திற்கு விசேஷித்த சாட்சி.

ஆப. 3. 17, 18. வசனங்களில் ஆபகூக் தனக்கு இருந்த விசுவாசத்தை இனிமையாய்ப் பாடி இந்த ஆகமத்தை முடிக்கிறான்.

(இன்னும் வரும்.)

# A Bible Reading — Exodus 34

**By**

**The Rev. T. Walker, M.A.**

## யாத்திராகமம் 34–ம் அதிகாரம்

மூன்றாம் பாகம்

## தேவகிருபையை மறுபடியும் பெற்றுக்கொள்ளுதல்

கவனிப்பு.—இவ்வதிகாரத்தில், மோசே மத்தியஸ்தனாக நின்று தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவாக வந்த பிரிவினையைத் தன் ஊக்கமான வேண்டுதலினாலே நீக்கிவிடுகிறான்.

IV. பிரகாசமுள்ள முகம். வாக். 29-35. இதிலே,—மூன்று வார்த்தைகள் விசேஷம்.

1. 'மோசே.' வாக். 29–31, 33–35. இவன் பேர் இவ்வசனங்களில் ஏழுதரம் வருகிறது. பழைய மோசேதான்; ஆகிலும் நாற்பது நாள் கர்த்தரோடு சஞ்சரித்து அவருடைய மகிமையை ஒருவாறாய்த் தரிசித்தபின்பு புதுக்

கிருபையோடும் முகப் பிரகாசத்தோடும் புறப்பட்டு வந்தான்.

*a.* **அவன் கையில் சாட்சிப் பலகைகளும்** (வாக். 29; உடன்படிக்கைக்கு அடையாளம். மல்கி. 2. 5, 6),

*b.* **அவன் முகத்தில் திவ்வியபிரகாசமும்** (வாக். 30; மல்கி. 2. 6; அப். 6. 15),

*c.* **அவன் வாயில் சத்திய வேதமும்** (வாச். 31, 32; மல்கி. 2. 6, 7) இருந்தது.

*கர்த்தரோடு ஐக்கியப்பட்டு அவருடைய சந்நிதானத்தில் அதிகமாய் நிற்கிறவர்கள் அவருடைய சித்தத்தையும் சத்தியத்தையும் அறிந்தவர்களாயும் அவருடைய ஞானபிரகாசம் அடைந்தவர்களாயும் இவ்வுலகத்தில் விளங்குவார்கள் என்பது நிச்சயம்* (1 இரா. 17. 1; 2 இரா. 3. 14-20; யோவா. 5. 35).

2. **'முகம்.'** வாக். 29, 30, 33, 35. *பிரகாசிக்கிற முகம்* (மத். 17. 2; அப். 6. 15).

*அந்தப் பிரகாசமானது:—*

*a.* **மோசேக்குத் தெரியாமலிருந்தது.** வாக். 29; *மற்றவர்களுக்குமாத்திரம் தெரியும். மெய்ப் பக்தனுடைய பரிசுத்தமும் அருட்பிரசாதங்களும் அவனுக்கு அல்ல பிறருக்குத்தான் சிறந்து விளங்கும்* (ரோ. 12. 3; 1 கொரி. 15. 8, 9; யோவா. 1. 19-23).

*b.* **ஜனங்களுக்குத் திவ்வியமாய்த் தோன்றினது.** வாக். 30-32.

*முதலில், அந்த அதிசயத்தைக் கண்டு அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள். பின்போ, மோசே அவர்களைக் கிட்ட வரும்படி அழைத்ததின்பேரில் எல்லாரும் அவனிடத்தில் சேர்ந்து பயமின்றி நின்று அவன் போதித்த தேவ வசனத்தைப் பிரியத்தோடு கேட்டார்கள். முதலில் பயங்கரமாய்த் தோன்றின அந்தத் திவ்விய பிரகாசம் பின்பு இன்பமாயும் சுந்தரமாயும் தோன்றிற்று* (அப். 4. 13; 5. 13-16; 19. 17-20).



3. **'முக்காடு.'** வாக். 33-35. கவனிப்பு. 33-ம் வசனத்தில், *'மோசே அவர்களோடே பேசி* **முடியுமளவும்** *மி' என்றிராமல், 'மோசே அவர்களோடே பேசி* **முடிந்தபின்பு,** *தன் முகத்தின்மேல் முக்காடு* **போட்டான்'** *என்றே இருக்கவேண்டும்.*

*அதாவது,-ஜனங்களோடு அவன் பேசும்போது முக்காடு போடாமல் அவர்களோடு பேசி முடிந்தபின்புமாத்திரம் முக்காடு போட்டான் என்பதே கருத்து* (வாக். 35. ஒத்துப்பார்க்க).

நடந்த காரியங்கள் மிகவும் விசேஷம்.

*a.* **போதித்து முடிந்தபின்பு முக்காடு போட்டுக்கொள்வது.** வாக். 33.

*இதற்கு விசேஷித்த காரணம் என்னவென்றால்,—*

**'ஒழிந்துபோவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப் பாராதபடிக்கு'** (2 கொரி. 3. 13). *அதாவது,-மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் நின்றதினாலே உண்டான முகப்பிரகாசம், அவன் அந்தத் திருச்சந்நிதானத்தை விட்டு வந்தபிற்பாடு, வரவர மங்கிப்போகக் கூடியது இயற்கை. அந்தப் பிரகாசமோ நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மகிமைக்கு அடையாளமும் அத்தாட்சியுமாம். திவ்வியமாய் ஜொலிக்கிற அந்தப் பிரகாசம் வரவரக் குறைந்து கடைசியில் அற்றுப் போவதை இஸ்ரவேலர் கண்டால் அவர்களுக்கு மனச்சோர்பு வருமே: அப்படிக்கிராதபடிக்குத்தான் மோசே முக்காடு இட்டுக்கொண்டான்.*

*ஆதலால் அந்த முக்காடு போட்டது தேவ இரக்கம் என்றே சொல்லத்தகும். இந்தச் சங்கதிக்கு 2 கொரி. 3-ம் அதிகாரந்தான் வியாக்கியானம். ஜனங்கள் அந்தப் பிரகாசத்தைப் பார்க்கப் பயந்ததினிமித்தம் மோசே முக்காடிட்டுக்கொண்டான் என்று நினைப்பது தப்பிதம். ஏனெனில் அவன் அவர்களுக்குப்*

போதிக்கும்போது முக்காடு போடாமல் போதனை செய்தான்.

சுவிசேஷ உடன்படிக்கையின் மகிமைப் பிரகாசமோ அவ்விதமாய் ஒழிந்துபோகக்கூடியதல்ல; அது நிலைத்திருக்கிற பிரகாசம் (2 கொரி. 3. 8, 11; 4. 6).

*b.* கர்த்தருடைய சந்நிதியில் போதும்போதெல்லாம் முக்காடு போடாமலிருப்பது. வாக். 34.

'மோசே கர்த்தருடைய சந்நிதியில் அவரோடே பேசும்படிக்கு உட்பிரவேசித்ததுமுதல் வெளியே புறப்படுமட்டும் முக்காடு போடாதிருப்பான்.' அந்தத் திருச்சந்நிதானத்திலே நாற்பது நாள் கண்ணாடியைப்போல் 'திறந்த முகமாய்' நின்றதினால் அல்லவா, கர்த்தருடைய மகிமைப் பிரகாசம் அவன் முகத்தில் பிரதிவிம்பிக்க நேரிட்டது? ஆகையால், அந்தப் பிரகாசம் ஒழிந்துபோகாதபடி, திரும்பத் திரும்ப அந்தச் சந்நிதானத்தில் சென்று நின்று புதிய மகிமைப் பிரகாசத்தைப் பெற்றுவந்தான். அப்படி அடிக்கடி போய், முக்காடில்லாமல் கர்த்தரோடு பேசுவதால் அவன் முகப்பிரகாசம் புதுப்பிக்கப்பட்டு வந்தது. அவ்வாறு, நாமும் 'திறந்த முகமாய் (அதாவது 'முக்காடு போடாமல்') கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியைப்போல் பிரதிவிம்பிக்கப்பண்ணி, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறோம்' (2 கொரி. 3. 18; சரியான திருப்புதல்).

எந்த விசுவாசி அதிகமாய்த் தேவனோடு சகவாசஞ் செய்கிறானோ அந்த விசுவாசி அதிகக் கிருபையும் மகிமையும் அடைந்தவனாக விளங்குவான் (திருஷ். திவ்விய வாசகனாகிய யோவான் அப்போஸ்தலன்). மேலும்,- நாம் தினந்தோறும் ரட்சகரோடு ஐக்கியப்பட்டுப் புதிதாகிப் புதிதாகி மறுரூபப்படவேண்டுமென்றும் அறிக (ரோ. 12. 2; கொலோ. 3. 10).



*c.* ஜனங்களுக்குப் போதிக்கும்போதெல்லாம் முக்காடில்லாமல் போதிப்பது. வாக். 34, 35.

'அவன் வெளியே வந்து தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்போது, இஸ்ரவேல் புத்திரர் அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார்கள்.'

மோசே மறுபடியும் கர்த்தருடைய சந்நிதியில் போய்ப் பெற்ற புது மகிமைப் பிரகாசத்தை ஜனங்கள் கண்டு ஆனந்திப்பார்கள். மகிமை அடைந்தவனாய்ப் போதிப்பானேயல்லாமல் மற்றப்படி போதிக்கமாட்டான்.

தேவனுடைய பணிவிடைக்காரருக்கு இது எவ்வளவு சிறந்த முன்மாதிரி. திரும்பத் திரும்பத் தேவசந்நிதியில் தரித்திருந்து அவரிடத்தில் புது மகிமையையும் போதனையையும் பெற்று,—அப்புறம் வெளியே வந்து வல்லமையோடும் அதிகாரத்தோடும் ஊழியஞ் செய்வோமாக (அப். 4. 23–33; மத். 17. 1–21).

*d.* மற்ற நேரங்களிலெல்லாம் முக்காடு இட்டுக்கொள்வது. வாக். 35.

'மோசே அவரோடே பேசும்படிக்கு உள்ளே பிரவேசிக்கும்வரைக்கும் முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின்மேல் போட்டுக்கொள்ளுவான்.'

ஆகவே,—கர்த்தருடைய சந்நிதியில் நிற்கும்போதும் ஜனங்களுக்குப் போதிக்கும்போதும் மோசேயின் முகம் காணப்பட்டதேயன்றி மற்ற நேரங்களில் எல்லாம் அது மூடி மறைக்கப்பட்டதென்று காண்கிறோம். சொல்லவேண்டுமானால் கர்த்தருடைய சமுகத்திலும் தேவ ஊழியத்திலும் மோசேயைக் காணலாமேதவிர,—மற்றப்படி அவன் மனிதருடைய பார்வைக்கு மறைந்துபோனவனாக இதுமுதல் நடந்துவந்தான். நாமும் இவ்விதமாய் மறைக்கப்படுவது உத்தமம் (யோவா. 1. 23; 2 கொரி. 4. 5–10; கலா. 2. 20).

# A Sermon Outline

**By the Rev. E. A. Booth**

## ‘நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்’ மாற்கு 6. 37.

பசியுள்ள உலோகத்தாருக்குத் திருச்சபை செய்யவேண்டிய கடமை இன்னதென்று இந்த அற்புதத்தில் உவமையாய்க் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

I. பசியுள்ள திரள் கூட்டம்.

1. அவர்கள் வெவ்வேறே நோக்கங்களோடு வந்தார்கள். சிலர் சொஸ்தமடையவும், சிலர் ஆவிக்குரிய ஆறுதல் பெற்றுக் கொள்ளவும், சிலர் திவ்விய உபதேசத்தைக் கேட்கவும், மற்றவர்கள் அதிசயங்களைப் பார்க்கவும் வந்து சேர்ந்தார்கள்.
2. அவர்களுக்குள் வயசு, குணம், வளர்ப்பு, படிப்பு, நிலைமை என்கிறவைகளைக்குறித்து அநேக வேற்றுமைகள் உண்டு என்றாலும் அவர்களெல்லாரையும் அவர் ஏற்றுக்கொண்டார்.
3. பசியும் பசி தீர்க்கமுடியாமையும் எல்லாருக்கும் இருந்தது.
4. அப்படியே நம்மைச் சுற்றியிருக்கிற ஜனங்களுக்குள் பொதுவான குறைவுகள், பாவங்கள், விசனங்கள் உண்டு.
5. நம்முடைய அவநம்பிக்கையினால் அல்லது தன்னயத்தினால் அவர்களுக்கு உதவிசெய்யாமலிருப்பது கூடாது.

II. கலங்கியிருந்த சீஷர்கள்.

1. அவர்கள் வருகிற தொந்தரவைக்குறித்துக் கவனித்து வெகு நேரமாய் யோசித்து இது நம்மாலே முடியாது என்று தீர்மானித்தார்கள்.
2. இந்தக் கஷ்டத்தைக்குறித்து அதிகமாய் யோசிக்கிறதினால் கிறிஸ்துவைக்குறித்தும் முன்னே அவர் செய்த அற்புதத்தைக்குறித்தும் மறந்துபோனார்கள்.
3. அவர்கள்பேரில் குற்றஞ் சாட்டுகிறது லேசாயிருக்கிறது. ஆனால் நாமும் திருச்சபைக்கு அடுத்த கஷ்டமுள்ள காரியங்களைக்குறித்து யோசிக்கும்போது கிறிஸ்துவையும் அவர் வாக்குத்தத்தங்களையும் மறந்துபோகிறோம். நாம் விசுவாசித்து நடவாமல் தரிசித்து நடக்கிறோம்.
4. அவர்கள் திட்டமாய் விசாரித்துத் தங்கள் கைவசமிருந்த பதார்த்தங்களைக் கண்டதினால் அவர்கள் தங்களிடமுள்ளது எவ்வளவு குறைவுள்ளதென்று தெளிவாய் அறிந்துகொண்டார்கள். அப்படியே நாம் செய்யவேண்டிய சுவிசேஷ வேலையைக்குறித்து நமது பலவீனத்தையும் தகுதியின்மையையும் தெளிவாய் அறிந்துகொள்ளவேண்டும்.
5. அவர்களிடமுள்ளது எல்லாம் தம்மிடத்தில் கொண்டுவரும்படி இயேசு கட்டளையிட்டார். அவர்கள் கொண்டுவந்தது கொஞ்சந்தான், என்றாலும் தங்களிடத்தில் உள்ளதை எல்லாம் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். அப்படியே நாம் நமது அன்பு, பலம், நேரம், திராணி, பணம், அறிவு, விசுவாசம் முதலியவைகளைக் கர்த்தரிடத்தில் கொண்டுவரவேண்டும்.

III. அனுதாபமுள்ள கர்த்தர்.

1. அவர் ஜனங்களை எவ்வளவோ நேசித்தார். நாள் முழுவதும் அவர்களுக்குப் போதித்தார். அவர்களைச் சுகப்படுத்தினார்.
2. சீஷர்கள் கொண்டுவந்த அற்ப பதார்த்தங்களை அவர் தள்ளவுமில்லை, அசட்டைபண்ணவுமில்லை. அவைகளை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்து பிட்டுப் பெருகச்செய்து இந்த அற்புதத்துக்கு அதை ஆதாரம் ஆக்கினார்.
3. அந்தப் பதார்த்தங்களைப் பெருகச் செய்தபோது யாரும் அவருக்கு உதவிசெய்யவில்லை. அவர் தனியே செய்தார். அப்படியே ஜீவ அப்பமாகிய இரட்சிப்பை அவர்தாமே செ[illegible]தார்.
4. அவர் சம்பாதித்தவைகளைத் தமது சீஷர்களுக்குக் கொடுக்கச் சீஷர்களே ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். இது அவர் பழக்கம். இரட்சிக்கப்பட்டவர்கள் மூலமாய் இரட்சிக்கப்படாதவர்களுக்குச் சுவிசேஷ ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். மனிதனுடைய ஊழியத்தினால் மனிதருடைய இருதயங்களில் கிரியை செய்கிறார்.
5. ஏதாவது செய்யும்படி அவர் நமக்குக் கட்டளையிட்டால் அதைச் செய்யத் திராணியும் கொடுக்கிறார். நாம் அவரண்டை போய் வல்லமை தேடும்படிக்கு நாம் தனியே செய்யக்கூடாததைச் செய்யச் சொல்லுகிறார். இந்த வாக்

கியத்தின்மூலமாய் நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களைக் குறித்து கட்டளையிடுகிறார். போஜனம் என்று சொல்லும்போது கற்கள் அல்ல, சாம்பல் அல்ல, பதர் அல்ல, ஜீவ அப்பமே அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லுகிறார்.

# The Son of Man

## மனுஷ குமாரன் என்பதைக்குறித்து மூன்று வேத ஆராய்ச்சி பாடங்கள்

### இரண்டாம் பாடம்

**கிறிஸ்துவானவர் தம்மை மனுஷ குமாரன் என்று ஏன் அடிக்கடி சொல்லுகிறார்?**

1. *இந்தப் பாடத்தில் நாம் விசேஷமாய் வாசிக்கவேண்டிய பாகங்கள்.* எபி. 2. 9–18; 5. 2, 3; 5. 7–6.

2. *மேற்சொல்லிய கேள்விக்கு உத்தரவு என்னவெனில்:*— **கிறிஸ்துவானவர் மனுஷ குமாரனாயிருக்கிறார் என்பதே விசேஷித்த பிரகாரமாய் அவர் பாவிகளின் ரட்சகராக விளங்கும்படி ஏதுவாயிற்று.** *ஆகையினால்தான் தாம் மனுஷ குமாரன் என்பதை அவ்வளவு வற்புறுத்திப் பேசினார்.*

*மனுஷர்கள் தங்களுக்கும் அவருக்கும் வெகுதூரம் என்று எண்ணினால் அவரைத் தங்கள் சகாயராகவும் ரட்சகராகவும் ஏற்றுக்கொள்வது அசாத்தியம்.*

குறிப்பு. *அவர் தங்களைவிட அநேக விஷயங்களில் வெகு வித்தியாசமானவர் என்றும், ஆகையினால் அவருக்கும் தங்களுக்கும் வெகுதூரம் என்றும் மனுஷர்கள் எண்ணுவதற்கு அவரிடத்தில் அநேக குறிப்புகள் காணப்பட்டன.*

*[இவ்விதமாய் ஜனங்கள் அவரைக்குறித்து நினைக்கக் காரணமாயிருந்த மூன்று இலட்சணங்களை அவரிடத்தில் கவனிக்கவும்.]*

*இவைகளினால் ஜனங்கள் அவரிடத்தில் வர பயப்பட்டிருக்கக்கூடும்.*

*ஆகையால் தம்மை மனுஷ குமாரன் என்று ஓயாமல் சொல்லி, ஜனங்கள் தம்மண்டையில் வர பயப்படாதபடி*



*செய்தார். அவர் தங்களைப்போலொத்தவர் என்று அவர்கள் உணரவும், தம்முடைய ஆச்சரியமான வல்லமை, பரிசுத்தம் முதலியவைகளினால் அவர்களுக்கு இன்னுமதிகமாய் உதவிசெய்யக்கூடியவர் என்பதையும் இதினால் விளங்கச்செய்தார்.*

3. *எபி. 2. 9–18-ஐ வாசிக்கவும். இந்த வசனங்களில் கிறிஸ்து*வானவர் உபத்திரவங்களிலும், மரணத்திலும் மனுஷருக்கு ஒப்பானார் என்பதே அவர் **மனுஷர்களின் ரட்சகராவதற்கு** ஏற்ற வழியாயிற்று என்று *பார்க்கிறோம்.*

   (a) இந்த வாக்கியங்களில் கிறிஸ்துவானவர் மனுஷர்களுக்கொப்பானவர் என்பதின் பொருள் என்னவென்பதைப் *பார்க்கிறோம்.*

      (i) 11 (b), 12, 13-ம் *வாக்கியங்களில் மனுஷர்களைப்பற்றி தமக்கிருக்கும் எண்ணத்தை இரண்டு வார்த்தைகளினால் வெளியிடுகிறதைக் காண்கிறோம்.*

      *[அந்த இரண்டு பதங்கள் எவை?]*

      (ii) 14 (a), 17 (a) *வாக்கியங்களில் அப்படி அவர் மனுஷர்களில் ஒருவராக வேண்டியதற்கு அவசியத்தைக் காட்டுகிறது. அவர்களுக்கு உதவிசெய்யும்படி அவர்களில் ஒருவரைப்போலாகவேண்டியதாயிற்று.*

      *அவர் அன்பினிமித்தம் அப்படிச் செய்தார் ஆனால் அவர்களில் ஒருவரைப்போலாகியிராவிட்டால் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவராக முடியாது. ஆகையால் அவர்களைப்போல் ஆகவேண்டியது அவசியம்.*

   (b) **கிறிஸ்துவானவர் மனுஷர்களுக்கொப்பானவரானபடியால் அவர் செய்யக்கூடியதாயிருந்த உதவி என்ன வென்பதையும்** *பார்க்கிறோம்.*

      (i) 10, 11, 14, 15-ம் *வாக்கியங்களில் அவர் செய்கிற உதவி எத்தன்மையானது என்று கவனிக்கவும். இந்த வாக்கியங்களில் அவர்*

செய்கிற உதவியைக் குறிக்கும் 4 பதங்கள் எவை?

(ii) 17, 18-ம் வசனங்களில், தமது சகோதரருக்கொப்பானவரானதினிமித்தம் கிறிஸ்துவானவர் செய்யக்கூடியதாயிருந்த இரண்டு வேலைகள் காட்டப்படுகின்றன.

அவைகள் எவை? அதன் அர்த்தத்தைக் கிரகிக்கவும்.

(iii) 9-ம் வாக்கியத்தின் துவக்கத்தில் இந்த உதவி யாருக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் கவனிக்கவும்.

4. எபி. 5. 2, 3, 7-9-ம் வாக்கியங்களை வாசிக்கவும். இந்த வாக்கியங்களில் பிரதான ஆசாரியனின் வேலையும், இலக்ஷணமும் எடுத்துக் காட்டப்படுகிறது. அப்புறம் கிறிஸ்துவானவரே மெய்யான பூரண பிரதான ஆசாரியர் என்றும் காட்டப்படுகிறது.

(a) 2, 3-ம் வாக்கியங்களில் பிரதான ஆசாரியனுடைய மனதிலிருக்கவேண்டிய இரண்டு இலக்ஷணங்களைக் கண்டுபிடிக்கவும்.

(b) 7-10-ம் வாக்கியங்களை கவனமாய் வாசித்து கிறிஸ்துவானவரிடத்தில் இந்த இரண்டுவிதமான மனம் எப்படி பூரணமாய் காணப்பட்டது என்று பார்க்கவும்.

## The Second Epistle to the Corinthians

## கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

1. காரணம்.

பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது கொரிந்து சபையைப் பற்றித் தீத்து அவனுக்குத் தெரிவித்த சங்கதிகள், கொரிந்தியர் தான் முன் எழுதின நிருபத்தை வாசித்துச் செய்த காரியங்கள், குற்றவாளியாகிய ஒருவனுக்கு அவர்கள் செய்த தண்டனை ஆகிய இவைகளினிமித்தம் அவன் கவலையுள்ளவனாயிருந்தான் என்று நாம் அறிந்துகொள்ளலாம். 2 கொரி. 2. 5, 13; 7, 8; 11. 28.



2. கி. பி. 52-ல் பரி. பவுல் இரண்டாம் பிரயாணத்தில் கொரிந்து சபையை ஸ்தாபித்து அங்கே ஏறக்குறைய இரண்டு வருஷம் இருந்தான். மூன்றாம் பிரயாணத்திலே அதாவது கி. பி. 56-ல் எபேசு பட்டணத்திலிருந்து கொரிந்து சபையில் நடந்துவந்த வேசித்தனத்தைப் பற்றி ஒரு நிருபம் எழுதினான். அப். 18. 1; 19. 1; 1 கொரி. 5. 9. இந்த நிருபம் காணமற்போனது. ஒருவேளை அதே வருஷத்தில் எபேசுவிலிருந்து கொரிந்து பட்டணத்திற்குச் சிலகாலம் போயிருக்கலாம். 2 கொரி. 12. 14; 13. 1.

இதற்குப் பிறகு 57-ல் நமக்குத் தெரிந்த முதலாம் நிருபத்தை யெழுதிக் குற்றவாளிக்குச் செய்யும் தண்டனையைக்குறித்துத் தனது தீர்மானத்தைத் தெரிவித்தான். அப்போதுதான் கொரிந்துவுக்குத் தீமோத்தேயுவை யனுப்பினான். 1 கொரி. 4. 17; 16. 10.

பிறகு நமக்குத் தெரிந்த முதலாம் நிருபத்தை யல்லது இன்னொரு நிருபத்தைத் தீத்துவிடம் கொடுத்து அனுப்பினான். 2 கொரி. 12. 8. பிறகு பரி. பவுல் எபேசைவிட்டு மக்கெதோனியாவுக்கு வந்தான். அங்கேதான் தீத்து அவனைச் சந்தித்து அச்சபையில் நடந்த சங்கதிகள் எல்லாவற்றைப்பற்றி விசேஷமாய்ச் சிலர் பரி. பவுலின் அதிகாரத்திற்குள் இருக்கிறதையும், சிலர் பவுல் உண்மையாய் அப்போஸ்தலன் அல்ல என்று சொல்லுகிறதையும், சிலர் எருசலேமிலுள்ள வறியவர்களுக்குக் காணிக்கை கொடுக்கிறதைக்குறித்து ஆக்ஷேபனை செய்கிறதையும், சிலர் துன்மார்க்கமாய் நடக்கிறதையும்பற்றி யறிவித்தான். 2 கொரி. 7. 1.

இவைகளினிமித்தம் பவுல் அந்த வருஷக்கடைசியில் சபையார்களின் துன்மார்க்கத்துக்கு அவர்கள் செய்யும் தண்டனையைப்பற்றித் தனக்கிருந்த விசனத்தைக்குறித்தும், எருசலேம் சபையிலுள்ள தரித்திரருக்குக் காணிக்கை கொடுக்கும் தர்ம விஷயத்தைப்பற்றியும், தன் அதிகாரத்தைப்பற்றியும் இந்த இரண்டாம் நிருபத்தை எழுதினான். இதற்குப் பிறகு மூன்றாம் பிரயாணத்தில் கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கே மூன்று மாதம் தங்கினான். அப். 20. 3; 2 கொரி. 13. 1. அங்கே யவன் தங்கியிருந்தபோது சபையாருக்குள் சமாதானமும் பக்திவிருத்தியும் உண்டாகி அவர்கள் எருசலேமிலுள்ள சபையாருக்குக் காணிக்கை சேர்த்து அவர்களிற் சிலர் பவுலுடனேகூட அதைக் கொண்டுபோனார்கள்.

3. காலம்.

பவுல் மூன்றாம் பிரயாணத்தின் கடைசியில் எருசலேமுக்குக் கொண்டுபோன காணிக்கையைப்பற்றி விபரமாய்ச் சொல்லியிருக்கிற

தினாலும், அவன் மக்கெதோனியாவிலே சுற்றித் திரிந்து அதே வருஷம் மூன்று மாதம் கொரிந்துவிலே தங்கியிருந்ததினாலும், 57-ம் ௵ அக்டோபர் ௴ அது மாரிகாலத்துக்குமுன்னும் வசந்தகாலத்துக்குப் பின்னும் இந்நிருபம் எழுதப்பட்டது என்று தோன்றுகிறது. ஆதலால் முதலாம் நிருபம் எழுதி ஆறு மாதத்திற்குப்பிறகு இந்த நிருபம் எழுதப்பட்டது என்று நாம் நினைக்கவேண்டும்.

4. உண்மை.

இதை நாம் வாசிக்கும்போது இது ஒரே நிருபந்தான் என்று அறிவோம். மேலும் பரி. பவுல்தான் எழுதினான் என்பதற்குச் சந்தேகமில்லை.

5. பாஷை நடை.

இதில் பரி. பவுலின் மனதிலுள்ள எண்ணங்களையும் விருப்பங்களையும் துக்கங்களையும் பூரணமாய் அறியலாம். தீமையைக்குறித்து அதிக கண்டிப்புள்ளவனும் சுவிசேஷத்தைச் சிறப்பிக்கும் விஷயத்தில் திடசித்தமுள்ளவனும் பாவிகளின்மேல் பரிதாபங்கொண்டு இரங்கும் குணமுள்ளவனுமாகிய இவனுடைய ஞான அனுபவத்தை நன்றாய் இதிலே அறிந்துகொள்ளலாம். தான்கண்ட தரிசனம், தனக்கிருக்கும் 'முள்,' தனது தேக பலவீனம், தனக்கு நேரிட்ட உபத்திரவங்கள் ஆகிய இவைகளைப்பற்றி இதில் சொல்லுகின்றான். 2 கொரி. 4. 7; 10. 10; 11. 23; 12. 1,7.

இதில் துன்பத்திலுண்டாகும் பாக்கியமும், பலவீனத்திலுண்டாகும் தைரியமும், பூரணமா யறியக்கூடும். இதில் மோசேயின் நியாயப்பிரமாண மார்க்கமும், கிறிஸ்தவ மார்க்கமும், கிறிஸ்துவின் மரணமும், நித்திய ஜீவனும், கிறிஸ்துவின் அவதாரமும், திரியேக தத்துவமும் ஆகிய இவைகளைக்குறித்துச் சொல்லிக் கிறிஸ்தவ மார்க்க தத்துவ ஞானத்தைக் காட்டுகிறான். 2 கொரி. 3. 6; 5. 14; 4. 16–5. 8; 8. 9; 13. 14.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE ... 17 FEB 1911 ... MADRAS.

No. 57 பெப்ருவரி 1911

# வேதியர் விளக்கு

## The Message of Habakkuk

By the Rev. W. S. Dodd

## ஆபகூக் தீர்க்கதரிசி செய்த போதனை

(தொடர்ச்சி)

2. இவ்வாகமத்தில் எக்காலத்திலும் லேசாய் நிவிர்த்தியாகாத ஓர் சந்தேகம் அடங்கியிருக்கிறது. இரக்கமுள்ள கடவுள் சிருஷ்டித்த உலகத்தில் தீமையானது கர்வத்தோடே சத்தியத்தையும் தர்மத்தையும் நிர்மூலமாக்கலாமா என்பதுதான் அந்தச் சந்தேகம். இதை எந்த பக்தனும் பார்க்கும்போது ஆபகூக் முறையிட்டதுபோல் 'கர்த்தாவே நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்? நீர் கேளாமலிருக்கிறீரே' என்று சொல்வது இல்லையா? எங்கே பார்த்தாலும் சரி, அதே சந்தேகமே தோன்றும்.

இக்காலத்துச் சரித்திரத்தில் அது காணப்படுகிறது. எதுவரைக்கும் பகையும் தன்னயமும் இராஜ்யங்களை நடத்தும்? எதுவரைக்கும் கோபத்தினாலும் பொறாமையினாலும் சண்டை சல்லியம் இருக்கும்?

ஜனசங்கத்தில் அது காணப்படுகிறது. எதுவரைக்கும் பேராசையும் குரூரமும் ஏழைகளை நொறுக்கும்? எதுவரைக்கும் சிற்றின்பங்கள் மனுஷனுடைய பரமகுணங்களைக் கெடுக்கும்?

தற்காலத்துத் திருச்சபையிலும்கூட அது காணப்படுகிறது. எதுவரைக்கும் பரமபிதாவின் பிள்ளைகள் இரட்சிப்புக்கு அவசியமில்லாத கோட்பாட்டையும் சடங்காசாரங்களையுங்குறித்துத் தர்க்கம்பண்ணுவார்கள்? எதுவரைக்கும் தேவனை அறியாதவர்கள் ஜீவ அப்பத்தைக் கேட்டாலும் பெற்றுக்கொள்ளாமலிருக்கையில் அவருடைய பிள்ளைகள் சோம்பலோடு நித்திரையாய் இருப்பார்கள்?

ஒருவேளை நமது சபையிலும்கூட அது காணப்படுகிறது. எதுவரைக்கும் நமது ஊழியம் கனியற்றதாய்ப்போகும்? எதுவரைக்கும் நமது சபையார் கிறிஸ்தவ மதத்தின் மூல உபதேச வசனங்களைக் கற்காமல் இருப்பார்கள்? அவர்கள் எப்போது குழந்தைப் பருவத்தைக் கடந்து பூரண மனுஷர்களாயிருப்பார்கள்? எப்போது நமது உபதேசமும் ஜெபமும் கண்ணீரும், நமக்கு முன்னிருந்த அனேக பக்தியுள்ள தேவ ஊழியரின் உபதேசமும் நம்முடைய சபையாரின் இருதயங்களையும் குணங்களையும் மாற்றும்?

நமது சொந்த அனுபவத்தில் அது காணப்படுகிறது. எதுவரைக்கும் நான் தேவ ஊழியத்தை ஊக்கத்தோடும் நம்பிக்கையோடும் செய்தாலும் என் வேலை எல்லாம் மற்றவர்களின் மூடத்தனத்தினாலும் பொறுமையினாலும் விருதாவாயிருக்கும்? நான் நன்மை செய்யவேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்திலிருந்தும் எதுவரைக்கும் தீமையினால் ஜெயிக்கப்பட்டிருப்பேன்?

இப்படியே நாம் சொல்வதுண்டு. ஆம், ஆபகூக்கின் காலத்தில் இருந்தபிரகாரம் தீமை சிம்மாசனத்திலும் சத்தியம் சிலுவையிலும் இப்பொழுதும் இருக்கிறதென்று தோன்றுகிறது. ஆனாலும் ஆபகூக் படித்துக்கொண்ட பாடம் நம்மைத் தைரியப்படுத்தும். தீமையானது எவ்வளவு பெருமையுள்ளதாய்த் தோன்றினாலும் அதின் பலன் அதிக சொற்பமாகவே இருக்கிறது.

எலியா பொல்லாத யேசபேலின் கோபத்துக்குத் தப்பி ஓடிப்போய் ஓர் சூரைச்செடியின்கீழ் முழங்காற்படியிட்டு, 'போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும். நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவனல்ல' என்று வேண்டிக்கொண்டது உங்கள் ஞாபகத்திலிருக்கும். அவன் களைப்பாயிருந்ததினால் தீமையின் பலத்தைமாத்திரம் பார்த்து, 'நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்' என்று முறையிட்டான். ஆனால் அவன் கொஞ்சம் போஜனத்தைச் சாப்பிட்டு நித்திரை அடைந்தபின் யேகோவா அவனைத் தைரியப்படுத்தும்படி, 'பாகாலுக்குமுன் முடங்காதிருக்கிற முழங்கால்களையும் அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்' என்றார். 1 இரா. 19. 18.

எலியாவைப்போல ஆபகூக் தீமையின் பலத்தைமாத்திரம் கண்டதினால் முறுமுறுத்தான். குரூரமான கல்தேயரின் சேனைகள் இராஜ்யத்தைக் கெடுக்கிறதைக் கண்டான். ஆனால் பாபிலோனிலிருந்து பயபக்தியுள்ள ஜனங்கள் கீதங்களோடும் கெம்பீரத்தோடும் எருசலேமுக்குத் திரும்பி வருகிறதை அவன் காணவில்லை. விக்கிர



காராதனையின் முடிவு; தேவனுடைய ராஜ்யத்தின் உறுதி, கிறிஸ்தவ சபையின் துவக்கம், இதிலிருந்துண்டான அருமையுள்ள ஆசீர்வாதங்கள் முதலிய அனேக பரம ஈவுகளை அவன் காணவில்லை. ஆனால் தேவனுடைய உத்தரவின்படி பொல்லாத கல்தேயர் இஸ்ரவேலிலிருந்த துஷ்டர்களுக்குக் கொடுந் தண்டனை செய்யாவிட்டால் இந்த நன்மைகள் ஒருபோதும் வரமாட்டாது. தீமை எவ்வளவு பெருமையாய்த் தோன்றினாலும் அதைப்பார்க்கிலும் சத்தியம் மகிமையாயிருக்கிறதென்பதை நாம் மறக்கவே கூடாது.

சில வருஷங்களுக்குமுன் ஒரு நாஸ்திகன் லண்டன் நகரத்தில் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதமாய் உபநியாசஞ்செய்தான். அவன் பேசின பிற்பாடு யாராவது முன்னுக்கு வந்து அவனோடு தர்க்கம்பண்ணும்படி உத்தரவு கொடுத்தான். காலஞ்சென்ற டாக்டர் யோசேப் பார்க்கர் ஐயர் அக்காலத்தில் ஒரு வாலிபனாக இருந்தபோதிலும் கிறிஸ்துவானவருக்குச் சாட்சியாக முன்னுக்கு வந்து நின்றார். அந்த நாஸ்திகன் அவரைக் கலங்கடிக்கும்படி கேள்வி கேட்டான். அதாவது 'ஸ்தேவான் இரத்தச்சாட்சியாய் மரித்தபோது தேவன் உண்டானால் அவர் தமது ஊழியனைக் காப்பாற்றும்படி ஏன் தமது கரத்தை நீட்டி உதவிசெய்யவில்லை' என்பதே. டாக்டர் பார்க்கர் சற்றுப் பொறுத்து, 'விசுவாசியாகிய ஸ்தேவான் மரித்தபோது தேவன் தமது கரத்தை நீட்டி அற்புதமாய் உதவிசெய்யாதது வாஸ்தவம். ஆயினும் 'ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்' என்று அவன் சொல்லத்தக்கதாக அவனைப் பலப்படுத்தினார். வல்லமையின் அற்புதத்தைப்பார்க்கிலும் கிருபையின் அற்புதம் சிறந்தது' என்றார்.

நாம் பக்திக்குரிய விஷயங்களின் வல்லமையை அறிந்தால் தீமைக்குரிய விஷயங்களின் பலவீனத்தையும் அறிவோம். தீமையானது அழிந்துபோகிற வல்லமையாயிருக்கிறது. எப்படியெனில் 'காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.' தீமையானது டம்பமாயிருக்கும் காலத்தில் நமது வைராக்கியமும், பிரயத்தினமும், ஊழியமும், எம்மாத்திரம் என்று சொல்லாமல் ஆபகூக் காவலிலே தரித்துத் தன் அரணிலே நிலைகொண்டிருந்ததுபோல் நாம் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தைப் பொறுமையுடன் செய்து நமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட சத்தியத்தைக் காத்துக்கொள்வது நல்லது. எல்லாம் அந்தகாரமாயிருந்தாலும் நம்முடைய கடமையைச் செய்தால் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தீமை, துன்பம், சோதனை யாவும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற சத்தியத்தை ஒப்புக்கொள்வோம்.

3. இந்த ஆகமம் நமக்கு மனோகரமாயிருக்கிறதற்கு இன்னொரு முகாந்தரம் என்னவென்றால் அது கிறிஸ்தவ முக்கிய உபதேசத்தை முன் குறிப்பிடுகிறது. தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். தீமைக்குள் மரணமாகிய விதை இருக்கிறதென்று பார்த்திருக்கிறோம். ஆதலால் அதைக்குறித்து நாம் பயப்படவேண்டியதில்லை. உலகத்தின் சரித்திரத்தை நுட்பமாய் ஆராய்ந்து பார்த்தால் ஒருக்காலும் தீமையானது ஜெயம் அடையவில்லை என்று அறிவோம். சொற்பகாலம் அது சித்திபெறுகிறதுபோலிருந்தும் வெளியரங்கமாய் அது பலங்கொண்டபோது தான் அழிக்கத் தேடின தேவனுடைய ராஜ்யத்தை ஏற்படுத்தினதுமல்லாமல் தானே அழிந்தும்போயிற்று.

இதற்கு நல்ல திருஷ்டாந்தம் இயேசுவின் மரணம். இயேசு சிலுவையில் தொங்கினபோது தீமையானது சித்திபெற்றதாகத் தோன்றினது. நரகத்தின் அதிகாரிகள் எல்லாரும் அவ்வண்ணமாய் நினைக்கலாம். என்றாலும் தீமையானது முழுவதாகப் பலட்சியமாயிருக்கிறதென்று காணப்பட்டது. எப்படியெனில் இயேசுவின் மரணம் தீமையின் மரணத்துக்கேதுவாயிருந்தது. நியாயமானது தீயோரின் குரூரமான போராட்டத்தைச் சகித்து விசுவாசம் என்கிற ஜீவவல்லமையினால் முற்றும் ஜெயங்கொள்வதுண்டு. தீயோரின் ஆத்தும வீக்கமாய் அதாவது சாவுக்கேதுவாயிருக்கிறது. நீதிமானோ தன் விசுவாசத்தினால் ஜீவனுக்கேதுவாயிருக்கிறான். புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறபடி 'பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.'

தன் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற வாக்கியத்தைப் பரிசுத்த பவுல் திருஷ்டாந்தமாய் எழுதி நீதிமானாக்குதல் என்னும் உபதேசத்துக்கு ஆதாரவாக உபயோகிக்கிறான். ஆபகூக் உரைத்த கொள்கைக்கும் புதிய ஏற்பாட்டிலுள்ள கொள்கைக்கும் கொஞ்சம் வித்தியாசம் இயல்பாகவே இருக்கிறது. அவனுடைய கொள்கை விதையாகவும், கிறிஸ்தவ கொள்கை பூவாகவும் இருக்கிறது. ஆபகூக் நினைத்தபடி விசுவாசம், உண்மை, மாறாமை, நேர்மை ஆகிய இவைகளுக்கும் கடவுளுடைய லட்சணங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதினால் கடவுள் நித்தியமுள்ளவராயிருக்கிறது போல அந்தக் குணமுடையவர்களும் நித்தியமுள்ளவர்களுமாயிருப்பார்கள். பரி. பவுல் நினைத்தபடி கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் அவர் செய்த புண்ணியத்தினிமித்தம் நமது ஆத்துமா உயிர்ப்பிக்கப்பட்டு, அவரில் சார்ந்திருப்பதினால் அவருக்குள் நாம் நித்தியமாய் ஜீவிப்போம். இரண்டு கொள்கையும் ஒன்றுதான். ஆபகூக்



OFFICE OF ... RAR OF BOOKS
REGISTERED
1. FEB 1911
MADRAS.

விசுவாசத்தின் இயல்பைத் தெரிவிக்கிறான். பவுல் நாம் விசுவாசிக்க வேண்டியவரைக் காண்பிக்கிறான்.

ஒரு ஜீவ வஸ்துவுக்கும் அதைச் சுற்றியிருக்கும் நிலைமைக்கும் ஒற்றுமையாகும். நிலைமை மாறும்போது ஜீவ வஸ்துவும் அந்த மாறுதலுக்கு ஏற்றதாய் மாறினால் அதற்கு நித்திய ஜீவன் இருக்கும் என்று ஹக்ஸ்லி (*Huxley*) சாஸ்திரி சொன்னான். அப்படியே ஒரு கிறிஸ்தவன் தன் விசுவாசத்தின்மூலமாய்த் தனக்குச் சுற்றிலும் இருக்கிற நிலைமையாகிய கடவுளோடு பூரண சம்பந்தமாயிருக்கிறபடியால் பூரண ஜீவியத்தை அடைந்திருக்கிறான். ஆகையால் தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், சாஸ்திரிகளும் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆபகூக், பவுல், யோவான் முதலிய தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், இரத்தச்சாட்சிகளும், பக்தர்களும் கடவுள் காண்பித்த தயவைக்குறித்த ஞாபகம் இந்த ஜீவனைக் கொடுக்கிற விசுவாசத்துக்கு ஆதாரவாயிருக்கிறதென்று சாட்சியிடுகிறார்கள். 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.' நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தும்படி கடவுள் நமக்கு விலையேறப்பெற்ற ஈவாகிய ஞாபகத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் கடவுள் செய்த உபகாரங்களை அடிக்கடி ஞாபகப்படுத்தாததினால் நமது விசுவாசம் குறைந்துபோகிறது. ஆபகூக் தன் இனிய பாட்டில் கடவுள் செய்த அநேக உபகாரங்களையும் பூரண மீட்பையும் தியானித்துக் காலாகாலங்களிலும் இப்படியே இரட்சிக்கிற யேகோவாவைப்பற்றும் விசுவாசத்தைத் தெரிவிக்கிறான்.

'அத்திமரம் துளிர் விடாமற்போனாலும்,
திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்
போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப்
போனாலும், வயல்கள் தானியத்தை
விளைவியாமற்போனாலும், கிடையில்
ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும்,
தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும்,
நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,
என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்'

என்று பாடினான்.

நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் ஞாபகமும் பக்தி வைராக்கிய அனுபவமும் இல்லையா? நமது ஜீவிய சரித்திரம் தேவனுடைய உண்மைக்குச் சாட்சியாயிருக்கிறதல்லவா? ஆகையால் சங்கீதக்காரன்

உரைத்தபிரகாரம், 'கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்ன செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்' என்றும், பரி. பவுல் உரைத்தபிரகாரம் 'மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்' என்றும் நம்பிக்கையோடே சொல்வோமாக.

## A Bible Reading—Exodus 35. 1-36. 7

**By**

**The Rev. T. Walker, M.A.**

யாத்திராகமம் 35. 1–36. 7

### காணிக்கையைக் கொண்டுவருதல்

கவனிப்பு.—ஓய்வுநாள் ஆசரிப்புக்கும் கர்த்தருடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக் கூடாரத்துக்கும் கிட்டின சம்பந்தமுண்டென்று காண்கிறோம் (31. 1-17; 35. 1-19). அவருடைய திருநாளை மதிக்காதவர்கள் அவருடைய திருச்சந்நிதானத்தையும் நாடமாட்டார்கள். மேலும், ஆவிக்குரிய இளைப்பாறுதலைப் பெற்றனுபவிக்கிறவர்கள்மாத்திரம் அவருடைய வாசஸ்தலமாயிருக்கத்தக்கவர்கள் (பிலி. 4. 5-9; யோவா. 14. 23-27).

1. காணிக்கையைப்பற்றின பிரமாணம். வாக். 4–9.

(1) கர்த்தருக்கென்றே செலுத்தும் காணிக்கை. வாக். 5.
'கர்த்தருக்கு' என்பது இவ்வசனத்தில் இரண்டு விசை வருகிறது. இது மோசேக்கென்றல்ல, கர்த்தருக்கென்றே செலுத்தப்படவேண்டிய காணிக்கை (வாக். 21, 22, 24, 29 காண்க).
சிலர் தங்கள் மிஷனுக்கென்றும் தேவாலயத்துக்கென்றும் சுயமகிமைக்கென்றும் காணிக்கை செலுத்துவதுண்டு. என்றாலும், கர்த்தருக்குச் செலுத்தப்படுவதே காணிக்கை (யோவா. 12. 3-8; 2 கொரி. 8. 5).



(2) மனப்பூர்வமாய்ச் செலுத்தும் காணிக்கை. வாக். 5.
'மனமுள்ளவன் எவனோ அவன் அதைக் கொண்டு வரட்டும்' (2 கொரி. 9. 7; 8. 2, 3).

(3) பற்பலவகையான காணிக்கை. வாக். 5–9. பொன்னும் வெள்ளியும் அவசியமானதுபோல,—நூலும் தோலும் மரமும் அவசியம்.
புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்ட காணிக்கைகளும் பலவிதமென்று அறிவோம் (மத். 2. 11; 26. 7; லூக். 21. 2-4; யோவா. 6. 9; அப். 4. 34-37; மி).

2. வேலையைப்பற்றின பிரமாணம். வாக். 10–19 (வாக். 25, 26; 30–35).

(i) ஞானத்தோடு செய்யவேண்டிய வேலை.

'உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து, கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக.' வாக். 10.
'ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும்...நூற்றார்கள்.' வாக். 25, 26.
'அவர்களுடைய இருதயத்தை ஞானத்தினால் நிரப்பினார்.' வாக். 33, 35.
கர்த்தருடைய ஆவிக்குரிய வாசஸ்தலத்தைக் (எபே. 2. 22) கட்டுகிற வேலைவிஷயத்தில் பரம ஞானமும் பரிசுத்த விவேகமும் அவசியம் வேண்டும் (மத். 10. 16; அப். 6. 3, 10; 11. 22-24; 1 கொரி. 3. 10; யாக். 1. 5).

(ii) பற்பலவகையான வேலை. வாக். 10–19. மி.

நூற்கிற வேலையுமுண்டு (வாக். 25); மயிரைத் திரிக்கிற வேலையுமுண்டு (வாக். 26); பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் செய்யவேண்டிய வேலையுமுண்டு (வாக். 11, 31); மரவேலையும் உண்டு (வாக். 12, 13, 32); இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிற வேலையுமுண்டு (வாக். 32); இன்னும் பற்பல வேலைகளுமுண்டு.

அவ்வாறு,—ஆவிக்குரிய கட்டட வேலையும் பலவிதமானது. அதற்கு வெவ்வேறான வரங்களைப்பெற்ற

வேலையாட்கள் அவசியம் (ரோ. 12. 6-8, 13; எபே. 4. 11-15). பந்தி விசாரணை வேலையுமுண்டு (அப். 6. 2-4); சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வேலையுமுண்டு (அப். 6. 10; 8. 5-8); சபைகளைத் திடப்படுத்தும் வேலையுமுண்டு (அப். 14. 21-23); தர்மப் பணங்களை மேல்விசாரிக்கும் வேலையுமுண்டு (2 கொரி. 8. 16-24); இன்னும் பற்பல வேலைகளும் உண்டு.

(iii) ஸ்திரீகளும் செய்யத்தக்க வேலை. வாக். 25, 26.

வாசஸ்தலத்துக்கு வேண்டிய இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலும் அவர்களுடைய கைவேலை.

மேற்கூடாரத்துக்கு வேண்டிய வெள்ளாட்டு மயிர் மூடுதிரைகளும் அவர்களுடைய கைவேலை.

ஆகையால் இந்த விசேஷித்த வேலையில் அவர்களுக்கு ஓர் முக்கியமான பங்கு கிடைத்ததென்று பார்க்கிறோம்.

திருச்சபைக்கடுத்த சுவிசேஷ ஊழியத்திலும் ஸ்திரீகளுக்குப் பங்குண்டு (லூக். 8. 2, 3; அப். 16. 15, 40; 18. 26; 21. 9; ரோ. 16. 1; பிலி. 4. 2, 3; 1 தீமோ. 5. 9, 10).

(iv) ப்ரம வரங்கள் அவசியம் வேண்டிய வேலை. வாக். 30-35.

'தேவாவியினாலே' (வாக். 33) யோசிக்கவும் (வாக். 31), போதிக்கவும் (வாக். 34), வேலைசெய்யவும் (வாக். 31, 33, 35) தக்க வரங்களைப் பெற்றார்கள்.

அவ்வாறு,—சுவிசேஷ பிரபல்லிய வேலைக்கும் சபையின் பக்திவிருத்திக்கடுத்த வேலைக்கும் ஞான வரங்கள் அவசியம் வேண்டும் (அப். 1. 8; 6. 5, 8, 10; 1 கொரி. 12. 7-11).

3. காணிக்கைகளைக் கொண்டுவந்த விசேஷம். 35. 20-29; 36. 1-7.

(1) மனோற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தார்கள். வாக். 21-24.



'எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ அவர்கள் எல்லாரும்...கொண்டுவந்தார்கள்.'

'மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும்...கொண்டுவந்தார்கள்.'

கட்டாயமாயல்ல உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தார்கள். தங்களுடைய சகலவித பொன்னாபரணங்களையும் மனதாரக் கொடுத்துவிட்டார்கள். அவைகளை முந்திக் கழற்றிப்போட்டிருந்தார்களென்று அறிவோமே (33. 4-6). கழற்றிப்போட்டதுமன்றி இப்போது அவைகளைக் கர்த்தருடைய வேலைக்கு உபயோகமாகக் கொடுத்துவிடுகிறார்கள். இவ்விதமான உற்சாகம் நமக்குள்ளும் காணப்பட்டால் நல்லதல்லவா?

(2) ஸ்திரீகளும் காணிக்கை கொடுத்தார்கள். வாக். 22, 25, 26.

தங்கள் நகைநட்டுகளை மனப்பூர்வமாய்க் கொடுத்துவிட்டார்கள்; தாங்கள் நூற்றதும் திரித்ததுமான மூடுதிரைகளையும் கொண்டுவந்தார்கள்.

வேத சரித்திரங்களில் ஸ்திரீகளுடைய காணிக்கைகள் வெகு விசேஷம் (1 சாமு. 1. 24-28; மாற். 12. 41-44; 16. 1; லூக். 7. 37, 38; 8. 3; யோவா. 12. 3; அப். 9. 36, 39).

(3) பெரியோரும் காணிக்கை கொடுத்தார்கள். வாக். 27, 28.

'பிரபுக்கள்...இரத்தினங்களையும் பரிமளவர்க்கங்களையும்...கொண்டுவந்தார்கள்.'

தனவான்களும் கனவான்களும் தேவனுடைய காரியத்துக்குத் தங்கள் திராணிக்குத்தக்கதாகக் கொடுப்பது அபூர்வம் (மாற். 12. 43, 44; 1 தீமோ. 6. 17-19). ஆகிலும் அவர்கள் அப்படிக் கொடுக்கும்போது தேவன் அவர்களுடைய காணிக்கைகளை மறவார் (லூக். 7. 4, 5; அப். 10. 4).

(4) அதிக ஏராளமாய்க் காணிக்கை கொடுத்தார்கள். 36. 5-7.

'வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருட்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள்.'

'எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருட்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது.'

அதினிமித்தம் இனி காணிக்கைகளைக் கொண்டுவராதபடிக்கு ஜனங்களை நிறுத்தவேண்டியதாய் நேரிட்டது.

கிறிஸ்தவர்களாகிய நமக்குள்ளே இவ்விதமான உதாரத்துவமும் உற்சாகமான ஊழியமும் அதிகமதிகமாய்த் தோன்றவேண்டியது அவசியம் (அப். 4. 34, 35; 2 கொரி. 8. 1-5; பிலி. 4. 15-18).

கவனிப்பு.—காணிக்கை செலுத்துவதிலும் வேலை செய்வதிலும் 'இருதயம்' தான் விசேஷம் (35. 5, 10, 21, 22, 25, 26, 29, 34, 35; 36. 1, 2; எபே. 6. 6; கொலோ. 3. 16, 17).

## The Son of Man

## மனுஷ குமாரன் என்பதைக்குறித்து மூன்று வேத ஆராய்ச்சி பாடங்கள்

### மூன்றும் பாடம்

மனுஷ குமாரனுயிருப்பதற்குக் கிறிஸ்துவானவர் அடையவேண்டியதாயிருந்த கஷ்ட நஷ்டங்கள்.

1. மனுஷ குமாரன் ஆனதில் கிறிஸ்துவானவர் நாம் சுமக்கும் சுமைகளைத் தாமும் சுமக்கச் சம்மதித்தார். எப்படியெனில் மனுஷனுடைய துன்பம், துக்கம், விசாரம் முதலியவைகளுக்கு தம்மை உட்படுத்தினார்.

2. இதை மத். 4. 3, 4-ல் தெளிவாய்த் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கக் காணலாம். அந்தச் சோதனையின் கருத்து என்ன? அது தாம் மனுஷரைப்போல் உபத்திரவத்துக்குள்ளாகாதபடி தம்மை விடுவித்துக்கொள்ள, தம்முடைய பிரயோஜனத்திற்கென்று தேவனுடைய குமாரனுகத் தம்மிடத்திலிருந்த வல்லமையை உபயோகிக்க நேரிட்ட சோதனையல்லவா? இப்படி அவர் செய்ய விரும்பவே இல்லை. அவர் அந்தச் சோதனையை ஜெயித்தார். மனுஷனுக அவருக்குச் சம்பவித்த துன்பங்களிலிருந்து தம்மை



நீக்கிக்கொள்ளத் தம்மிடத்திலிருந்த வல்லமையை அவர் உபயோகிக்கப்படாதா? உபயோகிக்கக்கூடும். ஆனுல் அப்படிச் செய்ய அவர் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக, மனுஷருக்குரிய துன்ப துக்கங்களைச் சகிப்பதையே தெரிந்துகொண்டார். ஆகையால் அவர் மனுஷ குமாரனுக இருப்பதில் அவர் அடைந்த கஷ்டங்களில் இது ஒன்று. தம்முடைய தெய்வீக வல்லமையைத் தன் சொந்த பிரயோஜனத்துக்காக உபயோகிக்க விரும்பவேயில்லை.

3. இதை நாம் அவருடைய ஜீவியம் முழுவதிலும் பார்க்கலாம். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் தம்முடைய தெய்வீக வல்லமையை உபயோகிக்கும்படி எப்போதும் ஆயத்தமாயிருந்தார். ஆனுல் தம்மை ரட்சித்துக்கொள்ளும்படி ஒருபோதும் உபயோகிக்கவே இல்லை.

   (a) மத். 26. 53.
   இந்த வாக்கியத்தின் சந்தர்ப்பம் என்ன? கிறிஸ்துவானவருக்கு (i) வல்லமை இருந்ததென்றும் (ii) அதை உபயோகிக்க விருப்பம் உண்டாயிருக்கவேண்டும் என்றும் (iii) ஆயினும் முன் சொன்னதுபோலத் தாம் வைத்துக்கொண்ட பிரமாணத்தினிமித்தம் அப்படிச் செய்யவில்லை என்றும் இந்த வாக்கியத்தினுல் அறிகிறோம்.

   (b) மத். 27. 39-44.
   அவரைப் பரிகாசம் செய்தது யார்? அவர்கள் சொன்னதென்ன? தேவ குமாரனுக அவர் சிலுவையிலிருந்து இறங்கிவரக்கூடும். அவர் ஏன் அப்படிச் செய்யவில்லை? ஏனென்றுல் அவர் மனுஷ குமாரனுக இருப்பதையே தெரிந்துகொண்டு தம்முடைய தெய்வீக வல்லமையைத் தமக்கென்று உபயோகியாமலிருக்கத் தீர்மானித்தபடியினுலேதான்.

4. கெத்சமனேயிலும், சிலுவைமரத்திலும் நடந்த சம்பவங்கள் யாவும், கிறிஸ்துவானவருக்கு மனுஷ குமாரனுயிருத்தல் எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதைத் தெளிவாய்க் காட்டுகிறது.

   (a) மத். 26. 37-44.
   இதில் கவனிக்கவேண்டிய மூன்று விஷயங்கள்:

(i) தம்முடைய போராட்டத்தில் ஜெயவீரர்களான மனுஷர்கள் தம்மண்டையிருக்கும்படி அவருக்கிருந்த அவசியம்.

(ii) பிதாவானவர், வேறொரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்ற விண்ணப்பம்.

(iii) இது தம் பிதாவின் சித்தம் என்று அறிந்தபின் அவர் அடைந்த ஜெயம்.

(b) மத். 27. 46.

இதில் அடங்கியிருக்கும் பயங்கரமான சத்தியத்தைக் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவானவருடைய ஜீவியத்தின் பொதுவான நிலைமையை யோவான் 8. 29–லும், 16. 32–லும் காண்க. அவர் இப்படி ஓலமிடுவதற்குக் காரணமாயிருந்த நிலைமை எவ்வளவு பயங்கரமாயிருக்கவேண்டும். இப்படி ஓலமிடச் செய்தது என்ன? பாவத்தின் பயங்கரமான பலனல்லவா?

மனுஷ குமாரனாயிருப்பதினால் அவர் அடையவேண்டியதாயிருந்த கஷ்டங்களில் இதுவும் ஒன்று.

5. மூன்று பாடங்களின் தொகுப்பு.

(a) கிறிஸ்துவானவர் தம்மை **மனுஷ குமாரன்** என்று அழைப்பதினால்.

(i) முதல் பாடத்தில் நாம் கற்றுக்கொண்டதென்ன? அவர் நம்மில் ஒருவர். **நம்முடைய சகோதரன்.**

(ii) இரண்டாம் பாடத்தில் நாம் கற்றுக்கொண்டதென்ன? அவர் நம்மைப் பாவத்திலிருந்து இரட்சிக்க வல்லவர். **நம்முடைய ரட்சகர்.**

(iii) மூன்றும் பாடத்தில் நாம் கற்றுக்கொண்டதென்ன? அவர் நமக்காகச் செய்த வேலை. **நம்முடைய பலி.**

(b) ஆகையால் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே (பிலி. 2. 5), நம்மிடத்திலுமிருக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை நாம் காட்டவேண்டும்.

உதாரணமாக அனுதாபம், அன்பு, சுயவெறுப்பு.



# Purity—An Outline Address

**By Mr. A. Samuel, Pudukottah**

## சுத்தம்

### தெருப் பிரசங்கத்தின் சுருக்கம்

சுத்தமாயிருக்கவேண்டுமென்று எல்லாரும் விரும்புவோம். இந்து ஸ்திரீகள் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்ததும் வீட்டைப் பெருக்கிச் சாணியிட்டு மெழுகி, பாத்திரம் முதலியன விளக்கி ஸ்நானம்செய்த பின் சமையல் செய்வார்கள். 'சுத்தம் சோறு போடும், எச்சில் இரக்க வைக்கும்' என்பது உலக பழமொழி. சுத்தமாயிருந்தால் அநேகம் வியாதிகள் அணுகாது.

சுத்தம் மூவகை.

1. வஸ்திரம் சுத்தமாயிருக்கவேண்டும். வஸ்திர சுத்தம் மதிப்புக்கவசியம். 'ஆடையுடையான் அம்பலத்துக்கஞ்சான்.' 'கந்தையானாலும் கசக்கியுடு.'

2. சரீரம் சுத்தமாயிருக்கவேண்டும். சரீர சுத்தம் சுகத்துக்கு அவசியம். நன்றாய் ஸ்நானம்செய்து சரீரத்தைச் சுத்தமாய்ப் பேணவேண்டும் என்று சுகவழி சொல்லுகிறது. 'கூழானாலும் குளித்துக்குடி' என்பது பழமொழி.

3. இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். இதுதான் முக்கியம். இருதய சுத்தம் ஈசனுக்கு அவசியம். சரீர சுத்தத்தையும் வஸ்திர சுத்தத்தையும் புறக்கண்களால் அறியலாம். இருதய சுத்தம் அறிய அகக்கண் அவசியம். முகத்திலிருக்கும் அழுக்கை அறியக் கண்ணாடி வேண்டும். அகத்திலிருக்கும் அசுத்தத்தை அறிய அருள்வேதம் வேண்டும். 'இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு........ மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற். 7. 21-23).' 'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்' என்று திருமறை கூறுகிறது. அகத்தின் அசுத்தம் நீங்கினவர்கள்மாத்திரம் மோட்சம் சேரக்கூடும். இருதய சுத்தம் அடைய அநேகர் புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய்த் தீர்த்தமாடுவார்கள். தீர்த்தமாடினால் சரீர சுத்தம் பெறலாம். ஆயினும் தண்ணீரினால் ஆத்துமா சுத்தமடையாது.

'வேடத்தினலென்ன வெண்ணீற்றின
லென்ன எய்ப்பதற்குக்
கூடைச் சடைவளர்த்தா லென்ன
நீரில் குளித்து மென்ன
ஓடித் தலங்களைச் சென்ன
நூலொரு கோடி கற்ற
பாடத்தின லென்ன வுண்டாம்
அவர்க்குப் பராபரமே'

என்றொரு பக்தன் பாடுகிறார்.

'தீர்த்தமாடினாலும் தீவினை தீராதே, ஊத்தைபோனாலும் உள்வினை தீராதே' என்று ஒரு ஞானி பாடுகிறார். ஆகையால் கிரியையினாலும் அநுஷ்டானங்களினாலும் சற்கருமங்களாலும் நம்முடைய இருதயம் சுத்தமாகாது. இருதய சுத்தம் இயேசுவினால்மாத்திரம் கிடைக்கும்.

அவர் நம்முடைய பாவத்தைப் போக்கவும் பரிசுத்தத்தைக் கொடுக்கவும் இப்பாரினில் வந்து அவதரித்து சுத்தாங்க பரிசுத்தனாய் ஜீவித்து சற்போதனைகளைப் போதித்தார். 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.' 'விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று' என்று போதித்தார்.

அவர் நமக்குப் பதிலாக தம்மைத்தாமே பாடுகளுக்கும், மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார். தமது திருஇரத்தத்தைச் சிந்தி, மரித்து, மூன்றாம் நாளிலே ஜெயவேந்தராக உயிர்த்தெழுந்தார். அவர் சிந்தின திருஇரத்தம் நம்முடைய பாவக்கறைகளை நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. இவ்விதமாய் நம்மை நேசித்த மீட்பரை நாம் நம்பி, அவரில் பக்தி வைத்து, அவருடைய சீஷர்களாகும்படி நம்மை அவருக்குத் தத்தம்பண்ணவேண்டும். அவர் நமக்குச் சுத்த இருதயத்தைக் கொடுப்பார். இம்மையிலும் நாம் சமாதானமும் சந்தோஷமும் அடைவோம். மறுமையிலும் மோட்சத்தில் நீடூழிகாலம் சுகித்திருப்போம்.

'அகத்தின் அசுத்தம் அகற்றுவதவசியம்,
அகத்தின் அசுத்தம் அமலனுக்குதவா,
அகத்தின் அசுத்தம் அமலன் அகற்றுவார்,
அமலன் அகற்றினால் ஆனந்தம் அடைவாய்.'



# The Treasury

## பொக்கிஷசாலை

### லிவிங்ஸ்தோன் செய்த போதனை

லிவிங்ஸ்தோன் என்னும் பெயர் உலகமெங்கும் பிரசித்தமானது. ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்குமுன் அக்காலத்தில் ஒருவருங் கண்டுபிடியாத ஆபிரிக்காவிலுள்ள வனாந்தரங்களைத் தாண்டி, பயங்கரமான சிங்கம், யானை, காடி முதலான காட்டுமிருகங்களைக் கொன்று அங்குமிங்கும் பிரயாணம்பண்ணி ராக்ஷதரைப்போன்ற மிலேச்சர்களின் மத்தியில் வசித்து அவர்கள் மனதில் கிறிஸ்தவ மார்க்கமாகிய மெய்யொளி பிரகாசிக்கும்படி பிரயாசப்பட்டார். அவர் இப்படியே பல வருஷங்களாகத் தேவ ஊழியம் செய்தபிறகு சீமை தேசத்திற்கு வந்து அங்கே சிலகாலம் இருந்தபோது ஒருநாள் ஒரு பள்ளிக்கூடத்தில் சிரேஷ்ட ஆசிரியராயிருந்த தன் சிநேகிதனைப் பார்க்கும்படி போனார். பேர்பெற்ற பிரயாணியாகிய அவர் அங்கே வந்திருக்கிறதைக் கேள்விப்பட்டு அப்பள்ளி மாணவர் சந்தோஷம் அடைந்து அவர் தமது பிரயாணத்தில் நடந்த விநோதமான காரியங்களைப்பற்றித் தங்களுக்குச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் முதலில் மாணவர் கேட்டதற்கு சம்மதிக்காவிட்டாலும் கடைசியில் அவர் அதற்குச் சம்மதித்தார். மாணவர் எல்லாரும் பிரசங்கத்தைக் கேட்கும்படி ஓர் பெரிய மண்டபத்தில் வந்து கூடினார்கள்.

அப்போது அவர் பிரசங்க பீடத்தில் நின்று பிள்ளைகளைப் பார்த்து நடுநடுங்கி நின்றார். பிரசங்கத்தை ஆரம்பிக்க இரண்டு மூன்று தடவை அவர் பிரயாசப்பட்டும் அதில் பழக்கம் இல்லாததினால் அவரால் பேச முடியவில்லை. கடைசியில் அவர் 'பிள்ளைகளே... பிள்ளைகளே...பிள்ளைகளே! கடவுளுக்குப் பயந்து அவர் உங்களுக்கு இட்ட எந்த வேலையையும் அதிக உற்சாகத்தோடு செய்யுங்கள்' என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இந்தச் சிறு வார்த்தைகளில் நீண்ட பிரசங்கத்தின் பொருள் எல்லாம் அடங்கியிருக்கிறது என்று சொன்னார்கள்.

### சவுல் கழுதையைத் தேடுகிறது

சவுலின் வாலிபப் பிராயச் சரித்திரத்தை வாசிக்கும் ஒருவன்: ராஜ்யபாரத்தைக்கொண்டு செலுத்தக்கூடியவர்களில் அநேகர் தங்களுக்குக் கிடைக்கும் உத்தம சிலாக்கியத்தை அறியாமல் சவுலைப்போல் கழுதைகளைத் தேடுகிறவர்களாக இருக்கிறார்களே எனப் புலம்புவான்.

அப்படியிருக்க சவுல் சாமுவேல் தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுபோல் நாமும் தேவன் நமக்கருளும் கிலாக்கியங்களைக்குறித்து வேதத்தினாலும் பிரசங்கிமார்களினாலும் அறிவிக்கப்படும்போது, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்போமானால் நாம் இவ்வுலகில் ஏழைகளாய் இருந்தாலும் பரம ராஜ்யத்தில் சிறந்த சிம்மாசனத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். 1 சாமு. 9. 20; வெளி. 1. 6.

### ஞாபகமொழி A Motto

ஒரு வித்துவான் சொன்னதாவது: அன்னிய தேசத்தைப் போன்ற இவ்வுலகத்திற் கூடாக நான் ஒருதடவைமாத்திரம் பிரயாணம்செய்வேன். ஆதலால் நான் இவ்வுலகத்தில் ஒருவனுக்கு இரக்கமும் பரிதாபமும் காட்டி நன்மைசெய்யக் கூடுமானால் அதை இப்போதே செய்வது அவசியம்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 58 மார்ச்சு 1911

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 11 MAR 1911 MADRAS.

# வேதியர் விளக்கு

## Magic in Old Testament Times

## பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள சூனியவித்தை

1. இதைக்குறித்து வேதாகமத்தில் சொல்லியிருக்கும் பதங்கள்.

அஞ்சனம். லேவி. 27. 27; 1 சாமு. 28. 3; 2 இரா. 21. 6.
அமாவாசி கணிக்கிறவன். ஏசா. 47. 13.
அம்புகளைக் குலுக்குதல். எசே. 21. 21.
ஈரலால் குறிபார்ப்பது. எசே. 21. 21.
ஊரீம் தும்மீம். யாத். 28. 30; லேவி. 8. 8; உபா. 33. 8; யோசு. 16. 1; 1 சாமு. 14. 41.
எத்தர்கள். 2 தீமோ. 3. 13.
கல்தேயர். தானி. 1. 4.
குறிசொல்லுதல். லேவி. 27. 27; 1 சாமு. 28. 3; எசே. 21. 21; உபா. 18. 10.
குறிகேட்கிறவன். உபா. 18. 11.
சன்னதக்காரன். உபா. 18. 11.
சாஸ்திரி. தானி. 2. 27.
சீட்டுப்போடுதல். லேவி. 16. 8; யோசு. 21. 4; நியா. 20. 9; நீதி. 16. 33; யோனா 1. 7; 1 சாமு. 14. 41.
சூனியம். ஏசா. 47. 12.
சூனியவித்தை. மீகா 5. 12.
சூனியக்காரி. யாத். 22. 18.
சொப்பனக்காரன். ஆதி. 37. 19; உபா. 13. 1; யூதா 1. 8.
ஜோசியர். ஏசா. 47. 12.
ஸ்தம்பன வித்தை. ஏசா. 47. 12.
ஞானதிருஷ்டி. ஆதி. 44. 5; அப். 10. 10.
தரிசனம் சொல்லுதல். சக. 13. 4; எண். 24. 3, 16.

‘தொராபீம்.’ ஆதி. 31. 19; நியா. 18. 24; 1 சாமு. 19. 13; 2 இரா. 23. 24; எசே. 21. 21.
நட்சத்திரம் பார்க்கிறவன். ஏசா. 47. 13.
நிமித்தம் பார்க்கிறவன். எசே. 21. 21.
நாளைச் சபிக்கிறவர். யோபு 3. 8.
நாள் பார்க்கிறவன். உபா. 18. 10; ஏசா 2. 6.
‘பாம்பாட்டிகள் ஊதும் சத்தம்.’ சங். 58. 5.
பில்லிசூனியம். 1 சாமு. 15. 23; 2 இரா. 9. 22; கலா. 5. 20.
மந்திரவாதி. ஆதி. 41. 8; உபா. 18. 11; ஏசா. 19. 3; அப். 19. 13.
மாயவித்தைக்காரன். உபா. 18. 11.
முணுமுணு என்று ஓதுகிற குறிகாரர். ஏசா. 8. 19.

## 2. சூனிய உற்பத்தி.

முதலில் தேவனுடைய சித்தத்தை அறியவேண்டும் என்ற வாஞ்சையே சூனியம் செய்வதற்குக் காரணம். ஆதியிலே கானான் தேசத்தில் உள்ளவர்களுக்குள் நியமிக்கப்பட்ட பூசாரிமாராகிய ஆசாரியர்கள் ஜனங்கள் தங்கள் தேவதைகளைத் தொழுதுசெய்யும் விண்ணப்பத்திற்குக் கொடுக்கும் உத்தரவை அவர்களுக்குத் தெரிவிப்பார்கள். இப்படித் தெரிவிக்கிறவர்கள் எல்லா ஆசாரியருமல்ல, அவர்களிற் சிலர் மாத்திரந்தான். அவர்கள் வணங்கிவந்த தேவர்கள் பலரானதினாலும், அவர்களை வணங்கினவர்கள் பலரானதினாலும், அவர்களுடைய வணக்கம் பலவிதமாய் இருந்ததினாலும், விண்ணப்பம் செய்கிறவர்களுக்கு ஆசாரியர்கள் கொடுக்கும் உத்தரவும் பலமாதிரியாய் இருந்தது.

எபிரெயர்கள் கானான் தேசத்திற்கு வந்தபோது அவர்கள் யேகோவாவை வணங்குவதோடு, அஸ்தரோத் முதலியவர்கள் வாஸ்தவமாய்த் தேவர்கள் என்று நம்பினதினால் அந்தத் தேவர்களின் தயவு தங்களுக்குக் கிடைக்கும்படி பூர்வீகத்தார் வணங்கின அந்தத் தேவர்களைத் தாங்களும் பலமுறையும் வணங்க நேரிட்டது. இவ்விதமாய்ப் பூர்வீகத்தார் வணங்கின தேவர்களின் தயவைப் பெறுவதும், மறைபொருளை அறிவதுந்தான் எபிரெயர்களுக்குள் நடந்த சூனியத்துக்குக் காரணம். இதினிமித்தம் யேகோவாவுக்குச் செய்யும் வணக்கத்திற்கும் இந்தவிதமான சூனியத்திற்கும் தீராத விரோதம் இருந்தது என்று நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசன ஆகமங்களிலும் பலமுறையும் சொல்லியிருக்கிறதைப் பார்க்கிறோம். இஸ்ரவேலர் வரவர யேகோவாவை உண்மையாக நம்பி அன்னிய தேவர்களின் ஆசாரத்தோடு சேர்ந்த சூனியம் எல்லாவற்றையும் கண்டித்து



வந்தார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்தபிற்பாடு அவர்களிற் சிலர் சூனியத்தை அனுசரித்து வந்தாலும் பெரும்பாலும் அவர்கள் ஆவிக்குரியவிதமாய் யேகோவாவை வணங்கி அதை முற்றிலும் வெறுத்தார்கள்.

## 3. இஸ்ரவேலருக்குள்ளே இருந்த சூனியத்தின் வரலாறு:

(i) ஆபிரகாம் முதலிய ஆதி பிதாக்களின் காலமுதல் அசீரியர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்த காலம்வரையும், எபிரெயர்களில் மந்திரவாதிகளாய் இருந்தவர்கள் ‘தொராபீம்’ என்னும் சுரூப வணக்கம், சொப்பனார்த்தம், மரித்தோரைப் பாதாளத்திலிருந்து அழைக்கும் மந்திரம் ஆகிய இவைகளை அனுசரித்தார்கள். மந்திரங்களைச் சொல்லித் தேவனுடைய சித்தத்தை அறியலாம் என்பது எல்லாத் தேசத்தவர்களுக்கும் பொதுவான நம்பிக்கையாய் எப்படி இருந்ததோ அப்படியே சூனியவித்தையில் தேறினவர்கள் மரித்தோரைப் பாதாளத்திலிருந்து அழைக்கக்கூடும் என்னும் நம்பிக்கையும் எபிரெயருடைய மனதில் உறுதியாயிருந்தது.

நியாயப்பிரமாணத்தில் எபிரெயர்கள் சீட்டுப்போடுவதினாலும் குறிகேட்பதினாலும், யேகோவாவின் சித்தத்தை அறிவது நியாயமாயினும், யேகோவாவை வணங்கினவர்கள் சூனியத்தினால் அதை அறியும்படி பிரயாசைப்படுவது பெருந்தீமை என்று தீர்மானித்து அந்தக் குற்றத்திற்கேற்ற தண்டனைகள் ஏற்படுத்தினார்கள். அப்படியே முதல் ராஜாவாகிய சவுல் இப்படிச் செய்தவர்களை தேசத்தில் இராதபடி துரத்திவிட்டான் (யாத். 22. 18; 1 சாமு. 28. 3).

(ii) அசீரியர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய் வந்தபோது இஸ்ரவேலர் சுற்றிலுமிருந்த ஜனங்களோடு ஐக்கியப்பட்டவர்களாய் அந்த ஜனங்கள் நடத்தின சூனியவித்தை பழகும்படி தங்கள் தேசத்தில் இடங்கொடுக்கவேண்டியதாய் வந்தது. ராஜாவாகிய எசேக்கியாவும் யோசியாவும் அன்னிய தேவர்களின் விக்கிரக ஆராதனையையும், பலவித சூனியத்தையும், தொராபீம் முதலிய தேவர்களையும் தேசத்திலிருந்து அகற்றும்படி பிரயாசைப்பட்டார்கள் (2 இரா. 18. 4; 23. 24; ஏசா. 2. 6; எரே. 10. 12).

(iii) எபிரெயர்கள் பாபிலோனியாவில் சிறையிருப்பில் பலவித விநோதமான சூனியத்தைப்பற்றி அறிய வந்தார்கள். பாபிலோனியாவில் சூனியவித்தையும் மறைபொருள் தெரிவிப்பதும் ராஜாவின் பரிவாரங்களில் உள்ள பலருக்கு உத்தியோகமாய் இருந்தது. தானியேலின் ஆகமத்தில் மந்திரம் எழுதுகிறவர்களும், பில்லிசூனியம் செய்கிறவர்களும், மருந்து போடுகிறவர்களும், மாயவித்தைக்காரர்

களும், ஜோசியர்களும் சொல்லப்பட்டிருக்கிறார்கள் (தானி. 2. 2; ஏசா. 47. 12).

(iv) புதிய ஏற்பாட்டில் மாயவித்தைக்காரனாகிய சீமோன், எலிமா என்பவர்களைப்பற்றியும் தந்திர மந்திரங்களைப்பற்றியும் சொல்லியிருக்கிறது. எபேசு பட்டணத்தில் மந்திரவாதிகள் அனேகர் இருந்தார்கள் (அப். 8. 9; 13. 8; 19. 9).

4. சூனியத்தின் விசேஷ நோக்கங்களாவன:

a. வரப்போகிற காரியங்களை அறிதல். (*Divination.*)
b. நினைத்த காரியத்தை இரகசியமாய் முடித்தல். (*Magic.*)

A. வருங்காரியங்களை அறிதல்.

(i) சீட்டுப்போடுதலினால் எபிரெயர்கள் தங்கள் ஜனத்தையும் தங்களையும் நடத்திக்கொள்ளுவது, விசாரணையில் குற்றவாளிகளை அறிவது, ஆராதனையில் காணிக்கையாகக் கொடுத்த மிருகத்தைத் தெரிந்தெடுப்பது, தேசத்தைப் பங்கிடுவது, விசேஷித்த ஊழியத்திற்காக ஆட்களை நியமிப்பது ஆகிய இவைகளில் யேகோவாவின் சித்தத்தை அறிவது நியாயந்தான் என்று நினைத்தார்கள்.

'ஊரீம் தும்மீம்' என்பது ஒருமாதிரியான சீட்டுப்போடுதலைக் குறிக்கலாம்.

சிலவேளைகளில் அம்பறாத்தூணியைக் குலுக்கி அதிலிருந்து விழும் அம்பினால் தேவனுடைய சித்தத்தை அறிவார்கள் (எசே. 21. 21).

சிலவேளைகளில் பலியிட்ட மிருகங்களின் ஈரலைப் பார்த்துக் குறி சொல்லுவார்கள் (எசே. 21. 21).

(ii) கனவின்மூலமாய் யேகோவாவின் சித்தத்தை அறியக்கூடும் என்பது இஸ்ரவேலருக்குள் உறுதியான நம்பிக்கையாய் இருந்தது. இது சிலதடவை உண்மையாய் இருந்தாலும், கள்ளத்தீர்க்கதரிசிகள் இதினால் பலரை ஏமாற்றினார்கள் (உபா. 13. 1; எரே. 28. 25). தீர்க்கதரிசிகளோ உண்மையுள்ள தேவதரிசனங்களைத்தவிர மற்ற எல்லாச் சூனியமும் மந்திர தந்திரங்களும் மோசமானவைகளே என்று தீர்மானித்தார்கள் (ஏசா. 28. 7; எண். 24. 3).

(iii) குறிசொல்லுதல் பலவிதமாய் இருந்தது. சில மந்திரவாதிகள் பாத்திரத்தில் தண்ணீர் அல்லது ரசம் வார்த்து அஞ்சனக்காரர்களைப்போல் அதைப் பார்த்து, பின்வரும் காரியங்களை முன் அறிவிக்கிறோம் என்று சொன்னார்கள். யோசேப்பு வைத்திருந்த பாத்திரம் இதைப்போன்றது என்று சிலர் நினைக்கிறார்கள் (ஆதி. 44. 5). மேகங்களையும் நட்சத்திரங்களையும் பார்த்துக் குறிசொல்லுகிற ஜோசியர்கள் விசேஷமாய்ப் பாபிலோனியாவில் இருந்தார்கள். தானி



யேல் பாபிலோனிய ஞானிகளில் சிரேஷ்டனாயிருந்தாலும் அவன் இவ்விதமான சாஸ்திரங்களில் தேறினவனாயிருந்தானோ இல்லையோ என்பது நமக்குத் தெரியாது.

(iv) சூனியத்தில் தேறினவர்கள் வருங்காரியங்களை அறியும்படி ஆவிகளையும் மரித்தோர்களையும் அழைக்கக்கூடும் என்று இஸ்ரவேலர் உறுதியாய் நம்பினார்கள். சூனியக்காரர் தங்களிடத்தில் குறிகேட்கிறவர்களுக்கு இந்த ஆவிகளைக் காண்பிப்பார்கள் அல்லது அவைகளின் சத்தம் கேட்கும்படி செய்வார்கள். யூதர்கள் அல்லாமலும் கிரேக்கரும் இந்தவிதமான அதிகாரம் சூனியக்காரருக்கு உண்டென்று நம்பினார்கள். மரித்தோரின் ஆவிகள் இந்த உலகத்திற்குத் திரும்பவும் வாராதென்று நம்மால் சொல்லமுடியாது. கடவுளுக்குச் சித்தமானால் அவைகள் வரமுடியும். ஆனால் சூனியத்தினால் ஒருவன் இவைகளை அழைக்கக்கூடும் என்பதற்குப் போதிய அத்தாட்சி இல்லை. இந்த மாதிரியான சூனியக்காரர் ஏசாயா சொன்ன 'முணுமுணு என்று ஓதுகிறவர்களும்,' பரி. பவுல் சொன்ன 'எத்தர்களும்.'

(v) தெராபீம் குடும்பத்தை க்ஷேமமாய்க் காப்பாற்றும் கிராம தேவதைகளைப்போன்ற தேவர்கள். முற்காலத்தில் எபிரெயர்களில் சிலர் மரித்தவர்களிடத்திலிருந்து தேவசித்தத்தை அறியும்படி எப்படி பிரயாசைப்பட்டார்களோ, அப்படியே தெராபீம் இடத்திலிருந்து அறியும்படி பிரயாசைப்பட்டார்கள் என்று நாம் நினைக்கலாம். பிற்காலங்களில் இவைகளின்மூலமாய் மற்றவர்களை மோசஞ்செய்யும்படி பிரயாசைப்பட்டார்கள் என்று தோன்றுகிறது.

B. நினைத்த காரியத்தை இரகசியமாய் முடித்தல்.

புதைக்கப்பட்டிருக்கும் திரவியம் முதலியவற்றை அடைவது, விரோதிகளுக்கு மோசம்செய்வது ஆகிய இவைகளைச் சூனியத்தின்மூலமாய் முடித்துக்கொள்ளலாம் என்று எபிரெயர்கள் நம்பினார்கள். மேலும் கண்திருஷ்டி, மரணம், வியாதி நீக்கும்படியும் இவைகளினால் மற்றவர்களை உபாதிக்கும்படியும் சூனியம் செய்வார்கள்.

(i) மற்றவர்கள் செய்த சூனியத்தின்மூலமாய் உண்டான மோசம் நீங்கும்படி செய்யும் சூனியம் நல்லது என்பது அக்காலத்தவர்களின் அபிப்பிராயம். இவ்விதமான பொல்லாத ஆவிகளும் சத்துருக்களும் செய்த பிரயத்தனத்தினின்று தங்களைக் காப்பாற்றும்படி பாபிலோனியா அசீரியா ராஜாக்கள் ஜோசியர் முதலியவர்களைத் தங்கள் அரமனையில் வைத்துச் சம்ரக்ஷணை செய்துவந்தார்கள். இதினிமித்தம் குளிசம், காப்பு முதலியவைகளை அநேகர் அணிந்து வந்தார்கள். வேதாகமத்தில்

சொல்லியிருக்கும் ‘பிறைச்சிந்தாக்கு,’ ‘காதணி’ முதலியவைகள் இப்படிப்பட்ட தாயித்துகளாய் இருந்தனவென்று நினைக்கிறதற்கு இடம் உண்டு (ஏசா. 3. 18).

(ii) தீர்க்கதரிசிகள் மற்றவர்களுக்கு விரோதமாய்ச் செய்த சூனியத்தை அடிக்கடி கண்டித்து வந்தார்கள். இந்தச் சூனியம் பலவிதமாய் இருந்தது. சிலர் மந்திரம் ஓதிக் கீரைகளைச் சமைத்து அதைத் தெளித்துச் சாபம் இடுவார்கள்; சிலர் மருந்துபோடுவார்கள்; சிலர் கயிறுகளில் முடிச்சுக் கட்டுவார்கள்; சிலர் சுபாசுப தினங்களைக் குறித்துச் சொல்லுவார்கள்; சிலர் சத்துருவைப்போல் சுரூபம்செய்து அதில் காயத்தைக் காட்டும் சில வடுக்கள் பண்ணுவதினால் அந்தச் சத்துருவுக்கு மோசம் உண்டாகுமென்று நினைத்தார்கள்.

(iii) ஆதி கிறிஸ்தவர்களில் அநேகர் சூனியத்திற்குப் பயப்பட்டார்கள். ஆனால் அவர்கள் வரவர ஆவிக்குரியவிதமாய்க் கடவுளின் சித்தத்தை அறிந்து சூனியத்தில் யாதொரு உண்மையும் இல்லையென்று தீர்மானித்தார்கள். பேதைமை உள்ளவர்கள் சூனியக்காரர்களிற் சிலர் தாங்கள் இருந்த காலத்தில் மற்றவர்களுக்குத் தெரியாத கலைக்கியானத்தை அடைந்து, மற்றவர்களுக்கு அற்புதமாய்த் தோன்றுகிற காரியங்களைச் செய்தார்கள் என்றும், அகஸ்மாத்தாய்ச் சூனியக்காரர் சொன்னதின்படி நேரிட்டவைகளை பார்த்துப் பயந்து சூனியக்காரர் அதிசயமானவைகளைச் செய்யக்கூடியவர்கள் என்றும் எண்ணிக்கொண்டார்கள். ஆனால் கிறிஸ்தவ வேதமாகிய ஒளி உதித்த தேசங்களிலுள்ள ஜனங்கள் புத்திபோதனையில் விருத்தி அடைந்த அளவுக்குத்தக்கபடி சூனியவித்தை அகன்றுபோயிற்று.

## A Bible Reading — Exodus 36. 8–39. 43.

**By**

**The Rev. T. Walker, M.A.**

### யாத்திராகமம் அதி. 36. 8–39. 43.

### கர்த்தருடைய வாசஸ்தலத்தை ஆயத்தப்படுத்தல்

(முதல் பாகம்)

**கவனிப்பு.**—ஆசரிப்புக் கூடாரத்தின் விசேஷங்கள் ஏறக்குறைய எல்லாம் 25–31 அதிகாரங்களில் முந்தி வந்தபடியால் அவ்வதிகாரங்களுக்குச் சொன்ன வியாக்கியானக் குறிப்புகளைக் காண்க. நூதனமாய் வருகிற சில விஷயங்களைமாத்திரம் இங்கே எடுத்துக் காட்டினால் போதும்.



### 1. மாதிரியின்படியே வெகு திட்பநுட்பமாய் வேலை செய்வது.

25–31 அதிகாரங்களோடு 36–39 அதிகாரங்களைக் கவனமாய் ஒத்துப் பார்த்தால் முந்திவந்த வக்கணை, வாசகம், வார்த்தைகள் எல்லாம் பிந்தின இவ்வதிகாரங்களில் மறுபடியும் வருகிறதென்று தெரியவரும். திருஷ்டாந்தமாக, 26-ம் அதிகாரத்தோடு 36. 8-38 ஒத்துப்பார்க்க. 26. 1-லே ‘திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்பு நூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக’ என்று கர்த்தர் கற்பித்தபடியே, ‘திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்பு நூலினாலும் பத்து மூடுதிரைகளைப் பண்ணினான்’ என்று வாசிக்கிறோம் (36. 8). ஒவ்வொரு விஷயத்திலும் அப்படியே.

அதாவது பெசலெயேல் முதலானவர்கள் வேலை செய்யும்பொழுது, போதுப்படமாத்திரம் திவ்விய மாதிரியைப் பார்த்து வேலை செய்யாமல், அதை நுட்பமாய்க் கவனித்துப் பார்த்து, ஒன்றிலாவது அதை விட்டுவிடாதபடி, அதிக கரிசனையோடும் ஜாக்கிரதையோடும் அதற்குச் சரியாகவே வேலை செய்தார்கள் (25. 40; எபி. 8. 5).

நாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கவேண்டுமானால் (1 கொரி. 3. 16, 17; 6. 19; 2 கொரி. 6. 16; வெளி. 21. 3). பரிசுத்த ரட்சகர் காட்டின மாதிரியின்படியே நாம் இருக்கவும் நடக்கவும் வேண்டியது அவசியம்; நம்முடைய குண கிரியைகள் யாவும் அவருடைய குண கிரியைகளுக்கு ஒப்பாயிருக்கவேண்டும் (யோவா. 13. 15; 1 பேது. 2. 21; 1 யோவா. 2. 6; 4. 17). அவரோடு ஐக்கியப்படுகிற விசுவாசிகளுக்கு இது தேவ ஆவியால் ஆகும் (2 கொரி. 3. 17, 18).

மேலும்,—கர்த்தருக்கென்று ஆவிக்குரிய வாசஸ்தானத்தை ஆயத்தப்படுத்தும் ஊழிய விஷயங்களிலும் (எபே. 2. 20-22; 1 பேது. 2. 4, 5) நம்முடைய சுய யோசனையின்படி வேலை செய்யாமல் அருள்வேதத்தில் காட்டின மாதிரியின்படியே நாம் வேலை செய்யவேண்டும். இந்தச் சிறந்த மாதிரி முக்கியமாய் நாலு சுவிசேஷங்களிலும் நடபடி புத்தகத்திலும் காட்டப்பட்டிருக்கிறது.

2. **வெளிப்புறத்தைப்பார்க்கிலும் உட்புறந்தான் மிகவும் சிறந்தது.** பொன் எல்லாம் வாசஸ்தலத்துக்குள்ளே உபயோகமானது (36–37 அதிகாரங்களைக் காண்க).

உள்ளே நின்ற தட்டுமுட்டுகளில் சிலது பொன்னினால் செய்யப்பட்டும் இன்னும் சிலது பொன் தகடுகளால் மூடப்பட்டுமிருந்தன. ஆகவே,–உட்புறம் எல்லாம் பொன்மயமாயிருந்தது. வெளிப்பக்கத்திலோ வெள்ளியும் வெண்கலமும் உபயோகமானது (அதி. 38). அதுவும் நல்லதும் காரியத்துக்கு எற்றதுமாயிருந்தபோதிலும், உட்புறந்தான் அதிக அழகும் அலங்காரமுமாயிருந்தது.

எத்தனையோ ஜனங்களுடைய காரியம் இதற்கு முற்றிலும் பேதமாயிருக்கிறது. வெளிக்குப் பக்திமான்களாய்க் காணப்படுகிறார்கள்; உள்ளுக்குள்ளோ மெய்ப்பக்தி யில்லாதவர்களாயிருக்கிறார்கள் (மத். 23. 25-28; அப். 5. 1, 2; 2 தீமோ. 3. 5).

'ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது' என்பதுபோல (சங். 45. 13), நம்முடைய வெளியரங்கமான கிரியைகள் நன்றாயிருப்பதுமன்றி, விசேஷமாய் நம்முடைய உள்ளான பக்தி சிறந்து விளங்கவேண்டும் (எபே. 3. 16-19; கொலோ. 3.10).

3. **வெண்கலத்தொட்டி ஸ்திரீகளின் தர்ப்பணங்களால் உண்டாக்கப்பட்டது. 38. 8.**

நம்முடைய முகத்தைப் பார்ப்பதற்கு நாம் கண்ணாடிகளை உபயோகஞ் செய்வதுபோல அவர்கள் வெண்கலத் தர்ப்பணங்களை உபயோகிப்பார்கள்.

ஆவியில் எழுப்புதலடைந்த இந்த ஸ்திரீகள் தங்கள் முகத்தைப் பிரியத்தோடு பார்ப்பதையும் தங்களைப் பெருமையோடு அலங்கரித்துக்கொள்வதையும் விட்டுவிட்டுத் தங்கள் தர்ப்பணங்களைக் கர்த்தருடைய காரியத்துக்கென்று கொடுத்துவிட்டார்கள். முந்தி வீண் பெருமைக்கும் சுய சிநேகத்துக்கும் ஏதுவாயிருந்த பொருட்கள் இதினால் தேவனுடைய மகிமைக்கும் ஆசாரியருடைய சுத்திகரிப்புக்கும் ஏதுகரமாயினவென்று காண்கிறோம். அவ்வாறு, நமக்குச் சோதனைக்கு இடமான காரியங்களை இனி நமக்கு வேண்டாமென்று இரட்சாபெருமானுடைய திருப்பாதத்தில் வைத்துவிடுவோமென்றால் அவருடைய பரிசுத்த-நாமம் மகிமைப்



படுவதற்கு அவைகள் ஏதுவாகலாம் (லூக். 7. 37, 38; 19. 8, 9; பிலி. 3. 4-11).

ஸ்திரீகளுடைய காணிக்கை எவ்வளவோ விசேஷம் (35. 22, 25, 26). அவர்களுடைய தர்ப்பணங்களால் செய்யப்பட்ட ஸ்நானத்தொட்டியில் தேவனுடைய பணிவிடைக்காரர் தினந்தோறும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவித்தான் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கவேண்டும். அதில்லாமல், ஆராதனையும் நடக்காது; பலியுமிராது; தேவாசீர்வாதமும் உண்டாகாது.

(இன்னும் வரும்)

# The Cross

**By the Rev. L. Reichard**

## சிலுவை

சிலுவை பார்சீகர், மேதியர், சீரியர், கர்தாகியர் இவர்களிடத்தில் வழங்கின வாதைக் கருவி. ரோமர் சிலுவையைத் தண்டனை செய்யும் கருவியாகக் கையாடினார்கள். இக்கருவிக்குப் பூர்வீகத்தில் பல பெயர்கள் இருந்தன. பிந்தினகாலத்திலே குருக்ஸ் (Crux) என்னும் லத்தீன் பதம் பொதுவாய் வழங்கினது. இப்பதம் பூமியில் நட்டிருக்கும் நெடுமரத்தின் நுனியின்மேலாகிலும் (T) அதற்குச் சற்றே கீழாகிலும் (|) தைத்திருக்கும் இரண்டு மரங்களைக் குறிக்கிறது. இந்தச் சிலுவை மரங்கள் இரண்டும் கரடு முரடுள்ளவை. குறுக்குமரம் ஒரு ஆளின் இரண்டு கைகளையும் நீட்டி அதில் அவைகளை அறையத்தக்க நீளமானது. ஆண்டவருக்குத் தாகம் உண்டானபோது அவர் குடிக்கிறதுக்குக் காடி நிறைந்த கடற்காளானை ஈசோப்புத்தண்டு ஒன்றில் மாட்டி அவர் வாய்க்குக் கிட்ட நீட்டினார்கள் என்று யோவா. 19. 29-ல் வாசிக்கிறோம். ஈசோப்புத்தண்டு 1–2 அடி நீளமானதால் நெடுமரம் உயரமானது அல்ல என்பது விளங்கும். நெடுமரம் பெரும்பாலும் பூமிக்குள் நடப்பட்டிருக்க மரணத்தீர்ப்புக்குள்ளாபவன் குறுக்குமரத்தை நெடுமரம் நடப்பட்ட இடத்திற்குச் சுமந்துகொண்டு போவான். அங்கே இக்குறுக்குமரத்தை நெடுமரத்தோடு பதிப்பார்கள். பிற்பாடு குற்றவாளியின் கைகளையும் கால்களையும் கயிறுகளால் சிலுவையோடு சேர்த்துக் கட்டுவார்கள் அல்லது ஆணிகளால் அறைவார்கள்.

கால் நிற்கிறதுக்கு நெடுமரத்தில் ஒரு கட்டை அமைக்கப்பட்டிருந்ததோ என்பது சந்தேகத்துக்கு இடம் ஆகும். சில சமயங்களில் திரேகத்தைத் தாங்குகிறதற்கு நட்ட மரத்தில் ஒரு கட்டை தைத்திருக்கும்.

மரணத்தீர்ப்புக்குள்ளானவனைச் சிலுவையில் அறைவதற்குக் கொண்டுபோகும்போது அவன் செய்த குற்றம் இன்னதென்று காட்டுகிற ஒரு எழுத்துப் பலகை (Titulus) அவன் கழுத்தைச் சுற்றிப் போட்டிருக்கும். இப்பலகை (மத். 27. 37; மாற். 15. 26; லூக். 28. 38; யோவா. 19. 29) இயேசுவின் சிரசுக்குமேல் பதிக்கப்பட்டதால் அவரை அறைந்த சிலுவை நமக்குத் தெரிந்த குருசுபோல இருந்ததென்பது நிசம்.

அந்திரேயாவின் சிலுவை X என்னும் அச்சரத்தைப்போன்றது. இந்தச் சிலுவை ஒன்றில் அப்போஸ்தலனாகிய அந்திரேயா அறையப்பட்டான் என்பது பாரம்பரை. ரோமாபுரியில் தரையிலுள்ள (Catacombs) கெபிகளில் வெட்டப்பட்ட கல்லறைகளின் சுவற்றில் இது வரையப்பட்டிருக்கிறது. இது கிரேக்க பாஷையில் கிறிஸ்து என்கிற பதத்தின் முதல் எழுத்தைக் குறிக்கிறது.

## சிலுவை என்பதுக்குரிய ஞானார்த்தம்

(a) கிறிஸ்து சிலுவையில் தொங்கி இறந்தது அவர் நடப்பித்த இரட்சணிய கிரியையில் எல்லாவற்றிலும் முக்கியமானதால் (யோவா. 3. 14) இரட்சிப்பைக் கூறும் சுவிசேஷம் எல்லாம் சிலுவையைப்பற்றிய சுவிசேஷம் என்னப்பட்டிருக்கிறது (1 கொரி. 1. 18).

(b) அதுவுமன்றி சிலுவை அதேகாரணத்தால் கிறிஸ்து நமக்கு உண்டுபண்ணின இரட்சிப்புக்கும் அவர் ஏற்படுத்தின கிறிஸ்துமார்க்கத்துக்கும் அடையாளமே.

(c) மேலும் சிலுவை கிறிஸ்து இரட்சணிய கிரியையின் நிமித்தம் பட்டனுபவித்த பாடுகளுக்கும் மரணத்துக்கும் அடையாளமானதால் அது கிறிஸ்தவனுக்கு வரும் எந்தத் துன்பத்தையும் அல்ல இயேசு இரட்சகரை அவன் பின்செல்வதினாலும் அவரைக்குறித்து அறிக்கையிடுவதினாலும் வரும் துன்பங்களையும் அவமானத்தையும் குறிக்கிறது.

## சிலுவையில் அறைதல்

சிலுவையில் அறைதல் மரணத்தீர்ப்புக்குள்ளானவனை மிகவும் அவமானப்படுத்திக் கடோர வேதனைசெய்வதே.

செத்தவர்களையும் அவமானத்துக்காக இன்னும் சிலுவையில் அறைவதும் இருந்தது. கொடோர வேதனையோடு மனுஷர்களைக் கொல்வது யூதர்களுக்கு அருவருப்பாகவே இருந்ததால் 'தூக்கிப்போடுதல்' என்னும் எபிரெய பதத்திற்குச் சத்தியவேதத்தில் (ஆதி. 40. 19;



யோசு. 10. 26; உபா. 21. 22), முந்தி கொல்லப்பட்டவர்களினது பிரேதங்களை பின்பு எச்சரிப்புக்காகவும் அவமானத்துக்காகவும் ஒரு மரத்திலாவது தூக்கு மரத்திலாவது தூக்கிப்போடுதலைக் குறிக்கும் என்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. பிந்தின்காலத்தில் யூதர்கள் பெனிக்கியர்களைப்போல் இவ்வாறே குற்றவாளிகளையும் சத்துருக்களையும் கொல்லுவார்கள்.

ரோமர், கர்தாகியர் செய்ததுபோல் யூதர்கள் முதலில் அடிமைகளை மாத்திரம் சிலுவையில் அறைந்து வந்தும் பின்பு சுயாதீன ஜனங்களையும் சிலுவையில் அறைந்தார்கள். ஆயினும் சிலுவையில் அறையப்பட்டவர்கள் பெரும்பாலும் தாழ்ந்த ஜனங்களாயிருந்தார்கள். கொலை, கலகம், திருட்டு, வஞ்சனை ஆகிய இவைகள் சிலுவையில் அறைவதற்கு ஏதுவாயின. அறையுமுன் மரணத்தீர்ப்புக்குள்ளானவனை அடிப்பது ரோமருக்குள் வழங்கினது. மரணத்தீர்ப்புக்குள்ளானவன் அடிமையாயிருந்தால் வாரினாலும் சுயாதீனமுள்ளவனாயிருந்தால் தடியினாலும் அடிக்கப்பட்டான்.

பல ஊர்களில் சிலுவைகளை நடுவதற்கு நியமிக்கப்பட்ட இடம் ஒன்று இருந்தது. அவ்விடம் ஊருக்கு வெளியே எங்கும் காண்கிற மேடுகளின்மேலும் ஜனங்கள் நடக்கும் வழி ஓரத்திலும் இருந்தது. மரணத்தீர்ப்புக்குள்ளானவனுடைய வஸ்திரம் சிலுவையில் அறையும் சேவகருக்குச் சொந்தமாயிற்று.

கொடோர வேதனையினாலும் இரத்தஞ் சிந்துதலினாலும் காயங்களால் உண்டான காய்ச்சலினாலும் அறையப்பட்டவர்கள் சீக்கிரத்தில் இறந்தது ஆச்சரியமல்ல. ஆயினும் பலர் சில நாட்களாக அவஸ்தைப்பட்டபின் மாத்திரம் இறந்தார்கள். அப்படி சிலுவையில் தொங்கினவர்கள் வெகுநேரம் அவஸ்தைப்படாதபடிக்குக் காவலாளர் இவர்களைக் கால்களை முறித்தாவது ஈட்டியினால் குத்தியாவது கொன்று பிரேதங்களைக் காட்டு மிருகங்களுக்கு இரையாகவிட்டார்கள். நியாயப்பிரமாணத்தின்படி (உபா. 21. 22, மி) சிலுவையில் அறையப்பட்டவர்களின் பிரேதத்தை இரவில் தொங்கவிடுதல் கூடாத காரியமானதினாலும் எந்த வேலையும் செய்யக்கூடாத ஓய்வுநாள் சமீபித்ததினாலும் யூதர்கள் சாயந்திரத்தில் சிலுவையில் தொங்கின இயேசுநாதருக்கும் இரண்டு குற்றவாளிகளுக்கும் கால்களை முறிப்பதினால் கொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். சிலுவையில் தொங்கினவர்களுக்கு மயக்கம் உண்டாகும்படிக்கு மருந்து கலந்த பானம் கொடுப்பது யூதர்களுக்கு வழக்கமாய் இருந்தது.

நாலாவது நூற்றாண்டுவரையில் சிலுவையில் அறைதல் வழங்கினது.

## சிலுவை வரைதல் (போடுதல்)

சிலுவை வரைதல் இரண்டாம் நூற்றாண்டில் வழங்கினது என்பது நிச்சயம். வெளியே போகும்போதும், உள்ளே வரும்போதும், துணிகளை உடுத்தும்போதும், குளித்து முழுகும்போதும், சாப்பிடும்போதும், விளக்குகளைக் கொளுத்தும்போதும், படுக்கும்போதும், உட்காரும்போதும் நெற்றியில் சிலுவை வரைதல் எங்களுக்கு வழக்கம் என்றும் இவ்வழக்கம் முந்தி நெடுநாள் இருந்தது என்றும் தெர்த்துல்லியான் (Tertullian 160-230) எழுதிவைத்தான். சிலுவை வரைதல் அப்போஸ்தலர் ஏற்படுத்தின ஒரு முறைமை என்று பசிலியு (Basil 329-379) சாதிக்கிறான். கொன்ஸ்தான்தீனுக்குப் பிந்தினகாலத்தில் இம்முறைமை அதிகமாய் வழங்கத் தொடங்கிற்று. சாப்பிடுமுன் தயார்செய்த உணவின்மேல் சிலுவை வரைந்து வந்தார்கள். சண்டைக்குப்போன சேவகன் முந்தி நெற்றியில் சிலுவை வரைந்தான். ஆராதனையில் ஜெபஞ்செய்யும்போதும் சுவிசேஷ வாக்கியத்தை வாசிக்கும்போதும் பிரசங்கம் தொடங்குவதற்குமுன்னும் எந்தத் திருப்பெயரையாவது சொல்லும்போதும் குருவாகிலும் சபையாராகிலும் சிலுவை வரைந்து வந்தார்கள். திரு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்பவன் முழுகுமுன் அவன் மார்பிலும் நெற்றியிலும் சிலுவை வரையப்பட்டது. இப்படி மற்ற ஆராதனை முறைமைகளிலும் சிலுவை வரைதல் வழங்கிற்று. ரோமான் சபையில் மீசா (Mass) என்னும் ஆராதனையில் 25 தரமாவது, 55 தரமாவது சிலுவை வரைதல் முறைமை (Ordo Romanus, ரோமான் முறைமை) சீர்திருத்த சபையில் சிலுவை வரைதல் அரிது. சில இங்கிலீஷ் சபைகளிலும் பல லுத்தரன் சபைகளிலும் திரு ஞானஸ்நான முறைமையிலும் திரு இராப்போசன முறைமையிலும் ஆசீர்வாதம் கூறும்போதும் இது வரையப்படும். இதை வரைகிறவர்கள் ஆராதனையில் சிலுவை வரைதல் கிறிஸ்துமார்க்கத்துக்கும் ஞானதிரவியங்களுக்கும் இயேசுவின் சிலுவை ஊற்றும் காரணமும் என்று சபையாருக்கு நினைப்பூட்டுவதற்கு நடக்கிறது என்று சொல்லுவார்கள்.

## சிலுவை வணக்கம்

கிறிஸ்துமார்க்கம் பரம்பினபின் கோவில்களிலும், கோவில்களுக்குமுன்பாகவும், பீடங்களின்மேலும், கல்லறைத் தோட்டங்களிலும், வழி ஓரத்திலும் சிலுவை வைப்பது வழக்கமாயிற்று. சிலுவைகள் கிறிஸ்து நமக்காகப்பட்ட பாடுகளையும் அடைந்த மரணத்தையும் நினைப்பூட்டுவதற்குத்தான் முதலில் வைத்திருந்தும் பிந்தினகாலத்தில் அந்தச் சிலுவைகளே வணக்கத்துக்குப் பொருளாயின. எத்தனைக்கு



அதிகமாய்ச் சபையார்கள் சிலுவைகளை வீண்பக்திக்கு வணங்கினார்களோ அத்தனைக்கு அதிகமாய்க் கிறிஸ்துவை மறந்துவிட்டார்கள். இக்காரணத்தால் திருச்சபை சீர்திருந்தி வீண்பக்தியெல்லாம் குலைந்துபோனதெங்கேயோ அங்கே சிலுவை வணக்கம் அபூர்வம். சுவிசேஷ கிறிஸ்தவர்கள் கோவில்களிலும் கல்லறைத் தோட்டங்களிலும் சிலுவையை வைப்பதால் சிலுவையின் அடையாளம் அவர்களுக்கு கிறிஸ்துவினால் உண்டான இரட்சிப்பையும் நித்திய ஜீவனின்மேலுண்டான நம்பிக்கையையும் குறிக்கும் அருமையான அடையாளத்தைத்தவிர வேறல்ல.

# The Synagogue

## ஜெப ஆலயம்

### 1. ஜெப ஆலயத்தின் சரித்திரம்.

'ஜெப ஆலயம்' என்பது சில வசனங்களில் ஓரிடத்திலே தேவனைத் தொழுதுகொள்ளும்படி கூடிவந்த சபையார்களின் சங்கத்தைக் குறிக்கிறது (அப். 9. 2; வெளி. 2. 9). ஆனால் ஐம்பதுக்கதிகமான வசனங்களில் 'ஜெப ஆலயம்' சபையார்கள் ஆராதனை நடத்திக்கொள்ளும்படி கட்டின வீட்டைக் குறிக்கிறது (மத். 4. 23, மி). சிறையிருப்பில் இருந்த எபிரெயர்கள் பாபிலோனியா தேசத்தில் தேவாலயத்தின் ஆசாரத்தை நடத்திக்கொள்ளாமல், வேதாகமத்தையும் தீர்க்கதரிசிகள் உரைத்த வாக்கியங்களையும் கேட்கும்படி கூடி வருவார்கள். இவ்விதமாய் அவர்கள் எசேக்கியேலின் வீட்டுக்கு வந்தார்கள் (எசே. 8. 1; 20. 1). ஒருவேளை அப்போது இதற்காகவே ஜெப ஆலயங்களைக் கட்டினார்கள். எப்படியாவது நெகேமியாவின் காலமுதல் நியாயப்பிரமாணத்தைப்பற்றிப் போதனை அடையும்படி, தாங்கள் இருந்த ஊர்களிலெல்லாம் தேவாலயங்களைக் கட்டினார்கள்.

### 2. ஜெபாலயக் கட்டடமும் அதிலிருந்த பணிமுட்டுகளும்.

வழக்கமாய் ஜெப ஆலயம் சதுரமாயிருக்கும். அதின் வாசல் தெற்குத் திசையை நோக்கியிருக்கும். ஸ்திரீகளுக்கு அதற்குள்ளே பிரத்தியேகமான இடமிருக்கும். நியாயப்பிரமாணச் சுருளை வைக்கும்படி நேர்த்தியான பெட்டி ஒன்றும், அப்பெட்டிக்கு முந்தி இராப்பகலாய் எரிந்துகொண்டிருக்கும் தீபமும், வேதாகமத்தை வாசிக்கவும் பிரசங்கம்பண்ணவும் ஒரு பீடமும், அதைக் கேட்கும்படி கூடிவந்தவர்களுக்காக ஆசனங்களும், பெரியவர்களுக்குப் பீடத்திற்குமுன்பாக

விசேஷித்த ஆசனங்களுமிருக்கும். அந்த விசேஷித்த ஆசனங்களுக்கு 'முதன்மையான ஆசனங்கள்' என்று பெயர் (மத். 23. 6).

### 3. ஜெப ஆலயத்து உத்தியோகஸ்தர்கள்.

அவ்வூரிலிருந்த மூப்பர்கள் ஜெப ஆலயத்தைப் பார்த்துக்கொள்ளுவார்கள். அவர்கள் ஒருவனைக் காரியஸ்தனாக ஏற்படுத்துவது வழக்கம். இவன் 'ஜெப ஆலயத்தலைவன்' (மாற். 5. 22; லூக். 8. 41; 13. 14). இந்தத் தலைவன் அதிலுள்ள ஆராதனையைப்பற்றிய ஒழுங்கு செய்வான் (அப். 13. 15). ஜெப ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தஞ் செய்யவும், பெட்டியிலிருந்து சுருளை எடுக்கவும், மறுபடியும் அதைப் பெட்டியில் வைக்கவும், குற்றவாளிகளை வாரினால் அடிக்கவும் 'ஜெப ஆலயத்துப் பணிவிடைக்காரன்' ஒருவனிருந்தான் (மத். 10. 17; 23. 34; லூக். 4. 20).

### 4. ஜெப ஆலயத்து ஆராதனை.

புதிய ஏற்பாட்டின் காலத்திற்குப்பின் நடத்தின ஜெப ஆராதனையின் முறை நமக்குத் தெரியும். இயேசுவின் காலத்தில் இந்த முறையின்படி ஆராதனை நடந்தது என்று நாம் நினைக்கவேண்டும். அந்த ஆராதனையில் நாலு பாகங்களுண்டு.

(i) முதலாவது, எல்லாரும் நின்று சில வேதவசனங்களை உரத்த சத்தத்தோடு ஒருமித்துச் சொல்லுவார்கள். அந்த வாக்கியங்களாவன (உபா. 6. 4-9; 11. 13-21; எண். 15. 37-41). பிறகு ஸ்தோத்திர வசனம் சொல்லுவார்கள்.

(ii) பிறகு ஒருவன்மாத்திரம் நின்று மற்றவர்களுக்காக ஜெபம் பண்ணுவான்.

(iii) ஜெபஞ்செய்தபின் சிலர் பீடத்தின்மேல் நின்று நியாயப்பிரமாணத்திலிருந்து வேதபாடத்தை வாசிப்பார்கள். ஓய்வுநாட் காலை ஆராதனையில் மாத்திரம் இன்னொருவன் தீர்க்கதரிசன ஆகமங்களிலிருந்து தானே தெரிந்தெடுத்த வேதபாடத்தை வாசிப்பான். இவ்வாறே, இயேசு நாசரேத்தூரிலே ஏசாயா தீர்க்கதரிசனத்திலிருந்து ஒரு பாடம் வாசித்தார் (லூக். 4. 16).

அநேகருக்கு வேதாகமம் எழுதப்பட்ட எபிரெய பாஷை தெரியாததினால், வாசித்த வேதபாடங்கள் ஜனங்கள் வழங்கின பாஷையில் மொழிபெயர்த்துச் சொல்லப்படும். இயேசுவின் காலத்தில் ஜெப ஆலயங்களிலே சங்கீதங்கள், நீதிமொழி, யோபு, உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, தானியேல், எஸ்றா, நெகேமியா, நாளாகமப் புத்தகங்கள் வாசிக்கமாட்டார்கள். வேதபாடத்தை வாசித்த



பிறகு, ஒருவன் பீடத்தின்மேல் உட்கார்ந்து ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்யலாம்.

(iv) கடைசியிலே ஒரு ஆசாரியன் எண். 6. 24-26 ஆசீர்வாதமாகச் சொல்லுவான். ஆசாரியன் இல்லாவிட்டால், இன்னொருவன் ஜெபம்பண்ணி ஆராதனையை முடிப்பான்.

### 5. ஜெப ஆலயத்தின் பிரயோஜனம்

ஜெப ஆலயத்தின் மூப்பர்கள் குற்றவாளிகளை நியாயந்தீர்க்கும்படி அதில் கூடுவார்கள்; அதிலே பிள்ளைகளுக்காகப் பள்ளிக்கூடமிருக்கும். ஓய்வுநாள்தோறும் மற்றும் சில நாட்களிலும் அதில் ஆராதனை நடக்கும்.

ஆதலால் ஜெப ஆலயங்கள், எந்த ஊர்களிலும் சன்மார்க்கத்திற்கு அடையாளமாகவும் ஏதுவாகவுமிருந்தது. இவைகளில் பலி செலுத்தாமலும், சடங்காசாரங்களில்லாமலும், ஆவிக்குரிய விதமாய்க் கடவுளை வணங்கும்படி யூதர்கள் பழகிவந்தார்கள். சிதறியிருக்கிறவர்களும் பல தேசங்களில் தங்களுக்காக ஜெப ஆலயங்களைக் கட்டினார்கள். இவைகளில் புறமதஸ்தர்கள் மெய்க்கடவுளைப்பற்றிய வணக்கத்தை அறிந்துகொள்ளுவார்கள். தேவாலயம் அல்ல, ஜெப ஆலயமே கிறிஸ்தவ சபைகளுக்கு முன்மாதிரியாக இருந்தது.

## The Shepherd and the Sheep

### ஆயனும் ஆடும்

சங். W. S. Dodd 'ஆயனும் ஆடும்' என்னும் புத்தகத்தைப் பற்றி எழுதினதாவது: இப்பெயரையுடைய ஒரு அருமையான புத்தகம் C. L. S. சங்கத்தாரால் தற்சமயம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. L. M. S. சங்கத்தைச்சார்ந்த Mr. C. அருமைநாயகம் என்பவர் இதின் ஆக்கியோன். கிரந்தகர்த்தாவின் நாமமே இப்புத்தகம் இன்பமும் எளிதுமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் என்று வாசிப்போருக்கு வற்புறுத்தும். இதின் கிரயம் அணா 10. ஆனாலிது கொடுக்கும் போதனையின் மேன்மையோ பணத்தினால் கணக்கிடுதற்கரிது. இது சபை ஜீவியத்தைக்குறித்த ஒரு கதாரூபமாயிருக்கின்றது. இதைப்பற்றி நாம் புகழ்ச்சியாய்ப் பேசக்கூடிய தென்னவெனில், இப்புத்தகம் ஒவ்வொரு போதகர், ஆசாமி, சபை அங்கத்தார் யாவருடைய கரத்திலும் காணப்படவேண்டுமென்பதே. அதை அனைவரும் ஜெபத்தோடும் சிந்தையோடும் வாசிப்பார்களானால் அதில்

ஒவ்வொருவருக்கும் தேவனிடத்திலிருந்து ஒரு செய்தி நேராய் அனுப்பப்பட்டிருக்கிறதென்று அறிவார்கள். நாமெல்லாரும் அதின் போதனையை அனுசரிக்கப் பிரயாசமெடுத்தால், உவேல்ஸ் நாட்டிலும் கொரியா தேசத்திலுமுண்டாயிருக்கிறதைப்பார்க்கிலும் அதிக மகிமையான எழுப்புதல் நமது சபைகளில் உண்டாகுமென்பதற் கையமில்லை. அதிலிருந்து சில நீண்ட வாக்கியங்களை யாம் ஈண்டெடுத்து எழுதலாம். ஆனால் இடமில்லை. என்றாலும் அப்புத்தகத்தின் முடிவுரை வாக்கியத்திலொன்றையாயினும் யாம் எழுதாமலிருக்க முடியாது. அது வேதபுத்தகத்தின் நடையையும் நோக்கத்தையும் நன்கு விளக்கும்.

'இந்தக் கதை முடிந்தது. அதின் அர்த்தம் என்னவென்றால், நம்முடைய நாட்டில் வேலைசெய்து வருகிற தேவதொண்டர்கள் மெய்யான இரட்சிப்படைந்து பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களாகவும், நமது கிறிஸ்தவர்கள் பரமசிந்தை அடைந்து சுவிசேஷ போதனைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களாகவும் இருப்பார்களானால், நமது சபைகளுக்கும் நமது தேசத்திற்கும் ஒருவராலும் விஸ்தரிக்க முடியாத உன்னத ஆசீர்வாதங்கள் உண்டாகும்.'

தாமதிக்காமல் C. L. S. சங்கத்துக்கு உடனே எழுதி ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்களிம்மட்டும் வாங்கிய புத்தகங்களுள் இது 10 அணவுக்கு மிகச் சிறந்ததென்று அறிந்துகொள்ளுவீர்கள்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 10 APR 1911 MADRAS.

No. 59 எப்பிரல் 1911

# வேதியர் விளக்கு

## Geraint and Lynette

### கேரேந்தும் லீனெத்தும்

[பிரசங்கிமார் வாலிபர்களுக்கு நற்போதனை கொடுக்கும்படி செய்யும் பிரசங்கத்தில் முன்னோர்கள் சொன்ன இந்த உவமை மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் என்றறிந்து இதை விவரமாய் எழுதியிருக்கிறோம்.]

பூர்வீகத்தில் செழிப்பான ஒரு தேசத்தை அரசாண்ட உலோத்து என்னும் ராஜா வயதுசென்றவனானபோது, அவனுடைய முதல் இரண்டு குமாரரும் பெரிய ராஜாவாகிய ஆத்தரின் சேனையில் போர் வீரர்களாய்ப் போக இளைய மகனாகிய கேரேந்த் தாய்தந்தையருடன் வீட்டில் இருந்தான்.

ஒருநாள் கேரேந்த், ஆற்றங்கரையில் நிற்கும்போது ஒரு மரம் வெள்ளத்தினால் அசைக்கப்பட்டு வேரோடு விழுந்து ஆற்றில் மிதந்து போகிறதைக் கண்டு, 'அந்த மரம் வெள்ளத்தினால் எப்படி விழுந்ததோ, அப்படியே எனக்கு வாளிருந்தால், பொல்லாத யுத்தவீரரும், கொடிய ராஜாக்களும் அதினால் விழுந்துபோவார்களே. எனக்குப் புத்தியும் வல்லபமுமிருந்தாலும், என்னுடைய தாய் ஏன் என்னை ஓர் குழந்தையாகப் பாவிக்கிறாள்? என் நல்ல தாய் எனக்கு ஏன் தீமை செய்கிறாள்? கடவுள் நான் செய்யும் ஓயாத வேண்டுதலைக் கேட்டு அவள் நான் மற்றவர்களோடு யுத்தத்திற்குப் போவதற்கு எனக்கு விடை கொடுக்கும்படி உதவிசெய்வாராக' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அதன்பின் அவன் நாடோறும் தன் தாயை வருந்திக் கேட்டதாவது:

'என் அருமைத் தாயே! நீங்கள் என்னைக் குழந்தைப்பிள்ளையென்று மதிக்கிறது நல்லதா? நீங்கள் என்னை நேசிக்கிறீர்களானால் நான் சொல்வதைக் கேளுங்கள்.

முற்காலத்தில் ஆத்தர் ராஜாவைப்போல ஒரு ராஜா இருந்தார். அவருடைய மூத்த குமாரன் வளர்ந்தபோது, தான் விவாகம் செய்யும்படிக்கு ஒரு பெண்ணைப் பார்த்து, அவளைத் தனக்கு விவாகம்செய்து கொடுக்கும்படி தன் தகப்பனிடத்திற் கேட்டான். அதற்கு ராஜா இரண்டு பெண்களை அழைத்து அவனுக்குமுன் அவர்களை நிறுத்தினுன். ஒருத்தி அழகுள்ளவளாய் இருந்தாள். இவளுடைய பெயர் நற்கீர்த்தி. இவளை விவாகஞ்செய்ய விரும்புகிறவன் யுத்தகளத்தில் சண்டைசெய்து ஜெயம் அடையவேண்டும். வெற்றிகொள்ளாதவன் மற்றவளை விவாகஞ் செய்யவேண்டும். அவளை ஒருவனும் விரும்பவில்லை. அவளுடைய பெயர் இழிவு. என் தாயே! நீங்கள் என்னை எப்பொழுதும் வீட்டிலே வைப்பீர்களாஞல், நான் இழிவு என்பவளை விவாகஞ்செய்ய வேண்டியதாய் வரும். நான் பெரியவன் ஆனேன். யுத்தவீரன் செய்யவேண்டிய கடமையை நானும் செய்யவேண்டும்' என்முன்.

இவ்விதமாய்க் கேரேந்த் பலமுறை கேட்டுக்கொண்டதிஞல், இவனுடைய தாய் 'நான் உதவியற்றவளாயிருக்கிறேன். உன்னுடைய தகப்பன் வியாதிப்பட்டு வயதுசென்றவராயிருக்கிருர். உன்னுடைய சகோதரர் ஆத்தர் ராஜாவின் பரிவாரத்தில் இருக்கிருர்கள். என் கண்மணியாகிய நீயும் போஞல் நான் என்ன செய்வேன்? யாதொரு நோவும் வருத்தமும் தெரியாத நீ யுத்தகளத்தில் உண்டாகும் காயங்களைச் சகிப்பது எப்படி? அன்றியும் என் மகனே! நமது சொந்தக் காடுகளில் மான்களைத் தொடர்ந்து வேட்டையாடுவதில் உன் கெட்டித்தனத்தைக் காட்டு. நான் உனக்கு ஒரு அழகான பெண்ணைத் தேடி விவாகத்தில் கொடுப்பேன். நான் காலஞ்சென்றபிற்பாடு அவள் உனக்கு ஆறுதலாயிருப்பாள்' என்முள்.

இதற்குக் கேரேந்த்: 'வேட்டை யாடுவேஞ? நான் கஷ்டத்திலே ராஜாவையும், கிறிஸ்துவையும் சேவிப்பேன்; சுத்தமாய் நடப்பேன்; உண்மையைப் பேசுவேன்; தீமையை நீக்குவேன். என் தாயே! உங்களுடைய உத்தரவைப் பெறுவதற்குத் தீயிலே நடக்கச் சொன்ஞலும் நடப்பேன்' என்முன்.

அப்போது இவனுடைய தாய் விடாப்பிடியான இவனுடைய விருப்பத்தைக் கண்டு, இவன் வேண்டுதலுக்கு இசைந்து, 'உனக்கு இவ்விதமான விருப்பம் இருந்தால் நீ போகலாம். ஆஞல், நீ என்னை நேசிக்கிறதைக் காட்டும்பொருட்டு, ஒரு காரியத்தில் என் கட்டளைப்படி செய்யவேண்டும்' என்முள்.

கேரேந்த் இதைக் கேட்டு மனமகிழ்ந்து, 'நீங்கள் நூறு காரியங்களைக் கேட்டாலும், நான் செய்வேன். அவைகளைச் சொல்லுங்கள்!

OFFICE OF THE … 10 APR 1911 MADRAS.



அம்மா' என்று சந்தோஷங்கொண்டு சொன்ஞன். தாய் இவனைப் பார்த்து, 'என் மகனே, நான் சொல்வது என்னவென்முல், நீ மறைவாய் ஆத்தரின் அரமனைக்குப் போய், அங்கே உன் பெயரை ஒருவருக்கும் சொல்லாமல் ஒரு வருஷம், ஒருநாள் அவருடைய சமையற்காரரோடு கூலிக்காக வேலைசெய்யவேண்டும்' என்முள்.

ராஜகுமாரஞகிய கேரேந்த் இவ்வித இழிவான வேலையைச் செய்யச் சம்மதிக்கமாட்டான் என்று கருதி அவள் இப்படிச் சொன்ஞள். ஆஞல் கேரேந்த் சற்றுநேரம் பேசாமலிருந்து தன் தாயைப் பார்த்து: 'நான் அடிமையாய்ப் போஞலும், என் மனம் சுயாதீனமாயிருக்கும். ராஜா யுத்தத்திற்குப் போகும்போது வேலைக்காரரும் போவார்கள். என் தாயே! நான் மறைவாய்ப் போய், ராஜாவுக்கும் என் பெயரைச் சொல்லாமல், சமையல் அறையிலுள்ள கூலிக்காரரோடு வேலை செய்வேன்' என்முன்.

மாதாவின் விடைபெற்றபின் ஒருநாள் விடியற்காலத்திலே கேரேந்த் எழுந்து, இரண்டு வேலைக்காரரை அழைத்து, அவர்களைப் போலத் தானும் உடுத்திக்கொண்டு அவர்களோடு புறப்பட்டான். அவர்கள் பசுமையான வயல்களையும், பூக்களுள்ள காடுகளையும், ஓடுகிற ஆறுகளையும் கடந்துபோய், அப்பாலே பெரிய நகரத்தின் கோபுரங்களும், தூபிகளும் வெயிலிலே பளபள என்று மின்னுவதைக் கண்டார்கள். அதைக் காணவே சந்தோஷ மிகுதியிஞல் வேகமாய் நடந்து நகரத்துட் பிரவேசித்தார்கள். அதிலுள்ள விநோதங்களையும், பழைய ராஜாக்களாற் கட்டப்பட்ட அழகான அரமனைகளையும், கோட்டை கொத்தளங்களையும் பார்க்கப் பார்க்க அவர்களுக்கு வெகு ஆச்சரியம் உண்டானது. ஆஞல், கேரேந்த் இவைகளைவிட யுத்த ஆயுதங்கள் அணிந்த போர்வீரர் அங்குமிங்கும் போய்வருவதைக் கண்டு அளவிடா ஆனந்தம் அடைந்தான். கடைசியாய் அவர்கள் ஆத்தர் ராஜாவின் நியாயஸ்தலத்துக்கு வந்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கிற ராஜாவையும் அவருக்கு இருபக்கத்திலும் நிற்கிற போர்வீரர்களையும், மந்திரிமார்களையும் கண்டார்கள். அந்தச் சாலையின் இருபக்கங்களிலும் பல நூதனமான கேடகங்கள் தொங்கியிருந்தன. ஒவ்வொரு கேடகத்தின் கீழும் அதை வைத்திருந்த யுத்தவீரனின் பெயர் பதிக்கப்பட்டிருந்தது. கேரேந்த் இவைகளை உற்றுப் பார்க்கையில் ஒருவன் வந்து இவனுக்கு 'இந்தக் கேடகங்கள் இன்னதென அறிய விரும்புகிருய். சித்திரித்து அலங்கரிக்கப்பட்ட கேடகம் வைத்திருந்த யுத்தவீரன் ஒரு மேன்மையான யுத்தம் செய்திருப்பான். வர்ணந்தீர்ந்த விநோதமான கேடகத்தை வைத்திருந்தவன் இன்னும் மேன்மையான காரியங்களைச் செய்திருப்பான். அலங்காரம் இல்லாத கேடகங்களை வைத்திருந்தவர்களோ

இதுவரையும் விசேஷமான காரியம் ஒன்றும் செய்யவில்லை' என்று சொன்னான். அவன் பேசுகையில் ஒரு விதவை அந்தப் பெரிய சாலையில் வந்து: 'ராஜாவே! என் விண்ணப்பத்தைக் கேளும்! உம்முடைய தகப்பன் என் புருஷனிடத்திலிருந்து ஒரு பூமியைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டார். அதாவது: அப்பூமியை முதலில் அவர் விலையாய் வாங்க விரும்பியபோது, நாங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்போது அவர் போர்வீரரை அனுப்பி அப்பூமியைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொண்டு, அதின் விலையையுங் கொடாதுவிட்டார்' என உரத்த சத்தமாய்க் கூவினாள்.

ஆத்தர் ராஜா இதைக் கேட்டு 'உனக்கு அந்தப் பூமி வேண்டுமோ?' என்று கேட்க, அந்த விதவை, 'அது என்னுடைய கணவன் அதிகமாய் விரும்பின பூமி' என்று கண்ணீர்விட்டுச் சொன்னாள். ராஜா: 'தகப்பனார் செய்த தீமை மகனுக்கு நன்மையாய் முடியமாட்டாது. ஆகையால் நீ விரும்பிய அந்தப் பூமியை எடுத்துக்கொள். அதுவுமல்லாமல் என் தகப்பனார் அதை அனுபவித்துக்கொண்ட வருஷங்களில் அதிலிருந்து வந்த வரும்படியையும் உனக்குக் கொடுக்கிறேன்' என்றார்.

இவள் போகும்போது இன்னொரு விதவை வந்து, 'ராஜாவே! மற்ற ராஜாக்கள் உமக்கு விரோதமாய் யுத்தம் செய்தபோது அவர்களுடைய சேனையில் போர்வீரனாய் இருந்த என் கணவனை அப்போரில் நீர்தான் கொன்றுபோட்டீர். அதினால் நான் உதவியற்றவளானேன். அப்போது என் மைத்துனன் வந்து என் மகனைப் பிடித்துக் கோட்டையில் அவனை அடைத்துப் போஜனமில்லாமல் கொன்றுபோட்டு, என் கணவனுடைய ஆஸ்தியையும் எடுத்துக்கொண்டான். நாங்கள் உமக்குச் சத்துராதிகளாயினும், அதந்தாம் என்னுடையதாகும்படி ஓர் போர்வீரனை அனுப்பவேண்டுமென்று வேண்டிக்கொள்ளும்படி வந்தேன்' என்றாள்.

இதைக்கேட்ட ஒரு யுத்தவீரன் 'ராஜாவே! என் விண்ணப்பத்தைக் கேளும். நான் அவளுடைய இனத்தான். அந்த அநியாயஞ் செய்தவனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து அவனுக்குத் தண்டனை செய்யும்படி எனக்கு உத்தரவு கொடும்' என்று வணக்கமாய்க் கேட்டான்.

உடனே ஆத்தர் ராஜா 'இந்த ராஜ்யத்தில் நடக்கும் எல்லாத் தீமைகளையும் நீக்கும்படி நாம் ஆளுகை செய்கிறோமாகையால், அவளுடைய இனத்தானாகிய நீயே போய் அந்தச் சத்துருவைக் கொல்லாமல் நான் நியாயம் விசாரிக்கும்படி அவனை இங்கே கொண்டுவரவேண்டும்' என்று கட்டளைகொடுத்தார்.



பிற்பாடு பொல்லாங்கனாகிய மாற்கு என்னும் ஒரு ராஜாவினால் அனுப்பப்பட்ட ஸ்தானாபதி ஒருவன் வந்தான். அவன் கைகளில் பார்ப்போர் கண்களைக் கூசப்பண்ணும் பொன்மயமான அழகிய ராஜவஸ்திரமொன்று இருந்தது. அவன் அரசனுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி அவ்வஸ்திரத்தை அவர் முன்பாக வைத்து 'என் ஆண்டவர் எனக்குப்பின் வருகிறார். இந்த வெகுமதியை நீர் ஏற்றுக் கொள்ளும்படி அனுப்பி இருக்கிறார்' என்று சொன்னான்.

இந்த மாற்கு ஆத்தர் ராஜாவின் யுத்தவீரரோடு சேர விரும்பினான். ஆனால் ஆத்தர் ராஜா 'மாற்குவின் கேடகத்தை மற்றக் கேடகங்களோடு நாம் வைக்கலாமா? யுத்தத்தில் வெற்றிகொண்டவர்களில் இரக்கமுள்ளவர்களும், தைரியமுள்ளவர்களும், மனச்சுத்தமுள்ளவர்களுமாய் இருக்கிறவர்களுக்கே எங்கள் அரமனையில் இடங்கொடுக்கிறோம். கபடமாய் யுத்தம் செய்கிற அவனோ உண்மையுள்ளவன் அல்ல. அவனுடைய தூதனாகிய நீ திரும்பிப்போய், அவன் இந்த இடத்திற்கு வரவேண்டாமென்று அவனுக்குச் சொல்லு. இதோ அவன் அனுப்பிய வெகுமதி வஸ்திரத்தைக் கிழித்து நெருப்பிலே போடுகிறோம்' என்று கோபத்துடன் சொன்னார். இப்படி அநேகர் விண்ணப்பங்களோடு வந்தார்கள். ஆத்தர் ராஜா எல்லாருக்குஞ் செவிகொடுத்து ஒவ்வொருவனுக்கு நேரிட்ட அநியாயத்தை நீக்கும்படி அவர்களோடு யுத்தவீரர்களை அனுப்பிவிட்டார்.

கடைசியாய்க் கேரேந்த் வந்தான். அவன் அதிக வணக்கத்துடனே ராஜாவைப் பார்த்து, 'நான் பயணம்பண்ணிப் பசியினால் சோர்ந்து போகிறேன். ஒரு வருஷம் ஒருநாள் சாப்பாட்டுக்காக உங்களுடைய சமையல் அறையில் வேலைசெய்யும்படி எனக்கு உத்தரவு கொடும். பிற்பாடு நான் போர்செய்யக்கூடும்' என்று கெஞ்சிக் கேட்டான்.

ஆத்தர் ராஜா இதைக்கேட்டு 'இந்த உத்தம வாலிபனுக்கு உயர்ந்த வேலை தகுதியாயிருக்கும்; ஆனால் இவன் கேட்டபடி ஆகட்டும்' என்று சொல்லிக் கேரேந்தை நோக்கி, 'நீ போய் என்னுடைய சமையற்காரருக்கு உதவிசெய்' என்றான். அப்படியே கேரேந்த் இதற்குப்பின் தான் கீர்த்தியைப் பெற்றுக்கொள்ளலாமென்று நினைத்து எவ்வித வேலையையும் செய்து ராஜாவின் வேலைக்காரர்களில் ஒருவனாய் இருந்தான். அவர்களுக்குத் தலைவனாகிய கேய் என்னும் யுத்தவீரன் கேரேந்தைப் பகைத்துத் தண்ணீர் மொள்ளவும், விறகு வெட்டவும், அறைகளைப் பெருக்கவும் மற்றும் இகழ்ச்சியான வேலையைச் செய்யவும் அவனை எப்பொழுதும் கூப்பிட்டான். கேரேந்தோ 'நான் ராஜாவுக்கென்றே ஊழியஞ்செய்கிறேன்' என்று யோசித்துக் கீழ்ப்படிதலுள்ளவனாய் எல்லாம் நன்றாய்ச் செய்துவந்தான். வேலை

யாட்கள் ராஜாவைப்பற்றி வியந்து பேசும்போது கேரேந் அதிகமாய்ச் சந்தோஷப்படுவான்; ஆனால் அவர்கள் இழிவாய்ப் பேசும்போது கேரேந் இனிமையான பாட்டைப் பாடி, அல்லது நல்ல கதையைச் சொல்லி அவர்கள் கெட்ட பேச்சுப் பேசாதபடி செய்வான். விளையாட்டுக்காக அவர்கள் கல் எறிந்தால், கேரேந் எறிந்த கல் மற்றவர்கள் எறிந்த கற்களுக்கு அப்பால் போகும். மல்யுத்தஞ் செய்கிறவர்களில் இவன் அதிகம் கீர்த்திபெற்றான்.

(இன்னும் வரும்)

## A Bible Reading — Exodus 36. 8–39. 43.

**By**

**The Rev. T. Walker, M.A.**

### யாத்திராகமம் அதி. 36. 8—39. 43.

(இரண்டாம் பாகம்)

4. **பொன்னையும் வெள்ளியையும் வெண்கலத்தையும் தொகை பார்ப்பது. 38. 24–31.**

செலவான பொன் 29 தாலந்தும் 730 சேக்கலுமாம் (வாக். 24); அதாவது, குறைந்த பட்சம், இருபத்தேழு லட்சம் ரூபாயைப் பெறத்தக்க பொன்.

சபையில் எண்ணப்பட்டவர்கள் கொடுத்த வெள்ளி 100 தாலந்தும் 1775 சேக்கலுமாம் (வாக். 25). அதாவது,—ஆறு லட்சம் ரூபாய்க்கு அதிகம் பெறுமான வெள்ளி (இந்தப் பாவநிவர்த்தி பணத்தைத்தவிர நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட வெள்ளிக் காணிக்கையும் வந்ததாகத் தோன்றுகிறது 35. 24).

காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலம் 70 தாலந்தும் 2400 சேக்கலுமாம் (வாக். 29). அதின் விலை நமக்குத் தெரியாது.

இவ்விதமாய்,—ஆசரிப்புக் கூடாரவேலைக்குக் கொடுக்கப்பட்ட பொன், வெள்ளி, வெண்கல முதலானதைக் கர்த்தர் திட்டமாய்க் கவனித்துத் தொகையிட்டுத் தமது கணக்கில் எழுதி வைத்திருக்கிறார். மீட்கப்பட்ட விசுவாசிகள் மனோற்சாகத்தோடும் நன்றியறிதலோடும் கொடுக்கிற தானங்களையும் செய்கிற ஊழியங்களையும் அவர் மறக்கிறவரல்ல (மத். 26. 13; அப். 9. 36, 39; 2 கொரி. 8. 1–4; எபி. 6. 10).



5. **பரிசுத்த நெற்றிப்பட்டம் கடைசியில் செய்யப்பட்டது. 39. 30–32.**

மற்றெல்லாத் தட்டுமுட்டுகளையும் வஸ்திராதிகளையும் செய்த பின்பு 'பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும்பொன்னினாலே பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரை வெட்டாக வெட்டி,—அதை உயரப் பாகையின்மேல் கட்டும்படி இளநீல நாடாவினால் கட்டினார்கள்' என்று சொல்லியிருக்கிறது.

வேலையெல்லாம் இப்படி முடிகிறது தகுதியான காரியம். அந்த வேலையிலெல்லாம் 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்ற மேல்விலாசம் எழுதுவதுபோலிருந்தது.

நாம் என்னவேலை செய்தாலும் எங்கே போனாலும் கர்த்தருக்குப் பரிசுத்தமுள்ளவர்களாய் விளங்குவது விசேஷம் (2 இரா. 4. 9; அப். 4. 13; 1 கொரி. 10. 31; கொலோ. 3. 17).

'தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி' (பிலி. 1. 10) நாம் உத்தம விசுவாசிகளாய் ஊழியஞ்செய்து கர்த்தருடைய வாசஸ்தலமாகிய ஆவிக்குரிய கட்டட வேலையை நிறைவேற்றி வருவோமாக (1 கொரி. 3. 10–17).

6. **நடந்த வேலையைப் பரிசோதித்துப் பார்ப்பது. 39. 33–43.**

இவ்வதிகாரத்தில் திரும்பத் திரும்ப வருகிற வாசகம் என்னவென்றால்,—

'கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே' என்பது (வாக். 1, 5, 7, 21, 26, 29, 31, 32, 42, 43).

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சுய பிரியத்தின்படியும் யோசனையின்படியும் ஒன்றையும் செய்யாமல் சகலத்தையும் 'கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே' செய்து முடித்தார்கள்.

பின்பு,—'மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான்; கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள்.'

அலங்காரமான பெரிய கட்டடம் ஒன்று கட்டி முடிந்தபின்பு, அதற்கு எழுதப்பட்ட மாதிரியை முதலாளியானவன் தன் கையில் வைத்துக்கொண்டு கட்டடத்தைப் பரிசோதித்துப் பார்த்து, கட்டுமான வேலை எல்லாம் அந்த மாதிரியின்படியே நடந்திருக்கிறதாவென்று நுட்பமாய்க் கவனிப்பதுபோல, மோசே ஆசரிப்புக் கூடாரத்தைப் பரிசோதித்தபின் கர்த்தர் காட்டின மாதிரியின்படியே யாவும் செய்தாயிற்றென்று கண்டறிந்து சந்தோஷப்பட்டான்.

நம்முடைய சுவிசேஷ ஊழியம் செய்து முடிந்தபிற்பாடு பரம எஜமான் அதைப் பரிசோதித்துப் பார்ப்பார். அவர் வேதத்தில் காட்டின பரிசுத்த மாதிரியின்படியே வேலை செய்தவன் பாக்கியவான்; அதற்கு மாறாய் வேலைசெய்தவனுக்கோ நஷ்டமும் நிர்ப்பந்தமும் லபிக்கும் (1 கொரி. 3. 9-15; 2 தீமோ. 2. 5, 15).

7. விசேஷித்த ஆசீர்வாதம் கூறப்படுவது. 39. 43.
'மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.'

உண்மையோடும் ஜாக்கிரதையோடும், 'கர்த்தர் கற்பித்தபடியே,' வேலைசெய்த ஆட்களுடைய காதுக்கும் மனதுக்கும் அந்தத் தலைவன் கூறின ஆசீர்வாதமான மொழிகள் எவ்வளவோ இன்பமாயிருக்கும்.

அப்படிப்போல,—ஆண்டவர் புகழ்ந்து வாழ்த்தும் ஊழியக்காரர் ஆனந்த பரவசமாவார்கள் (மத். 25. 21, 23; 1 கொரி. 4. 1-5; 2 தீமோ. 4. 7, 8; 1 பேது. 5. 4).

## An Easter Sermon in Outline

### உயிர்த்தெழுந்த நாளில் இயேசு அடைந்த ஜெயம்

**இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். *சங்.* 118. 24.**

I. ஏழைகளுக்காக ஜெயம் அடைந்த கர்த்தர்.

இயேசு உயிர்த்தெழுந்த நாளிலே 118-ம் சங்கீதம் பாடுவது அங்கிலேய சபையின் ஒழுங்கு. ஏனென்றால் இதிலே உயிர்த்தெழுந்து ஜெயமடைந்த கர்த்தரைக்குறித்த சமாச்சாரம் அடங்கியிருக்கிறது. இதில் துக்கப்பட்ட ஏழைக்குச் சர்வவல்லமையுள்ள கடவுள் செய்த நன்மைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரமும் புகழ்ச்சியும் பலவிதமாயுண்டு.

II. சந்தோஷத்தை உண்டாக்கும் ஜெயம்.

கடவுள் செய்த நன்மைகளுக்காக எந்த ஞாயிற்றுக்கிழமையிலும் அவருடைய திருநாமத்திற்கு ஸ்தோத்திரம் செலுத்துவது நியாயம். ஆனால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமையிலே மற்ற ஞாயிற்றுக்கிழமையைப் பார்க்கிலும் சந்தோஷமாயிருப்பது நலம்.



இதிலேதான் துக்கத்தை நீக்கலாம். இதிலேதான் இயேசு நமக்கு அருளின பூரண கிருபையைக்குறித்து நன்றியறிதலோடே யோசித்துக்கொள்வது அவசியம்.

III. துக்கத்தை நீக்கும் ஜெயம்.

இந்த ஞாயிற்றுக்கிழமையில்தான் நாம் மரணத்தை வென்று, ஜெயமடைந்து, மகிமையோடிருக்கிற நமது ஆண்டவரைக்குறித்து ஞாபகம் உள்ளவர்களாயிருக்கவேண்டும். இந்நாளிலேதான் அவர் முந்திச் சகித்த பரியாசமும், இகழ்ச்சியும், பாடுகளும் எல்லாம் அற்றுப்போயிற்று. இந்த நாளுக்கு முந்தி அவருடைய சீஷர்கள் அவர் சிலுவையில் மரணமடைந்து தமது சத்துருக்களால் ஜெயிக்கப்பட்டவராயிருப்பார் என்று நினைத்து, மூன்று நாளாக மனம் சோர்ந்துபோயிருந்திருப்பார்கள். இந்த நாளுக்குப்பின்பு அவர்கள் இனிச் சந்தேகப்படாமல் உறுதியான நம்பிக்கையோடிருந்தார்கள். அவர் அவர்களுக்கு அடிக்கடி அறிவித்த ராஜ்யம் அந்நாள்முதல் ஸ்திரப்பட்டது என்று நாம் சொல்லக்கூடும். அன்றுமுதல் முதலாம் கிறிஸ்தவ சபையுண்டானது. அன்றுமுதல் எந்த வருஷத்திலும் அவருடைய ராஜ்யம் இனிப் பரவி வருகிறது என்று அறிந்து அவருடைய சீஷர்கள் வரவர அவருடைய மகிமையைப் பார்க்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

IV. அவர் அடைந்த ஜெயத்தில் பங்கு பெற்றவர்கள்.

இந்தக் கோவிலைச் சேர்ந்த நாம் இன்று அடைந்த சந்தோஷத்தை இவ்வுலகத்தில் எத்தனையோ ஜனங்கள் அடைந்திருக்கிறார்கள். மேலும் முந்தின வருஷங்களில் இந்தச் சந்தோஷத்தை அடைந்தவர்களைப்பார்க்கிலும் இந்த வருஷத்தில் அதை அனுபவிக்கிறவர்கள் அநேகர். அவர் உயிர்த்தெழுந்த நாளிலே தோமாவைத்தவிர பத்துச் சீஷர்களும் சில ஸ்திரீகளுமாத்திரம் அவரைக் கண்டார்கள். இந்நாளிலே எந்தத் திசையிலும், எந்தப் பாஷையிலும், எந்தச் சபையிலும் கணக்கில்லாத எத்தனையோ ஜனங்கள் அவரை வணங்கி உயிர்த்தெழுந்தவராகிய அவருக்கு ஸ்துதி செலுத்துகிறார்கள். மேலும் இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்தாம் அடைந்த ஜெயத்தினாலே தமது மகிமையை மாத்திரம் காண்பிக்கவில்லை. அவர் அடைந்த ஜெயத்தினாலே நோயாளிகளுக்கும், விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும், கீழ்மக்களுக்கும், அடிமைகளுக்கும், தீயோருக்கும், ஆம், இவ்வுலகத்தில் யாவருக்கும் நன்மை கிடைத்தது. அவர் அடைந்த ஜெயத்தினாலே நம்மெல்லாருக்கும் இரட்சிப்பு உண்டானது. மேலும் ஜெயசீலாகிய நமது ஆண்டவரைப்போல, நாமும் ஜெயம் அடைகிறவர்களாயிருக்கிறோமே.

### V. அவர் அடைந்த ஜெயத்தில் பங்கு பெற்றவர்களின் நம்பிக்கை.

அவர் அடைந்த ஜெயத்தினாலே நமக்கு ஜெயமே அல்லாமல் நிலையுள்ள நம்பிக்கையும் உண்டு. அந்த நம்பிக்கை பலவிதமாயுண்டு. அவருடைய அருளினால் நாம் நம்மிலுள்ள பாவத்தை அடக்கிக்கொள்வோம் என்றும், பாவபாசத்தை அறுத்துப் பாவத்தின் கோட்டையிலிருந்து தப்பி விடுதலையடைவோமென்றும், நாம் அவரைப்போல மரணத்தை வென்று, நித்திய ஜீவனை அடைவோம் என்றும் நம்புகிறோம். இவை எல்லாவற்றிற்கும் அத்தாட்சியான அவர் அடைந்த ஜெயத்தை நினைத்துச் சங்கீதக்காரன் பாடினதுபோல, இந்நாளிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

## God's Sure Promise

## கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி

ரோமர்கள் கி. பி. 70-ம் வருஷத்தில் எருசலேம் பட்டணத்தைப் பிடித்தபிறகு அது இருந்த இடமெல்லாம் பாழாய்ப் போய்விட்டது. அதை முற்றுகை போட்ட போர்வீரர்கள் போய்விட்டபிறகு, ஒரு நாள் இரண்டு யூத சாஸ்திரிகள் அதைப் பார்க்கும்படி வந்தார்கள். அவர்கள் தேவாலயத்தின்முன் கட்டப்பட்டிருந்த சீயோன் மலைக்கு வந்தபோது அழிந்துபோன தேவாலயமிருந்த இடத்திலே பயமில்லாமல் உலாவிக்கொண்டிருந்த நரி ஒன்றைப் பார்த்தார்கள். இதைப் பார்த்து அவர்களில் யோசுவா என்பவன் கண்ணீர்விட்டு அழுதான். எலியேசர் என்கிற மற்றவன் சிரித்தான். இவன் சிரிக்கிறதை யோசுவா கண்டு, இவனைப் பார்த்து, 'ஏன் சிரிக்கிறாய்' என்று வினாவ, எலியேசர் பிரதியுத்தரமாக 'நீ ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்' என்று கேட்டான். அதற்கு யோசுவா 'நான் அழுகிறதற்குக் காரணம் என்னவென்றால், தீர்க்கதரிசியாகிய எரேமியா, 'பாழாய்க் கிடக்கிற சீயோன் மலையின்மேல் நரிகள் ஓடித் திரிகிறது' (புல. 5. 17) என்று அறிவித்த எச்சரிப்பு இப்போது நிறைவேறியிருக்கிறது. இதினிமித்தம் அழுதுகொள்வது நியாயந்தான் அல்லவா?' என்றான். எலியேசர் இதைக் கேட்டு யோசுவாவைப் பார்த்து, 'இதே காரணத்தினால் நானும் அழாமல் சிரிக்கிறேன். ஏனென்றால் தீயோருக்கு யேகோவா தீர்க்கதரிசிமூலமாய்த் தாம் முன்னறிவித்த தண்டனையைக் குறைக்காமல் அதைச் செய்துமுடிப்



பாரானால், அவர் தாம் அருளும் வாக்குகளில் ஒன்றையாகிலும் குறையாமல் நிறைவேற்றுவார் என்பதற்கு இது அத்தாட்சியாக இருக்கிறது. சங்கீதக்காரன் பாடுகிறபடி, ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர் என்பது நிச்சயம்' என்றான் (சங். 86. 5).

## The Captivity

## சிறையிருப்பு

கி: மு. 597 வருஷத்திலும் 586 வருஷத்திலும் நேபுகாத்நேச்சார் இரண்டு தடவைகளில் யூதேயாவிலிருந்து பாபிலோனியாவுக்கு ஏறக்குறைய அரைலட்சம் யூதர்களைக் கொண்டுபோனான். இவர்களில் தனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணக்கூடிய சிலரைச் சிறைச்சாலையில் போட்டுச் சிலரைத் தன் அரமனையில் பிரதானிகளாய் வைத்தான். சாதாரணமான ஜனங்களைத் தன் ராஜ்யத்திலுள்ள சில நாடுகளில் குடியேற்றி அவர்கள் தங்களுக்கு வீடுகள் கட்டவும், பயிர் வியாபாரம் செய்யவும், தங்கள் ஆசாரத்தின்படி ஆராதனை செய்யவும், தாங்கள் ஏற்படுத்தின மூப்பர்களால் நடத்தப்படவும் அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான். இதினால் பாழாய்ப்போன எருசலேமிலே மீதியாய் இருந்த யூதர்கள் அதிக தரித்திரரானபோது சிறையிலிருந்தவர்கள் நல்ல நிலைமையில் அதிக விருத்தியடைந்தார்கள் (எரே. 29. 5; 41. 5; எசே. 3. 15; 8. 1; 20. 1; 24. 18).

சிறையிருப்பிலிருந்த யூதர்கள் முன்போலத் தேவாலயத்திலே சடங்காசாரங்களை நடத்தக் கூடாததினால், அவர்கள் தாங்கள் பக்திக்குரியவிதமாய்க் கடவுளை வணங்கவேண்டும் என்பதை அறிந்துகொண்டார்கள். சிறையிருப்பிலே அவர்களுக்கு ராஜா இல்லாததினால் தங்களை ஆளும்படிக்குப் புதிதாய்த் தாவீதின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு வரப்போகிற மேசியாவைக்குறித்து அதிக வாஞ்சையோடு காத்திருந்தார்கள். இக்காலத்தில் அவர்கள் நியாயப்பிரமாணப் புத்தகங்களையும், சாஸ்திரப் புத்தகங்களையும், முன்னிருந்த தீர்க்கதரிசிகளின் ஆகமங்களையும், அதிக கவலையோடு தேடி ஆராய்ந்து திருத்திப் பிரசுரஞ்செய்தார்கள். இக்காலத்திலும் எசேக்கியேல், 'இரண்டாம் ஏசாயா' ஆகிய தீர்க்கதரிசிகள் ஜனங்களின் பயபக்திக்குத் தூண்டுதலாகப் போதனைசெய்தார்கள். கி. மு. 539-ம் ஆண்டு கோரேஸ் பாபிலோனியாவை ஜெயித்தபோது சிறையிருப்பிலிருந்த யூதர்

களும் மற்ற யூதர்களும் தங்கள் தங்கள் தேசங்களுக்குப் போகும்படி உத்தரவு கொடுத்தான். இந்த உத்தரவின்படி செருபாபேல், எஸ்றா, நெகேமியா என்பவர்களால் நடத்தப்பட்டவர்கள் எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். ஆனால் திரும்பிப்போனவர்கள் அநேகம்பேர் அல்ல, பாபிலோனியாவிலே நின்றுவிட்டவர்களே அநேகர். பாபிலோனியாவில் யூதர்கள் கி. பி. 1000 ௵மட்டும் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷக்காலமாக அத்தேசத்திலே குடியிருந்தார்கள். அவர்களில் நியாயசாஸ்திரிகள் அநேகர் யூதருக்குள் எங்கும் பெயர் பிரஸ்தாபமுள்ளவர்களாய் இருந்தார்கள். கி. பி. 1000 ௵முதல் அத்தேசத்தில் ஆளுகைசெய்த அராபியர்கள் தங்களுக்குச் செய்த தொந்தரவினிமித்தம் யூதர்கள் காலத்துக்குக் காலம் அத்தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள்.

# War

## சண்டை

1. எபிரெயருக்குள் ராஜாவின் ஆளுகை ஸ்தாபிக்கப்படுகிறதற்குமுன் சேனைகள் இல்லாததினால் அவர்கள் யுத்தத்திற்குப் போகும்பொழுது பல ஊர்களிலிருந்து சிறு கூட்டங்கூட்டமாகப் போவார்கள் (நியா. 4 அதி).

எபிரெயருக்கும் பெலிஸ்தியருக்கும் நெடுங்காலம் விரோதம் இருந்ததினால், எபிரெயர்கள் தங்களைக் காப்பாற்றும்படி தங்களுக்கு ராஜாக்களை ஏற்படுத்தினபிறகு அந்த ராஜாக்கள் சேனைகளையும் நியமித்தார்கள். எபிரெயர் மழைக்காலத்திற்குப்பிறகு தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப்போவார்கள். போர்வீரரை யுத்தகளத்திற்கு அழைக்கும்படி எக்காளம் ஊதுவார்கள் (2 சாமு. 11. 1; 20. 1; நியா. 6. 34; 1 சாமு. 13. 3). யுத்தசேனையில் இன்னாரைச் சேர்க்கக்கூடாது என்ற கட்டளை இருந்தது (உபா. 20. 5-8).

2 எபிரெயரின் அபிப்பிராயத்தின்படி சண்டைசெய்து விரோதிகளை ஜெயிப்பது கடவுள் நியமித்த ஓர் கடமை. யுத்தத்தில் யேகோவாவின் சமுகம் தங்களோடு இருக்கிறதென்று காட்டும்படி சாட்சிப் பெட்டியை எபிரெயர் போர்க்களத்திற்குக் கொண்டுபோவார்கள். போருக்குப் போகுமுன் அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திப் பலி செலுத்துவார்கள். சத்துருவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போகிறதற்குமுன் சீட்டுப்போட்டு யுத்தத்திற்கு ஏற்றசமயம் இன்னதென அறிவார்கள். பிற்காலத்தில் தீர்க்கதரிசிகளின் ஆலோசனை



யைக் கேட்பார்கள் (எண். 21. 14; நியா. 1. 1; 1 சாமு. 7. 9; 13. 9; 17. 45; 23. 2; 2 சாமு. 11. 11; 1 இரா. 22. 5; யோவே. 3. 9; எரே. 6. 4).

3. சேனை போகிறதற்குமுன் அவர்கள் வேவுகாரரை அனுப்புவது வழக்கம் (யோசு. 2. 1; நியா. 1. 24; 1 சாமு. 26. 4; 2 சாமு. 15. 10).

போர்வீரர் தங்கும் பாளையங்களைப்பற்றி நமக்குத் தெரியாது. முற்றிகைபோடும்போது சில சமயங்களில் கூடாரங்கள் அடித்து அல்லது சிறு குடிசைகள் கட்டி அவைகளில் தங்குவார்கள்.

சேனைத்தலைவனுக்குப் புறம்பாகப் பெரிய கூடாரம் அடித்திருக்கும் (2 சாமு. 11. 11; 1 இரா. 20. 12). காவற்காரர் இரவை மூன்று சாமங்களாகப் பிரித்துப் பாளையத்தைக் காப்பார்கள் (நியா. 7. 19).

யுத்தத்தில் ஆர்ப்பரிப்போடு கூக்குரலிட்டுச் சத்துருக்களிடத்தில் ஓடிப்போவார்கள். பலதடவை சேனைத்தலைவன் தன் சேனையை மூன்று பாகங்களாக அணிவகுப்பான்: பதிவிருப்பது அடிக்கடி வழக்கம். பிற்காலத்தில் போர்க்களத்தில் சேனைத்தலைவர்கள் தங்கள் சேனைகளை அதிக சாமர்த்தியத்தோடு நடத்தினார்கள் என்று தோன்றுகிறது (யோசு. 8. 15; நியா. 7. 16; 2 சாமு. 10. 9; 1 இரா. 22. 31).

5. யுத்தத்தில் ஜெயமடைந்தவர்கள் ஜெயிக்கப்பட்டவர்களுக்கு இரக்கம் காட்டவில்லை. ஆனால் அசீரியரைப்போல் எபிரெயர்கள் அதிக குரூரமானவர்களாய் இருக்கவில்லை.

யோசியாவின் காலத்தில் எபிரெயர்கள் யுத்தத்தில் பிடிபட்ட பெண்களையும் பிள்ளைகளையும் கொல்வது கூடாது என்று நினைத்தார்கள் (உபா. 20. 14). வழக்கமாய் அவர்கள் தாங்கள் யுத்தத்தில் பிடித்தவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக வைப்பார்கள் அல்லது விற்றுப் போடுவார்கள். யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுச் சேனைத்தலைவர்களுக்கு விசேஷித்த பாகம் கொடுப்பது வழக்கம் (1 சாமு. 30. 24-26). யுத்தத்திலிருந்து திரும்பி வருகிறவர்களைச் சந்திக்கும்படி பெண்கள் பாட்டுப்பாடி நடனம் செய்து போவார்கள். மக்கபேயர் ஜெயமடைந்ததற்காக ஸ்தோத்திர ஆராதனை நடத்தினார்கள் (1 சாமு. 18. 6; 1 மக்கபேயர் 4. 24).

## The Sadducees

### சதுசேயர்

ஒருவேளை தாவீதின் காலத்தில் இருந்த பெரிய ஆசாரியனாகிய சாதோக்கு என்பவனின் பெயரைக்கொண்டு இவர்கள் தங்களுக்குச் ‘சதுசேயர்’ என்னும் பெயரை வழங்கி இதினால் ஆசாரியரின் கட்சியைத் தாங்கள் சேர்ந்தவர்கள் என்று குறித்திருக்கலாம் (2 சாமு. 8. 17). எசேக்கியேலின் அபிப்பிராயத்தின்படி சாதோக்கின் புத்திரர்மாத்திரம் உண்மையான ஆசாரியர்கள் (எசே. 40. 46; 43. 19; 44. 15; 48. 11). ஏறக்குறைய கி. மு. 200–ம் வருஷ யூதர்களுக்குள் வெவ்வேறான கொள்கைகள் உண்டானபோது அவர்களுக்குள் ஒரு வகுப்பினராகிய சதுசேயர்கள் எப்பொழுதும் ஆசாரியர்களுக்குரிய கனத்தையும் கீர்த்தியையும் நாடினவர்களாய் இருந்தார்கள். எல்லா ஆசாரியர்களும் சதுசேயர்கள் அல்ல. அவர்களிற் சிலர் பரிசேயரும் வேதபாரகருமாயிருந்தார்கள். ஆனால் பெரும்பாலும் எந்த ஆசாரியர்களும் பிரதான ஆசாரியர்கள் எல்லாரும் சதுசேயர்களாய் இருந்தார்கள். யூதேயாவிலும் எருசலேமிலுமுள்ள தனவான்கள் இந்தக் கட்சியை வழக்கமாய் ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் பலகாலமாக அதிக உற்சாகத்தோடு ராஜாங்கத்துக்குரிய காரியங்களை நடத்திவந்தும், இயேசுவின் காலத்தில் இவர்கள் பொதுவான ஜனத்தின் பலனை அல்ல, தங்கள் சொந்தப் பலனைமாத்திரம் தேடி ஆசாரியர்களுக்குச் சன்மார்க்க விஷயங்களில் அல்ல, ராஜாங்க விஷயங்களில் எப்பொழுதும் மேலதிகாரத்தை ஏற்படுத்தும்படி பிரயாசைப்பட்டதினால் ஜனங்களின் அபிப்பிராயத்தின்படி இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை அல்ல, தங்கள் சொந்த ஆதாயத்தைத் தேடினவர்களாய் இருந்தார்கள். இதினிமித்தம் ஆசாரியர்களுக்கிருந்த கீர்த்தி குறைந்துபோனது. ஜனங்களும் சதுசேயர்களை முன்போல நம்பவில்லை. பரிசேயரின் கொள்கையில் பல தப்பிதங்கள் இருந்தும் அவர்கள் வேதத்தில் வைராக்கியமுள்ளவர்களும் மேசியாவின் ராஜ்யத்தைப்பற்றி நம்பிக்கையுள்ளவர்களுமாய் இருந்ததினால் லௌகீக சிந்தையுள்ள சதுசேயர்களுக்கும் பரிசேயர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ளலாம். மேலும் வேதசாஸ்திர தத்துவஞானத்தில் வேறொரு வித்தியாசம் இருந்தது. அதாவது சதுசேயர் மனிதன் மரித்தபின் அவனுடைய ஆத்துமா உயிரோடிருக்கும் என்பதை மறுதலிக்காவிட்டாலும், மரித்தபின் சரீரத்திற்கு உயிர்த்தெழுதல் உண்டு என்னும் கொள்கையையும், மனுஷருக்கு உதவிசெய்யும் தூதர்கள் உண்டு



என்னும் கொள்கையையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இவைகளை நீக்கினவர்களாய் இருந்தார்கள் (மாற். 12. 18; அப். 23. 8). இயேசு வழக்கமாய்ச் சாதாரண ஜனங்களோடு சஞ்சரித்துஅவர்களுக்குப் போதகம் செய்துவந்ததினால் பரிசேயர்கள் இயேசுவுக்கும் தங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து அவருக்கு விரோதிகளானார்கள். முதலில் சதுசேயருக்கும் இயேசுவுக்கும் விரோதம் ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் வரவர எருசலேமில் சாதாரண ஜனங்களுக்குள் அவர் நற்கீர்த்தி பெற்றதினாலும் ஜனங்கள் அவரிடத்தில் திரள் திரளாய் வந்து சேர்ந்ததினாலும் எருசலேமில் கலகத்துக்கு அவை காரணமாயிருக்கும் என்று பயந்து சதுசேயரைச்சேர்ந்த ஆசாரியர்கள் அவரைக் கொல்லும்படி தீர்மானித்தார்கள் (யோவா. 11. 49). இதினிமித்தம் சதுசேயர் ஆதி கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் இருந்தார்கள் (மத். 3. 7; 16. 1; 22. 23; மாற். 12. 18; லூக். 20. 27; அப். 4, 5 அதி).

## Biblical Notes

### வேதாகம விசேஷங்கள்

#### கோரேஸ். Cyrus

முதலில் இவன் பெர்சியாவின் அரசனாய் இருந்தான். மேதியரின் சக்கரவர்த்தி இவனுக்கு மேலதிகாரம் உடையவனாய் இருந்தான். ஏறக்குறைய கி. மு. 550–ம் வருஷ இவன்தான் மேல் அதிகாரியாகும்படி முயற்சி செய்து முதலில் மேதிய சக்கரவர்த்தியையும், சின்ன ஆசியாவிலுள்ள அரசர்களையும் ஜெயித்து, அப்புறம் பாபிலோனியாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனான். பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சார் அந்த ராஜ்யத்தைக் காப்பாற்றும்படி பிரயாசைப்பட்டும் கோரேஸ் அதை கி. மு. 539–ம் வருஷ ஜெயித்துப் பல தேசங்களிலுமிருந்து அந்தத் தேசத்துக்குச் சிறையாகக் கொண்டுவரப்பட்டவர்களில் அநேகரைச் சிறையிலிருந்து மீட்டு, அவர்களைத் தங்கள் தேசங்களுக்கு அனுப்பிவிட்டான். அப்பொழுது சிறையிலிருந்த யூதர்களையும் விடுதலை செய்தான். ஏசாயா தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் இரண்டாம் பாகத்தில் பாபிலோனியாவைத் தண்டிக்கவும், சிறையிலிருந்தவர்களை விடுதலை செய்யவும், பாழாக்கப்பட்ட எருசலேமைத் திரும்பப் பழுது பார்க்கவும், தேவாலயத்தைக் கட்டவும் யேகோவாவினால் அபிஷேகம் பெற்றவனும் அவருக்குப்

பிரியமானவனுமாகிய கோரேஸ் மன்னனைப்பற்றி (எசா. 40–48 அதி) அடிக்கடி சொல்லியிருக்கிறது. கோரேஸ் யூதன் அல்லாவிட்டாலும் இவன் யேகோவாவைத் தொழுதுவந்தான் என்பதற்கு ஐயமே இல்லை (2 நாளா. 36. 22; எஸ்று 1. 1; 5. 13; தானி. 6. 28; 10. 1; எசா. 44. 28; 45. 1).

## வேதாகமத்தில் சொன்ன குடிமதிப்பு. Census

1. மோசே சீனாய் மலையில் இஸ்ரவேலரின் குடிமதிப்பு எழுதினான் (யாத். 38. 26).

2. பிரயாணத்தில் இரண்டாம் வருஷம் மறுபடியும் குடிமதிப்பு எழுதினான் (எண். 1. 1).

3. கானான் தேசத்தில் இஸ்ரவேலர் பிரவேசித்தபோது குடிமதிப்பு எழுதப்பட்டது (எண். 26 அதி).

4. தாவீது குடிமதிப்பு எழுதும்படி பிரயாசைப்பட்டான் (2 சாமு. 24. 1; 1 நாளா. 21. 5; 24. 1).

5. ரோமர்கள் தங்கள் ராஜ்யத்தில் குடிமதிப்பு எழுதுவது வழக்கம். எகிப்து தேசத்தில் அவர்கள் பதினாலு வருஷத்துக்கு ஒரு முறை குடிமதிப்பு எழுதினது இதற்குத் திருஷ்டாந்தம். சீரியாவில் சிரேனியு அதிபதியாய் இருந்தபோது இரண்டுதடவை குடிமதிப்பு எழுதப்பட்டது. முதல்தடவை யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்குப் போனார்கள் (லூக். 2. 1). கி. பி. 6–ம் ஞூ வரி யேற்படுத்தும்படி மறுதரமும் குடிமதிப்பு எழுதப்பட்டது.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 60 மே 1911

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. 10 MAY 1911 MADRAS.

# வேதியர் விளக்கு

## Geraint and Lynette

## கேரேந்தும் லீனெத்தும்

(தொடர்ச்சி)

[பிரசங்கிமார் வாலிபர்களுக்கு நற்போதனை கொடுக்கும்படி செய்யும் பிரசங்கத்தில் முன்னோர்கள் சொன்ன இந்த உவமை மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் என்றறிந்து இதை விவரமாய் எழுதியிருக்கிறோம்.]

கேரேந்த் இப்படி வேலைசெய்த ஒரு மாதமளவும் இவனுடைய தாயானவள் ஓயாமல் இவனைப்பற்றி நினைத்து, கடைசியாக ஆள் அனுப்பி இவன் பண்ணின பொருத்தனையை நீக்கிவிட்டாள். கேரேந்த் இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரத்திற் சந்தோஷப்பட்டான். உடனே இவன் ராஜாவுக்கு முன்பாகப் போய்ப் பணிந்து, எல்லாவற்றையும் அவருக்கு அறிவித்தான். அன்றியும் 'நான் பலசாலி, சிலம்பத்தில் உம்முடைய யுத்தவீரர்களில் ஒருவனை மேற்கொண்டேன். அந்தப் போர்வீரன் அதைப்பற்றிச் சொல்லியிருப்பான். ராஜாவே! என்னை உம்முடைய யுத்தவீரனாக்கி, மறுபடியும் ஒருவன் அபயத்திற்காக வரும்போது, நியாயஞ்செய்யும்படி என்னை அனுப்பிவிடும்; ஆனால் என் பெயர் மற்றவர்களுக்குத் தெரியப்படாது' என்று தாழ்மையாய்க் கேட்டுக்கொண்டான். இதற்கு ஆத்தர் ராஜா: 'மகனே! உன் தாயானவள் உன்னைப்பற்றி எல்லாம் எனக்கு அறிவித்து, உன்னுடைய விண்ணப்பத்திற்கு இசையும்படி கேட்டுக்கொண்டாள். இப்போது நீ என்னுடைய யுத்தவீரனாயிருக்க விரும்பினால், என்னுடைய யுத்தவீரர் தைரியத்திலும் சாந்தத்திலும் சுத்த அன்பிலும் கீழ்ப்படிதலிலும் உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி செய்யும் பொருத்தனையை நீயும் செய்யவேண்டும். என்னுடைய போர்வீரர் உத்தம குணசீலராய் இருக்கவேண்டும்' என்று தயவாய்ச் சொன்னான்.

கேரேந்த் எழுந்து நின்று 'ராஜாவே! தைரியமாய் இருப்பேன். நான் காட்டின கீழ்ப்படிதலைக்குறித்து கேய் என்பவனிடத்திற் கேட்டால் தெரியும். மேலும் தேவகிருபையினாலே நான் குணசாலியா

யிருப்பேன்' என்று சொன்னான். ஆத்தர் ராஜா 'மற்றெவருக்கும் உன் பெயர் தெரிவிக்காமல் உன்னை என் யுத்தவீரர்களில் சேர்த்துக் கொள்ளுவேன். ஆனால் உத்தம யுத்தவீரனாகிய லானிஸ் லோத்துக்கு மாத்திரம் இந்த முழுக்காரியத்தையும் அறிவிக்கவேண்டும்' என்று சொன்னான். கேரேந்த் இதற்கு இணங்க, ராஜா பழைய வழக்கத்தின்படி தமது வாளினால் இவனுடைய கழுத்தில் தட்டிக் கொடுத்து இவனைப் போர்வீரனாக்கினான்.

பிறகு ராஜா லானிஸ் லோத்தைக் கூப்பிட்டு, 'இந்த வாலிபனைப் போர்செய்யும்படி அனுப்பப்போகிறேன். இவனுடைய சாமர்த்தியம் இன்னும் தெரியவில்லை. இவனுக்கு மோசம் வாராதபடி, நீர் போய் இவனைக் காப்பாற்றவேண்டும்' என்று கட்டளையிட்டான்.

அந்த நாளில் அழகுள்ள ஒரு பெண் ஆத்தரின் நியாயஸ்தலத்துக்கு வந்து, 'ராஜாவே உமக்கு அபயமிடுகிறேன்' என்று கூவினாள்.

ராஜா அவளைப் பார்த்து 'பயப்படாமல், உன் காரியங்களை எல்லாம் எனக்குச் சொல்லு. உன் பெயரென்ன? உனக்கு என்ன தேவை?' என்று கேட்க, அவள், 'என் பெயர் லீனெத். என் சகோதரியை இரட்சிக்கிறதற்கு ஒரு யுத்தவீரனை அனுப்பவேண்டும். அவள் பெயர் லீயோனை. அவள் உயர்குலத்தாளும் அதிக நிலங்களையுடையவளும் என்னைப்பார்க்கிலும் சவுந்தரியமுள்ளவளுமாய் இருக்கிறாள். ஆனால் அவள் இப்பொழுதோ அபாயக்கோட்டையில் அடைப்பட்டிருக்கிறாள். அந்தக் கோட்டையைச் சுற்றி ஒரு பெரிய ஆறு மூன்றுதரம் வளைந்து பாய்கிறது. யுத்தவீரர்களாகிய நாலு சகோதரர்களில் மூவர் மூன்று இடங்களில் ஒருவரும் கோட்டைக்குள் போகாதபடி காவலாய் நிற்கிறார்கள். மற்றவன் என் சகோதரியையும் அவள் தோழிகளையும் கோட்டையில் அடைத்து அவள் தன்னை விவாகம்பண்ணினாலொழிய விடுதலையாக்கமாட்டேனென்று பிடிவாதமாய் நிற்கிறான். அவளோ இதற்குச் சம்மதிக்கவேமாட்டாள். இந்த நால்வரையும் ஜெயித்து, என் சகோதரியை இரட்சிக்கும்படி நீர் உம்முடைய உத்தம போர்வீரனாகிய லானிஸ் லோத்தை அனுப்புவீர் என்று நம்பி வந்தேன்' என்று அழுதாள்.

அப்போது ராஜா கேரேந்தை நினைத்து 'பெண்ணே! என் யுத்தவீரரை என் சத்துருக்களை ஜெயிக்கும்படி அனுப்பியிருக்கிறேன். இந்த நால்வர் இன்னார் என்று சொல்' என்றார். அதற்கு லீனெத் 'அவர்கள் ராஜ பிரமாணங்களை மீறி, தாங்கள் நினைத்தபடி செய்கிறவர்கள். அவர்களில் மூவர் தங்கள் அகங்காரத்தினால் ஒருவனைக் காலை வெள்ளி என்றும், மற்றவனை மத்தியானச் சூரியன் என்றும், மூன்றாம் ஆளை மாலை வெள்ளி என்றும் அழைக்கிறார்கள். நாலாஞ் சகோதரன் வெளிக்கிடும்போதெல்லாம் கறுப்பான யுத்த உடுப்பு அணிந்து



தன்னை இரவு அல்லது மரணம் என்று அழைத்துக்கொள்வான். முதல் மூன்றுபேரிலுமிருந்து தப்பிக்கொள்ளுகிறவர்களை அவன் கொன்றுபோட்டு அவர்களை நித்திய இரவுக்குச் சேர்த்துக்கொள்ளுவான் என்று காட்ட, தன் தலைச்சீராவில் தலைமண்டையும், கேடகத்தில் எலும்புக் கூட்டையும் வரைந்துகொள்வான். அவன் மூர்க்கமான காட்டு மிருகத்தைப்போல் இருப்பான். ஆனதினால் அவர்களை லானிஸ் லோத்துமாத்திரம் ஜெயிக்கக்கூடியவன் என்றறிந்து அவனை அழைத்துப்போக வந்தேன்' என்று மறுபடியுஞ் சொன்னாள்.

அப்போது அங்கே நின்ற கேரேந்த், 'வேந்தனே! என் விண்ணப்பத்தைக் கேளும்! என்னை அனுப்பும்!' எனக் கூவ, வேலைக்காரரின் தலைவனாகிய கேய் அவனுக்குக் கிட்ட நின்றபடியால், 'ஆம், ராஜாவே, இவன் உம்முடைய குசினிக்காரன்; இவன் உமது போஜனபதார்த்தங்களைத் தின்கிறதினால், இவனுக்குப் பெலனுண்டு. இவன் இப்பேர்ப்பட்ட நூறு பேரையும் கவிழ்த்துப்போடுவான்; இவனை அனுப்பும்' என்று பரிகாசமாய்ச் சொன்னான். ஆத்தர் ராஜாவோ கேரேந்தைச் சிலநேரமாக உற்றுப் பார்த்து 'நீ போகலாம்' என்றார். இதைக் கேட்ட யாவரும் ஆச்சரியப்பட்டார்கள். மேலும் லீனெத் விசனப்பட்டு, 'அரசனே! நான் உமது பிரதான யுத்தவீரரில் ஒருவனை அனுப்பும்படி கேட்க, நீர் ஒரு குசினிக்காரனை அனுப்புவது எப்படி?' என்று சொல்லிக்கொண்டு யாரும் அவளைத் தடுக்குமுன்னமே குதிரையில் ஏறிப்போய்விட்டாள். உடனே ஆத்தரின் அரமனைக்கு அவனோடு வந்த வேலைக்காரரில் சிலர் ஓடி ஆத்தரின் குதிரைகளில் ஒன்றையும், ஈட்டியையும், புதிய கேடகத்தையும் கொண்டுவந்தார்கள். கேரேந்த் இதைக் கண்டு மற்ற வேலையாட்களைப்போலத் தான் போர்த்திருந்த சட்டையைக் கிழிக்க, இவன் உடுத்தியிருந்த கவசம் முதலியவை எல்லாருங் காணத்தக்கதாய் வெள்ளியைப்போல் பிரகாசித்தது. பிறகு இவன் குதிரைமேல் ஏறினபோது, ஜனங்களெல்லாரும் நெருங்கி வந்தார்கள். குசினிக்காரரும் வந்து தங்களோடு பிரியமாய் வேலைசெய்த இவனைப் புகழ்ந்தார்கள்.

கேரேந்த் சீக்கிரமாய் லீனெத்துக்குக் கிட்ட வந்து, 'அம்மா! இந்த யுத்தத்தை நான் செய்கிறேன். வழிகாட்டு. நான் பின் செல்லுவேன்' என்றான். அவளோ ஏதோ துர்வாசனை அடிக்கிறது போல வெறுப்புக் காட்டி, 'போ! போ, குசினிநாற்றம் வீசுகிறது. உனக்குப்பின் வருகிறது யார்? என்றாள். அப்பொழுது கேய் என்பவன் பின்னாக வந்து கேரேத்தைப் பார்த்து, 'நான் இன்னான் என்று உனக்குத் தெரியாதா? உன் எஜமானாகிய கேய் நானல்லவா? குசினியில் உனக்கு வேலை இருக்கிறது வா' என்றான்.

அதற்குக் கேரேந்த் 'நான் உம்மை நன்றாய் அறிந்திருக்கிறேன். ராஜாவின் கட்டளையின்படி போகிற நீ எனக்கு இனிமேல் எஜமான் அல்ல' என்றான்.

இதைக் கேட்டுக் கேய் கோபத்துடனே, 'அப்படியானால் நான் உன்னை அடிக்கிறேன், பார்' என்று கிட்டவர, இருவருக்கும் பெரும் சண்டை மூண்டது. அப்பொழுது கேரேந்த் கேயை விழும்படி தள்ளினான். கேரேந்த் மறுபடியும் லீனெத்தை நோக்கி 'வழிகாட்டு; நான் பின்செல்வேன்' என்று கூப்பிட்டான். அவளோ கேரேந்தை விட்டு, தன் குதிரையை வேகமாய் நடத்திப்போனாள். மேலும் அவளுடைய குதிரை களைத்து நிற்கும்போது கேரேந்த் கிட்ட வந்ததைப் பார்த்து அவள், 'அடா! ஏன் வருகிறாய்? நீ உன் எஜமானை ஏதோ ஒரு உபாயத்தினால் கவிழ்த்துப்போட்டாய்; அதினால் என் சகோதரியை விடுதலையாக்கும்படி நான் உனக்கு வழி காட்டுவேனா? இன்னும் குசினி மணந்தான் வீசுகிறது' என்று இவனை இகழ்ந்தாள். கேரேந்தோ 'அம்மா! நீ என்ன சொன்னாலும் சரி, எதைச் செய்தாலும் சரி, நான் ராஜா இட்ட கடமையை முடிப்பேன்' என்று சாந்தமாய்ச் சொன்னான். அதற்கு அவள், 'ஆ! ஆ! அதை முடிப்பாயா? மேன்மையடைந்த யுத்தவீரனைப்போல் பேசுகிறாய்! ஆனால் நீ குசினியிலுள்ள போஜனத்தை எவ்வளவாய்த் தின்றாலும், நீ வெல்லக் கூடாத ஒருவனைப் பார்ப்பாய்' என்று நிந்தனையாய்ச் சொன்னாள். கேரேந்த் 'நல்லது, அவனைப் பார்ப்பேன்' என்று சொன்னான்.

(இன்னும் வரும்)

## A Bible Reading — Exodus 40. 1-33.

**By**

**The Rev. T. Walker, M.A.**

### யாத்திராகமம் அதி. 40. 1-33.

### வாசஸ்தலம் தேவமகிமையால் நிரப்பப்படுதல்

(முதல் பாகம்)

கவனிப்பு.—இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் 'முதலாம் மாதம் முதல் தேதியில்' (வாக். 2) இந்த விசேஷங்கள் நடந்தபடியால், ஆசரிப்புக் கூடாரத்தை உண்டுபண்ணும் சகல வேலைகளும் ஆறு மாதத்துக்குள்ளே முடிந்திருக்கவேண்டும். ஏனெனில், அவர்கள் சீனாய் மலை

OFFICE OF ... REGISTRAR 10 MAY 1911 MADRAS.



யில் வந்து சேர்ந்து ஒன்பதுமாத மாத்திரமாயிற்று (19. 1). அதிலே மோசே எண்பது நாள் மலையின்மேல் தேவ சமுகத்தில் தங்கினான் (24. 18; 34. 28). அதோடுகூட நியாயப்பிரமாணம் அருளப்படுவதற்கும் உடன்படிக்கை விசேஷங்கள் நடப்பதற்கும் நாட்கள் செல்லும் (19. 1-24. 11). இப்படிப் பார்க்கும்பொழுது, இந்த வேலை மகா உற்சாகத்தோடும் சர்வ ஜாக்கிரதையோடும் நடந்ததென்பது பிரத்தியட்சமான காரியம் (யோவா. 9. 4; எபே. 5. 16).

I. கர்த்தருடைய கட்டளை. வாக். 1-15. 'வை,'-'வை,'-'வை' தெளிவும் திட்டமுமான கட்டளை. செய்யவேண்டிய காரியங்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

1. 'வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு.' வாக். 2.
2. 'சாட்சிப்பெட்டியை அதிலே வை.' வாக் 3.
3. 'பெட்டியைத் திரையினால் மறை.' வாக். 3.
4. 'மேசையைக் கொண்டுவந்து...வை.' வாக். 4.
5. 'குத்துவிளக்கைக் கொண்டுவந்து...ஏற்று.' வாக். 4.
6. 'தூபபீடத்தைச் சாட்சிப்பெட்டிக்குமுன்னே வை.' வாக். 5.
7. 'வாசலின் தொங்குதிரையைத் தூக்கி வை.' வாக். 5.
8. 'தகன பலிபீடத்தை...வாசலுக்குமுன்பாக வை.' வாக். 6.
9. 'தொட்டியை...வைத்து, அதிலே தண்ணீர் வார்.' வாக். 7.
10. 'சுற்றுப் பிராகாரத்தை நிறுத்தி,...வாசல் தொங்குதிரையைத் தூக்கி வை.' வாக். 8.
11. 'அபிஷேக தைலத்தை எடுத்து வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணு.' வாக். 9.
12. 'தகன பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணு.' வாக். 10.
13. 'தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம் பண்ணு.' வாக். 11.
14. ஆரோனையும் அவன் குமாரரையும்...அபிஷேகம்பண்ணு.' வாக். 12-15.

இவ்வாறு,–நடக்கவேண்டிய காரியங்களைத் தேவன் வெகு திட்டவட்டமாக வரிசைப்படுத்திக் காண்பித்தார். அவர் கட்டளையிட்ட வார்த்தையின்படியும் வரிசையின்படியும் மோசே செய்தால்மாத்திரம் அவர் அங்கே எழுந்தருளி மகிமையோடே வாசம்பண்ணுவார். பரிசுத்த கர்த்தர் நம்மில் வாசஞ்செய்ய வேண்டுமென்று நாம் விரும்புவோமானால், அவருடைய வார்த்

தையின்படி நம்முடைய காரியங்களை எல்லாம் நாம் கிரமப் படுத்தி அவருடைய நல்ல கற்பனைகளைக் கைக்கொள்ளக் கடவோம் (யோவா. 14. 21-23).

தகுந்த ஆயத்தமும் கீழ்ப்படிதலும் விளங்கும்போதுமாத்திரம் 'மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்' (சங். 24. 4-10; ஆகா. 1. 7-2. 9).

II. மோசேயினுடைய செய்கை. வாக். 16-33.

1. கட்டளையின்படியே செய்தான்.

'கர்த்தர்...கற்பித்தபடியே' என்ற வாசகம் எட்டுவிசை இங்கே வருகிறது (வாக். 16, 19, 20, 22, 24, 26, 28, 32). வாக். 2-15-லே காட்டிய வரிசையின் படியே, ஒன்றிலும் தவறாமல், வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி, பணிமுட்டுகள் ஒவ்வொன்றையும் அதனதன் ஸ்தானத்தில் வைத்தான். விசுவாசத்தோடுகூடிய கீழ்ப்படிதல் மிகவும் விசேஷித்தது (அப். 5. 32; ரோ. 1. 7; 1 பேது. 1. 2).

2. குறைவறச் செய்தான். முதற்பாகத்தில் (வாக். 2-15) வாராத சில விவரங்கள் இந்தப் பாகத்தில் வருகின்றன.

திருஷ். 'பெட்டியின்மேல் கிருபாசன மூடியை வைத்தான்.' வாக். 20.

'அப்பத்தை வரிசையாக அடுக்கி வைத்தான்.' வாக். 23.

'சுகந்தவர்க்கத்தினால் தூபங் காட்டினான்.' வாக். 27.

'சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்தினான்.' வாக். 29.

முதலியவை.

வாக். 17-33 கவனமாய் வாசித்தால், மோசே வெகு கரிசனையாயும் பூரணமாயும் இக்காரியங்களெல்லாவற்றையும் செய்தானென்று தெரியவரும்.

கர்த்தர் நமக்குள் எழுந்தருளி மகிமையோடு வாசம்பண்ணுவது மேன்மையான காரியமல்லவா? ஆகையால் அதற்கு ஏதுவான சகல யத்தனங்களையும் ஊழியங்களையும் நாம் குறைவறச் செய்வது நியாயமும் அவசியமுமாமே (லூக். 3. 4-6; ரோ. 12. 6-8; 1 கொரி. 9. 16, 17; 2 கொரி. 4. 1-11; 6. 1-10).



3. வேலையை முடித்தான். வாக். 33.

இதில் நாம் கவனிக்கத்தக்க காரியங்கள் இரண்டு:—

(i) மனிதன் செய்யவேண்டியதை அவன் செய்து முடித்தபின்புமாத்திரம் தேவன் மகிமையோடே எழுந்தருளுவார் (யோவா. 2. 7-11; 11. 39-44; அப். 1. 4, 5, 14; 2. 1-4; 8. 5-8, 14-16; 10. 3-8, 24, 44-46; மி).

(ii) மனிதன் தன் வேலையை எல்லாம் முடித்தாலும், வாசஸ்தலத்தைப் பரிசுத்தமாக்கவும் மகிமையால் நிரப்பவும் அவனால் சற்றகிலும் முடியாது (எபி. 4. 10; 2 கொரி. 4. 7; கலா. 3. 14).

## Intemperance—Proverbs 23. 29-35.

### மதுபான மோசம்

### ஒரு வேதபாடம்

'முடிவிலே அது பாம்பைப்போலக் கடிக்கும், விரியனைப்போலத் தீண்டும்.' நீதி. 23. 32.

முகவுரை.

நீதிமொழிப் புஸ்தகத்தில் எழுதின பாகங்கள் பல உண்டு. நீதி. 22. 17—24. 22 எழுதின பாகத்திற்கு 'ஞானிகளின் மொழிகள்' என்று பெயர். இந்தப் பாகத்தில் நியாயம், முன்புத்தி, மதுபானம் முதலியவைகளைப்பற்றி மகா பிரயோஜனமுள்ள புத்திபோதனை அடங்கிய வசனங்கள் உண்டு. நீதி. 23. 29-35-ல் மதுபானத்தைப்பற்றிய ஏழு வசனங்கள் இவ்வுலகத்தில் வித்துவான்கள் எல்லாரும் மதுபானத்தினால் உண்டாகும் மோசத்தைப்பற்றி உரைத்த மொழிகளின் சாரம் என்று சொல்லத் துணிகிறோம்.

1. ஐந்து கேள்விகள்.

இந்த ஏழு வசனங்களில் ஐந்து கேள்விகள் உண்டு.

(i) 'யாருக்கு வேதனை, யாருக்குத் துக்கம்?' அதாவது, இவ்வுலகத்தில் வசிக்கிறவர்களில் நிர்ப்பந்த நிலைமையிலுள்ளவர்கள் யார்? தங்களுக்கு சேவை செய்கிறவர்கள் இவ்வுலகத்தில் இல்லை என்றாலும், தங்களுக்குப் பலவிதமான நோய்களை உண்டாக்குகிறவர்கள் உண்டு. 'துக்கம்' என்பதற்கு மூலபாஷையில் 'இரவு' என்று அர்த்தமாம்.

சூரிய வெளிச்சத்தில் நடக்கக்கூடியவர்கள், இஷ்டத்தோடே நடுராத்திரியில் நடப்பார்களா? ஆம், அவ்விதமாய் இருட்டிலே நடக்கத் தங்களைப் பக்குவப்படுத்தினவர்கள் உண்டு. அவர்கள் யார்?

(ii) 'யாருக்குச் சண்டைகள்?' அதாவது சண்டை செய்ய விரும்பாதவர்கள், பயனில்லாத சண்டைகளில் பிரவேசிப்பார்களா? காரணமில்லாமல் தங்கள் அயலகத்தாரோடும், இனத்தாரோடும் பிரிவினை பண்ணுகிறவர்கள் உண்டா? மற்றவர்கள் தங்களுக்குத் தொந்தரவு பண்ணாமல் இருக்க, விசனப்பட்டுக் கசப்போடு தூஷணம் பேசுகிறவர்கள் உண்டா?

(iii) 'யாருக்குப் புலம்பல்?' அதாவது வாலிபப் பிராயத்தில் நல்ல உத்தியோகஞ்செய்து, நல்ல சம்பளம் வாங்கி, சுக வாழ்வோடு நல் மனைவியோடிருந்து, நற்குணமுள்ள பிள்ளைகளைப் பெற்று, பிறகு யாவரும் வெறுக்கத்தக்க நிலைமைக்கு வந்து, எப்பொழுதும் தங்களைக் குறித்துப் புலம்பவேண்டியவர்கள் யார்?

(iv) 'யாருக்குக் காரணமில்லாத காயங்கள்?' ஒரு நாய் தான் இருக்கும் ஊரிலே இன்னொரு நாய் வருகிறதைப் பார்த்தால், காரணமில்லாமல் அதோடு சண்டை செய்து, கடித்து, அதைக் காயப்படுத்தும். அவ்விதமாய்த் தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்துகிற மனிதர் உண்டா?

(v) 'யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்?' இஷ்டத்தோடு கடவுள் தங்களுக்குக் கொடுத்த மேலான வரமாகிய நல்ல பார்வையைக் கெடுக்க விரும்புகிறவர்களும் உண்டோ? தாங்கள் செய்த குற்றத்தைப்பற்றி மற்றவர்களுக்கு அடையாளம் காண்பிக்கிறவர்கள் இருப்பார்களா? சரீரக் கண்ணை மாத்திரமல்ல, தங்களிலுள்ள ஞானக் கண்ணையும் கெடுக்கிறவர்கள் உண்டா?

2. பதில்.

முன் சொன்ன ஐந்து கேள்விகளுக்குப் பதில் என்னவென்றால், இவ்விதமாய்த் தங்களை மோசப்படுத்தி, மற்றவர்களுக்கு எண்ணிறந்த தொந்தரவுபண்ணுகிறவர்கள் மதுபானமிருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்கள்தான். இதைப்பற்றிச் சந்தேகமிருந்தால் நாம், கள் சாராயக்கடைப் பக்கத்தில் நின்று அதற்குப் போகவர இருப்பவர்களைப் பார்த்தால், நீதிமொழிகளைச் சொன்னவன் பல நூற்றாண்டுகளுக்குமுந்திக் கூறின இந்த வசனங்கள் உண்மையுள்ளவை என்று துக்கத்தோடே அறியலாம். 'கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்கள்' என்பதினாலே கள், சாராயக்கடையில் ஏழை ஜனங்கள் அல்லாமலும், தங்கள் வீடுகளில் நமது காலத்தில் உயர்ந்த விலையுள்ள



திராட்சரசம், பிராந்தி முதலியவைகளைச் சாப்பிடுகிறவர்களையும் இவன் சொன்ன வார்த்தைகள் கண்டிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

3. சுகம் எப்படி.

ஒருவன் 'கள், சாராயம் முதலியவைகளை நான் கொஞ்சமாவது சாப்பிட்டால், இதினால் இவ்வளவு மோசம் வராது. நான் என்னைக் காப்பாற்றுவேன்' என்று தீர்மானித்தால், அதற்கு நாம் ஒருவன் 'விஷம் கொஞ்சந்தான் நான் சாப்பிட்டால் மரிக்காமல் இருப்பேன்' என்று தீர்மானித்து நாள்தோறும் விஷம் கொஞ்சம் சாப்பிடுவானா? என்று கேட்கிறோம். அல்ல, அவ்விதமாய் விஷம் சாப்பிடமாட்டான். ஆகவே, நீதிமொழி சொன்னவன் 31-ம் வசனத்தில் இந்தச் சோதனையை நீக்கும்படி நாம் முற்றிலும் அதற்கு விலகிப்போவது முக்கியம் என்கிறான். 'அதைப் பாராதே! எனென்றால் அது பார்வையிலே அழகாயும், ருசியிலே தித்திப்பாயும் இருந்தாலும், முடிவிலே பாம்பைப்போல் கடிக்கும்.'

4. மதுபானத்தை அனுபவிக்கிறவனுக்கு வருகிற இழிவும் மோசமும் என்னவென்று, இந்த பக்தன் சுருக்கத்திலே சொல்லுகிறான்.

(i) துன்மார்க்கம். 33-ம் வசனம். துன்மார்க்கத்திற்கு மதுபானம் எப்பொழுதும் ஏதுவாயிருக்கிறது.

(ii) மதுபானி தாறுமாறாய்ப் பேசுவான். நன்மை தீமை என்பவைகளைக்குறித்து அவனுக்குப் பகுத்தறிவு வரவர மழுங்கிப்போகும். அவன் அறிவீனனாயிருந்து கடலிலே பாதி முழுகினவனைப்போலவும், பாய்மரத் தட்டிலே ஏறி அதிலே தூங்குகிற மாலுமியைப்போலவும் இருப்பான். தான் தனக்கு வருவித்துக்கொள்ளும் மோசம் இன்னதென்று அறியாமல் புத்தியீனமாய் நடப்பது அவனுக்கு வழக்கம். 34-ம் வசனம்.

(iii) கடைசியாய் மதுபானம் பண்ணுகிறவன் தான் செய்ததும் மற்றவர்கள் தனக்குச் செய்ததும் உணராமல் பிணம்போன்ற தன் தேகத்தில் அடைந்த நோவு இன்னதென்று அறியாமலிருப்பான். எல்லாப் புத்தியீனத்திற்கும் எருமைமாட்டுப் புத்தி என்று நாம் வழக்கமாய்ச் சொல்லுகிறோம். அதுபோலவே தனக்கு இவ்விதமாய்க் கெடுதி உண்டாக்கினவனுக்கு நாம் பரிகாசமாய் ஒன்றும் சொல்லாமல்; துக்கத்தோடு இவன் இனி மனுஷன் அல்ல, மதுபானத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று சொல்லிப் புலம்புவோமாக.

(iv) இந்த வசனங்களில் கள், சாராயம் முதலியவற்றின்மூலமாய் வரும் கேடுகள் தெளிவாய்த் தோன்றுகிறது. அநேகர் நினைக்

கிறபடி ஒருவன் பாரமான வேலை செய்யவேண்டுமானால் அவன், கள், சாராயம் சாப்பிடுவது அதற்கு உதவியாயிருக்கும். இது பொய்தான். கள், சாராயத்திலே விஷம் இருக்கிறதினாலே அது வேலை செய்கிறதற்கு எப்படி உதவும்? கள், சாராயம் தேகத்தை அழிக்கும்.

(v) தேகத்தை அழிப்பதல்லாமல் ஆத்துமாவையும் அழிக்கும். கள், சாராயம் சாப்பிடுவதினாலே ஞாபகக் குறைவுண்டாகும். உண்மை பேசும் நோக்கமும் குறையும். அதினால் துராசை அதிகரிக்கிறது. சில வருஷங்களுக்குமுன் களவு, கொலை செய்த 13,000 பேர்களைப் பற்றி வித்துவான்கள் சிலர் விசாரணை செய்யும்போது அந்த 13,000 கள்ளர்களிலும் கொலையாளிகளிலும் 4,000 பேருக்கு அதிகமானவர்கள் மதுபானத்தினாலேதான் பாதகங்களைச் செய்திருந்தார்கள் என்றும்; மேலும் இன்னும் 2,500 பேர்களுக்கதிகமானவர்கள் தாங்கள் செய்த குற்றங்களைச் செய்வதற்கு ஏவப்பட்ட காரணங்களில், மதுபானம் ஒன்றே என்றும்; இவ்விதமாய் இந்த 13,000 குற்றங்களில் ஏறக்குறைய பாதி மதுபானத்தினால் உண்டானது என்றும் தீர்மானித்தார்கள்.

5. ஜெயம் அடைவது எப்படி?

(i) அதை முற்றிலும் விலக்கி அதைப் பாராமலும், தொடாமலும், சாப்பிடாமலும், அதிருக்கும் இடங்களுக்குப் போகாமலுமிருப்பது முதல் காரியமாம்.

(ii) ஒருவன் இவ்விதமாய்ச் செய்வதற்குத் தாழ்மையோடும் உற்சாகத்தோடும் எவன்பேரிலும் அன்புகூருகிற இயேசுகிறிஸ்துவினிடத்தில் உதவி தேடிக்கொள்வது அவசியம்.

நாம் எல்லாரும் பலவீனர். நம்மெல்லாருக்கும் சோதனைகள் உண்டு. அவர்தான் சர்வவல்லமையுள்ளவரும் நமக்குப் பெலன் அளிக்கக்கூடியவருமாயிருக்கிறார்.

## The Treasury

### பொக்கிஷசாலை

### முயற்சி உடையோன் உதவி பெறுவான்

ஐரோப்பாக் கண்டத்தில் பாஸ்க் (*Basque*) தேசத்தில் வசிக்கிறவர்கள் முயற்சி செய்கிறவனுக்குமாத்திரம் உதவி இருக்கும் என்பதற்கு உதாரணமாக ஒரு உவமையைச் சொல்லுகிறார்கள். அதாவது ஒருநாள் நம்முடைய நாதராகிய இயேசுவும் பரி. பேதுருவும் வழி



யிலே போகும்போது அவர்கள் ஒரு பள்ளத்தில் விழுந்த ஒரு பெரிய வண்டியையும் அதன் பக்கத்தில் முழங்காற்படியிட்டுக் கைகூப்பிக் கடவுளை நோக்கித் தன் வண்டியைப் பள்ளத்திலிருந்து அவர் தூக்கிவிடும்படி மகா ஊக்கத்தோடு ஜெபம்பண்ணுகிற ஒரு வண்டிக்காரனைப் பார்த்தார்கள். இயேசுநாதர் தாம் பாராதவரைப் போல இவனைக் கவனிக்காமல் தமது வழியிலே முன்போல நடந்தார். பேதுரு இதைக் கண்ட வண்டிக்காரனுக்கு நேரிட்ட அவஸ்தையைப் பற்றிப் பரிதாபங்கொண்டு, 'ஆண்டவரே! இந்த ஏழைக்கு உதவி செய்யமாட்டீரா?' என்று வேண்டிக்கொண்டான். ஆண்டவரோ 'இவனுக்கு உதவி செய்வது தகுதியல்ல; ஏனென்றால் இவன் தான் இதிலே முயற்சி ஒன்றும் செய்யவேயில்லை' என்றார். அவர்கள் சற்றுத்தூரம் போனபிறகு, இன்னொரு பள்ளத்தில் விழுந்து கிடக்கிற இன்னொரு வண்டியையும், அதின் பக்கத்தில் வண்டிக்காரனையும் பார்த்தார்கள். இவனும் முந்தினவனைப்போல உரத்த சத்தத்தோடே கடவுள் தனக்கு உதவிபுரியும்படி ஜெபம்பண்ணினான். ஆனால் இவன் ஜெபம்பண்ணிக்கொண்டே பள்ளத்திலே இறங்கி வண்டிச்சக்கரத்தைப் பள்ளத்திலிருந்து தள்ளும்படி தன் தோளைக் கொடுத்துக் கைகளால் அதைக் கெட்டியாய்ப் பிடித்துத் தன்னாலியன்றமட்டும் இழுக்கும்படி பிரயாசப்பட்டான்.

இதைப் பார்த்த ஆண்டவர் உடனே அதே பள்ளத்தில் தாம் இறங்கி, அந்த வண்டியைத் தூக்கும்படி உதவிசெய்தார். பரி. பேதுரு இதை மனதில் வைத்துக் கூட வந்து ஆண்டவர் செய்ததுபோலத் தானும் செய்தான்.

## Wisdom Literature of the Hebrews

### எபிரெயர்களுடைய ஞான ஆகமங்கள்

பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள், யோபு, உன்னதப்பாட்டு, பிரசங்கி என்னும் நாலு புஸ்தகங்களும், தள்ளுபடி ஆகமத்தில் 'சீராக்குவின் மகனின் ஞானம்' 'சாலமோனின் ஞானம்' என்னும் இரண்டு புஸ்தகங்களும், யூதர்கள் வழங்கிவந்த ஞானாகமங்கள். இந்த ஆகமங்களில் முதியோர்கள் உரைத்த ஞானோபதேசம் அநேகம் இருந்தாலும், இப்போதிருக்கிற ஆகமங்கள் ஏறக்குறைய கி. மு. 350–150–ம் வருஷங்களில் எழுதப்பட்டதென்பது எபிரெய கிரேக்க பாஷைகளில் தேறினவர்களுடைய அபிப்பிராயம். இந்த ஆகமங்களில் எபிரெயர்கள் அடைந்த உத்தம ஞானம் சொல்லியிருக்கிறது. இந்தப் புஸ்தகங்களில்

சொன்ன நீதியில் கடவுள், நியாயம், நியாயப்பிரமாணம், சன்மார்க்கம் முதலானவைகளைப்பற்றி ஞானிகள் தீர யோசித்துத் தாங்கள் கற்றுக்கொண்ட போதகத்தை யாவரும் அறிந்துகொள்ளும்படி பொழிப்புரையாய்ச் சொல்லுகிறார்கள்.

சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படுமுன் எபிரெயர்களில் அநேகர் ஞானத்தில் சிறந்தவர்களானதினால் ஞானாகமங்களை எழுதினவர்கள் தங்களுக்கு முன்னிருந்தவர்கள் சொன்ன புத்தியைக் கற்றுக்கொண்டே பிரதானமான ஞானோபதேசத்தில் தேர்ச்சியடைந்தார்கள் என்று இந்த ஆகமங்களில் தெளிவாய்த் தோன்றுகிறது. ஆதலால் இந்த ஆகமங்களின் உற்பத்தியை அறியவேண்டுமானால் முற்காலத்திலுள்ள எபிரெயர்களுக்குப் போதிக்கப்பட்ட ஞானத்தையும் அதைப் போதித்த ஞானிகளையும்பற்றி விசாரிக்கவேண்டும்.

### 1. முதியோரின் ஞானம்.

சிறையிருப்புக்குமுந்தி எபிரெயர்கள் ஒருவனுக்கு விசேஷித்த திறமையும், சாமர்த்தியமும் இருந்தால் அது கடவுள் அவனுக்கு அருளின விசேஷித்த ஈவு என்று எண்ணி, அதற்கு 'ஞானம்' என்று அர்த்தங்கொள்ளும் எபிரெய பதமாகிய *Cochema* என்று பெயர் சொன்னார்கள். தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் *Cochema* என்னும் இந்தப் பதத்திற்கு பல தடவை 'யுத்தி,' 'புத்தி' என்று எழுதியிருக்கிறார்கள். எபிரெயர்களோ 'யுத்தி,' 'புத்தி' என்பவைகளின் வித்தியாசம் தெரியாமல் கடவுள் அருளிய புத்தியினாலுண்டான எல்லாத் திறமைகளுக்கும் 'ஞானம்' என்று சொன்னார்கள். உதாரணமாக, அவர்கள் அபிப்பிராயத்தின்படி இந்த ஈவு கிழக்குத் தேசத்தாருக்கும், எகிப்தியர்களுக்கும், சிசெராவின் தாயாருக்கும், தீரு பட்டணத்தாருக்குமிருந்தது (ஆதி. 41. 8; நியா. 5. 29; 1 இரா. 4. 30; எரே. 10. 7; எசே. 27. 8). இந்த 'ஞானம்' ராஜாக்களுக்கும், ஞானிகளுக்கும், பெரியவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் இருக்கலாம் (உபா. 16. 19; 2 சாமு. 14. 1; 20. 22; 1 இரா. 10. 23; யோபு 32. 9). இந்த 'ஞானம்' விசேஷமாய் முதியோர்களுக்கு அருளப்பட்டது (உபா. 1. 15; யோபு 12. 12; 32. 7). ஆதலால் எபிரெயர்கள் சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படுமுன் அவர்களுடைய முதியோர்களில் 'ஞானிகள்' என்னும் பட்டப்பெயர்கொண்ட சிலர் இருந்தார்கள் என்று தெரிய வருகிறது (எரே. 18. 18).

### 2. இந்த ஞானத்தின் முறைகள்.

முதியோர்கள் அடைந்த 'ஞானம்' பலவிதமாயிருந்தது. வெண்கல வேலையில் தேறின சித்திரக்காரனுக்கும், ராஜாங்க விஷயத்தில்



திறமையுடைய ராஜாவுக்கும், வியாபார விஷயத்தில் வருமானம் அடைகிற கெட்டிக்காரனான வியாபாரிக்கும், விவேகமாய் நடந்துகொள்ளுகிறவர்களுக்கும், யுத்தகாலத்தில் புத்தியோடு நடக்கிற சேனாபதிகளுக்கும் 'ஞானம்' உண்டு (உபா. 4. 6; 2 சாமு. 14. 20. 14; 1 இரா. 2. 6; 3. 16; 5. 12; 7. 14; ஏசா. 10. 13; எசே. 28. 4-7). கடவுள் ஞானத்தினால் இவ்வுலகத்தைப் படைத்தார் என்று எரேமியா சொல்லுகிறான் (எரே. 10. 12). ஆனால் சீக்கிரத்திலே இந்த விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறவர்கள் சன்மார்க்கத்திற்கும், தெய்வவணக்கத்திற்கும் ஏதுவான புத்திக்கு 'ஞானம்' என்கிற விசேஷித்த பெயரைச் சொன்னார்கள். தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே 'ஞானம்.' 'இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம், பொல்லாப்பைவிட்டு விலகுவதே புத்தி' என்று தங்களுக்குத் தெரிந்தமட்டில் ஞானத்தின் சாரத்தை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள் (யோபு 28. 28).

### 3. ஞானமும் தீர்க்கதரிசனமும்.

சிறையிருப்புக்காலத்திற்கு முந்தி இஸ்ரவேலிலே 'ஞானிகள்' அல்ல 'தீர்க்கதரிசிகள்'தான் முக்கியமானவர்கள். தீர்க்கதரிசிகள் ஞானிகளைப்போல விடுகதை, உவமை, பழமொழி முதலிய திருஷ்டாந்தங்கள்மூலமாய்ப் போதனை கொடுத்தார்கள் (நியா. 9. 8; 14. 14; 1 சாமு. 10. 12; 2 சாமு. 12. 1; ஏசா. 5. 1; 28. 23; எரே. 31. 29). தீர்க்கதரிசிகள், கடவுள் ஒருவரே என்றும், ஒவ்வொரு மனுஷனும் தான் செய்த குற்றங்களைக்குறித்துக் கடவுளுக்கு உத்தரவாதியாயிருக்கிறானென்றும், கடவுளின் தயவைப் பெறும்படி காணிக்கை அல்ல நல்லொழுக்கந்தான் அவசியம் என்றும் போதித்தார்கள். தீர்க்கதரிசிகளுக்குப் பிற்பாடு ஆசாரியர்கள் ஆசாரத்தைச் சிறப்பித்து வந்தாலும், ஞானிகள் தங்கள் காலத்திலுள்ளவர்கள் தீர்க்கதரிசிகள் போதித்த உண்மைகளை அறியும்படி தீர்க்கதரிசிகள் அறிவித்த போதனைகளை ஞானாகமங்களில் எழுதி வைத்து 'ஞானம்' என்பதைக் கற்றுக்கொடுத்தார்கள்.

இந்த ஆகமங்களில் பக்தியை அழிக்கிற சடங்காசாரத்தின்மூலமாயும், கடவுளுடைய நீதி, நியாயத்தைப்பற்றிய சந்தேகங்களின் மூலமாயும், தங்கள் காலத்தில் யூதர்கள் புதிதாய் அறிந்துகொண்டு வந்த கிரேக்கருடைய நாகரீகத்தின்மூலமாயும், யேகோவாவின் வணக்கத்திற்கு நேரிடும் மோசத்தை நீக்குவது இவர்களுடைய நோக்கம்.

### 4. ஞானமும் தத்துவ சாஸ்திரமும்.

ஞானாகமங்களில் தத்துவ சாஸ்திரம் இல்லை என்று சொல்லத் துணிகிறோம். கடவுள் இருக்கிறார் என்பதைப்பற்றியும், நாம் கடவு

னுடைய சித்தத்தை அறிகிற விதத்தைப்பற்றியும், சித்தாந்தத்தைப் பற்றியும், ஆத்துமத்தின் தன்மையைப்பற்றியும் இந்தப் புஸ்தகங்களை எழுதினவர்கள் விசாரணை செய்யவில்லை. இவர்கள் கடவுள் இருக்கிறார் என்றும், நியாயப்பிரமாணத்தின்மூலமாயும் தீர்க்கதரிசிகள் உரைத்த போதனைகளின்மூலமாயும் அவருடைய சித்தத்தை அறிவோம் என்றும், அவர் இவ்வுலகத்தை ஆண்டுகொண்டு வருகிறார் என்றும், சந்தேகமின்றி நம்புகிறார்கள். இவர்கள் மனுஷர்கள் நியாயஸ்தலம், கடை, வீதி, வீடு, வயல் முதலிய இடங்களில் கடவுள் அருளின பிரமாணத்தைக் கைக்கொண்டு, அதின்படி நடக்கவேண்டியவிதம் இன்னதென்று தெரிவிக்கும்படி முதியோர்களும் தாங்களும் சொன்ன மொழிகளை ஒன்றாய்ச் சேர்த்து இந்த ஞானாகமங்களை இயற்றி வந்தார்கள்.

5. ஞானத்தின் தன்மை.

ஞானாகமங்களில் சொன்ன 'ஞானம்' என்பதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு.

(i) மனுஷர்கள் அடையக்கூடிய ஞானம்.

இது மனுஷர்களை ஏமாற்றுகிற சோதனைகளையும், தீமைகளையும் கண்டித்து அவர்களுக்கு இருக்கவேண்டிய கற்பு, நியாயம், இரக்கம் முதலியவற்றின் உத்தமத்தைக் காட்டி, மனுஷர்கள் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைத் தெளிவாய்க் குறிக்கிறது.

(ii) மனுஷர்கள் அடையமுடியாத தெய்வீக ஞானம்.

இது இவ்வுலகத்தைப் படைத்து ஆண்டுகொள்ளுகிற வல்லமை. இது மனுஷர்களுக்குச் சுகதுக்கம், ஜீவன் மரணம் அளிக்கிற பிரமாணம் ஆகிய இவைகளைக் குறிக்கிறது. இந்த 'ஞானம்' மனுஷர்கள் சிற்சில சமயங்களில் குறிப்பாய்க் கவனித்துப் பார்த்தாலும் இவற்றை முழுமையும் அறியக்கூடிய திறமை அவர்களுக்கு இல்லை (யோபு 28. அதி.). மேலும் சாலமோனின் ஞானாகமத்திலும், நீதிமொழிப் புஸ்தகத்திலும் 'ஞானம்' தேவனுக்குப் பணிவிடை செய்கிற அதிகாரமுள்ள ஒரு தோழிக்குச் சமானமாக வர்ணித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானத்தினாலே அவர் சகலத்தையும் சிருஷ்டித்திருக்கிறார் என்றும், ஞானத்தினாலே நீதிமான்களுக்கு இரக்கம் காட்டுகிறார் என்றும் சொல்லியிருக்கிறது (நீதி. 8. 22; சாலமோனின் ஞானம் 8. 1; 9. 4; 10. 1).

சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் ஞானாகமங்களில் மனுஷர்கள் கடவுளுக்கும், மற்றவர்களுக்கும் செய்யவேண்டிய கடமை



களைப்பற்றி எபிரெயர்கள் அடைந்த உத்தம போதனைகள் உண்டு. இந்த ஆகமங்களில் உண்மை, நீதி, நியாயம் முதலிய நற்குணங்களைக் குறித்து எபிரெயர்களுக்கிருந்த வாஞ்சையை அறிநோம். இவைகளைக் கிரகித்துக்கொள்ளுகிற 'ஞானம்' எபிரெயர்களின்மூலமாய் அக்காலத்தில் அன்னியர்களில் அநேகருக்கும் நன்னெறியைக் காட்டினது. இவ்விதமாய் ஞானாகமங்களிற் சொல்லிய 'ஞானம்' கிறிஸ்தவ உபதேசத்தை ஏற்றுக்கொள்ளும்படி அநேகரை ஏவினது.

6. ஞானாகமங்களின் நோக்கங்கள்.

(i) நீதிமொழிப் புஸ்தகத்தில் ஞானமுள்ளவர்கள் முன்னோர்கள் நடந்த வழிகளில் நடக்கவேண்டும் என்றும், அவர்கள் நீதி நியாயத்தைச் செய்தால் அவர்களுக்கு இவ்வுலகத்தில் பலன் உண்டாயிருக்கும் என்றும், பக்திமான்களுக்குச் சுகம் இருக்கும் என்றும் தெரிவித்திருக்கிறது. இந்த ஆகமத்தை இயற்றினவர்கள் ஒருவன் நல்லவனாய் நடந்தால், அவன் பாக்கியசாலியாய் இருப்பான் என்றும், அவன் தரித்திரதசையடைந்தால் குற்றஞ் செய்கிறவனாயிருப்பான் என்றும், அபிப்பிராயமுள்ளவர்களாயிருந்தார்களென்று தோன்றுகிறது. நல்லொழுக்கமே உத்தமம் என்பது அவர்களுடைய கருத்து.

(ii) யோபின் புஸ்தகத்தில் நீதிமொழிப் புஸ்தகத்திலில்லாத ஓர் விஷயத்தைக்குறித்து விசாரணையுண்டு. அதாவது நீதிமான் பல தடவை துக்கமும் கேடும் அதிகமாய்ச் சகிப்பது அவனுக்கு நியாயமாவென்கிற சந்தேகத்தைத் தீர்ப்பதே யோபின் ஆகமத்தின் நோக்கம். வருத்தப்பட்டவன் இவ்வுலகத்தில் நேரிடும் பல விஷயங்களில் அவன் கடவுளின் ஆளுகையின் விதத்தை எப்படித் தெரியாமல் இருப்பானோ, அப்படியே தன் ஜீவியகாலத்தில் தனக்குக் கஷ்டநஷ்டம் நேரிடுவதைப்பற்றி ஆச்சரியப்படாமல், கடவுள் முடிவிலே எல்லாவற்றையும் நன்மையாக வாய்க்கச் செய்வார் என்பதை உறுதியாய் நம்பி, பொறுமையோடு இருக்கவேண்டும் என்று துக்கப்பட்ட நீதிமான்களை ஆற்றித் தேற்றும்படி இதில் ஞானோபதேசமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

(iii) உன்னதப்பாட்டை ஞானாகமங்களிற் சேர்த்துக்கொள்வதற்குக் காரணம் முதலில் நமக்குத் தோன்றுகிறதில்லை. ஆனால் நாம் அக்காலத்தில் யூதர்களுக்குத் தெரிந்த அன்னிய மார்க்கங்களில் எல்லா சன்மார்க்கத்திற்கும் விரோதமாயிருந்த சடங்காசாரங்களை அறிந்துகொண்டு வந்தால், கற்பு, நல் அன்பு, இல்லறவொழுக்கம் ஆகிய இவைகளைச் சிறப்பித்த இந்த ஆகமம் ஞானாகமங்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது நியாயந்தான் என்று சம்மதிப்போம்.

(iv) பிரசங்கி என்னும் புஸ்தகத்தில் கடவுள் மனுஷர்களுக்கு இருக்கவேண்டிய உண்மையையும், நன்னடக்கையையும் கவனிக்கிருரா என்பதைப்பற்றியும், நல்லவனுடைய நிலைமைக்கும், பொல்லாதவனுடைய நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறதா என்பதைப் பற்றியும் விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆகமத்தின் ஆக்கியோன் பல காரணங்களினிமித்தம் இவைகளைக்குறித்துச் சந்தேகத்திற்கு இடம் நமக்கு இருக்கிறது என்று சம்மதித்தாலும், கடவுள் எல்லாரையும் நேசித்து, எல்லாருக்கும் நன்மை செய்யும்படி விரும்புகிருர் என்று நம்பி, நாம் எல்லாரும் மன உற்சாகத்தோடு அவர் நமக்கு அளித்திருக்கிற கடமைகளைச் சரிவர நிறைவேற்றினுல் நமக்குப் பாக்கியம் கிடைக்கும் என்று புத்தி சொல்லுகிருன்.

(v) கிரேக்க பாஷையில் எழுதப்பட்ட சீராக்கின் மகனின் ஞானம் என்னும் ஆகமத்தில் ஒரு வித்துவான் யூதர்கள் கீர்த்திபெற்ற தங்கள் முன்னோர்களைப்போல சன்மார்க்கத்திலும், பக்தியிலும் சிறந்தவர்களாய் நடக்கவேண்டுமென்றும், யூதர்கள் எப்பொழுதும் தங்கள் முன்னோர்கள் காட்டின முன்மாதிரியைப் பின்பற்றி நடக்கும்படி ஞானமுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்றும் அவர்களை எச்சரிக்கிருன்.

(vi) கிரேக்க பாஷையில் எழுதப்பட்ட சாலமோனின் ஞானம் என்னும் ஆகமத்தில் கிரேக்க தத்துவ சாஸ்திரத்தின்மூலமாய் அடையவேண்டிய உண்மையைக் கற்றுக்கொண்டு, தனக்கு முன்னிருந்த எபிரெயர் ஞானிகள் போதித்த உண்மையோடே இதைச் சேர்த்து யூதர்கள் அடையக்கூடிய ஞானம் அந்நியர் அடையக்கூடிய ஞானத்தைப்பார்க்கிலும் சிரேஷ்டம் என்று காட்டி, யூதர்களுக்குள்ளிருந்த ஞானத்தைச் சிறப்பித்து வருகிருன்.

இந்த ஆறு புஸ்தகங்களை வாசித்து நாம் இந்த ஞானிகள் கடவுளின் அருளினுல் பலவிதமான ஞானத்தை அடைந்தார்களென்று பார்த்தபோதிலும் மெய் ஒளியான கிறிஸ்துநாதரையல்லாமல், வேறு ஞானமும் மனுஷர்களுக்குப் பூரண திருப்தியைக் கொடுக்க முடியாது என்று தீர்மானிக்கிருேம். விடிவெள்ளி வெளிச்சத்தைப்போல இந்த ஆகமங்களில் சன்மார்க்கம், பக்தி முதலியவைகளைப்பற்றிய போதனை அநேகமுண்டு. அருணோதயம்போன்ற இயேசுவின் போதனையே இவ்வுலகத்தில் ஜீவ பிரயாணம்பண்ணுகிற பரதேசிகளாகிய நமக்கு நாம் நடக்கவேண்டிய வழியைக் காட்டும்படி பிரகாசம் அருளும்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUN 1911
MADRAS.

**No. 61** ஜூன் **1911**

# வேதியர் விளக்கு

## Geraint and Lynette

### கேரேந்தும் லீனெத்தும்

(மூன்றும் பாகம்)

[பிரசங்கிமார் வாலிபர்களுக்கு நற்போதனை கொடுக்கும்படி செய்யும் பிரசங்கத்தில் முன்னோர்கள் சொன்ன இந்த உவமை மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் என்றறிந்து இதை விவரமாய் எழுதியிருக்கிருேம்.]

லீனெத் இதைக் கேட்டுக் கோபங்கொண்டு மறுபடியும் தன்
குதிரையை வேகமாய்ச் செலுத்தினுள். கேரேந்தும் பின் சென்ருன்.
கடைசியாய் லீனெத் சொன்னது: 'நான் வழி தப்பிப்போனேன்.
இக்காட்டில் கள்ளர் அநேகர் இருக்கிருர்கள். அவர்கள் உன்னைக்
கொன்ருல் நல்லதாகும். அப்போது நீ இனி எனக்குத் தொந்தரவு
பண்ணமாட்டாய், குசினிக்காரனே!' என்ருள். இருவரும் இவ்வித
மாய்ச் சாயங்காலவேளையில் போகும்போது ஒரு ஆள் காட்டிலிருந்து
அவர்களுக்குப் பின்னுக ஓடி வந்து 'ஐயோ, கள்ளர்கள் என்னுடைய
எஜமானைக் கட்டி ஆற்றிலே அவனை மூழ்கும்படி எறியப்போகிருர்
கள்' என்று கூப்பிட்டான். அதற்குக் கேரேந்த் 'நான் தீமையை
நீக்கவேண்டியவன். வழிகாட்டு, பின்செல்வேன்' என்று அவனோடு
கூடப் போனுன். ஆற்ருேரத்தில் ஆறுபேர் ஒருவன் கழுத்தில் கல்
க்கட்டி அவனை அமிழ்த்தப்போகும் சமயத்தில், கேரேந்த் மூவரை
அடிக்க மற்ற மூவரும் ஓடிப்போய்விட்டார்கள். உடனே இவன்,
அந்த ஆளின் கட்டுகளை அவிழ்த்து அவனை விடுதலைசெய்தான்.
அவன் ஆத்தர் ராஜாவின் சிநேகிதர்களில் ஒருவன். அவன் நன்றி
யறிதலாக கேரேந்துக்கு 'நான் என்னதான் உனக்குக் கொடுக்கக்
கூடும்?' என்று கேட்டான். கேரேந்த் 'எனக்கு ஒன்றும் வேண்
டாம், நான் செய்கிறது ஆத்தர் ராஜா எனக்கு இட்ட கடமை. ஆனுல்
தயவுசெய்து இந்தப் பெண்ணுக்கு உமது வீட்டிலே இன்று இராத்
தங்க இடம் கொடுப்பீரா?' என்று கேட்க, அந்த மனுஷன் அவர்

OFFICE OF THE ... 20 JUN 1911 MADRAS



களைச் சந்தோஷமாய் தன் வீட்டுக்கு அழைத்துப்போய், அங்கே அவர்களுக்காகப் போஜனத்தை ஆயத்தம்பண்ணினான். அந்தத் தேச வழக்கத்தின்படி போஜனபந்தியில் வீட்டு எஜமான் லீனெத்தை கேரேந்தின் பக்கத்தில் உட்காரும்படி சொன்னான். ஆனால் அவளோ வெறுப்புள்ளவளாய் ‘இன்று காலை நான் ஆத்தர் அரசனிடம் என் சகோதரியை இரட்சிப்பதற்கு ஒரு யுத்தவீரனை அனுப்பும்படி கேட்க, அவர் இந்தக் குசினிக்காரனை அனுப்பினார். இவன் போர்வீரரோடு யுத்தம் செய்வதையும், எங்களுடன் பந்தியிருப்பதையும் பார்க்க இவன் குசினியில் வேலை செய்யவேண்டும்’ என்று கர்வத்தோடு சொன்னாள். வீட்டு எஜமான் ஆச்சரியப்பட்டுத் துக்கத்தோடு கேரேந்தை வேறோர் இடத்தில் பந்தி இருத்தி, தானும் அவனோடு சாப்பிட்டு அதிக பட்சமாய் அவனோடு சம்பாஷணை செய்தான். விடியற்காலமே லீனெத்தும் கேரேந்தும் புறப்பட்டு ஆற்றண்டை வந்தார்கள். அதன் கரை செங்குத்தாய் இருந்தது. அது விரைவாய்ப் பாய்ந்து ஓடினது. அதில் ஒடுக்கமான பாலமொன்று போடப்பட்டிருந்தது. மற்றக் கரையில் பட்டினாற் செய்யப்பட்ட பிரகாசமான கூடாரமொன்று கீழே மஞ்சள் நிறமும் மேலே இரத்தாம்பர நிறமுமாய்த் தோன்ற, அதற்கு மேல் ஒரு சிவப்புக் கொடி பறந்தது. அக்கூடாரத்திற்குமுன் உலாவித் திரிந்த போர்வீரன் ஒருவன் இருந்தான். அவன் போர் ஆயுதங்கள் ஆகாயத்தைப்போல் நீலநிறமாய்த் தோன்றின. அந்த நிறமான அவனுடைய கேடகத்தில் காலை வெள்ளி வரையப்பட்டிருந்தது. அவன் அவர்களைப் பார்த்து, ‘ஓ! பெண்ணே! ஆத்தர் ராஜாவின் கோட்டையிலிருந்து நீ அழைத்துவந்த யுத்தவீரன் இவன்தானா?’ என்று இகழ்ச்சியாய்ப் பேசினான். அதற்கு லீனெத், ‘இல்லை! இல்லை! ஆத்தர் ராஜா உன்னையும் உன் மடத்தனத்தையும் நிந்தித்து, உன்னைப் பயமுறுத்தும்படி ஒரு குசினிக்காரனை அனுப்பியிருக்கிறான்’ என்றாள்.

மேலும் அவள் கேரேந்த் அவனைப் பார்த்ததைக் கண்டு ‘ஏன் நடுநடுங்குகிறாய்? நீ ஓடிப்போகலாம். நீ ஒரு யுத்தவீரனா?’ என இவனைத் தூஷித்தாள். கேரேந்த் அவளைப் பார்த்து, ‘அம்மா! நான் கீழ்மகனாயிருந்தாலுஞ் சரி, யுத்தவீரனாயிருந்தாலுஞ் சரி, நீ என்னை எவ்வளவாய் இகழ்ந்தாலுஞ் சரி, நான் யுத்தம் செய்யவே விரும்புகிறேன். நான் அவனைக் கவிழ்த்தே போடுவேன்’ என்றான்.

பிறகு அவர்கள் இருவரும் சண்டை செய்தார்கள். கடைசியில் கேரேந்த் அவனைக் காயப்படுத்தித் தரையில் விழத் தள்ளினான். விழுந்தவன் தன் உயிரைக் காக்கும்படி கேரேந்தைக் கெஞ்ச, அவன் ‘இந்தப் பெண் உன்னைக் காப்பாற்ற என்னைக் கேட்டால்மாத்திரம்



நான் உன்னைக் கொல்லாமல் விடுவேன்’ என்றான். அதற்கு லீனெத் கோபங்கொண்டு, ‘நான் உன்னிடத்தில் ஒரு தயவைக் கேட்பேனா?’ என, கேரேந்த் ‘அப்படியானால் பின்னை அவன் சாகத்தான் வேண்டும்’ என்று அவனைக் கொல்லப்போனான். உடனே லீனெத் ‘குசினிக்காரனே! உன்னைவிட மேன்மையானவனைக் கொல்லத் துணியாதே!’ என்று சத்தமிட்டாள். அதற்கு அவன் ‘அம்மா! உன் சித்தப்படிச் செய்ய எனக்குச் சந்தோஷம்’ என்று சொல்லி அந்த மனிதனுடைய கேடகத்தை வாங்கிக்கொண்டு அவனை ஆத்தர் ராஜாவிடம் அனுப்பி மறுபடியும் லீனெத்தைப் பார்த்து ‘வழிகாட்டு, நான் பின்செல்வேன்’ என்றான். இதைக் கேட்டவுடன் அவள் முன்போல விரைவாய்ப் போனாள். கேரேந்த் அவளைக் கிட்டி வந்தபொழுது, அவள் ‘அடா! நீ அங்கே யுத்தஞ் செய்தபொழுது, குசினிமணம் அவ்வளவாய் வீசவில்லை. இப்போதோ அதிகம் வீசுகிறது’ என்றாள். கேரேந்த் இப்பொழுதும் அவளுடைய இகழ்ச்சியான பேச்சுக்குச் சாந்தமாய் மாறுத்தரஞ் சொன்னான். இப்படியே அவர்கள் அவ்வாற்றண்டையிலுள்ள இரண்டாம் காவலுக்கு வந்தார்கள். விரைவாய் ஓடின அந்த ஆற்றுக்கப்பால் பளபளப்பான யுத்தாயுதந் தரித்த இன்னொரு போர்வீரன் பெரிய சிவப்புக் குதிரையின்மேல் ஏறி வந்து கேரேந்தைக் கண்டவுடன் ‘அடா! நீ இங்கு என் நாட்டில் என்ன செய்கிறாய்?’ என்று கர்ச்சிக்கும் சிங்கம்போற் கூவினான். லீனெத் இதைக் கேட்டு ‘ஆத்தர் ராஜாவின் குசினிக்காரனாகிய இவன் உன் தம்பியை முதல் பாலத்தில் வென்று, அவனுடைய கேடகத்தைப் பற்றிக்கொண்டானே’ என்றாள். மத்தியானச் சூரியன் என்னும் அவன் இதைக் கேட்ட மாத்திரத்தில் கேரேந்தை எதிர்க்கப் பார்த்தவுடனே அவர்கள் இருவரும் ஆற்றிலே நாலுமுறை பலமாய் ஒருவரையொருவர் மோதினார்கள். அந்த வீரன் பலசாலியாய் இருந்தபடியால் கேரேந்த் கொஞ்சம் பயந்தான். ஆனால் அவனுடைய குதிரையின் கால் தவற, அவனும் தண்ணீரால் அள்ளப்பட்டுப்போனான். என்றாலுங் கேரேந்த் அவனைப் பிடித்து கரையிற் கொண்டுவந்து ஆத்தர் அரசரின் கோட்டைக்கு அனுப்பிவிட்டான்.

இதற்குப் பிறகு இவன் லீனெத்தைப் பார்த்து, ‘வழிகாட்டு, நான் பின்செல்வேன்’ என்று கூப்பிட்டான். இந்த முறை லீனெத் பேசாமற்போனபடியால் கேரேந்த் அவளை நோக்கி ‘அம்மா! குசினிமணம் குறையவில்லையா’ என்றான். அதற்கு அவள் ‘கொஞ்சமும் குறையவில்லை. நீ அவனை வெற்றிகொள்ளவில்லை. அவனுடைய குதிரையின் கால் இடறினதினாலே விழுந்தான். அதுவுமல்லாமல் மூன்றாம் காவற்காரன் ஒருவன் நிற்கிறான். அவனைக் காணுமுன் நீ

ஓடிப்போய்விட்டால் புத்தியாயிருக்கும்' என்று சொல்லவே மாலை வெள்ளி என்னும் வீரன் ஆற்றின் கரையில் நிற்கிறதைக் கண்டார்கள். அவன் கேரேந்தைப் பார்த்து, 'பையா! நீ இங்கே என்ன செய்கிறாய்?' என்று கூவினான். லீனெத் இதைக்கேட்டு 'இவன் ஆத்தர் ராஜா அனுப்பின ஒரு குசினிக்காரன். உம்முடைய தம்பிமார் இருவரும் இவனால் வெல்லப்பட்டார்கள். நீயும் இவனால் விழுவாய், நீ கிழவன் அல்லவா?' என்றாள். அதற்கு மாலை வெள்ளி 'ஆ! பெண்ணே! நான் கிழவன்தான். ஆனால் எந்த வாலிபரிலும் நான் பெலனும் தைரியமும் உள்ளவன்' எனக் கூற கேரேந்த், 'கிழவனே! காலை வெள்ளியைக் கவிழ்த்த பலம் மாலை வெள்ளியையுங் கவிழ்க்கும்' என்றான். அந்த நிமிஷமே மாலை வெள்ளி ஆயுதபாணியாய் வந்தான். கேரேந்த் அனேகந்தரம் அவனை விழப்பண்ணியும், அவன் திரும்பத் திரும்ப எழுந்து அதிபலத்துடன் தாக்கினான். அப்பொழுது லீனெத் 'நல்லது குசினிக்காரனே! நன்றாய் அடித்தாய். நல்ல யுத்தவீரனைப்போல் யுத்தஞ்செய்கிறாய். என் சகோதரியை விடும்படி, அடி! அடி! ஆத்தரின் யுத்தவீரனே! அடி!' என்று வேண்டினாள். இதைக் கேட்ட கேரேந்த் இன்னும் பெலனாய் அடித்துக் கடைசியாய் அந்த வீரனை ஆற்றிலே எறிந்துவிட்டான்.

பிற்பாடு லீனெத்தைப் பார்த்து 'வழிகாட்டு! நான் பின்செல்வேன்' என்றான். அவளோ 'நான் இனி முன்செல்லமாட்டேன். எல்லாக் குசினிக்காரரிலும் நீர் ராஜாவாய் இருக்கிறீர். நீர் உம்மை குசினிக்காரன் என்று சொல்லியிராவிடில், நான் உம்மை மேன்மையுள்ள போர்வீரன் என்று சொல்லியிருப்பேனே. நீர் ஆத்தரின் யுத்தவீரரைப்போல் சாந்தமுள்ளவராயும், தைரியமுள்ளவராயும் இருக்கிறீர். நீர் வேலைக்காரன் என்றதினால் அல்லவோ மயங்கிப்போனேன். நான் உம்மைக் கடிந்து இகழ்ந்ததைப்பற்றித் துக்கப்படுகிறேன். என் குற்றம் எல்லாவற்றையும் எனக்கு மன்னியும்' என்று கெஞ்சினாள். அதற்கு கேரேந்த் 'அம்மா! நீ சொன்னதை நான் கவனிக்கவில்லை' எனச் சொல்லி இருவருஞ் சென்றனர். பின்பு லீனெத் 'இன்னுங் கொஞ்சத்தூரத்தில் ஒரு குகையிருக்கிறது. அங்கேதான் எனது சகோதரி தனக்காக யுத்தஞ் செய்பவர்களுக்குப் போஜனம் ஆயத்தம்பண்ணுகிறதற்காக ஆட்களை அனுப்பியிருக்கிறாள்' என்று அறிவித்தாள். இருவரும் அதற்குட் போய் லீயோனை அனுப்பிய வேலைக்காரர் கொண்டுவந்த போஜனத்தைச் சாப்பிட்டு மறுபடியும் பிரயாணம்பண்ணினார்கள்.

இந்த முறை லீனெத் கேரேந்துக்காகப் பரிதாபங்கொண்டு, இவனைத் திரும்பும்படி கேட்டு 'நேற்று முழுவதும் நான் உம்மைக் கடிந்துகொண்டதையிட்டுத் துக்கப்படுகிறேன். நீர் அந்த மூன்று பேரையும் வென்றதினால் உமக்குக் கீர்த்திதான். கோட்டையில் லீயோனை அடைத்துக் கட்டியவன் உம்மை மோசப்படுத்திவிடுவான். ஆனபடியால் நாம் திரும்பிப்போய் லானிஸ்லோத்தை அவனோடு யுத்தஞ்செய்யும்படி அழைத்துவருவோம் வாரும்' என்று கெஞ்சினாள். கேரேந்த் 'அப்படியல்ல கோட்டையைக் கட்டியவனுக்கு நான் பயப்படமாட்டேன். ஏன் அஞ்சுகின்றாய்?' என்றான். பிற்பாடு மாலையில் அவர்கள் அபாயக் கோட்டையைச் சமீபித்தார்கள். அதற்குமுன் ஒரு சிவப்பான கூடாரமும், அதற்குமேல் ஒரு கறுத்த கொடியுங் காணப்பட்டன. பக்கத்தில் ஒரு எக்காள வாத்தியம் தொங்கினது. கேரேந்த் அந்த எக்காளத்தை ஊத, கறுப்பு வஸ்திரமும் ஆயுதமும் தரித்த இரவு என்னும் யுத்தவீரன் ஒரு கறுப்புக் குதிரையின்மேல் ஏறி வந்தான். தன் ஆயுதங்களில் எலும்புக் கோர்வை வரைந்திருந்த பயங்கர ரூபியான அவன் அவர்களுக்குமுன் இயமனைப்போல் நிற்கிறதைக் கண்ட கேரேந்த் தைரியத்துடனே அவனைப் பார்த்து, 'கடவுள் உனக்குத் தந்த பலத்தினால் வெல்லாமல், மனுஷரை பயப்படுத்தும்படி நீ ஏன் இவ்விதமாய் வேஷந்தரித்து வருகிறாய்?' என அவனைக் கண்டித்துக் கேட்டான். அவனோ எதிர்வார்த்தை பேசாமல் நிற்க, கோட்டையில் ஜன்னல் வழியாய் அவனைப் பார்த்து நின்ற லீயோனை 'ஐயோ! மரணமும் இருளுமான இவனையா நான் விவாகஞ்செய்வது' என்று அழுதாள். கேரேந்த் நடுநடுங்கினாலும் இரவு என்பவன் குதிரை ஏறி ஓடினதைக் கண்டு, தன் வாளை உருவி, முழுப்பலத்தோடும் அவனுடைய தலைச்சீராவை வெட்டினான். இதோ தலைச்சீரா விழவே, அந்தப் பயங்கரமான வேஷத்தைத் தரித்தவன் ஒரு நல்ல வாலிபனாக யாவரும் கண்டார்கள். அவன் கேரேந்தைப் பார்த்து 'யுத்தவீரனே! என்னைக் கொலைசெய்யாதே! என் சகோதரர் மூவரும் லீயோனையும் அவளுடைய ஜனங்களையும் பயமுறுத்த இவ்வித வேஷந்தரிக்கும்படி என்னைப் பலவந்தம்பண்ணினார்கள்' என்று சொல்லித் தனக்கு இரங்கும்படி மன்றாடினான்.

இப்படியே கேரேந்த் யுத்தத்தை முடித்துச் சிறைப்படுத்தின லீயோனை என்பவளை விடுதலைசெய்தான். பின்னாக வந்து எல்லாவற்றையுங் கண்ட லானிஸ்லோத்தும் இவனைப் புகழ்ந்தார். அப்பொழுது எல்லாரும் ஒருமித்துச் சந்தோஷங் கொண்டாடினார்கள். இந்தக் கதை சொன்னவர்களில் சிலர் கேரேந்த் லீயோனை விவாகஞ்செய்தான் என்றும், சிலர் இவன் லீனெத்தை விவாகஞ்செய்தான் என்றும் சொல்லுகிறார்கள்.

## A Bible Reading — Exodus 40. 34-38

By

The Rev. T. Walker, M.A.

யாத்திராகமம் அதி. 40. 34-38

(தொடர்ச்சி)

III. தேவனுடைய மகிமை. வாக். 34-38.

1. சமயம். வாக். 34. 'அப்பொழுது.' அதாவது :—

a. மனுஷன் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடிந்தபொழுது (2 இரா. 3. 16-20; 4. 31-33; 1 இரா. 7. 51-8. 11; அப். 19. 1-7).

b. மனுஷன் தன் கிரியைகளை யெல்லாம் விட்டோய்ந்தபொழுது (1 இரா. 18. 31-39; ஏசா. 41. 17-20; எபி. 4. 10).

2. சம்பவம். வாக். 34, 35. 'ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.'

'மேகம்' கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் (யாத். 14. 20; 19. 9; 24. 15; 34. 5; சங். 97. 2; 104. 3; மி).

'மகிமை' கர்த்தருடைய பரிபூரணத்திற்கு அடையாளம் (ஏசா. 6. 3; 60. 2; யோவா. 1. 14, 16; எபி. 1. 3; கொலோ. 1. 19; மி).

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அந்த மேகம் 'தங்கவும்,' அந்த மகிமை 'நிரப்பவும்' வந்தது (வாக். 35).

முந்தி மறுரூபமான மோசே முதலாய் (34. 1, 2) 'ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமலிருந்தது.'

இதைப்பார்க்கிலும் மேன்மையான காரியங்கள் கிறிஸ்து இரட்சகர்மூலமாய் மெய் விசுவாசிகளுக்கு அருளப்பட்டிருக்கின்றன. சகல திவ்விய பரிபூரணமும் தம்மில் வசிக்கப்பெற்ற தேவகுமாரன் (கொலோ. 1. 19), நம்முடைய இருதயங்களை வாசஸ்தானமாகத் தெரிந்துகொண்டு அங்கே வந்து வாசம்பண்ணி (எபே. 3. 17), தமது பரிபூரண மகிமையால் நம்மை நிரப்பிப் பூரிப்பாக்குகிறார் (யோவா. 1. 16; எபே. 3. 19).



இவ்விதமாய்,—மீட்கப்பட்ட மனிதன் தேவனுடைய வாசஸ்தலமாகி அவருடைய மகிமையால் நிரப்பப்படுகிறான்.

3. சகாயம். வாக். 36-38.

அந்தத் திவ்விய மேகம் வழிகாட்டியுமாயிற்று. அவ்வாறு,—தங்கள் இருதயங்களில் திவ்விய மகிமையைப் பெற்ற உத்தம விசுவாசிகளும் அவராலே வழி நடத்தப்பட்டும் வருகிறார்கள் (எசே. 1. 20, 21; பிலிப்பு, அப். 6. 3, 5; 8. 26-28; பவுல், அப். 9. 17; 13. 2; 16. 6-8; ரோ. 8. 14).

நம்மை நிரப்பின ஆண்டவர் நம்மை வழி நடத்தியும் வருவார். அவரால் நடத்தப்பட்டவர்களுக்குச் சந்தேகமும் மனக்கவலையுமிராது (மத். 11. 2, 30). மேகம் எழும்பும்போது பிரயாணம்பண்ணி, மேகம் எழும்பாதிருக்கும்போது தங்குவார்கள் (வாக். 36, 37).

மேலும்,—இந்த நடத்துதல் 'எல்லாப் பிரயாணங்களிலும்' எல்லா விசுவாசிகளுக்கும் அருளப்படுகிறது (வாக். 38; சங். 48. 18).

யாத்திராகமம் எவ்வளவு நன்றாய் முடிகிறது. 'பகலில் கர்த்தருடைய மேகமும் இரவில் அக்கினியும் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது.'

1-ம் அதிகாரத்தில் அடிமைகளாய்க் காணப்பட்ட ஜனங்கள் மீட்பும் விடுதலையுமடைந்து, திவ்விய உடன்படிக்கையால் கர்த்தருடைய சபையாகி,—இந்தக் கடைசி அதிகாரத்தில் அவருடைய மகிமையால் நிறைந்த வாசஸ்தலமாய்ச் சிறந்து விளங்குகிறார்கள்.

கிறிஸ்துவின் திரு ரத்தத்தினாலே மீட்கப்பட்ட உத்தம சபையின் அனுபவம் அவ்வாறே! 'இதோ! மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது; அவர்களிடத்தில் வாசமாயிருப்பார்' (வெளி. 21. 3).

அவருக்கு மகிமையும் ஸ்தோத்திரமும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

# Living Death

## ஜீவனற்ற உயிர் அல்லது பக்தி குறைந்துபோதல்

**'நீ உயிருள்ளவன் என்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.'** வெளி. 3. 1.

சர்தைப் பட்டணத்திலுள்ள சபையைக்குறித்து நமக்குக் கொஞ்சந்தான் தெரியும். முற்காலத்தில் அந்தப் பட்டணத்திற்கு மேன்மையும், கீர்த்தியும், ஆஸ்தியும் உண்டாயிருந்தது. கி. பி. 17-ம் வருஷம் ஒரு பெரிய பூமி அதிர்ச்சியினால் அப்பட்டணத்திற்கு அதிக நஷ்டம் நேரிட்டது. ஆனதினால் அதற்கு முன்னிருந்த சுகக்ஷேமங்களெல்லாம் குறைந்துபோயிற்று. அதன்பின் எறக்குறைய முப்பது வருஷங்களுக்குள் அந்த ஊரில் ஓர் கிறிஸ்தவ சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் தாங்கள் வசித்த பட்டணத்திற்குக் குறைவு எப்படி யுண்டானதோ, அப்படியே அச்சபையாருக்கு பக்திவிஷயத்திலும் குறைவுண்டானது. இதை யறிந்து பரி. யோவான் இச்சபைக்குத் தான் எழுதின நிருபத்தில் இச்சபைக்கு வந்த பக்திக்குறைவைக்குறித்து எச்சரிப்பு கொடுக்கிறான். நம்முடைய சபைகளுக்கும் சபையார்களுக்கும் பக்தியில் குறைவு பல தடவைகளில் உண்டு என்று நாம் பார்த்தபடியினால் தற்காலத்திலே,

I. பக்திக்குறைவு வருகிறதைப்பற்றிய அடையாளங்களையும்,

II. நாம் அந்த அடையாளங்களைக் கவனிக்காமற்போனதினாலுண்டாகும் நஷ்டங்களையும் கவனிப்போம்.

### I. பக்திக் குறைவுக்கு அடையாளங்கள்.

வியாதியஸ்தனுக்கு வியாதி நேரிடும்போது அந்த வியாதிக்குக் குறிப்புகள் எப்படி யுண்டாகுமோ அப்படியே ஆத்தும வியாதிக்கும் குறிப்புகள் உண்டு. இவைகள் எவை?

1. பக்திக் குறைவை அடைகிறவர்கள் மற்றவர்களிடத்தில் அடிக்கடி குற்றம் பிடிப்பார்கள் என்பது முதலாம் அடையாளம். தங்கள் குருமார், உடன் சபையார்கள், அயலகத்தார்கள் செய்த காரியங்களைப்பற்றி அவர்களுக்கு எப்போதும் திருப்தி இல்லை. மற்றவர்களைக்குறித்து இகழ்ச்சியாய் அல்லது பரியாசமாய்ப் பேசிக்கொள்வார்கள். அடிக்கடி கோள் சொல்லுவார்கள். கோட்சொல்லாமலிருந்தால் மனதில் சமுசயங்கொள்ளுவார்கள்.



2. பக்தியின் அனல் இனி அவர்களுக்கிருக்கமாட்டாது என்பது இரண்டாம் அடையாளம். தேவ ஆராதனைக்கு வர விருப்பமில்லை. வேதத்தை வாசிக்கவும் பிரியமில்லை. வாசித்தால் அதினால் பலனுமில்லை. நன்மைக்கும் தீமைக்குமுள்ள வித்தியாசம் இன்னதென்று கவனிக்காமலிருப்பார்கள். முதலிலே இது அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் வரவர இந்தப் பக்தியின் அனல் குறைந்துபோனதினால் கடைசியில் கடவுளை நம்பாமலும், இயேசுவைப் பின்பற்றாமலும், மேலானவைகளை நாடாமலும், திமிர்வாதக்காரனைப்போலவும், சூம்பினகையுடையவனைப்போலவும், பக்திக்குரிய எல்லா விஷயங்களிலும் உயிர் இல்லாதவர்களாயிருப்பார்கள். அடுப்பிலே நெருப்பு இல்லாவிட்டால் அதினால் என்ன பிரயோஜனம். இருதயத்தில் பக்தியின் அனல் இல்லாவிட்டால் அது இயேசுவுக்கு உதவாத இருதயம்.

3. பக்திக் குறைவுக்கு மனச்சாட்சியிலுண்டான அஜாக்கிரதை இன்னொரு அடையாளம். நாம் கொலை, களவு, விபசாரம் முதலிய பாதகங்கள் செய்யாமலிருந்தும், கோள், பொய், தூஷணம் முதலானவை பேசுகிறதைப்பற்றி நமது மனச்சாட்சியில் அஜாக்கிரதையிருந்தால் நம்முடைய ஆத்துமா செத்துப்போனதென்று சொல்ல முடியாவிட்டாலும் உயிருள்ள அதற்குச் சாவு சீக்கிரத்தில் வருகிறது. உயிருள்ள ஆத்துமா நீதியைக்குறித்து ஆவலுள்ளதாயிருக்கிறது. அது இயேசுவைப்போல் நடக்க விரும்புகிறது. அவருக்காகவே சிலுவையைச் சுமக்கிறது என் கடமை என்று உணருகிறது. பக்தியில் குறைந்துபோகிறவன் எப்பொழுதும் இவ்விதமாய் நடவாதபடிக்குச் சாக்குப்போக்குகளைத் தேட விரும்புவான்.

4. லௌகீக விஷயங்களைப்பற்றிய வாஞ்சை பக்திக் குறைவுக்கு மற்றோர் அடையாளம்.

சீனா தேசத்தில் குற்றஞ்செய்த உயர்ந்த ஜாதியான ஒருவனை, நியாயாதிபதிகள் கொலைக்குத் தீர்மானித்தால் அவன் உயர்ந்த ஜாதியானதால் அவன் வாயைப் பொன் தகட்டால் மூடி அல்லது பட்டுக் கயிற்றால் அவன் கழுத்திற் சுருக்குப்போட்டு அவனைச் சாகும்படி செய்வார்கள். ஒருவன் இவ்விதமாய்த் தன்னைக் கொலைசெய்ய விரும்புவானா? இல்லை. ஆனால் பக்திவிஷயத்தில் நாம் விசாரித்தால் எத்தனையோ பேர் பொன் தகட்டைப்போன்ற பண ஆசையினால் அல்லது உலக இன்பம் என்னும் பட்டுக் கயிற்றால் தங்கள் ஆத்துமாவுக்கு மரணம் உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். இப்பிரபஞ்சத்தின்பேரில் ஆசையிருந்தால் நம்மிலுள்ள பக்தி குறைந்துபோவது நிச்சயம்.

**II. இந்த அடையாளங்களைப்பற்றிய அஜாக்கிரதையால் உண்டான நஷ்டங்கள்.**

மனச்சாட்சி, விசுவாசம், உணர்வு, நம்பிக்கை ஆகிய இவைகளில் குறைவு படிப்படி வந்ததினாலே முதலில் உயிருள்ளவன் தனக்குள்ளே இடம்பெற்ற சாவு வந்ததைப்பற்றி அறியாமலிருக்கலாம். முதலில் கண்ணுக்குத் தெரியாத ஒரு அற்ப புழு முடிவிலே பழுத்த கனியை முற்றிலும் அழிக்கும். பக்திக் குறைவு உண்டாகும்போது நம்மை ஏமாற்றுகிற அஜாக்கிரதை நாலுவிதம் உண்டு.

1. முன்னிருந்த பக்திக்குரிய அனலைப்பற்றி அற்பமாய்ப் பேசுவது. முதலிலே துன்மார்க்கத்திற்கேதுவான சிற்றின்பப் புஸ்தகங்களை வாசிக்காதவன் இப்போது அவைகளை வாசித்து முந்தி அதை வாசியாத ஏற்பாட்டைப்பற்றிக் கேலியாய்ப் பேசிக்கொள்வான். முந்தி பணவிஷயத்தில் அவன் உண்மையுள்ளவன்; அநியாயமாய் ஒரு காசும் வாங்கமாட்டான். இப்போது அவன் திருடன் என்று சொல்வதற்குக் காரணமில்லை. ஆனால் இப்பொழுது எல்லாம் நியாயத்தின்படிக் கட்டாயமாய்ச் செய்வதற்கு அவனுக்கு முன்னிருந்த விருப்பமில்லை. அவ்விதமான அஜாக்கிரதையைப்பற்றி அவன் அற்பமாய் எண்ணுகிறான்.

2. பக்திக் குறைவைக்குறித்து அஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து, அந்தக் குறைவு நம்மிடத்தில் இருக்கிறதென்று சில சமயங்களில் நாம் பார்த்தபோதிலும், அதைக் கவனிக்காமற் போகிறோம். 'முந்தி நான் ஞாயிற்றுக்கிழமைதோறும் மூன்று தரம் பிரியத்தோடு ஆராதனைக்குப் போனேன்; இப்போது மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு தடவைமாத்திரம் போகிறேன்; இது பெரிய காரியமல்ல, இதில் குற்றம் என்ன?' என்று அதைக் கவனிக்காமற் போகிறான். முந்தி அவன் தினந்தோறும் வேத புஸ்தகத்தை ஒழுங்காய் வாசித்து வந்தான். இப்போதோ, தன் வீட்டில் தன்னுடைய வேத புஸ்தகம் இருக்கிற இடங்கூட அவனுக்குத் தெரியாது. மேலும் அது எந்த இடத்தில் இருக்கிறதென்று தேடிப் பார்த்து அறியவேண்டுமென்கிற விருப்பம் அவனுக்குக் கிஞ்சித்தேனுமில்லை. ஓர் பெரிய மரத்தைக் கறையான் அரித்துக்கொண்டு அதற்குள் நுழைகிறதைப் பார்த்த ஒருவன், அதைக்குறித்து அஜாக்கிரதையுள்ளவனாயிருப்பானா? இருக்கவே மாட்டான். ஆகவே, தங்கள் உள்ளத்தில் பக்திக்குறைவின் அடையாளங்களைப் பார்க்கிற அநேகர் 'இதனால் ஒன்றுமில்லை' என்று சொல்லி, குணமாக்குதலின் வழிவகைகளைத் தேடாமலிருப்பது நியாயமா?

3. அநேகர் தங்களுக்குள் பக்திக் குறைவின் அடையாளங்களை மறைத்துக்கொள்வார்கள். விசுவாசம் பலனற்றது; மனச்சாட்சியும்



பலயீனமாயிருக்கிறது; கிறிஸ்தவ நடக்கையில் உற்சாகமும் ஊக்கமுமில்லை. ஆனால் இவைகளெல்லாவற்றையும் மறைத்து 'சபையிலே மற்றவர்கள் நம்மைக் கண்ணியப்படுத்தத்தக்க விதமாய் நடப்பது போதும்' என்று எண்ணிக்கொள்வார் பலர். ஒருவன் தனக்கு இருமல், தலைநோவு அல்லது கண்ணோவு இருப்பதை அறிந்தும் 'இது எனக்கு என்ன செய்யும்? இதனால் எனக்கொன்றுமில்லை' என்று சொல்லிக்கொண்டே அதற்கு யாதேனும் பரிகாரம் செய்து நீக்கிக் கொள்ள முயலாமல் மறைத்துக்கொண்டு சும்மா விருப்பது நல்லதா? நல்லதல்ல. உடனே வைத்தியனைத் தேடிப்போகவேண்டும். அவ்வாறே, ஆத்துமத்திலே பக்திக் குறைவுக்குரிய அடையாளங்கள் நம்மிடத்திலிருப்பதாகப் பார்க்கும்போது, நாம் அந்தக்ஷணமே பரம வைத்தியனாகிய இயேசுவினிடத்திற் போய் ஆத்தும சுகத்தைப் பெற்றுக்கொள்வது அவசியம்.

4. இவ்வித அடையாளங்களைக் கவனிக்காமல் அஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து, இந்தக் குறைவு குறைவல்ல என்பதாகச் சிலர் சொல்லுவார்கள். 'இப்போதே தேர்ந்த புத்தியோடு நடக்கிறேன். நான் புத்திசாலியாயிருக்கிறேன். நன்மை தீமை எல்லாமறிந்து நியாயத்தின்படி நடக்கிறேன்' என்று சொல்லுவான். ஒருவனும் தன்னைக் கண்டிக்கப் பிரியமிராது. தன் ஆத்துமாவைக் கெடுத்துத் தன்னை அடக்கி ஆளாமல் தனது களஞ்சியத்தில் திரளான ஆஸ்தியைச் சேர்த்துவைத்துத் தனக்கு இனி யாதொரு குறைவுமில்லை என்று எண்ணின தனவந்தன் தன்னை 'மதிகேடன்' என்று நினைக்கவில்லை (லூக். 12. 20). கடவுளோ அவனைப் பார்த்து 'மதிகேடனே' என்று சொன்னார். அப்படியே ஒருவன் தன்னிடத்தில் பக்திக் குறைவுக்குக் காரணமான அடையாளங்களைக் கவனிக்காமல், தன்னைத் தானே வெகுவாய் மெச்சிக்கொண்டாலுஞ் சரி, அவன் சேர்ந்த சபையில் யாவரும் அவனை மெச்சிப் புகழ்ந்தாலுஞ் சரி, அவனுடைய ஆத்தும நிலைமையோ மிகவும் பரிதபிக்கப்படத்தக்கது.

## The Treasury

## பொக்கிஷசாலை

### மன்னிப்பு கேட்பது

கர்வத்தோடும் அகங்காரத்தோடும் நடக்கிறவர்கள் இயேசு அருளின கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னே தங்களி

னுள்ள அகங்காரத்தை அடக்கவேண்டும். இதற்கு உதாரணமாக முன்னோர்கள் சாத்தானைப்பற்றி ஒரு உவமை சொன்னார்கள். அதாவது மகா பக்தன் ஒருவன் தரிசனத்திலே சாத்தான் தேவனுடைய சிங்காசனத்தின்முன் நின்று தேவனை நோக்கி சொன்ன வார்த்தைகளைக் கேட்டான்.

பக்தன் கேட்கையில் சாத்தான் ‘தேவரீர், எனக்கு ஏன் எப்பொழுதும் தண்டனைசெய்கிறீர்? பூலோகத்தில் உம்முடைய கட்டளைகளை அடிக்கடி மீறின பாவமுள்ள மனுஷர்களுக்கு மன்னிப்பு அருளுகிறீர். எனக்கு மன்னிப்புக் கொடாமலிருக்கிறீர், இது நியாயமா?’ என்று சொன்னான். இதற்கு ‘சாத்தானே! நீ ஒருதரமாவது மன்னிப்புக் கேட்டிருக்கிறாயா?’ என்கிற அசரீரி வாக்குத் தொனித்தது. அதைக் கேட்டுச் சாத்தான் வெட்கப்பட்டு அவ்விடத்தை விட்டு போனான். இந்தத் தரிசனத்தைக் கண்ட பக்தன் இதில் அகங்காரத்தினால் உண்டான இடறலை அறிந்தான்.

---

## பழிவாங்குதல் எனக்குரியது

ரோ. 12. 19; உபா. 32. 35.

இவ்வுலகத்தில் அநியாயம், கபடம் முதலிய குற்றங்களைச் செய்த அநேகருக்கு அவர்கள் செய்த குற்றங்களுக்காகத் தண்டனை கிடைக்கிறதில்லை என்று தோன்றுகிறது. இதை யோசித்த சிலர் இதினாலே விசனப்பட்டு, குற்றவாளிகளாகிய இவர்களைக் கடவுள் கவனிக்க மாட்டாரோ என்கிற சந்தேகத்துடன் இருக்கிறார்கள்.

இந்தச் சந்தேகத்தைத் தீர்க்கும்படி யூத வேத சாஸ்திரிகள் பின்வருமாறு ஒரு உவமையைச் சொன்னார்கள்.

ஒருநாள் மோசே ஓரேப் மலையின்மேல் உட்கார்ந்து தனக்கு முன்பாகத் தூரத்தில் தான் காணக்கூடிய பள்ளத்தாக்கிலுள்ள நீரூற்றையும் அதின் பக்கத்திலுள்ள நல்ல நிழலைக் கொடுக்கும் மரங்களையும் சந்தோஷத்துடனே பார்க்கையில், அவ்வூற்றண்டை வனாந்தரத்திலிருந்து ஒரு வாலிபன் வருகிறதைக் கண்டான்.

அந்த வாலிபனுடைய கையில் ஒரு பையிருந்தது. அதிலே அநேக நேர்த்தியான முத்துக்கள் இருந்தன. அந்த வாலிபன் அவ்விடத்திலே வேறொருவனும் இல்லை என்று நினைத்துப் பையைத் திறந்து முத்துக்களை எண்ணி எண்ணிப் பார்த்தபிறகு மரத்தின் நிழலிலே படுத்துக் கொண்டான். அவன் படுத்துக்கொள்ளும்போது அவ்விடத்திற்கு இன்னொரு ஆள் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தான். வாலிபன் அந்தச் சத்தத்தைக் கேட்டு சத்துருக்கள் வருகிறார்கள் என்று பயந்து,



பையை மறந்துவிட்டு, ஓடிப்போனான். இரண்டாம் பிரயாணி வந்து பையைப் பார்த்து, அதை எடுத்து தன் மடியிலே வைத்துக் கொண்டு, தன் வழியே சென்றான்.

அவன் போனபிறகு ஒரு கிழவன் அவ்வூற்றுக்கு வந்து தண்ணீர் சாப்பிட்டு நிழலிலே நித்திரைசெய்தான். கிழவன் நித்திரைசெய்கையில் ஓடிப்போன வாலிபன் தான் மறந்துவிட்ட பையைக் குறித்து ஞாபகமுள்ளவனாய் இதை வாங்கும்படி திரும்பி வந்தான். அவன் தன் பையைக் காணாமல், கிழவன் அதைத் திருடினான் என்று நினைத்து தன்னுடைய பட்டயத்தினாலே அவனை வெட்டிக் கொன்றான்.

தூரமான அந்த மலையின்மேல் உட்கார்ந்து இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மோசே நின்று கடவுளை நோக்கி, ‘கடவுளே! இந்த வாலிபன் கிழவனைக் கொல்வது நியாயமா? இதற்கு இடம் ஏன் கொடுக்கிறீர்?’ என்று மன்றாடினான். மோசே இவ்விதமாய்ப் பேசும்போது, ஒரு அசரீரி வாக்கு, ‘மௌனமாயிரு. பல வருஷங்களுக்கு முன் அந்தக் கிழவன் முத்துப்பையை மறந்துவிட்ட வாலிபனின் தகப்பனோடு சண்டைசெய்து மறைவாய் அவனைக் கொன்றான். அந்நாள்முதல் அவன் தான் செய்த குற்றத்தைக்குறித்து மனஸ்தாபப்படவும், அறிக்கையிடவுமில்லை, பழிவாங்குதலும், பதில் அளிப்பதும் எனக்குரியது’ என்று தொனித்தது.

---

## அன்பே பெரியது

யூதர்கள் ஒருவன் எப்பொழுதும் மற்றவர்களுக்கு இரக்கமுள்ளவனாயிருக்கவேண்டும் என்று காட்டும்படி ஆபிரகாமைப்பற்றி வேதாகமத்திலில்லாத ஒரு சமாசாரம் சொல்லுவார்கள். ஆபிரகாம் பிரயாணிகளைத் தன்னிடம் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் போஜனம் பரிமாறின பிற்பாடுமாத்திரம் தான் சாப்பிடுவது வழக்கம். ஒருநாள் அவன் தான் சாப்பிடுமுன் தன்னுடைய கூடாரவாசலில் உட்கார்ந்து, வருகிறவனைப்பற்றி எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போது தூரத்திலிருந்து இளைத்துப்போய் ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு மெதுவாய் நடந்து வருகிற நூறு வயதுள்ள ஓர் கிழவனைக் கண்டான். உடனே அவன் அந்தக் கிழவனை மகா உபசாரத்தோடு அழைத்து அவனுடைய பாதங்களைக் கழுவி, உட்காரச் சொல்லி, அவனுக்குமுன் போஜனம் வைத்தான். அந்தக் கிழவன் கடவுளுக்கு ஸ்தோத்திரமாக ஒரு வார்த்தையாகிலும் சொல்லாமலும், போஜனத்தை ஆசீர்வதிக்காமலும் சாப்பிட ஆரம்பித்தான். ஆபிரகாம் இவன் இப்படிச் செய்

வதைப் பார்த்து, 'நீ கடவுளைத் துதிக்காமலும், போஜனத்தை ஆசீர்வதிக்காமலும் சாப்பிடுகிறதென்ன? கடவுளை வணங்கமாட்டாயா?' என்று கேட்டான். கிழவன் அதற்குப் பதிலாக 'நான் என் முன்னோர்களைப்போலவே கடவுளை அல்ல, அக்கினிச் சுவாலையைமாத்திரம் வணங்கி வருகிறேன்' என்றான்.

ஆபிரகாம் இதைக் கேட்டவுடனே 'இவன் கடவுளுக்கு விரோதியாயிருக்கிறான். இவன் நல்லவனல்ல, இவனைத் தண்டிக்கவேண்டும்' என்று தீர்மானித்து, அக்கிழவனைத் தன் கூடாரத்தை விட்டுத் தள்ளி, வனாந்தரமான அவ்விடத்திலே தனிமையாய்ப் போகும்படி அவனைத் துரத்தினான். ஆபிரகாம் இவ்வித பக்திவைராக்கியத்தினால் கிழவனைத் துரத்திவிட்டபிறகு கடவுள் அவனுக்குத் தரிசனமாகி, 'ஆபிரகாமே! கிழவன் எங்கே?' என்று கேட்டார். இதற்கு ஆபிரகாம் 'கடவுளே! அந்தப் பொல்லாதவன் தேவரீரை வணங்காதபடியால் நான் அவனைத் துரத்திவிட்டேன்' என்றான். இதற்குக் கடவுள் 'என்னை நூறு வருஷகாலமாகத் தொழுதுகொள்ளாத இவன் பேரில் பொறுமையோடிருந்திருக்கிறேன். அவன் உனக்கு யாதொரு தொந்தரவும் கொடுக்கவில்லையே, அப்படியிருந்தும், நீ இந்த ஒரு இராவாகிலும் அவன்பேரில் பொறுமையாயிருக்கவில்லையா?' என்று சொல்லி, மறைந்துபோனார். ஆபிரகாம் இதைக் கேட்டுத் தான் செய்த குற்றத்தை அறிந்து, துக்கத்தோடு மனஸ்தாபப்பட்டு, கூடாரத்தைவிட்டுப் புறப்பட்டு வனாந்தரத்திலே அந்தக் கிழவனைத் தேடிக் கண்டுபிடித்து, மறுபடியும் அவனுக்குச் செய்யவேண்டிய எல்லா உபசாரங்களையும் செய்து, இவ்விதமாய் மற்றவர்களுக்கு அன்பு பாராட்டுவது உத்தமம் என்று உணர்ந்தான். 'அன்பே பெரியது.'

## The True Friend

### உத்தம சிநேகிதன்

### தெருப் பிரசங்கத்தின் சுருக்கம்

இயற்கை வாசனையோ, செயற்கை வாசனையோ' என்கிற பழமொழிப்படி தாங்கள் அடுத்திருக்கும் சிநேகிதர்களால் பெருமையடைவாருமுண்டு; அவர்களால் சிறுமையடைவாருமுண்டு. நல்ல சிநேகிதர்களுண்டானால், நலம் பெறுவார்கள்; தீய சிநேகிதருண்டானால் தீங்கனுபவிப்பார்கள். நல்ல சிநேகிதரைச் சம்பாதித்து, அவர்களோடே சகவாசம் செய்வது நல்லது. ஏனென்றால், பூவால் நாரும் மணம் பெறும். சந்தன விருக்ஷத்தை யண்டிநிற்கும் தருவும் சந்தன



வாசனையைக் கொடுக்கும். பாலோடு விளாவிய தண்ணீரும் பால்போல் நிறங் கொடுக்கும். ஆகையால் உத்தம சிநேகிதனைச் சம்பாதித்து, உத்தம வழிகளைப் பின்பற்றுவதினால் மிகுந்த நன்மை யுண்டாகும்.

முதலாவது, சிலருக்குப் பணம் ஒரு சிநேகிதன். ஆயுசு காலமெல்லாம் ஆஸ்தியோடு ஆஸ்தியைச் சேர்ப்பதும், நிலத்தோடு நிலத்தைக் கூட்டுவதும், பணத்தோடு பணத்தைச் சம்பாதிப்பதுமே அவர்களுடைய முழு நாட்டம். 'ஈட்டி யெட்டினமட்டும் குத்தும்; பணம் பதின்காதமும் பாயும்' என்பது அவர்கள் சட்ட வாக்கியம். 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை; அருளில்லார்க் கவ்வுலகமில்லை' என்னும் முதுமொழி அவர்கள் வாய்மொழி. ஆவி சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது அவ்வாஸ்தியும் கூடப் போகுமோ? காயம் ஒழிந்தபின் காதில் கழுத்தில் கிடக்கும் ஆபரணங்களைக் கழற்றுவதை நாம் கண்ணாற் பார்த்திருக்கிறோம். 'காதற்ற ஊசியும்கூட வாராது காணும் கடைவழிக்கே' என்பதும் உண்மையே. 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்றும், பொருளாசைக்காரரும் வெறியரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை' என்றும் சத்தியவேதம் கூறுகிறது. பணச் சிநேகிதனை நம்பியிருப்பதும் வீண். பணச் சிநேகிதன் பெட்டிவிட்டசையான்.

> 'பணச்சிநேகம் விரும்புவோன் பரனையிழந்த மாபாவி
> பரனையிழந்த மாபாவி பரத்தில் பங்கடையானே.'

இரண்டாவது, ஜனச் சிநேகிதன். இந்தச் சிநேகிதன் இல்லாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையனுக்குப் பள்ளித்தோழன் இருப்பான். அப்படியே ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களும், ஒரே தொழில் செய்யும் பலரும் ஒருவருக்கொருவர் சிநேகிதர்களாயிருப்பது சகஜம். ஆனால் ஜனச் சிநேகிதன் எக்காலத்துக்கும் உதவமாட்டான்.

ஓரிடத்தில் அவனுதவியை விரும்பும் சமயத்தில் அவன் மற்றொரு இடத்திலிருக்கலாம். மேலும் உற்றார் பெற்றார் உறவின்முறையாரிருப்பார்கள். ஒருவேளை அவர்கள் சாகுமட்டும் நமக்குதவி செய்வார்கள். செத்தாலும் ஒன்பது சாண் குழி வெட்டவும் நம்மை நல்லடக்கம் செய்யவுமே உதவுவார்கள். அருமையாய்ப் பெற்று வளர்த்த மக்களும் அப்பா! அம்மா! என்றழுவார்கள். அப்பால் வரமாட்டார்கள்.

'நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதைவிட்டு ஓயுங்கள்' என்று சத்தியவேதம் கூறுகிறது. ஆகையால் ஜனச் சிநேகிதனை நம்பியிருப்பதும் வீண். ஜனச் சிநேகிதன் சுவக்கோலைமட்டுமே.

*'ஜனசிநேகம் விரும்புவோன் சற்குருவை மறந்தவன்,*
*சற்குருவை மறந்தவன் சன்மார்க்கன் ஆவானோ.'*

மூன்றாவதாக, நாம் நேசிக்கவும் நம்பவும் தக்கதான உத்தம சிநேகிதன் யார் என்பதைக் கவனிக்கவேண்டும். 'ஆபத்திலறியலாம் அருமைச் சிநேகிதனை' என்பது வழக்கச்சொல். நாம் நம்பும் சிநேகிதன் நமக்கு எக்காலத்துக்கும் உதவக்கூடியவனும் சக்தியுடையவனுமாயிருக்கவேண்டும். ஜீவனிலும், மரணத்திலும், மரணத்துக்குப்பின் மறுமையிலும் உதவக்கூடிய சிநேகிதனாயிருக்கவேண்டும். அப்படி உதவக்கூடியவர் யார்? எல்லாம் படைத்தவரும் எப்போதும் உள்ளவருமாகிய ஏகபரன் இயேசு சுவாமியே அருள்புரியும் சிநேகிதன். சகலமும் அவராலேயும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. சிறைப்பட்டோரை மீட்கவும், நரகத்திற்காளான நரரை இரட்சிக்கவும் அவ்வருள்நாதர் இவ்வுலகத்தில் உதித்தார். பாவிகளைத் தேடவும் மனந்திரும்புவதற்கு அழைக்கவுமே தாம் மனுக்கோலம் பூண்டதாக அவர் சொன்னார். பாவத்தை வெறுத்துப் பாவியை விரும்புகிறார். இவ்வன்பை எப்படிக் காட்டினாரென்றால், நமக்கு வரவேண்டிய ஆபத்திலிருந்தும், நரக தண்டனையிலிருந்தும் இரட்சிக்க நமக்காகப் பிணைப்பட்டு ஜீவனைக் கொடுத்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினால்தான்.

இதை வாசிப்பவனே, அவர் உன்னையும் நேசிக்கிறார். அவர் ஆறுதல் சொல்லி 'வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்களெல்லாரும் என்னண்டை வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்னிடத்தில் வரும் பாவியை நான் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை' என்று அன்போடு அழைக்கிறார். ஆகையால் அவரை விசுவாசித்து அவரை நமது சிநேகிதனாக்கிக் கொள்வோமாக. அப்படியானால் நமது பாவங்கள் நமக்கு மன்னிக்கப்படும். நாம் மோட்ச மகிமையைப் பெற்று நீடூழி வாழ்வோம். அருள் சிநேகிதன் நம்மை அக்கரை சேர்ப்பார்.

*'அருள்சிநேகம் விரும்புவோன் அத்தனுக்கேற்ற உத்தமன்*
*அத்தனுக்கேற்ற உத்தமன் அடைவது நித்திய ஆனந்தம்.'*

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 62 ஜூலை 1911

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 24 JUL 1911 MADRAS.

# வேதியர் விளக்கு

## Book of Jonah

**By Dr. Wyckoff**

### யோனாவின் ஆகமம்

Prophet

**யோனா தீர்க்கதரிசி.** யோனா சுமார் கி. மு. 780 அல்லது 800-ல் இரண்டாம் எரொபெயாமின் அரசாட்சியாரம்பத்திலிருந்தவன். இவன் தான் உரைத்த தீர்க்கதரிசனங்களை எழுதி வைக்கவில்லை. இவ்விஷயத்தில் இவன் ஆமோஸ், யோவேல் முதலிய தீர்க்கதரிசிகளுக்குப் பேதப்படுகிறான். எரொபெயாமைப்பற்றி 2 இரா. 14. 25-ல் 'காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டான்' என்று சொல்லியிருக்கும் வாக்கியம்மாத்திரமே யோனாவைப்பற்றி வேதத்தில் காணப்படும் ஒரே குறிப்பு. யோனா வட இராஜ்யமாகிய இஸ்ரவேல் இராஜ்யத்தைச் சேர்ந்தவன். கலிலேயாவில் நாசரேத்துக்குச் சற்று சமீபமான காத்தேப்பேர் ஊரான்.

Contents of the Book.

**ஆகமப் பொருளடக்கம்.** மகா நகரமாகிய நினிவேயின் அக்கிரமம் கர்த்தருடைய சமுகத்தில் வந்தெட்டினதினால், அதற்கு விரோதமாக ஆக்கினை கூறும்படி அமித்தாயின் குமாரனாகிய யோனா தேவகட்டளை பெற்றான். இந்த தேவகட்டளைக்குத் தப்பியோட அவன் பிரயத்தனித்து ஸ்பானியாவிலுள்ள தர்சீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். சமுத்திரத்தில் கொந்தளிப்புண்டாகவே கப்பற்காரர் ஜெபிக்கையில் யோனா நித்திரை செய்துகொண்டிருந்தான். கப்பற்காரர் அவனையெழுப்பி, புயலின் மும்முரம் தேவகோபத்துக் கடையாளமென்

றுணர்ந்து சீட்டுப்போட, யோனா குற்றவாளியென்று கண்டுபிடிக்கப்பட்டான். விசேஷம் யாதென்று கப்பற்காரர் விசாரித்ததின்பேரில் அவன் அவர்களிடம் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு, தேவகோபத்தைத் தணிக்கும்படி தன்னைச் சமுத்திரத்தில் எறிந்துவிடவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொன்னான். அங்கே ஒரு பெரிய மீன் அவனை விழுங்கினது. தான் உயிரோடே காப்பாற்றப்பட்டதற்காக யோனா தேவனை ஸ்தோத்திரித்தான். மூன்றாம் நாளில் மீன் அவனைக் கரையில் கக்கிவிட்டது. இப்போது அவன் தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்து நினிவேக்கு வரப்போகிற அழிவை அதற்குக் கூறப்போனான். ஆனால் நினிவேயர் யோனா கூறின செய்தியைக் கேள்வியுற்று, அரசன்முதல் யாவரும் ஒருமிக்க பெரிய பகிரங்க மனஸ்தாப விரதம் கொண்டாடினார்கள். ஆகையால் கர்த்தர் அப்பட்டணத்தை அழிக்காதிருக்கத் தீர்மானித்தார். கர்த்தருடைய தீர்மானத்தினிமித்தம் யோனா விசனமடைந்து நகரத்துக்கு வெளியே போய் உட்கார்ந்து சாவை விரும்பி ஜெபித்தான். இரவில் ஒரு ஆமணக்குச்செடி முளைத்தெழும்பி நிழல் தந்து அவனை இளைப்பாற்றி, இன்னொரு இரவில் ஒரு பூச்சியால் அரிப்புண்டழிந்துபோனது. செடியின் அழிவுக்காக யோனா துக்கித்து புலம்பிக்கொண்டிருக்கையில், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி 'ஒரு இராத்திரியிலே முளைத்தும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே; மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ' என்றார். இதுவே ஆகமத்தின் சரித்திரச் சுருக்கம்.

**சரித்திர உண்மையைப்பற்றிய பெருந்தர்க்கம்:—**

Views regarding Book.

இந்த ஆகமத்தைப்பற்றி அதிகமாய்த் தர்க்கிக்கப்பட்டிருக்கிற விஷயமென்னவெனில், இதிலடங்கிய சங்கதிகள் உள்ளபடி நடந்த சரித்திரமா? அல்லது திவ்விய சத்தியத்தைப் போதிக்கும் நோக்கமாய் எழுதப்பட்ட உவமையா? என்னும் கேள்வியே.

ஆகமப்பொருளின் சரித்திர வுண்மை பின்வரும் ஆதாரங்களின் மேல் ஸ்தாபிக்கப்படும்:—

Traditional view. பாரம்பரிய அபிப்பிராயம்.

1. இதில் காணப்படும் சரித்திர ஸ்தலக் குறிப்புகள் உண்மையான சரித்திர இலட்சணம் அமைந்தவைகளாயிருக்கின்றன. திருஷ்டாந்தமாக, (a) யோனா நினிவேக்கு அனுப்பப்பட்டது அக்காலத்துச் சம்பவங்களுக்கு ஒத்திருக்கிறது. தீர்க்கதரிசிகள் அக்காலங்களில் புறதேசங்களுக்கனுப்பப்படும் வாடிக்கையிருந்தது. எலியா, எலிசா தீர்க்கதரிசிகளின் சரித்திரத்தைக் கவனித்துக்கொள்க.



(b) ஆகமத்தில் நினிவேயைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் விபரம் உலகசரித்திரக்காரர் எழுதியிருப்பவைகளுக்கு விகற்பமின்றி இசைந்திருக்கிறது. (c) இங்கே நினிவேயின் துன்மார்க்கத்தைப்பற்றிக் காட்டியதும் நாகூம் தன் தீர்க்கதரிசனத்தில் உரைத்திருப்பதற்கு ஒத்துளது. (d) அதி. 3. 5-8-ல் சொல்லியவண்ணம் மனிதரும் மிருகங்களும் துக்கங்கொண்டாடும் வழக்கம் ஆசியாவிலிருந்ததாக எரோதோத்து (Herodotus) என்னும் சரித்திரக்காரன் வரைந்திருக்கிறான். துக்கத்துக்கடையாளமாக மனுஷருக்கு எப்படியோ அப்படியே மிருகங்களுக்கும் ரோமத்தைச் சிரைத்துவிடுவார்களாம்.

2. யோனாவின் குணகுணங்களைப்பற்றியும் கப்பற்காரர், நினிவேயர் ஆகிய இவர்களைப்பற்றியும் உள்ள விஷயங்கள் கலப்பில்லா உண்மையாயும் இயல்புக்கு வித்தியாசப்படாமலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கட்டுக்கதை யென்றெண்ண எவ்வளவேனும் இடங்கொடுக்கிறதில்லை. மேலும் 2 இரா. 14. 25-ல் யோனாவின் பேர் வரக் காண்கிறோம்.

3. பழைய ஏற்பாட்டாகமங்களை ஒன்றாய்த் திரட்டி கனோனை (Canon) முடித்தவர்கள் யோனாவின் ஆகமச் சரித்திர உண்மையை அங்கிகரித்து அதைத் தீர்க்கதரிசன ஆகமங்களோடு சேர்த்திருக்கிறார்கள்.

4. இவ்வாகமத்தின் சரித்திர உண்மையைப்பற்றிய சகல சந்தேகங்களும் கிறிஸ்துவின் வார்த்தைகளால் நிவிர்த்தியாகி விடுகிறது. மத். 12. 39; 16. 4; லூக். 11. 29-32 காண்க. மீனைப்பற்றிய அற்புதத்தை மறுப்பது வேதத்திலுள்ள சகல அற்புதங்களையுங்குறித்து அவநம்பிக்கை யுண்டாக்குவதாயிருப்பதுமல்லாமல், மேற்சொல்லிய இரட்சகருடைய வார்த்தைகளைப்பற்றி சமுசயங்கொள்ளச் செய்வதாயுமிருக்கும். கர்த்தர் மன்னாவைக்கொண்டு இஸ்ரவேலரை அற்புதமாய்ப் போஷித்ததையாவது, இயேசு துரத்தின பிசாசுகள் பன்றிக்கூட்டத்துக்குள் புகுந்ததையாவது நம்புவதைப் பார்க்கிலும் ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்கவும், பின் அவனை உயிரோடே வெளியே கக்கிவிடவும் தேவன் செய்ததை விசுவாசிப்பது அதிகக் கடினமல்லவே.

மறுபக்ஷத்தார், அதாவது இந்த ஆகமம் ஓர் உவமை யென்போர் அதற்குச் சொல்லும் நியாயங்களாவன:—

1. யோனா இவ்வாகமத்தின் ஆக்கியோன் என்பதற்கு ருஜுவான எந்தக் குறிப்பும் இதில் கிடையாது. 'நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது' என்று இறந்த காலத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கையில், யோனாவுக்கு

வெகுகாலத்துக்குப்பின் வேறொருவன், வைதீக சத்தியங்களைப் போதிக்கும் எண்ணத்தோடு இந்தச் சரித்திரத்தை உபயோகித்து இவ்வாகமத்தை எழுதியிருக்கிறான் என்று விளங்குகிறது. மேலும் இவ்வாகமத்தின் பாஷைநடையும், வாசகப்போங்கும், பொதுலட்சணமும் இந்த அபிப்பிராயத்தைப் பின்னும் உறுதிப்படுத்துகின்றன.

Modern view.
நவீன அபிப்பிராயம்.

2. இவ்வாகமத்தின் ஆக்கியோன் மெய்யான சரித்திரமே எழுதியிருந்தானானால் அவன் இயல்பாய்ச் சொல்லியிருக்கக்கூடிய அனேக சங்கதிகளை விட்டிருக்கமாட்டான். உதாரணமாக, (a) நினிவேயின் மேல் குற்றமாகச் சுமந்த பாவங்கள் எவையென்று ஆக்கியோன் எழுதியிருக்கவில்லை. (b) மீன் யோனாவை வெளியே கக்கிவிட்ட கரை அல்லது இடம் எது வென்றும் அவன் சொல்லியிருக்கவில்லை. (c) அங்கேயிருந்து தீர்க்கதரிசி நினிவே பட்டணத்தை நோக்கிச் செய்த பிரயாணத்தைப்பற்றியாவது அப்போது சிங்காசனபதியாயிருந்த அசீரிய அரசனின் பேரைக் குறித்தாவது யாதொன்றும் காட்டியிருக்கவில்லை.

3. யோனா மூன்றுநாள் இரவும் பகலும் ஒரு பெரிய மீன் வயிற்றில் உயிரோடிருந்ததும், அங்கே அந்த நிலைமையிலிருந்து அவன் செய்யுள் நடையான ஜெபம் உண்டுபண்ணினதும் நம்பக்கூடாத சம்பவங்களானபடியால், அவைகளை உண்மையான சரித்திர சத்தியங்களாக அங்கிகரிக்கவொண்ணாது.

4. இவ்வாகமம் திடீரென்று தொடர்ச்சியற்ற விதமாய் முடிவடைவதும், அது சரித்திரமாய் மதிக்கப்படவேண்டுமென்ற கருத்து கிரந்த கர்த்தாவுக்கிருந்ததில்லை யென்பதற்குச் சாட்சியாம்.

5. யோனாவின் ஆகமத்தைக் கருத்தாய் ஆராய்ந்தால் சரித்திரம் வரைவதல்ல, யோபின் ஆகமத்தைப்போல் ஒரு விசேஷ போதனையைப் புகட்டுவதே ஆக்கியோனின் நோக்கமென்பது புலப்படும். யோபின் ஆகமத்தில் யோபின் அனுபவம் முக்கியமான சத்தியங்களைப் போதிக்கும்படி உபயோகப்படுத்தப்பட்டிருப்பதெப்படியோ அப்படியே இவ்வாகம கர்த்தாவும் யோனாத் தீர்க்கதரிசியின் ஜீவியத்தில் ஒரு சம்பவத்தைத் தெரிந்துகொண்டு, தன் காலத்து ஜனங்களின் மந்த மனச்சாட்சியில் ஒரு பெரிய சத்தியத்தைப் பலமாய் அழுத்தியுணர்த்தும்படி அதைப் பிரயோகிக்கிறான். யோபின் ஆகம ஆசிரியன் யோபின் வாயில் போடுவித்திருக்கும் எல்லா வார்த்தைகளும் அவ்வாகமத்தில் காட்டியிருக்கிறபடியே மெய்யாய் அவனால் பேசப்பட்டதென்று எண்ணுவார் யாருமில்லை. அவ்வண்ணமே யோனாவைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் யாவும் உண்மையாகவே சம்பவித்ததென்று நாம் நம்பவேண்டிய அவசியமில்லை.



6. கிறிஸ்து இவ்வாகமத்தின் சரித்திர உண்மையை அங்கிகரித்திருக்கிறார் என்னும் உதாரணத்துக்கு மாறுத்தரம் யாதெனில்:—வான சாஸ்திரத்துக்கும் மற்ற சாஸ்திரங்களுக்குமடுத்த விஷயங்களைப்பற்றி தமது காலத்து எண்ணங்களில் காணப்பட்ட தப்பறைகளை கிறிஸ்து நிவிர்த்திக்கப் பாராமல் அவைகளை அங்கிகரித்த பாவனையாய் நடந்துகொண்டார். உதாரணமாக, சூரியன் உதித்தெழும்புவதாகவும் இறங்கி அஸ்தமிப்பதாகவும் அவர் பேசினார். அது போலவே யோனாவின் ஆகமத்தைக்குறித்தும் அப்போது வியாபித்திருந்த அபிப்பிராயங்களை அவர் அனுசரித்து அவைகளுக்கொத்துப் பேசியிருக்கிறார். லௌகீக சாஸ்திரங்களில் மனிதர் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்போகிற காரியங்களை அவர் முன் தெரிவிக்காதது போலவே வைதீக சாஸ்திரத்தில் பின் வெளிப்படப்போகிறவைகளை அவைகள் வெளிப்படும் காலத்துக்குமுன் அவர் பாராட்டிக்கொள்ளவில்லை என்பதே. மேலும் இவ்வாகமம் உவமைப்போங்கானதென்று சொல்லும் கொள்கைக்காரர் இதில் சொல்லிய பெரிய மீனைப்பற்றிய சரித்திரம் ஞானார்த்தமுள்ளதென்றும் அது எரே. 51. 34, 44-ல் கண்டிருக்கிறபடி இஸ்ரவேல் இராஜ்யம் அசீரியாவால் விழுங்கப்படுவதைக் குறிப்பதோடு கிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் முன்னடையாளமானதென்றும் சாதிப்பார்கள்.

வியாக்கியானிகள் இவ்வாகமம் உண்மையான சரித்திரமா அல்லது பாவனையான உவமையா என்று தர்க்கிப்பதில் அளவுக்கு மிஞ்சின காலம் போக்கி ஆகமத்தையெழுதினதில் ஆக்கியோனின் நோக்கமென்ன, அதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் எவை என்று ஆராய்வதில் போதுமான கவனம் செலுத்தாமல் விட்டிருக்கிறார்கள்.

Object of the author.

புறஜாதியாருக்கும் கூட தேவன் ஜீவனுக்கேற்ற மனந்திரும்புதலை யருளியிருக்கிறார் என்று காண்பிப்பதே இவ்வாகமத்தின் நோக்கமாம். பழைய ஏற்பாட்டில் வேறே எங்கும் இந்தச் சத்தியம் இதிலும் அதிக தெளிவாய்த் திருஷ்டாந்தப்பட்டிருக்கவில்லை. இருளையின் நற்செய்தியை அஞ்ஞானிகளுக்குக் கொண்டுபோய் அறிவிக்க மனமற்றிருந்த ஒடுங்கிய மனமும் தன்னய நாட்டமுள்ள யூதருக்கு யோனா பிரதிநிதியானவன். சுவிசேஷமானது சமஸ்த ஜனங்களுக்குமுரியது என்று அறிக்கையிட்டு ஒத்துக்கொள்ளும்படி பேதுரு விசேஷித்த தரிசனத்தின்மூலமாய் எப்படி கற்பிக்கப்பட்டானோ, அப்படி யோனாவும் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படியும்படி நினிவேயின்



161287

இரட்சிப்பின்மூலமாய் கற்றுக்கொண்டான். இவ்வாகமமானது சுவிசேஷம் புறஜாதியாருக்குக் கூறி யறிவிக்கப்படப்போகிற காலத்துக்கு முன் குறிப்பான தீர்க்கதரிசனமாயிருக்கிறது. அஞ்ஞான நாடுகளான சீதோனுக்கும் சீரியாவுக்கும் முறையே எலியாவும் எலிசாவும் கிருபையின் விசேஷம் கொண்டுபோகும் ஸ்தானாபதிகளாய் அனுப்பப்பட்டதுபோல், யோனாவும் எருசலேமை அழித்து நாசஞ்செய்யப் போகிற ஜனத்துக்கே செய்தி யறிவிக்கும்படி நினிவேக்கு அனுப்பப்படுகிறான்.

இவ்வாகமத்தின் போதனைகள் :—

1. தேவதீர்மானத்துக்குத் தப்பி விலகிக்கொள்வது அசாத்தியமான காரியம். சிலகாலம் யோனா தன் சொந்த வழியே சென்றான், ஆனால் சீக்கிரம் அவருக்குச் சித்தமானதை நடப்பிக்கும்படி திருப்பப்பட்டான்.

2. எல்லாருக்கும் இயல்வேத அறிவுண்டு. அஞ்ஞான கப்பற்காரரிடத்திலும் நினிவேயின் குடிகளிடத்திலும் உன்னதமானவருக்குப் பயப்படும் பயம் காணப்படுகிறது.

3. யோனா சமுத்திர மரணத்துக்குத் தப்புவிக்கப்பட்டது, தேவன் தமது ஜனங்களை மகா மோசமான ஆபத்துகளிலிருந்தும் விடுவிக்க வல்லவர் என்பதற்குத் திருஷ்டாந்தமாம்.

4. எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

5. மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு மன்னிப்பளிக்க தேவன் ஆயத்தமாயிருக்கிறார்.

6. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் தற்பொழிவும், புறஜாதியாரைப்பற்றிய நிர்ச்சிந்தையும் இங்கே வெளிப்படுகிறது. அவனுடைய சத்துருக்கள் மனந்திரும்பினதினிமித்தம் யோனா விசனமடைந்தான். மனுஷருக்காகவும் பிள்ளைகளுக்காகவும் மிருகஜீவன்களுக்காகவும் கவலைப்படுகிற தேவனுடைய அதிசயமான உருக்க இரக்கத்தை இவ்வாகமத்தில் நாம் காண்கிறோம்.

யோனாவின் ஆகமத்திலடங்கிய சங்கதிகளை நாம் உண்மையான சரித்திரமாக மதித்தாலுஞ் சரி, அல்லது உவமைப்போக்கானதென்று எண்ணினாலுஞ் சரி, மேற்காட்டிய பூர்வ சத்தியங்கள் அதினால் போதனையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.



# A Sermon Outline

## உபத்திரவமும் சமாதானமும்

யோவா. 16. 33.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு: இயேசுகிறிஸ்துவினிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாகும் என்று சொல்லுகிற இந்த வாக்கியத்துக்கு அர்த்தம் என்ன?

ஒருவனுடைய வாழ்நாளில் சந்தோஷமும், துக்கமும், சமாதானமும், உபத்திரவமும் மாறி மாறி அனுபவிப்பது சகஜம்தான் என்பதா? அதின் தாற்பரியம் அதல்ல.

அதின் அர்த்தம் என்னவென்றால், எக்காலத்திலும் இந்த இரண்டுவித அனுபோகமும் ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டு என்பதே.

ஒருவன் ஆறாத் துயரத்தை அனுபவிக்கும்போதும் அவன் இருதயத்தில் பூரண சமாதானம் குடிகொண்டிருக்கலாம். இயேசு சொல்லுகிற சத்தியம் என்னவெனில், ‘உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு, அதேகாலத்தில் என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்’ என்பதே.

(i) கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலகத்தில் சரீர சம்பந்தமான ஓர் ஜீவியம் உண்டு.

இதிலே கணக்கில்லாத கஷ்டமும், துன்பமும் உண்டு. இது எல்லாருக்கும் பொது, ‘விதிவசம்’போலிருக்கிறது. இவ்வித அனுபவத்திற்கு தப்பினவன் எவனாகிலும் உண்டா? நல்லாருக்கும் தீயாருக்கும் துன்பம் நேரிடுகிறது; இது இயல்பாகவே இருக்கிறது.

‘இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு’ என்று இயேசு சொன்னது வாஸ்தவம்தான்.

(ii) உண்மையான கிறிஸ்தவன் அனுபவிக்கிற வேறுவித ஜீவியம் ஒன்று உண்டு.

அது ஆத்தும ஜீவியம். கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியம். இது வெளியாருக்குத் தெரியாத ஜீவியம். இதுதான் நித்தியம். மற்றவைகள் அநித்தியம்.

உலக நடவடிக்கையில் நாம் துன்பத்தினாலும் துக்கத்தினாலும் பீடிக்கப்படும்போதும், ஆத்துமார்த்த ஜீவியத்தில் பூரண சமாதானமும், சுகமும், சந்தோஷமும் இருக்கலாம்.

திருஷ்டாந்தம்: கடும்புயல் வீசி கடல் கொந்தளிக்கும்போதும் அக்கடலின் ஆழத்தில் நீர் அசைவற்று நிற்கும் என்று சொல்லுகிறார்கள்.

நீர் மட்டத்தில்மாத்திரம் கொந்தளிப்பு தோன்றுமேதவிர அப்புயல் ஆழத்தில் ஒன்றும் செய்யமுடியாது.

அதுபோல் துன்பமாகிய புயலும் உபத்திரவமும் நேரிடுவதினால் லோகாந்த வாழ்க்கையில் சமாதானம் குறைந்துபோகுமே ஒழிய, உள்ளத்தின் சமாதானம் கிஞ்சித்தேனும் குறைந்துபோகவேமாட்டாது.

வேத புஸ்தகத்தில் எழுதப்பட்ட இரண்டொரு உதாரணங்களை கவனியுங்கள்.

1. ஸ்தேவான்.

அவனுக்கு நேரிட்ட துன்பங்கள் உங்களெல்லாருக்கும் தெரியும். ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவனுக்குள் இருந்த சமாதானம் சற்றுவது மாறவில்லை. அவர்கள் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதுபோல அவன் முகம் தேவதூதன் முகம்போல் இருக்கக் கண்டார்கள். மேலும் கடூரமான கற்கள் அவன்மேல் விழுந்து அவனைக் கொல்லும்போதும், அவன் வானத்தை நோக்கி, 'இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்றும், 'ஆண்டவரே இவர்கள்மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும்' என்றும் விண்ணப்பம்பண்ணினான்.

2. பவுலும் சீலாவும்.

அவர்கள் உட்காவலறையில் தள்ளப்பட்டு தொழுவில் மாட்டப்பட்ட காலத்தில், அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் அவர்கள் ஆத்துமார்த்த ஜீவியத்தைச் சற்றும் கெடுக்கவில்லை. அவர்கள் நடுஇராத்திரியில் செபஞ் செய்து தேவனுக்கு ஸ்தோத்திர பாடல்களை பாடிக்கொண்டிருந்ததாக நாம் வாசிக்கிறோம்.

3. ரோ. 8. 35-39 என்னும் வேதவாக்கியங்கள் இந்தச் சத்தியத்துக்கு ஒரு நல்ல திருஷ்டாந்தம்.

இம்மாதிரியான ஜீவியத்தை நாமும் செய்யவேண்டும்.

நாம் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும்போதும் நமது இருதயம் சற்றும் அசைவற்று பூரண சமாதானம் நிறைந்திருக்கவேண்டும்.

நமது வாழ்நாள் துக்கம் நிறைந்ததாய் இருக்கும்போது நமது மனதில் எப்படி சமாதானம் இருக்கக்கூடும்? துக்கப்படாமல் எப்படி இருக்கக்கூடும் என்று கேட்கலாம். அந்தக் கேள்விக்கு வேதத்தில் திட்டமான மாறுத்தரம் சொல்லப்படும். சங். 46. 1-3; ஏசா. 26. 3-4. பாருங்கள்.



தேவனை பூரணமாய் விசுவாசிக்கிற எவனும் எப்போதும் சமாதானமாய் இருப்பான். எல்லாவிதமான கஷ்டங்களிலும் — மரண காலத்திலுங்கூட — அவனுடைய மனது கலங்கமாட்டாது. எல்லாவற்றிலும் தேவனையே நம்புவது பூரண சமாதானத்தை அடைவதின் இரகசியம். யோபு 13. 15; சங். 23. 4.

# A Word to Preachers

**By the Rev. G. S. Vedanayagam**

## சுவிசேஷகர்களுக்கு ஓர் வார்த்தை

'உற்றானளவும் பிணியளவும் காலமும்
கற்றானறிந்து செயல்.'

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார். அதாவது ஆயுள்வேதமாகிய வைத்திய சாஸ்திரம் கற்றவனொருவன் தான் வைத்தியம் செய்யும்போது கவனிக்கவேண்டிய மூன்று காரியங்களை இதில் காட்டுகிறார். அதென்னவெனில், பிணியாளியின் தன்மையையும், பிணியின் தன்மையையும், மருந்து கொடுக்கும் காலத்தையும் அறிந்து பரிகாரம் செய்யவேண்டுமென்பதே. ஆத்தும பிணிகொண்ட இந்துக்களுக்கு வைத்தியம்செய்ய ஏற்பட்ட, ஞான ஆயுள்வேதியாகிய சுவிசேஷப் பிரசங்கிகளுக்கு இது நல்ல பாடமாயிருக்கிறது. இந்துக்களின் ஆத்தும நிலைமையைக் கவனிக்கும்போது நமது தேசத்தார் பொதுப்பட எத்தேசத்தாரையும்விட, பக்திமார்க்கத்தில் உயர்ந்தவர்களென்று கைக்கனிபோல் தெரியும். இந்து தேசமானது பக்திமார்க்கத்தின் காட்சிசாலையென்று கூசாமல் சொல்லலாம். ஐரோப்பா கண்டத்தின் உத்தம விசுவாசமுதல் ஆப்பிரிக்கா கண்டத்தின் அதம விசுவாசம்வரையுள்ள சர்வதேச விசுவாசங்களும் இந்தியாவில் இருக்கிறது. எகிப்தின் மந்திரவாதிகளையும் பாபிலோனின் ஜோசியரையும், ரோமை கிரேக்க தத்துவ சாஸ்திரிகளையும் ஜப்பான்தேச பிதிர்வணக்கக் குருக்களையும் இந்தியாவில் பார்க்கலாம்.

I. நமது உடன்தேசத்தாரான, இந்துக்களும், தற்காலம் கிறிஸ்தவ பிரசங்கிகளாயிருக்கிற நாமும், நமது முற்பிதாக்களுங்கூட, அதிசயபூர்வமான காரியங்களை விசுவாசித்து வருகிறவர்கள். மனிதரைவிட வல்லமையும் சித்தியும் செல்வாக்குமுடைய அநேக அசரீர வஸ்துகளான ஆவிகளிருக்கிறார்களென்றும் அவர்கள் நல்லெனவும் தீயெனவு

மான காரியங்களைச் செய்யும் தன்மையுடையவர்களென்றும், ஆதலால் அவர்கள் மனிதருக்கு நன்மையும் தீமையும் சன்மானமும் சிட்சையும் செய்யக்கூடியவர்களாயிருக்கிறார்களென்றும் அவர்களின் தயவை நாம் பெற்றுக்கொண்டால் சுகமாக வாழலாமென்றும் நம்புகிறார்கள். ஜோசியம், மந்திரம், பில்லிசூனியம், அஞ்சனம், குறிசொல்லுதல், சகுனம்பார்த்தல், கனவு நனவாதல், பேய்ப்பிடித்தல், பேய்களினால் பிணியுண்டாதல் முதலியவைகளை விசுவாசிப்பதில் பேர்போனவர்களாயிருக்கிறார்கள். தேவர்கள் சர்வவல்லமையும் சாம்ராட்சியமுமுடையவர்களாயிருப்பதால், நமது புத்திக்கும் ஞானத்துக்கு மேற்பட்ட நன்மையும் தீமையுமான எந்த அற்புதங்களையும் செய்வார்களென்று யாதொரு சந்தேகமின்றி நம்புகிறவர்களாயிருக்கிறார்கள். அனுமான் தன் வாலினால் மஹா மலையைத் தூக்கி யெறிந்தான், இந்தியாவிலிருந்து கடலை ஒரே பாய்ச்சலில் தாண்டி இலங்கைச் சேர்ந்தான் என்பதை யாதொரு சந்தேகமின்றி நம்புவார்கள். தேவர்களிடமிருந்து வரம் பெற்ற மனுஷர்கள் தாமும் அதேவிதமான அற்புதங்களைச் செய்யக்கூடுமென்றும் நம்புகிறார்கள். தேவர்களே மனிதர் வடிவத்திலும் வந்து அவ்வித அகோராசரக்கிரியைகளைச் செய்வார்கள் என்றும் பூரண விசுவாசமுடையவர்களாயிருக்கிறார்கள். இவையெல்லாம் சாஸ்திர புராண விசுவாசமாயிருக்கிறது. அன்றாடக அனுபவத்தில் பார்த்தாலுங்கூட அவர்கள் விசுவாசமும் அபூர்வமே. வியாதிவந்தால் அவர்களுக்கு வரும் முதல் எண்ணம் தேவகோபமும் அல்லது பேயின் கொடுமையுமே இதற்கு மூலகாரணமென்று நினைப்பது. ஆதலால் வைத்தியம் செய்வதற்குமுன், குற்ற பிராயச்சித்தம் செய்வதையே தங்கள் முதல் வேலியாக வைத்துக்கொள்வார்கள். பின்பு மருந்து சாப்பிடுகிறதாயிருந்தாலும், சாப்பிடுகிறவனும் தெய்வத்தின் பேரைச் சொல்லியே சாப்பிடுகிறான். மருந்து கொடுக்கிறவனும் தெய்வத்தின் பேரைச் சொல்லியே கொடுக்கிறான். பிணி தீர்ந்தால் ஸ்வாமிக்குக் காணிக்கை கொடுப்பதும், ஸ்தல தரிசனை செய்வதும் அவர்களின் முதல் வேலியாயிருக்கும். இப்படியே உண்பதோ, உடுப்பதோ, படிப்பதோ, படிப்பிப்பதோ, கொள்வதோ, கொடுப்பதோ சகல செய்கையிலும் தெய்வதுணை வேண்டி நிற்பவர்களாயிருக்கிறார்கள். குப்பக்காடுகளிலிருந்து பட்டணங்களுக்கு விறகு, வரட்டி, காய்கறி சுமந்து வருகிற ஏழைகள்கூட, வழியிலிருக்கும் விக்கிரகத்துக்குமுன் ஒரு வரட்டியை, விறகை, காயைப் போட்டுப்போகிறார்கள். விற்றபின்னும் சகல செலவுகளுடனுங்கூட ஒரு காசுக்குக் கற்பூரம் வாங்கி தங்கள் வியாபாரத்தில் துணைசெய்த தெய்வத்துக்குமுன் கொளுத்தி வைப்பார்கள். ஸ்நானம்செய்தாலும் முகங்கழுவினாலும் உட்கார்ந்



தாலும், படுத்தாலும், எழுந்தாலும், தும்பினாலும், கொட்டாவிவிட்டாலும் தெய்வத்தின் நாமத்தை உச்சரிக்கும் தன்மையுடையவர்கள். தெய்வத்தின் நாமத்தை மறவாதிருக்கக் கருதி தங்கள் அருமைப் பாலகர்களுக்கும் தெய்வ நாமங்களை வைப்பதுமல்லாமல், கதவிலும் மாடத்திலும் தூணிலும் கதவு நிலையிலும் தங்கள் சரீரத்திலுங்கூட தெய்வத்தை நினைப்பூட்டும் அடையாளங்களைத் தரிப்பார்கள். அதுவும் போதாதென்று அசரீர தெய்வத்தைச் சரீரத்திலுங் காண மனமுடையவர்களாய், வீட்டிலும் வெளியிலும், சந்திலும் மந்தையிலும், காட்டிலும் கரையிலும் கண்டவிடமெல்லாம் விக்கிரகங்களை வைத்து நமஸ்கரிப்பதுமன்றி, கோவிலை, கோபுரத்தை தூரந்தொலையில் கண்டாலுங்கூட கையெடுத்துப் பூசிப்பார்கள். இதுவும் போதாதென்று 'பார்த்தவிடமெல்லாம் பரமே காண் அம்மானை—பாராமலென்னாளும், பாழ்ப்பட்டேனம்மானை' என்று சொல்லி, கண்ட வஸ்துக்களிலெல்லாம் கடவுளைக் காண ஆசையுடையவர்கள். இப்படியே இந்துக்களின் இருதயம் பக்திமார்க்கத்தில் எவ்வளவு தூரம் சுவறிப்போயிருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். இவை நேற்று முந்தைநாள் உண்டான காரியமல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சந்தான பாரம்பரையாய்த் தொடர்ந்து வருகிற காரியங்களாம். இவையெல்லாம் எப்படி உண்டாகி வளர்ந்து வருகின்றன. மேற்றேச தத்துவ ஞானிகள் போதிக்கிறபடி இவையெல்லாம் மனுஷனுடைய வீண் எண்ணத்தினாலே அல்லது அறிவீனமான மனத்தோற்றத்தினாலே, தற்செயலாய் உற்பத்தியாயினவோ? இவ்வெண்ணங்களெல்லாம் ஆதாரமற்ற முழுப் பொய்களா? அல்லது முழுதும் சத்தியமா? அல்லவென்றால், பொய்யும் சத்தியமும் கலந்தனவா? என்பதை விசாரிப்போம். மேற்றேச நிரீஸ்வர தத்துவ ஞானத்தை ஒருபுறம் வைத்துவிட்டு நமது சுத்த சத்திய வேதத்தின்படி முன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நாம் மாறுத்தரம் சொல்ல ஏற்பட்டோமானால் வேத விசுவாசிகளாகிய நமக்கு அதிக திருப்தி தரத்தக்கதாயிருக்கும். எப்படியெனில், இவ்வெண்ணங்கள் மனுஷனுடைய வெறும் மூளையிலிருந்து உண்டானதல்ல. தேவனுக்கும் அவரது சிருஷ்டிகளாகிய மனுமக்களுக்கும் ஆதிமுதற்கொண்டு விரோதியாய் ஏற்பட்ட ஆதி சர்ப்பமாகிய தந்திரப்பேயும் அவனது சேனையான துர்க்குண ஆவிகளுமே இவற்றுக்கு மூலகாரணம். அவனால் மயக்கப்பட்ட மனிதரின் சீர்கெட்ட ஆத்தும நிலைமையே இவற்றுக்கு உபகாரணம் என்று சந்தேகமறச் சொல்லலாம். இது முழுவதுமே பொய்யுமல்ல, முழுவதுமே சத்தியமுமல்ல; பொய்யும் மெய்யும் புணர்ந்தியன்ற பக்தியாய் அமைந்திருக்கின்றன என்பதற்கும் ஐயமில்லை.

II. இதுவரையிலும் நமது உடன்தேசத்தாருடைய இருதய தன்மையையும் அவர்களுக்குற்ற பிணியின் தன்மையையும், அவற்றின் மூலகாரணத்தையும் ஒருவாறு சொன்னோம். இனி நமது வைத்திய முறையைச் சொல்வோம். ஒருதரம் ஒரு துரைமகன் தன் சரீரத்தில் ஆறாத ஒரு புண்ணினால் உபத்திரவப்பட்டு, அதை அறுத்தாற்றுமாறு ஒரு ரணவைத்திய தீரனை அழைப்பித்தார். அத்தீரன் தன் ரணவைத்திய கருவியினால் சில நாளாக அப்புண்ணை சிகிச்சை செய்துவந்தான். பிணியாளிக்கோ அன்றாடக வேதனை அதிகப்பட்டதேயன்றி ஆரோக்கியமானபாடில்லை. கடைசி சிகிச்சையில் பிணியாளி நோயின் வாதையால் மனம் வெகுண்டு, ஐயா வைத்தியரே இப்பிணியை வேரோடே தொலைக்க உமக்குத் திறமையில்லையா? அதாவது அதின் மூலத்தை அடியோடழிக்க, உமக்கு வகை தெரியவில்லையா என்று கோபித்துச் சொல்ல வைத்தியர் கோபங்கொண்டு தமது கைத்தடியை எடுத்து மேஜையிலிருந்த ஒரு பிராண்டி புட்டியை அடித்துடைத்து, இதுதான் மூலம், இதுதான் ஆணிவேர் என்று மறுமொழி சொன்னாராம்.

இந்தியாவின் என் உடன் சுவிசேஷகர்களே! இந்தியாவின் பிணிக்கு மூலகாரணம் இன்னதென்று அறிந்து மேற்சொன்ன வைத்திய தீரனைப்போல் புத்தியோடு நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஏனெனில் நமது போராட்டம் 'மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு' என்ற சத்திய வாசகத்தின்படியே இருக்கிறது. இவ்வசனம் வருகிற நிருபம் எபேசுவிலுள்ள சபைக்கு எழுதப்பட்டதைக் கவனிக்கவேண்டியது. எபேசு பட்டணமானது வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் மஹா தேவியாகிய தியானாளுக்கும் பேர்பெற்றதாயிருந்ததுமன்றி, சகல மந்திர தந்திரங்களுக்கும், குறிசொல்லும் ஆவிகளுக்கும் உறைவிடமாயிருந்தது என்றும் நன்றாய் அறிவோம். இந்தியாவானது அதிலும் ஆயிரமடங்கான, அந்தகாரத்தின் கிரியைகளுக்கு தொண்டுதொட்டு உறைவிடமாக இருக்கிறதை அறிவோமே. ஆகையால் வெறும் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் போராடுவதில் பிரயோசனமில்லை. மனிதனுடைய அறிவைமாத்திரம் பற்றக்கூடிய கல்வி யறிவாகிய ககோள, பூகோள, சாஸ்திர அறிவாலும், பூததத்துவ, ஜடத்துவ, மானத, சாஸ்திர ஞானத்தாலும் இந்தியாவைக் குணப்படுத்த முடியாதென்று சென்ற நூற்றாண்டுகளின் சரித்திரத்தினால் அறிவோம். எப்படியெனில் இந்தியாவின் தத்துவ ஞானிகள் எழும்பி இந்துமதத்



தின் பலி ஏற்பாடுகள், விக்கிரக ஆராதனை, சாஸ்திர சகுனங்கள், ஸ்தலயாத்திரை, ஸ்நானச் சடங்குகள், பலதேவ வணக்கம் ஆதியான காரியமெல்லாம் புத்திக்கடாதது என்றும் தப்பிதமென்றும் ரூபித்தார்கள். அவர்களுடைய உபதேசங்களையும் அவ்வுபதேசங்களடங்கிய நூல்களையும் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டே கருத்தில் வையாமல் இந்தியாவானது தன் பழைய பக்தியை அனுசரித்து வருகிறது. அதற்குப்பின் மகம்மதுமார்க்கம் வந்து ஒரே தேவன் உண்டென்று போதித்தது. இந்தியாவின் பக்திமார்க்கம் அப்போதனையை ஏற்பதற்குப் பதில் அதைத் திருத்தவந்த மகம்மது மார்க்கமே குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாய் இந்தியாவின் பக்தியின் மிகுதி பாகத்தை அனுசரிக்க நேரிட்டது. பிற்பாடு கிறிஸ்து மார்க்கத்தின் சடங்காசார வகுப்பைச் சேர்ந்த ரோமான் கத்தோலிக்க மார்க்கம் இந்தியாவிற்கு வந்தது. இதுவும் இந்து மதத்துடன் பக்தி விஷயமாய் பண்ட மாற்றுதல் செய்துகொண்டு அதினின்று தான் பெற்றுக்கொண்ட தப்பறைகளாகிய கண்ணிகளைச் சிக்கறுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது. அதற்குப் பின்பு நமது புறட்டஸ்டாண்ட் மார்க்கம் வந்து சில நூற்றாண்டாகப் பாடுபட்டு வருகிறது. என்றாலும் இதுவரையில் இந்துமதக் கோட்டையில் அங்கங்கே சில கற்களைப் பெயர்த்ததேயொழிய ஓரிடத்திலாவது பிளப்பை உண்டாக்கினபாடில்லை. இதன் காரணங்கள் என்னவென்று பார்ப்போம்.

(இன்னும் வரும்.)

## The English Bible and National Life

**By Mr. Nathaniel**

## இங்கிலீஷ் வேதாகமமும் அங்கிலேயர் வாழ்வும்

அங்கிலேயருடைய ஜீவிய விர்த்திக்கு இங்கிலீஷ் வேதாகமத்தின் சிரேஷ்டமே காரணம். 1611-ம் வருஷத்தில் மொழிபெயர்த்த வேதாகமம் மூன்று நூற்றாண்டுகளாக யாதொரு ஆட்சேபனையுமின்றி தன் ஸ்தானத்திலே ஒரே நிலையாய் நின்று தன் வேலையை நடப்பித்தது. ஜனங்களின் மனதில் இது வெகுகாலம் ஆழமாய்ப் பதிந்து வந்திருக்கிறபடியால் இங்கிலீஷ் பாஷையை அப்பியாசித்து வருகிற எல்லா ஜனங்களுடைய பாசத்தையும் இது கவர்ந்துகொண்டிருக்கிறது.

உலகத்தில் வேறெந்தப் புஸ்தகமும் இதைப்போலத் தாராளமாயும் கருத்தாயும் வாசிக்கப்படுகிறதில்லை. அந்தப் புஸ்தகத்தில் எடுத்துரைக்கப்படுகிற சிறிய தேசத்தின் சரித்திரத்தைப்போல் வேறெந்த நாட்டைக்குறித்தும் ஜனங்கள் அவ்வளவு தெளிவாய் அறிந்திருப்பதில்லை. அத்தேசத்தில் வாசம்பண்ணின ஜனங்களின் சரித்திரத்தைப்போல் வேறெந்தச் சரித்திரமும் உலகத்தாருக்குத் தெளிவாய்த் தெரியாது. யூத ஜாதியாரின் ஒழுக்க பழக்கங்கள் தற்கால ஒழுக்க பழக்கங்களுக்கு மிகவும் பேதப்பட்டிருந்தபோதிலும் அவர்களுடைய கௌரவத்துக்கும் வாழ்வுக்கும் அனுசரணையாய் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற போதனைகள் உலகத்தில் ஒவ்வொரு ஜாதியையும் ஒவ்வொரு மனுஷனையும் கடவுள் எவ்வளவாய்க் கவனித்து வருகிறார் என்று அறிந்துணர ஏவுகிறது. புதிய ஏற்பாட்டுக்கு இரண்டாவதாக யூதர்கள் வழங்கிவந்த பழைய ஏற்பாடே உலகத்திலுள்ள எல்லா நூல்களிலும் சிறந்த சாஸ்திரமாக யாவராலும் இதுவரை மதிப்புற்றிருக்கிறது.

வேதத்தில் தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்தும்படி தேவன் பேசின வார்த்தைகளேயன்றி அவருடைய அழைப்புக்குத் தங்கள் இருதயங்களை ஒப்புக்கொடுத்த மனுஷரின் வாக்குகளும் அடங்கியிருக்கிறது. வேதத்திலிருந்து எடுத்துக் கோர்வைப்படுத்தப்பட்டு ஆலயங்களிலும் வீடுகளிலும் பாடப்படுகிற சங்கீதங்களும் கீர்த்தனைகளும் வேறெந்தப் பாடல்களையும்விட மனுஷருடைய ஆசாபாசங்களை அதிக வல்லமையுடன் கவர்ந்துகொள்ளுகிறது. இவ்விதமாக அங்கிலேயரின் ஜீவியமானது அவர்களை அறியாமலே தேவ ஆவியினால் புது ஜீவனும் புது சக்தியும் அடைந்துகொண்டு வருகிறது.

இவ்விதமாய் அந்தரங்கத்தில் பிறப்பிக்கப்படும் மாறுதல்களைத் தவிர ஒவ்வொரு தலைமுறையிலும் மனுஷருடைய மனச்சாட்சியில் வெளியரங்கமாகவும் பலத்த கிரியைகளை அது நடப்பித்திருக்கிறது. ஒவ்வொருவருக்குள்ளும் தனித்தனி சுவாதீன ஆவியைப் பிறப்பித்து வளரச்செய்து யாவரையும் எழுப்புதல்படுத்திக்கொண்டு வந்தது. தாங்கள் பெற்றிருக்கும் சுவாதீனத்தை மற்றவர்களும் அனுபவிக்கவேண்டுமென்னும் நோக்கமாய் அவரவர் தங்கள் தங்கள் சுவாதீனத்தை மிஞ்சவொட்டாமல் நிதானமாய் அடக்கி ஆண்டுகொள்ளவும் ஏவிற்று. தெய்வாதீனமாய் இங்கிலீஷ் வேதாகமமானது ஒரு விசேஷித்த காலத்தில் அங்கிலேயருக்கு சுவாதீன ஆஸ்தியாகக் கிடைத்தது. அது நூதன முயற்சிகளுக்கு அவர்கள் ஆவியை எழுப்பி உற்சாகப்படுத்திற்று. மனச்சாட்சியை விற்றுப்போடாமல் எந்த விஷயங்களில் சுயவெறுப்புள்ளவர்களாயிருப்பது நலமென்று விளங்கிற்றோ, அந்த விஷயங்க



ளில் தைரியமடையச் செய்தது. அந்நிய தேசங்களில் குடியிருக்க வலசைவாங்கிப்போவோர் தங்களோடு கொண்டுபோகும் ஆஸ்தியாக இந்தப் புஸ்தகத்தையே தெரிந்துகொண்டார்கள். ஊர் ஊராக பிரயாணஞ்செய்த மூதாக்கள் கடல்களைத் தாண்டிப் போகும்பொழுது தங்கள் கரங்களிலே இந்தப் புஸ்தகத்தையும் தங்கள் இருதயங்களில் அதினுடைய ஆவியையும் உடையவர்களாய்ப் போனார்கள். புது ராஜ்யங்களை ஸ்தாபித்தவர்கள் அதற்குரிய சட்டதிட்டங்களை நிருபிக்க இந்தப் புஸ்தகத்தின் போதனைகளையே ஆதாரமாகக்கொண்டு ஸ்தாபித்தார்கள். வேதாகமம் ஜனங்களுக்குக் கிடைக்கும்வரையில் அவர்கள் மனச்சாட்சி இருளில் தவித்துக்கொண்டிருந்தது. வேத சத்தியம் அவர்கள் உள்ளத்தில் பிரகாசிக்கத் துவக்கினபோது கிரமம் கிரமமாக மனச்சாட்சி தெளிவடைந்து பலப்பட ஆரம்பித்தது. ஜனசமுதாய சம்பந்தமாயும் வியாபார விஷயமாயும் ராஜாங்க முறைமையிலும் சீர்திருத்தம் உண்டாகத் தலைப்பட்டது. இந்தப் புஸ்தகத்தின் சத்தியங்கள் மனதில் துலங்கத் துலங்க ஒருவன் தன் அயலானுக்கும் ஒரு ஜனம் வேறொரு ஜனத்துக்கும் ஒரு தேசத்தார் மறுதேசத்தாருக்கும் செய்ய வேண்டிய கடமை எத்தன்மையானதென்று புலப்பட்டது. வேத சத்தியத் தெளிவுண்டானபோது அடிமை வியாபாரம், சிறைச்சாலைகளின் நிர்ப்பந்தஸ்திதி, மார்க்கவைராக்கியத்தினால் நேரிட்ட கொடிய உபத்திரவங்கள் முதலிய கொடுமைகள் முற்றும் மாறிவிட்டன.

இங்கிலாந்தில் இவ்விஷயங்களில் சீர்திருத்தம் உண்டுபண்ண பரோபகாரிகள் பட்ட பிரயாசங்கள் கொஞ்சமல்ல. அடிமை வியாபாரத்தை ஒழிக்கவும் கைதிகளின் கஷ்டத்தை நிவிர்த்திசெய்யவும் அநேகம்பேர் எவ்வளவோ பலத்த பிரயத்தனங்கள் செய்தார்கள். இவைகளுக்கெல்லாம் ஆணி வேராயிருந்தது சத்தியவேத போதனைகளே.

வேதாகமத்தின் வல்லமையையும் மதிப்பையும் தங்கள் சொந்த அனுபவத்திலே உணர்ந்திருக்கும் திரளான கிறிஸ்தவர்களுக்கு மேற்சொல்லிய விஷயங்களை எடுத்துரைப்பது அனாவசியமும் அப்பிரயோஜனமுமாய் காணப்படலாம். என்றாலும் தேவகிருபையால் நமக்கு கிடைத்திருக்கும் வேதாகமத்தின் மேலான ஆசீர்வாதத்தை மறந்துவிடாமல் ஞாபகப்படுத்துவது தங்கள் மனதில் மிக்க எழுப்புதல் உண்டாக்குவதற்கு ஏதுவாய் இருக்கலாம். நாம் யோசிக்கவும் அறிந்துகொள்ளவும் கூடாத ஆச்சரியமான தேவ ஈவுக்காக நாம் வேதாகமத்தின்மூலமாய்ப் பெற்றதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம். இந்தச் சிலாக்கியத்தை நாம் நினைக்கும்பொழுதே அதற்கு தகுந்தான நம்முடைய கடமையையும் மறவாதிருப்போமாக. நம்முடைய நம்பிக்கைக்கு ஆதாரமாயிருக்கிற இந்த வேதாகமத்தில் நமது விசுவாசம்

ஆழமாய் வேரூன்றி அசையாதிருப்பது மிகவும் உசிதமானது. இவ்வுலக ஞானத்தை நமது பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க நாம் சிரத்தை எடுத்துக்கொள்வதுபோல 'சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர இடங் கொடுங்கள்' என்று இன்னும் கூறிக்கொண்டே இருக்கிறவரை அறிகிற அறிவினால் இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்க வல்லமையுள்ளதாயிருக்கிற இந்த ஒரே புஸ்தகத்தை அவர்களுக்குக் கற்பிக்கப் பிரயாசப்படுவோமானால் எவ்வளவு பிரயோஜனமாயிருக்கும். ஆனதால் நாம் வேதாகமத்தை மதிக்குமளவு மதிக்கும்பக்ஷத்தில் அதற்கே எல்லாவற்றுக்கும் மேலான முதன்மையான இடத்தைக் கொடுப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் வேதாகமமானது நமது சபைகளில் வாசித்து ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்ற முதற்கருவியாகவும், நம்முடைய குடும்பங்களிலே நமக்குச் சந்தோஷத்தையும் மெய்ப்பாக்கியத்தையும் கொடுக்கக்கூடியதாகவும், நம்முடைய தனிஜீவியத்திலே நம்மை வழிநடத்தக்கூடிய வழிகாட்டியாகவும் இருப்பதுமன்றி தொகுத்துச் சொல்லப்போனால் வேதாகமமானது இகபரத்துக்கும் வழிநடத்தக்கூடியதாயிருக்கிறது. இவ்விதமே அது வாக்கில் அடங்காத நன்மைகளை அங்கிலேயர்களுக்குச் செய்திருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிப்போல் காண்கிறோம். ஆகையால் அவ்விதமான ஆசீர்வாதத்தை இந்தியர்களாகிய நாம் நமது சபைகளிலும், குடும்பங்களிலும், தனிஜீவியத்திலும் பெற்று அனுபவிக்க முயல்வோமாக. தேவன்தாமே நாம் வேதாகமத்தை எல்லாவற்றிலும் மேலானதாக உபயோகிக்கக் கிருபைசெய்வாராக.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE OF THE ... REGISTERED 8 AUG 1911 MADRAS

No. 63 ஆகஸ்டு 1911

# வேதியர் விளக்கு

## The Unprofitable Servant

By the Rev. A. C. Clayton

### பிரயோசனமற்ற ஊழியக்காரன்

மத். 25. 26. பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே! தாயார் தன் குழந்தைக்கும், குரு தமது சீஷர்களுக்கும், உபாத்தியாயர் மாணாக்கர்களுக்கும் நற்புத்தியைக் கற்பிக்க உவமைகளையும் கதைகளையும் எப்படிச் சொல்லுவார்களோ அப்படியே சற்குருவாகிய இயேசுகிறிஸ்து அறிவீனரைப் போதிக்க உவமைகளைச் சொன்னார். அவ்வுவமைகளில் இது ஒன்று.

உவமையை விபரமாயும் தெளிவாயும் சொல்லி சில விஷயங்களை விரித்துரைக்கவேண்டும்.

I. பிரபு: கொடுத்தல்: அவன் இனாமாகக் கொடுக்கவில்லை; இரவலாகவும், கடனாகவும் தனக்காக உபயோகிக்கும்படி கொடுத்தான்.

தாலந்து என்றால் பொற்கட்டி அல்லது தங்கப்பாளம் என்று அர்த்தம். ஒரு தாலந்து 750 ரூபாய் விலை பெறும்.

II. ஊழியக்காரர்: அவைகளைக்கொண்டு செய்த காரியங்கள் நமக்குப் பூரணமாய் விளங்குகிறதில்லை. ஆனால், நாம் சற்றுநேரம் யோசித்தால் அவைகளைச் செலவழித்த விதத்தை நாம் நிதானித்துக்கொள்ளலாம்.

(i) முதலாம் ஊழியக்காரன் முயற்சியுள்ளவன். அவன் தன் வசத்திலுள்ள ஐந்து பொற்கட்டிகளை எடுத்துக்கொண்டு பிரயாணம்பண்ணி ரத்தினம், வச்சிரம், மரகதம், முத்து முதலிய நவரத்தினங்களை வாங்கி, கிரயத்துக்கு விற்று லாபம் சம்பாதித்து நல்ல பலன் பெற்றான்.

(ii) இரண்டாம் ஊழியக்காரன் அவ்வளவு தைரியசாலியல்ல. ஆனால் கடைத்தெருவில் ஒரு கடை வாடகைக்கு

எடுத்து விலையுயர்ந்த பட்டு சரிகைச்சேலை விற்று அவனும் தன் எஜமானனுக்காக லாபம் பெற்றான்.

(iii) ஒரு பொற்கட்டி வாங்கினவன் தன் எஜமானன் தனக்கு ஒரு தாலந்து மாத்திரம் கொடுத்ததினால் விசனம் அடைந்தான். தன்னைவிட மற்ற ஊழியர்களுக்கு அதிகம் கொடுத்ததினால் அவர்களின்மீது பொறாமை கொண்டான். தன் கடமையை அறிந்தும், முதுகு வளையாதவனாயிருந்து, தினந்தினம் வீட்டிலே உட்கார்ந்து சோம்புத்தனத்தினால், 'நாளைக்குப் பார்ப்போம்' என்று சொல்லிப் பிரயாசைப்படாமல் இருந்தான். கடைசியாய் வீட்டுக்குள் ஒரு மூலையில் அந்தப் பொக்கிஷத்தைப் புதைத்துவைத்தான்.

III. A. பிரபு விசாரணைக்கு வருதல்.

(i) ஊரார் சந்தோஷமாய் இருந்தார்கள்.

(ii) எஜமானனுடைய வீட்டில் ஊழியக்காரருக்குச் சந்தோஷம். எல்லாரும் அவன் வருகைக்கு அவன் மாளிகையில் ஆயத்தம்பண்ணினார்கள். வழியில் தோரணங்களைக் கட்டினார்கள். அவன் கழுத்தின் மேல் மாலையைப் போட்டார்கள். அவன் கையில் பூச்செண்டு கொடுத்தார்கள். அவன் வந்தவுடனே அவனைப் பார்க்க ஊராரும் ஊழியர்களும் வந்தார்கள். ஒருவனுக்கு மாத்திரம் விசனமும் பயமுமிருந்தது. ஏனென்றால் 'சற்றுநேரம் பொறுத்து நமது எஜமானன் பொற்கட்டிகளை வாங்கின நம்மிடத்தில் கணக்கு கேட்பான்' என்று அறிந்தான்.

B. விசாரணைபண்ணுதல்.

(i) ஐந்து பொற்கட்டி வாங்கினவன் சந்தோஷத்துடன் வந்து தான் வாங்கின ஐந்து தாலந்துகளோடு வேறு ஐந்து தாலந்துகளைக் கொடுத்தபோது அவன் எஜமானன் 'நீ இதுவரையில் வேலைக்காரனாய் இருந்தும் உண்மையுள்ளவன் ஆனதினால் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்' என்று வாக்களித்தான்.

(ii) இரண்டு தாலந்தை வாங்கினவன் 'எஜமானனே! முதலாம் ஊழியக்காரன் திறமைக்கு ஒத்த திறமை எனக்கில்லை. அவ்வளவு லாபம் நான் பெறவில்லை;



ஆனால் என்னால் இயன்றமட்டும் செய்தேன்' என்று அவன் வாங்கின இரண்டு தாலந்துகளோடு தான் சம்பாதித்த வேறு இரண்டு பொற்பாளங்களையுங் கொடுத்தான். எஜமானன் முதல் ஊழியக்காரனைப்போல அவனையும் மெச்சி அவனையும் தன் தேசத்தில் அதிகாரியாக வைத்தான்.

(iii) தாமதகுணமுள்ளவனின் மனதில் இருக்கும் நிலையை யார் சொல்லக்கூடும்? சாக்குப்போக்குச் சொல்லவேண்டும் என்றெண்ணி அவன் 'ஆண்டவனே! உமது பணத்தைப் பத்திரமாய் வைத்துக் கொண்டு வந்தேன். உமக்கு நஷ்டமில்லை. நான் லாபம் பெறவில்லை என்பது மெய். ஏன் என்றால் இதை வியாபாரத்தில் போட்டால் ஒருவேளை நஷ்டம் வரும் என்பதையும், நஷ்டம் வந்தால் நீர் கடினமுள்ளவர் என்பதையும் அறிந்து இதை நிலத்தில் புதைத்துவைத்தேன். இதோ! உம்முடையதை வாங்கிக்கொள்ளும்' என்றான். எஜமானன் பொல்லாதவனும் சோம்பனுமான அவன் சொன்ன சாக்குப்போக்கைக் கேட்காமல் அவன் சோம்புத்தனத்தினிமித்தம் அவனுக்குத் தக்க தண்டனையைச் செய்தான்.

எஜமானன் அநியாயம் செய்யவில்லை! அநேகர் கடனாக இரண்டொரு ரூபாய் வாங்கினால் அதைத் திரும்பக் கொடாதபடி எத்தனையோ தாமதமும் மோசமும் பண்ணுவார்கள்! அடிக்கடி திரும்பக் கேட்டாலும் கொடுக்கமாட்டார்கள்! 'முள்ளுமேல் சேலை போட்டால், மெள்ள மெள்ள வாங்கவேண்டும்.' இவன் யாதொரு வஞ்சனையும் செய்யவில்லை. தன் எஜமானன் பணத்தை அதிக பத்திரமாய் வைத்து அதை அவன் கையில் குறைவின்றிக் கொடுத்தான்! அப்படியிருக்க உண்மையுள்ளவனாகிய இவனைத் தண்டிப்பதேன்? இவன் பொல்லாதவன், உதவாதவன், சோம்பன்.

IV. பிரபுவாகிய கடவுள் பொற்கட்டியைவிட விலையுயர்ந்த பல நல்ல வரங்களை இரவலாக நமது கைவசத்தில் ஈந்தருளியிருக்கிறார். நாம் இவைகளைக்கொண்டு அவருக்காகப் பலன் சம்பாதிக்கவேண்டும்.

(i) குருடனைப் பார்! உனக்குக் கண்ணில்லையா? அந்தக் கண்ணை அவருக்காக எப்படிப் பிரயோகிக்கவேண்டும்? கண் தெரியாதவன் கேட்கும்படி சத்தியவேதம் வாசித்தால் அது பிரயோசனமல்லவா? அல்லது ஏழைகளுக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்தால் பலனில்லையா? வீட்டில் சிற்றின்பப் பாட்டுப் புஸ்தகங்களை வாசித்தால் பொல்லாதவனும் சோம்பனுமானவனைப்போல் இருப்போம்.

(ii) எனக்குக் கை இருக்கிறது. அதினால் வேலைசெய்யத் திறமையுண்டு. சரி; நல்ல வேலை செய்வேன். நல்ல சம்பளம் வாங்கிக்கொள்ளுவேன் அதினால் நமது எஜமானனுக்குப் பலன் என்ன? நான் திக்கில்லாதவர்களுக்கு உதவி செய்யாவிட்டால் நான் பொல்லாதவனும் சோம்பனுமாய் இருப்பேன்.

(iii) இதெல்லாம் வாஸ்தவம். ஆனால் இன்னொரு வரத்தைப் பற்றி எத்தனையோ பேர் அஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கிறார்கள்; அதாவது கடவுள் நமக்குக் கொடுத்த ஜீவகாலமே. சிலருக்குப் புத்தியைக் கொடுத்திருக்கிறார். சிலருக்குப் பணத்தைக் கொடுத்திருக்கிறார். எல்லாருக்கும் ஜீவகாலத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த நாளையும் இந்த நாழிகையையும் அவர் நமக்குக் கடனாகக் கொடுத்தருளியிருக்கிறார். இதைக்கொண்டு நாம் அவருக்காகப் பலனைச் சம்பாதிக்கவேண்டும். இந்த நாளில் வீண் பேச்சுக்கு நேரம் இல்லை; வீணாய் அலப்புவதற்குப் பொழுதில்லை. ஒருநாளை நாம் வீணாய்க் கழித்தால் அந்தப் பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியனைப் போலிருப்போம்.

V. (i) கடவுள் கடினமுள்ளவர் அல்ல. நாம் சம்பாதிக்க முடியாததை அவர் நம்மிடத்தில் தேடமாட்டார், நாம் செய்யக்கூடியதைத்தான் தேடுகிறார்.

(ii) நாம் அவருக்காக திறமை, கண், புத்தி, சுகம், காலம் முதலியவைகளைக்கொண்டு, அவர்நிமித்தம் நல்ல பலனை அடையப் பிரயாசப்பட்டால் அவர் தூரமாய் நிற்காமல் நமது பக்கத்தில் நின்று நம்மைக் காப்பாற்றி, பலப்படுத்தி வருவார்.

---



# A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

எம்பெருமானாகிய கிறிஸ்து சத்துருக்களால் பிடியுண்டு கட்டப்பட்டது. மத். 26. 47–56; லூக். 22. 47–53; மாற். 14. 43–50; யோவா. 18. 1–11.

அவர் பிடிபட்ட இடம் கெத்சேமனே தோட்டம்; ஒலிவமலையிலோரிடம். இதன் அர்த்தம் செக்கு. இயேசு இங்கே தம் சீஷருடன் அடிக்கடி போவது வழக்கம். ஆகவே யூதாஸ் இந்த இடத்தை நன்றாய் அறிவான். கடைசியாக வந்தபோது இயேசு எட்டுச் சீஷரைத் தோட்டத்தின் முன்னிலையில் நிறுத்தி, தன்னுடன் பேதுரு, யோவான், யாக்கோபு என்கிற மூவரையும் தோட்டத்துக்குள் கூட்டிக்கொண்டுபோனார். முந்தியகாலங்களில், யவீரின் மகள் உயிரோடெழுப்பப்பட்டபோதும் தாம் தாபோர் மலையில் மறுரூபமடைந்தபோதும் இம்மூவர்களைக் கூட்டிக்கொண்டுபோனார். மாற். 5. 37; 9. 2.

இந்த இடத்தில் இயேசு, துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். மத். 26. 37, 38. இந்த வசனத்தால் ஆத்துமப் பாடுகளின் உபாதையை அறிகிறோம்.

கல்லெறிதூரம் போய் ஜெபம்பண்ணினார். மத். 26. 39–41; லூக். 22. 41, 42. இந்த ஜெபத்தில் மனிதருடைய பாவங்களுக்குப் போக்குச்சொல்ல நினையாமலும் அதை நீக்கும்படி கேட்காமலும் பிதாவுக்குரிய நித்திய பட்சத்தின்படி தம்முடைய பாடுகளை லேசாக்க விண்ணப்பம்பண்ணினார். பிள்ளை தகப்பனுடன் பேசுவதுபோல பிதாவே என்றார். பிதாவின் சித்தத்துக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். பின்பு சீஷரிடம் வந்து தனக்கு ஆறுதலாக ஒருவரும் விழித்திருக்கவில்லையே: பேதுருவே, நீ என்னுடன் மரணம் அடைவேன் என்று சொன்னாயே, சற்றுநேரம் விழித்திருக்கக்கூடாதா என்றார்.

இரண்டாந்தரம் போய் அப்படியே ஜெபம்பண்ணி சீஷரை மறவாமல் வந்து பார்த்தார். அவர்கள் தூக்கம் அதிகம். அவர் சொல்லியது இன்னதென்று அறியக்கூடாதவர்களாயிருந்தார்கள்.

மூன்றாந்தரமும் போய் அப்படியே ஜெபம்பண்ணினார்.

லூக். 22. 43, 44. தேவதூதன் அவரைத் தேற்றினான். அவருக்குண்டான வியாகுலத்தினாலே வேர்வை இரத்தத்துளிகள்போல் ஆகி, சரீரத்திலும் முகத்திலும் ஒழுகிற்று.

லூக். 22. 45, 46. இயேசு தேவத்தன்மையின்படி எல்லாம் அறிந்தவராயிருந்தபடியால், யூதாஸ் சத்துருக்களுடன் வருகிறதை அறிந்து சீஷர்களிடம் வந்து சிறிதுநேரம் வீண்போக்காமல் அவர்களை ஜெபம் பண்ணும்படி சொன்னார்.

யோவா. 18. 3; மத். 26. 48. யூதாஸின்பின் அநேக ஜனங்கள், கத்தி, தடி முதலியவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவன் சத்துருக்கள் சீஷர்களில் ஒருவனைப் பிடித்துக்கொண்டு போகாதபடி தான் முத்தமிடுகிறவனைப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோகப் பேசியிருந்தான். ஆடுகளுக்கு வழிகாட்டவேண்டியவனாயிருந்த யூதாஸ் ஓநாய்களுக்கு வழிகாட்டினான்.

I. இயேசுவானவருடைய சீஷர்கள் தங்களை எதிர்ப்பார்கள் என்று இரட்சகருடைய சத்துருக்கள் நினைத்தார்கள்.

(1) ஒரு பெரிய கூட்டத்தாராகிய யூதர்கள் வந்தார்கள். சரியான யுத்தவீரராக அணிவகுத்து வந்தார்கள். யோவா. 18. 3.

(2) பூரண சந்திரகாலமானாலும் சீஷர்கள் மாஞ்செடிகளில் ஒளிந்திருந்தால் அவர்களைப் பிடிக்கும்படி விளக்கு, தீவட்டி முதலியவைகளைக் கொண்டுவந்தார்கள்.

(3) சத்துருக்கள் நியாயப்பிரமாணத்தை மீறின ஒருவனைப் பிடிக்கவந்தார்கள். அவர்கள், இயேசு தம்மை ஒளித்துக்கொள்வார் என்று நினைத்தார்கள். இயேசுவோ அமைதலும் பொறுமையுமாக அவர்கள்முன் தம்மைத்தாமே நிறுத்தினார். இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

யோவா. 18. 4-9. என்னைத் தேடினதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள் என்றார். இதைத் தமது பிரதான ஆசாரிய ஊழியத்துக்கு ஏற்றபடி பிதா எனக்குத் தந்தவர்களை நான் இழந்ததில்லை என்றார். சீஷர்கள் தம்முடன் கொல்லப்பட்டால் திருச்சபைக்குச் சாட்சியில்லாமல் போகும். தாம் கோரின கிருபையை நிறைவேற்ற அவர்களை விட்டுவைக்கக் கட்டளையிட்டார்.

II. சத்துருக்களை வழி நடத்தினவன் யூதாஸ். யூதாஸ் செய்தது சதியென்று பின்வருபவைகளினால் அறியலாம்.

(1) மகா பரிசுத்தமாய் எண்ணப்பட்ட பஸ்கா பண்டிகையின் சாயந்தர வேளையில் இந்தச் சதியை நடப்பித்தான்.

(2) இரட்சகர் சீஷர்களோடு அடிக்கடி போய்த் தனிஜெபத்திலிருந்த இடத்திலே இந்தச் சதி நடந்தது. யோவா. 18. 2.



(3) சதி முத்தத்தினாலே நடத்தப்பட்டது. முத்தியிடுவது சீஷனுக்கு ஒரு அடையாளம். சீஷர்கள் ரபிகளை முத்தஞ்செய்வது வழக்கம். யூதாஸ் இயேசுவை அதிகமாக முத்தஞ்செய்தான் என்று மூலபாஷையின் பதத்தினால் அறிகிறோம். யூதாசின் முத்தம் ஆண்டவர் இருதயத்துக்குள் பாய்ந்தது. லூக். 22. 48; சங். 54. 12-14.

இவர்கள் எல்லாரையும் இரட்சகர் வெட்கப்படுத்திவிட்டார். தம்மைப் பிடிக்கும்படி அவர்கள் செய்த ஆயத்தங்கள் எல்லாம் அனாவசியமென்று எடுத்துக் காட்டினார். லூக். 22. 52, 53.

மத். 26. 50; லூக். 22. 49; யோவா. 18. 10. சத்துருக்கள் முத்தத்தினாலே இயேசுவை இன்னாரென்று அறிந்து அவர் அருகில் சேர்ந்து அவர்மேல் கைகளைப் போட்டார்கள். சேவகர் சேர்ந்து வந்து அவரைக் கட்டுகிறவரையில் யூதாஸ் முத்தமிட்டுக்கொண்டிருந்தான். பேதுரு பட்டயத்தை எடுத்து ஒருவனை வலதுகாதற வெட்டினான். கிறிஸ்து அவ்விடத்தில் தமது அற்புதத்தை நடப்பித்தார். அவரால் நடப்பித்த இந்தக் கடைசி அற்புதம் சத்துருக்களுக்காகச் செய்யப்பட்டது. கிறிஸ்துவின் சாந்தம் ஜெபத்தினாலே வந்ததென்றால் பேதுருவின் ஆத்திரம் விழித்திருந்து ஜெபம்பண்ணாததினாலேதான் உண்டானது.

லூக். 22. 51. இம்மட்டும் நிறுத்துங்கள் என்று சீஷர்களுக்குச் சொன்னார். காதின்மேல் ஒரு கையையும் சத்துருக்கள் பக்கம் ஒரு கையையும் நீட்டி சீஷர் பக்கம் முகத்தை திருப்பிப் பார்த்துச் சொல்லியிருக்கலாம்.

பேதுருவின் மறுதலிப்பு. மத். 26. 69-75; மாற். 14. 66-72; லூக். 18. 54-62; யோவா. 18. 15-18. 25-27. பேதுரு தீர்மானமில்லாதவனும் பயமுள்ளவனுமாயிருந்தபடியால் துன்பத்துக்குள்ளானான்.

(1) பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசியாமலிருந்தது அவனுக்கு ஒரு சோதனை.

(2) யோவான் தைரியமாய்ப் பிரவேசித்தான். பேதுரு பயந்ததினால் பின்வாங்கினான். அது அவனுக்குத் தவறிவிழ இடமாயிற்று.

(3) பேதுரு சோதனைக்குள் விழுந்தது கிறிஸ்துவை உடனே அறிக்கைசெய்யாமல் தாமதித்ததினாலேதான். தூஷணம் பேசின போர்ச்சேவகர் நடுவிலே பேதுரு கேட்டுக்கொண்டிருந்தான். சங். 1.

(4) ஒருதடவை மறுதலிக்க ஆரம்பித்தவன் மறுபடியும் மறுதலிக்க நேரிட்டது.

யோவா. 18. 15, 16. இயேசு அவர்கள் கையிலிருந்து தப்பிக்கொள்ளுகிறாரோ இல்லையோ பார்ப்போம் என்று அவன் பின்சென்றான். தன்னை அந்நியனாகக் காட்டாமல் அவர்களில் ஒருவனாக எண்ண

நடுவே உட்கார்ந்தான். இயேசுவுக்குச் சம்பவித்தவைகள் தனக்கும்
சம்பவிக்கும் என்று பயந்து அறியமாட்டேன் என்றான்.

யூதாசும் பேதுருவும் ஒப்பிடப்பட்டது.

(1) கிறிஸ்து இவர்கள் இருவரையும் இரட்சிக்கப் பிரயாசப்பட்
டார். மத். 26. 50; லூக். 22. 61.

(2) யூதாஸ் பாவஞ்செய்ய முன்னதாக நினைத்திருந்தான்; பேதுரு
சடுதியாய்ப் பாவத்தில் விழுந்தான்.

(3) யூதாஸ் திருடன்; கிறிஸ்துவின் இராச்சியத்தில் ஆஸ்தி அகப்
படுமென்று நினைத்தான். ஆனால் இதில் ஏமாந்தபடியால், அவன் கிறிஸ்
துவை விற்றான். பேதுருவோ உண்மையுள்ளவன், கிறிஸ்துவை
நேசித்தான்.

(4) இருவரும் மனஸ்தாபப்பட்டார்கள். மத். 26. 3-10; லூக்.
22. 62.

பேதுரு. லூக். 22. 61, 62. சேவல் சத்தங் கேட்டவுடன் இருதய
கலக்கம் உண்டாயிற்று. தான் செய்த பாவத்தை நினைத்துக்கொண்
டான். இயேசு அவனைப் பார்த்தார். அது அவருடைய இரக்கத்தைக்
கிருபை நிறைந்ததாயும் உள்ளத்தைக் கரையப்பண்ணுகிறதாயுமிருந்
தது. சேவல் இரண்டுதரம் கூவுமுன் நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்
பாய் என்றபோது அவன் தன் பலத்தை நம்பி உம்முடன் சாகவும் ஆயத்
தமாயிருக்கிறேன் என்று சொன்னதை நினைத்து அழுதான். தேவகிரு
பையைத் தேடினபடியால் அவரிடத்தில் மிகவும் அன்பாயிருந்தான்.

யூதாஸ். மத். 27. 3-5; அப். 1. 18. மரணத்தீர்ப்பை நிறைவேற்ற
ரோமதுரையிடம் கொண்டுபோய் ஒப்புவிக்கப்பட்டதைக் கண்ட
வுடனே விசனப்பட்டு, பிரதான ஆசாரியர் மூப்பர்களிடம் போய்க்
குற்றமில்லா இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேன் என்று நற்சாட்சி
சொல்லி, இதனால் எனக்குப் பாவம் வந்தது: இதோ நான் வாங்கின
பணம் எனக்கு வேண்டாம், என் எஜமானை விட்டுவிடுங்கள் என்
றதும் தவிர, அவர் செய்த நன்றிகளை உணராமல் அகங்காரமாய்க்
குற்றமற்ற அவருக்கு அநியாயமும் துரோகமும் செய்தேன் என்றான்.
யூதாஸ் வார்த்தை அவர்களிடம் செல்லவில்லை. அந்தப் பணத்தைத்
தேவாலயத்துத் தர்மப்பெட்டியில் எறிந்துவிட்டுத் தற்கொலை புரிந்து
கொண்டான். அந்தப் பணத்தைச் சுமக்கப் பெலனில்லாமல் எறிந்து
விட்டான். தன் பாவத்தை எறியும் வகையையும் இடத்தையும் தேட
வில்லை. தேவகிருபை கிடைக்குமென்று நம்பவில்லை. அவன் சுருக்
கிட்ட கயிறும் பலமில்லாமல் அறுந்து தலைகீழாக விழுந்து வயிறு
வெடித்துக் குடல் சரிந்துபோயின. யூதாசின் காலம் பயங்கரமாய்
முடிந்தது.



# Ahab's Palace

## ஆகாபின் அரமனை

நம்முடைய வேதாகமம் தேவாவியானவரால் உரைக்கப்பட்ட
தென்பதற்கும், அதிலுள்ளதெல்லாம் உண்மை என்பதற்கும், பலவித
மான உதாரணங்களுண்டு. அவைகளில் ஒன்று, பூர்வீகத்தில் அக்
காலத்து ஜனங்கள் கருங்கல்லிலும், செங்கல்லிலும் எழுதிவைத்து
இக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட பலகைகள்தான். பலஸ்தீனு,
எகிப்து, பாபிலோன், அசீரியா என்கிற தேசங்களிலும், இன்னும்
அநேக இடங்களிலும் இப்பேர்ப்பட்ட ஆதிசின்னங்கள் கண்டெடுக்
கப்பட்டன.

இக்காலத்தில் சமாரியா என்னும் நாட்டிலே இப்பேர்ப்பட்ட
ஆராய்ச்சியைச் செய்துவருகிறார்கள். அத்தேசத்தில், அகுஸ்துராய
லுக்கென்று ஏரோதுராஜாவால் கட்டப்பட்ட ஒரு பெருங் கோவி
லைத் தோண்டினபோது அந்தக் கோவிலின் அஸ்திபாரங்களுக்குக்
கீழாக, இன்னொரு கட்டடம் இருக்கிறதாகக் கண்டுபிடித்திருக்கிறார்
கள். அந்தக் கட்டடம் ஏறக்குறைய ஒன்றரை 'ஏகர்' விஸ்தீரண
முள்ள ஓர் கட்டடமாம். பலமுறை அது ஆகாபின் அரமனை
யாக இருந்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதிலே, திராட்
சரசமும், எண்ணெயும் வைக்கப்பட்ட ஜாடிகளையும், இன்னும்
சில பானைகளையும் கண்டுபிடித்தார்கள். அதுவுமன்றி, எபிரேய
பாஷையிலே எழுதப்பட்ட ஒருவித பொருள் அட்டவணை அந்த
ஜாடிகளோடிருந்தது; அதாவது, அந்தந்த ஜாடியில் வைக்கப்பட்ட
திராட்சரசம் எந்தெந்த இடத்திலிருந்து வந்ததென்றும், யார் யாரால்
அனுப்பப்பட்டதென்றும் அந்த அட்டவணையில் எழுதியிருந்தது.
ஏறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்குமுன் எழுதிய இந்த அட்ட
வணையைவிட, எபிரேய பாஷையில் எழுதப்பட்ட வேறு பழைய
எழுத்துக்கள் இதுவரையிலும் எங்கேயாவது கண்டுபிடிக்கப்பட
வில்லை. அந்த அட்டவணையில், வேதாகமத்திலிருக்கும் பல பெயர்கள்
காணப்படும். மேலும், அந்த பெயர்களில் அநேகம், 'பாகால்' என்
னும் பேரோடு சேர்ந்திருக்கும். 1 இரா. 16. 30-33; 18. 18, 19. பார்த்
தால், ஆகாப் என்பவன் பாகால் என்கிற தேவதைக்குக் கோவில்களைக்
கட்டினதாகவும், அந்தப் பொய்த்தேவனை வணங்கினதாகவும், அந்தத்
தேவதைக்குப் பணிவிடை செய்த அநேக ஆசாரியர்களுக்குச் சம்
ரக்ஷணை செய்ததாகவும் காண்கிறோம். ஆகவே, அத்தருணத்தில் அநே
கம் பிள்ளைகளுக்குப் பாகால் என்கிற பேர் இடப்பட்டிருக்கும் என்ப

தற்குச் சந்தேகம் இல்லை. இதுவும், ஆகாபைக்குறித்து வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதும் மெய் என்பதற்கு, இப்போ கண்டெடுக்கப்பட்ட அந்த அட்டவணை ஓர் அத்தாக்ஷியாகும்.

இவ்விதமாக நாம் எதிர்பாராத அநேக வண்ணமாகத் தேவன் வேதத்தின் உண்மையை நமக்கு ருசுப்படுத்துகிறார்.

## Husband and Wife

### புருஷனும் மனைவியும்

புருஷனும் மனைவியும் என்கிற ஓர் புஸ்தகம் சென்னைக் கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தாரால் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. அது வெகு சிறிய புஸ்தகமாயிருந்தாலும் (17 பக்கங்களுள்ளது) அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. அதில், விவாகம் செய்த ஒரு புது மாப்பிள்ளைக்கு அவருடைய போதகர் எழுதி அனுப்பிய நாலு கடிதங்கள் அடங்கியுள்ளன. அவைகளில் புதிதாய்க் கலியாணம் செய்தவர்களும் விவாகம் செய்யப்போகிறவர்களும் அறியவேண்டிய சில விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட ஒரு புஸ்தகம் தமிழிலே எழுதப்படவேண்டுமென்று நெடுநாளாய் எதிர்ப்பார்த்திருந்தோம். விவாகம் செய்யப்போகிற ஆண்களுக்கும் பெண்களுக்கும் குடும்ப வாழ்வைப்பற்றிப் போதனை செய்கிற இப்படிப்பட்ட அநேக புஸ்தகங்கள் இங்கிலீஷிலே வெளிவந்திருக்கின்றன; ஆயினும் தமிழிலே இதுதான் முதலாவதாக எழுதப்பட்ட புஸ்தகம்.

குடும்பவாழ்வுக்கடுத்த விஷயங்களைப்பற்றிய அறியாமை அடிக்கடி அசௌக்கியத்திற்கும் துக்கத்திற்கும் காரணமாகும். ஆனால் இவ்விஷயங்களைப்பற்றி வாலிபரோடு பேசுவது வெகு அரிது. ஆதலால் இவ்விதமான ஓர் புஸ்தகம் பெற்றோருக்கும், போதகர்மாருக்கும் ஒரு பெரிய அநுகூலமாயிருக்கும் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம். அது சுருக்கமாயும், தெளிவாயும், நாணமாயும், அனாவசியமான விவரங்களில்லாமல், தன்னடக்கம், தன்னயமின்மை என்பவைகளைக் குறித்து வேண்டிய ஆலோசனைகளைக் கொடுக்கின்றது.

கலியாணம் செய்யப்போகிற ஒவ்வொரு வாலிபன் கையிலும் இருக்கவேண்டிய புஸ்தகம் இதுவே. இதின்படி அவன் விவேகத்தோடும் கரிசனையோடும் நடந்துகொண்டால், அவனுக்கும், அவன் மனைவிக்கும் அதிக நலமாயிருக்கும். இதின் விலை அரை அணா.



## A Word to Preachers

**By the Rev. G. S. Vedanayagam**

### சுவிசேஷகர்களுக்கு ஓர் வார்த்தை

(தொடர்ச்சி.)

இந்தியாவின் பக்தி பொய்யும்மெய்யும் புணர்ந்தியன்றது என்று சொன்னோம். ஆனால் நாம் செய்து வருகிற வைத்தியமோ சற்றுப் பிசகாய்ப் போகிறதென்பது எனது சிறிய அனுபவமாம்.

நாம் இதுமட்டும் பொய்யிலிருந்து மெய்யைப் பிரித்தெடுக்கும் சங்கடத்தைச் சுமந்துகொள்ள மனமற்றவர்கள்போல பொய்யையும் மெய்யையும் ஒருகண்ட சீராய் ஒழித்துவிட முயன்றதாக நம்மை உற்று விசாரித்தால் புலப்படும் என்பதற்கு ஐயமில்லை. இந்துமதத்தாருடைய விசுவாசங்களை ஒட்டிப் போதிக்கிறதில் அல்ல வெட்டிப் போதிக்கிறதிலேயே நமது காலத்தைச் செலவிட்டிருக்கிறோம். இந்து மதத்துக்கு விரோதமாய் எழுதப்பட்ட அநேக புஸ்தகங்கள் இதற்குத் திருஷ்டாந்தமாம். அப்புஸ்தகங்கள் இந்துமார்க்க பக்தியில் நாம் மெச்சிப் புகழவேண்டியதும் மேற்றேச கிறிஸ்தவர்களுங்கூட ஆவலோடு பின்பற்றவேண்டியதுமான அநேக காரியங்களைக் கவனியாமல், அவற்றைப் பரிகாசம்பண்ணி இந்துக்களின் பக்தியுள்ள இருதயங்களைப் புண்படுத்திவருகின்றன. சில நூல்கள் இந்துமதத்திலுள்ள ஆபாசங்களைமாத்திரம் எடுத்துத் தூற்றி வருகிறது. என் உடன் சகோதரன் நெற்றியில் ஒட்டின கொசுகை, சம்மட்டியால் அடித்தோட்டுகிறதுபோல நமது கண்டனங்கள், அவர்கள் பக்தியைச் சேதப்படுத்தியிருக்கிறது. அப்புஸ்தகங்கள் அன்பற்ற சத்துருக்கள் செய்யும் தூஷணங்களாக விளங்கினதேயொழிய அன்பின் அனுதாபங்கள் அமைந்தனவாக விளங்கவில்லை. அப்புஸ்தகங்களை வாசித்த இந்துக்களின் மனம் நம்மை உத்தம சிநேகிதர் என்று எண்ணுவதற்கிடாய்க் கொடிய சத்துருக்கள் என்றும், பக்தியைப் பழிக்கும் பரிகாசக்காரர் என்றும் எண்ணப்பண்ணிற்று. அதுமாத்திரமல்ல, நமது அன்பின் மார்க்கத்தையும், நெரிந்த நாணலை முறியாத நமது அன்பின் இரட்சகரையுங்கூட அவர்களின் பிராண சத்துருவென்று நினைக்கப்பண்ணிற்று. இந்துமதத்தை நிராகரித்து நாம் பிரசங்கித்த அல்லது கண்டனம் எழுதிய வகையை விளக்கச் சில திருஷ்டாந்தங்களைச் சொல்லுவோம். இந்துமதத்தில் வருகிற சில அற்புதங்களை யாதொரு தாரதம்மியமில்லாமல் நாஸ்திகரைப்போல் மறுத்திருக்கிறோம். உதாரணமாக, திருமாலின் உந்திக்கமலத்தில் பிரமா உற்பவித்ததும், மான் வயிற்றில் வள்ளி பிறந்ததும் இப்படியே அக்கினி, உழுபடைச்சால்,

தாமரைமலர், அல்லிக்கொடி இவற்றில் சில தேவர்கள் பிறந்ததும் இயற்கை விரோதம் என்று மேற்றேச தத்துவ ஞானத்தைக்கொண்டு ரூபித்தோம். இதை வாசித்த இந்துக்கள் கன்னிவயிற்றில் நமது இரட்சகர் பிறந்ததையும் அதே முகாந்தரங்களைக்கொண்டு இயற்கை விரோதமென்றும், நம்பமுடியாத கட்டுக்கதையென்றும் சாதிக்கநேரிட்டது. மேலும் யோகதத்துவத்தால் அஷ்டமா சித்திபெறலாமென்று, இந்துக்கள் நம்புவதை இயற்கை விரோதமென்று காட்டினது, ஏனோக்கும் எலியாவும் எடுத்துக்கொள்ளப்பட்டதும் இயற்கை விரோதமென்று அவர்கள் சாதிக்க நேரிட்டது. இப்படியே, யானைமுகப் பிள்ளையார் பிறப்பையும், விஷ்ணுவின் தசாவதாரத்தையும், இயற்கை விரோதமென்போமானால் நமது இரட்சகரின் திரு அவதாரத்துக்கு இடமெங்கே. நான் இப்படிச் சொல்வதில் என் கருத்தென்னவென்பதை, சிலர் விளங்கிக்கொள்வார்களோவென்று ஐயமுறுகிறேன். இந்துமத அற்புதங்களெல்லாம் மெய்யென்றும் அவர்களுடைய தேவ அவதாரங்களும் மெய்யென்றும் இதை வாசிக்கிறவர்கள் நம்பவேண்டும் என்றாவது நானும் நம்புகிறேன் என்றாவது நான் சொல்லுகிறதில்லை. ஆனால் இந்துமதத்தார் நம்புகிற அற்புதம் அவதாரமுதலியவற்றை நிராகரித்த நமது பழைய முறை பிசகென்பதே என் கருத்து. எப்படியெனில், இந்துக்களின் மயக்கமான விசுவாசங்களெல்லாம் நமது திருச்சுருதியில் வெளிப்படுத்தப்பட்டதும் மனிதரின் ஆத்தும உற்பத்தியுடன் அமைந்ததுமான உன்னத நித்திய சத்தியங்களை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கின்றன. நாம் அவர்களின் பொய் விசுவாசங்களாகிய கட்டடத்தை முரட்டுத்தனமாய் இடிக்கப்போய் அந்த உத்தம அஸ்திபாரங்களையும் இடித்துவிட்டோம் என்பதே என் கருத்தெல்லாம் என்றறிக. தற்காலத்தில் உயர்தரக் கல்விகற்ற இந்துக்களில் அநேகர் தங்கள் இருதயத்திலுள்ள களைகளுடன், கோதுமைகளும் பிடுங்குண்டவர்களாயிருப்பது முன்சொன்ன மேற்றேச தத்துவ ஞானம்செய்த வேலையே. அவர்களில் பெரும்பான்மையோர் மார்க்க நிர்விசாரிகளாயும், சிறுபான்மையோர் சுருதி விசுவாசத்தை முற்றும் தள்ளிப்போட்டு இயற்கை ஞானத்தைக்கொண்டு ஒருவித பக்திமார்க்கத்தைத் தாங்களே தத்தம் மனங்கொண்டபடி பலவாறு உத்தேசித்துக்கொண்டு ஒழுக எத்தனிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். சில மாசங்களுக்கு முன், இப்படிப்பட்ட ஒருவருடன் நான் தர்க்கம்பண்ண நேரிட்டது. ஆரம்பத்திலேயே அவர் என்னைப் பார்த்து, ஐயா, நாம் மார்க்கவிஷயமாய் ஒன்றைச் சாதிக்கவேண்டுமானால் சாஸ்திரங்களில் சுருதி, யுக்தி, அநுபவமென்ற திரிசூத்திரங்களைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்பது பூர்வபாதை. அவற்றில் முதல் சூத்திரமாகிய சுருதியைப்



பற்றி பல சமுசயங்கள் ஏற்படுவதால் அதைத் தள்ளிவிட்டு யுக்தி அநுபவத்தைமாத்திரம் கொண்டு தர்க்கம் துவங்குவோம் என்றார். நான் மாறுத்தரமாக சுருதிவிட்டால் அறுதியேது. சுருதி கடவுள் வாக்கு, கடவுள் மாறாதவர் அவர் வாக்கும் மாறாதது. யுக்தியும் அநுபவமுமோ மனுஷீகத்துக்குரியது. மனுஷன் மாறுதல் உடையவனானதால் யுக்தியும் அநுபவமும் மாறுதல் உடையதே. காலாகாலம், தேசாதேசந்தோறும் மாறிவிடுகிறது. ஆனதால் பூர்வத்தார் முச்சூத்திரங்களில், சுருதியையே ஆதி சூத்திரமாக்கினர். யுக்தியும் அநுபவமும் சுருதியில் தொங்கி நிற்கவேண்டுமென்பதே அன்னோர் நோக்கம். மூலச் சுருதி புரண்டால் ஞாலமே புரண்டுவிழும் என்றேன். எனக்குச் சுருதி விசுவாசமில்லை என்றார். கடவுள் விசுவாசம் உண்டோ என்றேன். ஆம் என்றார். கடவுள் ஒருவர் இருந்தால் சுருதி ஒன்றிருப்பது கட்டாயம் என்றேன். அப்படி எங்கே இருக்கிறது என்றார். சத்தியவேதத்தைக் காட்டினேன். முன்பு மேற்றேசத்தார் அவர் கையில் கொடுத்திருந்த நாஸ்தீக கத்தியை ஓங்கினார். நான் ஆஸ்தீகக் கேடகத்தைக்கொண்டு தாங்கி நீர் நாஸ்தீகராக என்னைத் தர்க்கத்துக்கு அழைக்கவில்லையே என, அவர் நான் ஆஸ்தீகன் என்றார். அப்படியானால் ஆஸ்தீக நியாயங்களைப் பேசுமென்றேன். பின்பு தர்க்கம் ஆரம்பித்தோம். அவர் கடைசியில் பேலிக்ஸ் என்பவனைப்போல் என்னை அனுப்பிக்கொண்டார். அப்படியே நாமும் இந்துக்களுடன் தர்க்கிக்கும்போது நாஸ்தீக கத்தியை எறிந்துவிட்டு, ஆஸ்தீக கத்தியைக்கொண்டே வெகு ஞானமும் பொறுமையுமாக இந்துமத பக்திமார்க்கத்தைச் சற்றே கஷ்டம் உத்தரித்துக்கொண்டு சீர்ப்படுத்தப் பிரயாசைப்படுவோமாக. ஒருதரம் இரண்டு மூன்று இந்துக்கள் மாணிக்கவாசகருடைய சரித்திரத்தைப் பக்திவினயத்துடன் வாசித்துக்கொண்டிருக்கையில் நானும் போய் உட்கார்ந்தேன். அவர்கள் என்னை ஒரு கிறிஸ்தவ' பிரசங்கி என்று கண்டுகொண்டு புஸ்தகத்தை மூடிவிட்டார்கள். ஐயா ஏன் நிறுத்துகிறீர்கள், சும்மா வாசியுங்கள் என்று பக்திவினயத்துடன் சொன்னேன். நாங்கள் மாணிக்கவாசக ஸ்வாமிகள் செத்த பிணத்துக்கு உயிர் கொடுத்த சங்கதியை வாசிக்கிறோம். நீங்கள் தொண்டர் அற்புதங்களை நம்புகிறதில்லையே என்றொருவன் சொன்னான். நானும், கடவுளும், அவர் தொண்டர்களும் அற்புதங்கள் செய்வதுண்டென்று பூரணமாய் நம்புகிறவன்தான் என்றேன். பின்பு அவர்கள் வாசித்ததை சந்தோஷமாய்க் கேட்டுக்கொண்டிருந்து, அவர்களை விட்டு வரும்போது வெகு பணிவோடு சில வார்த்தைகளைச் சொன்னேன். அதாவது, மாணிக்கவாசகர் சிவனடியார் அல்லவா? என்றேன். ஆம் என்றார்

கன். சிவபெருமானை நானும் வெகுகாலம் பூசித்துவந்தேன். தொண்டனுக்குத் தொண்டனாகும் அவரது அன்பை விளக்கும் அநேக கதைகள் என் மனதுக்கு இன்னும் அருமையாகவே இருக்கின்றன. ஆனால் அவரைப்பற்றிய வேறு சில கதைகள் என் மனதுக்கு அரோசிகரமாயிருந்ததால்அவரை விட்டுப்போட்டு சுத்த அன்பின் சொரூபியும் பாவங்களுக்கு விலகினவருமான இயேசுபெருமான் சரித்திரத்தைப் படித்து இப்போது அவரை மனப்பூர்வமாய்ப் பூசிக்கிறேன் என்றேன். சிவனது அரோசிகரமான கதை என்னவென்று அவர்கள் கேட்டபோது அன்போடும் பயபக்தியோடும் ஒன்றைச் சொல்லவே, போதுமையா? நீங்கள் சொல்வது உண்மைதான் என்று சொல்லி என்னை மரியாதையுடன் அனுப்பிக்கொண்டார்கள். சத்தியவேதத்தையும் ஒத்து வாசியுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

2. நமது பரிசுத்த வேதத்தின் மூன்றாம் கற்பனையைப்பற்றி யாதொரு அறிவுமற்ற சில இந்துப் புலவர்கள் தங்கள் கடவுளைப்பற்றி பக்தி மிகுதியால் நின்தாஸ்துதியாகப் பாடிய சில பாடல்களைக் கிறிஸ்தவ பிரசங்கிகள் நிந்தையாகவே பாடி இந்துக்களைப் பழித்துவருவதும் நல்லதல்ல. அதினால் நம்மை அர்த்தமறியாத மூடர் என்று கற்றறிந்த இந்துக்கள் அவமதிக்க நேரிடுகிறது. உதாரணமாக 'தாயாய் முலை கொடுத்தாள், தாரமாய் பெண்டிருந்தாள் மாயா பிறவி மகளானாள்' என்பதாக இந்துப் புலவர்கள் இந்துமததத்துவஞான அர்த்தமாய்ப் பாடினதைக் கிறிஸ்தவர்கள் சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டு முறைகேடென்று பழிப்பது பெரிய அநியாயமே. திருச்சபையைக் கிறிஸ்துவின் தாயென்றும் (வெளி. 12. 1, 2), அவர் திருவிலாவில் பிறந்தவளென்றும், அவரது மணவாட்டியென்றும் நாமும் ஞான அர்த்தம் செய்கிறோமே. அப்படியே கணபதி தாயைப்போல் பெண் கேட்டதைப் பழிப்பதும் மதியீனமே.

3. அசுத்த ஆவிகளின் இராஜ்யத்திற்கு அடுத்த பிரமாணங்களை நமது திருமறையில் சொல்லிய அளவில் மாத்திரமன்றி நாம் பூரணமாய் அறியாதிருக்கிறபடியால் உபா. 18. 10, 11-ல் மெய் விசுவாசிகளுக்கு விலக்கப்பட்டிருக்கிற அந்தகாரக் கிரியைகளைப்பற்றி நாம் இந்துக்களிடத்தில் பேசுகிற விஷயத்தைக்குறித்து வெகு சாவதானமாயிருக்கவேண்டும். இந்துக்கள் பில்லிசூனியம், அஞ்சனம், குறி சொல்லுதல் முதலிய காரியங்களைத் தொண்டுதொட்டு நம்பி அனுசரித்து அனுபவத்தில் கண்டும் வந்திருக்கிறார்கள். இவற்றிலே மனுஷருடைய தந்திரங்களும் இரசாயண சாஸ்திரத்துக்கடுத்த இயற்கிரியைகளும் மிகுதி பக்ஷம் சேர்ந்திருப்பதும் மெய்தான் என்றாலும் சாத்தானுடைய வல்லமையும் இதிலிருக்கிறதென்பதும் வாஸ்



தவமே. பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய பிசாசானவன் மேற்சொல்லிய தந்திரங்களையும் இயற்கைச் சத்துவங்களையும் தன் கிரியைக்கு அனுகூலமாகச் சேர்த்துக்கொள்வான் என்பதற்குச் சந்தேகமில்லையே; வேதத்தில் நேராகவும் குறிப்பாகவும் இந்த அந்தகாரக் கிரியைகளைக்குறித்து சற்றேறக்குறைய நூறு இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இவை முழுதுமே அபத்தமென்றும் மனுஷீக எத்தென்றும் நாஸ்தீகக் கோடரியால் இந்துக்களின் அனுபவத்தை முரட்டுத்தனமாய் நிராகரிக்கத் தலைப்படக்கூடாது. நமது வேதத்திலுள்ள ஆதித்தொண்டர்கள் இப்படிப்பட்ட காரியங்களோடு போராட நேரிட்ட சமயங்களில் எப்படி நடந்துகொண்டார்களோ அப்படியே நாமும் நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் நாஸ்தீகத்தனமாய் அவைகளை மறுக்காமல் தேவ வல்லமையைக்கொண்டு அவைகளை மேற்கொண்டார்கள் என்று பார்க்கிறோம். யாத். 7, 8 அதி; அப். 16. 16-24; 19. 11-20.

4. மனிதரை பேய் பிடிக்கிறது வாஸ்தவமென்று நமது பூர்வ பக்தர்களைப்போல் இந்துக்களும் நம்புகிறார்கள். இவையெல்லாம் வீண் எண்ணமென்றும் சரீரத்தை அல்லது மனதை ஒட்டிய வெறும் வியாதிதானென்றும் மேற்றேச தத்துவ ஞானங்களைக்கொண்டு நிராகரிப்பதும் ஆகாது. இதற்குப் பரிகாரமாகப் பேய்களை ஒட்டின நமது அருமை இரட்சகருடையவும், அவரது அடியாருடையவும் சத்திய சரித்திரமடங்கிய புதியேற்பாட்டை யாதொரு தத்துவ வியாக்கியானமின்றிப் போதிப்பதும் இந்துக்கள் அவைகளை வாசிக்கும்படி செய்வதுமே உசிதம்.

5. எழு பிறப்புண்டென்கிற உபதேசமானது இந்தியாவில் கற்றோர், கல்லார், நாட்டுவாசிகள், நகரவாசிகள் யாவருடைய மனங்களிலும் ஆழமாய்ப் பதிந்துபோயிருக்கிறது. இந்த உபதேசம் சத்தியமல்லவென்று நாம் அறிந்திருந்தபோதிலும் நமது பகிரங்க பிரசங்கங்களில் இதைப் பொய்யென்று ரூபிக்கப் பிரயாசப்படுவது வேலை நஷ்டமும் காலநஷ்டமுமாக முடியும். இவ்விஷயத்தில் ஓர் இந்துவுக்காவது பூரண திருப்தியடையும்படி மறுமொழி சொல்ல எத்தனிப்பது இருளிலே சிலம்பம் அடித்ததுபோலாம். தனிச் சம்பாஷணைகளில் இதற்குக் காலம் செலவிடலாம். இதை விசாரிக்க ஆசிக்கும் இந்துக்களுக்கு அவர்கள் சாவகாசமாய் வாசிக்கும்படி அதைப்பற்றிய உத்தம நிராகரிப்பு நூல்களைக் கொடுத்துவிடுவது உசிதம். பகிரங்க பிரசங்கத்தில் எழு பிறப்பைப்பற்றிய கேள்வி எழும்பிவிட்டால் நான் செய்கிற வழி என்னவெனில் கிறிஸ்துவை உண்மையாய் விசுவாசிக்கிறவனுக்கு இம்மையில் மறுஜனனம் என்ற ஒரு ஞானப்

பிறப்புண்டு, மறுமை விஷயமாக அவன் மரித்தவுடனே மோக்ஷம் சேருகிறான். அவனுக்கு ஏழு பிறப்பைப்பற்றிய பயங்கரம் ஒன்றுமில்லை. அவனது பாவங்கள் கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியால், சாபநிவிர்த்தியாவதால் அவன் பாவங்கள் அவனைத் தொடர்ந்துவராது. இதுவே சத்திய வேதத்தில் எனக்கிருக்கும் ஒப்பற்ற ஆறுதல் என்று சொல்லி யோவா. 14. 1-3; 12. 26; 2 கொரி. 5. 7, 8; பிலி. 1. 23; 2 தீமோ. 4. 6-8; எபி. 12. 23. இந்த வசனங்கள் என் பூரண நம்பிக்கையாக இருக்கிறதென்று வாசித்துக் காட்டுவேன். இந்த நம்பிக்கை என் மரணத்தறுவாயில் எனக்கும் நான் விட்டு பிரியும், என் மனைவி மக்கள், பந்துக்களுக்கும் பலத்த ஆறுதல் தருகிறது. நான் கர்த்தரிடத்திற்குப் போகிறேன். நீங்களும் நான் இருக்கிற இடத்துக்கு வருவீர்கள். நமது பிரிவு கொஞ்சக்காலந்தான். நான் இன்பலோகத்திலிருப்பதால் என்னைப்பற்றி ஏக்கங்கொள்ளவேண்டாம். என் மனைவி மக்களே, சிநேகிதர்களே, பந்துக்களே என்று தேற்றி ஜயகெம்பீரனாய் மரிப்பேன். எழுபிறப்பை நம்பும் இந்து தன் மரணத்தில் என்ன ஆறுதல் அடைவான். தன்மேல் விழுந்தழும், மனைவி, மக்கள், பந்துக்களுக்கு என்ன ஆறுதல் சொல்லிப்போவான். அப்பா, நீர் எங்கே போகிறீர் என்றழும் மக்களைப் பார்த்து அவன் சொல்லக்கூடிய வார்த்தைகள் இருந்தால் அவை பின் வருவனவே. நான் இறந்தபின், நர, மிருக, தாபரங்களில் எதெதில் எதெதுவாய் பிறந்து எக்கதியாவேனோ என்றுதான் சொல்லவேண்டும். யாதொரு நிச்சயமற்றவனாய்த் தான் சாவான். ஒருவேளை நான் சுவர்க்கம் போவேன் என்று சொல்லத் துணிந்தாலும் திரி சுவர்க்கங்களும், நித்தியமல்ல. சிலகாலம் அங்கிருந்து மறுபடியும் பிறக்கத்தான் வேண்டும் என்பது, இந்துமத சாஸ்திரங்களின் கொள்கை. பிறவியை அறுக்க மூத்தேவராலுங்கூட முடியாதென்று இந்துமத நூல்களே முறையிடுகின்றன. கிறிஸ்தவனாகிய எனக்கோ இந்தச் சங்கடங்கள் ஒன்றுமே இல்லை; என் இரட்சகருடைய வல்லமைக்கு மேற்கொண்ட எந்த வல்லமையும் திரிபுவனங்களிலுமில்லை என்று சொல்லிவிடுவேன்.

ஆகவே இந்துமத குப்பைகளைக் கிண்டிக்கொண்டிருப்பதில் நமது காலத்தைச் செலவிடாமல் அக்குப்பைகளை உபயோகிக்க வேண்டியபடி நாம் உபயோகித்து நமது சத்தியமாகிய நற்கனி விதைகளை அவற்றின்மேல் விதைத்துவிட்டால் தேவ ஆவியானவரின் அருள் மழையினால் அவை ஆழமாய் வேரூன்றி முளைத்துச் செழித்தெழும்பி உன்னத விருக்ஷங்களாகி, ஒன்று நூறாகவும், ஒன்று அறுபதாகவும், ஒன்று முப்பதாகவும் கனிதரும் என்பது என் பூரண விசுவாசம்.

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE OF THE ... REGISTERED 12 SEP 1911 MADRAS

No. 64 செப்டெம்பர் 1911

# வேதியர் விளக்கு

## A Word to Preachers

By the Rev. G. S. Vedanayagam

## சுவிசேஷகர்களுக்கு ஓர் வார்த்தை

(தொடர்ச்சி.)

III. இந்துக்களுக்குப் பிரசங்கிக்கும் கிறிஸ்தவ பிரசங்கிகளின் பக்குவம். இதுமட்டும், இந்துக்களின் ஆத்தும நிலைமையையும், அவர்கள் ஆத்துமாக்களின் நோயின் தன்மையையும் அந்நோய்களுக்கு வயித்தியம் செய்யும் வகையையும் ஒருவாறு தொகுத்துச் சொன்னோம். இனி இந்துக்களின் ஆயுள்வேதியராகிய சுவிசேஷகர்களின் பக்குவத்தைப்பற்றிச் சிறிது சொல்வோம். சகோதரரே, 'மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு; ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்' (எபே. 6. 12-20) என்று கர்த்தருடைய வேதம் சொல்லுகிறது. நமது சர்வாயுதவர்க்கம் என்னவென்று பார்ப்போம்.

1. சத்தியமென்னும் இடைக்கச்சையைப் பிரசங்கி தரித்துக்கொள்ளவேண்டுமாம். கச்சை பலத்துக்குரியது. சத்தியம் என்பது உண்மை. நாம் சுவிசேஷ பிரசங்கிகளான நோக்கமென்ன? ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டுமென்ற உண்மையான ஆவலால் இந்த ஊழியத்தை எடுத்துக்கொண்டோமா? நமது கனவு, நினைவு, ஜெபம், கவலை, பிரயாசம் முதலியவைகளைக்கொண்டு ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டுமென்ற நோக்கமா? எந்த நோக்கத்தால் ஊழியரானோம்? வேறே வேலை கிடையாததால் இந்த வேலைக்கு வந்தோமா? சம்பளத்துக்கென்று உழைக்கிறோமா? அல்லது கடமையைத் தீர்க்கிறோ

மா? ஆத்துமாக்களை இரட்சிக்கும் ஆவலுடையவனே சத்தியமென்னும் கச்சையை தரித்தவன். வேறே நோக்கங்களிருந்தால் அந்தகாரலோகாதிபதி நமக்கு அடங்கான். அவன் நம்மை இன்னாரென்று அறிவான். நாம் ஸ்கேவாவின் மக்களென்று அவன் அறிந்தால் நிர்வாணிகளும் காயப்பட்டவர்களுமாகி ஓடிப்போகும்படி அவன் நம்மை ஜயித்துவிடுவான் (அப் 19. 13-16). மேலும் கச்சையானது மற்ற உடுப்புக்கள் தளர்ந்துபோய் யுத்தகாலத்தில் நமது வேலைக்குத் தடையாயிராதபடி உடைகளைச் சேர்த்து இறுக்கிக் கட்டிக்கொள்ளவுங் கருவியாயிருக்கிறது.

நமது ஊழியத்தைத் தடுக்கும் வேறு சோலிகள், தொல்லைகள் நமக்குண்டா? அப்படியிருந்தால் நாம் யுத்தகளத்தில் இடறி விழுந்துவிடுவோம். அதுவுமல்லாமல் இந்துக்களிடத்தில் பேசும்போது நமது சாதுரியத்தையும், நிந்தையையும் காட்டி தர்க்கவாதத்தில் உண்மைப் பிசகை உபயோகிக்கிறதில் வழக்கப்பட்டிருக்கிறோமா? ஒருதரம் ஒரு பிரசங்கி ஒரு இந்துவுடன் தர்க்கம்பண்ணுகையில் பிரசங்கிக்குக் கோபம் வந்துவிட்டது. அந்த இந்து 'உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு' என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே; நீ இதற்குள் இப்படிக் கோபங்கொள்ளலாமா என்றான். பிரசங்கியார் அந்த வாக்கியத்தின் அர்த்தம் உனக்குத் தெரியுமா? ஒரு மிஷனெரியிடம் ஒருவன் இதே வாக்கியத்தைச் சொல்லி அவரைக் கன்னத்தில் அறைய அவர் திருப்பிக்கொண்டு அவன் கன்னத்தில் அடித்து இதுதான் அர்த்தம் என்று அவனுக்குச் சொல்லியனுப்பினார். ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தில் திருப்பிக்கொடுக்கிறதுதான் அதின் அர்த்தமென்று மூர்க்கமாகப் பேசினார். இந்த நிந்தை சத்தியம் என்னும் கச்சையல்ல. சில பிரசங்கிகள் இந்துக்கள் கேட்கிற சில கேள்விகளுக்கு உத்தரவு தெரியாதிருந்தாலும் எனக்குத் தெரியாதென்று சொல்வது இழிவு என்றெண்ணி வாய்ச்சாலகம்பண்ணித் தெரிந்ததுபோல் நடிப்பதுண்டு. இது சத்தியமென்னும் கச்சையல்ல.

2. நீதி என்னும் மார்க்கவசம் தரிக்கவேண்டுமோம். மார்க்கவசம் நெஞ்சைக் காக்கும் கருவி. கிறிஸ்துவின் நீதி நமக்கு இருக்கவேண்டும். சுயநீதிப் பரிசேயன் பொல்லாத ஆவிகளை ஓட்டான். நான் கிறிஸ்துவால் நீதிமானாக்கப்பட்டேன் என்று உணராதவன் பிறரை அதற்குட்படுத்த இயலான். நாம் பிறருக்கு நீதி செய்கிறோமா? கிரியையற்ற விசுவாசம் அநீதியே. இப்படியிருந்தால் அசுத்த ஆவியை ஒரு இந்துவின் மனதிலிருந்து ஓட்ட நம்மால் முடியாது. தேவாவியும் நம்மை உபயோகப்படுத்தார்.



3. சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தமென்னும் பாதரட்சையை நாம் அணிந்திருக்கவேண்டும். பூமியிலே சமாதானமென்று கிறிஸ்து பிறந்தபோது தூதர் பாடினர். தேவ சமாதானமும், சகோதர ஐக்கியமாகிய மனுஷ சமாதானமும், நமதுள்ளத்தில் உண்டா?

தன்னிலே சமாதானமற்றவன் இந்துக்களுக்குச் சமாதானத்தின் சுவிசேஷத்தைக் கூறுவதெப்படி? குடும்பப்பிரிவினை, ஜாதிப்பிரிவினை, சபைப்பிரிவினை முதலியவைகள் உடையவன் அஞ்ஞானியைத் தேவகுடும்பத்தில் சேர்த்து கிறிஸ்தவர்களோடு ஐக்கியப்படச் செய்வதெப்படி? தேவனைவிட்டு ஆதாம் ஏவாளையும், சகோதரனைவிட்டு சகோதரனையும், ஜாதியைவிட்டு ஜாதியையும் பிரித்த ஆதி சர்ப்பமாகிய மனுஷகொலைபாதகனுக்கு இவன் துணைசெய்யும் ஊழியனே ஒழிய அவனை எதிர்க்கும் கருவியாகான். இந்தியாவின் திருச்சபைகள் ஏக ஐக்கியப்படும்வரையில் இந்தியாவை மீட்பதற்கு வேண்டிய ஆயத்தமென்னும் பாதரட்சை யற்றவர்களாகவே விளங்குவோம். சகோதரனே, இந்துக்களுக்குச் செய்யவேண்டிய பிரசங்கங்களை ஜெபத்துடன் ஆயத்தப்படுத்துகிறாயா? அல்லது வாயில் வந்தபடி பேசுகிறாயா? ஆயத்தமென்னும் பாதரட்சையைத் தரித்திருக்கவேண்டுமே.

4. விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமாம். நமது விசுவாசத்தின் அஸ்திபாரமும், இரட்சண்ய கன்மலையும், இரட்சிப்பின் அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவின் மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும்பற்றியும், அவரது அற்புதப்பிறப்பு, பரிசுத்த ஜீவியம், பிராயச்சித்தமரணம், உயிர்த்தெழுதல், பரலோக ஆசாரியத்துவம் முதலிய நித்திய சத்தியங்களைக்குறித்தும் ஏதாவது சந்தேகம் நமது மனதிலிருந்தால், விசுவாசக்கேடகம் அற்றவர்களாவோம். அது மாத்திரமல்ல பிதாவையும், பரிசுத்த ஆவியாகிய தேவனையும், அவரது திருக்கிரியைகளையும்பற்றி நமது இருதயத்தில் நிச்சயமற்றிருந்தாலும் அல்லது நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோமா? அவரால் மறு ஜனனம் அடைந்திருக்கிறோமா? என்பதைப்பற்றி சந்தேகமுள்ளவர்களாயிருந்தாலும் நாம் விசுவாசக்கேடகம் அற்றவர்களாவோம்.

மேற்சொன்ன காரியங்களைக்குறித்து வேதம் சொல்லுவதைவிட உலகஞானம் போதிக்கும் மாறுபாடான போதனைகள் நமது இருதயத்திலிருந்தாலும், பழையேற்பாட்டுப் பக்தர்களும், நமது இரட்சகரும், அவரது அப்போஸ்தலர்களும், விசுவாசித்து வந்த காரியங்களைக் குறித்து அவற்றிற்குப் பேதமானதும் எதிரிடையானதுமாகிய உத்தேச அபிப்பிராயங்கள் நமது கருத்திலிருந்தாலும் நாம் விசுவாசக் கேடகத்தைப் பிடித்தவர்களல்ல.

5. இரட்சண்யமென்னும் தலைச்சீராவைத் தரித்துக்கொள்ள வேண்டுமோம். கிறிஸ்துவினாலுண்டான நீதிமானாக்கப்படுதல், கோபாக்கினையினின்றும் மீட்பு அல்லது பாவமன்னிப்பு என்னும் இரட்சிப்பைப்பற்றியாவது, பாவவல்லமையினின்று மீட்பு அல்லது பரிசுத்த ஜீவியம் என்னும் இரட்சிப்பைப்பற்றியாவது, பாவமின்மையினின்று மீட்பு அல்லது உயிர்த்தெழுதல் என்னும் பூரண இரட்சிப்பைப்பற்றியாவது பிரசங்கிக்குச் சந்தேகமிருந்தால் அவன் தலை இரட்சண்யமென்னும் சீராவை அணிந்ததல்ல. நான் இரட்சிக்கப்பட்டேன், அனுதினமும் இரட்சிக்கப்பட்டுக்கொண்டுவருகிறேன், இனி இரட்சிக்கப்படுவேன் என்ற திரிகால இரட்சிப்பைப்பற்றி அனுபவம் இல்லாதவன் 'நீ இரட்சிக்கப்படு' என்று அஞ்ஞானிக்குச் சொல்வது, குருடனானவன் சத்த வர்ணங்களைப்பற்றியும், செவிடன் சத்த சுரங்களைப்பற்றியும் படித்துக்கொடுக்க முயன்றதுபோலாம். 'நான் நிச்சயமற்றவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்' என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். சகோதரனே, உன் இரட்சிப்பைப்பற்றி நீ நிச்சயமற்றவனாயிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் உன்னைக்கொண்டு எந்தப் பாவியை இரட்சண்யத்துக்கு உட்படுத்தப் பிரியப்படுவார்?

முன் சொல்லிவந்த சர்வாயுதவர்க்கத்தின் ஐந்து கருவிகளும், கிறிஸ்தவ ஜீவியத்தின் பஞ்ச படைக்கலங்களாய் அல்லது தன்னைக் காக்கும் ஆயுதங்களாயிருக்கின்றன. இவைகளில் ஒன்று குறைவுபட்டாலும் இந்துக்களைப் பிடித்திருக்கும் பொல்லாங்கன் நம்மால் ஜயிக்கப்படான். இதற்கீடாக அவனே நமது இருதய அரணுக்குள் அல்லது திருச்சபைக் கோட்டைக்குள் நுழைந்து தனது அக்கினியாஸ்திரங்களால் நம்மைச் சின்னாப்பின்னப்படுத்திவிடுவான் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தியாவின் சுவிசேஷகர்களே, இந்தியாவின் கிறிஸ்தவ சபையே, மேற்சொன்ன பொல்லாங்கனால் கட்டப்பட்ட இந்துமதக் கோட்டையைத் தகர்த்து அவன் சேனையாகிய ஆத்துமாக்களை நமது சேனாபதியாகிய கிறிஸ்துவின் சிறைகளாக்கி அவனது பாவம், அசுத்தம், பகை, பிரிவினை, உலகசிந்தை, பொருளாசை, சுகபோகம், சிற்றின்பம், தன்னயம், அவிசுவாசம், அஞ்ஞானம் முதலிய பேயின் எதுகரங்களைச் சுட்டெரிக்கிறீர்களா? அல்லது அவன் உங்கள் இரட்சிப்பின் கோட்டைக்குள் நுழைந்து தன்னுடைய தீய ஆயுதங்களை நமது கையில் கொடுத்து நாம் அவற்றை உபயோகிக்கும்படி செய்து அவனது அக்கினியாஸ்திரங்களால் நமது பஞ்ச அரணாயுதங்களாகிய சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம் முதலிய இரட்சண்ய நிச்சயங்களைச் சுட்டெரித்துவருகிறானா? அப்படியிருந்தால் நாம் இந்தியாவைக் குணப்படுத்தமாட்டோம்.

(இன்னும் வரும்)

---



# A Sermon Outline

## விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கற் பரணி

இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத். 26. 13.

இயேசுவானவருக்கு இரண்டுமுறை தைலாபிஷேகம் செய்யப்பட்டதாகச் சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். லூக். 7. 36-48-ல் சொல்லப்பட்டிருப்பது முதல் சம்பவம். இன்னொன்று மத். 26. 1-13; மாற். 14. 3-9; யோவா. 12. 1-8. பார்க்கவும்.

இயேசுவானவர் எருசலேமுக்குப் பவனிபோனதற்கு முந்தின நாள் சாயங்காலம் பெத்தானியா ஊரில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் நடந்தது. மார்த்தாளின் சகோதரியாகிய மரியாளுக்குச் சொல்லப்பட்ட இந்த அருமையான வார்த்தைகள் இந்நாள் வரைக்கும் நிறைவேறிவருகிறது.

இரட்சகரிடம் புகழ்ச்சியைப் பெற்றவர்கள் வெகு சிலர். இந்த அம்மாளுக்குக் கிடைத்த புகழ்ச்சி மிகச் சிறந்ததே. இப்படிப்பட்ட புகழ்ச்சியை ஆண்டவர் இவளுக்குக் கொடுக்கும்படி இவள் செய்த கிரியையில் காணப்பட்ட விசேஷம் என்ன?

I. மரியாள் அளித்த கொடை விசேஷமானது.

(1) இதை முந்நூறுபணத்துக்கு விற்கலாம் என்று யூதாஸ் சொல்லுகிறான். 300 பணம் என்பது ஏறக்குறைய ரூ. 200-க்குச் சரி. ஒரு மனுஷனுடைய ஒரு வருஷத்துச் சம்பளம்.

(2) இவ்வளவு தொகையை மரியாள் எப்படிச் சம்பாதித்தாள்? அவள் ஐசுவரியமுள்ளவள் என்று சொல்ல ஏதுவில்லை. ஏழையாயிருந்தாள் என்றே அநுமானிக்கவேண்டியது. 'தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டது' முதல், இதுவரைக்கும் அவர்மீது வைத்த அன்பினால் கொஞ்சம் கொஞ்சமாய் இந்தப் பெருந்தொகையைச் சேர்த்திருக்கவேண்டும். 'இவள் தன்னாலியன்றதைச் செய்தாள்.'

(3) அவள் தெரிந்துகொண்ட பொருள் கவனிக்கப்படத்தக்கது. பணம், பொருள் முதலிய வேறெந்த விலையுயர்ந்த சாமான்களும் அவருக்குப் பயன்படா. 'அவளை விட்டுவிடுங்கள். என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்' என்றார்.

(4) அவருடைய சீஷர்களும், அவரிடம் வந்த மற்ற ஜனங்களும், இரட்சகரிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள விரும்பினார்கள். இந்த அம்மாளோ அவருக்குக் கொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள்.

'வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்' என்பது நமதாண்டவர் வார்த்தை.

II. மரியாளிடத்தில் காணப்பட்ட நோக்கம் மேலானது.

(1) தான் செய்கிறதை இயேசுவுக்குச் செய்யவேண்டும் என்பதே அவளிடம் குடிகொண்டிருந்த எண்ணம். 'தரித்திரருக்குக் கொடுக்கலாமே' என்பது மற்றவர்களுடைய அபிப்பிராயம்: தரித்திரருக்குக் கொடுக்கப்படாதென்பது இவளுடைய எண்ணமல்ல. ஆனால் அவர்களைவிட இரட்சகரைப்பற்றிய எண்ணமே அவளுடைய வாஞ்சையும் எண்ணமுமாயிருந்தது.

(2) 'என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது.' இப்படிப்பட்ட நோக்கம் அச்சமயத்தில் அவளிடத்திலிருந்தது என்று நாம் சொல்லக்கூடாவிட்டாலும், அவளுடைய செய்கை தீர்க்கதரிசனமாக ஆவியானவரால் ஏவப்பட்டதென்று நாம் நினைக்கத்தகும். தம்முடைய மரணத்தைக்குறித்து இவர் பேசினதை அடிக்கடி கேட்டும் விசுவாசித்துமிருக்கலாம். 'இவைகள் உமக்குச் சம்பவியாதிருப்பதாக' என்பது சீஷருடைய எண்ணமாயிருந்தாலும், மரியாளோ; உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறவரை விசுவாசித்து, அவர் மரணத்தை எதிர்நோக்கியிருக்கலாம்.

ஆகையால் இரட்சகரை மகிமைப்படுத்துவதிலும், அவருடைய மரணத்தைத் தெரிவிப்பதிலும் இவள் செய்கை மிகவும் விசேஷித்ததே.

இரட்சகர்பேரில் வைக்கும் பூரண அன்புடனே நாம் செய்யும் கிரியைகளையெல்லாம் அவர் அங்கீகரித்து நாம் எண்ணினதற்கு மேலான பிரகாரமாய்ச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்ளுகிறார். மரியாள் செய்தவண்ணம் நாம் செய்யக்கூடாவிட்டாலும் மரியாளிடம் காணப்பட்ட அன்பின் அனல் நம்மிடத்திலிருப்பது அவசியம். 'மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்' என்பார். மத். 25. 40.

III. இவள் செய்தவிதம் விசேஷமானது.

(1) வெள்ளைக்கற் பரணியை உடைத்து அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள் (மாற். 14. 3). அவளுக்குண்டாயிருந்த



வாஞ்சை கவனிக்கப்படத்தக்கது. இரட்சகருக்குக் கொடுப்பதில் அவள் ஒன்றையும் மீத்துவைக்கவில்லை. அவருடைய அன்புக்கு ஒன்றும் ஈடாகாது. அவளுடைய ஆவல் பெரிது.

(2) தன்னுடைய ஆவலைக் காண்பிப்பதில் மற்ற மனிதரின் அபிப்பிராயத்தைக் கவனிக்கவேயில்லை. அவர்கள் புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் அதைப்பற்றி அவளுக்கு அக்கறையில்லை. மற்றச் சீஷர்களுக்கும் விசேஷமாய் யூதாசுக்கும் அவள் செய்தது புத்தியீனமாயும் வீண் செலவாயும் காணப்பட்டது. ஆனால் அவருக்கோ அது பிரியமாயிருந்தது. அவர் ஏற்றுக்கொள்ளும் வண்ணம், அவர் நாமத்துக்கு மகிமையாயிருக்கும்படி செய்வதே அவள் பிரியம்.

நாம் இரட்சகருக்குக் கொடுக்கும் விஷயத்தில் காட்டும் வாஞ்சை எவ்வளவு? மனுஷர் பார்வையில் மெச்சிக்கொள்ளத்தக்க பிரகாரம் கொடுப்பது எவ்வளவு சாதாரணமாயிருக்கிறது. அவருக்குப் பிரியமானபிரகாரம் கொடுப்பதே அவருக்கு மகிமை. அதையே விரும்புகிறார். மத். 6. 3.

நாம் ஆண்டவருக்குக் கொடுப்பது எவ்வளவு? எத்தன்மையானது? அதைக் கொடுப்பதில் நம்முடைய நோக்கம் என்ன? எப்படிக் கொடுக்கிறோம்? அவருக்குப் பிரியமாகவும் அவர் நாமத்துக்குப் புகழ்ச்சியாகவும் கொடுக்கவேண்டுமானால் மரியாளிடத்தில் காணப்பட்ட நற்குணங்கள் நம்மிடத்திலும் காணப்படவேண்டும். அப்பொழுது அவர் அதை அங்கீகரிக்கிறதுமாத்திரமல்ல நாம் நினைத்ததற்கு அதிகமாய் ஏற்றுக்கொள்வார். 2 கொரி. 9. 6, 7.

## A Bible Reading—The Trial of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

### கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

II

### அன்னாவும் காய்பாவும்

**மதவிசாரணை.** மத். 26. 57-68; மாற். 14. 51-65; லூக். 22. 54, 63-71; யோவா. 18. 12-14, 19-24.

கெத்செமனே தோட்டம் ஒலிவமலையின் சார்பிலிருந்தது. ஒலிவமலையின் பக்கமாயிருந்த கீதரோன் ஆற்றின் வழியாய் இயேசுவை

நடத்தி, பிறகு மலையின்மீது ஏறி நகரத்துக்குக் கொண்டுபோனார்கள். அவ்விடத்திலிருந்து அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்துக்குக் கொண்டுபோனார்கள்.

மாற். 14. 51, 52. இந்த வாலிபனைக்குறித்து மாற்கு சுவிசேஷகன் மாத்திரம் சொல்லியிருக்கிறதினால், இவன் அவனேயென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**இயேசுவானவர் இரண்டுவகையான விசாரணைக்குட்பட்டார்.**

(1) யூதேயா தேசம், சிசேரியாவில் குடியிருந்த ஒரு ரோம அதிபதியின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. எருசலேம் அதிக தூரமாயிருந்ததினிமித்தம், இந்த ரோமதுரை காலாகாலங்களில் இவ்விடம் விஜயஞ்செய்துகொண்டிருந்தான். ஆதலால் இந்த அதிகாரியால் இயேசு விசாரிக்கப்படவேண்டியதாயிருந்தது.

(2) சனதிரீம் சங்கத்தாருக்கு மார்க்க சம்பந்தமான விஷயங்களை விசாரிக்கவும், அக்குற்றவாளிகளைச் சிட்சிக்கவும் அதிகாரமிருந்தது. ஆனால் கொலைத்தீர்ப்புச்செய்ய அதிகாரமில்லை. மார்க்கத்துக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தாரென்று அந்தச் சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டார்.

**இயேசுவானவர் முதலாவது அன்னாவிடம் கொண்டுபோகப்பட்டார். யோவா. 18. 13.**

அன்னா அதிக விருத்தாப்பியன். 20 வருஷங்களுக்குமுன் பிரதான ஆசாரிய வேலையைப் பார்த்தவன். இவனுடைய 5 குமாரர்களும் முறையே பிரதான ஆசாரிய வேலையைப் பார்த்துவந்தார்கள். இக்காலத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பா, அன்னாவுக்கு மருமகன். இவ்விதமாய் அன்னாவின் குடும்பம் அதிக செல்வாக்குள்ளது. என்றாலும் இந்தக் குடும்பம் அதிக கேடுள்ளதும் ஜனங்களால் பகைக்கப்பட்டதாயுமிருந்தது. இவர்கள், சுமக்க முடியாத கோவில் வரியை ஜனங்கள்மேல் சுமத்தினார்கள். ஒருவேளை, தேவாலயத்தில் நடத்தின வர்த்தகத்தால் அதிக லாபத்தை அடைந்திருக்கலாம். மாற். 11. 15-ல் சொல்லியிருக்கிற காரியத்தினிமித்தம், அன்னாவின் குடும்பத்தார் இயேசுவை அதிகமாய் வெறுத்தார்கள்.

**மதவிசாரணையில் அடங்கிய மூன்று படிகள்.**

(1) அன்னாவின் முன் விசாரிக்கப்பட்டது. இது ஒழுங்கான விசாரணையல்ல. அன்னாவுக்கு அதிக செல்வாக்கிருந்தும், அவன் பிரதான ஆசாரியனல்ல.

(2) காய்பாவின் விசாரணை. இது இராத்திரியில் விசாரிக்கப்பட்டதால், நியாயமான விசாரணையல்ல. இராத்திரியில் விசாரித்த காரணம்,



இயேசுவைக் குற்றப்படுத்த இடையூறாயிருந்த எல்லாவற்றையும் மேற்கொள்ளவும், இச்சம்பவம் பட்டணத்தில் பரவுமுன் இயேசுவை ரோமர் கையில் சங்கடமில்லாமல் ஒப்புக்கொடுக்கவுமே.

(3) காய்பாமுன் மறுவிசாரணை. இது காலையில் நடந்ததற்குக் காரணம், இரவில் நடந்த அநீதியுள்ள விசாரணையைப் பிரமாணத்துக்குட்படுத்தத்தான். மத். 27. 1. லூக். 22. 66-71.

**விசாரணையின் ஒழுங்கு.**

(1) கிறிஸ்துவின் உபதேசத்தைப்பற்றி விசாரணை செய்தார்கள் (யோவா. 18. 19-23.). அவர் இரகசியத்தில், தந்திரமாய்க் காரியத்தை நடப்பிக்கிறவரென்று ரூபிக்கப் பிரயாசப்பட்டார்கள். இயேசு அன்னாவினிடத்தில், ‘என் உபதேசத்தைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும். நான் வெளியரங்கமாய்ப் பேசினேன்’ என்று சொன்னார்.

(2) பிறகு சாட்சிகள் கூப்பிடப்பட்டார்கள். நியாயஸ்தலத்தில் உண்டான குழப்பத்தை மனோபாவனையில் பார்ப்போமாக. சாட்சிகளைக் கூப்பிட்டுச் சொல்லிக்கொடுத்தார்கள். பிறகு ஒருவர் சொன்னதை ஒருவர் மாற்றி வித்தியாசத்துக்குட்படுத்தினார்கள்.

இயேசுவானவர் மௌனத்தோடு நின்றார். அவருடைய சாந்தமும், மௌனமும், அவரை எவ்வளவாய்த் தாங்கள் அநியாயமாய் நடத்தினார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தியிருக்கும்.

(3) காய்பா கிறிஸ்துவை ஆணையிட்டுக் கேட்டான். அவரைக் குற்றவாளியென்று தீர்க்க முடியவில்லையென்று கண்டு கோபமூண்டு எழுந்திருந்து ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான் (மத். 26. 62, 63). யூதருக்குள் நியாயாதிபதி சத்தியம்பண்ணலாமேயன்றி, குற்றவாளிகள் சத்தியம்பண்ணுகிறதில்லை. இந்தக் கேள்விக்கு இயேசுவானவர் உத்தரவு சொல்லுகிறார். ஏனென்றால், இக்கேள்விக்கு உத்தரவு சொல்லாமல் மௌனமாயிருப்பது தாம் தேவனுடைய குமாரன் என்று முந்தி சொன்னதை மறுப்பதைப்போலிருக்கும். ஆதலால் இயேசு உடனே, நீர் சொன்னபடிதான் என்று சொல்லி, தான் தேவகுமாரன் என்று அதிக பரிஷ்காரமாய் உரிமை பாராட்டுகிறார். மத். 26. 64.

**விசாரணையின் அநீதங்கள்.**

1. விசாரணை இரவில் நடந்தது.
2. குற்றஞ்சாட்டுதல் ஒழுங்காய் நடக்கவில்லை.
3. அவருடைய நியாயாதிபதிகள் குற்றஞ் சாட்டுகிறவர்களாயுமிருந்தார்கள். மத். 26. 59; மாற். 14. 55.

4. யேசு மரணத்துக்குப் பாத்திரர் என்கிற தீர்ப்பானது சாட்சிகள் வாக்குமூலம் கேட்கும்முன் தீர்மானிக்கப்பட்டது.

5. யேசுவானவர் ஒரு சேவகனால் கன்னத்தில் அறையப்பட்டார் (யோவா. 18. 22). ஆனால் அந்தச் சேவகன் கண்டிக்கப்படவில்லை.

6. இவருக்கு விரோதமாய்ச் சொன்ன இரண்டு பொய்ச்சாட்சிகளின் வாக்குமூலம் ஒற்றுமைப்படுகிறதைக் கவனிப்போமாக. 'இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்' (யோவா. 2. 19-22) இயேசு இப்படிச் சொன்னது தேவாலயத்தை இடித்துப்போடுங்கள் என்று சொன்னதாகக் குறிக்குமானால், அவர் எழுப்புவதையுங் குறிக்குமல்லவா?

7. தீர்ப்புக்குப்பின் நடந்த அநியாயங்கள். மத். 26. 67; மாற். 14. 65; லூக். 22. 63.

சனதிரீம் சங்கத்தார் இந்த அநியாயம் நடக்கும்படி ஒருவேளை சம்மதித்திருக்கலாம். சட்டப்படி, மரணத்தீர்ப்பை ஒருநாள்மட்டும் நிறுத்திவைக்கவேண்டும். மேலும், இந்தத் தீர்ப்பு சம்பந்தமாக சனதிரீம் சங்கத்து ஒவ்வொரு அங்கத்தாரிடமிருந்தும் சம்மதச்சீட்டு கையெழுத்தில் வாங்கப்படவேண்டும். கிறிஸ்துவைக் குற்றப்படுத்தவேண்டுமென்கிற ஆத்திரத்தினால் இவைகளை மறந்துபோனார்கள்.

**கேள்வி:** அன்னாவும் காய்பாவும் யேசுவானவர் ஒரு தேவதூஷணக்காரர் என்று நம்பவில்லையா? ஒருவேளை நம்பி இருக்கலாம். என்றாலும், அவர்கள் குற்றம் குற்றமே. பேராசையும் தன்னயமும் அவர்கள் கண்களைக் குருடாக்கிற்று.

பாவத்தின் பயங்கரமான பலாபலன்களைக் கவனித்துப் பாருங்கள். பாவம் மனிதருடைய கண்களைக் குருடாக்கிப்போடுகிறது.

(இன்னும் வரும்.)

## Paul and Christ

## பவுலும் கிறிஸ்துவும்

'நான் அவரையும் அறிகிறதற்கு.' பிலி. 3. 10.

1. இந்த வாக்கியத்தில் பவுலுக்குத் தெரிந்த சுவிசேஷத்தின் சாரம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுவிசேஷங்களின் ஆரம்பம், நிறைவு, மகிமை, முடிவு ஆகிய இவையெல்லாம் இயேசுகிறிஸ்துவைப் பூரண மனதோடே அறியும் அறிவேயாம். இயேசுவை அறிவது வீணான வாஞ்சையல்ல. தூரதேசங்களிலுள்ள கவிஞர் முதலிய வித்துவான்களை அவர்கள் இயற்றின செய்யுள்கள் முதலியவற்றினால் அறிவதற்கு ஒருவன் விரும்பினாலும் அந்த வித்துவான்களை அவன்



அறியமுடியாது. இயேசுவை அறிய விரும்புவோர் பூரண அறிவை அடையலாம். தன் சொந்த வீட்டிலே இருக்கும் மகா பக்தன் ஒருவன் வணக்கத்துடனே அவரை எப்படி அறியலாமோ அப்படியே பரி. பவுல் தமது ஆண்டவரை அறிந்தான். 'வீணான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்கள் வீணராவார்கள்' (2 இரா. 17. 15). அப்படியே உண்மையுள்ளவரைப் பின்பற்றுகிறவன் உண்மையுள்ளவனாவான். குரு எப்படியோ, சீஷனும் அப்படியே. பரி. பவுல் இயேசு தன்னை அழைத்த நாள்முதல் அவரைப் பின்பற்றினதினாலே அவன் தனது ஆண்டவரைப்போலானான். அவனுக்கும் இயேசுவுக்குமுள்ள ஒற்றுமையை அவன் எழுதின நிருபங்களிலுள்ள பல வசனங்களில் நாம் காணக்கூடும்.

கிறிஸ்தவனான பவுலின் சரித்திரம் எல்லாம் ஒரே வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. அது, 'பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' (கலா. 2. 20). இயேசு தம்மைக்குறித்து அருளின மொழிகளிலும், பரி. பவுல் தன்னைக் குறித்துச் சொன்ன வாக்கியங்களிலும் இந்த ஞான ஐக்கியம் தோன்றுகிறது.

2. (i) இயேசு: 'நான் என் பிதாவின் நாமத்தினால் வந்தேன்.' யோவா. 5. 43.

**பவுல்:** 'கிறிஸ்து எனக்கு ஜீவன்.' பிலி. 1. 21.

(ii) இயேசு: 'நான் பிதாவினால் பிழைத்திருக்கிறேன்' யோவா. 6. 57.

**பவுல்:** 'அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.' கலா. 2. 20.

(iii) இயேசு: 'மனுஷகுமாரன் ஊழியம்செய்யும்படி வந்தார்.' மத். 20. 28.

**பவுல்:** 'நான் என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.' 1 கொரி. 9. 19.

(iv) இயேசு: 'ஆடுகளுக்காக என் ஜீவனைக் கொடுக்கிறேன்.' யோவா. 10. 15.

**பவுல்:** 'என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாகவேண்டும்.' ரோ. 9. 3.

3. நோவு, துக்கம், உபத்திரவம், மரணம் முதலியவைகளில் இயேசுவுக்கும் பரி. பவுலுக்கும் அதிக ஒற்றுமையிருக்கிறது.

(i) இயேசு: 'அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார்; அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே பயத்தோடே போனார்கள்.' மாற். 10. 32.

பவுல்: 'அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரம் அல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்றார்.' அப். 21. 13.

(ii) இயேசு: 'மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவன் என்று தள்ளப்பட்டு, கொலைப்பட்டிருக்கவேண்டும்.' மாற். 8. 31.

பவுல்: 'கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறது.' அப் 20. 23.

(iii) இயேசு: 'சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும்.' மத். 10. 25.

பவுல்: 'கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்.' கலா. 6. 17.

(iv) இயேசு: 'அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.' யோவா. 8. 59.

பவுல்: 'பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப்போனான் என்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்.' அப். 14. 19.

(v) இயேசு: 'இயேசுவைக் கட்டிக்கொண்டுபோய், பிலாத்துவினிடத்தில் (அவரை) ஒப்புக்கொடுத்தார்கள்.' மாற். 15. 1.

பவுல்: 'அந்தப்படி அவர்கள் அவனை (பவுலை) வாரினால் அடிக்கக் கட்டும்போது.' அப். 22. 25.

(vi) இயேசு: 'இயேசுவை வாரினால் அடிப்பித்தான்.' மத். 27. 26.

பவுல்: 'யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்.' 2 கொரி. 11. 24.

(vii) இயேசு: 'போர்ச்சேவகரில் ஒருவன் இயேசுவை ஒரு அறை அறைந்தான்.' யோவா. 18. 22.

பவுல்: 'பிரதான ஆசாரியனாகிய அனனியா இவன் (பவுலின்) வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான். அப். 23. 2.

(viii) இயேசு: 'அவர் மதிமயங்கி யிருக்கிறார்.' 'இவன் பயித்தியக்காரன்.' மாற். 3. 21; யோவா. 10. 20.



பவுல்: 'பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது.' அப். 26. 24.

(ix) இயேசு: 'இவன் ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம்.' லூக். 23. 2.

பவுல்: 'இந்த மனுஷன் சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவன்.' அப். 24. 5.

(x) இயேசு: 'மனுஷகுமாரன் அவமதிக்கப்படுவார்.' மாற். 9. 12.

பவுல்: 'இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவு மானோம்.' 1 கொரி. 4. 13.

(xi) இயேசு: 'சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.' மத். 26. 56.

பவுல்: 'எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்.' 2 தீமோ. 4. 16.

(xii) இயேசு: 'இவனை அகற்றும் அகற்றும்.' யோவா. 19. 15.

பவுல்: 'இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து அகற்றவேண்டும்.' அப். 22. 22.

4. பரி. பவுல் கடைசிக்காலத்தில் சிறையிலேயிருந்து தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், தனது ஜீவிய சரித்திரம் எல்லாம் பார்த்து அதைக்குறித்துப் பேசித் தனக்கும் தனது ஆண்டவருக்கும் உள்ள ஒற்றுமையை அதில் காண்பிக்கிறான்.

'நான் தேகத்தைவிட்டுப் பிரியும்காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.' 2 தீமோ. 4. 6, 7.

## Fellowship — A Word-Study

### ஐக்கியம்

புதிய ஏற்பாட்டிலே, மூலபாஷையில் ஐக்கியத்தைக் குறிக்கிற பதம், ஏறக்குறைய 20 தடவை வருகிறது. அது, நமது தமிழ் வேதத்தில் வெவ்வேறாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், சாதாரணமாய் ஐக்கியம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், 2 கொரி. 8. 4-ல் பங்கு பெறுதல் என்றும், பிலி. 1. 3-ல் உடன்படுதல் என்றும், அப். 2 42-ல் அந்நியோந்நியம் என்றும் சொல்லப்படும்.

மானிடராகிய நமக்கு, ஐக்கியமானது அத்தியாவசியம் என்று நாம் சொல்லலாம். 'தன்னந்தனியனாக விருக்க ஆசிக்கிறவன், தேவ

யிருக்கவேண்டும் அல்லது காட்டு மிருகமாயிருக்கவேண்டும்' என்று ஓர் பெரியவர் சொன்னார். மற்றவர்களோடு சம்பந்தப்படுவது, நமக்கு இயல்பாக இருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்துக்கு ஐக்கியமானது ஆணி வேராயிருப்பதினால், அதைப்பற்றிச் சிந்திப்பது உசிதம்.

மூலபாஷையிலே இந்தப் பதம், நெருங்கிய சம்பந்தத்தையும், பங்கு பெறுதலையும், கூட்டாளியாயிருத்தலையும் குறிக்கிறது.

**I. நம்முடைய ஐக்கியம் திரியேக தேவனோடிருக்கிறது. 1 யோவா. 1. 3; பிலி. 2. 1; 2 கொரி. 13. 14.**

*(a)* நாம் பிதாவாகிய தேவனோடு ஒப்புரவாகி, அவரோடு ஐக்கியமுள்ளவர்களாயிருப்பதினால், அவரை அப்பா பிதாவே என்று சொல்லும்படியான சிலாக்கியத்தைப் பெறுகிறோம்.

*(b)* குமாரனாகிய இயேசுவோடு ஐக்கியமாயிருந்து அவரோடு தமது இராச்சியத்துக்கும் மகிமைக்கும் உடன்சுதந்தராயிருக்கிறோம்.

*(c)* பரிசுத்த ஆவியோடு ஐக்கியப்பட்டு, அவர்மூலமாய்ச் சகாயத்தையும், பெலனையும், ஆறுதலையும் அடைகிறோம். இப்படித் திரியேக தேவனோடு ஐக்கியமுள்ளவர்களாயிருப்பது நமக்கு எத்தனையோ மேலான சிலாக்கியம். பாவிகளாகிய நாம் மகிமையுள்ள தேவனோடு பங்காளிகளாயிருக்கிறோம். முந்தின காலத்தில் தேவன் எப்படி மோசேயோடு முகமுகமாய்ப் பேசினாரோ அப்படியே நம்மோடும் பேசுவார். அவர் தம்மையும் தமதன்பையும் ஞானத்தையும் வல்லமையையும் நமக்கு வெளிப்படுத்துவதோடு அவைகளை நமக்கு ஈந்தருளியுமிருக்கிறார்.

**II. ஐக்கியத்தின் உற்பத்தி.**

1 கொரி. 1. 9. தேவன் நம்மை அழைக்கிறார்: நாம் அவரோடு ஐக்கியப்படுவது அவருடைய செயலே. அப்படிக்கில்லாவிட்டால், யார் அப்பேர்ப்பட்ட மேலான சிலாக்கியத்தை அடையத் துணிவான்? இதெல்லாம் தேவகிருபைதான். 'மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடி அப்படிச் செய்தார்.' 1 கொரி. 1. 29.

**III. ஐக்கியத்தின் பலன்.**

1. எபே. 5. 11. நாம் அவரோடு ஐக்கியமாயிருக்கத் துர்க்கிரியைகளோடு சம்பந்தப்படவே முடியாது. அது கூடாதக் காரியமாகும் (2 கொரி. 6. 14). நாம் ஒளியின் பிள்ளைகளாயிருந்தால், இருளோடு ஐக்கியப்படுவது நமக்கு அசாத்தியம். தேவன் எதிர்க்கிற காரியங்கள் எவைகளோ, அவைகளை நாமும் எதிர்ப்போம்.



2. 1 யோவா. 1. 6, 7. துன்மார்க்கத்தை விட்டுவிடுவது போதாது: சன்மார்க்கத்தில் நடக்கவேண்டும் (சங். 34. 12-14; மத். 12. 43-45. காண்க.). அவரோடு ஐக்கியப்பட்டால் அவரைப்போல் ஒளியிலே நடப்போம். அவர் எதிர்க்கிறவைகளை நாம் எதிர்ப்பதுமன்றி, அவர் செய்கிறவைகளையும் செய்வோம். நீதியின் கனிகளைக் கொடுப்போம். யோவா. 15. 1-16. காண்க.

3. 1 யோவா. 1. 7. ஒருவரோடொருவர் ஐக்கியமுள்ளவர்களாயிருப்போம் (ரோ. 12. 10). கிறிஸ்தவர்கள் எல்லாரையும் இணைத்துக் கொள்ளுகிற கட்டானது கிறிஸ்துவே. ஜாதிவித்தியாசங்களையும் நம்மிடத்திலிருக்கிற பேதாபேதங்களையும் பாராமல், அவரோடு ஐக்கியப்பட்டவர்களாயிருந்தால், அந்த ஐக்கியத்தினால், நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.

*(a)* பிலி. 1. 5. சுவிசேஷ பிரபல்லியத்துக்கு இந்த ஐக்கியம் அவசியம். நாம் பல பட்டாளங்களில் சேர்ந்தவர்களாயிருந்தும் ஒரே சேனையிலே யுத்தஞ்செய்து உலகத்தை ஜயிக்கவேண்டும். அந்தந்தச் சபையார் மற்ற சபையாரோடு ஐக்கியமற்றவர்களாயிருந்ததினால், சுவிசேஷ பிரசித்திக்கு எவ்வளவோ தடை உண்டாயிற்று.

*(b)* 2 கொரி. 8. 4. சுவிசேஷ பிரபல்லியத்தில் மாத்திரமல்ல, சகலவிதமான நன்மை செய்வதிலும் நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்படவேண்டும்.

4. பிலி. 3. 10. நமது ஆண்டவராகிய இயேசுவை சிலுவைபரியந்தம் நடத்தின மனது நம்மிடத்திலும் இருக்கவேண்டும். அவர் எப்படி நிந்தையையும், பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும், சாந்தத்தோடும் பொறுமையோடும் சகித்தாரோ, அப்படியே நாமும் அவைகளைச் சகிக்கவேண்டும். மத். 16. 24.

**IV. ஐக்கியத்தை வெளிப்படுத்துகிற விதம்.**

1 கொரி. 10. 16. திரு இராப்போஜனப் பந்தியில் நாம் சேரும்போது அவருக்கும் நமக்கும் இருக்கிற இந்தத் திவ்விய ஐக்கியத்தை விசேஷித்த பிரகாரமாய் வெளிப்படுத்துகிறோம். சகோதர ஐக்கியத்தையும் காட்டுகிறோம். நாம் உட்கொள்ளும் உணவு எப்படி நம்முடைய சரீரத்தோடு சம்பந்தப்பட்டு நம்மைப் பலப்படுத்துகிறதோ, அப்படியே கிறிஸ்து நமது விசுவாசத்தினால் நம்மோடு ஐக்கியப்பட்டு, நம்மைப் பலப்படுத்திப் பிழைப்பூட்டுகிறார்.

ஆதலால் நாம் இப்படிப்பட்ட ஐக்கியமுடையவர்களாகி அவரை ஒருபோதும் விட்டுப் பிரிக்கப்படாதபடி உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தினாலே அவரைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.

## Races

## பந்தயம்

கிரேக்கர்கள் குதிரைப்பந்தயம், ரதமீது சவாரிப்பந்தயம், ஆட்கள் ஓடும்பந்தயம், மல்யுத்தம் முதலிய விளையாட்டுக்களைக் கொண்டாடி வந்தார்கள்.

நாலு வருஷத்துக்கொருதடவை கொண்டாடப்படுகிற ஒலிம்பிக் (Olympic) என்னும் பந்தயவோட்டம் எல்லாவற்றிலும் விசேஷமானது. இவைகளுக்காகச் சகல ராஜ்யங்களிலுமிருந்து இந்த விளையாட்டுக்களில் அதிக திறமையுள்ளவர்கள் பந்தயம் பெறும்படி ஏராளமாய் வருவார்கள். இவைகளைத்தவிர இந்தமாதிரியான பந்தய ஓட்டங்கள் எபேசு, கொரிந்து முதலிய பட்டணங்களிலும் நடந்துவந்தன. எந்த ஊரிலும் பந்தயச் சாலைகளிருந்தன. பரி. பவுல் பந்தய ஓட்டம் ஓடுகிறவர்கள் நெடுங்காலமாய் அதில் தங்களை அப்பியாசப்படுத்த வேண்டும் என்றும் (1 தீமோ. 4. 7, 8; 2 தீமோ. 2. 5) கால் ஓட்டம் என்றும் (2 தீமோ. 4. 7; பிலி. 3. 12-16; ரோ. 9. 16; கலா. 2. 2; 5. 7; பிலி. 2. 14; அப். 20. 24) திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறான்.

இந்த ஓட்டங்களில் ஜயிக்கும் பந்தயப்பொருள் ரத்தினாதிகள் பதித்த கிரீடமல்ல, இலைகளினால் செய்யப்பட்ட ஒரு முடியாம். ஒலிம்பிக் பந்தய ஓட்டங்களில் காட்டொலிவ மரங்களின் இலைகளினால் செய்த முடிவைப்பார்கள். சில இடங்களில் பந்தய இலக்கை முதல் அடைந்தவனுக்குக் குருத்தோலை கொடுப்பார்கள் (வெளி 7. 9; 1 கொரி. 9. 24) ஜய சின்னமாக இலைகளினால் செய்த இந்த முடியைப் பெறுகிறவன், அழிவுள்ள கிரீடத்தையல்ல, நித்திய கீர்த்தியைப் பெறுவதற்காக அவனுடைய பேரைப் பல இடங்களிலும் பிரஸ்தாபப்படுத்துவார்கள். எபே. 4. 27; 6. 12.

மேலும் பரி. பவுல் துஷ்டமிருகங்களுடனே போராடினேன் (1 கொரி. 15. 3) என்று சொல்லி அக்காலத்தில் ஜனங்கள் ஆவலாய்ப் பார்க்க விரும்பின காட்சியைக்குறித்துப் பேசுகிறான். எபே. 4. 27; 6. 12.

அநேக கிறிஸ்தவர்கள் துஷ்டமிருகங்களோடு போராடும்படி விடப்பட்டு இரத்தச்சாட்சிகளாய் மரித்தார்கள்.

அந்தப் பந்தய ஓட்டங்களைப் பார்க்கும்படி ஜனங்கள் திரள் திரளாய் வருவார்கள். எபி. 12. 1.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 65 அக்டோபர் 1911

OFFICE OF THE REG[illegible] REGISTERED [illegible] OCT 1911 MADRAS

# வேதியர் விளக்கு

## A Word to Preachers

By the Rev. G. S. Vedanayagam

## சுவிசேஷகர்களுக்கு ஓர் வார்த்தை

(தொடர்ச்சி.)

இன்னும் இரண்டாயுதங்கள் மாத்திரம் உண்டு. முந்தின ஐந்து ஆயுதங்களும் பஞ்ச படைக்கலங்கள் என்றோம், அதாவது நமது சத்துரு நம்மைச் சங்கரிக்காதபடி அவனைத் தடுத்து நம்மைக் காத்துக் கொள்ளும் தற்காப்புக் கருவிகளாம். இனிச் சொல்லப்போகும் இரண்டு கருவிகளும் நாம் அவனைச் சங்கரித்து அவன் கோட்டையைத் தகர்த்து அவனுடைய சேனைகளாகிய அஞ்ஞானிகளைச் சிறைப்பிடிக்க உதவும் கருவிகளாம்.

6. தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாம். உலகத்தாரை இரக்ஷிக்க தேவன் அருளிய ஒப்பற்ற கருவி சத்தியவேதமே. ஆதிபிதாக்களும், நமது அருமை இரக்ஷகரும், அவரது அப்போஸ்தலரும், பூர்வ கிறிஸ்தவ சபையும் உயிரிலும் அருமையாய் ஒப்புக்கொண்டுவந்த சத்தியவேதமே தேவவசனமென்றும் ஆவியானவரின் பட்டயம் என்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றித் தற்காலத்தில் பூர்வ பக்தரின் விசுவாசத்தைப் பின்பற்றச் சக்தியற்ற உலகஞானிகள் 'அறிவு இறுமாப்பை உண்டாக்கும்' என்றபடி, கல்விப் பெருமைகொண்டு தெய்வபயமின்றி, வேதத்தில் கர்த்தரின் நிச்சயம், காரிய நிச்சயங்களைப்பற்றிப் பலவாறு பிதற்றி, அவை கட்டுக்கதையென்றும், அதில் வரும் அற்புதங்கள் இயற்கை விரோதமென்றும், ஆதிபக்தர்களின் விசுவாசம் அறிவீன விசுவாசம் என்றும், கிறிஸ்து ஓட்டின பேய்கள் தானும் அசுத்த ஆவிகள் அல்லவென்றும், கிறிஸ்துவுங்கூட அக்காலத்து அறிவீனங்களில் சிக்கினவராய் அல்லது சம்பந்தப்பட்டவராய் இருந்தாரென்று அறிந்திருந்தும், நன்மையை நாடி அப்பேய்களை மெய்ப்போல் நடித்துக் காட்டினவராயிருந்தார் என்றும், இதர புஸ்தகங்களிலும் வேத புஸ்தகம் அத்தனை மேன்மையுடையதல்லவென்றும் சத்திய வாக்

குப்போல் சாதித்து வருகிறார்கள். உலகத்தின் அதிபதியும் அந்தகாரதந்திரியுமான ஆதி சர்ப்பமானது ஒருகாலத்தில் நமது சத்தியவேதத்தைப் புரட்ட அஞ்ஞான கல்விமான்களை ஏவிவிட்டது. அதற்குப்பின் நாஸ்தீகரைத் தூண்டிவிட்டது. அவ்விருபட்சத்தாரும் ஒழிந்துபோக இப்போது கிறிஸ்தவ கல்விமான்கள் சிலரை வசப்படுத்தி, பெருமையானவைகளைப் பேசும் தன் வாயை அவர்களின் வாயாக்கி பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி உலகத்தோற்றம் முதற்கொண்டு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும், அச்சர்ப்பத்தை வணங்கும்படி வழிசெய்து வருகிறது. இந்த மாய உபதேசங்களால் மயங்கியிருக்கிற எவனும் ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொண்டவனல்ல. இதுவரையிலும் உலகத்தைக் கிறிஸ்துவுக்குட்படுத்தி வந்திருக்கிற புஸ்தகம் எதுவோ அதுவே இனிமேலும் அப்படிச் செய்ய வல்லமையுடையதாயிருக்கிறது. ஆனதால் எவன் சத்தியவேதத்தை உண்மையாய்ப் பிடித்திருக்கிறானோ, அவனையே உலகமெங்கும்போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அப்போஸ்தலனாகக் கர்த்தர் உபயோகப்படுத்துவார். வேதத்தைக்குறித்துப் பயபக்தியான எண்ணமில்லாதவன் எவனும் அதை அருளியவருக்குப் பிரியமானவனாயிரான். எவன் பரிசுத்த ஆவிக்குப் பிரியமானவனாய் இல்லையோ அவனைத் தமது பரிசுத்த கருவியாய் அவர் உபயோகியார். எந்தப் பிரசங்கியைப் பரிசுத்த ஆவியானவர் உபயோகியாரோ அவனை அசுத்த ஆவியே உபயோகிப்பான். அசுத்த ஆவிகள் கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டபோது அவர் தடுத்தாரென்று அறிவோம். அசுத்த ஆவியின் தூதனையும் அவர் தடுப்பது எத்தனை அதிகம்! என் உடன் சுவிசேஷபிரசங்கியே சத்தியவேதத்தைக்குறித்துப் பூர்வ விசுவாசிகள் என்னவிதமான மதிப்புடையவர்களாயிருந்தார்களோ, அந்த விதமாகவே மதிக்கும்படி கர்த்தர் நமக்கு அருள்தருவாராக. நமது அறிவின் மேம்பாடல்ல, விசுவாசமுள்ள நமது ஆவியின் மேம்பாடே பரிசுத்த ஆவியானவர் மதிப்பிடும் மேம்பாடு. இதுமட்டும் பாவிகளைக் கிறிஸ்துவிடம் வர வழிகாட்டினவர்கள் விசுவாசத்தில் வல்லவர்களே ஒழிய உலக ஞானத்தில் வல்லவர்களல்ல. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும் ஆனதால் இந்த ஆவியின் பட்டயத்தைத் திருப்பிடிக்கவிடாமல் அனுதினமும் உபயோகப்படுத்தவேண்டும். இந்துக்களுக்குப் பிரசங்கிக்கையில்கூட வேதத்தைக்கொண்டே எடுத்துச் சொல்வது நல்லது. மனப்பாடமாய்ச் சொல்வதிலும் அதிலிருந்து உடனுக்குடனே வாசித்துச் சொல்வது இந்துக்கள் வேதபுஸ்தகத்தை மதிக்கும்படி செய்கிறது. அது நமது சொந்த ஞான



மல்ல, இப்புஸ்தகத்திலுள்ள தேவஞானமென்று அவர்கள் எண்ணும்படி செய்யவேண்டும். கிறிஸ்துவின் பேர் வரும் இடத்தை வேறு சொல்போட்டு வாசியாதே. இது உண்மைத் தப்பும், கோழைத்தனமுமாம். உலகத்தை ஜயித்த கிறிஸ்துவின் நாமத்தை நாம் சொல்லக் கூசுவது பரிசுத்த ஆவிக்குப் பிரியமாயிராது. அது நமது அவிசுவாசத்துக்கு அடையாளமாம். சில பிரசங்கிகள் அத்தேனேயில் பவுல் செய்த பிரசங்கத்தையே அஞ்ஞானிகளுக்கு மாதிரிப் பிரசங்கமாக உபயோகிக்கிறார்கள். தேவ ஆவியானவர் அப்பிரசங்கத்தை நமக்கு எச்சரிப்பாக மாத்திரம் எழுதிவைத்திருக்கிறார் என்று அநேக பரிசுத்தவான்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் பவுல் அப்பிரசங்கத்தைச் செய்து அந்தப் பட்டணத்தைவிட்டுக் கொரிந்துபட்டணத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் தன் பிரசங்கத்தைப்பற்றி அதிருப்திகொண்டவனாய் விசனப்பட்டானென்று அவன் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபம் 2. 1-5. வாசித்தால் திட்டமாய் அறியலாம். இத்துடன் அப். 17. 31; 18. 1. ஒத்துப்பார்க்க. இந்த அபிப்பிராயம் சரியாயிருந்தாலும் சரி தப்பிதமாயிருந்தாலும் சரி கிறிஸ்துவின் நாமத்தை மறைப்பது தேவனுக்குப் பிரீதியல்ல. இந்துக்களுக்குமுன் கிறிஸ்துவின் பேரை மறைக்கிறவர்கள் இந்துக்களைப் பிடித்திருக்கும் அசுத்த ஆவிகளைத் துரத்தமாட்டார்கள். ‘என்னை விசுவாசிக்கிறவர்கள் என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்.’

7. இன்னும் ஒரு காரியத்தைப்பற்றிமாத்திரம் சொல்லி நிறுத்துவோம். மேற்சொன்ன ஆறு ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு ஜெபத்தில் விழித்திருக்கும்படி பவுல் போதிக்கிறார். ஜெபத்தை ஒரு பிரத்தியேக ஆயுதமாகச் சொல்லாமல் முந்தின ஆறு ஆயுதங்களுடனும் சேர்ந்து தொடர்ந்துவரும் உன்னத சக்தியாயிருக்கிறதென்று சொல்லவேண்டும். அந்தகார லோகாதிபதிகளின் யுத்தகளத்தில் நாம் நிற்கும்போது இந்தச் சக்தி சர்வவல்லமையுள்ள தேவனோடு நம்மை ஐக்கியப்படுத்தும் கருவியாயிருக்கிறது. மேலும் நமது உடன் ஊழியரோடும் நம்மை இணைத்துப் பிரசங்க வல்லமையை ஒருவருக்கொருவர் அடைந்துகொள்ளச்செய்யும் கருவியாகவும் இது இருக்கிறது. எபே. 6. 18-20.

பேசுகிறவர்கள் நீங்களல்ல தேவாவியானவரே பேசுகிறவர் என்று நமது ஆண்டவர் சொன்னதை நினைக்கவேண்டும். சில வருஷங்களுக்குமுன்னே கனம். F. B. மேயர் ஐயரவர்கள் மதுரை நகரத்தில் தேவ ஊழியருக்குச்செய்த ஒரு பிரசங்கத்தில் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. அதாவது ‘நீங்கள் இந்துக்களுக்குப் பிரசங்கிக்கையில் இந்துமதம் பொய்யென்றும், கிறிஸ்து

மார்க்கமே சத்தியமென்றும் சாஸ்திர சாட்சியாகவும் மனச்சாட்சிக் காட்சியாகவும் திட்டமும் தெளிவுமாகக் காட்டுகிறீர்கள். இதைக்கேட்கிற இந்து 'ஆம்! ஆம் ஐயா அது வாஸ்தவந்தான் அதற்குச் சந்தேகமில்லை' என்கிறான். 'பின்னை நீ கிறிஸ்தவனாகத் தடையென்ன? கிறிஸ்துவை வணங்க இடையூறென்ன' என்று நீங்கள் கேட்கும்போது அவன் தலைகவிழ்ந்து ஏதோ சாக்குப்போக்கைச் சொல்லிக்கொண்டு குறுவிழி விழிக்கிறான். இதன் இரகசியமென்ன? பிரசங்கியே நீயும் மனுஷன்; அந்த இந்துவும் மனுஷன், உன்னறிவை அவன் அறிந்துகொண்டான். உன் நியாயங்கள் அவனுக்கும் நியாயமாகவே தெளிவாகிறது. பின்னை ஏன் அவன் தன் தீய தேவர்களைவிட்டு உனது ஒன்றான மெய்த்தேவனை வணங்க முடியாதிருக்கிறான். அவனது மனுஷீகம் உனது மனுஷீகத்துக்கு ஒத்துவருகிற விஷயத்தில் சரியாயிருக்கிறது. ஆனால் அவன் தனியாளாயிருந்தால் உன்னோடு இசைந்துவிடுவான். அவன் தனியாளல்ல அவனுக்குள் இன்னொரு ஆள் இருக்கிறது. இந்த உலகத்தின் தேவன் அவனுக்குள்ளிருந்து அவனை ஆண்டு நடத்துகிறான் அவனை விடமாட்டான். நீயும் தனித்த ஆளாயிராமல் உனக்குள் சர்வவல்ல தேவாவியானவர் இருக்க வேண்டும். நீ அவனை மனுஷீகபிரகாரம் ஜயித்துவிட்டாய். ஆனால் அவனுக்குள்ளிருக்கிறவனை உன் மனுஷீக நியாயம் துரத்தாது. ஆனால் இவ்வுலகத்தின் தேவனிலும் பலத்தவரான ஆவியானவர் உனக்குள்ளிருந்து அவனைத் துரத்தி அவனது அடிமையான இந்துவைக் கிறிஸ்துவுக்குச் சிறையாக்கவேண்டியிருக்கிறது' என்பதே. ஆகையால் பவுல் அப்போஸ்தலனும் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லுகிறார்.

இந்தியாவுக்கு நாம் இனிச் செய்யவேண்டிய ஒப்பற்ற வேலை, சர்வ வல்லமையுள்ள கரத்தை அசைக்கும் ஜெபமே. மற்றப்படி இந்து மதத்துக்கு விரோதமாய் இதுமட்டும் எழுதியிருக்கும் புஸ்தகங்கள் ஏராளமே. இந்தியருக்குக் கொடுத்திருக்கும் கல்வியும் அளவுக்கடங்காததே; செய்திருக்கிற பரோபகாரங்களுக்குக் கங்கு கரையில்லை. உழைத்துவருகிற உழைப்புக்கும் எல்லையில்லை. இவ்வளவில் இந்தியாவின் அதிபதியாகிய சாத்தான் தன் ஆசனத்தைவிட்டு இறங்காமலே இருக்கிறான். ஆகையால் முன்சொன்ன மற்ற வேலைகளின் அளவுக்குத் தக்கதான ஜெபமே செய்யப்படவேண்டியிருக்கிறது. ஜெபத்தின் ஆவி நம்மைப் பிடித்து ஆள்வாராக. என் உடன் சுவிசேஷகனே! உமது பிரசங்கத்தைக் கேட்ட எத்தனை இந்துக்களுடைய பேர்களைக் குறித்துக்கொண்டு தேவனிடத்தில் பிரசவ வேதனையான ஜெபத்தைச் செய்துவருகிறீர். அல்லது எந்தெந்த அஞ்ஞான குடும்பத்தை உமது ஜெபத்தில் எண்ணிப் போராடிவருகிறீர். உமது பிரசங்கத்தின்மூலமாயும் ஜெபத்தின் பெருமூச்சு எழும்புகிறதுண்டா? மேற்சொன்ன கனம். F. B. மேயர் ஐயாவர்களின் பிரசங்கத்தைக் கேட்ட தேதிமுதல் என் ஊழியத்தில் பெரிய மாறுதல் நடந்துவந்திருக்கிறது என்று கர்த்தருக்கு மகிமையுண்டாகச் சாட்சி சொல்லுகிறேன். என் பிரசங்கங்களையும், பிரயாசத்தையும்விட என் ஜெபத்தினாலே பிசாசின் சிறையிலிருந்த அநேக அஞ்ஞானிகள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள் என்று நான் பேர்போகச் சொல்லக்கூடும். கர்த்தர் ஜீவனுள்ளவர் என்றும், அவருடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவைகள் என்றும், அவருடைய வேதமும் ஜீவவார்த்தைகள் என்றும் கிருபையுள்ள ஆண்டவர் இந்த ஏழைப்பாவிக்கு ரூபித்து வருகிறார். அவருக்கே ஸ்தோத்திரமும் மகிமையுமுண்டாவதாக.



# A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

### பிலாத்து

தேசாசார நியாய விசாரணை: கொலைத்தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்த இந்த விசாரணை அவசியம்.

முதல் படலம். மத். 27. 1; மாற். 15. 2; லூக். 23. 1-4; யோவா. 18. 28-38.

பொந்தியு பிலாத்து.

இவன் ரோம ராஜப்பிரதிநிதி. செசரியாவில் ஒரு பெரிய அரமனையில் வசித்தான். எருசலேமில் பஷ்காப் பண்டிகை நடக்கும்போது கலகம் உண்டாகாமல் பார்க்கும்படி அங்கு போவது வழக்கம். நமது தேசத்துக் கலெக்டர்மார்களும் திருவிழாக்காலங்களில் கலகமில்லாதபடி தடுக்கிறதுபோல பிலாத்தும் செய்தான்.

இவன் குணங்கள்.

(1) குரூரன்; (2) பழிபாதகங்களுக்கு அஞ்சாதவன்; (3) திடசித்தமில்லாதவன்; (4) பயங்காளி.

**யூதர்கள் இவனைப் பகைத்தார்கள்.**

(1) யூதர்கள் ரோமருடைய பிரஜைகளாயிருக்கப் பிரியப்படவில்லை. ஆகையால் அடிக்கடி கலகத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்தார்கள். மாற். 15. 7.

(2) இவன் குற்றமும் கொடூரமுமுள்ளவனா யிருந்தபடியால் இவனைக் கொடும்பகையாய்ப் பகைத்தார்கள் (லூக். 13. 1). இவன் செய்த அனேக கொடூரச்செயல்களுக்கு அத்தாட்சிகளுண்டு.

**பிலாத்து யூதர்களைப் பகைத்தான்.**

1. அவர்கள் மதவைராக்கியமுடையவர்களாயிருந்தபடியால்,
2. அவன் யூதர்களுக்குப் பயந்தபடியினால்,

இவர்கள் தன்னைப்பற்றி ரோமாபுரியிலுள்ள இராயனுக்குப் பிரியாது செய்துகொள்வார்களென்று பயந்தான்.

பிலாத்துவின் அரமனை கிண்டியிலுள்ள கவர்னரவர்கள் அரமனையைப்போல முன்பக்கத்தில் விசாலமான இடமாயிருந்தது. இவ்விடத்தில்தான் விசாரணை நடந்தது. பிலாத்து இவ்விடத்தில் ஒரு உயர்ந்த ஆசனத்தில் ரோமச் சேவகர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க, உட்கார்ந்திருப்பான். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கீழே நிற்பார்கள்.

**விசாரணையின் ஆரம்பம்.** யோவா. 18. 29, 30.

பிலாத்து விசாரணைபண்ணாமல் தங்களுடைய தீர்ப்பை உறுதிப்படுத்தவேண்டுமென்று யூதர்கள் விரும்பினார்கள். ரோம தேசாதிபதிகள் தங்களுக்குத் தொந்தரவு வாராதபடி இப்படிச் செய்தார்கள். ஆனால் பிலாத்து தன்னால் கொடுக்கக்கூடிய சங்கடத்தை யூதர்களுக்கு வரச்செய்தான்.

யோவா. 18. 31, 32. யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறார்கள் (மாற். 15. 10) என்று அறிந்து, தன்னுடைய உத்தரவின்றி யூதர்களால் அப்படிச் செய்யமுடியாது என்று யூதர்களை நிந்தித்தான்.

**யூதர்கள் இயேசுவுக்த விரோதமாய்க் துற்றங்களை ஏற்படுத்த வேண்டியதாயிநந்தது.** லூக். 23. 2.

1. அவர் ஜனங்களைக் கலகத்துக்கு எழுப்பிவிடுகிறார் என்றார்கள்.
2. அவர் இராயனுக்கு வரி செலுத்தக்கூடாதென்று சொன்னதாகக் குற்றஞ்சாட்டினார்கள். லூக். 20. 21-26.
3. அவர் தன்னை இராஜாவாக்கினார் என்றார்கள். சரியான்படி பிராது அவர்கள் சொல்லவேண்டுமானால், அவர்கள் அவரை ஒருதரம் பிடித்து இராஜாவாக்க முயன்றபோது அவர் அதற்குச் சம்மதியாமையால் தங்களை இராயனுக்கு விரோதமாய் நடத்தவில்லையென்று குற்றஞ்சாட்டியிருக்கவேண்டும்.



**கவனிப்பு.**—அவர் தேவதூஷணம் சொன்னார் என்று அவர்கள் அவரைக் கொலைத்தீர்ப்புச் செய்த குற்றத்தை அவர்கள் சொல்லவேயில்லை. ஏனெனில் இக்குற்றத்தைப் பிலாத்து ஒப்புக்கொள்ளமாட்டான் என்று அறிந்தார்கள். அப். 18. 14-16.

**பிலாத்து பிறத இயேசுவை உள்ளே அழைந்துக்கொண்டு போய் மூன்றவது பிராதைப்பற்றிமாத்திரம் விசாரித்தான்.** மற்ற இரண்டு பிராதுகளும் புத்தியீனத்தினால் கொண்டுவரப்பட்டவைகள் என்று பிலாத்துவுக்குத் தெரியும்.

யோவா. 18. 33. **நீ யூதநடைய இராஜாவா என்றான்.**

யோவா. 18. 34. கிறிஸ்துவின் மறுமொழி மூர்க்கமானதல்ல. அவரின் கருத்து என்னவென்றால், தான் ரோமருடைய எண்ணத்தின்படி அல்லது யூதருடைய எண்ணத்தின்படி உத்தரவு சொல்லுகிறதா என்று கேட்டார்.

பிலாத்து தனக்கு யூதர்களுடைய கொள்கைவிஷயத்தில் ஒரு சம்பந்தமுமில்லையென்பதுபோல் பரியாசமாய் உத்தரவு சொன்னான்.

**கிறிஸ்துவானவரின் மறுமொழியின் சாரம்.**

‘நான் யூதருடைய இராஜா. இராயனுடைய எதிரியல்ல. என்னுடைய இராஜ்ஜியம் சத்தியம்.’

குணசீலனான ஒரு யூதன் நீதியை முதற்காரியமாக வற்புறுத்துவான். ஒரு புறஜாதியானோ சத்தியத்தை முதற்காரியமாக எண்ணுவான்.

இயேசுதாமே சத்தியமென்பதாகப் புறஜாதியானான அந்தப் பிரபுவுக்குப் பிரசங்கிக்கிறார். பிலாத்து அதைக்குறித்து நிர்விசாரியாயிருந்தான். யோவா. 18. 38.

**காட்சி.**

யூதர்கள் தங்கள் மேசியாவைச் சங்கிலியால் கட்டுண்டவராய்க் கொலைசெய்யப்படும்படி ஒரு புறஜாதியானிடங் கொண்டுபோய் விண்ணப்பஞ்செய்துகொண்டார்கள்.

இந்த மேசியாவோ புறஜாதியாரையும் யூதரையும் தம்முடைய பொதுவான இரட்சிப்பின் ஐக்கியத்தில் இணைக்கிறார்.

**தீர்ப்பு.** யோவா. 18. 38.

**பிலாத்து இயேசுவை ஏன் உடனே விடுதலை செய்யவில்லை?**

‘சில வருஷங்களுக்குமுன் பிலாத்து ரோமச் சேனையின் முக்கியஸ்தானத்தை செசரியாவிலிருந்து எருசலேமுக்கு மாற்றும்படி தீர்மானித்துச் சேனைகளை அங்கே அனுப்பினான். அவர்கள் இராயனுடைய

சொரூபத்தையுடைய தங்கள் தங்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு எருசலேமுக்குள் இரவில் பிரவேசித்தார்கள். இப்படிப்பட்ட சொரூபங்களையுடைய கொடிகள் யூதர்களுக்கு விக்கிரக ஆராதனைபோலிருந்தது. அது தங்கள் பட்டணத்தைக் கறைப்படுத்துமென்று நினைத்து அவைகளை அப்புறப்படுத்தும்படி செசரியாவுக்குப் பெரிய மனுஷர்களை அனுப்பி ஐந்துநாளளவும் விண்ணப்பம்பண்ணினார்கள். ஆனால் பிலாத்து சம்மதியாமல் கோபித்து, சேவகர்களை அனுப்பிக் கலகம்பண்ணினால் கொலைசெய்யப்படுவீர்களென்று பயமுறுத்தி யனுப்பினான். ஆனால் யூதர்களோ இதற்குச் சம்மதிப்பதினால் தங்கள் பட்டணம் தீட்டாவதைப்பார்க்கிலும் சாவது நல்லது என்று தரையில் விழுந்து கிடந்தார்கள். ஆகையால் பிலாத்து அவர்கள் இஷ்டத்துக்கு இணங்கினான்.' அதுபோலவே இப்பொழுதும் யூதர்கள் பிலாத்துவின் தீர்ப்புவுக்கு ஒரேபிடியாய் எதிர்த்துநின்றார்கள். லூக். 23. 5.

கலிலேயா என்பதைப் பிலாத்துக் கேட்டபொழுது, தனக்கிருக்கும் சங்கடத்திலிருந்து தப்பும் வழி கிட்டினது என்று கண்டு, பிலாத்து இயேசுவை ஏரோதுவினிடம் அனுப்பினான்.

# Sermon Preparation and Delivery

**By the Rev. N. Devasagayam**

## பிரசங்கச் சிந்திப்பும் செய்முறையும்

### முன்னுரை

நம் தமிழ்நாட்டில் செய்யுளாயுள்ள நூல்களைக் கேட்போர்க்கு இனிமையாய் விளக்கி, உபகதைகள், முதியோர்சொன்ன அமிர்தவாக்குக்கள், மேற்கோள்கள் முதலியவற்றுடன் புனைந்து, யாவருக்கும் தெரிந்த எளிய பாஷையில் சாதுரியமாய்ச் சொல்வதே பிரசங்கம் என்னப்படும். இவ்வகையான பிரசங்கங்களைக் கேட்பதற்கு நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஏற்பட்ட இடத்தில் பிரியத்துடன் வந்து கூடுவார்கள். இராமாயணக் கவிப்பிரசங்கம், பாகவதப் புராணப்பிரசங்கம் இவை போன்றவை இதற்குச் சாட்சியாம். இவை பெரும்பாலும் பொழுதுபோக்கின்பொருட்டும் கேட்போர் மனதில் உல்லாசத்தை உண்டாக்கும்பொருட்டும் நடக்கும். திருவசனப் பிரசங்கம் இத்தன்மையது அன்று. சாகிறவனுக்குச் சஞ்சீவி இருக்கின்றது என்னும் சொல் எவ்வாறு உசிதமாகுமோ அவ்வாறே மரணவாய்ப்பட்ட பிராணிகளாகிய மானிடருக்குத் திருவசனப் பிரசங்கம் உசிதமாகும். எனவே, திருவசனப் பிரசங்கம் எவ்வகையாலும் ஒரு காலப்போக்குப் பேச்சா



யாவது கேட்போர் மனக்களிப்பால் சிரித்து உல்லாசமாய் வீட்டுக்குத் திரும்புகிற வாய்ச் சாதுரிய வசனமாயாவது இருக்கலாகாது என்பது சொல்லவேண்டுவதில்லை. திருவசனப் பிரசங்கி தன் சுயமனதில் உற்பத்திபண்ணி அலங்கரித்த விஷயமெதுவும் தலைகாட்டவொட்டாமல் அடக்கிவிடப் பழக்கப்பட்டிருக்கவேண்டும். தேவனாகிய சர்வலோக மன்னவன் பாவத்தினால் மடிகிறவர்களுக்குச் சொல்லியனுப்புகிற திருவிரக்கமும் திருவருளும் நிறைந்த செய்தியை உள்ளபடியே சொல்லவேண்டியவன் திருவசனப் பிரசங்கி. அவன் அச்செய்தியை மாற்றாமலும் கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளவாறே தெரிவிக்கவேண்டும். எனவே, பிறருக்கு அந்த நல்ல செய்தியைச் சொல்லப் போகுமுன் திருவசனப் பிரசங்கிதானே அதை முன்னுறத் தீரத் தெளிய அறிந்திருக்கவேண்டும். அப்படி அறிகிற கருவி மானிட புத்தியேயானாலும், செய்தியானது மானிடபுத்தியில் உற்பத்தியானதல்லவாதலால், தெய்வீக வெளிச்சம் கிடைத்தாலன்றி திருவசனத்தை அறிந்தேனென்று சொல்ல வல்லவன் எவனுமில்லை. அவ்வெளிச்சத்தைத் தர தேவாவியானவர் ஏற்பட்டிருக்கின்றாராதலால் அவரிடத்தில் மனதை யொப்பித்து புத்தியைத் திருவசனச் சிந்திப்புக்குப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். தெய்வீக வெளிச்சத்தில் கண்ட விஷயத்தைத் திருவசனப் பிரசங்கி தன் காட்சிக்கு அகப்பட்ட மாதிரியே பிறருக்குத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு காண்டலும் தெரிவித்தலுமாகிய இவ்விரண்டையும் இங்கு ஒருவாறு விளக்குவோம்.

### 1. திருவசனப் பிரசங்க இலக்கு (The aim of a Sermon).

இலக்கு இல்லாமல் பிரசங்கிக்கிறவன் புத்தி மாறுபட்ட பித்தன். அநேக சுவிசேஷ பிரசங்கிமார் அவர்களைக் கேட்போருக்கு இப்பேர்ப்பட்ட பித்தர்களைப்போல் தோன்றுகிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு விஷயத்தைப் பேச எடுத்துக்கொண்டார்கள் என்று நினைத்துக் காது கொடுக்கும்போது அந்த விஷயத்தைவிட்டுத் தாண்டி அதனோடு எவ்விதத்திலும் பொருத்தம் இல்லாத வேறொரு விஷயத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். அந்த விஷயத்தையாகிலும் சொல்லுவார்களா என்று செவிசாய்த்தால் அதையும்விட்டு யாதொரு தொடர்பும் இல்லாத வேறொரு பொருளைப் பிடித்துக்கொண்டு தொங்குவார்கள். இப்படி மனக்குரங்கு இழுத்த பாட்டிற்குத் தாவித் தாண்டிக் களைத்துத் தவித்து ஓய்வார்கள். கடைசியில், என்ன விஷயத்தை இப்பொழுது சொன்னீர் என்று பிரசங்கித்தவரைக் கேட்டால் அது அவருக்கே தெரியாது. அவர்கள் அப்படிப் பேசுவதற்குக் காரணம் எதுவென்றால், திருவசனத்தைப் படித்தபோது அதிலே தேவாவி வைத்திருக்

கிற இலக்கைக் காணாமல் கபோதிகளாய்ப் படித்ததேயாம். அது அல்லாவிட்டால், திருவசனத்தில் ஏதேனும் ஒரு வார்த்தையையோ வாக்கியத்தையோ எடுத்துக்கொண்டு அதன் வழியாய்த் தம் மதிப்பெருக்கத்தையோ மதிச்சுருக்கத்தையோ வெளியிடத் துணிந்ததாம். அநேகருக்குத் திருவசனத்தில் எந்த இலக்கும் இல்லைப்போல் தோன்றுகிறது. ஆதலால் அவர்கள் திருவேதத்தில் நினைவால் தொடர்புள்ள வாக்கியங்களை வெட்டிப் பிரித்து எடுத்துக்கொண்டு அப்படி உயிரிழந்த வாக்கியங்களுக்குள் தங்கள் சுய நினைவுகளை ஊட்டி, திருவசனப் பிரசங்கம் செய்யாமல் திருவற்ற நீயமானிட வசனப் பிரசங்கம் செய்கிறார்கள். திருவசனப் பிரசங்க இலக்கு திருவேதத்தில் வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது: ‘தேவ அருளினால் உண்டாயிருக்கிற வேதவாக்கியங்களெல்லாம் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா யிருக்கின்றன’ (2 தீமோ. 3. 16, 17). சுவிசேஷ பிரசங்கி சிந்திக்க எடுத்த வேதவாக்கியம் இவற்றுள் ஒரு இலக்குள்ளதாயிருக்குமாதலால், அதைக் கூர்ந்து அறிந்துகொள்ளவேண்டும். இங்கு தெரிவிக்கப்பட்ட இலக்குகள் ஒவ்வொன்றும் பல துறைப்பட்டுப் பெருகியிருக்கும். ஆதலால் எடுத்த வாக்கியம் எந்தத் துறையைச் சொல்லும் என்று கவனித்துக்கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாக, உபதேசம் பலவகைத்தாகும். பாவி தேவபார்வையில் நீதியடைந்தவனாதல், பாவி பரிசுத்தனாக்கப்படுதல், பாவி விசுவாசத்தை யடைந்து அதில் மரணமட்டும் காக்கப்படுதல், மரணம், உயிர்த்தெழுதல் இவை போன்ற பல துறைப்பட்டிருக்கும் உபதேசம். உபதேசமனைத்தையும் ஒரே வாக்கியத்தைக்கொண்டு சொல்லமுடியாது. எந்த வாக்கியத்தினுள் எந்த உபதேசமிருக்கின்றதோ அந்த ஒரு விஷயத்தையே பிரசங்க முக்கிய பொருளாக்கி விளக்கவேண்டும். ஒரு பிரசங்கத்திற்குள் ஒரேயொரு சிறந்த பொருளே இருக்கவேண்டும். அதற்கு அதிகமாயிருக்கவுந் தகாது அதிலும் குறைந்திருக்கவுந் தகாது. அதிகப்படின் கேட்போர் மனதில் மலைவும் தெளிவின்மையும் உண்டாகும். குறையின் மனக்குரங்கு இழுத்தவழியே போய் இலக்கு இல்லாப் பிரசங்கம் செய்ததுண்டாகும். இவ்விருவகையாலும் திருவசனம் பயன்படாமல் போகும்.

## 2. பொருட்பொலிவு (Abundance of matter).

நாம் உட்கொள்ளும் ஆகாரம் நம்முடம்பிற்குச் சுகமும் புஷ்டியும் தரத்தக்க பண்டங்கள் நிறைந்திராவிடின், நம் உடம்புகெட்டுச்



சீக்கிரத்திலேயே காலகதியடையும். நாம் உட்கொள்ளும் ஆத்தும ஆகாரமும் அத்தன்மைத்தே. நம் தினப்புசிப்புக்குரிய சாப்பாட்டை எவ்வாறு சிரத்தையுடன் சித்தம் செய்துகொள்ளுகின்றோமோ அவ்வாறே நம்மைக் கேட்கிறவர்களுடைய ஆத்துமா புசித்தற்குரிய திருவசன போஜனத்தையும் மிகுந்த சிரத்தையுடன் சிந்தித்து ஆயத்தம் பண்ணவேண்டும். ஒரு பிரசங்கி தன் ஆத்துமா புசித்துத் திருப்தியடைந்த திருவசனத்தையேதவிர தன் அநுபவத்தில் வராத வசனத்தைச் சொல்லவே தகாது. வெகுபேர் இவ்வாறு செய்து தீங்கு விளைவிக்கிறார்கள். எப்படியெனின், அதிக பசியெடுத்துச் சாகப்போகிறவனுக்குக் கல்லைப் பொறுக்கிக் கொடுத்து உண்ணென்றால் அதினால் அவன் உயிர்பிழைத்திருப்பானா? பாவத்தினால் சாவு வாதைக்குட்பட்டு நீதியின்மேல் அதிக பசியுள்ளவர்களுக்குத் திருவசன உள்ளீடில்லாத பிரசங்கத்தைக்கொடுத்து உண்ணுவித்தால் அதினால் அவர்கள் பிழைப்பார்களா? திருவசனம் சாவை நீங்கி சதா ஜீவனைத் தரும் சஞ்சீவி. அதை யொருவன் தானே யுட்கொண்டு சுகங் கண்டிராவிடின் பிறருக்குச் சுகந்தரப் பகரவும் தெரியான். அழகிய சொற்களையடுக்கி வெறுஞ் செவியின்பம்மாத்திரம் கொடுத்து எனக்கும் பேசத் தெரியும் என்று சபைக்கு வருகிற பிரசங்கிகள் மண்ணுருண்டையை பார்வைக்குப் பகட்டாக்கி இதை யுட்கொள்வீர்களாயின் சுகப்படுவீர்கள் என்று சொல்லுகிறவனே தவிர வேறென்ன? எவ்வளவு திறங்கெட்ட பிரசங்கியும் உள்ளவிழ் சிறிதுமில்லாச் சொல் சொல்லான். அவனைக் கடியின் அது சரியல்லவே என்று சிலர் நினைப்பார்கள். கலவுமியுள் இரண்டு அவிழ்வைத்தால் அவ்வளவு உமியையும் தின்றல்லவோ அதனுள் அவிழையும் உண்ணலாகும்? அப்படியுண்டவர்க்குச் சுகம் வருமா? திருவசனத்தை மானிடவசனத்தைப்போல் அலங்கரிக்கத் தேவையேயில்லை. செத்தவர்களுக்குச் சீவன் கிறிஸ்து இயேசுவில் அகப்படும் என்கிற செய்தி தன்னிலேயே சர்வ அலங்கிர்தமும் நிறைந்த செய்தி. சூரியனுக்கு அலங்காரமும் செய்வாருண்டா? வக்கணை வக்கணையாய் அலங்காரச் சொல்லைத் தேடிச் சொல்லி கேட்போருடைய மதிப்பில் நாட்டம்வைத்துப் பேசுகிறவன் திருவசன உள்ளீடில்லாப் பேச்சுக்காரன். திருவசனப்போலி அவன் வாயிலிருந்து புறப்பட்டும் அது கேட்டவர்களுடைய ஆத்துமாவைக் கொஞ்சமேனும் தொடாது. பாவிகள் எப்படி வந்தார்களோ அப்படியே திரும்பிப்போவார்கள். எடுத்த வசனத்திற்குள் மானிட ஆத்துமாவுக்குத் தேவன் வைத்திருக்கிற பொருள் எடுக்க எடுக்கக் குறையாது. புதையலை வெட்டி யெடுப்பாரைப்போல் திருவசனப் பிரசங்கி தெரிந்துகொண்ட வசனத்திற்குள்ளேயே மிகச் சுகிர்தமான பொருட்களை எடுக்கலாம்.

அதற்குவேண்டிய நேரமும் மனவமைதியும் தேடிக்கொள்ளாதவனே அவசரத்தில் ஏதாகிலும் வாய்க்குவந்ததையுளறி இலட்சணமாய்ப் பிரசங்கித்தேன் என்று நினைப்பான்.

(இன்னும் வரும்.)

## Abraham's Faith—A Sermon

### ஆபிரகாமின் விசுவாசம்

எபி. 11. 8-10, 17-19.

பழைய ஏற்பாட்டிலே சொல்லப்படுகிற எல்லா பக்திமான்களிலும், ஆபிரகாம் என்பவன் விசுவாசத்தில் சிறந்தவன். புதிய ஏற்பாட்டிலேயும் அவன் விசுவாசத்திலும் பக்தியிலும் பிரதானமானவனாயிருந்தான் என்கிற சாட்சி கூறப்பட்டிருக்கிறது (கலா. 3. 6, 7, 9; ரோ. 4. 3; யாக். 2. 23. காண்க). விசுவாசிகளுக்குத் தகப்பனாக அழைக்கப்பட்டான். அதாவது, இவ்வுலகத்தில் தோன்றிய எல்லா ஆண்மக்களிலும் அவன் விசுவாசத்தில் முக்கியமானவனே. நாம் அவனுடைய ஜீவிய சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் அது மெய்யென்று அறிந்துகொள்ளலாம்.

இத்திருபத்தை எழுதினவர் ஆபிரகாம் மூன்றுவிதமாய்த் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான் என்று சொல்லுகிறார்.

I. அவன் தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்ததினால் தன்னுடைய விசுவாசத்தைக் காட்டினான். எபி. 11. 8; ஆதி. 12. 1. ஒத்துப்பார்க்க.

இவ்விஷயத்தில் அவனுடைய விசுவாசத்தின் அருமையையும் பெருமையையும் அறியவேண்டுமானால், நாம் அவனுடைய முந்தின ஜீவியத்தைக் கவனிக்கவேண்டும். ஆதி. 11. 27-32 ஐ வாசித்தால் அவன் தன் இளைய பிராயத்தில் அஞ்ஞானம் நிறைந்த கல்தேயர் தேசத்தில் வாசமாயிருந்ததாகக் காண்கிறோம். அக்காலத்தில் கல்தேயர் தேசத்து ஜனங்கள் சந்திரனைத் தங்கள் தேவதையாக வணங்கினார்கள். பலமுறை அவனுடைய முன்னோர் அந்தத் தேவதையைத் தொழுதுகொண்டார்கள். ஒருவேளை ஆபிரகாமும் தன் வாலிபப் பிராயத்திலே அஞ்ஞானியாக இருந்திருக்கலாம். அவன் வசித்த ஊர் என்னும் பட்டணத்திலும், ஆரான் என்னும் பட்டணத்திலும் அந்தத் தேவதைக்குப் பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தனவென்று அத்தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆதிசின்னங்களினால் அறிகிறோம். அப்படியிருக்க, தேவன் அவனை அழைத்தபோது, யாதொரு தாமசமின்றி, தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்துப் புறப்பட்டுப் போனான்.



தேவன் அவனை எப்படி அழைத்தார்? ஒருமுறை அவர் சொப்பனத்திலே அவனுக்குத் தரிசனமானார். ஆனாலும், பலமுறை அவர் தமது பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் நம்மை ஆட்கொள்ளுகிறது போல, அவர் தம்முடைய ஆவியால் ஆபிரகாமை அந்த அஞ்ஞானமுள்ள இடத்தை விட்டுவிடும்படி ஏவினார். எப்படியோ, தான் கேட்ட சத்தம் தேவனுடைய அழைப்பு என்று ஆபிரகாம் அறிந்தபோதே உடனே செவிகொடுத்தான். அவன் செய்யவேண்டிய பிரயாணம் சிறிதல்ல. வனாந்தரத்தைக் கடந்துபோகவேண்டும். ஆனால் அதையும், தான் அனுபவிக்கவேண்டிய கஷ்டத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் புறப்பட்டான்.

அவனுடைய விசுவாசத்தையும் நம்முடைய விசுவாசத்தையும் ஒத்துப் பார்ப்போமாக. மேலும், அவனுக்குக் கிடைத்த சிலாக்கியங்களையும் நமக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். தேவனுடைய தன்மை, கிருபை, உண்மை, வல்லமை, அன்பு முதலியவை எல்லாம் அவனுக்கு ஏறக்குறையத் தெரியாது. நமக்கோ சிறுவயது முதற்கொண்டு நன்றாய்த் தெரியும். இயேசுகிறிஸ்துவிலே தேவன் தம்மை முற்றிலும் நமக்கு வெளிப்படுத்தினார். என்றாலும், நாம் ஆபிரகாமைப்போல் அவரை விசுவாசித்து, அவருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிகிறோமா? அவருடைய சத்தத்தைக் கேட்டாலும், அதற்கு எத்தனையோ சமயங்களிலும் நாம் செவிகொடுக்கிறதில்லை. ஆபிரகாம் தான் போன இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். நாமோ நாம் நடக்கவேண்டிய வழி இன்னதென்றும் தேவனுடைய சித்தம் இப்படி இருக்கிறதென்றும் அறிந்தும் அதின்படி அடிக்கடி நடக்கிறதில்லை. நம்முடைய விசுவாசம் எவ்வளவு குறைவுள்ளது: அவனுடைய விசுவாசம் எவ்வளவு பெரிது.

II. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே சஞ்சரிக்கையில் அவன் தன் விசுவாசத்தைக் காட்டினான்.

விசேஷமாய் தனக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்களிலும் சோதனைகளிலும் அவன் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான். அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

(a.) கானான் தேசத்துக்குப் போனவுடனே, அத்தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று (ஆதி. 12. 10). அவனுடைய ஆஸ்தி எல்லாம் ஆடுமாடுகளாம். ஆனதுகொண்டு அப்பேர்ப்பட்ட கொடிய பஞ்சம் அவனுக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கக்கூடியதாயிருக்கும். அந்தச் சம்பவம் அவனுடைய விசுவாசத்தைப் பரீட்சை செய்திருக்க

மாட்டாதா? தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, தன் ஜனன தேசத்தைவிட்டு கானான் தேசத்துக்கு வந்திருந்தான். ஆனால் அந்த பஞ்சம் நேர்ந்தபோது தனக்குள்ளே எவ்வளவோ சந்தேகம் பிறந்திருக்கக்கூடும். நான் கேட்ட சத்தம் தேவனுடைய சத்தமா? தேவன் என்னை அழிக்கும்படி இங்கே அழைத்தாரா? நான் இத்தேசத்தை விட்டுச் சொந்த தேசத்துக்கு மறுபடியும் போனால் நல்லதென்று சொல்வதற்கு இடம் இருந்தது. ஆனாலும், அப்படிச் சொல்லாமலே, திரும்பிப்போகாமல், கொஞ்சக்காலமாக எகிப்து தேசத்துக்குப் போய் மறுபடியும் கானான் தேசத்துக்கு வந்தான்.

*(b.)* அவனுடைய சகோதரன் மகனாகிய லோத்து என்பவன் அவனோடு போனான். ஆபிரகாமோடு சஞ்சரித்து, லோத்து அதிக ஐசுவரியமுள்ளவனானான். என்றாலும் அவன் நன்றியறியாதவனாக ஆபிரகாமைவிட்டு அருகான சமபூமியைத் தெரிந்துகொண்டான் (ஆதி. 13. 11). அதைப் பார்த்து, நான் இவனுக்காக எடுத்த பிரயாசையெல்லாம் வீணாய்ப் போய்விட்டது: இனி இவனுக்காக ஒன்றும் செய்யமாட்டேன் என்று சொல்லாமலும், கோபங்கொள்ளாமலும், லோத்துக்கு ஆபத்து நேரிட்டபோது, அவனுக்கு உடனே சகாயஞ்செய்தான். ஆதி. 14. 12-16.

*(c.)* சோதோம் என்கிற பட்டணத்தை அழிக்கும்படி தேவன் வந்தவுடனே, ஆபிரகாம் எவ்வளவு தூரமாய் அப்பட்டணத்துக்காக பரிந்து பேசினான். தேவன், தன்னுடைய ஜெபத்தைக் கேட்டார் என்று உறுதியாய் நம்பினான்: ஆனால், காலையிலே எழுந்தபோது, தன் ஜெபம் கேட்கப்படவில்லை என்று அறிந்தான் (ஆதி. 19. 27, 28). அதுவும் அவனுடைய விசுவாசத்தைச் சோதித்திருக்கும்: என்றபோதிலும் அவனுடைய விசுவாசம் குறைந்துபோகவில்லை.

*(d.)* தேவன் அவனுக்கு ஓர் விசேஷித்த வாக்கைக் கொடுத்தார் (ஆதி. 13. 15, 16). அவனுடைய சந்ததி எண்ணிறந்த மணலைப்போல இருக்கும் என்று தேவன் சொன்னார். என்றாலும், அந்த வாக்கு கொடுக்கப்பட்டபின் 25 வருஷமாக பிள்ளையில்லாதவனாக இருந்தான். அவன் வயதுசென்றவனான பிறகு அந்த வாக்குத்தத்தம் நிறைவேறப்பட்டது. அத்தனை நாளாக அவனுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டாலும், அது எப்போதும் உறுதியாயிருந்தது.

*(e.)* இன்னொரு வாக்கைத் தேவன் செய்தார்: அதாவது 'நீ இருக்கிற தேசம் உன்னுடையதாகும்' என்பதே. ஆனால் ஆபிரகாம் பரதேசியைப்போல அத்தேசத்திலே தன் ஜீவியநாள் முழுவதும் கூடாரங்களில் குடியிருந்தான். அவன் மனைவியாகிய சாராள் மரித்தபோது அவளை அடக்கம்பண்ணுவதற்குத் தன்னிடம் நிலமில்லாதபடியால்



ஒரு பூமியை வாங்கவேண்டியவனாயிருந்தான்' (ஆதி. 23. 4, 16, 17). என்றாலும், அவனுடைய விசுவாசம் ஒழிந்துபோகவில்லை.

மறுபடியும் அவனுடைய விசுவாசத்தையும் நம்முடைய விசுவாசத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போமாக. அவனுக்கு நேரிட்ட கஷ்டநஷ்டங்கள் நாம் அனுபவிக்கவேண்டுமானால், நாம் அவனைப்போல் சோர்ந்துபோகாமல் தேவனை உறுதியாய் நம்பியிருப்போமா? கஷ்டநஷ்டமும், துக்கமும், சஞ்சலமும் நேரிடும்போது எவ்வளவு சீக்கிரமாய்ச் சோர்ந்துபோகிறோம். வேலை பலனற்றுப்போகும்போதும், மற்றவர்கள் லோத்தைப்போல நன்றியில்லாதவர்களாயிருக்கும்போதும், நாம் எதிர்ப்பார்க்கிற ஆசீர்வாதங்கள் வராதிருக்கும்போதும் அவனைப்போல் சாந்தமாய் தேவனுக்காகக் காத்துக்கொள்ளுகிறோமா? 'அதரிசயமானவரை தரிசிக்கிறதுபோல்' அவனைப்போல தேவனை எக்காலத்திலும் விசுவாசிப்போமாக.

III. ஈசாக்கைப் பலியிட்ட விஷயத்தில் விசேஷமாய் ஆபிரகாமின் விசுவாசம் விளங்கினது. வாக். 17-19.

ஈசாக்குப் பிறந்தபோது எவ்வளவாய் அந்தப் பிள்ளையை நேசித்திருப்பான். ஆனால், தன்னுடைய பூரண விசுவாசத்தைக் காட்டும்படி, நேசிக்கப்பட்ட தன் ஏக குமாரனையும் தேவனுக்கென்று தத்தம்பண்ண ஆயத்தமாயிருந்தான். கடைசிபரியந்தம் தேவனை நம்பினான்: (வாக். 18, 19) ஆதலால் தேவன் அவனைக் கனம்பண்ணினார்.

நாமும் அப்படியே கடைசிபரியந்தமும் தேவனை நம்பவேண்டும். அவர் நம்மிடத்தில் கேட்கிற எதுவோ அதையே அவருக்குப் பிரதிஷ்டை செய்யவேண்டும். அவரே நம்முடைய ஜீவியத்தில் முதன்மையாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் நாம் ஆபிரகாமைப் போல் அவரை விசுவாசிக்கிறதில்லை.

ஆகவே, அவனைப்போல் நம்மை முழுவதும் தேவனுக்கென்று ஒப்புக்கொடுப்போமாக.

## The Treasury

## பொக்கிஷசாலை

**'தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை.'**

2 தீமோ. 2. 9.

மார்ச்சு மாதம் சென்னையில் வேதபண்டிதராகிய உவைட்டெட் கண்காணியார் (Bishop Whitehead) சத்தியவேதம் இந்தியா தேசத்தில் பிரபலியம் ஆனதைப்பற்றித் திருஷ்டாந்தமாக ஒரு காரியஞ்

சொன்னார். அதாவது, ஏறக்குறைய இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் அவர் பங்காள தேசத்தின் நாட்டுப் புறங்களில் சுவிசேஷப் பிரசங்கங்கள் செய்யும்படி போனபோது சிலர் அவரிடத்தில் வந்து தங்கள் ஊரில் புதிய மார்க்கம் உண்டென்று சொன்னார்கள். Dr. Whitehead இதைப்பற்றி விசாரித்தபோது அவர்கள் நீங்கள் வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். அவர் அந்த ஊருக்குப் போனபோது அங்கே அநேகர் ஒரு புஸ்தகத்தை வணங்கினார்கள் என்றும், எல்லாரும் சேர்ந்து அதை வாசித்தார்கள் என்றும், கண்டு, இது என்ன புஸ்தகம் என்று கேட்டபோது, அவர்கள் அதை அவரிடத்தில் காண்பித்தார்கள். அது என்னவென்றால் பங்காள பாஷையில் மொழிபெயர்த்த மத்தேயு சுவிசேஷமே.

அந்த ஊரிலே உபதேசிமார் இல்லை. சுவிசேஷங்கள் இல்லை. இந்தச் சுவிசேஷத்தை வாசித்த அந்த ஊரார் தங்கள் கையிலகப்பட்ட சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதின் உத்தமத்தை யறிந்து அதினால் பக்திமார்க்கத்தைக் கண்டடைந்தார்கள்.

### ஞாபகமானது

பிள்ளைகளுக்கு வேத வாக்கியங்களையும், ஞானப்பாட்டுக்களையும் வீட்டிலேயும் ஓய்வுநாட் பள்ளிக்கூடங்களிலும் கற்றுக் கொடுப்பது வெகு நல்ல தென்பதற்கும், வாலிபப் பிராயத்தில் அவைகளைப் பற்றிய ஞாபகமானது அவர்களைத் தீமையினின்று விலக்கிக் காத்துக் கொள்ளக்கூடும் என்பதற்கும் திருஷ்டாந்தமாக ஓர் கதை சொல்லப் பட்டிருக்கிறது.

அதாவது: சீனா என்னும் தேசத்தில் பல நாளாய்க் குடித்து சூதாடி துன்மார்க்கமாய் நடந்துகொண்டிருந்த ஒரு ஐரோப்பிய வாலிபன், ஒருநாள் சூதாடிகள் வீட்டிலே உட்கார்ந்திருக்கையில், தெருவில் போகும் சில பிள்ளைகள் 'என்தன் ஆத்தும நேசரே' என்னும் ஞானப்பாட்டைப் பாடியதைக் கேட்டான். அந்தப் பாட்டை அவன் கேட்கும்போது, சிறு வயதிலே ஓய்வுநாட் பள்ளிக்கூடத்தில் தான் அதைக் கற்றுக்கொண்டதாக ஞாபகத்திற்கு வந்தது. அதோடு, அந்தப் பள்ளிக்கூடத்தில் பாவத்தைக்குறித்தும், தேவ அன்பைக்குறித்தும், இரட்சகரைக்குறித்தும் தான் கேட்டதையும் உணர்ந்தான். அதெல்லாவற்றையும் உணருகையில், தன்னுடைய தற்கால ஸ்திதியையும், அதின் அகோரத்தையும் பார்த்து, பிரமித்து, வெட்கப்பட்டு, அந்நாள் முதற்கொண்டு, துன்மார்க்கத்தை விட்டு விலகி, தன்னை முற்றிலும் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தானாம்.

---

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 66 நவம்பர் 1911

MADRAS

# வேதியர் விளக்கு

## Sermon Preparation and Delivery

By the Rev. N. Devasagayam

## பிரசங்கச் சிந்திப்பும் செய்முறையும்

(தொடர்ச்சி.)

### 3. நினைவுப் பொருத்தம் (Sequence of thought).

பிரசங்கிக்க எடுத்துக்கொண்ட வாக்கியம் ஒரே பொருளை விளக்குவதாயிருக்கவேண்டும் என்பது சொல்லியாயிற்று. அந்த ஒரு பொருளைப் பல கிளைகளாக்கித் தெரிவிப்பதே பிரசங்கியின் முக்கிய வேலை. ஒரு மரத்திற்கு வேர்முதல் கிளைகள் முதலியன இருப்பதுபோல் ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் அஸ்திபாரமும், முதற்பொருளும், கிளைப்பொருள்களும் இருக்கும். இவ்வாறு ஒருவன் எடுத்த பொருளைப் பல பிரிவுகளாக்கி விளக்குவது அவனுடைய கடமை. நினைவுடன் நினைவு சம்பந்தமாயிருப்பதுடன் எடுத்த முக்கியமான முதற்பொருளுடனும் சம்பந்தமாயிருக்கவேண்டும். உடம்பும் உறுப்புக்களும் அதது இருக்கவேண்டிய இடத்திலும் அளவுப்பிரமாணத்தின்படியும் இருந்தால்மாத்திரம்தான் பார்க்க இலட்சணமாயிருக்கும். சிறுத்த உடம்பும் பெருத்த தலையும் சூம்பின கைகளும் இருந்தால் அது குரூபமாயிருக்கும். அவ்வாறே பிரசங்கத்தின் கிளைகள் சரியான அளவுடையனவாய் இருக்கவேண்டும். தவிர, ஒவ்வொரு கிளைப்பொருளும் அதது இருக்கவேண்டிய இடத்திலிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, பாவி தேவபார்வையில் நீதியடைந்துகொள்ளுதல் என்பதை முதற்பொருளாய் வைத்துக்கொண்டு பிரசங்கிக்கக் கிளைப்பிரிவுகளை ஒருவன் பின் வருமாறு பகுத்துக்கொண்டான் என்று வைப்போம்:—

1. நீதிமானாக்கப்பட்டதினால் ஒருவனுக்கு வரும் பலன்.
2. நீதிமானாக்கப்பட்டதின் காரணம்.
3. நீதிமானாக்கப்படுதலின் தன்மை.

இது விகாரமும் அவலட்சணமுமான பொருட் பிரிவாகும். ஒன்றின் தன்மையைச் சொன்னபிறகே அதன் பலன், காரணம் இவற்

றைச் சொல்லலாம். மேலும், நீதிமானுக்கப்பாட்டின் தன்மையை ஒருவன் எதிர்மறை, உடன்பாடு ஆகிய இருபக்கத்திலும் விளக்கிக் கொண்டு வரும்போதே அதின் காரணத்தை இடையிட்டுச் சொல்லலாகாது. அதினால் நினைவுகளின் பொருத்தம் கெட்டு, கேட்போர் மனதில் தெளிவற்றுப்போகும். படிமேல் படி ஏறிப்போவதுபோல் நினைவுமேல் நினைவு தொடர்பாய் ஏறிப்போகவேண்டும். அதுபோலவே, ஒரு விஷயத்தின் தன்மையை விளக்கிக்கொண்டு வரும்போது அதை முடிவுசெய்யாமல் திடீரென்று கேட்போருடைய உணர்ச்சியை அலைத்து எழுப்பி சொல்லப்பட்ட விஷயத்தைக் கைக்கொள்ளத் தூண்டுவதும் பொருத்தமில்லாத பிரசங்கத்தை யுண்டாக்கும். விஷயத்தைக் கண்ணாடித் தெளிவாய்க் கேட்போருடைய புத்திக்கு விளங்க வைத்தபிறகே அவர்களுடைய உள்ளங்களைத் தட்டி யெழுப்பி சொன்ன விஷயத்தைச் செய்து நடக்கத் தூண்டலாகும். இதுவே தேவன் கைக்கொண்டொழுகும் முறை (எபி. 8. 10). மிகவும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது இது. எதுவெனில், பிரசங்கி எடுத்த திருவேத வாக்கியத்திலிருந்தே முழுப் பிரசங்கமும் முளைத்தெழும்ப வேண்டும். பெரும்பாலார் எடுத்த வாக்கியத்தை எங்கேயோ விட்டு, தம் மனதில் வந்தவாறே அதனுடன் பொருத்தமில்லாமல் பேசுவார்கள். அவ்வாறு பேசுகிறவர்களே திருவசனத்தைச் சிந்தித்து அறியாதவர்கள். அவர்கள் திருவசனத்தில் தாங்களே குருடராயிருந்துகொண்டு அவ்வாறு குருடராயிருப்பவர்களுக்கு வழிகாட்டத் துணியலாமா? அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஆண்டவர் 'ஐயோ' என்று கூறுகிறார். அது பலிக்காமல்விடுமோ?

## 4. இயற்கையான தொனியும் எளிதான பாஷையும்

## (Natural tone and easy language).

சிலர் பேசுகிறதற்கு ஒரு தொனியும் பிரசங்கிக்கிறதற்கு வேறு தொனியும் வைத்திருக்கிறார்கள். அல்லும் பகலும் பேசுகிற தொனி இயற்கைத் தொனி. பிரசங்கிக்கிறபோது அவர்களுக்கு அந்தத் தொனி மாறிப்போய் மூசாந்தொனியுண்டாகிறது. மூசாம் என்பது துலுக்கமொழி. அதற்குப் பள்ளிவாசலில் நின்று துலுக்கரை ஜெபத்துக்குத் தூண்டும்பொருட்டுக் கூவுகிறவன் என்பது அர்த்தம். மூசாந்தொனிப் பிரசங்கிமார் ஒரு நொடியில் சொல்லவேண்டிய சொல்லை ஒரு நிமிஷத்திற்குமேல் நீட்டுவார்கள். திருஷ்டாந்தமாக: 'ஆண்டவர் நம்மை மனந்திரும்பச் சொல்லுகிறார்' என்பதை, 'ஆண்-ட-வர் நம்-மை-ம-னந்-தி-ரும்-பச்-சொல்-லு-கி-றார்' என்று நீட்டுவார்கள்.



இந்தத் தொனி கேட்போரைத் தாராட்டி உறங்குவிக்கும். தவிர, விழித்துச் செவிதருவோருக்குப் போதுமான பொருட்பொலிவில்லாமல் விஷயத்தைச் சுருங்கவைத்தலாகிய குற்றத்தை யுண்டாக்கும். மேலும், சகலருக்கும் அருவருப்பாயுமிருக்கும்.

சில பிரசங்கிமார் தங்களுக்குச் சிறந்த பாஷை வருமுண்டு என்று காட்டுவதற்கு யாவருக்கும் சமமாய் விளங்காத பென்னம்பெரிய பதங்களை உபயோகிப்பார்கள். இவர்கள் சாகிறவர்களுக்கு ஜீவன் தருகிற ஆண்டவரைக் காட்டாமல் தங்களையே காட்டுகிறவர்கள். புறமதத்தாருக்குப் பிரசங்கிக்கும்போது அவர்களுக்குச் சர்வ சாதாரணமாய்த் தெரிந்த சாஸ்திர பதங்களை உபயோகிக்க நேரிடும். அவ்வேளைகளில் அவ்வாறு உபயோகிக்கவரும் அருஞ்சொற்களைச் செவ்வனே யாவருக்கும் விளங்க அர்த்தம் சொல்லி உபயோகப்படுத்தவேண்டும்.

இதுகாறும் சொன்னதே போதும். வேறு பல குறிப்புக்களையும் சொல்வதினால் இங்கு சொன்ன முக்கிய விஷயங்களின்மேல் கவனம் செல்லமாட்டாது. நல்ல பிரசங்கத்தை வல்லமையுடன் செய்ய இந்த நான்கு உத்திகளே வேண்டுமளவினவாம்.

(இன்னும் வரும்.)

# Epistle to the Philippians

**By the Rev. Henry Rice**

## பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

பிலிப்பிப் பட்டணமானது மகா அலக்சாந்தரின் தகப்பனாகிய பிலிப்பு அரசனால் கட்டப்பட்டது. அது கிழக்குக் கண்டத்துக்கும் மேற்குக் கண்டத்துக்கும் மத்தியிலுள்ள ராஜபாதையில் உபாயயுக்தமான விடத்தில் அமைந்திருந்தது. ஆகையால் அதைப்பற்றிப் பின்வருமாறு நன்குரைக்கப்பட்டிருக்கிறது. 'நாங்கள் ஆசியாக் கண்டத்தவர்க்கும் ஐரோப்பியருக்குமுரிய ஆசாரங்களாகிய அருவிகள் சங்கமமாகுமிடத்தில் நின்றுகொண்டிருக்கிறோம். பிலிப்பிப் பட்டணத்தில் சுவிசேஷம் பரம்புவதிலே கீழ்த்தேசத்திலிருந்து மேல்தேசத்துக்குக் கிறிஸ்துமார்க்கம் செல்லும் வழியைக் கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்' என்பதே. இப்பட்டணமானது ரோமைக் குடியேற்றுகும் கனத்தையும் பெற்றதாயிருந்தது. அதன் குடிகள் ரோமை நகரத்தாராயும் அந்நகரக் கோத்திரவழிகளில் ஒன்றைச் சார்ந்ததாகப் பேரெழுதப்பட்டவர்களாயும், ரோமை ஆட்சி சங்கங்களில் சம்மதச் சீட்டுக் கொடுக்கும் சிலாக்கியம் பெற்றவர்களாயுமிருந்தார்கள். இவர்கள்விஷயத்தில் ரோமைச் சட்டங்கள் திட்டவட்டமாய் அனுசரிக்கப்

பட்டன. மாகாணத் தேசாதிபதிகளாலல்ல தங்கள் சொந்த அதிகாரிகளால் ஆளப்பட்டுவந்தார்கள். ரோமைக் குடியேற்று என்றால் ரோமைநகரில் ஒரு பாகமானது இன்னொரு மாகாணத்தில் பெயர்த்து நாட்டப்பட்டதென்றர்த்தமாம். பவுல் தன் நிருபத்தில் பிலிப்பிப் பட்டணமானது ரோமைக் குடியேற்றென்னும் இந்த ஒப்பற்ற நிலைமையை சமயோசிதமாக நன்கு வழங்கியிருக்கிறார். அவர்கள் ரோமாபுரியின் குடிகள். அப்படியானால் ரோமை ராஜாங்கத்தின் கண்யத்தை அன்னியர் முன்பாகவும் அநாகரீக ஜனத்தார் முன்னிலையிலும் உயர்த்திக் காட்டவேண்டிய உத்தரவாதிகளாயிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களானவிஷயத்தில் தாங்கள் மோட்சநகரின் குடிகளென்பதையும் நினைத்து 'ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காகப் போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருந்து' யுத்தம் பண்ணக் கடமைப்பட்டவர்களென்றும் சொல்லுகிறார் (1. 27, 28). உள்ளபடி அவர்கள் தேவனது உடன்நகரத்தாராய் நடந்துகொள்ள வேண்டியவர்களே.

பவுல் பிலிப்பிப் பட்டணத்தை மூன்று முறை சந்தித்ததாகத் தெரிகிறது. முதலாவது அவர் செய்த இரண்டாம் மிஷனெரிப் பிரயாணத்தில் சீலா, தீமோத்தேயு, பிரியமான வைத்தியனாகிய லூக்கா என்பவர்களோடே ஏறக்குறைய கி. பி. 52-ம் ஆண்டில் சந்தித்தார். இரண்டாம் சந்திப்பு அதற்கு ஐந்து வருஷங்களுக்குப் பின் கி. பி. 57-ல் நடந்தது. அதற்கு அடுத்த வருஷத்தில் கடைசியாகச் சந்தித்தார். அதுமுதல் பிலிப்பியக் கிறிஸ்தவர்கள் ரோமையில் கைதியாயிருந்த பவுலுக்குதவியாகத் தங்கள் மனோற்சாகக் காணிக்கைகளை எப்பாப்பிரோதீத்துவின் மூலமாய்க் கொடுத்தனுப்பின காலபரியந்தம் அவர்களைப்பற்றி யாதொன்றும் சொல்லப்பட்டிருக்கவில்லையென்று பார்க்கிறோம் (2. 25, 30; 4. 10-18). இவன் மூலமாகத்தான் பவுல் இந்த நிருபத்தை அனுப்பினார். பிலிப்பியக் கிறிஸ்தவர்களுடன் பவுலுக்கிருந்த சம்பந்தம் எப்போதும் உத்தம நேசத்துக்குரியதாகவே இருந்தது. அவர்களை நேசிப்பதிலும் அவர்களுக்காக ஜெபிப்பதிலும் பவுல் ஒருக்காலும் தவறினதேயில்லை. அவருக்கு உண்மையாகவும் நன்றியாகவும் நடந்துகொள்வதில் அவர்களும் தவறினதுமில்லை. அவரது முதற்சந்திப்புதான் அதிக விசேஷம். அச்சமயத்தில்தான் பல முக்கிய சம்பவங்கள் நடந்தன. வழக்கம்போலவே சுவிசேஷமானது முதலாவது யூதருக்குப் பிரசங்கிக்கப்பட்டது. யூதர் சொற்ப பேர்தான் அங்கிருந்தனர். ஏனெனில் அது வியாபார ஸ்தலமாயல்லை சைன்ய ஸ்தானமாயிருந்தது. அதில் ஜெபாலயங்களுமில்லை. ஆனால் ஒரு சிறு ஜெபக்கூடம்மாத்திரம் பட்டணவாசலுக்குப் புறம்பே ஆற்றோரத்தில் ஜன சந்தடியில்லாமல் அமைதியை உத்தேசித்துக் கட்டப்பட்டிருந்தது. ஓய்வுநாளாராதனைக்கு அங்கே கூடிவரும் சபையில் பெண்களே அதிகமாயிருந்தார்கள். இச்சபையார் எல்லாருமே யூதரல்ல. எல்லாருமே அப்பட்டண வாசிகளுமல்ல. இந்நிருபத்தில் பெயர் சொல்லப்பட்டிருக்கிற லீதியாள் ஆசியாவிலுள்ள தியத்தீரா ஊராள். சாயத்தொழிலையிட்டு இங்கு வந்தவள். சுவிசேஷமானது முதல் முதல் ஐரோப்பாவில் இந்த அற்பமான விடத்திலே பக்தியுள்ள பெண்களடங்கிய இந்தச் சிறு சபைக்குத்தான் பிரசங்கிக்கப்பட்டது. பிரசங்கிமார் நின்றவிதமோவென்றால் பவுலும் அவன் தோழரும் தரையில் 'உட்கார்ந்து' அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்குப் பிரசங்கித்தார்கள் என்றவாறு இருந்தது. மக்கெதோனியாவில் சுவிசேஷத்தைக் கூறத் துரோவாப் பட்டணத்திலிருந்து தமது ஊழியரை யழைத்துவந்த கர்த்தர் லீதியாளின் இருதயத்தைத் திறந்தார். அவள் விசுவாச அறிக்கைசெய்து உடனே தானும் தன் வீட்டாருமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுலின் சரித்திரத்தில் முழுக் குடும்பமாக அவரால் சபையிற் சேர்க்கப்பட்ட சங்கதி முதல் முதல் இங்கேதான் வருகிறது. அடுத்தாப்போல் குணப்பட்ட ஒரு முக்கியமான ஆத்துமா ஒரு அடிமைப்பெண்ணே. அவள் குறிசொல்லுகிற ஆவியைக்கொண்டிருந்து பல எஜமான்களுக்குரிய பொதுச் சொத்தாயிருந்தாள். அவ்வெஜமான்கள் இவளைக்கொண்டு பிலிப்பிநகர்ப் பேதைகளை ஏமாற்றி அதிக பணம் பறித்துவந்தார்கள். அவர்களுக்கு உள்ளபடி மிகுந்த ஆதாயத்துக்கிடமாயிருந்த இந்த அடிமை குணப்படவே ஊழியமற்றவளானாள். அவர்களுக்குச் சடுதியில் நஷ்டமுண்டாயிற்று. ஆனதால் அப்போஸ்தலருக்குக் கொடிய துன்பமுண்டானது. பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டனர். ஆயினும் இதினால் சிறைச்சாலைக்காரனும் தன் குடும்பத்தோடு ஞானஸ்நானம் பெற ஏதுவுண்டாயிற்று. இந்த மூன்று குணப்படுதலும் மகா விசேஷித்தது. இம்மூவரும் தேசாச்சார ஜனாச்சார மதாச்சார விஷயங்களில் ஒருவருக்கொருவர் முற்றும் பிரத்தியேகமானவர்கள். ஒருத்தி ஆசியா வாசி, மற்றவள் கிரேக்கை நாட்டாள், மூன்றாம் ஆள் ரோமைத் தேசத்தான். ஒருத்தி தியத்திராவூர், இரத்தாம்பர வியாபாரி, மற்றவள் சுதேச அடிமைப் பெண், மூன்றாம் ஆள் ரோமைச் சிறைச்சாலைக்காரன். 'யூதனென்றுமில்லை கிரேக்கனென்றுமில்லை; அடிமையென்றுமில்லை சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை; எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்' என்ற கிறிஸ்து மார்க்க உன்னத சத்தியம் இதில் விளங்குகிறது. மேலும் இக்குணப்படுதல்களின் வரிசைமுறையும் கவனிக்கப்படத்தக்கது.

முதலாவது ஒரு புரோசலித்து (Proselyte) (புறமதத்திலிருந்து யூதமதம் புகுந்தவள்), அடுத்தவள் கிரேக்க ஸ்திரீ, கடைசியில் ஒரு ரோமன். உலகமெங்கும் கிறிஸ்துமார்க்கம் விர்த்தியடைந்துவரும் முறையை இது காட்டுகிறது. மேலும் கிறிஸ்துமார்க்கமானது தன் வல்லமையைச் செலுத்துகிற இன்னொரு பெரிய ஜனாச்சார ஒழுக்கத்தையும் இது விளக்கும். ஒரு ஸ்திரீயையும் ஒரு அடிமைப்பெண்ணையும் பற்றி விசேஷித்துச் சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் பெண்களின் நிலைமை உயர்வடைவதும் அடிமைத்தனம் ஒழிக்கப்படுவதுமான கிறிஸ்துமார்க்கத்தின் வெற்றிச் சிறப்பை இது விசிதப்படுத்துகிறது.

கவனிக்கப்படத்தக்க இன்னொரு சத்தியமென்னவென்றால் சுவிசேஷமானது முதலாவது ஸ்திரீகளுக்கே பிரசங்கிக்கப்பட்டு, ஸ்திரீகளே முதல் முதல் குணப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது போலவே, பிலிப்பியச் சபையின் சமாதானமும் அதில் செல்வாக்குடையவர்களாயிருந்த இரண்டு ஸ்திரீகளின் சண்டையினாலேயே குலைக்கப்பட்டதென்றும் காண்கிறோம். இவ்விரு மாதரும் சுவிசேஷ பிரபல்யவிஷயத்தில் பவுலுக்கு வைராக்கியத்துடன் உதவிசெய்ததாய் பவுல் நன்றியறிதலுடன் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தைப்பற்றிக் கல்விமான்களெல்லாம் பொதுப்பட ஒத்துக்கொண்டிருப்பது என்னவென்றால் பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தபோது கி. பி. 61-வது வருஷக் கடைசியிலாவது 62-வது வருஷ ஆரம்பத்திலாவது இதை எழுதியிருப்பார் என்பதே. இதை யெழுத நேரிட்ட சந்தர்ப்பமாவது, பவுல் சிறையிலிருக்கையில் பிலிப்பியக் கிறிஸ்தவர்கள் மனோற்சாகமாகப் பணஞ்சேர்த்து எப்பாப்பிரோதீத்துவின்மூலமாய்ப் பவுலுக்கு அனுப்பினார்கள். இவன் ரோமைக்கு வந்தபோது மிகவும் வியாதிப்பட்டு மரணத்துக்குச் சமீபமானான் (2. 27, 30). இவன் சுகப்பட்டுப் பிரயாணம் செய்யத்தக்கவனானபோது பவுலின் கேள்விக்கிணங்கிப் பிலிப்பிப் பட்டணத்துக்குத் திரும்பிவரச் சம்மதித்தான். ஏனெனில் அங்கிருந்த அவன் சிநேகிதர்கள் அவன் வியாதிப்பட்டதைக் கேள்விப்பட்டு மிகவும் ஏக்கமுற்றிருந்தார்கள். ஒருவேளை இவன் அந்தச் சபையில் ஒரு உத்தரவாதமான ஊழியனாயிருந்திருப்பான். ஆனதால் அவன் கடமை தவறிப்போமா என்று பவுல் அவனைத் தாமதப்படுத்த மனமில்லாமலிருந்திருப்பார். இச்சமயத்தை அனுகூலமாய்க்கொண்டு பவுல் பிலிப்பிய சபையின்பேரில் தனக்கிருக்கும் அன்பும் அவர்களின் ஆவிக்குரிய க்ஷேமத்தைப்பற்றித் தனக்கிருக்கும் ஆவலும் நிறைந்து விளங்க இந்த நிருபத்தை யெழுதி யனுப்பினார்.

(இன்னும் வரும்.)



# Eternal Life

**By the Rev. C. H. Monahan**

## நித்திய ஜீவன்

### முதல் பாகம்

**'தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்.'**

1 யோவா. 5. 11.

1. நித்திய ஜீவன் என்பதும் முடிவில்லாத ஜீவன் என்பதும் ஒன்றல்ல, முடிவில்லாத ஜீவன் பிசாசுக்கிருக்கலாம். ஆனால் அது நித்திய ஜீவன் அல்ல. தேவனோடு ஐக்கியப்படுவதே நித்திய ஜீவன். இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்தின அவர் மெய்யான தேவனும் நமக்கு நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1 யோவா. 5. 20.)

தம்முடைய ஜீவனையே கிறிஸ்துவுக்குள் நமக்குத் தந்திருக்கிறார். அநாதி நித்தியமாய்ப் பிதாவினிடத்திலிருந்ததும் நமக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற ஜீவனை நாம் கண்டடைந்து களிகூரத்தக்கதாக அந்த ஜீவனாகிய கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார். சுயம்புவாயிருக்கிற தேவனுடைய ஜீவன் இன்னதென்று முற்றிலும் அறிவது நமது புத்திக்கு எட்டாத காரியமாயிருந்தாலும் சத்திய வேதத்தைக்கொண்டு அச்சீவனைக்குறித்துச் சில முக்கியமான காரியங்களைக் கற்றறியலாம்.

தேவன் ஒளியாயிருக்கிறாரென்றும், அவர் அன்பாயிருக்கிறாரென்றும் இந்நிருபத்தில் சொல்லிய போதனையைக் கவனிக்குமிடத்தில் அவர் ஜீவனைக்குறித்து நாம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடியது என்னவெனில், பரிசுத்த அன்போடுகூடிய ஐக்கியமே அந்த ஜீவன். அந்த ஜீவன் வெளிப்பட்டு மனுஷருக்கு ஒளியாய்விட்டது (யோவா. 1. 4). மெய் ஒளியாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனுண்டு (யோவா. 3. 36; 1 யோவா. 5. 13). விசுவாசிக்கிற நாம் பரிசுத்த அன்போடுகூடிய ஐக்கியத்தில் பங்கு பெற்றிருக்கிறோம். நம்முடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடுமிருக்கிறது. (1 யோவா. 1. 3.)

2. மேற்சொல்லிய அனுபோகம் வீண் இறுமாப்பினால் ஏவப்பட்டு நாம் சாதிக்கிற அபத்தமா அல்லது நிச்சயமுள்ள மெய்ப்பொருளா? இயேசுவின் அன்பு உண்மையா? அவர் என்னுடைய பரம சிநேகிதர் என்றும், நான் அவரோடு ஐக்கியப்பட்டேன் என்றும் பல விசுவாசிகள் சொல்லுவதை நம்பலாமா? இயேசுவின் அன்பு

மாயையே என்று சொல்லவேண்டுமானால் கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாரிலும் நிர்ப்பாக்கியமுள்ளவர்களாயிருப்போம். பூர்வகாலத்தில் கொரிந்து பட்டணத்திலுள்ள ஒரு செவிடன் ஒருவருமில்லாத நாடகசாலைக்குப்போய் அநேக மணிநேரம் உட்கார்ந்து தலையாட்டிக்கொண்டிருப்பானும். யாராவது அவனைப் பார்த்து, 'அப்பா நாடகமில்லாத சமயத்தில் இவ்விடத்திலுட்கார்ந்து தலையாட்டிக்கொண்டிருக்கிறாயே இதென்ன' வென்று கேட்டால், அந்தச் செவிடன் 'இனிய ராகம் எனக்குக் கேட்கிறதே, உனக்குக் கேட்கவில்லையா' என்று தலையாட்டிக்கொண்டே உட்கார்ந்திருப்பானும்.

அதுபோலவே இயேசுவின் நண்பர்களாகிய நாம் நம்முடைய மனோபாவனையினாலே ஏமாந்து, அவருடைய ஓசையைக் கேட்கிறோம். அது மகா இனிமையாயிருக்கிறதென்று சொல்வது பொருளில்லாத பைத்தியமா? அப்படியல்லவே. ராகத்தைக் கேட்கிறேன் என்று சொன்ன செவிடன் ஒருவன்தான். இயேசுவின் ஓசையைக் கேட்கிறோமென்று சொல்லுகிறவர்கள் கோடானு கோடி பேர். அந்த நாடகசாலைக்குப்போய் ஒன்றும் நடவாத காலத்தில் இரண்டு செவிடராகிலும் அதே ராகத்தைக் கேட்டதாக நினைத்திருப்பார்களோ? இயேசுவின் நாமத்தைப்பற்றிய இனிய ராகத்தைக் கேட்கிறவர்கள் இரண்டு பேருமல்ல ஆயிரம் பேருமல்ல கணக்கில்லாத திரள் கூட்டமாயிருக்கிறார்களே.

3. இந்த நித்திய ஜீவன் மெய்ப்பொருளாயிருந்தால் மறைப்பொருளுமாயிருக்கவேண்டும். எப்படியென்றால், நாம் உலகத்திலே ஜீவனின் பலனாகிய ஜீவியத்தைக் காண்கிறோமேயொழிய நாம் எந்த ஜீவ வஸ்துவின் உள்ளான ஜீவனையும் காணமுடியாது. மெய்யான ஜீவன் அந்தரங்கத்தில் மறைந்திருக்கிறது. அதற்கிசைவாக கொலோ. 3. 3-ல் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறது. நம்முடைய ஆத்துமாவிலே தேவனும் நாமும் தவிர ஒருவரும் சேரக்கூடாத உள்ஸ்தலம் ஒன்றிருக்கிறது. நாம் மெய்யான விசுவாசிகளாயிருந்தால் கிறிஸ்து நமது உள்ஸ்தலத்திலே வாசம்பண்ணுகிறார். அங்கே நாம் ஆசாரியர்களாய் நம்முடைய இருதயமாகிய ஆலயத்தில் திருத்தொண்டு இடைவிடாமல் செலுத்துகிறவர்களாயிருக்கிறோம். அல்லது வேறு விதமாய்ச் சொல்லவேண்டுமானால் நம்முடைய உள்ளான அறையாகிய இருதயம் விருந்துசாலையைப்போலிருக்கிறது. அதிலே கிறிஸ்து நம்மோடு போஜனம்பண்ணுகிறார், நாமும் அவரோடு போஜனம்பண்ணுகிறோம் (வெளி. 3. 20). அல்லது நம்முடைய உள்ளத்தில் கிறிஸ்துவாகிய ஜீவ ஊற்று இருக்கிறபடியினால் அந்த உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடுகிறது. (யோவா. 7. 38.)



என் சகோதரனே உன்னுடைய உள் ஸ்தலம் பரிசுத்த தேவனுக்கு ஆலயமாயிருக்கிறதா? அதிலுள்ளதெல்லாம் ஒழுங்காயும் அழகாயுமிருக்கிறதா? அல்லது பாழான கோவிலைப்போல் தூசி, அழுக்கு, தூரிஞ்சல் முதலியவைகளுக்கு இருப்பிடமாயிருக்கிறதா?

நித்திய ஜீவன் உள்ளத்திலே கிறிஸ்துவுடன் மறைந்திருந்தபோதிலும் அதின் பலாபலன்கள் வெளிப்படும். உள்ளான இந்த ஜீவன் வெளியரங்கமான ஜீவியத்தை மாற்றும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஜீவியத்தில் மாறுதல் இல்லாவிட்டால் நமக்கு நித்திய ஜீவன் உண்டென்று சாதிப்பது வீண்.

4. நித்திய ஜீவன் எங்கே உண்டோ அங்கே ஒருமைப்பாடுமிருக்கும். கிறிஸ்துவை அறியாதவர்களுக்குச் சமாதானமில்லை. தங்களிடத்தில் தாங்களே ஒற்றுமையில்லாதவர்களாயிருக்கிறார்கள். 'கள்ள மனம் துள்ளும்' என்கிறபடி அவர்களுடைய மனமே அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடுகிறது. அவர்கள் மாம்ச சிந்தைக்கு உட்பட்டவர்கள். ஆனாலும் ஆவியின் சிந்தை அப்போதைக்கப்போது அவர்களை வாதிக்கிறது: ஆவிக்குட்பட்டவர்களோ திவ்விய சமாதானம் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் ஆவியின் சிந்தை ஜீவனும் சமாதானமுமாம் (ரோ. 8. 6). அவர்கள் ஆவியினால் சரீரத்தின் செய்கைகளை அழித்து ஆவியின் ஒருமைப்பாட்டில் மகா சந்தோஷத்தோடு வாழ்கிறார்கள். அதுமாத்திரமல்ல நித்திய ஜீவனை அடைந்தவர்கள் தேவனுக்கும் அவரால் அதிகாரம்பெற்ற யாவருக்கும் கீழ்ப்படிவதே மெய்யான சுயாதீனமென்று கற்றறிந்திருக்கிறார்கள். அவர்கள் அன்பினால் ஏவப்பட்டுத் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறார்கள். ஆதலால் முன்பு தங்கள் மனச்சாட்சியினாலும், அதிகாரிகளுடைய நீதிச் சட்டங்களினாலும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தினாலும் உண்டாயிருந்த விரோதத்தை நீக்கி இப்பொழுது தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் தங்களிடத்திலும் சமாதானம் பெற்றிருக்கிறார்கள்.

5. பரிசுத்த அன்போடுகூடிய ஐக்கியத்தில் பங்குள்ளவர்கள் சொல்லிமுடியாத மகிழ்ச்சியும் கெம்பீரமுமுள்ளவர்களாயிருக்கவேண்டும். மெய்யான ஐக்கியம் எங்கே யுண்டோ அங்கே சந்தோஷமும் மகிழ்ச்சியுமுண்டாகும் (1 யோவா. 1. 3, 4). தேவனுடைய ராச்சியம் பரிசுத்தாவியினால் உண்டாகும் சந்தோஷமாயிருக்கிறதே (ரோ. 14. 17). தேவனுக்குள் மறைந்திருக்கிற ஜீவியம் மெய்யான சந்தோஷத்தினால் நிறைந்திருக்கிறது. பூர்வீகத் திருச்சபையில் மிகவும் நன்குமதிக்கப்பட்ட ஒரு புத்தகத்தில் சொல்லியிருக்கிறதென்னவென்றால் 'உன் பொல்லாத விசனத்தை நீக்கிப்போடு. அது அநேக

பாவங்களுக்குக் காரணமாயிருப்பதுமல்லாமல் உனக்குள்ளிருக்கிற பரிசுத்தாவியை விசனப்படுத்தும்' என்பதே. ஆதி திருச்சபையார் சொல்லிமுடியாத உபத்திரவங்களை அடைந்தாலும் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருந்து இந்த நித்திய ஜீவ ஐக்கியத்தைப்பற்றி மேன்மை பாராட்டினார்கள். திருச்சபை சரித்திரம் முழுவதையும் நாம் ஆராய்ந்தாலும் இயேசுவின் ஆவி எங்கே, எப்பொழுது, யாரிடத்தில் பலத்த கிரியைகளைச் செய்தாரோ அங்கே, அப்பொழுது, அவர்களிடத்தில் சொல்லிமுடியாத சந்தோஷமுமிருந்ததென்று நாம் பார்க்கிறோம். தேவன் நம்முடைய பட்சத்தில் இருக்கும்போது நாம் சந்தோஷப்படாமலிருப்பது எப்படி? கிறிஸ்து நம்முடைய இருதயத்தில் மறைந்திருந்தால் நித்திய ஜீவ ஊற்றாகிய அவரிடத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகளைப்போலொத்த சந்தோஷம் வெளிப்படாமலிருப்பது எப்படி? அநேகருக்கு நித்திய ஜீவனில்லை என்பதற்கு அவர்களுடைய முறுமுறுப்பும் கவலையும் விசனமுமே போதுமான அத்தாட்சி.

## A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

### பிலாத்தும் ஏரோதும்

இந்தச் சமயத்தில் ஏரோது எருசலேமில் இருந்தான். பிலாத்து இயேசுவை ஏரோதுவினிடம் அனுப்பின நோக்கம் அவரை விசாரணை செய்யவோ அல்லது அவனுடைய ஆலோசனைக்காகவோ தெரியாது.

ஏரோது. புதிய ஏற்பாட்டில் அநேக ஏரோதுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இந்த ஏரோது, ஏரோது அந்திப்பா என்று அழைக்கப்பட்டான்.

மத். 14. இவன் யோவான்ஸ்நானகனைச் சிரச்சேதம் பண்ணினவன். ஆனால் அக்காலத்தில் சத்தியத்தைக்குறித்து உணர்த்தப்பட்டான். ஒருவேளை பாவத்தைக்குறித்து உணர்வுள்ளவனாயிருக்கலாம். இவன் அதிக காலமாய் தான் செய்ததைக்குறித்துப் பயமுடையவனாயிருந்தான் (மத். 14. 2, 9; லூக். 13. 31). அந்த நாளிலிருந்து



அவன் வரவர கொடிய துன்மார்க்கனாகிச் சிற்றின்ப சந்தோஷத்தை நாடினவனாயிருந்தான்.

அவன் இயேசுவைக் காண வாஞ்சையாயிருந்தான்.

(1) ஒரு ரோம தேசாதிபதியினால் அளிக்கப்பட்ட உபசாரமாயிருந்தது.

(2) அவன் கிறிஸ்துவை ஒரு சமர்த்துள்ள மாந்திரீகன் என்று நினைத்தான். அவர் தன்னண்டை வந்தபடியால் ஒருவகையான களிப்படையலாமென்று நினைத்து அநேக கேள்விகளால் அவரை வினவினான்.

கிறிஸ்து ஏன் மவுனமாயிருந்தார்?

(1) இந்தத் துன்மார்க்கனுடைய நூதன விருப்பத்தைத் திருப்திசெய்ய அவருக்குப் பிரியமில்லை.

(2) ஒருவேளை தம்முடைய பிரசன்னமும், முகப் பார்வையும் யோவான்ஸ்நானகனுடைய எச்சரிப்பான வார்த்தைகளை அவன் ஞாபகத்தில் கொண்டுவருமென்று அவர் நினைத்திருக்கலாம்.

இயேசு மௌனமாயிருந்தது அவருடைய மூடத்தனமென்று ஏரோது நினைத்தான். அவர்கள் நிந்தையான எக்களிப்புடன் இயேசுவை அவ்விடத்தினின்று அப்புறப்படுத்தினதை மனோபாவனை செய்வோமாக.

குறிப்பு. பாவத்தின் பலன்களைக் கவனியுங்கள். ஏரோது கிறிஸ்துவைப் பரிகாசம் பண்ணத்தக்கதாகத் தன் மனச்சாட்சியைச் செத்த மனச்சாட்சியாக்கிப்போட்டான்.

கிறிஸ்து திரும்ப பிலாத்துவினிடம் போதல்.

நியாயத்தைச் செய்யவேண்டிய உணர்வையும் யூதர்களினிமித்தம் பயப்படும் பயத்தையும்பற்றிய போராட்டத்தை இதிலிருந்து கவனித்துப் பாருங்கள். பிலாத்தும் ஏரோதும் இயேசு குற்றமற்றவர் என்று அறிந்தார்கள்.

1. பிலாத்து கிறிஸ்துவை விடுதலைசெய்ய எடுத்த முதல் பிரயாசை.

லூக். 23. 13–16. இந்த ஆலோசனை அநீதியானது. இயேசு ஒரு குற்றத்தையும் செய்யாதவராயிருந்தும் யூதர்களைப் பிரியப்படுத்த அவரைச் சிட்சிப்பதாகச் சொல்லுகிறான்.

மத். 27. 19. இயேசு ஏரோதுவினிடம் அனுப்பப்பட்டிருந்த போது பிலாத்து நடந்த காரியங்களை அரமனைக்குள் இருந்த தன் மனைவிக்கு அறிவித்திருக்கலாம். பிலாத்துவை இத்தனை பெரிய அநி

யாயத்தினின்று காக்கத் தேவன் அவன் மனைவியின்மூலமாய் அச்செய்தியை அனுப்பியிருக்கக்கூடுமென்று நிதானிக்கலாம்.

2. பிலாத்து கிறிஸ்துவை விடுதலைசெய்ய எடுத்துக்கொண்ட இரண்டாவது பிரயாசை.

*மாற்.* 15. 6-15. ஒரு குற்றவாளியை விடுதலை செய்யும்படி திரள் கூட்டமான ஜனங்கள் அரமனை முற்றத்துக்குள் பிரவேசித்தார்கள். பிலாத்து இயேசுவைச் சிபார்சு செய்கிறான். இதினால் அவன் இயேசுவைக் குற்றவாளியென்று தீர்க்கிறான். இதற்குமுன் அவனே அவரை இரண்டுதரம் குற்றமற்றவரென்று சொல்லியிருக்கிறான். ஜனங்கள் இயேசுவைத் தெரிந்துகொண்டிருப்பார்கள்; ஆனால் ஆசாரியரும் வேதபாரகரும் பரபாசைக் கேட்கும்படி ஜனங்களை ஏவினார்கள். ஒருவேளை ஜனங்களே தெரிந்துகொள்ளும்படி பிலாத்து பரபாசை அழைப்பித்து அவனை இயேசுவின் பக்கத்தில் நிறுத்தி அவர்கள் இருவரையும் ஜனங்களுக்குமுன் நிற்கும்படி செய்திருக்கலாம். இயேசுவை விடுதலைசெய்யும்படி மனதாய் இரண்டுமுறை அவரைக் குற்றவாளியாகத் தீர்த்து இவ்விதமாய்த் தன்னைக் கண்ணிக்குட்படுத்தினான்.

*மத்.* 27. 24. இவ்விதமாய்ப் பிலாத்து தன் உத்தரவாதத்தினின்று தன்னை விடுதலையாக்கிக்கொள்ள முடியுமோ? இது அப்பிரயோஜனமும் கோழைத்தனமுமான கிரியையாயிருக்கிறது.

வாரினால் அடித்தல். *மத்.* 27. 26-30; *மாற்.* 15. 15-20; லூக். 23. 26; *யோவா.* 19. 1-4.

வாரினால் அடித்தல். எல்லாக் கைதிகளும் சிலுவையில் அறையப்படுவதற்குமுன் வாரினால் அடிக்கப்படுவது வழக்கம். அவர்கள் ஒரு தூணில் இறுகக் கட்டப்பட்டு முனையில் இரும்புக் குண்டுகள் உள்ள சவுக்கால் அடிக்கப்படுவார்கள்.

பரியாசம். போர்ச்சேவகர்கள் ஒரு பரியாசமான மகுடாபிஷேகத்தை நடப்பித்தார்கள். பொறுமையும் மனத்தாழ்மையுமுள்ள கிறிஸ்துவுக்கு இந்த முரட்டுத்தனமான பரியாச நிந்தை எவ்வளவு மனவருத்தத்தை உண்டாக்கியிருக்குமென்று பாருங்கள்.

3. பிலாத்து இயேசுவை விடுதலைசெய்ய எடுத்த மூன்றாவது பிரயாசை.

*யோவா.* 19. 4-16. ஒருவேளை அவர்கள் இயேசுவை அடித்துக்கொண்டிருக்கும்போது பிலாத்து அரமனைக்குள் போயிருக்கலாம். அப்பொழுது அவன் மனைவி அவரை இரட்சிக்கும்படி இன்னொரு விசை முயற்சிக்க துரிதப்படுத்தியிருக்கலாம்.



'இதோ இந்த மனிதன்.' அவர்கள் அவரைப் பார்ப்பதினால், அவர் தீங்கற்றவர் என்பதை நினைத்து அவர்களுக்கு இரங்குவார்களென்று நினைத்தான்.

*யோவா.* 19. 7. இயேசுவைக் குற்றப்படுத்த அவர்கள் ஏற்படுத்திய குற்றத்தை முதலாவது சொன்னது இதுதான். இதைச் சொன்னால் பிலாத்து நகைப்பானென்று அவர்கள் எண்ணினார்கள்.

இக்காரியம் பிலாத்துவை அதிகமாய்ப் பயப்படுத்தினது. ஏனென்றால் அவன் வணங்கிய தேவர்களைப்பற்றிய கதைகளில் தேவர்கள் இவ்விதமாய் மனிதரூபங்கொண்டு உலகத்தில் வந்திருக்கிறார்களென்று அவன் அறிந்திருந்தான்.

*யோவா.* 19. 9. இயேசு ஏன் மவுனமாயிருந்தார்? தான் விடுதலையாக்கப்பட அவருக்குப் பிரியமில்லை.

*யோவா.* 19. 10. அவன் கிரியைகள் அவனை அடிமையென்று காண்பித்தபோதிலும் தன் அதிகாரத்தைக்குறித்து அவன் எவ்விதமாய்ப் பெருமை பாராட்டுகிறான் என்று பாருங்கள்.

*யோவா.* 19. 12. யூதர்கள் அவனைக்குறித்து இராயனுக்குப் பிரியாது செய்வதாகப் பயமுறுத்துகிறார்கள். கடைசியாக, இச்செய்கை அவனை மேற்கொண்டது.

பிலாத்துவின் நடக்கையைப்பற்றிய விபரம்.

அவனுடைய முந்திய பாவக் கிருத்தியங்கள் அவனை அடிமையாக்கிற்று. தான் விசாரிக்கப்படுவதைக்குறித்துப் பயந்தான். ஆகையால் அவன் யூதர்களுக்கு அடிமையானவன். அவன் நியாயத்தை நடப்பித்து அதினால் வரும் பலாபலன்களை எதிர்பார்த்திருக்கவேண்டும்.

## The Treasury

## பொக்கிஷசாலை

'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.' *மாற்.* 14. 38.

நாம் எப்பொழுதும் விழித்திருக்கவேண்டும் என்பதற்கு இசைவாக மார்ட்டின் லூதர் என்பவர் ஒரு உவமையை எழுதினார். அதாவது, ஒருநாள் பிசாசானவன் தன்னுடைய ஊழியரையும், தூதரையும் தன் சந்நிதிமுன் நிற்கும்படி வரவழைத்தான். அவர்கள் வந்து நிற்க, தாங்கள் ஒவ்வொருவரும் செய்துவந்த வேலையைப்பற்றிச் சொல்லும்படி கேட்டான். அப்போது ஒருவன் எழுந்து, கொஞ்சக்காலத்துக்கு முன்பு இயேசுகிறிஸ்து பாடுபட்ட பரிசுத்த ஸ்த

லத்தைப் போய்ப் பார்க்கும்படி கப்பல் ஏறின சில கிறிஸ்தவ யாத்திரிகரைக் கண்டு, அந்தக் கப்பலின்மேல் அடிக்கும்படிக்கும், பெரும் புயல் உண்டாகும்படிக்கும், நாலு திசைகளினின்று காற்றானது வீசும்படிக்கும் கட்டளைகொடுத்தேன். அதின்படி காற்று வீசினது: பெரும் புயல் உண்டாயிற்று: கடல் கொந்தளித்தது: கப்பலும் அதிலுள்ளவர்களும் சமுத்திரத்திலே அமிழ்ந்து யாத்திரிகர் எல்லாரும் மாண்டார்கள் என்று சொன்னான். அதற்குப் பிசாசானவன், அதினால் என்ன? அவர்களுடைய ஆத்துமாக்கள் தேவனோடிருக்கின்றன அல்லவா? என்றான்.

அதின் பிறகு இன்னொரு அசுத்த ஆவி எழுந்து சொன்னதாவது, நான் வனாந்தரத்தில் உலாவி, அதில் சுற்றித் திரிந்துபோகையில் சில கிறிஸ்தவ சந்நியாசிகள் ஜெபம்பண்ணுகிறதைக் கண்டு, சிங்கங்களைக் கூப்பிட்டு அவர்களைப் பட்சிக்கும்படி அனுப்பிவிட்டேன். அப்படியே சிங்கங்கள் போய், அவர்கள்மேல் பாய்ந்து அவர்களைக் கொன்று, அவர்களுடைய எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டன.

அதற்குப் பிசாசானவன் அதனால் என்ன பிரயோஜனம்? அவர்களுடைய ஆத்துமாக்கள் கர்த்தரண்டை போய்ச் சேரவில்லையாவென்று கோபித்துச் சொன்னான்.

கடைசியாக இன்னொருவன் எழுந்து நின்று தன் செய்தியைச் சொன்னான். நான் பத்து வருஷக்காலமாக ஒரே கிறிஸ்தவனை விழிப்பில்லாதவனாகவும், ஆவிக்குரிய விஷயங்களிலே தூங்குகிறவனாகும்படி பிரயத்தனஞ்செய்தேன். கடைசியாகக் காரியம் வாய்த்தது: இப்போது அவன் உணர்வில்லாதவனும் விழிப்பில்லாதவனுமாயிருக்கிறான் என்றான்.

அப்போது சாத்தான் கெம்பீரித்துச் சந்தோஷப்பட்டான். பாதாளத்தின் நட்சத்திரங்கள் எல்லாம் சந்தோஷத்திற்காகப் பாடின.

பிசாசானவன் ஒருபோதும் தூங்குகிறதில்லை என்றும், அவன் கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் எப்போதும் அலைந்து திரிகிறானென்றும் நாம் உணர்ந்து எக்காலத்திலும் விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.



# Korean Christians

**By the Rev. V. J. R. Asirvatham**

## கொரிய நாட்டுக் கிறிஸ்தவர்கள்

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க மிஷனெரிமார் முதல்தடவையாக 1884-ம் வருஷத்தில் சீனாவுக்கு வடக்கேயுள்ள கொரியா தேசத்துக்குச் சென்றனர். 1887-ம் ஆல கிறிஸ்மஸ் பண்டிகை நாளில் ஏழே ஏழு கிறிஸ்தவர்கள்மாத்திரம் தங்கள் முதல் ராப்போஜனத்தை ரகசியமாய்க் கொண்டாடினார்கள். இப்போதோ, அந்தத் தேசம் சுவிசேஷ வேலைக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் கொரியக் கிறிஸ்தவர்களின் தொகையை 200,000-க்குக் கணிக்கலாம். வருஷத்துக்கு வருஷம் நூற்றுக்கு முப்பது வீதம் அதிகப்பட்டு வருகிறது. தேசத்தின் சகல பாகங்களிலும் தேவ ஆவியானவர் வல்லமையான செயல்களை நடத்திவருகிறார் என்பதை அத்தேசத்துக்குப் போகிறவர்கள் காணலாம். சகல வகுப்பாரும் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் கொண்டுவரப்படுகிறார்கள். கொரிய ஜனங்கள் கிறிஸ்துவைப்பற்றிக் கேட்க அதிக ஆவலுள்ளவர்களாயிருக்கிறபடியினால், ஜனங்களைத் தேடிப்போகவாவது, அல்லது நூதனமான வேலையைச் செய்யவாவது, மிஷனெரிமாருக்கு நேரமில்லையாம்.

கொரியக் கிறிஸ்தவர்களில் சில விசேஷித்த லக்ஷணங்கள் காணப்படுகின்றன.

1. அவர்கள் வேதத்தைக் கையாடுகிற கிறிஸ்தவர்கள். புஸ்தகங்களில், அதிக விற்பனையாகிற புஸ்தகம் வேதாகமம். ஒவ்வொரு சபையின் அங்கத்தவர்களில், ஆறில் ஒரு பகுதி வேத விர்த்திக்காக ஸ்தாபனஞ் செய்யப்பட்டிருக்கும் வகுப்புகளில் சேர்ந்திருக்கிறார்கள். இவைகள் முக்கிய மிஷன் பட்டணங்களில் சிலநாட்களாகவும், வாரங்களாகவும் நடந்தேறும். அதற்கென்று, இக்கிறிஸ்தவர்களில் அநேகர் பத்து நாளாய் கால்நடையாய் நடந்துவருவார்களாம்.

2. அவர்கள் ஜெபிக்கிற கிறிஸ்தவர்கள். பியான்கியான் என்கிற பட்டணத்திலுள்ள ஒரு தேவாலயத்தில் வாரத்தின் மத்தியில் வைக்கப்படும் ஜெபக்கூட்டத்திற்குச் சுமார் 1,100 பேர் வருவார்கள். இவ்வளவுபேர் ஐக்கிய ஜெபத்திற்கென்று உலகத்தில் ஓரிடத்திலும் கூடினதில்லையாம்.

3. அவர்கள் உதாரத்துவமுள்ள கிறிஸ்தவர்கள். கொரியச் சபையில் செய்யப்படும் வேலையில் கொஞ்சங்குறைய எல்லாம் சுதேசிகளின் உபகாரத்தால் செய்யப்பட்டுவருகிறது. சம்பளமின்றி நூற்

றுக்கணக்கான கொரியக் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். கொரிய புருஷர்களில் சிலர் தங்களுடைய வீட்டை அடைமானம் வைத்து, தேவனுடைய ஆலயத்தின்மேலிருக்கும் கடனை நீக்கியிருக்கிறார்கள். தங்கள் குடும்பப் போஷணைக்காக வைக்கப்பட்டிருக்கும் நல்ல அரிசியை விற்று, தங்கள் ஜீவனார்த்தத்துக்காகத் தாழ்ந்த தானியங்களை வாங்கி, மீதியாயிருக்கிற பணத்தைத் தங்கள் ஜனங்கள் மத்தியில் செய்யப்படும் சுவிசேஷ வேலைக்காகக் கொடுத்துதவியிருக்கிறார்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்பொருட்டு, கொரிய ஸ்திரீகள் தங்கள் மோதிரங்களையும், தங்கள் கூந்தல்களையும் விற்றிருக்கிறார்கள்.

4. **அவர்கள் கிறிஸ்துவுக்கென்று வேலைசெய்யுங் கிறிஸ்தவர்கள்.** ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் சுற்றுப்புறங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தங்கள் அருமையான நேரத்தை இரண்டு வருஷத்திற்குமுன் விசேஷித்த பிரகாரம் செலவிட்டார்கள். சிலர் ஒரு வாரமாயும், சிலர் ஒருமாதமாயும் வேலைசெய்தார்கள். மற்ற நாட்டுக் கிறிஸ்தவர்களைக்காட்டிலும், இவர்களே அநேகரைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தியிருக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஒருவனைச் சபையில் சேர்க்குமுன் கொரியச் சபையில் கேட்கப்படும் கேள்வி யென்னவென்றால் இயேசுகிறிஸ்துவுக்காகச் சிலரை ஆதாயப்படுத்தியிருக்கிறீரா என்கிற கேள்வியே.

5. **அவர்கள் மிஷனெரி ஊழியஞ் செய்கிறவர்கள்.** அநேகக் கிறிஸ்தவர்கள் ஆவாய், மெக்ஸிக்கோ, மஞ்சூரியா, சைபீரியா முதலிய விடங்களுக்குப்போய்ச் சுவிசேஷ பிரபல்யஞ் செய்துவருகிறார்கள்.

இதை வாசிக்கும் நண்பனே, நமது தேசம் கிறிஸ்துவின் பாதபடிக்குக் கொண்டுவரப்படும்படி கொரியக் கிறிஸ்தவர்களைப்போல் கிறிஸ்துவுக்குள் ஜீவியஞ்செய். அப்போது சுவிசேஷம் பிரபல்யமாகும். அநேக இந்தியர் அவருடைய நாமத்தை ஏற்றுக்கொள்ளுவார்கள். அவருடைய ராச்சியம் சீக்கிரம் இந்தியா தேசத்தில் வரும். கர்த்தர் இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தமது ஆவியின் வல்லமையைத்தந்து நம்மை இந்தியாவின் குணப்படுதலுக்கென்று உபயோகிப்பாராக.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS



*Photo by W. Downey*

இங்கிலாந்தின் அரசரும் நமது சக்கரவர்த்தியுமாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் மேரி ராணியும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
6 - DEC 1911
MADRAS

**No. 67** டிசெம்பர் **1911**

# வேதியர் விளக்கு

## A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

### சிலுவை பாதை

*மத்.* 27. 31–33; *மாற்.* 15. 20, 21; *லூக்.* 23. 26; *யோவா.* 19. 16, 17. *ரோமச் சட்டத்தின்படிக்கு தண்டனை செய்யப்பட்ட குற்றவாளியைத் தீர்ப்புச் செய்ததுமுதல் பத்துநாள்வரையில் சிட்சையை நிறைவேற்றாமல் நிறுத்திவைப்பது வழக்கம். ஆனால் இயேசுவையோ தீர்ப்புச் செய்தவுடன் நேரே கொலைசெய்யும்படி கொண்டுபோனார்கள்.*

தநூ வழக்கம். *ஜனங்கள் பார்த்து நிந்தித்து வையும்படி குற்றவாளியைச் சிலுவையைச் சுமந்தவனாய்க் கொண்டுபோவது வழக்கம். தாம் நேசித்தவர்கள் தம்மை இவ்விதமாய் நிந்திப்பது தமக்கு எவ்வளவோ மனதைப் புண்படுத்தியிருக்கும். இவ்விதமாய்க் கிறிஸ்து இரண்டு கள்ளர்களின் மத்தியில் கொண்டுபோகப்பட்டார்.*

இரட்சகர் 'சிலுவை சுமப்பதைப்பற்றி' உபதேசித்தபோது தமக்கு நேரிடப்போகிற இவையெல்லாவற்றையும் முன்னறிந்தாரா? லூக். 9. 23.

*கிறிஸ்து தாம் அடைந்த குரூரவதையினாலும், நித்திரையில்லாமையினாலும் அதிக பலவீனமடைந்திருந்தார்.*

1. *ஒரு மனுஷனுடைய பலம்,* 2. *ஸ்திரீகளின் அநுதாபம் முதலிய சகாயம் வழியில் அவருக்குக் கிடைத்தது.*

(1) சிரேனே ஊரானாகிய சீமோன். *மாற்*. 15. 20, 21.

*இவன் அப்போதுதான் பஸ்காவை ஆசரிக்க வந்திருக்கக்கூடும். போர்ச்சேவகர் அவனைக் கேலிக்காகப் பிடித்தார்கள். மற்றவர்கள் தன்னைப் பார்த்து ஏளனம்பண்ணும்படி வைவது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்கும். இத்துடன் அவன் தீட்டுப்பட்டிருக்கலாம். இந்தச் சம்பவத்தில் கிறிஸ்தவன் சுமக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற சிலுவை தாங்குதலாகிய ஒரு காட்சியை இதில் பார்க்கலாம். இந்தச் சம்பவத்தின் பலனாக சீமோனும் அவன் குடும்பத்தாரும் கிறிஸ்தவர்களானார்கள் என்று பாரம்பரிய சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மாற்கு என்பவர் தம்முடைய சுவிசேஷத்தை ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். அவர்மாத்திரம் அலேக்சந்தர் ரூபு என்பவர்களைப்பற்றி தம்முடைய சுவிசேஷத்தில் சொல்லுகிறார். ரோ*. 16. 13; *அப்*. 13. 1.

(2) எருசலேமின் குமாரத்திகள். *லூக்*. 23. 27-31.

*குற்றஞ்சாட்டப்பட்ட எவன் விஷயத்திலும் பட்சாதாபத்தைக் காட்டக்கூடாதென்று யூதர்களுக்குள்ளே ஒரு பிரமாணம் இருந்தது. ஆனால் இந்த ஸ்திரீகள் அந்தச் சட்டத்தையும் பாராமல் தங்கள் தைரியத்தைக்கொண்டு அவருக்காகத் தங்கள் அநுதாபத்தைக் காட்டினார்கள். எந்த ஸ்திரீயாவது ஆண்டவருக்குச் சத்துருவாயிருந்ததாகச் சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. அவர்கள் இயேசுவுக்கு எப்போதும் ஊழியஞ் செய்துகொண்டிருந்தார்கள்.*

*ஸ்திரீகளுக்கு ஆண்டவர் சொல்லிய வார்த்தைகளைக் கவனியுங்கள். இவ்வித சந்தர்ப்பத்திலும் அவர் தம்மை மறந்ததைக் கவனியுங்கள். அரை நூற்றாண்டுக்குள் அவர்கள்மேல் வருகிற முடிவை முன் அறிந்தார். எருசலேமை முற்றிகைபோட்டபோது ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும் நேரிட்ட வாதைதான் அதிக அகோரமும் பயங்கரமுமானதாயிருந்ததென்று சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள்.*

சிலுவையில் அறைதல். *மத்*. 27. 33-38; *மாற்*. 15. 27, 28; *லூக்*. 23. 32, 33; *யோவா*. 19. 18-22. *நீண்டதும் வருத்தமுமான பிரயாணம் முடிந்தது. போர்ச்சேவகர் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துகிறார்கள்.* கசப்புக் கலந்த திராட்சரசத்தைக் கொடுத்தார்கள். *தங்களுடைய வேதனையின் உணர்ச்சி அற்றுப்போகப்பண்ண இப்படிப்பட்ட தண்டனையைச் சகிக்கவேண்டிய குற்றவாளிகளுக்குக் கொடுப்பது வழக்கம். கிறிஸ்துவானவர் தாகத்தினால் அதிகம் வருந்தி இருப்பாரென்றாலும் இந்தத் திராட்சரசத்தைக் குடித்துத் தம்முடைய வேதனையினின்று தம்மைக் காத்துக்கொள்ளமாட்டார். சிலுவையின் பாடுகள் மனதுக்குரியதால், தன்னுடைய மனதை மயக்கக்கூடிய*



*எதையும் மறுத்துவிட்டார். குற்றவாளிகள் சாதாரணமாய் ஒருநாளைக்குமேல் சிலுவையில் தொங்குவது வழக்கம். ஆனால் கிறிஸ்துவோ 5 மணி நேரத்தில் மரித்தார்.*

மேல் எழுத்து. *யோவா*. 19. 19-22. *குற்றத்தைப்பற்றிய விபரத்தை எழுதிச் சிலுவையின் தலைப்பில் ஒட்டிவைப்பது ரோமருடைய வழக்கம். அந்தச் சிலுவையை நட உயர்த்தப்பட்டபோது அவருடைய சத்துருக்கள் எவ்வளவு ஜெய கெம்பீரத்தோடு பார்த்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அந்த விலாசத்தைப் பார்த்தபொழுது அதிக மூர்க்கங்கொண்டார்கள். பிலாத்து யூதர்களைப் பரியாசம்பண்ணவும் கோபம் மூட்டவும் இதை எழுதிவைத்தான். அவர்கள் அடைந்த ஜெயத்துக்குப் பழிவாங்கும்படி அப்படிச் செய்தான்.*

மேல்விலாசம், எபிரேயு, லத்தீன், கிரேக்குப் பாஷைகளில் எழுதப்பட்டது. *இந்த மூன்று பாஷைகளும் அக்காலத்துப் பாஷைகளில் முக்கியமானவை. ஏன் மூன்று பாஷைகளிலும் எழுதப்பட்டதென்றால், திருவிழாவுக்கு வந்தவர்கள் எல்லாரும் அறியும்படியாகவே. நமதாண்டவராகிய இயேசுவானவர் சர்வலோகத்தின் ராஜாவென்றும் உலகம் முழுவதையும் கவர்ந்துகொள்ளத்தக்க வல்லமை சிலுவைக்கு உண்டென்றும் இந்த மேல்விலாசம் தீர்க்கதரிசனமாக இருந்தது.*

# Eternal Life

**By the Rev. C. H. Monahan**

## *நித்திய ஜீவன்*

இரண்டாம் பாகம்

'தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது.'

1 *யோவா*. 5. 11.

1. நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற நித்திய ஜீவன் அவருடைய நித்திய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள் பொருந்தியிருக்கிறது என்பதின் *கருத்தென்னவென்றால், பிதாவின் நித்திய ஜீவன் பொருந்திய இயேசுவோடு நாம் விசுவாசத்தினால் இணைந்து ஐக்கியப்பட்டால்தான் நமக்கு அந்த ஜீவன் உண்டென்பதே.*

*'குமாரனையுடையவன் ஜீவனையுடையவன் : தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்.* (1 *யோவா*. 5. 12.)

ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பின அவதார புருஷராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நமக்கு நித்திய ஜீவனாகும். பிதாவினருளினாலன்றி ஒருவனும் குமாரனை அறியான். குமாரனை அறிந்தாலொழியப் பிதாவையுமறியான். பிதா நமக்குத் தயவாய்க் கொடுக்கிற கிருபை வரமெல்லாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் நமக்குண்டாயிருக்கிறது (ரோ. 6. 23). அனாதி நித்தியமாய்ப் பிதாவினிடத்தில் மறைவாயிருந்த ஜீவன் அவதார புருஷராகிய இயேசுவினால் வெளிப்பட்டது. அந்த ஜீவனை நாம் விசுவாசத்தினால் கண்டடைந்து களிகூருகிறோம் (1 யோவா. 1. 2). இப்பொழுது மறைபொருளாகிய அவர் ஜீவன் நமக்கு வெளிப்பட்டதினால் வெளிப்படையாயிருந்த நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து இரண்டாம் வருகையில் வெளிப்படும்போதோ, நாமும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவோம் (கொலோ. 3. 3, 4). யோவான் சுவிசேஷத்துக்கும் அவர் எழுதிய முதல் நிருபத்துக்கும் உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் பொழிப்புரையாகச் சொல்லவேண்டுமானால், சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவிலிருந்து வெளிப்பட்ட தேவனுடைய ஜீவனைக்குறித்து எழுதியிருக்கிறார்; நிருபத்திலோ கிறிஸ்துவின் மூலமாய் நம்மிடத்திலுண்டாயிருக்கிற நித்திய ஜீவனைக்குறித்து விஸ்தரித்து வரைந்திருக்கிறார். சென்ற மாதம், முதல் பாகத்தில் நாம் கண்டபடி தேவனோடு பரிசுத்த அன்பிலே ஐக்கியப்படுவதே மெய்யான ஜீவனாம். இந்தப் பாகத்தில் அந்த ஜீவன் கிறிஸ்துவுக்குள் உண்டென்று காண்கிறோம். அவரே நமக்கு ஜீவன். அவராலேதான் பரிசுத்த அன்பின் ஐக்கியத்தில் இணைக்கப்படுகிறோம். இந்தச் சத்தியத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக.

## 2. இயேசுகிறிஸ்துவே நமக்கு ஞானம்.

ஜீவனின் உள் அர்த்தத்தை வெளிப்படுத்துவது ஞானமாகும். இப்பிரபஞ்சத்திலுள்ள சராசர வஸ்துக்களை ஆராய்ந்து அவைகளின் தன்மை, பலன், ஒழுங்கு முதலியவைகளை அறிந்து விளக்குகிறவர் தத்துவஞானி அல்லவா? ஒவ்வொரு சாஸ்திரத்திற்குமுரிய ஞானம் ஜீவனின் ஏதோ ஓர் பாகத்தை எடுத்து அதின் உள் இரகசியத்தைத் தெரிவிக்கிறது. அப்படியே இயேசுவானவர் மெய்யான ஜீவ இரகசியத்தை வெளிப்படுத்துகிறபடியால் அவரே தேவனால் நமக்கு ஞானமானார் (1. கொரி. 1. 31). அவருக்குள் ஜீவனிருக்கிறபடியால் அவரே அந்த ஜீவனின் தத்துவத்தை விளக்குகிற ஒளியாயிருக்கிறார். (யோவா. 1. 4.)



தேவனுடைய ஜீவியம் அவருக்குத் தெரியும். நம்முடைய ஜீவியத்தையும் அவர் அறிவார். அவர் தேவகுமாரனும் மனுஷகுமாரனுமாயிருக்கிறார். ஆதியிலே இருந்த தேவ வார்த்தையானவர் அவரே. அந்தத்திலும் மனுஷ ஜீவியத்தைப் பூரணப்படுத்திக் காண்பிக்கும் மனுஷகுமாரனும் அவரே. தேவன் எப்படிப்பட்டவரென்று அறிய விரும்பினால் இயேசுவைக் காண்பதினால் அறியலாம். மெய்யான மனுஷன் எப்படிப்பட்டவனென்று அறியவேண்டுமானால் இயேசுவில் காணலாம். அவர் சிநேகிதரில் உத்தம சிநேகிதன், சகோதரரில் சிரேஷ்டமான சகோதரன். அவர் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமா யிருக்கிறார். அவர் உண்மையான சாட்சியும் ஒவ்வொரு மனுஷ ஆத்துமாவுக்கும் தலையாயுமிருக்கிறார்.

நம்முடைய ஜீவியத்தின் குறைவை நீக்கி அதற்கவசியமான நிறைவைக் கொடுத்து நம்மைப் பூரணப்படுத்துகிறபடியால் அவர் நமக்கு ஞானம்; அதாவது நித்திய ஜீவ இரகசியத்தை வெளிப்படுத்துகிறவர். இதை மூன்று விசேஷித்த விஷயங்களில் திருஷ்டாந்தப்படுத்தலாம். அவையாவன, தேவன் விஷயம், நமது விஷயம், சாத்தானுடைய விஷயம் என்பவைகளே. அல்லது வேறுவகையாய்ச் சொல்லவேண்டுமானால் நல்லோன், நரன், தீயோன் என்னும் மூவரைப்பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்தி அவர்கள் விஷயத்தில் நமது ஆத்தும அவசியத்தை நிறைவாக்கி நமக்கு இரட்சகரானார். நல்லோனாகிய கடவுளுக்கு முன்பாக நமக்கு நீதியானார். நமது நர ஜீவியத்தைப் பூர்த்திசெய்கிற பரிசுத்தமானார். தீயோனாகிய சாத்தான் கையிலிருந்து விடுதலையாக்கி பாவம், துன்பம், வியாதி மரணம் முதலியவைகளை ஜெயித்து நம்மை முற்றுமுடிய இரட்சிக்கும் மீட்புமானார்.

பரி. பவுல் அப்போஸ்தலன் பொழிப்புரையாக மேற்சொல்லிய விஷயங்களை ஒரே வாக்கியத்தில் அடக்கிக் காண்பித்திருக்கிறார் (1 கொரி. 1. 30, 31). மூலபாஷையில் இவ்வாக்கியத்தின் பொருள் எப்படியிருக்கிறதென்றால் நீங்கள் தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றவர்கள்; அந்த ஜீவன் இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கிறது; அவரே தேவனால் நமக்கு ஜீவனை விளக்கும் ஞானமானார்; அந்த ஞானத்தின் அம்சங்கள் எவையெனில், நீதி, பரிசுத்தம், மீட்பு என்பவைகளே.

## 3. நல்லோனாகிய கடவுளிடத்திலே கிறிஸ்து நமக்கு நீதியானார்.

இது இயேசுகிறிஸ்துவின் பிராயச்சித்தத்தைப்பற்றும் விசுவாசத்தினால் நமக்குண்டாகிற தேவநீதியைக் குறிக்கும். பிராயச்சித்தமில்லாவிட்டால் ஒருவேளை ஒருவிதமான ஐக்கியமிருக்கலாம். ஆனால் அது பரிசுத்த அன்போடுகூடிய ஐக்கியமாயிருக்கமாட்டாது.

கிருபாதார பலியில்லாமல் அக்கிரமக்காரராகிய நமக்குத் தேவன் தம்முடைய ஜீவனில் ஒரு பங்கைக் கொடுப்பது அசாத்தியம். அவர் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை. (1 யோவா. 1. 5). தம்முடைய மகத்துவமான அன்பின் ஐக்கியத்தில் நம்மைச் சேர்க்கவேண்டுமானால் நம்முடைய பாவமற நம்மை நீதிமான்களாக்க வேண்டும். நம்முடைய பாவத்தைப்போக்கும் பிராயச்சித்தம் பாவிகளாகிய நம்மாலே ஏற்படுவது அசாத்தியமாதலால் தம்முடைய அன்பின் குமாரனை நமக்காகப் பிராயச்சித்த பலியாக ஏற்படுத்தினார் (ரோ. 3. 26). நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (1 கொரி. 5. 21). அதாவது அவர் பாவத்தின் பலனைப் புசித்துத் தீர்க்கும்படிக்குச் சிலுவையின் உபத்திரவத்திற்கு அவரை ஒப்புக்கொடுத்தார். இவ்விதமாய்ப் பாவிகளாகிய நமக்காகக் கிறிஸ்து மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். அவ்வன்பை விசுவாசத்தினால் நாம் அங்கீகரிக்கும்போது கிறிஸ்து நமக்கு நீதியாகிறார். நம்முடைய ஜீவியத்தில் காணப்படுகிற ' முக்கியமான இடையூறு பாவமே. அதை நீக்கித் தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்குகிறவர் நமது ஜீவதயாபரர் என்பதற்குச் சந்தேகமில்லை. நல்லோருக்கும் நானுக்கும் பிரிவினையை உண்டாக்கின பாவத்தை நிக்கிரகம் செய்பவர் எல்லா ஞானத்திலும் மேலான ஞானமுள்ளவரல்லவா? ஆதலால் கிறிஸ்து நமக்குத் தேவநீதியானதினால் அவர் நமக்கு ஞானமானார்.

**4. கிறிஸ்து நராகிய நம்முடைய ஜீவியத்தைப் பூர்த்திசெய்கிற பரிசுத்தமானார்.**

நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டுத் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அல்லது வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால் நாம் கிறிஸ்துவின்மூலமாய்த் தேவனிடத்தில் நீதியுள்ள மன்னிப்பைப் பெற்றிருக்கிறோம். ஆனால் இது போதாது. நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுக்குள் பூரணப்படவேண்டும். தேவன் நம்மைப்பற்றி ஆதியிலே கொண்டிருந்த நோக்கம் நிறைவேறவேண்டும். அவருடைய திருக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பானவர்களாகவேண்டும். பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நாமும் பூரண சற்குணராகவேண்டும். நாளுக்குநாள் நித்திய ஜீவனில் விருத்தியடையவேண்டும். சிலர் பரிசுத்தமாக்கப்படுதலைக்குறித்து விபரீதமான எண்ணங்கொண்டிருக்கிறதுபோலத் தோன்றுகிறது. நாம் இயேசுவின் புண்ணியத்



தினால்தான் குணப்படுகிறோமென்று அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தும் நம்முடைய சொந்தப் புண்ணியத்தினாலேயே பரிசுத்த ஜீவியத்திலே வளரக்கூடுமென்று நினைக்கிறார்கள். இது பெரிய பிசகு. அவருடைய புண்ணியத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டதுபோல அதினாலேயே நாம் பரிசுத்தராக்கப்படுகிறோம். ஒரு விதத்தில் நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதல் அவராலே பூர்த்தியாகிவிட்டது. அவர் முடிந்தது என்று சிலுவையில் சொல்லிய வார்த்தை தம்முடைய உபத்திரவம் முடிந்ததென்பதுமாத்திரமல்லாமல் நம்முடைய இரட்சணியமும் முடிந்தது என்பதைக் குறிக்கும். இன்னொரு விதத்திலே நம்முடைய பரிசுத்த ஜீவியம் இன்னும் பூரணப்படவில்லை. அவர் நமக்காகச் சேர்த்துவைத்த பொக்கிஷமாகிய பரிசுத்தத்தை நாம் நாளுக்குநாள் விசுவாசத்தினால் பெற்று அனுபவிக்கவேண்டும். ஆனால் அவருடைய பரிசுத்தத்தை அடைந்து வளரவேண்டுமே தவிர நம்முடைய சொந்தப் புண்ணியக் கிரியைகளை நம்பிச் சாருகிறவர்களாயிருக்கக்கூடாது. இவ்விதமாய் அவர் நம்முடைய ஜீவியத்தைப் பூர்த்திசெய்கிறபடியால் அவர் நமக்குப் பரிசுத்தமாகிய ஞானமாயிருக்கிறார்.

**5. தீயோன் அதிகாரத்தினின்றும் இவ்வுலகத்தின் சகல தீமைகளினின்றும் கிறிஸ்து நம்மை விடுதலைபண்ணி நமக்கு மீட்பானார்.**

கிறிஸ்து நமக்குத் தேவநீதியானதினால் நமக்குப் பாவமன்னிப்புண்டு. ஆனால் அது நமக்குப் போதாதென்றும், அவர் நமக்குப் பூரண பரிசுத்தமானாரென்றும் முந்திக் கண்டோம். நமது பூரண பரிசுத்தமும் போதாது. தேவனுடைய பிள்ளைகளுக்கேற்ற சுபாவமும் புத்திரனென்னும் மகிமையுள்ள நாமமும் நமக்குப் போதாது. தேவனுடைய பிள்ளைகளுக்கேற்ற நிலைமையும் நமக்கு வேண்டும். இவ்வுலகத்தின் கஷ்ட நஷ்டங்களிலிருந்தும், வியாதி, துன்பம், மரணம் முதலிய வேதனைகளிலிருந்தும், முற்றிலும் விடுதலையாகி நாம் முக்தி பெறவேண்டும்.

இந்தப் பெரிய நன்மையும் கிறிஸ்துவுக்குள் நமக்கு ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர் நமக்கு மீட்பானார். மீட்பில் இரண்டு பாகமுண்டு. முதல் பாகம் கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது பாவமன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் நமக்குண்டாயிருக்கிறது (எபே. 1. 7). இரண்டாம் பாகத்தையோ நாம் இன்னும் கண்டடையவில்லை. நம்முடைய சுதந்தரத்தின் முதற்பலனாகிய பரிசுத்தாவியை நாம் பெற்றிருந்தும் நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருக்கிறோம். ஆனால் கிறிஸ்து அதை நமக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறபடியினாலே தற்காலம் நாம்

அடையவேண்டிய உபத்திரவங்களையெல்லாம் பொறுமையாய்ச் சகித்து மகிமையடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். கிறிஸ்துவுக்குள் நமக்கு நித்திய ஜீவனுண்டு. அவர் வெளிப்படும்போது அவரிருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

பிழை திருத்தம்.—போன மாதத்திய சஞ்சிகை 167-ம் பக்கம் 4-ம் வரியில் இயேசுகிறிஸ்துவை என்பதை இயேசுகிறிஸ்து என்று வாசிக்கவும். 168-ம் பக்கம் 11-ம் வரியில் கேட்கிறோம் என்னும் பதத்திற்குப் பின் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக காமா சேர்த்துக்கொள்ளவும்.

# The Christmas Gift

## கிறிஸ்மஸ் பண்டிகை ஈவு

மனுஷர் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் சகல சங்கடங்களுக்கும் மூலகாரணம் பாவமே. பசி, தாகம், இளைப்பு, தவிப்பு, வியாதி, மரணம், பயம், கவலை, துக்கம், துயரம், கண்ணீர் இவைகள் யாவும் பாவத்தின் பலன்களேயன்றி வேறல்ல. மனுஷன் பாவம் செய்யாதிருந்த காலத்தில் இவைகள் இருந்ததேயில்லை. இனி மீட்கப்பட்டவர்கள் அனுபவிக்கப்போகிற பாவமில்லாத நிலைமையிலும் இவைகளிருக்கமாட்டாது (வெளி. 21. 4). ஆகையால் இவ்விரு நிலைமைகளுக்கும் இடையில் மனுஷருக்கிருக்கும் பெரிய பகைஞன் பாவமே. காரியமிப்படியிருக்கிறபடியால் மனுஷனுக்குத் தேவன் செய்யக்கூடிய பெரிய நன்மை இக்கொடிய சத்துருவின் கையினின்று அவனை விடுதலையாக்குவதே. பாவத்தை நீக்காமற்போனால் அவனுக்குத் தேவன் செய்யும் வேறெந்த நன்மையிலும் பிரயோஜனமிராது. மனுஷன்பேரில் தமக்கிருக்கும் அன்பைத் தேவன் காட்டவேண்டுமானால், அதை முக்கியமாய்க் காட்டவேண்டிய விஷயம் அவனுடைய பாவத்திலிருந்தும், அதினால் அவனுக்கு வரும் சகல நிர்ப்பாக்கியத்தினின்றும் விடுதலைகொடுப்பதே. இப்படித் தேவன் தமது கருணையைக் காட்டியிருக்கிறாரா? பாவத்திலகப்பட்டு அதினாலுண்டாகும் அனந்த தீவினைகளினால் அவதிப்படும் மனுஷனை விடுவிக்கத் தேவன் ஏதாவது செய்திருக்கிறாரா? அல்லது அவன் பாவத்தில் அகப்பட்டு அழிவுக்குப் போவதையும் அதின் வல்லமையிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிவகை தெரியாதவனாய் அல்லல்படுவதையும் பார்த்துத் தேவன் சும்மாதானிருக்கிறாரா? அல்லது ஏதாவது விடுதலையை அனுப்பியிருக்கிறாரா? இந்தக் கேள்விக்கு உத்தரவுதான் கிறிஸ்மஸ் தினத்தில் நாம் கொண்டாடும் விசேஷம். பாவத்தில் உழன்று தவிக்கும் மனுஷன்பேரில் கருணை



கூர்ந்து அவனுக்கு நன்மைசெய்ய அவர் சித்தங்கொண்டார். நாம் பாவத்தோடு போராடி அதின் பாசக்கயிறுகளில் அகப்பட்டு, படும் பாடுகளைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க மனம் சகியாதவராய் ‘தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தார்.’ அவர் சிறு குழந்தையாய்ப் பிறந்தபோது அவருக்கு இயேசுவென்று பேரிடவேண்டுமென்று அந்தப் பரமபிதா ஒரு தூதன்மூலமாய் விளம்பரப்படுத்தினார். ‘ஏனெனில் அவர் தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.’ தேவனருளிய சொல்லிமுடியாத இந்த ஈவுக்காக சதாகாலமும் அவருக்கு ஸ்தோத்திரம் புரிவோமாக.

பாவம் மனுஷனை மூன்றுவிதமாய்க் கெடுக்கிறதென்று கவனிக்கலாம். 1-வது, பாவம் தேவனுக்கு விரோதமான குற்றமென்று காண்கிறோம். பாவஞ்செய்கிறவன் குற்றவாளியானதால் தண்டனைக்குப் பாத்திரனாகிறான். 2-வது, பாவம் அவருக்கு விரோதமான குற்றம் மாத்திரமல்ல மனுஷனையும் தீட்டுப்படுத்திவிடுகிற கறையாயிருக்கிறதென்றும் பார்க்கிறோம். பாவி அசுத்தனானதினால் அவரிடத்தில் சேரவாவது, அவரோடே சகவாசம் செய்யவாவது தகுதியற்றவனாகிறான். 3-வது, பாவம் மனுஷனை ஆட்கொள்ளும் ஒரு வல்லமையென்றும் கவனிக்கிறோம். தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய மனுஷனைத் திராணியற்றவனாக்கிவிடுகிறது. எந்தப் பாவ வழக்கத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள மனுஷன் பெலனற்றவனாகிறான். இவ்விதமாகப் பாவக்குற்றத்திலிருந்தும், பாவ அசுத்தத்திலிருந்தும், பாவ வல்லமையிலிருந்தும் மனுஷன் விடுதலைபண்ணப்படவேண்டும். நம்மை இரட்சிக்க வந்த இயேசு சுவாமி இவைகளில் நமக்கு எப்படி விடுதலைகொடுக்கிறாரென்று பார்ப்போமாக.

1. பாவம் தேவ தண்டனைக்குப் பாத்திரமான குற்றமாயிருக்கிறது. நாம் பாவஞ்செய்யும் ஒவ்வொரு சமயத்திலும் எதிர்த்துப் போராடுகிறவர்களாயிருக்கிறோம். அவர் ஒன்றைச் செய்யப்படாது என்று சொல்லியிருக்கையில் அதை மீறிச்செய்தால், அந்தச் செய்கையினால் அவருடைய பரிசுத்த கட்டளை எனக்கு ஒன்றுமில்லையென்று சொல்லுகிறவர்களாயிருப்போம். அவ்விதம் செய்வதால் அவருடைய கட்டளைகளை மீறி நாம் அப்படித்தான் செய்வோமென்று சொல்வதற்குச் சரியாகுமல்லவா? உதாரணமாக, ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாகவென்று ஆண்டவர் சொல்லியிருக்கும்போது அந்த நாளில் நம்முடைய சொந்த வேலையைப் பார்த்து, நமக்கு இஷ்டமான பேச்சைப் பேசி நமக்குப் பிரியமானதைச் செய்கிறவர்களாயிருந்தால் அவர் சொற்படி நாம் செய்யவேண்டிய அவசியமில்லை

என்பவர்களாயிருப்போம் அல்லவா? இப்படி நடப்பதால்தான் பாவம் குற்றமாகிறது. பாவஞ்செய்கிறவன் தேவனுடைய அதிகாரத்தை நிந்திக்கிறவனாயிருக்கிறான். அவருடைய ஞானமான கட்டளைகளை மறுக்கிறவனாகிறான். ஆகவே பாவஞ்செய்கிறவன் தேவனால் தண்டிக்கப்படவேண்டியது அவசியம்.

இராஜாங்கம் ஒன்றுண்டென்றால் அதின் சட்டப் பிரமாணங்களுக்கு நேர்விரோதமாய் நடக்கிறவன் தண்டிக்கப்படவேண்டியதவசியம். கொலைசெய்தவன் கொலைக்குப் பாத்திரனாகிறான். வெகு காலத்திற்குப்பிற்பாடு அவன் ஒருவேளை தண்டிக்கப்படலாம். ஆனால் அது காரியமல்ல, குற்றம் குற்றமே. தண்டனை வருவதும் நிச்சயமே. பாவஞ்செய்கிறவன் விஷயமும் அப்படியே. ஒருவேளை இவ்வுலகத்தில் தண்டனை வராதிருக்கலாம். ஆனால் தேவன் நீதியுள்ளவரும், வல்லமையுள்ளவருமாதலால் பாவஞ்செய்கிற ஆத்துமா தண்டிக்கப்படுவது நிச்சயம். இயேசு சுவாமி நம்மை இதிலிருந்து எப்படி விடுதலை செய்கிறார்? நமக்குப் பதிலாளாக வந்து பாவத்தின் தண்டனையைச் சுமந்துதீர்த்தார். கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். அவர் நமக்குப் பதிலாளாக வந்து நாம் அடையவேண்டிய தண்டனையைப் பெற்றுக்கொண்டதினால் பாவக்குற்றத்தினிமித்தம் வரவேண்டிய தண்டனையிலிருந்து நாம் விடுதலை பெறுவது கூடியதாயிற்று. 'நம்முடைய மீறுதல்கள்நிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்கள்நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.'

2. பாவம் மனுஷனைக் குற்றவாளியாக்குகிறது மாத்திரமல்ல, அசுத்தனுமாக்கிவிடுகிறது. குற்றஞ்செய்தவன் தண்டனைக்குமாத்திரமல்ல தன் ஜீவகாலமெல்லாம் மற்றவர்கள் முன்பாக ஒரு கறையுள்ளவனாகிவிடுகிறான். களவுசெய்தவன் தண்டிக்கப்படுகிறான். ஆனால் அவன் ஜீவகாலமெல்லாம் மரியாதையுள்ளவர்கள் சகவாசம் அவனுக்குக் கிடைக்கமாட்டாது. அப்படியே பாவம் மனுஷனைக் கறைப்படுத்தி தேவனிடத்தில் சேர யோக்கியதையற்றவனாக்கிவிடுகிறது. இதை இயேசு சுவாமி எப்படி நிவிர்த்திசெய்கிறார்? தம்முடைய நீதியை நமக்குத் தருகிறதினால்தான். 'அவருடைய நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர்' என்பதே. நாம் தண்டிக்கப்படவேண்டிய பிரகாரம் அவர் தண்டிக்கப்பட்டதினால் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டிய பிரகாரம் நாம் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். கிறிஸ்துவை அண்டிக்கொள்ளுகிற யாவரும் தேவசமுகத்தில் தைரியமாய்ச் சேரும்



சிலாக்கியத்தைப் பெறுகிறோம். அவருடைய பரிசுத்தம் நம்மை மூடியிருக்கும்போது தேவன் நம்மை அருவருக்காமல் நீ முற்றிலும் அழகுள்ளவனென்று சொல்லுகிறார்.

3. பாவம் தேவனுக்கு விரோதமான குற்றமும், மனுஷனை அசுசிப்படுத்துகிற கறையுமாயிருக்கிறது மாத்திரமல்ல அது ஒரு வல்லமையாகவும் மனுஷனை ஆட்கொள்ளுகிறது. பாவஞ்செய்கிறவன் அதற்கு அடிமையாயிருக்கிறான். பாவத்தைவிட்டு நீங்கும்படி ஒருவன் ஆரம்பிக்கும்போதுதான் அதின் வல்லமை அவனுக்குத் தெரியவரும். தண்ணீருக்குள் ஒரு கல்லைத் தூக்க முயன்றால் அதின் வாஸ்தவமான பாரம் அப்போது அவனுக்குத் தெரியமாட்டாது. தண்ணீருக்கு வெளியே அதைத் தூக்கும்போதுதான் அதின் பாரம் தெரியவரும். அதுபோல பாவத்துக்குள் கிடக்கிறவனுக்கு அதின் வல்லமை தெரியமாட்டாது. அதைவிட்டு வெளியேறப் பிரயாசப்படுகிறவனுக்கே அதின் அடிமைத்தனத்தின் அகோரம் தெரியும். பலத்த ஒரு ராக்ஷதனைப்போல தன் அடிமையை அங்குமிங்கும் அசையாதபடி கெட்டியாய் அது அவனைப் பிடித்துக்கொள்ளும். தீராத வியாதியைப்போல பாவமானது ஜீவன் போனாலன்றி மனுஷனைவிட்டுப் பிரியாமல் நாடோறும் அவன் ஜீவனை உறிஞ்சிவிடுகிறதல்லவா? பயங்கரமான தீயைப்போல ஒரு தடவை அது பற்றவைக்கப்பட்ட பின்பு எந்தப் பிரயாசத்தினாலும் அவிக்கமுடியாத கோஷ்டம் அதற்குண்டு. பாவத்தினின்று விலகும்படி பிரயாசப்படுகிறவர்களுக்கு இது செவ்வையாய் விளங்கும். உன்னுடைய கோபம், உன்னுடைய சண்டைகுணம், அசுத்த இச்சைகள் ஆகிய இவைகள் உன்னை எவ்வளவாய் அலைக்கழிக்கிறது. நீ ஜெபஞ்செய்து பார்க்கிறாய், தீர்மானம்பண்ணிப் பார்க்கிறாய், கண்ணீரும் சிந்தியிருக்கிறாய்; என்றாலும் நீ சோதனையில் விழுந்து எவ்வளவு வெட்கத்திற்குள்ளும் துக்கத்திற்குள்ளும் மூழ்கியிருக்கிறாய். உனக்குரிய இந்தப் பாவத்திலிருந்து நீ வெளிக்குவர எவ்வளவுதான் பிரயாசப்பட்டாலும் அது உன்னைப் பலமான பாவக்கயிறுகளால் கட்டி உன்னை விடுதலைபெறவிடாமல் அடிமையாக்கிக்கொண்டிருக்கிறதாகக் காண்கிறாயே. கடலுக்கு விரைவாய் ஓடும் வெள்ளத்தில் அகப்பட்டவன் அதற்கு எதிர்முகமாய் நீந்தப் பிரயாசப்பட்டும் கூடாமல் கையும் காலும் அசந்துபோய்ச் சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்ந்துபோகிறதற்குத் தன்னை விட்டுவிட்டதுபோல நீயும் இந்த நேரத்தில் ஒருவேளை இருக்கலாம்.

பாவங்களை நீக்கி ரட்சிக்கவந்த இயேசுநாதர் பாவத்தின் வல்லமையிலிருந்து எப்படி நம்மை விடுவிக்கிறாரென்று கேட்கிறாயாக்கும். ஆவியானவர் மூலமாய் நமது இருதயத்துக்குள் வந்து வாசம்பண்ணு

கிறதினாலேயே பாவத்தின் வல்லமையிலிருந்து நம்மை விடுவிக்கிறார். தம்மோடு நம்மை ஐக்கியப்படுத்துகிறார். நாம் அவருக்குள்ளும் அவர் நமக்குள்ளும் ஜீவிக்கும்படி செய்கிறார். பாவத்தோடு அவர் போர் செய்கிறார். யுத்தம் உள்ளே வாசம்பண்ணுகிற கிறிஸ்துவினுடையதாகிறது. நம்மைப் பிடித்துக்கொண்டிருந்த ராக்ஷதன் அவனிலும் அதிக பலவான் உட்பிரவேசித்தவுடனே பெலனற்றுப்போகிறான். நம்மால் உதறிவிட முடியாத வியாதி அவர் முன் பறந்துபோகும். நம்மால் அவித்துவிட முடியாத தீ அவர் சமுகத்தில் அவிந்துபோம். எதிர்த்து நீந்த முடியாதிருந்த வெள்ளத்தின்மேல் அவரோடுகூட நடப்போம். பாவம் நம்மை மேற்கொள்வதில்லை. குமாரன் உட்பிரவேசித்து விடுதலையாக்கும்போது நாம் மெய்யாகவே விடுதலையடைவோம். இவ்விதமாகத்தான் இயேசு நமது பாவங்களை நீக்கி நம்மை இரட்சிக்கிறார். நமக்குப் பதிலாளாக பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலை பெறுகிறோம். நமக்கு நீதியாக பாவத்தின் கறையிலிருந்து நம்மை இரட்சிக்கிறார். நமக்குள் வந்து வாசம்பண்ணுகிற ராஜாவாக பாவத்தின் வல்லமையினின்றும் நம்மை மீட்டுக்கொள்ளுகிறார். நம்முடைய பாவத்தையெல்லாம் நீக்கும்படி தேவன் இயேசுவைத் தந்திருக்கிறார். உன்னை அடிமையாக்கிக்கொண்டிருக்கிற கெட்ட பழக்கங்களை உன்னைவிட்டு நீக்கும்படி இயேசு தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன்னை அவைகளினின்று முற்றிலும் விடுதலையாக்க இயேசு வாஞ்சிக்கிறார். உன் ஒவ்வொரு பாவத்தோடும் அவரிடம் வாலாம். பாவத்தையும், அதின் வல்லமையையும் பார்த்து அதைரியப்பட்டுப்போகாதே. அசுத்தனான நான், அடிக்கடி தவறிவிட்ட நான் அவரிடத்தில் போகலாமாவென்று மலைத்து நிற்காதே. பாவந்தான் உன் பிராணசத்துரு என்று அறிந்துகொள். இயேசுவோ உன் உத்தம சிநேகிதர். உன்னைப்போலொத்த பாவிகளை ரட்சிக்கத்தான் வந்தார். உன் அசுத்தத்திலிருந்து விடுதலைதர இயேசு காத்து நிற்கிறார். அவரிடத்தில் உன் பாவங்களை உண்மையாய் அறிக்கையிட்டு அவர் உன்னைக் காத்து ஆளும்படி அவரிடத்தில் உன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடு. அவர் உட்பிரவேசித்துச் சகல பாவத்தையும் நீக்கி உன்னை ரட்சிப்பார். அவர் ஒருவரே பாவநாசகர். எப்பேர்ப்பட்ட பாவத்திலிருந்தும், எப்பேர்ப்பட்ட பாவிக்கும் விடுதலை கொடுக்கும்படிதான் தேவன் அவரை நமக்குத் தந்தருளினார். அன்பே அவரென்று போற்றத்தகும் இயேசுநாதர் தம்மிடம் வரும் எந்தப் பாவியையும் தள்ளவேமாட்டார். அவருக்கு உன்னை இப்போதே ஒப்புக்கொடு. அவருக்கு இயேசு என்று பெயர். 'ஏனெனில் அவர் தமது ஜனத்தின்பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.'



# Loyalty

**By the Rev. F. Kingsbury**

## இந்திய கிறிஸ்தவர்கள் ஆங்கிலேய துரைத்தனத்தார்பால் பக்தி பாராட்ட நியாயமென்ன?

### ஓர் ஓய்வுநாட் பிரசங்கத்தின் சாரம்

[நமது மாட்சிமைதங்கிய ஆங்கிலேய அரசரவர்களும் அரசியவர்களும் இந்திய சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி என்னும் பட்டத்தோடு மகுடாபிஷேகம் பெற டில்லிமாநகருக்கு இந்த மாதம் வருவதால் இவ்விடம் இந்தப் பொருள் அடங்கிய விஷயம் எழுதப்பட்டது.]

'இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்.' மத். 22. 21.

தலைப்பிலேகண்ட விஷயத்தை நாம் சிந்திக்குமுன் நமது தேசத்து ஜனங்கள் ஆங்கிலேய துரைத்தனத்தாரிடம் எவ்வளவு பக்தியுள்ளவர்கள் என்பதைச் சற்று ஆராய்வோம்.

1-வது. இந்தியாவிலுள்ள ஜனங்களில் சாமானிய ஜனங்கள் (Masses) நூற்றில் எண்பதுபேர் என்றும், யார் எப்படி நடந்துகொண்டாலும் இவர்கள் இராஜ விசுவாசம் பலமுள்ளதும் மாறாததுமாம் என்றும் அடிக்கடி பலர் சொல்லக் கேட்கிறோம். இது மெய்யா? நூற்றில் ஐந்துபேரே இந்தியாவில் வாசிக்க அறிந்தவர்கள். மற்றவர்கள் கல்வி வாசனைச் சற்றுமற்றவர்கள். கிராமவாசிகளாகிய இவர்களுக்கு ஆங்கிலேய அரசியலைப்பற்றி என்ன தெரியும்? கிராம உத்தியோகஸ்தராகிய கிராம முனிசீப், கர்ணம், கணக்கன், நாட்டாமைக்காரரே இவர்கள் அறிந்தவர்கள். சிலவேளைகளில் ஜமாபந்திக்கு வரும் தாசில்தார் முகத்தையும் பார்த்திருப்பார்கள். கர்ணமும் கணக்கனும் கொடுமை செய்யாவிட்டால் போதும். 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்' என்னும் பழமொழிகளே இவர்கள் மனச்சார்பைக் காட்டும். இவர்களுக்கு ஆங்கிலேய துரைத்தனத்தாரிடம் விரோதம் கொஞ்சமும் இல்லை என்பதே மெய். 'இராஜ விசுவாசிகள்' என்ற பெயர் இவர்களுக்குப் பொருந்துமா? இராஜாவின் பெயர்கூட அறியார்களே.

2-வது. மீதியான 20 பேர், கல்விகற்றவர்களும் செல்வாக்குக்குட்பட்டவர்களுமாம். இவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

நமது ஜனங்களில் இராஜ விரோதிகள் உண்டோ? இலட்சம் பேரில் ஒருவன்கூட இராஜ விரோதியல்ல. இங்கேயொருவன் அங்

கேயொருவன் இராஜ விரோதியாகக் காணப்பட்டாலும், பொது வாய்ச் சொல்லப்போனால் இந்தியாவிலே இராஜ துரோகிகள் இல்லை. இது நிஜம். ஆயினும் எல்லாரும் இராஜ விசுவாசிகளுமல்ல. நூற்றில் 20 பேர் தாங்கள் இராஜபக்தியுடையோராகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்களிற் பெரும்பான்மையோரை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். இம்மூன்று பிரிவாரையும் தனித்தனி விசாரிப்போம்.

வினா.—'முதற்பிரிவாரே, நீங்கள் ஆங்கிலேய ராஜாங்கத்தாரிடம் பக்தியுள்ளவர்களாய் இருப்பதற்குக் காரணமென்ன?'

விடை.—(இரகசியமாய்) 'ஐயா, உள்ளதைச் சொல்லுகிறோம், கேளுங்கள். வெள்ளைக்காரன் கை பலத்த கை. அவன் பீரங்கியென்ன? அவன் படையென்ன? அவன் காரியமென்ன? அவனைத் துரத்த நினைத்தால் நம்மாலாகுமா? பைத்தியக்காரப்பயல்கள் சிலர் 'சுவராஜ்யம்! சுவராஜ்யம்!' என்று பிதற்றுவதினாலே காரியம் நடக்குமா? 'What cannot be cured must be endured' என்ற இங்கிலிஷ் பழமொழிப்படி, ஆங்கிலேயரை நேசித்து நடந்துகொள்வதே புத்தி. அவர்களைப் பகைப்பது பைத்தியம். அதனால் நமக்குக் கேடு வருவது நிச்சயம்.'

வினா.—'இரண்டாம் பிரிவாரே, நீங்கள் இராஜ விசுவாசிகளாய் இருப்பதற்குக் காரணமென்ன?'

விடை.—'ஐயா, ஆங்கிலேயர் வந்தபின் நாம் பெற்றனுபவிக்கிற நன்மைகளைக் கணக்குப் பாருங்கள். தந்தி என்ன? தபாலாபீசு என்ன? ரெயில்வே என்ன? சாலை வீதிகள் என்ன? பாலங்களென்ன? ஆஸ்பத்திரிகள் என்ன.........எத்தனை என்று சொல்லமுடியும்? இவைகளெல்லாம் தமிழரசர்கள், துலுக்கர்கள் காலத்திலே உண்டோ?

வினா.—'மூன்றாம் பிரிவாரே, நீங்கள் ஆங்கிலேய அரசினரிடம் அன்பு பாராட்டுவதற்கு நியாயமென்ன?'

விடை.—'ஐயா, ஆங்கிலேயரை நேசித்து நடந்தால், நமக்கு அதிக நன்மைகள் செய்வார்கள். உயர்ந்த உத்தியோகங்கள் அகப்படும். கண்ணிய பதவிகள் கிடைக்கும். இராஜ விசுவாசிகளாகக் காட்டிக்கொண்டால், நமக்குப் பல பட்டங்களும் கிடைக்கும்.'

மூன்று பிரிவாருடைய நியாயங்களையும் பார்த்தோம். 'ஆங்கிலேயரை இந்தியாவைவிட்டுத் துரத்த நம்மால் முடியாதபடியால், நாம் அவரிடம் பக்தியாய் நடந்துகொள்வதே புத்தி' என்பது சிலர் சொல்லும் காரணம். அவர்களைத் துரத்த முடிந்தாலோ, இவர்கள் ராஜபக்தியெல்லாம் எங்கேயிருக்கும்? இரண்டாம் பிரிவார் கணக்குப் பார்க்கிறவர்கள் (Calculating Loyalists). மூன்றாம் பிரிவாரும் அப்படியே.



இதுவரையிலும் நாம் கவனித்தவைகள், நமது தேசத்தாரிற் பெரும்பான்மையோர் மனச்சார்பு. இது நிற்க.

இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம் ஆங்கிலேய துரைத்தனத்தாரிடம் பக்தி பாராட்ட நியாயமென்ன?

இக்கேள்விக்கு விடைபகருமுன், நம்மாண்டவர் யேசுகிறிஸ்துவைப் பார்ப்போமாக.

யேசு பிறந்து, உலகத்திலிருந்த காலத்தில் பலஸ்தீனா தேசம் ரோமாபுரியின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. சுதேச மன்னர் சுயாதீனமற்று ரோமாபுரி சக்கரவர்த்திக்கு அடங்கியிருந்தார்கள். ரோமாபுரியைச்சேர்ந்த தேசாதிபதி (Governor) பலஸ்தீனாவை யாண்டான். யூதர்களுக்குள்ளே சிலர் ரோமருக்கு விரோதமாக அடிக்கடி கலகம்பண்ணினார்கள். சிலர் ரோமரையடுத்து நயவஞ்சகம் பேசித் தங்கள் சொந்த நன்மையைத் தேடினார்கள். யூதரிற் பலர் ரோமரை வெறுத்தார்கள். பலர் பராமுகமாய் (நிர்விசாரிகள்) நடந்துகொண்டார்கள். இப்படிப்பட்ட காலத்தில் யேசுபெருமான் எவ்வாறு நடந்துகொண்டார்?

அந்நிய ராஜாங்கத்தாரான ரோமருக்கு யேசுகிறிஸ்து மனதார அடங்கி நடந்ததுமன்றி 'இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துங்கள்' என்று தம் தேசத்தாருக்குப் புத்தியும் சொன்னார்.

அந்நிய ராஜாங்கத்தாராகிய ரோமருக்கு அடங்கி யேசுநாதர் நடந்தாரானால், அவரடியாராகிய நாமும் அந்நிய ராஜாங்கத்தாராகிய ஆங்கிலேய துரைத்தனத்தாருக்கு மனதார அடங்கி நடக்கலாமல்லவா? இப்படி நாம் சொல்லுகையில், நம் இந்திய கிறிஸ்தவ சகோதரர் நம்மை ஒரு கேள்வி கேட்கலாம்.

'யேசுகிறிஸ்து யூதகுலத்திலே தோன்றினாராயினும், அவர் யூதனாயல்ல, மனுஷகுமாரனாக நடந்துகொண்டார். மேலும், ஈசுவர பக்தியைப் போதிக்கும் குருமூர்த்தியாகிய அவருக்குத் தேசாபிமானம் என்பது உண்டோ? சுயஜனம் என்றும் அந்நியஜனம் என்றும் வித்தியாசம் அவருக்குண்டோ? ஆகையால் அவரை இவ்விஷயத்திலே நமக்கு மாதிரியாகச் சொல்வது பொருந்துமோ?

இக்கேள்விக்கு நாம் தரும் உத்தரம் இது:—யேசு சர்வஜனாபிமானம் உடையவர் என்பது மெய்யேயாயினும் அவருக்குச் சுதேசாபிமானம் சுயஜனாபிமானம் இல்லை என்பது தவறு என்பது சுவிசேஷங்களினாற் தெளிவாயறியலாம். 'பிள்ளைகளின்' அப்பத்தை எடுத்து 'நாய்க்குட்டி'க்குப் போடலாமா என்று சொன்னவர் யூதனல்லவா? 'புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்துக்குப் போங்கள்' என்றவர் சுயஜனாபிமானமுடையவரல்லவா?

‘நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம். ஏனெனில் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது’ என்றவர் தம் ஜனம் என்ற ‘நற்பெருமை’யுடையவரல்லவா? யேசுகிறிஸ்து மனுஷகுமாரன் என்பது எவ்வளவு மெய்யோ, அவர் யூததேசாபிமானி என்பதும் அவ்வளவு மெய். சுயஜனாபிமானம் சுதேசாபிமானம் நிறைந்தவராயினும், ரோமை ராஜாங்கத்தாரிடம் மெய்யன்பு பாராட்டி நடப்பது முற்றிலும் தகுதி என்பதே யேசுவின் கொள்கை. இதற்குக் காரணம் சுவிசேஷங்களிற் சொல்லப்படாவிடினும், நாம் அனுமானிக்கக்கூடும். அது என்ன?

யேசுகிறிஸ்து கடவுளுடைய ராஜ்யத்தை உல்கத்திலே ஸ்தாபிக்க வந்தார். ‘கடவுளுடைய ராஜ்யம்’ என்ற ஒரே ஒரு எண்ணம் அவர் மனதை எப்போதும் இடைவிடாமல் ஆண்டது. கடவுளுடைய ராஜ்யத்துக்கனுகூலமானது எதுவோ அது அவருக்குப் பிரியம். அதை ஏற்றுக்கொள்ள அவருக்குத் தடையில்லை. கடவுளுடைய ராஜ்யம் உலகத்திலே பரம்ப ரோமை ராஜ்யம் ஏற்ற கருவி என்று யேசு கண்டார். ரோமை ராஜ்யத்தின் குறைவுகளையும் அவர் அறியாதிருக்கவில்லை. அறிந்தும் ரோமை சக்கரவர்த்திக்கும் அவன் இராஜாங்கத்துக்கும் இயேசு மனதார அடங்கி நடந்தார்.

ஆகவே, யேசுநாதரின் அடியாராகிய நாமும் அவரைப்போலவே ‘முதலாவது கடவுளுடைய ராஜ்யத்தைத் தேடவேண்டும். கடவுளுடைய ராஜ்யத்துக்கனுகூலமானது எதுவோ அதை நாம் பிரியத்தோடு அங்கிகரிக்கவேண்டும். கடவுளுடைய ராஜ்யம் நம் அருமைத் தேசமாகிய இந்தியாவிலே பரம்ப, ஆங்கிலேய துரைத்தனம் ஏற்ற கருவி என்பது நிஜமானால், அந்தத் துரைத்தனத்தாரிடம் எத்தனை குற்றங்கள் குறைவுகள் இருந்தபோதிலும், கிறிஸ்தவர்களாகிய நாம் சந்தோஷத்தோடும் அன்போடும் அத்துரைத்தனத்துக்கு மனச்சாட்சியினிமித்தம் கீழ்ப்படியவேண்டும். ஆங்கிலேயர் முதல் முதல் இந்தியாவுக்கு வந்த நோக்கம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கமேயாயினும், ஆங்கிலேய உத்தியோகஸ்தரிற் சிலர் அநியாயமான காரியங்களைச் செய்திருக்கிறார்களாயினும், ஆங்கிலேயரை இந்தியாவுக்குக் கொண்டுவந்த கரம், கடவுளுடைய கரம் என்றும் அவர்கள் இந்தியாவை ஆளுவது கடவுளுடைய ராஜ்யம் பரம்புவதற்கு மிகவும் அனுகூலமென்றும் நாம் ஒத்துக்கொண்டால், அத்துரைத்தனத்தாரிடம் மெய்யன்பு பாவிப்பதே இந்திய கிறிஸ்தவர்களாகிய நமக்கு அழகு.

‘இறைவனை ஈசன் காக்க.’

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 68 ஜனவரி 1912

# வேதியர் விளக்கு

## A New Year's Greeting

**By the Rev. Theo. Subramanyam**

### புது வருஷ வாழ்த்துதல்

‘எபெனேசர்’

(இம்மட்டும் கர்த்தர் உதவிசெய்தார்)

இந்நவமான வருஷத்தில் பிரவேசித்திருக்கிற நாம் நமது சுயசக்தியினாலாவது நமது பக்தியைக்கொண்டாவது சென்ற ஆண்டைக் கடந்து வரவில்லை. இது சுத்த தேவ தயவினால் நடந்தேறிய சம்பவமே. சென்ற வருஷத்தைத் துவக்கி முடிக்கச் செய்தவர் இந்த வருஷத்தையும் காணச் செய்திருக்கிறார். நமக்குப் பேருதவி பாராட்டின பரம தேவனை ஸ்துதிசெய்து இவ்வருஷத்தைத் துவக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடித் தொடருகிறவர்களாயினும், சென்ற வருஷத்தில் தேவனுடைய கரத்திலிருந்து பெற்றனுபவித்து வந்த ஏராளமான தயவுகளையும் கிருபைகளையும், ‘நன்றை மறப்பது நன்றன்று’ என்னும் நமது நாட்டு முதுமொழிக்கிசைய, மறந்துவிடுவது பெருத்த தோஷமாயும் பக்தியீனத்திற்கோர் அடையாளமாயும் இருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? அவர் நமக்குப் பொழிந்துவந்த நன்மைகள் அபரிமிதமானவைகள், வருஷித்த கிருபைகள் ஏராளமானவைகள். ‘நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாகச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாகச் சரிக்கட்டாமலும்’ இருந்திருக்கிறார். நமக்கு நேரிடக்கூடிய பலவிதமான ஆபத்துக்களையும், கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்களையும், தடுத்தாண்ட அவரது கருணையின் பெருக்கை எடுத்துரைப்பதும் அசாத்தியம். சில சமயங்களில் நம்முடைய பாவத்தினாலும் விசுவாசக்குறைவினாலும் மற்றும் பலவீனத்தினாலும் நமக்குப் பொருள் நஷ்டமும், சரீர வியாதியும், உத்தியோக கஷ்டமும்,

பேருக்குக் கனவீனமும் வந்திருக்கலாம். தண்டனையாக மாணமும் கூட வந்திருக்கலாம். சில சமயங்களில் நமது பரம பிதா தாமே நமதுபேரிலுள்ள பேரன்பினிமித்தம் நாம் இன்னும் அதிகமாய் ஆவியில் வளர்ந்தேறவேண்டும் என்கிற கருத்துக்கொண்டு, பொன்னை அக்கினியில் புடமிடுவதுபோல், நம்மையும் பரீட்சித்துப் புடமிட்டு அதிக நல்லவர்களும் பிரயோஜனமுள்ளவர்களுமாக்கும்படி, பலவிதமான அநுபவங்களுக்குள் நடத்தியிருக்கலாம். என்றாலும் 'தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்கிறது' என்று ஆவியானவரால் ஏவுதலடைந்து அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்லியிருக்கிறதை ஞாபகத்தில் வைக்கக்கடவோம். பெலிஸ்தியருக்கு முன்பாக முதுகுகாட்டி ஓடக்கூடிய ஜனங்களைப் பலப்படுத்தி நிராயுதபாணிகளாய் எதிர்த்துப் போர்புரிந்து ஜெயம் பெறச்செய்த தேவன், நம்மையும் சென்ற வருஷத்தைச் சேதமற, இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைத் தாண்டினதுபோல், கடந்துவாச் செய்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட பெருங்கருணையை நினைத்து அத்தியந்த பணிவோடு இருதயத்தின் ஆழத்திலிருந்து 'இம்மட்டும் கர்த்தர் உதவி செய்தார்' என்று சொல்லி அவருக்கே ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பூர்வீக காலத்தில் கர்த்தர் பெலிஸ்தியரின்மேல் தங்களுக்கு ஜெயம் தந்து உதவிசெய்தாரென்று அறிந்துணர்ந்து சேனுக்கும் மிஸ்பாவுக்கும் நடுவேயுள்ள ஓர் ஸ்தலத்தில் 'எபெனேசர்' என்னும் ஸ்தோத்திரக்கல்லை சாமுவேல் என்னும் தேவ மனுஷன் நாட்டினான். எபெனேசர் என்னும் பதத்திற்கு 'உதவியின் கல்' என்ற பொருளாயினும் அந்தக் கல் ஞாபகக் கல்லாயும், ஸ்தோத்திரக் கல்லாயும், நம்பிக்கையின் கல்லாயும் இருக்கிறது. அவ்வாறே நாமும் சென்ற வருஷத்தில் தேவனுடைய காத்திலிருந்து பெற்றுவந்த நானாவித நன்மைகளை நன்குணர்ந்து அடிக்கடி ஞாபகத்தில் வைத்து ஸ்தோத்திரம் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். 'இம்மட்டும் உதவிசெய்தார்' என்னும்பொழுது 'இனிமேலும் உதவி செய்வார்' என்கிற நம்பிக்கையையும் உறுதியையும் ஒரு விசுவாசியின் இருதயத்தில் உண்டாக்குகிறது. தேவனுடைய வல்லமையையும் அவரது பரிசுத்த அன்பையும் மட்டுப்படுத்துவது அவிசுவாசத்திற்கோர் அடையாளமாம். இடைவிடாது தேவபராமரிப்பும் தேவ நடத்துதலும் தேவபலமும், வருகிற மாதங்களில் நமது பங்காயிருக்க வேண்டுமானால், இஸ்ரவேலர் சாமுவேலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அஸ்தரோத்தையும் அந்நிய தேவர்களையும் விட்டுவிட்டு முழு இருதயத்தோடே கர்த்தரிடத்தில் திரும்பி அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வதற்கு அடையாளமாக தங்களுடைய பாவங்களைக்குறித்து



மனஸ்தாபப்பட்டு அவைகளை அறிக்கையிட்டுத் தங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு சாமுவேல்மூலமாய் பால் குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைச் சர்வாங்க தகனபலியாகப் பலி செலுத்தினதுபோல், நாமும் சென்ற வருஷத்தில் நமது சொந்த ஜீவியத்திலும், குடும்ப ஜீவியத்திலும், தேவ ஊழியத்திலும் காணப்பட்ட சகல தோஷங்களையும் பாவங்களையும் பலஹீனங்களையும் சோம்பேறித்தனத்தையும் இன்னும் பலவிதமான இடையூறுகளையும் நீக்கிக்கொள்ள உத்தம மனஸ்தாபமடைந்து அறிக்கைசெய்து, பரம நித்திய ஆசாரியராகிய இயேசு ரட்சகர் செலுத்திய சர்வ பாவநிவாரண பலியை முன்னிட்டு, உத்தம விசுவாசத்தோடு இவ்வருஷத்தைத் துவக்கவேண்டும். அப்பொழுது தான் நாம் எதிர்த்துப் போர்செய்யவேண்டிய பலவிதமான பெலிஸ்தியர்போன்ற அசுத்த ஆவியின் சைனியங்கள்மேல் ஜெயமடைந்து அவர்கள் முதுகுகாட்டி ஓடச்செய்வோம். கடந்த காலத்து அற்புத அடையாளங்களாகிய தேவ வல்லமையின் சின்னங்கள் எவ்வாறு இஸ்ரவேல் ஜனங்களைப் பலப்படுத்தி எழுப்பி ஏவி 'கர்த்தர் உதவி செய்வார்' என்கிற நிச்சயத்தோடு முன்னேறிப்போகச் செய்ததோ, அவ்வாறே கடந்த வருஷத்தில் தேவன் நமக்குக் கைம்மாறு கருதாமல் பாராட்டிவந்த அற்புத அடையாளச் செய்கைகளாகிய கிருபையின் எத்தனங்கள் நம்மையும் எல்லாவற்றிலும் ஜெயம்பெறச் செய்யும் என்கிற உறுதியான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பிறப்பிக்கிறதென்பதற்கு ஐயமில்லை. 'உலக முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருப்பேன்' என்று திருவாக்களித்த நமது ரட்சகர் 'மாறுகிறவரல்ல, மாறுதலின் நிழலும் அவரிடத்தில் இல்லை.' 'அவர் நேற்றும் இன்றும் என்றுமுள்ளவர்,' 'அவர் அதிசயமானவர்' நாம் அவரில் நிலைத்திருக்குமளவும் அவர் நம்மில் வசித்து இடைவிடாது நடத்துபவர். 'உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்.' 'சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவேன்' என்று சொல்லி அனுப்பியும் இருக்கிறார். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தேவவாக்கை நம்பி ஆவியானவரைப் பெற்று வேதோபதேசத்திற்கிணங்கி இயேசு ரட்சகரின்பேரில் உயிருள்ள விசுவாசத்தோடு இவ்வருஷத்தைத் துவக்கித் தேவன் நமக்கு நியமித்திருக்கிற வேலையில் பிரவேசிப்போமாக. இப்படிச் செய்வதற்குத் தேவன்தாமே நமக்கு உதவிசெய்வாராக. ஆமென்.

# Sermon Preparation and Delivery

**By the Rev. N. Devasagayam**

## பிரசங்கச் சிந்திப்பும் செய்முறையும்

(தொடர்ச்சி)

### மேற்சொன்ன பிரசங்க உத்திகளை விளக்கும் ஒரு காட்டு

(உதாரணம்)

தருமப்பெட்டியில் காசுபோட்ட விதவை. *மாற்.* 12 41-44.

(முழுமையும் படிக்கவேண்டும்.)

*இந்தச் சரித்திரத்தில் ஆண்டவர் தம் எக்காலத்துச் சீஷருக்கும் முக்கியமான ஒரு உபதேசத்தை விளக்கிக் காட்டுகிறார். அது எது*

முகவுரை

*வென்றால்: திரு ஆராதனைக்கும் தருமப்பெட்டியில் காசிடுதலுக்கும் உள்ள நெருங்கின சம்பந்தமே.*

[இந்த உபதேசத்தைச் சொல்ல என்ன நிமித்தியமிருந்தது? தேவாலயத்தில் யூதர் கடமைப்படி செலுத்துவதற்கு ஒன்பது தருமப்பெட்டிகளும் மன இஷ்டப்படி செலுத்த ஐந்து தருமப்பெட்டிகளும் இருந்தன. இந்த விதவை இந்த இரண்டாம் வகைப் பெட்டிகளண்டை போய் இரண்டே காசு (காலணா) செலுத்தினதை அவளிலும் அதிகம் செலுத்தவந்த சீமான்கள் பார்த்து, இந்த அற்பத்துக்கு இவள் எங்களைக் காக்கவைத்தாளே என்று ஒருக்கால் முறுமுறுத்ததைச் சீஷர் சரிதான் என்று ஒப்பின தருணத்தில் ஆண்டவர் சொன்னதாயிருக்கலாம். இவ்வளவும் சந்தர்ப்பத்தைக்கொண்டு ஊகிக்கவேண்டும்.]

முக்கிய பொருள் அல்லது எடுத்த வாக்கியத்தின் இலக்கு

**திருவாராதனைக்கும் சபைக் கடமை செலுத்துவதற்குமுள்ள சம்பந்தம்.**

[இங்கு சில வார்த்தைகள் பின்வருமாறு சொல்லலாம். ஆராதனைக்கும் பணம் செலுத்துவதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது. நான் பணம் செலுத்தாவிட்டால் நல்ல கிறிஸ்தவனாயிருக்க முடியாதா என்று வெகுபேர் கேட்கிறார்கள். உத்தரம்: பணம் செலுத்த மனமில்லாதவன் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனல்ல. கடமைப்பட்ட பணம் செலுத்துதல் ஒருவனுடைய விசுவாசத்தையும் அன்பையும் அளக்கிற அளவுகோல். இந்த அளவுகோலால் ஒவ்வொருவனும் தன்னை அளந்து பார்க்கவேண்டும்.]

1. நீ கடமைப்பட்ட சபைக் கடனைச் செலுத்துதல் உன் விசுவாசத்தை அளக்கிற கோல்.

2. அதுவே உன் அன்பை அளக்கிற கோல்.

[இவ்விரண்டும் முன்சொன்ன முக்கிய முதற்பொருளின் கிளைப்பொருள்கள். இரண்டையும் எடுத்த வாக்கியத்தைக்கொண்டே பின்வருமாறு விளக்கலாம்.]



முதலாவது: *அது விசுவாசத்தை அளக்கிறதெப்படி? விசுவாசம் என்றால் ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குக் கொடுத்துக் கிறிஸ்துவைத் தான் வாங்கிக்கொள்ளுதல் [கிறிஸ்து என்பதற்குப் பதிலாய் தேவன் என்றும் உபயோகிக்கலாம்]. ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்கு (தேவனுக்கு) எவ்வளவாய்க் கொடுக்கிறான் என்பதை அவன் சபைக்குச் செலுத்துகிற கடமை வெளிப்படுத்தும். சபையின் கடமைகளைப் (திருவஷ். வசனப்பிரசங்கம், ஆத்தும விசாரிப்பு, தேவ நற்கருணை, கிறிஸ்தவ விவாகம், கிறிஸ்தவ நல்லடக்கம்) பெற்றுக்கொள்ளுகிறவன் சபைக்குத் தன் கடமையைச் செலுத்தவேண்டும். இது தேவகட்டளை. தசமபாகம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட விகிதம். முப்பத்திரண்டில் ஒன்று பல சபைகளில் இப்போதேற்பட்டிருக்கிற விகிதம். அதைச் செலுத்த மனமில்லாமல் தனக்கென்று வைத்துக்கொள்ளுகிறான். தனக்கு வைத்தது தேவனுக்குக் கொடாமலொளித்தது. இப்படி ஒளித்தது தன்னைத் தேவனுக்குக் (கிறிஸ்துவுக்குக்) கொடாமையாகும், அதாவது விசுவாசமில்லாமையாகும். எவ்வளவுக்கு ஒருவன் இப்படிக் கடமைத் தாழ்ச்சி செய்கிறானோ அவ்வளவுக்கு அவன் விசுவாசத் தாழ்ச்சி செய்கிறான். ஒருவன் தன்னை முற்றும் தேவனுக்குக் கொடுத்து தான் தேவனை முற்றும் வாங்கிக்கொள்வதே பூரண விசுவாசம். இந்த விதவை அப்படிச் செய்தாள். ஏனெனில் அவள் தனக்கிருந்த ஜீவனத்தை முழுமையும் தேவனுக்குக் கொடுத்தாள் (44 வச).*

[இங்கே, அவள் அன்றாடக ஜீவியத்தைத் தேவபராமரிப்புக்கு ஒப்புக்கொடுத்த விசுவாச மகத்துவத்தைச் சற்று விவரிக்கலாம். அதன்பிறகு, அந்தந்தச் சபையில் நடைபெறும் சபைக்கடமை மீறுதலை ஒருவாறு எடுத்துக்காட்டி இந்த விதவையின் மாதிரிக்குமுன் வெட்கும்படி தூண்டலாம்].

இரண்டாவது: *அது அன்பை அளக்கிறதெப்படி? கிறிஸ்தவ அன்பு எவ்வளவு இருக்கவேண்டும்? உத்தரம்: எல்லாவற்றிற்கும் மேலான அன்பு தேவனுக்கு. பிறத்தியானுக்குத் தன்னைப்போல் அன்பு, அதாவது, ஒருவன் தேவனை முழு ஆத்துமாவினாலும் முழு வினாலும் நேசிக்கவேண்டும், பிறத்தியானைத் தன்னைப்போல் நேசிக்கவேண்டும். இந்த அளவுகோல்படி ஒவ்வொருவனும் தன்னை அளக்கிறதற்கு அவனவன் தன் சபைக்கடமை செலுத்துதலே அளவுகோல். தற்சிநேகம் அன்புக்கு எதிரிடை. அது தேவலோகத்தில் இருக்கவே கூடாது. தேவன் அன்பு, சாத்தான் தற்சிநேகம். ஆகவே தற்சிநேகம் நரகத்தின் இயற்கைக்குணம். அது திருச்சபையிலிருக்கலாமா? ஒருவன் தன் கடமையைச் செலுத்துவதிலே எவ்வளவு தாழ்ச்சி செய்கிறானோ அவ்வளவும் அவனுடைய அன்புக் குறைவைக் காட்டும். தன் ஜீவனம் முழுமையையும் தேவனுக்குக் கொடுத்து*

விட்டுத் தேவனையே தன் ஜீவனமாக வாங்கிக்கொள்வதுதான் கிறிஸ்தவ பூரண அன்பு. (தேவனுக்குக் கொடுத்தது இழந்துபோனதல்ல. அது அவர் வாங்கின கடன். பெரிய லாபத்துடன் அவர் திரும்பக் கொடுப்பார். இப்படி அறிவதற்கு நம் அன்பு ஜீவியம் ஒன்றே சாதனம்.) இந்த ஸ்திரீ அப்பேர்ப்பட்ட அன்பு தனக்கிருந்ததைத் தன் கொடையினால் காட்டினாள். பிறர் தம் நிறைவிலிருந்து எடுத்தார்கள். தவிர, அந்த நிறைவிலிருந்து முழுமையையும் எடுக்கவில்லை, தங்களுக்குக் கண்டு மிஞ்சினதைமாத்திரம் எடுத்தார்கள். அது அவர்களுக்கு எவ்வித பாரமும் கொடுத்ததில்லை. இவளோ தன் குறைவிலிருந்து எடுத்தாள். மேலும், தனக்கு இருந்ததையெல்லாம் எடுத்தாள் (43, 44 வச). ஆகவே, அவர்கள் நான் என்கிற ஆளை எடுத்து முழுமையும் தேவனுக்கும் பிறருக்கும் கொடுத்ததில்லை. இவளோ நான் என்னும் ஆளை முழுமையும் ஆண்டவருக்கும் பிறருக்கும் ஒப்புவித்தாள். இதுவே சரியான அளவுள்ள அன்பு. மேலும் அவளைக் கட்டாயமாய்ச் செய்ததில்லை. அவள் கடமைப் பெட்டியிலல்ல இஷ்டப் பெட்டியில் காணிக்கை செலுத்தப்போனதே அவளுடைய மன உற்சாகத்துக்குப் போதுமான ரூபகாரம்.

[இங்கே மன உற்சாகமாய்க் கடமை செய்யாமை ஒழுங்குப்படி செலுத்தப்பட்டதையும் அன்பில்லாச் செய்கையாக்கும் என்று விளக்கித் தூண்டலாம்.]

குறிப்பு: இவ்விரண்டு உட்பிரிவுகளிலும் பொருட்பொலிவும் நினைவுப் பொருத்தமும் இருப்பதை உய்த்தறிக. இது ஒரு சுருக்க நேரத்திற்குப் போதுமானது. விரிவான நேரமிருந்தால், உட்பொருளையும் விரிவாக்கி விளக்கலாம்.

## The Epistle to the Philippians

**By the Rev. Henry Rice**

## பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

(தொடர்ச்சி.)

**இந்த நிருபத்தின் பொருளடக்கம்.** பவுல் எழுதிய மற்றெல்லா நிருபங்களையும்விட இந்த நிருபத்தில் சபையைப்பற்றிக் குறைகூறல் கொஞ்சமாயும் புகழ்ச்சியோ அதிகமாயும் அடங்கியிருக்கிறது. பிலிப்பிய சபையின் நிலைமையைப்பற்றி உயர்ந்த கருத்தை இந்நிருபம் நமக்குண்டாக்குகிறது. உபத்திரவகாலத்தில் அவர்களுக்கிருந்த விசுவாச உறுதி (1. 28, 29) பவுலின்பேரில் அவர்களுக்கிருந்த மாறாத



பற்றுதலும் கீழ்ப்படிதலும் (2. 12) மற்றெல்லாச் சபைகளைப்பார்க்கிலும் அவர்களுக்கே உரித்தாயிருந்த உதாரத்துவம் (4. 15) ஆகிய இவற்றுடன் தப்புபதேசங்களுக்கும் அவர்கள் அகப்படாதிருந்தார்கள். யூதமதச் சார்பினாலுண்டாகும் மதப்பிரிவினைகளும் அவர்களுக்குள் இன்னும் வந்தெட்டவில்லை. என்றாலும் இம்மதக் கட்சியாரான பிரபலஸ்தர் ஒருவேளை சமீபத்திலிருந்திருப்பாராகையாலும் பின்கூடி ஒருவேளை அவர்கள் மத்தியில் தலைகாட்டக்கூடியதானபடியாலும் இவர்களைப்பற்றி எச்சரிக்கப்பட்டிருந்தார்கள். ஆயினும் பிலிப்பிய சபைக்குள்ளிருந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிற ஒரு குறை என்னவெனில் அவர்களில் சிலர் தாழ்ந்த சிந்தையற்றவர்களாயிருந்து தங்கள் சகோதரர்களுக்குள் கலகத்துக்கும் வாக்குவாதத்துக்கும் இடம்பண்ணினார்கள். அங்கே கிறிஸ்தவர்களானவர்களில் பேர் குறிக்கப்பட்ட **எயோதியாள் சிந்திக்கேயாள்** என்னும் இரண்டு செல்வாக்குள்ள ஸ்திரீகளே இத்தப்புக்குள்ளான விசேஷித்த குற்றவாளிகள். இவ்விருவருடைய சச்சரவுகளைப்பற்றி நாம் அதிக விசனப்படவேண்டியதேனென்றால் இவர்கள் சபையின் விசுவாச விர்த்திக்காக அதிக வைராக்கியத்துடன் உழைத்தார்களாம். இக்கேவலமான சண்டையை ஒழித்துவிடும்படி பவுல் மிகுந்த தாபந்தத்தோடு புத்தி சொல்லுகிறார்.

மேலும் இந்த நிருபத்தில் பவுல் பிலிப்பியருக்குத் தன் சொந்த நிலைமையையும் ரோமாபுரியில் சுவிசேஷம் பரம்புவதையும்பற்றித் திட்டமாய் அறிவித்திருக்கிறார். தாம் அவர்களை மகா அன்புடன் நினைவுகூர்வதோடு சீக்கிரத்தில் தமக்கு நேரிடவிருக்கும் முடிவை எதிர்பார்த்தவராய்த் தமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் அனல்மூண்டு உரைத்தெழுதுகிறார்.

இந்நிருபமானது தற்கால இந்திய சபைக்குப் பல முக்கியமான பாடங்களைப் போதிக்கின்றது.

**1. எல்லா விவாதங்களையும் கலகங்களையும் கட்சிக் குணங்களையும் ஒழித்துவிடுவோமாக.**

பிலிப்பிய சபை அநேக நற்காரியங்களில் சிறப்புற்றிருந்தும் ஒரு பெருங் குறைவு அதிலிருந்தது. விவாதக் குணம் தலைகாட்டினது. வாக்குவாதமும் போட்டித்தனமும் அங்கிருந்தது. பவுல் **எயோதியாள் சிந்திக்கேயாள்** என்ற இரண்டு பெண்களின் பேர்களைக் காட்டுகிறார். இவர்களே இச்சண்டைகளுக்கு முக்கியஸ்தர். இவர்களை ஒப்புரவாக்கிக்கொள்ளும்படி பவுல் ஏவுகிறார். இதிலே இந்திய சபைக்கொரு பாடமில்லையா? எத்தனையோ சபைகள் கட்சியினாலும் விவாதங்களினாலும் சின்னாபின்னமாகியிருக்கின்றன. பவுல் அவர்களைப் பார்த்து 'நீங்கள் ஏக மனதுள்ளவர்களாய் ஒன்றையும் வாதினா

லாவது வீண் பெருமையினாலாவது செய்யாதிருங்கள். சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காக ஏக சிந்தையோடு போராடி ஒரே ஆவியில் உறுதிப்பட்டிருங்கள். அப்படிச் செய்வீர்களானால் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடிருக்கும்' என்று சொல்லுவார்.

2. உதாரத்துவத்தைப்பற்றிய பாடம்.

பிலிப்பிய கிறிஸ்தவர்கள் உதாரத்துவமாய்க் கொடுப்பதினால் பிரக்கியாதி பெற்றிருந்தார்கள். தங்கள் தகுதிக்கேற்கவும் அதற்கதிகமாகவும் தேவ காரியங்களுக்காகக் கொடுத்தார்கள். சுவிசேஷ பிரபலியத்துக்கென்று கிறிஸ்துவினிமித்தம் தங்களை வெறுத்து தங்கள் வறுமையிலிருந்தும் திடன்கொண்டு கொடுக்கச் சித்தமுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு அநேக சாட்சியங்களுண்டு. பிலிப்பிய சபையானது மிஷன் பொக்கிஷத்தைச் சாராந்திராமல் சுயாதீனமுடையதாய்த் தற்பரிபாலனமுற்றிருந்ததுமன்றி காலமெல்லாம் தானே சுவிசேஷ விர்த்திக்காகப் பணம் சேர்த்தது. இந்திய சபை இதைப் பின்பற்றக்கடவது. நாம் குழந்தைகளாயிருந்த காலம் போதும். நாம் புருஷத்துவமடைவோமாக. பிலிப்பியரைப்போல இந்திய கிறிஸ்தவர்களும் சுவிசேஷ விர்த்திக்காகவும் தங்கள் சபை தாபரிப்புக்காகவும் தங்கள் வறுமையிலிருந்து தாராளமாய்க் கொடுக்கட்டும். ஐரோப்பிய துரைமார் தங்களுக்கென்ன உதவிசெய்யக் கேட்கலாமென்பதற்குப் பதிலாய்த் தாங்களே தங்கள் சொந்த பணப்பையில் கைபோட்டு ஒவ்வொரு நற்காரியத்துக்கும் கொடுத்துதவட்டும். ஒரு உயர்ந்த பால் பசுவைக் கெடுக்கும் உசித வழி அதைத் தாராளமாய்ப் பால் கறவாமல் விட்டுவருவதே என்று ஒரு சமுசாரிக்குத் தெரியும். அதுபோல ஒரு சபையைக் கெடுக்கும் உசித வழி அடிக்கடி கொடுக்கும் சமயங்களை அதற்குக் கொடாதிருப்பதேயாம். 'வாரியிறைத்தும் விருத்தியடைவாருமுண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாருமுண்டு' என்பது நீதிமொழி வாக்கு. நீதி. 11. 24.

3. ஜாதிபேதத் தன்மையும் வருணபேதமும் எண்ணமும்.

பவுல் பிறப்பிலும் கல்வியறிவிலும் மேம்பாடுடையவர். அவர் தமது உயர்ந்த குடிவழிப் பிறப்புக்கும், வைதீக ஆசார வளர்ப்புக்கும் சொந்தம் பாராட்டக்கூடியவர். ஜனங்க அந்தஸ்திலும் குறைகூறப்படாத உயர்ந்த பதவியுடையவர் (3. 4-8). மனிதருக்குள் லாபமாக எண்ணப்படும் இந்த ஜாதி அந்தஸ்து மேன்மைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்றெண்ணினார். இந்தப் பூர்வோத்திரப் பெருமை, ஜாதியபிமானம், மதவைராக்கியங்களையெல்லாம் ஒரே மொத்தமாக நாய்களுக்குப் போட்டுவிடும் உச்சிட்டங்கள்போல விட்டெறிந்துவிட்டுக் கிறிஸ்துவுக்குள்ளாக உன்னதப் பிறவியானார்.



கிருபையினாலே தேவனுக்குப் பிள்ளையாகிப் போனபின்பு ஜனசமூகத்தின் மேன்மையான இந்தச் சுத்தக் கேவல நிலைமையை அவர் தேடவேண்டுவதேன்? தன் கர்த்தராகிய கிறிஸ்தேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக அவர் எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணினாரே. இவ்விஷயமாக பிலிப்பிய சபைக்குக் கிறிஸ்துவின் முன்மாதிரியைச் சுட்டிக் காட்டுகிறார். 'அவர் தேவனுக்குச் சமமாயிருந்தும் மனிதனினிமித்தம் தமது பரம மகிமையையும் மகத்துவத்தையும் துறந்து தம்மைத்தாமே வெறுமையாக்கி ஒரு அடிமையின் ரூபமெடுக்கத்தக்கதாகத் தம்மையே தாழ்த்திச் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானார்.' இவ்வித முன்மாதிரிக்கு முன்னே சகல ஜாதிப் பெருமைகளும் என்றென்றைக்குமாகச் சாபத்துக்குள்ளாகிவிடும். தற்கால இந்திய சபைக்கு இதிலொரு பாடமில்லையா? ஜாதிபேதத் தப்பெண்ணங்களும் வருண வித்தியாசங்களும் அதிக பலவீனத்துக்கும் அநேக கேடுகளுக்கும் மூலமாயிருக்கிறதே. 'கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும், விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றும், அடிமையென்றும் சுயாதீனனென்றும், ஆணென்றும் பெண்ணென்றுமில்லை;' 'எல்லாரும் ஒன்றாயிருக்கிறார்கள்.' 'கிறிஸ்தேசுவிலிருந்த இந்தச் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.' 'மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து கிறிஸ்துவுக்குள் மேன்மை பாராட்டுங்கள்.' கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பதை விருத்திபண்ணுவோமாக. அப்போது இவையெல்லாம் அற்பமும் அப்பிரதானமுமானதுமாய்க் காணப்படும்.

## A Bible Reading—The Sufferings and Death of Christ

By the Rev. S. A. Vedanayagam

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

### சிலுவை பாதை

சிலுவையைச் சுற்றிலுமிருந்த கூட்டங்கள். மத். 27. 39-44, 55, 56; மாற். 15. 29-32; லூக். 23. 35-37; யோவா. 19. 23, 25. நம தாண்டவருடைய பாடுகள் முக்கியமாய்ச் சரீரபாடுகளல்ல. அவர் சிரசு சுற்றிலும் பார்க்கக்கூடியதாயிருந்தபடியால், பின்வருங் கூட்டங்களை அவர் பார்க்கக்கூடியவராயிருந்தார்.

1. ரோமச் சேவகர்கள். லூக். 23. 34; யோவா. 19. 23, 24. இவர்கள் உணர்ச்சியின்மையைக் காட்டினார்கள். இவருடைய வஸ்திரங்களை நாலு போர்ச்சேவகர்கள் பங்கிட்டுக்கொண்டார்கள். போர்ச்சேவகர்கள் இக்காரியங்கள் எல்லாவற்றையும் ஒரு வேடிக்கையாக எண்ணினார்கள். ஒரு கேலியான பட்டாபிஷேகம் நடத்துகிறார்கள். அவர்கள் சீமோனைப் பரியாசத்துக்காகப் பிடிக்கிறார்கள். இங்கே சிலுவையின் பக்கத்தில் சூதாடும்படியாக உட்காருகிறார்கள்.

2. சனகிரீம் சங்கத்தார். இவர்கள் கடும்பகையைக் காட்டுகிறார்கள். இவர்கள் தங்கள் அந்தஸ்தை மறந்து கல்வாரிமேட்டில் கூட்டத்தின் நடுவில் நிற்கிறார்கள். அவர் முன்பு தம்மைக்குறித்துச் சொன்னதையும் இப்போது இருக்கிற நிலைமையையும் பேதப்படுத்தி அவரை நிந்திக்கிறார்கள். இந்த வார்த்தைகள் தங்கள் மேசியாவின் சத்துருக்களைப்பற்றிச் சொல்லப்பட்ட வார்த்தைகளென்று அறியாமல் தங்கள் குருட்டாட்டத்தினால் சொன்னார்கள் (சங். 22. 8). ஜனங்களும், போர்ச்சேவகர்களும், அவரோடுகூடச் சிலுவையிலறையப்பட்ட கள்ளர்களும் ஆகிய மூவகைக் கூட்டத்தார்களும் ஆண்டவரை நிந்திக்கிறார்கள்.

3. அவரை நேசித்த ஸ்திரீகள். மத். 27. 55, 56; மாற். 15. 40, 41; லூக். 23. 49; யோவா. 19. 25, 27 பயத்தால் தூரநின்றார்கள். ஆனால் தைரியமாய்க் கூடவந்தார்கள். ஆண்டவருடைய கண்கள் இந்த 5 மணி நேரத்திற்குள் பலதடவை இந்தக் கூட்டத்துக்குள் சென்றிருக்கும். ஆத்துமாவே, நீ எந்தக் கூட்டத்திலிருந்திருக்கவேண்டும்?

## இயேசுகிறிஸ்து

சிலுவையைச் சுற்றியிருந்தவர்களின் மனஸ்திதியைப் பார்த்தோம். இப்பொழுது நமதாண்டவருடைய மனதின் எண்ணங்களைப் பார்ப்போம். அவர் சிலுவையிலிருந்து திருவாய் மலர்ந்தருளிய எழுபொன் வசனங்கள் மூலமாய் அவருடைய மன நிலைமையை அறியலாம்.

**சிலுவையிலிருந்து சொல்லப்பட்ட முதல் வார்த்தை. லூக். 23. 3, 4.**

1. தேவனை, அவர் 'பிதாவே' என்று அழைக்கிறார். பொல்லாங்கின் வல்லமைகள் மேற்கொள்ளும்படி தேவன் இடங்கொடுத்ததுபோலத் தோன்றிற்று. கிறிஸ்துவின் முதல் வார்த்தை அவர் தேவனில் வைத்திருக்கும் உறுதியான நம்பிக்கையைக் காட்டுகிற வார்த்தையாயிருக்கிறது. குற்றவாளிகள் நோவினால் தேவனைத் தூஷித்து ஊளையிடுகிறது வழக்கம். ஒருவேளை அவருடன் சிலுவையிலறையப்பட்ட கள்ளர்கள் அப்படிச் செய்திருக்கலாம்.



2. ஜெபம். 'இவர்களுக்கு மன்னியும்.' 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்' என்று போதித்தவர் இங்கு சாதனையினால் திருஷ்டாந்தப்படுத்துகிறார். அவர் அடைந்த நிந்தை, பகை, அநியாயம், குரூரவதை முதலியவைகளைக் கவனியுங்கள். சிலுவையைச் சுற்றியும் பெரிய கூட்டத்தில் உண்டான நகைப்பையும், ஆகடியத்தையும், பரியாசத்தையும் கவனியுங்கள். இயேசு இப்பேர்ப்பட்டவர்களுக்காக ஜெபிக்கிறார்.

3. நியாயம் எடுத்துக்காட்டல். 'அவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்.' அவர்கள் குரூரத்துக்கு ஒரு போக்கைக் காட்டுகிறார். போர்ச்சேவகர்கள் அவரைச் சிலுவையில் ஆணிகளால் அறையும்போது, விசேஷமாய் அவர்களுக்காக ஒரு வேளை ஜெபித்திருக்கலாம்.

**ஆனால் யூதாசும், பிலாத்தும், ஏரோதும் தாங்கள் செய்தவைகளை அறியவில்லையா? அப். 3. 17.**

**இந்த ஜெபம் கேட்கப்பட்டதா?**

1. ஒரு பெரிய விபத்து அந்தச் சமயத்தில் நேரிடாமலிருந்ததே அவரின் ஜெபம் கேட்கப்பட்டதற்கு அடையாளம்.

2. ஒரு கள்ளனும், நூற்றுக்கு அதிபதியும், 'திரள் கூட்டத்தாரும்' தங்கள் பாவத்தை உணர்ந்தார்கள். லூக். 23. 46, 47, 48.

3. தங்கள் சத்துருக்களுக்காக ஜெபம் செய்யும்படி, இந்த ஜெபம் எல்லாருக்கும் கற்பிக்கிறது. அப். 7. 60.

# The Bible and Historical Criticism

**By Dr. Wycoff**

## வேதாகமமும் கல்வி நுட்பமும்

தற்காலத்தில் கல்விமான்கள் வேதாகமத்தைச் சரித்திரமாகவும் இலக்கியமாகவும் பாவித்து, அது சரித்திர இலக்கணத்துக்கும் இலக்கிய விதிகளுக்கும் பொருந்தியிருப்பதாவென்று நுட்பமாய்ப் பரிசோதிக்கிறார்கள். வேதாகமத்தின் கர்த்தா நிச்சயம், காரிய நிச்சயம், அதின் பாகங்கள் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும் இசைவு, அதின் சரித்திர இயல், வாசகப்போங்கு, பாஷை நடை ஆகிய யாவும் இவ்விதமாய் நுண்ணிய பரீக்ஷை செய்யப்படுகின்றன. இத்தன்மையான நுட்ப ஆராய்ச்சி செய்வோர் இருபிரிவானவர்.

(1) ஒருதிறத்தார் வேதாகமம் இதுவரையும் வியாக்கியானம் செய்யப்பட்டு வந்த முறையைச் சமூலமாய் மாற்றி, அதின் திவ்விய

ஏவுதலையும் திவ்விய அதிகாரத்தையும்பற்றி மனிதருக்குள் சந்தேகம் எழுப்பிவிட்டிருக்கிறார்கள். இவர்களை அமிதப் பரிசோதனர் எனலாம்.

(2) மற்ற வகுப்பார் முந்தின திறத்தார் ஒப்புக்கொள்ளும் சத்தியங்களையும் அவர்களுடைய ஆராய்ச்சி முறையையுமே கையாடினபோதிலும் இவர்கள் கொள்ளும் முடிவான அனுமானங்கள் வேதாகமத்தின் உண்மையை ஊனப்படுத்தாமல் உறுதிப்படுத்துகின்றன. இவர்கள் மிதப் பரிசோதனர் எனப்படலாம்.

கல்வி நுட்பப் பரிசோதனர் தங்கள் ஆராய்ச்சியினால் நிச்சயங்கொண்டு சாதிக்கும் விஷயங்களையெல்லாம் எழுதுவது தகுதியாயிராது, அவை அநேகம். அவற்றுள் ஒன்றைமாத்திரம் இங்கு நாம் உதாரணமாக உரைக்கலாகும்.

வேதாகமத்திலுள்ள பல சரித்திர பாகங்கள் ஆக்கியோனால் சுயமாய் எழுதப்பட்டவையாயிராமல், பல பூர்வ சரித்திரக் குறிப்புக்களிலிருந்து திரட்டிச் சேர்க்கப்பட்டவையென்று மிதப் பரிசோதனர் கூறுகிறார்கள். இது சத்திய சித்தாந்தமாகப் பெரும்பாலும் அங்கிகாரம் பெற்றிருக்கிறது. நான்கு சுவிசேஷங்களிலுமடங்கிய வரலாறுகளைக் காலக்கிரமப்படி ஒழுங்குப்படுத்தி இணைத்து, கிறிஸ்துவைப்பற்றிய தொடர்ச்சியான பூரண சரித்திரம் வரையக்கூடியதாயிருப்பதுபோல, பஞ்சாகமமும் வேறு சில சரித்திர ஆகமங்களும் அவைகளுக்கு முன்னிருந்த பூர்வ நூல்களிலிருந்து கோர்வைப்படுத்தப்பட்டவையென்று நிச்சயமாய் அனுமானிக்கலாம். சுவிசேஷங்களிலெப்படியோ அப்படியே பழைய ஏற்பாட்டிலும் சிற்சில விஷயங்களில் வித்தியாசமிருப்பினும் மொத்தத்தில் ஒத்திருக்கிற இரண்டு சரித்திர வரலாறுகள் காணப்படுவதற்கு இதுவே காரணம். ஒரு வரலாறு ஒரு சாதனத்திலிருந்தும் அதற்குச் சற்று விகற்பமான மற்ற வரலாறு வேறொரு பூர்வ சரித்திரத்திலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கலாம். மிதப் பரிசோதனர் ஆராய்ச்சியின்மேல் கண்டுபிடித்திருக்கும் இந்தச் சத்தியத்தினால் வேதாகம சரித்திரத்தின்மீது நமக்கிருக்கும் விசுவாசம் தளருவதற்கான நிமித்தம் எதுவுமில்லை. பரிசுத்த கிரந்தகர்த்தா, சரித்திரத்தை முற்றிலும் சுயமாகவே எழுதியிருந்தாலும் சரி, அல்லது முன் எழுதப்பட்ட சாதனங்களிலிருந்தும் கன்னபாரம்பரியங்களிலிருந்தும் பொறுக்கித் திரட்டியிருந்தாலும் சரி, அந்த விஷயம் கிரந்தம் வரையப்பட்ட முறையைச் சம்பந்தித்ததேயல்லாமல் ஆக்கியோன் நிச்சயத்துக்காவது திவ்விய அதிகாரத்துக்காவது பழுதுண்டாக்காது. மேலும் இந்தக் கொள்கை பழைய ஏற்பாட்டில் காணப்படும் சில விகற்பங்களும் சிக்குகளும் உண்டான வகையை நமக்குத்



தெரிவித்து வேதாகம சரித்திர உண்மையைப்பற்றிப் பலர் கொள்ளும் சந்தேகங்களை நிவிர்த்திக்கிறது.

ஆகையால்,

'காய்தல் உவத்தல் அகற்றியொரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே'

என்னும் செய்யுள் வாக்குக்கிசைய நமது மனதில் ஏற்கனவே பூண்டிருக்கும் எண்ணங்களைக்கொண்டு நுட்பப் பரிசோதனரின் அபிப்பிராயங்களைக்குறித்துத் தீர்ப்புச்செய்யாமல் அவ்வபிப்பிராயங்கள் நியாயமானவையோ அல்லவோவென்று நிதானமாய்ச் சீர்தூக்கிப் பார்க்கும்படி நாம் நமது மனதைத் திறந்து வைத்திருக்கவேண்டும். 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்றாற்போல், பரிசோதனர் ஆராய்ந்து கண்டுபிடித்து வெளியிடுவதையெல்லாம் பிடிவாதமாய்த் துவேஷித்து விடுவது தகாது; அப்படியே அவர்களது சித்தாந்தங்களையெல்லாம் முன்பின் யோசிக்காமல் உடனே ஏற்றுக்கொள்வதும் சரியன்று. இருபக்ஷத்திலும் மிகுந்த சாவதானம் தேவை. கல்வி நுட்பத்தைக்கொண்டு செய்யும் ஆராய்ச்சி நூதனமாயுண்டானது. அது அதிகமாய்ப் புத்திக்கடுத்ததேயல்லாமல், ஆவிக் குரியதன்று. ஆகையால் அதை அனுசரிப்பதில் மிகுந்த எச்சரிக்கை அவசியமே.

அன்றியும் நுட்பப் பரிசோதனருக்குள்ளேயே விவாதங்களுண்டு; அவைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. புதைந்து மறைந்துபோன பல பூர்வ சரித்திரங்களை இப்போது குந்தாலியும் மண்வெட்டியும் தோண்டி வெளிக்குக் கொண்டுவருகின்றன; இன்னமும் அவைகள் வெளிப்படுத்தவேண்டியவைகள் ஏராளம். கந்தப் புராணக் கதைகள் என ஒருகாலத்தில் பகிரங்கமாய்க் கூறப்பட்ட வரலாறுகள் மெய்ச்சரித்திர சம்பவங்களென்று தற்சமயம் விளங்குகின்றன. பார்வோன்களின் சுகந்தவர்க்க மிடப்பட்ட பிரேதங்களும் பாபிலோனிய செங்கற் பலகைகளும் மற்ற சாசனங்களும் கண்டுபிடிக்கப்பட்ட பின் பூர்வ பரிசோதனருடைய மனோகற்பனை கொள்கைகள் பல அடியோடு நிர்மூலமாய்ப்போயின. இவைகள் யாவும் புராதனப் பரிசீலன சாஸ்திரத்தின் (archæology) மூலமாய் நாம் பெறக்கூடிய அனுகூலங்களுக்கு ஆரம்பம் மாத்திரமே. இதுவரையும் வெளிக்கு வந்திருப்பதைப்பார்க்கிலும் மிக ஆச்சரியமான சத்தியங்கள் நாம் எதிர்பாராதவண்ணம் திடீரென்று இனித் துலங்கலாம்.

ஒரு பெரிய நகரில் பல பொருட்சாலைப் பலகணிக்குமுன் நின்றுகொண்டிருந்த சில பகிடிக்காரர் அப்பொருட்களின் மத்தியில் அசைவற்று உறைந்திருந்த ஆந்தையைப் பதுமை என்றெண்ணி அதன் வேலைப்பாட்டைக்குறித்துப் பலவாறாய்ப் பேச ஆரம்பித்தனர். ஒரு

வன் தலையைக்குறித்தும் இன்னொருவன் செட்டையைக்குறித்தும் மற்றவர்கள் வாலைக்குறித்தும் பரிகசித்துக்கொண்டிருக்கையில், ஆந்தை கண்ணைச் சிமிட்டி உருட்டவே, அவர்களால் அலங்கோலப் பதுமை என்றெண்ணப்பட்ட அது மெய்யான ஜீவ ஜெந்துவாக விளங்கிற்று. பகிடிக்காரருக்கு உண்டான திகைப்பும் வெட்கமும் என்னவென்று சொல்லவேண்டியதில்லை. அவ்விதமே யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிக்குவரக்கூடும்; சுகந்தவர்க்க மிடப்பட்ட அம்முற்பிதாக்களின் முகங்கள் பரிசுத்த சரித்திர சத்தியத்துக்குச் சாட்சிபகரலாம்.

நிர்ஜனமான வனத்தில் பிரயாணம்பண்ணும் ஓர் யாத்திரிகன் அங்கே மனுஷ வாசஸ்தலமொன்று பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்ணுற்றால், தனக்கு முன்னும் அவ்வனத்தில் மனுஷ சஞ்சாரம் இருந்ததென்று சந்தேகமற நிச்சயங்கொள்வான். அதற்கு வேறே சாட்சி அவனுக்கு வேண்டியதில்லையே. வருஷா வருஷம் நூதன ஒளி தோன்றி வேத சரித்திரத்தின் உண்மையைத் துலக்குவிக்கிறது. வேதாகமத்தின் தேவனே சரித்திரத்துக்கும் தேவனாயிருக்கிறாரென்று நாமறிவோம்.

ஆனபடியால் பரிசோதனரின் நுண்ணிய ஆராய்ச்சிகளின் மூலமாய் தேவனுடைய வழிகளைப்பற்றி நாம் மிகத் தெளிவான அறிவடைகிறோமென்று திடநிச்சய மடையும்வரையில் தீர்மானமாய் எந்தக் கட்சியையும் சேராமல் நடக்கும் போரைப் பார்த்து நின்று 'எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்னும் அப்போஸ்தலப் பிரமாணத்தைப் பேணி நடந்துகொள்வோமாக.

## Eternal Life

**By the Rev. C. H. Monahan**

## நித்திய ஜீவன்

மூன்றாம் பாகம்

'ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே
நித்திய ஜீவனை அறுப்பான்.'

(கலா. 6. 8.)

1. முதற்பாகத்தில், தேவன் நமக்கு நித்திய ஜீவன் தந்திருக்கிறாரென்றும், இரண்டாம் பாகத்தில் அந்த ஜீவன் அவருடைய குமாரனாகிய



இயேசுகிறிஸ்துவுக்குள் பொருந்தியிருக்கிறதென்றும் கண்டோம். இப்பொழுது அந்த ஜீவனை நாம் பெற்று அனுபவிக்கவேண்டிய வழி இன்னதென்று கவனிக்கவேண்டும். அதைச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் பரிசுத்தாவியினால் நமக்குள்ளே அந்த ஜீவன் உற்பத்தியாகி வளருகிறது. ஒருவன் ஆவிக்கென்று விதைத்தால் தான் நித்திய ஜீவனை அறுப்பான் (கலா. 6. 8). நித்திய ஜீவன் என்னும் சிரேஷ்டமுள்ள வரம் சுபாவத்தினால் ஒருவருக்கும் கிடைக்கிறதில்லை. மாமிசத்தினால் பிறப்பது மாமிச ஜீவனாயிருக்கும்: நித்திய ஜீவனோ ஆவிக்கேற்ற பிறப்பினாலேயே நமக்குள்ளுண்டாகும். தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்துத் தாங்கிவருகிறாரென்றும், சகலமும் அவருக்குள் நிலைத்திருக்கிறதென்றும், அவர் சகலத்திலும் வியாபித்திருக்கிறாரென்றும், நாம் ஒப்புக்கொண்டாலும், அவர் எல்லா ஆத்துமாக்களிலும் வாசம்பண்ணுகிற விதம் ஒன்றுதான் என்று ஒருபோதும் நினைக்கலாகாது. அவர் பரிசுத்த யோவானிலே வாசம்பண்ணினதுபோலவே அவபக்தியும் அநியாயமும் நிறைந்த சண்டாளரிலே வாசம்பண்ணுகிறார் என்பது பயங்கரமான அபத்தம். எல்லாருக்கும் சுபாவப்பிறப்பினாலுண்டான ஜீவனுண்டு. ஆனால் விசுவாசிகளுக்கு மாத்திரம் ஆவிக்குரிய பிறப்பினால் நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறது. ஆவியானவரே ஜீவனைக் கொடுக்கிறவராயிருக்கிறார். நமது ரட்சகர் இதைப்பற்றிச் சொன்ன சாட்சி நம்மெல்லாருக்கும் தெரியும். 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காணமாட்டான்' என்றும் 'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்' என்றும் அவர் நிக்கொதேமுவினிடத்தில் வற்புறுத்திப் பேசினாரல்லவா?

2. பரிசுத்தாவியானவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதுமல்லாமல் அந்த ஜீவன் நமக்குண்டென்று நாம் நிச்சயமடையும்பொருட்டாக அவரே நம்முடைய ஆவியுடனேகூட அதைப்பற்றிச் சாட்சி கொடுக்கிறவராயிருக்கிறார். ஏனென்றால் ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர் (1 யோவா. 5. 6; ரோ. 8. 16). நாம் அடைந்திருக்கிற இந்த நித்திய ஜீவனுக்கும் பரிசுத்தாவிக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம் ரோ. 8-ம் அதிகாரத்தில் வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. 2-ம் வசனத்தில் அவர் ஜீவனுடைய ஆவி என்றும், 6-ம் வசனத்தில் ஆவியின் சிந்தை ஜீவன் என்றும், 11-ம் வசனத்தில் ஆவியினாலே சாவுக்கேதுவான நமது சரீரங்களுக்கும் உயிர் உண்டாகவேண்டும் என்றும், 13-ம் வசனத்தில் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்போம்

என்றும் வாசிக்கிறோம். இவை முதலான வாக்கியங்களைக் கவனித்துப் பார்க்குமிடத்தில் பரிசுத்தாவியினால் நமக்குண்டாகும் நித்திய ஜீவனில் அடங்கிய அம்சங்கள் எவையெனில் ஆவிக்குரிய சிந்தை, ஆவியினால் நடத்தப்படுதல், பாவத்தை ஜெயிக்கிற ஜெயம், சரீர உயிர்த்தெழுதல் முதலியவைகளே.

3. இந்த அருமையான ஜீவனை பாவியாகிய நான் எப்படிப் பெறக்கூடும்? மெய்ப்பொருளாகிய நித்திய ஜீவனை எந்தப் பொய்யினாலும் பெறமுடியாது. நம்முடைய பாவத்தை உணராத தற்பெருமை, பொய்யாகிய விக்கிரகங்களைப் பற்றிக்கொள்ளுதல், தன் குற்றத்தை மறைத்துக்கொள்ளும் மாய்மாலம் முதலிய துர்க்குணங்கள் நித்திய ஜீவன் நமக்குண்டாகவொட்டாமல் தடைசெய்கிறது. உண்மையும் துப்புரவும் நமக்கு அவசியம் வேண்டும். உண்மையிருந்தால் நம்முடைய பாவத்தை உணர்ந்து அறிக்கையிடுவோம். தேவனுடைய வெளிச்சம் நமது ஆத்துமாவின் அந்தரங்க ஜீவியத்தில் வீசும்படி இடங்கொடுப்போம். நம்முடைய உள்ளான ஸ்திதியை மறைக்கிற மறைவுகளை எல்லாம் தகர்த்துப்போடுவோம். அந்த மறைவுகளில் சிலவற்றை, யோவான் அப்போஸ்தலன் காட்டியிருக்கிறார். (1 யோவா. 1. 5–10 வரை காண்க.)

4. பரிசுத்த அன்பிலே ஐக்கியப்படுவதற்கு முதலாவது தடை என்னவென்றால் நாம் இருளிலே நடந்தாலும் பரிசுத்த தேவனோடே ஐக்கியப்படலாம் என்கிற எண்ணமே. இது வெறும் அபத்தம். தேவன் ஒளியாய் இருக்கிறார்; அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. ஆதலால் இருளிலே நடக்கிறவர்கள் அவரோடு ஐக்கியப்பட்டவர்களல்ல. பாவம் அவ்வளவு பயங்கரமான காரியம் அல்லவென்று எண்ணுகிற எண்ணமே பயங்கரம். அது நித்திய ஜீவனை அடைவதற்கு விசேஷித்த தடை. அதை நாம் முற்றிலும் தள்ளிவிட்டு ஒளியிலே நடந்தால், பரிசுத்த அன்பின் ஐக்கியத்தைக் கண்டடைவோம். இயேசுவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவா. 1. 5–7.)

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 69 பெப்ருவரி 1912

# வேதியர் விளக்கு

## The Gospel according to Matthew

By the Rev. F. Goodwill

## மத்தேயு சுவிசேஷம்

நாம் நான்கு சுவிசேஷங்களையும் தீர்க்கமாய் வாசித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்திகளைக் கவனிக்கும்போது, கைதேர்ந்த சித்திரக்காரர் நாலுபேர் ஒருவருடைய கனமும் அருளும் நிறைந்த முகரூபத்தைப் பார்த்துவிட்டுத் தங்கள் தங்கள் தொழிற்சாலைக்குப் போய் நன்கு வரைந்த நான்கு சித்திரங்களைப்போல் காணப்படும். நடந்த சம்பவம் ஒன்றையே கண்ட நாலுபேர் அதை விவரிக்கிறபோது, உண்மையெல்லாம் ஒரேவிதமாக இருந்தாலும், தங்கள் கல்விச் சாமர்த்தியத்தின்படியும், பேச்சு வல்லபத்தின்படியும் அவைகளை வெவ்வேறாய்த் தெரிவிப்பார்களல்லவா? அவ்வாறே சுவிசேஷத்தை எழுதின நாலுபேரும் தாங்கள் கண்ட காரியங்களை வெவ்வேறாய் எழுதினதோடு பற்பல நோக்கங்களோடு எழுதினதினால், சுவிசேஷங்களில் அங்கங்கே சிற்சில வித்தியாசங்களைக் காண்கிறோம். உதாரணமாக, பவுலுக்குத் தோழனும் உடன் வேலைக்காரனுமாகிய லூக்கா ஆண்டவருடைய திவ்விய வசனங்களையும, அரிய செய்கைகளையும் புறஜாதியாருக்குத் தக்க போதனையாக எடுத்துக் கூறி, ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்று காட்டுகிறான். இப்போ நாம் கவனிக்கப்போகிற சுவிசேஷத்தை எழுதினவன் யூதனாகிய மத்தேயு. இவன் தன் சொந்தத் தேசத்தாருக்கு இயேசு மெய்யான மேசியாவென்றும், தலைமுறை தலைமுறையாய்த் தேவன் அற்புதங்களைச் செய்து பிரமாணங்களைக் கொடுத்துத் தம்மை யூதருடைய சரித்திரத்தில் வெளிப்படுத்திவந்த ஆயத்தத்துக்கு முடிவானவர் என்றும், தெளிவாய்ச் சொல்லுகிறான். லூக்கா சுவிசேஷகன் இவரை உலகமெங்குமுள்ள மனுஷரனைவருக்கும் மித்திரனும் மீட்பருமானவர் என்று தெரிவிக்கிறான். மத்தேயுவோ இயேசுவுக்கும் ஆதிகாலம்முதல்

எல்லா நூற்றாண்டுகளிலுமிருந்த மனுஷரனைவருக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுகிறான். நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுகிறவர் என்று காட்டும் அறுபது ஒத்துவாக்கியங்களைப் பழையேற்பாட்டு ஆகமங்களிலிருந்து எடுத்துச் சொல்லுகிறான். தன் சுவிசேஷத்தின் துவக்கத்தில் இயேசு 'ஆபிரகாமின் சந்ததியும் தாவீதின் குமாரனுமானவர்' என்பதாய் ரூபிக்கிறான் (மத். 1. 1). லூக்கா சுவிசேஷகன் பின்னும் அவருடைய வம்சவரிசையை விவரிக்கையில், அவர் ஆதாமின் குமாரன் என்றும், ஆதாம் தேவனால் உண்டானவன் என்றும் சொல்லி ஆண்டவருடைய மெய்யான மனுஷத்துவத்தைமாத்திரம் காண்பிக்கிறான் (அதி. 3. 38). முதல் முதலாக இந்தச் சுவிசேஷம் எழுதப்படாவிட்டாலும், இது பழையேற்பாட்டையும் புதியேற்பாட்டையும் இணைக்கிற கொக்கிபோலிருப்பதினாலும், வெகு சீக்கிரத்தில் ஆதிக் கிறிஸ்தவர்களுடைய மனதைக் கவர்ந்து அவர்களால் நன்குமதிக்கப்பட்டதாலும் மற்றச் சுவிசேஷங்களுக்குமுன் வைக்கப்பட்டிருக்கிறது. பூர்வகாலமுதல் இது மிகப் பிரசித்தமான சுவிசேஷம். மற்றச் சுவிசேஷ ஆகமங்களிலிருந்து சங்கதிகளை ஒப்பனையாக எடுத்துச் சொல்வதைப்பார்க்கிலும் இந்தச் சுவிசேஷத்திலிருந்தே பல சங்கதிகளை உதாரணமாக அநேக கிரந்த கர்த்தாக்கள் உபயோகித்திருக்கிறார்கள்.

கிரந்த கர்த்தா

இரண்டாம் நூற்றாண்டு முதல் இந்தச் சுவிசேஷத்துக்கு 'மத்தேயு பிரகாரம்' ('According to Matthew') என்பது மாத்திரம் மேலெழுத்து. இதனால் மத்தேயுதான் இதை எழுதினான் என்பதாக நிச்சயிக்கலாகாது. ஆயினும், மத்தேயு கிறிஸ்துவைப்பற்றிச் செய்த பிரசங்கங்களைக் கேட்டு வேறொருவன் அவைகளை இதிலடக்கி எழுதியிருக்கலாம்; மத்தேயு சங்கதிகளைச் சொல்லச் சொல்ல இன்னொருவன் லிகிதனாகவிருந்து அவைகளை எழுதியுமிருக்கலாம்; அல்லது மத்தேயுதானே அவைகளை ஒன்றாய்த் திரட்டி எழுதியிருக்கலாம் என்பதே இதின் திட்டமான அர்த்தம். எப்படியிருந்தாலும் இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் மத்தேயு என்றுதான் திருச்சபை மூப்பர்களும் பொதுவாய்க் கிறிஸ்தவ சபையாரனைவரும் ஆதிகாலம்முதல் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்தேயு அப்போஸ்தலனைப்பற்றிச் சுவிசேஷங்களில் கண்டிருக்கிறவைகள் மிகச் சொற்பம். இயேசு அவனை அழைத்ததைப்பற்றிய விவரத்தை வாசிக்கிறோம். இவன் பெயர் சுவிசேஷகர் அட்டவணையிலும் அப்போஸ்தலருடைய பட்டியிலும் வருகிறது. இவன் புரிந்த செய்கைகளையும் மொழிந்த வார்த்தைகளை



யும்பற்றிப் புதியேற்பாட்டில் நாம் ஒன்றும் வாசிக்கிறதில்லை. வாஸ்தவத்தில் மத்தேயு இந்தச் சுவிசேஷத்தை எழுதியிராவிட்டால், அதை ரூபிக்க கிறிஸ்து சபை இவனை இதின் கிரந்த கர்த்தாவாக ஒப்புக்கொள்வதற்கு இவனைப்பற்றிய சரித்திரம் புதியேற்பாட்டில் நிலையானது ஒன்றுமில்லை. மத்தேயு இந்தச் சுவிசேஷத்தை எழுதினான் என்பதற்கு உள் அத்தாட்சியுமுண்டு. தன்னை ஆயக்காரனாகிய லேவி என்று தெரிவிக்கிறான் (அதி. 10. 3). மற்றக் கிரந்த கர்த்தாக்களோ ஆயக்கார வேலை கனவீனமானது என்று எண்ணி, இயேசுவானவர் அழைத்த லேவி மத்தேயுதான் என்று வெளியிடவில்லை. மேலும், லேவி தன் பழைய வேலையை விடுவதற்குமுன் தன் சிநேகிதருக்கு விருந்துசெய்தான் என்று மற்றச் சுவிசேஷகர் எழுதியிருக்கிறார்கள். மத்தேயுவோ, இந்தச் சுவிசேஷத்தை எழுதினபோது தன்னைப்பற்றிய இந்தக் கனமான சங்கதியை எழுதவில்லை. அன்றியும், அப்போஸ்தலருடைய பேர்ப்பட்டியில் தன் பெயருக்கு முந்தி தோமாவின் பெயரைவைத்து எழுதுகிறான். மற்றவர்களோ, தோமா பெயருக்குமுன் இவன் பேரைவைத்து எழுதுகிறார்கள். தன்னைப்பற்றிக் கனவீனமான காரியத்தை எழுதி, கனமான சங்கதியை எழுதாமல் விட்டிருக்கிறபடியால் மத்தேயுதான் இந்தச் சுவிசேஷத்தை எழுதினான் எனச் சொல்லத்தகும்.

இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்த பாப்பையஸ் என்னும் வேதசாஸ்திரி மத்தேயு இந்தச் சுவிசேஷத்தை எபிரெய பாஷையில் எழுதினான் என்றும், பிற்காலத்திலிருந்த ஐரேனியஸ் என்னும் குருவானவர் இதை யூதருக்காக எழுதினானென்றும் சொல்லுகிறார். இப்படியாக அப்போஸ்தலன் ஒருவன் எழுதியிருப்பதைப்பற்றி ஆச்சரியப்பட ஏதுமில்லை. யூதருக்குள் வேலைசெய்த அப்போஸ்தலர் அராமேய்க் பாஷையில் பேசவேண்டியதாயிருந்தது. ஆகையால் தன் சொந்த ஜனங்களை ஆதாயப்படுத்தும்படியாக அவர்களில் ஒருவன் சுவிசேஷம் எழுதினால், கிரேக்க பாஷையில் எழுதாமல் எபிரெய பாஷையில் எழுதுவது ஆச்சரியமல்லவே. இந்த முதலாம் பதிப்பை மத்தேயுவாவது வேறே யாராவது பொதுப் பிரயோகத்துக்காகக் கிரேக்க பாஷையில் எழுதியிருக்கவேண்டும்; ஏனெனில் எபிரெய பாஷையில் எழுதப்பட்டிருந்த சுவிசேஷம் முழுவதும் மறைந்துபோக, கிரேக்க பாஷையில் எழுதப்பட்டிருக்கிற சுவிசேஷம்மாத்திரம் ஆதிகாலம்முதல் வழங்கிவருகிறது. தற்கால வேதசாஸ்திரிகளில் பலர், மத்தேயு தன் சுவிசேஷத்தை எபிரெய பாஷையிலாவது எழுதி, வெகு சாதாரணமாக இயேசு பேசிவந்த அராமேய்க் பாஷையிலாவது அவரது அருமைப் பிரசங்கங்கள், அமிர்த வசனங்கள், உத்தம போதனை

கள் யாவற்றையும் கோர்வையாகச் சேர்த்திருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். மேலும், அறியப்படாமலிருக்கிற இன்னொரு ஆக்கியோன் இப்படிச் சேர்த்து எழுதப்பட்டவைகளோடு முதல் முதல் எழுதப்பட்டதென்று அநுமானிக்கப்படுகிற மாற்கு சுவிசேஷத்திலிருந்தும், பாரம்பரியமாக காதால் கேட்டுவந்த போதனைகளிலிருந்தும், மற்றக் கிரந்தங்களிலிருந்தும் இயேசு சுவாமியினுடைய ஜீவிய சரித்திரத்தின் சங்கதிகளைத் திரட்டி நாம் இப்போது வழங்குகிற இந்தச் சுவிசேஷத்தைச் செய்தான். மத்தேயு வெகுவாய்ச் சேர்த்த உன்னத பிரசங்கங்களும் இயேசு சுவாமியினுடைய அமிர்த வாசகங்களும் இதில் விசேஷமாய் அடங்கியிருக்கிறபடியால், இந்தக் கிரேக்க பதிப்புக்கு மத்தேயுவின் பேர் வழங்கினது. இயேசுகிறிஸ்துவின் 'சங்கதிகளைக்குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டார்கள்' என்று லூக்கா 1. 2-ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவருடைய பரிசுத்த ஜீவிய சரித்திரத்தை எழுதின சுவிசேஷகர் ஆவியானவரால் ஏவப்பட்டு, தங்கள் அனுபவத்தில் கண்டும் கேட்டுமிருந்த சம்பவங்களை ஞாபகப்படுத்தும் சக்தியையும் சகாயத்தையும் அருளையும் பலமாய்ப் பெற்று, மற்றவர்கள் இயற்றிய சுருள்களிலடங்கிய சங்கதிகளையும் சம்பவங்களையும் சேர்த்துத் தங்கள் சுவிசேஷங்களில் எழுதியிருக்கலாம் என்று நாம் நம்புவதற்கு ஏதுவுண்டு.

## A Sermon

### மறைவாய் வளர்ந்த வித்தின் உவமை

மாற். 4. 26-29.

இந்தச் சுருக்கமான உவமையில் தேவ ஊழியக்காரனுக்கு விசேஷித்த படிப்பனை அடங்கியிருக்கிறது. அதை நான் மறுபடியும் சொல்லுகிறேன்.

ஒரு சமுசாரி தன்னுடைய நிலத்தை ஆயத்தம்பண்ணும்படியாகச் செய்யவேண்டிய வேலை எல்லாம் ஏற்றகாலத்தில் செய்துகொண்டான். வேண்டிய எருப்போட்டு உழுது படல் அடித்த பிறகு விதை விதைத்தான். விதை விதைத்து அவன் செய்யக்கூடிய வேலை எல்லாம் முடிந்தபடியினால் அவன் விட்டுவிட்டு வேறு அலுவலைப் பார்த்துக்கொண்டான். அப்படியே சிலவாரம் கழிந்தபின் வயலில் நடந்தது என்னவென்றால்: முளை கிளம்பி இலை வெடித்துப் பயிர் ஆகி தண்டு பெருத்து, கதிர் வாங்கி, பால் பிடித்துக் கதிர் முற்றி, அறுவடைக்குப் பக்குவமானது.



இதெல்லாம் நடந்தவிதம் சமுசாரிக்குத் தெரியாது. விதை விதைக்கிறதைத்தவிர விளைவு உண்டாக்குகிறதற்கு அவன் செய்தது ஒன்றுமில்லை. அவனுக்குத் தெரியாதவிதமாய் விதை முளைத்துப் பயிரானது. தானியம் அறுப்புக்குப் பக்குவமாகிறதென்று அவன் அறிவானே அல்லாமல் அது பக்குவமானவிதம் அவனுக்குத் தெரியாது. பூமி, மழை, பனி, வெயில் முதலானவைகள் அதனதன் வேலை செய்தபிற்பாடுதான் அறுப்புக்காலம் வரும் என்பதே அவனுக்குத் தெரியும்.

அவனுக்குத் தெரியாதவிதமாய் விதை முளைத்துப் பயிராகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த உவமையின் விசேஷித்த கருத்தென்னவென்றால் விதை விதைப்பதோடு மனுஷனுடைய வேலை முடிந்துவிடுகிறது. பிறகு பூமி தானாகவே அவ்விதையை முளைக்கச் செய்கிறது. சமுசாரி விதை விதைத்து அதை விட்டுவிடுகிறான். விளைவு தானாக உண்டாகிறது.

இந்த உவமையில் அடங்கியிருக்கிற விவரம் ஒவ்வொன்றும் எதெதற்கு ஒப்பிடக்கூடியது என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

விதைக்கிறவன் தேவ ஊழியன். விதை தேவசத்தியம் அல்லது சுவிசேஷம். விதைத்த நிலம் மனுஷர்களுடைய இருதயம். இப்படியே இந்த உவமையின் நோக்கத்தைக் கவனிக்கையில் இது தேவ ஊழியனுக்கு விசேஷித்த கற்பனையைக் கற்பிக்கிறது.

இந்தப் படிப்பனையாவது :—தேவ ஊழியன் மனுஷர்களுடைய இருதயங்களில் விதையாகிய தேவ வார்த்தையை விதைத்து அதைத் தேவனுடைய கையில் விட்டுவிட்டுக் கவலையற்றிருக்கவேண்டும் என்பதே. பூமியில் விதைத்த விதை பலன் கொடுப்பது எப்படி இயல்பாய் இருக்கிறதோ அப்படியே தேவ சத்தியமாகிய விதை மனுஷர்களுடைய இருதயங்களில் பதிந்து நல்நடத்தை, நற்குணங்கள் ஆகிய பலன்களைக் கொடுப்பது நிச்சயமே. விதை விதைத்தபிறகு பொறுமையோடு காத்திருப்பது மனுஷர்கள் செய்யவேண்டிய தொழில். பலனைக் கொடுப்பவர் தேவனே. இதுவே இந்த உவமையின் அர்த்தமாம். இதைக் கவனிக்கிறதில் தேவ ஊழியக்காரர்களாகிய நாம் சிந்திக்கவேண்டிய மூன்று விஷயங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

I. தேவ ஊழியத்தில் மனுஷன் செய்யக்கூடியது எவ்வளவு சொற்பமாயிருக்கிறது.

இந்த உவமை இதற்குத் தக்க திருஷ்டாந்தமாயிருக்கிறது. குடியானவன் செய்கிறது என்ன? நிலத்தை ஆயத்தம்பண்ணி விதை

விதைக்கிறான். அவ்வளவுதான். காலம் வருமளவும் பொறுமையாய்க் காத்திருப்பான். பூமிக்குள்ளே அந்த விதை முளைக்கிறது அல்லவா? அதை அப்படி முளைக்கச்செய்ய மனிதனுடைய கை தேவையா?

சிறிய முளை பூமியைவிட்டு வெளிப்பட, தரையைப் பிளக்க மனிதன் உதவிசெய்யவேண்டுமோ? மனிதனுடைய ஒத்தாசை இல்லாமலே பயிர் ஆகிறது அல்லவா?

கதிரில் தானியத்தை நிரப்புகிறவன் மனுஷனா? இல்லவே இல்லை! அவனுக்குத் தெரியாதவிதமாய்க் கதிர் உற்பத்தியாகிறது. சமுசாரி செய்யக்கூடியது எவ்வளவு சொற்பம். தேவ ஊழியமும் அப்படியே. மனிதர்களைக் குணப்படுத்தலாகிய வேலையில் நாம் செய்யக்கூடியது எவ்வளவு சொற்பம்! நம்மால் ஆகிறது என்ன? விதை விதைப்பதே தவிர வேறொன்றும் செய்யமுடியாது. நாம் செய்கிற வேலை உழுகிறதும் விதைக்கிறதுமே. அவ்வளவுதான் நாம் செய்யக்கூடும்.

நம்முடைய ஊழியத்தின் பலன் நமக்குப் புலப்படாமலே அநேக வருஷங்கள் செல்லுகிறது. அதினால் நாம் மனந்தளர்ந்து நாம் செய்யும் வேலை என்னத்திற்கு? என்ன பிரயோசனம்? எப்போ பலன் கொடுக்கப்போகிறது? ‘இலவுகாத்த கிளிபோல்’ ஆகிறோமே. பிரயோஜனமற்ற இந்த வேலையை நாம் விட்டுவிட்டால் நலமாயிருக்குமென்று சிலவேளைகளில் களைப்பு அடைகிறோம் அல்லவா? எனக்குப் பிரியமானவர்களே! நாம் இவ்விதமாய் நினைக்காதபடி இயேசுகிறிஸ்து இந்த உவமையைச் சொன்னார். மனுஷர்களுக்கு ஏற்ற வேலை விதைக்கிறதுதான். பலனைக் கொடுக்கிறவர் தேவனே.

மனுஷர்களைக் குணப்படுத்தும்படியாகத் தேவ சத்தியமாகிய விதையை விதைப்பதுதான் நாம் செய்யக்கூடிய வேலை. அவர்களைக் குணப்படுத்துகிறவர் தேவனே. மற்றெல்லாவற்றையும்விடத் தேவனுடைய செயல் விசேஷமானது.

விதை விதைத்துப் பொறுமையாய்க் காத்திருப்பதாகிய நமது வேலை எவ்வளவு சொற்பமாய்த் தோன்றுகிறது.

II. நமது வேலை எவ்வளவு சொற்பமாயிருந்தாலும் அது எவ்வளவு ஆவசியகமாயிருக்கிறது என்பது தேவ ஊழியன் அறியவேண்டிய இரண்டாம் காரியமாம். நமக்குத் தென்படுகிறவரையில் நம் வேலை அதிக சொற்பமாயிருந்தாலும் தேவனுடைய வேலை நிறைவேறும்படி நாம் முதலில் விதை விதைக்கவேண்டியது அத்தியாவசியம்தான். அது இல்லாமற்போனால் தேவனுடைய வேலை வீணாய்ப் போகும். இதற்கு இந்த உவமை திருஷ்டாந்தமாம். சமுசாரி விதை விதைத்தானே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் அந்த



விதை விதைக்காமற்போனால் அறுப்பு எப்படிக் கிடைக்கும்? மழையும், பனியும் பெய்கிறதினாலும், வெயில் அடிக்கிறதினாலும் தேவன் செய்த வேலையே பலனைக் கொடுத்ததென்றாலும் விதைக்கிறது விளைவுக்கு அத்தியாவசியம். தேவ ஊழியக்காரர்களாகிய நாம் நம் வேலையைக்குறித்து இவ்விதமாகவே நினைக்கவேண்டும். நமது வேலை சொற்பமாயிருக்கிறது நிச்சயமே. சிறிய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறது எவ்வளவு அற்பமான வேலை!

ஏழைச் சபையாருக்குப் புத்தி சொல்லுகிறது எவ்வளவு சாதாரணமானது. ஆம்! நமது வேலை அதிக சொற்பமாயும் சாதாரணமாயுமிருக்கிறது.

என்றாலும், இந்தத் தேசத்தில் தேவன் அறுக்கப்போகிற அறுப்புக்கு நமது வேலை அவசியமாய் வேண்டியது. இந்த அற்பமான ஜனங்களிலிருந்து தேவன் தமக்கு ஒரு மகத்துவமான ராஜ்ஜியத்தை உண்டாக்கப்போகிறார். சொற்பமாய்த் தோன்றுகிற மனுஷனுடைய உதவி இல்லாவிட்டால் அது உண்டாகாது. பாருங்கள்! ‘நீங்கள் தேவனுடைய உடன் வேலையாட்களாயிருக்கிறீர்கள்’ என்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

நீங்கள்—விதைக்கிறவர்கள்; தேவன்—பலனைக் கொடுக்கிறவர்.

திருஷ்டாந்தமாக, உம்முடைய சபையிலே ஒரு வாலிபன் இருக்கிறான். அவனை நல்ல பக்தியுள்ள மனிதனாக்கி அவன் மூலமாய் அநேக ஆத்துமாக்களை இரட்சிக்கத் தேவன் விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். தேவன் இதை நிறைவேற்றுமுன் நீரும் உம்முடைய வேலையைச் செய்யவேண்டியது அவசியம். அந்த வாலிபனுடைய இருதயத்திலும் மனதிலும் நீர் நல்ல விதை விதைத்தால் ஒழிய தேவன் விரும்புகிற பலன் கிடைப்பது முடியாத காரியமாகும். தேவ ஊழியன் செய்யக்கூடியது எவ்வளவு ஆவசியகமாயிருக்கிறதென்று பாருங்கள்.

III. தேவனுடைய ஊழியத்தில் நாம் செய்யக்கூடியது சொற்பமாயிருக்கிறதென்றும் அந்தச் சொற்பமான உதவி அத்தியாவசியமாயிருக்கிறதென்றும் நான் காட்டின படிப்பனைகள் மெய்யானால் நாம் தேவனுடைய ஊழியத்தை என்ன எண்ணத்தோடு செய்யவேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள். நாம் செய்யும் வேலை எல்லாவற்றிலும் ஓயாத நம்பிக்கையும் விசுவாசமும் இருக்கவேண்டும்.

அந்த நம்பிக்கை என்னவென்றால், விதை விதைத்தலாகிய நமது வேலையை நாம் செய்தால் தேவன் தம்முடைய வேலையை நிறைவேற்றுவார் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை என்பதே. நாம்

விதைக்கிறதற்குத் தேவன் நிச்சயமாகவே பலனைக் கொடுப்பார் என்னும் நம்பிக்கையோடு நாம் தேவ ஊழியத்தைச் செய்யவேண்டும்.

இந்தச் சமுசாரியைக் கவனியுங்கள். தன்னுடைய வேலையை நன்றாய்ச் செய்தபிற்பாடு அதை விட்டுவிட்டுப் பகலிலே வேறு வேலையைச் செய்து இராத்திரியிலே படுத்துக்கொண்டு அறுப்பு விஷயத்தைக்குறித்துக் கவலையற்றவனாயிருந்தான். பலனைக் கொடுப்பது தேவனுடைய செயல். தேவன் தமது செயலை நிறைவேற்றுவார் என்னும் விசுவாசத்தோடு தேவனை நம்பினான்.

பிரியமானவர்களே! நமக்கு ஏற்றதாயிருக்கும் நமது வேலையை ஜாக்கிரதையாயும் உண்மையாயும் செய்து முடித்து அந்த வேலைக்குக் கிடைக்கும் பலனுக்காகத் தேவனை நம்புவோமாக. அதிலே அவர் தளரமாட்டார். பலனைக் கொடுக்கச் செய்வார் என்பது சகஜம்.

என் வேலைக்குப் பலன் கிடைக்கவில்லை. அதினால் பிரயோஜனமில்லை. அதை விட்டுவிட்டுப் பலன் கொடுக்கும் வேறு வேலையை ஆரம்பிப்பேன் என்று அவநம்பிக்கைப் படாதே. தேவ ஊழியத்தில் பலன் கிடைக்குமோ கிடைக்காதோ என்பதைப்பற்றி அதிக கவலை கொள்ளாதே. பலன் அளிப்பது உமக்காக அல்ல; அது தேவச் செயல். அவருக்குப் பிரியமாயிருந்தால் கொடுப்பார், பிரியமாயில்லாவிட்டால் கொடுக்கமாட்டார். பலன் அளிப்பது அவர் வசத்திலிருக்கிறது. அது உம்முடைய வசமல்ல.

விதையை விதையும். பலனுக்காகத் தேவனை நம்பும். உம்முடைய வேலையை உண்மையாய்ச் செய்யும். குறித்த காலத்தில் தேவன் அந்த வேலைக்குப் பலனை அளிப்பார் என்று விசுவாசியும். 'என் வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும்' என்று தேவன் கொடுக்கிற வாக்குத்தத்தத்தை நம்பி நாம் செய்யக்கூடிய வேலை அதிக சொற்பமாயிருந்தாலும் முழு மனதோடும் உண்மையோடும் நம்பிக்கையோடும் செய்வோமாக.



# A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி.)

### இயேசுகிறிஸ்து

நமதருமை இரட்சகர் சிலுவையிலிருந்து திருவாய்மலர்ந்தருளிய இரண்டாவது வசனம். லூக். 23. 39-43. இரண்டு கள்ளரின் மத்தியில் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள்.

(1) சிலுவையில் வரையப்பட்ட மேல்விலாசத்தின் நிந்தையை வற்புறுத்திக் காட்ட பிலாத்து அப்படிச் செய்திருக்கலாம்.

(2) அவரை அதிகமாய் நிந்திக்கும்படி யூதர்கள் இப்படிச் செய்ய பிலாத்துவைக் கேட்டிருப்பார்கள். மரணத்திலுங்கூட அவர் மெய்யான மனுஷ சுபாவங்களை உடையவராயிருந்தாரென்று காட்டும்படி தேவனால் இப்படி நியமிக்கப்பட்டது. முதலில் இரண்டு கள்ளர்களும் கிறிஸ்துவை நிந்தித்தார்கள்.

கள்ளர்களில் ஒருவன் திடீரென்று குணப்பட்டதற்குக் காரணமென்ன?

(1) கிறிஸ்துவானவர் புத்திப் போதனையாக அக்கள்ளனிடத்தில் யாதொன்றும் பேசினதாகத் தெரியவில்லை.

(2) இக்கள்ளன் கிறிஸ்துவினுடைய பொறுமையை வழியிலும், சிலுவையிலும் கவனித்துப் பார்த்தான். சத்துருக்களுக்காக அவர் ஜெபித்ததையும் கேட்டான்.

(3) தேவ ஆவியின் வல்லமையுள்ள கிரியையினால் குணப்பட்டான். இவையெல்லாவற்றையும் கண்டும் ஒருவன்மாத்திரம் இருதயத்தில் குத்துண்டு குணப்படவும் மற்றவன் கல்நெஞ்சனாய்ப் போகவும் காரணமாயிருந்ததென்ன?

இன்றைக்கு நீ என்னுடன் பரதீசிலிருப்பாய்.

(1) இது என்ன அதிசயமான காட்சி! சிலுவையில் மரிக்கப் போகிறவர் ஜீவனை அளிக்க வாக்குக் கொடுக்கிறார்.

(2) எம்பெருமானுடைய கிருபை பூரண இரட்சிப்படைவதற்குப் போதுமானது. அதிக பஞ்சமா பாதகர்களையும் முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையுள்ளது. உத்தரிக்கும் ஸ்தலத்தில் சுத்திகரிக்கப்பட வேண்டிய நிமித்தியமே இல்லை.

**சிலுவையின் மூன்றவது வசனம்.**

யோவா. 19. 25-27. இயேசு தாம் அகோரப் பாடுகளை அடைந்த போதுங்கூடத் தம்முடைய அருமைத் தாயாருக்கு வேண்டியவைகளைக் கவனிக்கக்கூடியவராயிருந்தார்.

மரியாள் லூக். 2. 35-ல் சொல்லப்பட்டவைகள் நிறைவேறினதென்று அப்போது உணர்ந்திருப்பாள். அவருடைய முழு ஜீவியமும் மரியாளுக்கு ஒரு புதுமையாயிருந்தது. அவர் தமது வீட்டை விட்டு வெளிப்பட்டுப் போனபோது இவ்வுலகத்துக்குரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப் போகிறார் என்கிற நம்பிக்கை அவளுக்குள் அதிகமாய் எழும்பி அதை எதிர்நோக்கி இருந்திருக்கலாம். இப்பொழுது அவரோ நிந்தையான மரணத்தை அடைகிறார். இவள் அவரை அதிக அருமையாய் நேசித்தபோதிலும், அவருக்கு யாதொரு உதவியையும் தான் செய்ய இடம் பெறாதிருக்கிறாள். இச்சமயத்தில் மரியாளின் இருதயச் சிந்தனைகளைச் சற்று நிதானித்துப் பாருங்கள். மூன்று ஸ்திரீகளும் ஒரு ஆணும் (யோவான்) சிலுவையண்டை நிற்கிறார்கள். பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசிக்க அவனுக்கு என்ன செல்வாக்கிருந்ததோ அதே இப்பொழுது யோவானைக் காப்பாற்றியிருக்கலாம். இயேசு தமது பணிவிடையை ஆரம்பிக்குமுன் யோசேப்பு இறந்துபோனதாகவும் அதினால் குடும்ப சம்ரட்சணை செய்யும் பொறுப்பு இவர்மேல் விழுந்ததாகவும், பாரம்பரை கூறுகிறது. தம்முடைய அன்பான சீஷன் தவிர மற்றப்படி பின்வைத்துப்போக பணம் ஒன்றும் அவரிடம் இல்லாதிருந்தது.

யோவானைத் தெரிந்துகொண்டது.

(1) இவன் மற்றவர்களைவிட ஆஸ்திவந்தனாயிருக்கலாம்.

(2) இவன் மற்றவர்களைக்காட்டிலும் அன்புள்ளவனும் இளகிய நெஞ்சுள்ளவனுமாயிருந்தான். பேதுரு இயேசுவை நேசித்தபோதிலும் முரடனாயிருந்தான்.

(3) மரியாள் ஏன் இயேசுவின் சகோதரர்கள் என்று சொல்லப்பட்டவர்களிடத்தில் போயிருக்கக்கூடாதென்பதைப்பற்றி ஒரு காரணமும் சொல்லப்படவில்லை. அப்பொழுது விசுவாசிகளாயிருந்திருக்கமாட்டார்கள். பிறகு கிறிஸ்தவர்களாகியிருக்கலாம்.

குறிப்பு. முதல் மூன்று சிலுவைத் திருவாசகங்களும் மற்றவர்களுக்கு அவசியமாயிருக்கிறதைத் தெரிவிக்கிறது.

(1) தம்மைக் கொலைசெய்யப்போகிறவர்களுக்காக ஜெபிக்கிறார். இங்கே பிரதான ஆசாரியராய் விளங்குகிறார்.



(2) இருதயத்தில் குத்துண்ட ஆத்துமாவை விசாரிக்கிறார். இங்கே பரம ராஜாவாக விளங்குகிறார்.

(3) துக்கசாகரத்திலிருந்த தம்முடைய அருமை மாதாவுக்கு வேண்டிய ஜீவனாம்ச ஏற்பாட்டைச் செய்கிறார். இதில் மெய்யான மனிதனாக விளங்குகிறார்.

# St. Paul

## பரிசுத்த பவுல்

பரிசுத்த பவுல் என்பவர் தம்மைக்குறித்தும் தம்முடைய ஜீவிய சரித்திரத்தைக்குறித்தும் சிற்சில இடங்களிலே விவரங்களை எழுதியிருக்கிறார். அதோடு அப்போஸ்தலருடைய நடபடிகளில் அவரைப் பற்றிய சில விஷயங்களை வாசித்து அவைகளைக்கொண்டு நாம் இன்னும் சில சங்கதிகளையும் அறிந்துகொள்ளலாம்.

அப். 21. 39-ல் தாம் 'சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுப் பட்டணத்து யூதன்' என்று சொல்லியிருக்கிறார். சபையின் ஆதி பிதாவாகிய ஜெரோம் என்பவர் பரி. பவுல் கலிலேயாவிலுள்ள கிஸ்காலா என்னும் ஊரிலே பிறந்ததாகச் சொல்லியிருக்கிறார். அப்படியுமல்லவென்றாலும் (அப். 22. 3-ல்) காண்க. பவுலின் குடும்பம் அப்பட்டணத்திலிருந்து வந்ததென்று பூர்வீகப் பாரம்பரியம் பொதுவாய்ச் சொல்லுகிறதினால் அவருடைய முன்னோர் அவ்விடத்திலிருந்து தர்சுவுக்கு வந்தார்கள் என்பதை நாம் நிச்சயிக்கலாம்.

தாம் பிறந்த தர்சு என்கிற பட்டணம் கீர்த்திபெற்றதாயிருந்ததாகச் சொல்லுகிறார். அக்காலத்தில் சிலிசியா என்னும் ரோமை ராஜதானி சின்னாசியாவிலுள்ள மற்றெல்லா நாடுகளைவிடப் பெரியதும் விசேஷித்ததுமாயிருந்தது. அந்த நாட்டுக்குத் தர்சு தலைநகரமாயிருந்ததுமல்லாமல் அது ஓர் முக்கியமான துறைமுகமாயும் அதிக செழிப்பான இடத்தில் கட்டப்பட்டதாயுமிருந்தது. மேலும் அக்காலத்தில் உலகம் முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மூன்று சர்வ கலாசாலைகளில் ஒன்று அப்பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ரோமர் அதை ஜெயிப்பதற்குமுன் சுயாதீனமாக இருந்தபடியினாலும், அது ரோமருக்கு உண்மையைக் காட்டியிருந்தபடியினாலும் அதின் குடிகளில் சிலர் ரோமாபுரியாருக்குக் கிடைத்த விசேஷித்த சிலாக்கியங்களில் பங்கு பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்களில் பவுலின் குடும்பமும் ஒன்றாயிருந்தது. இந்தச் சிலாக்கியம் எல்லாருக்குங் கொடுக்கப்படாமல் மேலான ஸ்திதியிலிருந்தவர்களுக்கு மாத்திரம்

கிடைத்ததினால் பவுலின் குடும்பமும் அப்படிப்பட்ட ஸ்திதியிலிருந்திருக்கவேண்டும்.

அப். 22. 25-29 வரையிலும் உள்ள சம்பாஷணையில் காண்கிறபடி பவுல் ரோமைச் சேனாதிபதியைப் பார்த்து நீர் ரோமைச் சிலாக்கியத்தை மிகுந்த திரவியத்தினாலே பெற்றேன் என்கிறீர். நானோ அந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்கிறார். இதனாலும் அவர் ரோமைச் சிலாக்கியத்தை உடையவராயிருந்தாரென்பது நன்கு விளங்குகிறது.

அவர் வாலிபனாயிருந்தபோது எருசலேம் பட்டணத்திற்கு அனுப்பப்பட்டுக் கமாலியேல் என்கிற நன்குமதிக்கப்பட்ட சாஸ்திரியாரிடத்தில் படித்தார். (அப். 22. 3-ல் 'அந்த நகரத்தில் என்பதற்குப் பதிலாக மூலபாஷையின்படி இந்த நகரத்தில்' என்று வாசிக்கவேண்டும். அதாவது எருசலேமில் என்பதே.)

அப்படி எருசலேம் போவதற்கும், அப்பேர்ப்பட்ட கல்விமானிடத்தில் கற்றுக்கொள்வதற்கும் பணம் அதிகமாய்ச் செலவுசெய்ய வேண்டியதாயிருந்திருக்கும். ஒருவேளை இவருடைய சகோதரியை அக்காலத்தில் எருசலேமில் விவாகஞ்செய்து கொடுத்திருக்கலாம். எப்படியோ அப். 23. 16-ல் காண்கிறபடி பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவருடைய சகோதரியின் குமாரன் வாலிபனாக எருசலேமிலிருந்தான் என்றும் உயர்ந்த வகுப்பினராகிய பரிசேயரில் சிலர் பவுலைக் கொலைசெய்யும்படியாகச் செய்திருந்த சர்ப்பனையை இவனும் அறிந்தவனாயிருந்ததினால் அவ்வுயர்குலத்தாரில் இவனும் ஒருவனாயிருந்தானென்றும் யூகிக்கலாம்.

பவுல் தம்மைப் பரிசேயன் என்றும் பென்யமீன் கோத்திரத்தான் என்றும் எபிரெயரில் பிறந்த எபிரெயனென்றும் சொல்லியிருக்கிறார். அதாவது, இத்தேசத்தில் பிராமணர் என்னப்பட்டவர்களைப்போலொத்த வமிசத்தில் பிறந்தவர். அவர் கிறிஸ்தவனானது இக்காலத்தில் ஓர் பிராமண வாலிபன் கிறிஸ்தவனாகிறதுபோலிருந்திருக்கும்.

அவருடைய குடும்பம் நல்ல ஸ்திதியிலிருந்ததென்பதற்கு வேறு சில அத்தாட்சிகளுமுண்டு. அவர் செசரியா என்னும் பட்டணத்திலே காவலில் வைக்கப்பட்டபோது பேலிக்ஸ் என்கிற தேசாதிபதி அடிக்கடி அவரை அழைத்து அவரோடு பேசினதாக வாசிக்கிறோம் (அப். 26. 26). மேலும் 25. 22-ல் அகிரிப்பா என்னும் இராஜா அவரைப் பார்க்க ஆவலாயிருந்தாரென்பதாகவும் வாசிக்கிறோம். அவர் ஏழையாயிருந்திருப்பாரானால் அவர்கள் அவரோடு இப்படிச் சம்பா



ஷிக்க அவ்வளவு பிரீதியுள்ளவர்களாயிருந்திருக்கமாட்டார்கள் என்று சொல்லலாம்.

அன்றியும் பேலிக்ஸ் என்பவர் பவுலை விடுதலைபண்ணும்படிக்குத் தமக்கு அவர் பணம் கொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தார். அவர் தேசாதிபதியாயிருந்ததினிமித்தம் அவர் எதிர்பார்த்த லஞ்சம் கொஞ்சமாயிருந்திருக்கமாட்டாது. பவுல் அப்பேர்ப்பட்ட ஒரு பெருந்தொகையைக் கொடுக்கத்தக்கச் சக்தியுள்ளவராய்க் காணப்பட்டிருக்கவேண்டும். அதோடு அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தாலும் தாம் தமது சொந்த சம்ரட்சணைக்கென்று தக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கவேண்டும். அவர் இராயனுக்கு அபயமிட்டு ரோமாபுரிக்குப் போய் அங்கே தான் வாடகைக்கு வாங்கின வீட்டிலே இரண்டு வருஷகாலமாகத் தங்கியிருந்தார் என்று அப். 28. 30-ல் வாசிக்கிறோம். இவற்றையெல்லாம் அதிக பணச்செலவில்லாமல் செய்துகொள்வது அசாத்தியம். ஆனதுகொண்டு அவர் பணக்காரனாயிருந்திருக்கவேண்டுமென்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

அவர் கூடாரம்பண்ணுகிற தொழிலைக் கற்றுக்கொண்டிருந்தார் (அப். 18. 3) என்று சொன்னாலும் அது இந்த அபிப்பிராயத்திற்கு விரோதமல்ல. ஏனென்றால் ஒவ்வொரு யூதனும் அவன் தனவந்தனாயிருந்தாலும், ஏழையாயிருந்தாலும் தன் மகனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக்கொடுக்கவேண்டுமாகையால் அவருடைய தகப்பன் அவருக்கு இத்தொழிலைக் கற்றுக்கொடுத்திருக்கவேண்டும்.

அவர் யூதனாயிருந்தபடியால் அவருக்குச் சவுல் என்று பெயரிட்டார்கள். அவர் ரோமனுமாயிருந்ததினால் அவருக்கு ஒரு ரோமைப் பெயரும் கொடுத்தார்கள். அந்தப் பெயர் பவுல் என்பதே.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் முதல் சில அதிகாரங்களில் அவர் சவுல் என்று அழைக்கப்படுகிறார். 13-ம் அதிகாரத்திலிருந்து அவர் பவுல் என்று சொல்லப்படுகிறார். தாம் செர்கியு பவுல் என்னும் அதிபதியைக் குணமாக்கினதினிமித்தம் அந்தப் பெயரை எடுத்துக்கொண்டார் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படிச் செய்வது ஒருவிதமான அகங்காரம் என்று தெரிகிறது. அவர் அச்சமயத்தில் முதலாவதாக அந்நிய தேசத்தாரோடும், ரோமரோடும், கிரேக்கரோடும் கலந்து அவர்கள் மத்தியில் வேலைசெய்ய ஆரம்பித்ததினிமித்தந்தான் அந்த ரோமைப்பெயரை அதுமுதல் வழங்கிவந்தார்.

# Eternal Life

**By the Rev. C. H. Monahan**

## நித்திய ஜீவன்

**மூன்றாம் பாகம்**

'ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே
நித்திய ஜீவனை அறுப்பான்.'

(கலா. 6. 8.)

(தொடர்ச்சி.)

5. தேவனோடு ஐக்கியப்படுவதற்கு இரண்டாவது தடை. தேவனுடைய பிரமாணத்தை மீறுகிற ஒருவன் தனக்குப் பாவமில்லை என்பானானால் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாக இருப்பான், அவனுக்குள் சத்தியம் இராது. பலபேர் அப்படி நடக்கிறாப்போல் தோன்றுகிறது. தேவனுக்கு அடாத காரியங்களை நடப்பிக்கிறார்கள், ஆனால் அவைகள் தங்களுக்குப் பாவமாகக் காணப்படுகிறதில்லை. மற்றவர்கள் அதே காரியங்களைச் செய்தாலோ இவர்களுக்குப் பாவமாகத் தோன்றும். இவர்களுடைய முழு எண்ணமும் என்னவென்றால் தாங்கள் என்ன செய்தாலும், அது புண்ணியமாகத்தான் இருக்கும் என்பதே. இவர்கள் செய்கிறது மகா பரிதாபம். எப்படியென்றால் நமக்குப் பாவமில்லை என்கிற பொய்யைச் சொல்லி அது மெய் என்று நம்பி, ஏமாந்துபோகிறார்கள் (1 யோவா. 1. 8). நாம் அப்படி மோசம் போகாமல் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு, தேவன் உண்மையும் நீதியுமுள்ளவராய் இருக்கிறார்.

6. மேற்சொல்லிய இரண்டு தப்பிதங்களைப்பார்க்கிலும், மிகவும் கேடுள்ள இன்னும் ஒன்று உண்டு. அதாவது, நாம் பாவம் செய்ததில்லை என்பதே. பாவம் செய்தாலும் ஐக்கியமிருக்கலாம் என்பதும், பாவக்கிரியைகளைச் செய்தாலும் பாவதோஷம் நம்மை அணுகாது என்பதும், பயங்கரமான எண்ணங்கள் தான். ஆனால் நான் ஒருபோதும் எந்தப் பாவத்தையும் செய்யவேயில்லை என்பது எல்லாவற்றிலும் பயங்கரமான அபத்தம். எப்படியென்றால் முதல் தப்பிதத்திற்கு இடம் கொடுக்கிறவர்கள் பொய் சொல்லுகிறார்கள், இரண்டாம் தப்பிதத்தைச் செய்கிறவர்கள் பொய் சொல்லி அது மெய்யென்று நம்புகிறார்கள், மூன்றாம் தப்பிதத்தைப் பண்ணுகிறவர்களோ தேவனைப் பொய்யர் ஆக்குகிறார்கள். ஏனென்றால் எல்லாரும் பாவம் செய்திருக்கிறார்கள் என்று சத்தியவேதத்தில் தேவன் சொல்லியிருக்க நான் பாவம் செய்யவில்லை என்பேனானால் அவருடைய வார்த்தை பொய்யென்று சாதிக்கிறவனாக இருப்பேன். நான் அப்படிச் செய்தால் அவருக்கும் எனக்கும், என்ன ஐக்கியம் இருக்கக்கூடும். (1 யோவா. 1. 10.)



7. நித்திய ஜீவன் நமக்கு வரவொட்டாமல் அதற்குத் தடையாயிருக்கிற இன்னொரு தப்பிதம் என்னவென்றால், நாம் பாவங்களை அறிக்கையிட்டால், தைரியமாய்ப் பாவம் செய்யலாம் என்பதே. ரோமான் மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு அம்மாள் இருந்தாள். ஒருநாள் அவள் குருவினிடத்தில் பாவஅறிக்கை செய்யப் புறப்பட்டுப்போகிற சமயத்தில் தன் புருஷன் அதைக்குறித்து ஆக்ஷேபனைப்பண்ணி, குருவினிடத்தில் அறிக்கை செய்யக்கூடாதென்று சொன்னதற்கு அந்த அம்மாள் நான் பாவஅறிக்கை செய்யாவிட்டால் நான் பயமின்றி தைரியமாய்ப் பாவம் செய்வது எப்படி என்று கேட்டாள். இது பெருத்த அபாயமான தப்பிதம்.

8. கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்பது இன்னொரு தடை. ரோமர் 6-ம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் இந்தத் தப்பிதத்தை அடியோடு நிக்கிரகம்பண்ணுகிறார்.

9. இடத்தை மாற்றுவதினால் குணம் மாறும் என்பது இன்னொரு தப்பிதம். ஒரு மிஷனிலே அக்கிரமம் செய்த சிலரை அறிவேன். அவர்கள் அந்த அக்கிரமத்தை அறிக்கையிடாமலும் செய்த அநியாயத்தை நிவிர்த்திபண்ணாமலும் இடத்தை மாற்றி இன்னொரு மிஷனுக்குப் போயிருப்பதினால் தங்கள் பாவம் ஒழிந்தது என்று எண்ணுகிறார்கள். அப்படியல்லவே.

இவை முதலான பொய் எண்ணங்களை நாம் அகற்றி நம்முடைய உள்ளான ஸ்திதி இன்னதென்று உணர்ந்து அறிக்கையிடவும், மெய்யான ஒளியாகிய இயேசுகிறிஸ்து நமக்குள்ளே வீசவும் வேண்டும். அப்பொழுதுதான் தேவன் ஆதிகாலம்முதல் நித்திய ஜீவனைக் குறித்துப் பண்ணின வாக்குத்தத்தத்தின்படி, பரிசுத்த ஆவியினால் மறுஜென்மம் அடைந்து, தேவனோடு ஐக்கியப்படுவோம்.

### நித்திய ஜீவ பரீக்ஷை

**'உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.' 1 யோவா. 5. 13.**

மேற்சொல்லிய வசனத்தைக் கவனிக்கையில் யோவான் அப்போஸ்தலன் இந்நிருபத்தை எழுதின நோக்கம் தெளிவாகிறது. அதென்னவெனில், தம்முடைய உடன் கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நிச்சயங்கொள்ளவேண்டுமென்பதே. உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியும்பொருட்டு இவைகளை எழுதியிருக்கிறேன் என்கிறார். பொன்னைப் பரிசோதிக்க உரைகல் இருப்பதுபோல நமக்கு நித்திய ஜீவன் உண்டோ இல்லையோ என்று சோதித்து அறிய இந்நிருபமே நித்திய ஜீவ பரீட்சையாயிருக்கிறது.

இதைக்கொண்டு நம்முடைய ஜீவியத்தைச் சோதித்தறிவோமாக. தேவனுடைய வசனமாகிய தராசிலே நம்மை நிறுத்துப் பார்ப்போமாக. 'நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறிவீர்கள். நாங்களோ பரீட்சைக்கு நில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்' என்று பரி. பவுல் 2 கொரி. 13. 5, 6-ல் எழுதியிருக்கிறார். நாம் பரீட்சைக்கு நில்லாதவர்களா? அல்லது பரீட்சையில் நிலைநின்றவர்களா? இதை மூன்றுவிதமாய்ப் பரிசோதிப்போம்.

தேவனைப்பற்றிய முக்கியமான மூன்று சத்தியங்களை யோவான் அப்போஸ்தலன் இந்நிருபத்தில் திரும்பத் திரும்ப எடுத்துரைப்பதோடு அவைகளுக்கேற்ற மூன்று இன்றியமையாத குணங்களும் நம்மிடத்தில் காணப்பட்டால்தான் நமக்கு நித்திய ஜீவன் உண்டென்று வற்புறுத்திக் காட்டுகிறார். அம்மூன்று சத்தியங்கள் எவையெனில்:

1. தேவன் பரிசுத்தர்;
2. தேவன் அன்பாகவே இருக்கிறார்;
3. இயேசுகிறிஸ்துவே தேவனுடைய பரிசுத்தத்தையும் அன்பையும் நமக்கு வெளிப்படுத்துகிற சத்தியமாக இருக்கிறார்.

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

No. 70 மார்ச்சு 1912

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1912
MADRAS

# வேதியர் விளக்கு

## The Gospel according to Matthew

By the Rev. F. Goodwill

## மத்தேயு சுவிசேஷம்

(தொடர்ச்சி)

### காலம்.

கி. பி. எழுபதாம் ஆண்டில், தீத்து எருசலேமை அழிக்குமுன்,
இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கிறதென்று நம்புவதற்கு ஐய
மில்லை. இயேசுவானவர் பரிசுத்த நகரத்தையும் தேவாலயத்தையும்
பற்றி மொழிந்த வார்த்தைகளைச் சுவிசேஷகன் எழுதும்போது அவ
ருடைய காலத்திலிருந்த பிரகாரமாகவே இச்சங்கதிகள் எழுதப்படுங்
காலத்திலும் இருந்ததாகத் தோன்றுகிறது (அதி. 4. 5; 5. 35;
24. 15; 27. 53). ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி அழிவு வந்த
பின் இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டிருக்குமாகில், அந்தப் பயங்கர
மான மாறுதலைப்பற்றியும் தெரிவித்திருப்பானல்லவா? அதி. 24. 15-ம்
வசனத்தைக் கவனித்துப் பார்க்கையில் எருசலேமின் அழிவு மிகவும்
சமீபத்தில் இருந்ததாகச் சொல்லலாம். ஆதலால் சுவிசேஷகன் பாழாக்
குகிற அருவருப்பின் பேரையும் சொல்லத் துணியாமல், வாசிக்கிற
வன் சிந்திக்கக்கடவன் என்று ஜாடையாய் அதின் முடிவைக்குறித்
துத் தெரிவிக்கிறான். எருசலேமின் அழிவு அவ்வளவு சமீபத்திலி
ருப்பதை நம்பத்தக்கதானபடியால் இந்தச் சுவிசேஷம் கி. பி. அறு
பத்தாறும் வருஷம்முதல் எழுபதாம் வருஷத்துக்குள்ளாக எழுதப்பட்
டிருக்கவேண்டுமென்று நிச்சயிக்கலாம்.

### தன்மையும் பொருளடக்கமும்.

நாம் முன் பார்த்தபடி இந்த ஆகமம் பழைய ஏற்பாட்டு ஆகமங்
களை அறிந்து, யூதருடைய பழக்கவொழுக்கங்களையும் நடையுடைகளை
யும் அநுசரித்துவந்த யூதனாலே யூதஜனங்களுக்கென்று எழுதப்பட்
டது. பிற்காலத்தில் எழும்பின பழையேற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில்
பலர் பரிசுத்தமும் மகத்துவமும் வெற்றியுமுள்ள மேசியா பூலோகத்

திலே எழுந்தருளி, தமது மகிமை நிறைந்த ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப்போகிறதாகப் பலமுறை திட்டமான தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்கள். இந்தத் தீர்க்கதரிசனங்களை யூதர்கள் ஆவலோடு ஏற்றுக்கொண்டபடியால் அவர்களுடைய ஞாபகத்தில் அவைகள் பலமாய் ஊன்றியிருந்தன. அவர்கள் அவைகளைப் பூரணமாய் நம்பி, அந்த வல்லமையுள்ள ராஜ்ஜியத்தின் வருகைக்காக ஏக்கமுற்றுக் காத்துக்கொண்டிருந்தார்கள். வெகு டம்பமும் கண்ணியமுமாக ஒருவன் அக்காலத்தில் வந்து தன்னை மேசியாவென்று அறிக்கையிட்டிருப்பானானால், ஆயிரக்கணக்கான யூதர் அவனை வழிப்பட்டு ஒருப்பட அவனைப் பின்பற்றியிருப்பார்கள். மத்தேயு இந்தப் பொதுவான கோரிக்கையைக் கண்டு, இயேசுகிறிஸ்து ஸ்தாபித்த சபை யூதர்கள் பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த தேவனுடைய ராஜ்ஜியம் இதுதான் என்று தெரிவிக்கிறான். மத்தேயு காட்டுகிற மெய்யான மேசியாவின் ராஜ்ஜியமானது ஜாதி, தேசம் இவைகளின் எல்லைகளைத் தாண்டி எங்கும் ஸ்தாபிக்கப்படும். மேலும் அது பூமிக்கடுத்ததாயிராமல், தன்மையிலும் முடிவிலும் பரலோகத்தை அடுத்ததாயிருக்கும். தீர்க்கதரிசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது என்று நமது ஆண்டவரைப்பற்றிய சங்கதிகளைப் பலதரம் எழுதி, தீர்க்கதரிசிகள் ஏற்கனவே இப்படிப்பட்ட காரியங்களை எதிர்நோக்கினார்கள் என்பதாகக் காட்டுகிறான்.

இந்தச் சுவிசேஷத்தின் போதனையெல்லாம் யூதமார்க்கக் கொள்கைக்கும் அபிப்பிராயங்களுக்கும் மேலானதெனக் கீழ்க்கண்ட திருஷ்டாந்தங்களினால் அறியலாம்.

(1) ஓய்வுநாளானது மகா பரிசுத்தமும் விசேஷித்ததுமாகவிருந்தாலும் இயேசு சுவாமி இந்த உயர்வான ஏற்பாட்டுக்கும் ஆண்டவராயிருக்கிறார். (அதி. 12. 8.)

(2) மோசேயின் கற்பனையின்படி யூதர் கைக்கொண்டுவருகிற சுகாதாரமான ஆகார ஒழுங்கைத் தவிர்க்கிறதினால் பாரம்பரியச் சடங்குக்குப் பின்னமுண்டாகுமே யொழிய இருதயத்தில் தீட்டு ஏதும் உண்டாகிறதில்லை. (அதி. 15. 11, 19.)

(3) நியாயப்பிரமாணிக்கனாகிய மோசேயைப்பார்க்கிலும், அவன் விதித்த கற்பனைகளைக்காட்டிலும், ஜகத்குருவாகிய இயேசு சுவாமி மேலானவராயிருந்து மகத்தான கட்டளைகளை அளித்திருக்கிறார். (அதி. 5. 22-44.)

(4) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷம் யூதருக்கு மாத்திரமல்ல, வலியோர் எளியோரான பூவுலகத்தார் யாவருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். (அதி. 24. 14; 28. 19.)



(5) இயேசு இரட்சகர் பாவபாரத்தினாலும், கஷ்ட நஷ்டத்தினாலும், மனவேதனையினாலும் இளைப்படைந்திருக்கிற யாவரும் தம்மையண்டினால், அவர்களுக்கு இளைப்பாறுதல் கொடுப்பதாக வாக்கருளுகிறார். அருமையும் பெருமையும், ஆறுதலும் தேறுதலுமுள்ள அவரது வார்த்தைகள் மற்றச் சுவிசேஷங்களில் காணப்படாவிட்டாலும், அவைகளைக் காதாரக்கேட்கிற யாவரும் கிருபாநிதியாகிய இயேசு மீட்பரினிடத்தினின்று அவைகள் புறப்படுகிறதேயொழிய சுவிசேஷகனுடைய வெறும் வார்த்தைகளல்ல எனக் கண்டுகொள்வார்கள். இது யூதமார்க்கக் கொள்கையாயிராமல் கிறிஸ்துமார்க்கத்தின் அருளும் பொருளும் சாரமுமாகவிருக்கிறது.

சம்பவங்கள் நிகழ்ந்த காலம், இடம் இவைகளின் திட்டவட்டமான குறிப்புகளை மத்தேயு சுவிசேஷத்தில் நாம் காண்கிறதில்லை. ஒன்றுபோல் தோன்றுகிற சம்பவங்களும், ஒரேமாதிரியாய்க் காணும் போதனைகளும், இந்தச் சுவிசேஷத்தில் அடங்கியிருக்கிறது. மலைப்பிரசங்கக் குறிப்பை லூக்கா சுவிசேஷகன் எழுதிய குறிப்போடும் ஒத்துப்பார்ப்பது நல்லது. பதின்மூன்றாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிற தேவனுடைய ராஜ்ஜியத்தின் தன்மையையும், அதின் பிரபலத்தையும் காட்டுகிறதும், வெவ்வேறு சமயங்களில் சொல்லப்பட்டதுமான உவமைகளைக் கோர்வையாகக் கோர்த்துச் சேர்த்து எழுதியிருக்கிறது. 23, 24, 25-ம் அதிகாரங்களில், யூதஜாதியாரின் அழிவைப்பற்றியும், உலகத்தின் முடிவைப்பற்றியும், இயேசுகர்த்தர் பற்பல சமயங்களில் பேசின சங்கதிகளை ஒரே உபந்நியாசமாகத் திரட்டி எழுதியிருக்கிறது. வேறு சுவிசேஷங்களிலுள்ள ஆண்டவருடைய வசனங்கள் பூந்தோட்டங்களில் தனித்தனியாய்க் காணப்படுகிற புஷ்பங்களைப்போன்றவை. இயேசு மீட்பருடைய விசேஷித்த போதனைகளைக் காட்டும்படி இந்தச் சுவிசேஷத்தில், அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவசனங்கள் ஓர் பூங்கொத்தாகச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சுவிசேஷத்தைப் பகுத்தறிவது சற்றுக் கஷ்டம். ஆயினும் இதை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். அதி. 4. 17-ல் கிறிஸ்துவானவருடைய ஊழியத்தின் துவக்கமும், அதி. 16. 21-ல் அவரது பாடுகளின் ஆரம்பமும் தென்படுகிறது. நான்காம் அதிகாரம்முதல் பதினாறாம் அதிகாரம்வரை அவருடைய பொதுவான ஊழியத்தைப் பற்றி வாசிக்கிறோம். அவர் கிராமங்கள்தோறும் சுற்றித் திரிந்து, புண்ணியக் கிரியைகளைப் பலருக்குஞ் செய்து, ஞானோபதேசத்தைத் தம்மையண்டினவர்களுக்குக் கொடுத்து, தமது திருப்பணிவிடையை விடாமுயற்சியோடு நிறைவேற்றிவந்தார். அவரது அன்பையும் மன

இரக்கத்தையும் உருக்கத்தையும் கண்டு சிலர் அவருக்குச் சீஷரானார்கள். அந்தச் சீஷர்களுக்குப் போதனையினாலும் சாதனையினாலும் தமது உன்னத ஊழியத்தின் மேன்மையான நோக்கத்தை வெளிப்படுத்த அவர்கள் அதை நன்குணர்ந்து சன்மானத்தோடு அவரைப் பற்றிக்கொண்டபின், தாம் பல பாடுகள் பட்டு, மரணம் அடையவேண்டுமென்பதாய் அடிக்கடி அவர்களுக்குச் சொல்லிக்கொண்டே வந்தார். பிந்தின அதிகாரங்களில் அடங்கியிருக்கிற போதனை, சரித்திரம் முதலானவைகளில் சிலுவையின் சாயலும் நிழலும் விழுகிறதைப் பார்க்கலாம். அவர் ஞானஸ்நானம்பெற்ற தருணம் (அதி. 3. 17) அவருடைய ஊழியத்தின் துவக்கமும், அவர் மறுரூபமடைந்த சமயம் (அதி. 17. 5) அவருடைய பாடு மரணம் இவைகளுக்கு ஆரம்பமுமாம். பிதாவாகிய தேவன் தமது அசரீர வாக்கினால் குமாரன் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றி முடிப்பதற்கு அங்கு நின்றவர்கள் யாவரும் அறிய தமது அநுமதியைக் கொடுத்தார். இதினால் பிதாவாகிய தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு செய்யும்படி இடைகட்டிக்கொண்ட புண்ணியக் கிரியையின்பேரில் பிரியங்கொண்டார் எனப் பார்க்கிறோம்.

மத்தேயு தன் சுவிசேஷத்தில், இயேசு ‘மனுஷ குமாரன்’ என்று 33 தாம் சொல்லுகிறான். இதினால் அவருடைய மனுஷீகத்தையும், இரண்டாம் ஆதாமுக்குரிய விசேஷித்த குணாதிசயத்தையும் காணலாம். இவன் இன்னும் மற்றச் சுவிசேஷகரைப்பார்க்கிலும் பல தடவை அவர் ‘தேவனுடைய குமாரன்’ என்று சொல்வதினால் அவருடைய தெய்வீகத்தையும் சர்வ வல்லமையையும் பார்க்கலாம். இவ்விருவித தத்துவங்களும், பிரிவினையும் விரோதமுமின்றி, ஒரே திவ்ய சுபாவத்தில் அடங்கியிருக்கின்றன. ஆதலால், இந்த மனுஷ குமாரன் தேவனானவர்; பூலோகத்தில் நடைபெறும் இவரது பரிசுத்த ஊழியம் நமக்கு மீட்புமானது.

## Faith — A Sermon

### ஓர் பிரசங்கம்

‘தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.’

2 தீமோ. 3. 5

பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசத்தில் தன் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்குப் பல விஷயங்களைப்பற்றிப் புத்தி



சொல்லியதோடு இவ்வதிகாரத்திலேயும் சபையில் பற்பல குணங்களையும் நடத்தைகளையும் உடையவர்களிருப்பார்களாகையால் அவர்களைப்பற்றியும் எச்சரிக்கையுள்ளவராயிருக்கவும் போதிக்கிறார். அப்பேர்ப்பட்ட குணங்களும் நடத்தைகளும் பத்தொன்பது என வாக்கியம் 2-முதல் 5-வரை எடுத்துரைக்கிறார்.

இவற்றிற்கெல்லாம் சிறந்ததும் மேல் வாக்கியங்களில் காட்டியவைகளையெல்லாம் வெல்லக்கூடியதும் இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமுள்ளதும் (1 தீமோ. 4. 8)ஆகிய தேவ பக்தியைப்பற்றியே நமக்குப் பிரயோஜனமுண்டாக நாம் சிந்திப்போம்.

### பக்தி

பக்தி என்னும் பதத்திற்குப் பற்று, விசுவாசம் என்னும் பொருளமையும். அது பிதா மாதா பக்தியென்றும், குருபக்தியென்றும், ராஜபக்தியென்றும், மெய்த் தேவபக்தியென்றும் பல உண்டு. இவைகள் பெற்றோருக்கமைந்து அவர்களுக்குச் செய்யவேண்டிய பிள்ளைக்குரிய கடமைகளைச் செய்வது பிதா மாதா பக்தி என்றும், குருவின்மேல் அன்புவைத்து அவரது போதனைகளைக் கைக்கொண்டொழுகுதல் குருபக்தி என்றும், தேசச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து பிரஜைகள் தங்கள் ராஜ விசுவாசத்தைக் காட்டுவது ராஜபக்தி என்றும், தெய்வத்தின் வழிநிற்றல் தேவபக்தி என்றும் முறையே பொருள்படும். தேவபக்தியே மற்றெல்லாப் பக்திக்கும் ஆதாரமாதலால் அப்போஸ்தலன் அதையே வற்புறுத்திப் பேசுகிறார். ஆனால் பிரசங்க வாக்கியத்தில் தேவபக்தியின் வேஷம் என்பதினால் தேவபக்தியிலும், வேஷபக்தி, வீண்பக்தி, மெய்ப்பக்தி எனப் பலவகையுண்டென்பது தெரியவருகிறது.

வேஷபக்தி அல்லது மாய்மாலபக்தி. இல்லாததை உண்டென்பதுபோல் நடிப்பதே வேஷமாம். பக்திவிஷயத்திலும் இத்தகைமையோரைப்பற்றித்தான் தீமோத்தேயு விழிப்புடையவராயிருக்க அப்போஸ்தலன் எச்சரிக்கிறார். ஏனெனில், இத்தகைமையான பக்தியுடையோர் தங்களுக்குத் தாங்களே கேடுண்டாக்கிக்கொள்ளுகிறதுமல்லாமல் மற்றவர்களையும் கெடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். நமது இரட்சகரும் இவ்வகையோரைப் பார்த்து வெள்ளையடிக்கப்பட்ட சுவர் என்றும், சாந்து பூசப்பட்ட கல்லறை என்றும், சொல்லி ‘உங்களுக்கு ஐயோ’ என்று கூறுகிறார்.

வீண்பக்தி. எல்லாம் ஒன்றுதான் என்றும், எல்லாம் மோட்சம் அல்லது சொர்க்கத்துக்கு வழிதான் என்றும், எண்ணி மோசம்போகிறவர்களே வீண்பக்தியுடையவர்கள். இந்துமார்க்கத்தார் இவ்வகையான

பக்தியையுடையவர்களே. அவர்களிலேயே ஒருவர் அதைக் கண்டிக்கிறதைப் பின்வரும் பாடலினால் அறியலாம்.

> 'அண்ணலாம் பரமசோதி அற்புத மறியாதாலே
> 'கண்ணிலே கண்டதெல்லாம் கதிதருங் கடவுளென்று
> 'மண்ணுள்ளோர் வணங்குகின்றார்கள் வான்முறைப் படியிதென்ன
> 'எண்ணியே நடந்து மோட்ச மிழந்தெரி நரகில்வீழ்வார்.'

எல்லா அர்ச்சியசிஷ்டர்களையும் விசேஷமாய்க் கன்னிமரியாளையும் வணங்கும் ரோமான் மார்க்கத்தாரும் இவ்வகையோரே. அத்தேனரும் பலதெய்வ வணக்கமுடையவர்களாயிருந்ததினால் அவர்களும் அப்படிப்பட்டவர்களே. (அப். 17. 22-24.)

மெய்த் தேவபக்தி. மேற்சொன்னபடி மெய்த்தேவனின் கிருபையைப் பெற்று அவரது வழியில் நிற்றலே மெய்த் தேவபக்தியாம். இதை இதற்குரிய நாலு இலக்ஷணங்களைக்கொண்டு அறிந்து கொள்ளலாம். அவையாவன :— மெய்யறிவு, சன்மார்க்கம், மெய் வைராக்கியம், பரிசுத்தம் என்பவைகளே.

1. மெய்யறிவு.

'தன்னையறிவது மெய்யறிவாகும்.'

'தன்னையறிந்தவன் தலைவனையறிவான்' என்பவைகளுக்கிணங்க தன்னையறிதலும் தன் தலைவனாகிய கடவுளையறிதலுமே மெய்யறிவாம் (ரோ. 3. 20). இந்த மெய்யறிவில்லாமையால் தான் பலர் தங்கள் பாவ நிலைமையையும் தங்கள் பாவங்களை நீக்கக்கூடிய கடவுளின் பரிசுத்தத் தன்மையையும் அறியாமல் வீண்பக்தியுடையவர்களாயிருக்கிறார்கள் (யாத். 35. 32). 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.' (யோவா. 17. 3.)

2. சன்மார்க்கம்.

நடக்கவேண்டிய விதத்தைக் காட்டுவதே பிரமாணம் என்றும் அப்பிரமாணத்தைக் கைக்கொண்டு தீயவையொழித்து நன்னெறியிலொழுகுவதே சன்மார்க்க மென்னப்படும். ஆகவே மெய்த் தேவபக்தியின் முதலாம் அம்சமாகிய மெய்யறிவையுடையவன் தன்னையறிந்து தன் தலைவனாகிய இறைவனையறிவான். இறைவனை அறிந்தவன் அவருடைய கற்பனையை அறிந்து அதைக் கைக்கொண்டு சன்மார்க்கத்தில் நடப்பான். அவருடைய கற்பனைகள் இரண்டே. உன் தேவனில் அன்புகூரு, உன் பிறனை நேசி என்பவைகளே. இவைதான் சன்மார்க்கப் பிரமாணத்தின் உள்ளுரை.



3. வைராக்கியம்.

தேவபக்திக்குரிய மூன்றாம் அம்சமாகிய வைராக்கியம், நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்பதைப்போலொத்த வீண் வைராக்கியமல்ல. சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய இம்மூன்றுக்கும் இசைந்ததாகிய வைராக்கியமே மெய்வைராக்கியம். பலரின் வைராக்கியம் இவ்வகையான வைராக்கியமல்லாமையால்தான் கண்ணிலே கண்டதெல்லாம் கதிதருங் கடவுளென்றும், ஒரு ஸ்தலத்தைவிட இன்னோர் ஸ்தலம் விசேஷமெனக் கொண்டு யாத்திரை செய்வதும், எம்மதஸ்தருடைய திருவிழாவும் தன் திருவிழாவென்று கொண்டாடுவதும், சவுலும் பவுலாகுமுன் இப்படிப்பட்ட வைராக்கியத்தையே கொண்டிருந்தாரென்பதை அவர் எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குப் போன பிரயாணத்தினால் அறிந்துகொள்ளலாம். மெய்ப்பக்தியில் மெய்யறிவு ஒரு அம்சமாகையால் அவ்வறிவைப்பற்றிய வைராக்கியமும் மெய்வைராக்கியமே. அப்படிப்பட்ட வைராக்கியமுடையவன் தன் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், தன் தேவனை அறிக்கை செய்வதிலும்கூட வைராக்கியமுடையவனாயிருப்பான்.

'நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்' என்று யோசுவா சொன்னதும், 'என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்வேன்' என்று தாவீதாசன் சொன்னதும் இவ்வகை வைராக்கியங்கொண்டே.

4. மெய்த் தேவபக்தியின் நான்காம் அம்சம் பரிசுத்தம்.

பரிசுத்தம் என்னும் பதத்திற்குப் பிரிதல் என்று பொருள்படும். அதாவது, அசுத்தத்திற்கு வேறுபாடானது. தன் மெய்யறிவின் பலனாக மெய்ப்பக்தியுடையவனும், மெய்வைராக்கியமுடையவனும் தன் காரியங்களில் எல்லாம் உண்மையுடையவனும், பரிசுத்தத்திற்கு மாறுபாடானவைகளெவைகளோ அவையெல்லாவற்றிற்கும் தன்னை விலக்கிக்கொள்ளுகிறவனுமிருப்பான். தலைவனையறியும் அறிவினால் தன்னைப் பாவியென்று அறிந்து வைராக்கியத்தோடு பாவமன்னிப்பைத் தேடி அதை அடைவான். அப்படிப் பிரயாசைப்படுபவன் மறுபிறப்படைந்தவன். இப்படி மறுபிறப்பும் பாவமன்னிப்பும் அடைதலே பரிசுத்தம்.

பிரியமானவர்களே! நாம் எப்படிப்பட்ட பக்தியுடையவர்கள். நாம் மெய்த் தேவபக்தியுடையவர்களென்றும் மெய்த்தேவனைப்பற்றிய அறிவுடையவர்களென்றும் விசுவாசிக்கிறோமல்லவா? அப்படியானால் நாம் மெய்ப்பக்தியுடையவர்களா? நாம் மெய்ப்பக்தியுடையவர்களானால் அதன் அம்சங்களாகிய சன்மார்க்கம், மார்க்க வைராக்கியம்,

பரிசுத்தம் முதலியன காணப்படும். அப்படிக்கில்லாமல் நாம் வேஷபக்தி அல்லது மாய்மாலபக்தி உடையவர்களாயிருந்தால் நம் முகத்தோற்றத்தைமாத்திரம் பார்க்கிற ஆத்தும மேய்ப்பரை நாம் ஏமாற்றலாம். நம்மிருதயத்தின் ஆழத்தைப் பார்க்கக்கூடிய ஆத்தும மேய்ப்பரை ஏமாற்றமுடியுமா? நாம் மெய்த்தேவ தொழும்பர்களாயிருப்பதினால் மெய்யறிவுடையவர்களே. அவ்வறிவால் நம்மை அறிந்திருக்கிறோமா? நம்மை நாம் அறிந்திருப்போமானால் பாக்கியவான்களே. இல்லையானால் நாம் கிரேத்தாத் தீவாரே. அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணியும் கிரியைகளினாலே அவரை மறுதலித்தார்கள். (தீத். 1. 16.)

இதுவரை மெய்த் தேவபக்தியை அடையாதவர்களாயிருந்தால் அதை அடையப் பிரயாசைப்படுவோமாக. அடைந்தவர்களானால் அதைப் பெருகச் செய்வோமாக.

## A Bible Reading—The Sufferings and Death of Christ

By the Rev. S. A. Vedanayagam

### கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி)

நமதருமை இரட்சகர் சிலுவையிலிருந்து மொழிந்த நாலாம் வாசகம். மத். 27. 46-49; மாற். 15. 33-36.

முன்பு சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கும், இனிமேல் சொல்லப்படும் வார்த்தைகளுக்கும் இடையில் 3 மணிநேர சகவாசமிருந்தது. இச்சமயத்தில் சூரியன் இப்பேர்ப்பட்ட துக்கக் காட்சியைப் பார்க்க மனதில்லாமலிருந்த பாவனையாய்க் காரிருள் மூடியிருந்தது.

'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?'

இம்மூன்று மணிநேர காலத்தில் கிறிஸ்து தம் மனதில் நினைத்திருந்தவைகளின் முடிவான முக்கிய சாராம்சத்தை இவ்வார்த்தைகள் காட்டுகிறது. அவருக்கு இதுபரியந்தம் இருந்த தமது பிதாவின் பிரசன்னமானது இச்சமயத்தில் மிகத் தெளிவாயிருந்திருக்குமென்று நாம் எதிர்பார்த்திருக்கலாம். (யோவா. 16. 32.)

அவர் இந்த வேதனையைத் தாம் அடைவாரென்று முன்னறிந்திருந்தார். 'இந்த வேளை.' (யோவா. 12. 27.)



இவ்வார்த்தைகள் லேசில் கிரகிக்கக்கூடாத ஆழ்ந்த கருத்துள்ளவைகள்.

1. அதிக சரீர வேதனையினால் அவருடைய மனம் மந்தாரமாயிருந்தது. அவருடைய சரீரம் பாவத்தினால் கறைபடாததினால் அந்தச் சிலுவையின் வேதனை அவரால் தாங்கக்கூடாததாயிருந்தது.

2. அவர் மெய்யான மனிதனாயிருந்தார். ஒரு குடும்பத்திலுள்ள ஒரு நல்ல சகோதரி, தன்னுடைய குடும்பத்திலுண்டான அவதூறை எவ்வளவாய் உணருவாளோ அவ்வளவு அதிகமாய் அதைக்காட்டிலும் அதிகமாய் மனிதஜாதியினுடைய பாவத்தின் அகோரத்தை நமதருமை இரட்சகர் உணர்ந்தார். தாம் அவதாரமெடுத்த மனிதஜாதியினுடைய பாவத்தின் கொடுமையையும் பயத்தையும் முற்றுமாக உணர்ந்தார்.

3. இந்த மூன்றுமணி நேரத்தில் நித்திய வேதனைக்குட்பட்டவர்களின் கஷ்டங்களை உத்தரித்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது ஒரு மனோபாவனை. ஆனால் அவர் நமக்காகக் கஷ்டப்பட்டாரென்று அறிவோம்.

4. இது ஒரு ஏக்கத்தினால் உண்டான சத்தமல்ல, ஆனால் இது ஒரு நம்பிக்கையின் சத்தம், 'என் தேவனே.'

கவனிப்பு. இந்த நேரத்திலிருந்து வேதனையின் அகோரம் முடிவானதுபோல் காணப்படுகிறது.

சிலுவையின் ஐந்தாம் வார்த்தை. யோவா. 19. 28

'இயேசுவானவர் எல்லாம் முடிந்ததென்று கண்டார்.' இந்த மூன்றுமணி நேரமும் பெரிய யுத்தம் நடந்ததென்று இது காட்டுகிறது. இந்த யுத்தத்தின் முடிவில்தான் அவர் தன் சரீரத்தின் வேதனையை உணர்ந்தார்.

'நான் தாகமாயிருக்கிறேன்.' தாகம், சிலுவையில் அறையப்பட்டவர்களின் முக்கிய வேதனைகளில் ஒன்று. அவர் முழுவதுமாகத் தமது அதிகாரத்தையும் வல்லமையையும் தள்ளிவிட்டு, தாகத்தைத் தீர்த்துக்கொள்ள கொலையாளிகளின்மேல் சார்ந்திருந்தார்.

கிறிஸ்து இன்னும் தாகமாயிருக்கிறார். மத். 25. 35.

கிறிஸ்து சிலுவையிலிருந்து மொழிந்த ஆறாம் வார்த்தை. யோவா. 19. 30.

'முடிந்தது.' ஆவி பிரியுமுன் இதுதான் கடைசி மூச்சு என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ஐந்தாவது வசனம்தான் அதிக உரத்த சத்தமாய்ச் சொல்லப்பட்டதென்று நமக்குத் தெரியும். ஆதலால் இந்த வார்த்தையையும் உரத்த சத்தமாய்த்தான் சொல்லியிருப்பாரென்று நாம் நம்பலாம். ஏனெனில், இதற்குப் பின்வரும் வார்த்தை

யினால் அவருடைய மனம் கலக்கமில்லாமலிருந்ததென்று தெரிகிறது. கிறிஸ்து தமது வேலையைக்குறித்தும் அந்த வேலையைச் செய்து முடிப்பதில் அடங்கிய துன்பங்களைக்குறித்தும் இங்கே குறிப்பிடுகிறார் என்று நாம் எண்ணலாம்.

1. முடிவுபெற்ற வேலை.

தேவன் அவருக்குப் பெரிய வேலையைக் கொடுத்திருக்கிறார் என்ற எண்ணம், நாம் நிதானிக்கக்கூடியபடி, அவர் எருசலேம் ஆலயத்திலிருந்தபோது (லூக். 11. 49) ஆரம்பமாகி வளர்ந்துகொண்டேவந்தது. அவர் எருசலேமுக்குப்போகத் தீர்மானித்தபோது இந்த எண்ணமானது அதிக தெளிவாகத் தோன்றினது. (லூக். 19. 51.)

(1) அது தேவசித்தத்தை நிறைவேற்றும் வேலை. யோவா. 4. 34; யோவா. 8. 29; யோவா. 17. 4.

(2) அது மனிதனுக்காக மனிதனாலேயே செய்யப்பட்ட வேலை.

2. வேதனை முடிந்தது.

கிறிஸ்து பாடு அனுபவித்தவராயிருந்தார். அது அவருடைய வேலைக்கு அவசியம். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி அவர் அன்பினால் ஏவப்பட்டு நிறைவேற்றவந்த வேலைக்கு அநேகர் ஒவ்வொரு விஷயத்திலும் இடறலாயிருந்தார்கள்.

'முடிந்தது.' இது ஜெயத்தின் கெம்பீரச் சத்தம்.

## St. Paul

### பரிசுத்த பவுல்

பவுலென்னும் இந்த ரோமைப் பெயருக்குக் குள்ளன் என்று அர்த்தமாம். (ரோமான் மார்க்கத்தார் அதைச் சின்னப்பராக மொழி பெயர்த்திருக்கிறார்கள்.) அவருடைய குடும்பத்தில் அநேகர் குள்ளராயிருந்திருக்கலாம் ஆகையால் அந்தப் பேரை எடுத்தார்கள். எப்படியோ பூர்வீக பாரம்பரியத்தின்படி பரிசுத்த பவுல் குள்ளராயிருந்தாரென்று தெரியவருகிறது.

பரி. பவுல் ஜீவித்த காலத்தில் யூதர், கிரேக்கர், ரோமர் என்கிற அம்மூன்று பாஷைக்காரர் விசேஷித்தவர்களும் உலகத்திலிருந்த எல்லா ஜாதிகளிலும் முக்கியமானவர்களுமாயிருந்தார்கள். நம்முடைய ஆண்டவரின் சிலுவையின்மேல் வைத்த மேல்விலாசமானது எபிரெயு, கிரேக்கு, லத்தீன் என்கிற அம்மூன்று பாஷைகளில் எழுதி



யிருந்தது. அப். 16. 14, 16-18, 27-33-ஐப் பார்த்தால் சுவிசேஷம் முதலில் ஐரோப்பாக் கண்டத்தில் பிரசங்கிக்கப்பட்டபோது யூதமார்க்கத்தமைந்த லீதியாள் என்பவளும், குறிசொல்லிய கிரேக்க அடிமைப் பெண்ணும், ரோமைச் சிறைச்சாலைக்காரனும் அம்மூன்று ஜாதிகளைச் சேர்ந்தவர்களாகிய இவர்களே முதல் முதல் குணமாக்கப்பட்டார்கள் என்பதைக் காண்கிறோம். யூதர் சன்மார்க்க சம்பந்தமான விஷயங்களில் உலகத்திற்கு உபாத்தியாயராயிருந்தார்கள். கிரேக்கர் சித்திரவேலை சாஸ்திரத்தையும், தத்துவஞானத்தையும் எல்லாருக்கும் கற்பித்தார்கள். ரோமர் தர்ம நூல்களுக்கடுத்த விஷயங்களில் எல்லாரிலும் சிரேஷ்டமுள்ளவர்களாயிருந்தார்கள்.

அம்மூன்று விசேஷித்த ஜனங்களோடும் பரி. பவுல் சம்பந்தப்பட்டவராயிருந்ததினால் அவர் புறச்சாதியாருக்கு அப்போஸ்தலனாயிருக்கச் சிறந்தவராயிருந்தார்.

I. அவர் யூதனாயிருந்தார். பிறப்பினால் அவர் எபிரெயரில் எபிரெயனாயிருந்து எருசலேமில் கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, போதிக்கப்பட்டு எபிரெய பாஷையைப் பேச அறிந்தவராயிருந்தார். அவர் எப்போதும் தம்முடைய சொந்த இனத்தாராகிய இஸ்ரவேலரை அதிகமாக நேசித்து அவர்களின் இரட்சிப்புக்காக அதிகமாய்ப் பிரயத்தனம்செய்தார். அவர் எங்கேபோனாலும முதலாவதாக யூதருடைய ஆலயத்திற்குப் போய் அங்கு கூடி வருபவர்களோடு பேசி அவர்களுக்குப் பிரசங்கம்செய்வார். அவர் தம்முடைய இனத்தாருக்காகச் சபிக்கப்பட்டவராயிருக்க ஆயத்தமாயிருந்தார் (ரோ. 9. 3). அவர் 'நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாமை' க்குறித்து ரோ. 4. 1-ல் சொல்லுகிறார். 2 தீமோ. 1. 4-ல் தம்முடைய முன்னோரின் பக்தியைப்பற்றி ஒருவிதமான மேன்மை பாராட்டுகிறார். அப்படியே அநேக இடங்களிலே தாம் யூதன் என்றும், பரிசேயன் என்றும் சொல்லிக் கடைசிவரைக்கும் பல விஷயங்களிலே யூதனாகப் பேசிவந்தார். தாம் கமாலியேலிடத்தில் கற்றுக்கொண்ட வேதவியாக்கியானத்தை ஒருபோதும் மறக்கவில்லை. யூதமார்க்கக் கல்விமான்களின் தர்க்க சாஸ்திரத்தின்படி அவர் அநேக தடவைகளிலே தர்க்கம்பண்ணி அவர்கள் பழைய ஏற்பாட்டை வணங்கினவிதமாய் அவரும் அதை வணங்கி அதையே உதாரணமாகக் கொண்டு பிரசங்கம் பண்ணினார். அவர் பிறப்பினால்மாத்திரமல்ல, ஆவியிலும் மனப்பயிற்சியிலும் யூதனாயிருந்தார்.

II. ஆனாலும் நாம் முன் பார்த்தபடி அவர் ரோமனுமாயிருந்தார். அவர் தர்சுப் பட்டணத்திலுள்ள மேலான குடும்பத்தில் பிறந்ததினால் ரோமாபுரி சிலாக்கியத்தையுடையவராயிருந்தார். இந்தச் சிலாக்கியங்

களைச் சமயாசமயங்களில் அதிகாரத்துடன் உரிமைபாராட்டிக் கேட்டார் (அப். 16. 37; 22. 25; 25. 11). ரோம அதிகாரிகளோடும் தேசாதிபதிகளோடும் கலந்து நல்ல ஸ்திதியிலுள்ளவரைப்போல் அவர்களுடன் சவகாசம் செய்தார் (அப். 23. 26; 26. 1; 27. 3). அவர் ஒரு தேசத்திற்குப் போகும்போது சாதாரணமாய் ரோமர் குடியேறின ஊர்களுக்குப் போவார். அவர் ரோமைச் சட்டங்களையும், பிரமாணங்களையும் அறிந்தவராயுமிருக்கவேண்டும். ஏனென்றால், அவர் அவைகளைக்கொண்டு அடிக்கடி கிறிஸ்தவக் கொள்கைகளைத் திருஷ்டாந்தப்படுத்தினார். உதாரணமாக:—இத்தேசத்தாரைப்போல ரோமர் சாதாரணமாய்த் தங்கள் இனத்தாருடைய பிள்ளைகளைச் சுவிகரித்ததினால் புத்திர சுவிகாரத்தைப்பற்றிய அநேக சட்டங்கள் இருந்தன. அவைகளைக்கொண்டு புத்திர சுவிகாரம் என்கிற கிறிஸ்துமார்க்கத்தின் ஓர் கொள்கையை எடுத்துக் காட்டினார்.

III. ஆனாலும் அவர் ஒருவிதமாய்க் கிரேக்கனுமாயிருந்தார் என்று நாம் சொல்லலாம். இக்காலத்தில் ஒருவன் பூரண நாகரீகமுள்ளவனாயிருக்கவேண்டுமென்றால் அவன் பிரஞ்சு பாஷையை அறிந்தவனாயிருக்கவேண்டும். மேலும் ஸ்தானாபதிகள் ஒருவரோடொருவர் தங்கள் தங்கள் தேசாந்தர விஷயங்களைப்பற்றிப் பேசும்போது அதே பாஷையில் பேசுவார்கள்.

அப்படியே அக்காலத்தில் நாகரீகமுள்ளவர்கள் எல்லாரும் கிரேக்கு பாஷையைப் பேசினபடியால் பரி. பவுலும் அப்பாஷையைப் பேசவும், எழுதவும் கூடியவராயிருந்தார். மேலும் தர்சுவில் ஓர் பெரிய சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்தபடியினால் அவர் அதிலே கிரேக்க தத்துவ சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டிருக்கலாம். கமாலியேலும் கிரேக்க புஸ்தகங்களை வாசிக்கத் தம்முடைய மாணாக்கரை ஏவினார் என்பதற்கு ஆதாரங்களுண்டு. சிற்சில இடங்களிலே அவர் எழுதியதை நாம் பார்க்கும்போது அவர் கிரேக்க தத்துவ சாஸ்திரிகளோடு ஒருவாறாகச் சம்பந்தப்பட்டவராயிருந்ததாகக் காண்கிறோம். ஆகவே அவர்களோடு இசைந்து அவர்களின் கொள்கைகளில் சிரேஷ்டமானவைகளை எடுத்துக் கிறிஸ்துமார்க்கக் கொள்கைகளுக்கு ஆதாரமாகத் தத்தம்செய்தார். இப்படியாக இம்மூன்று ஜாதியாரிடத்திலும் எவை விரும்பப்படத்தக்கவைகளாயும், புகழப்படத்தக்கவைகளாயும், மேலானவைகளாயும், இருந்தனவோ அவைகளையே அவர் கொள்ளையாடின பொருள்களாகத் தம்முடைய ஜீவியத்திலும் கிறிஸ்துவுக்கென்று தத்தஞ்செய்தார். நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்விதமாக ஒவ்வொரு தேசத்தாரின் சிரேஷ்ட குணங்களையும் தமக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ளக்கூடியவர்



என்பதற்குப் பரி. பவுல் என்பவர் நமக்கு முக்கியமான திருஷ்டாந்தமாயிருக்கிறார்.

அவர் எந்த வேலையைச் செய்தாலும் அதை அவர் அதிக ஊக்கத்தோடும் வாஞ்சையோடும் செய்தார் என்பதை அவருடைய ஜீவிய சரித்திரத்திலிருந்து பரிஷ்காரமாய் அறிந்துகொள்ளலாம். ஆதலால் அவர் கிறிஸ்துமார்க்கம் தகாததென்றெண்ணி அதைச் சும்மா விட்டுவிட மனதில்லாமல் அதிலே அமைந்தவர்களை வைராக்கியமாயும் மூர்க்கமாயும் துன்பப்படுத்தினார். அவர் யூதமார்க்கத்திற்குரிய மேலான சங்கமாகிய சனதிரிம் சங்கத்தைச் சேர்ந்தவராயாவது அல்லது கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தும்படியாக அச்சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் கிளைச்சங்கத்தைச் சேர்ந்தவராயாவது இருந்திருக்கவேண்டும். அப். 26. 10-ல் 'நானும் சம்மதித்திருந்தேன்' என்பதற்கு மூலபாஷையில் சம்மதச்சீட்டு நானும் போட்டேன் என்று அர்த்தமாம். அதாவது, இந்தக் கிறிஸ்தவர்களைக் கொலைசெய்யும்படியாக ஏற்படுத்தப்பட்ட கூட்டத்திலே நானும் அவர்களுக்கு விரோதமாய்ச் சீட்டுப்போட்டேன் என்பதே. அந்தக் கூட்டம் சனதிரிம் சங்கமோ வேறொரு சங்கமோ தெரியாது. பரி. பவுல் வாலிபனாயிருந்தும் (அவர் அக்காலத்தில் 28-வயதுக்கு மேற்பட்டவராயிருந்திருக்கமாட்டார்) யூத மார்க்கத்தில் உயர்ந்த ஸ்திதியிலிருந்தார்.

அவர் இப்படி வைராக்கியமுள்ளவராயிருந்தாலும் தேகத்தில் அவர் அவ்வளவு பலசாலியல்ல என்று வேதத்தைக்கொண்டு நாம் அறிவோம். அவருடைய எதிரிகள் 2 கொரி. 10. 10-ல் காண்கிறபடி அவரைப்பற்றிச் சொன்னார்கள். பவுலும், பர்னபாவும் லீஸ்திரா என்னும் பட்டணத்திற்குப் போனபோது பர்னபா என்பவர் திடகாத்திர சவுந்தர தேகியாயிருந்ததினால் அவரைச் சிரேஷ்டமானவர் என்றெண்ணித் தங்களின் முக்கிய தேவனாகிய யூபித்தர் என்றும் பவுலோ அப்படிப்பட்ட தேகமுடையவராயிராததினாலே அவரை மேன்மையில் சற்றே குறைந்த தேவனாகிய மெர்க்கூரி என்றும் சொன்னார்கள் (அப். 14. 12). அன்றியும் அவர் பல பாடுபட்டதினால் (கலா. 6. 17; 2 கொரி. 11. 23-27 காண்க). தேகத்தில் காயப்பட்டவரும் பெலன் குறைந்தவருமாயிருந்திருக்கவேண்டும். அதுவுமல்லாமல் அவர் சொல்லுகிறபடி மாமிசத்தில் அவருக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டது. சிலர் அந்த முள்ளானது ஆவிக்குரிய ஓர் சோதனை என்றும், வேறு சிலர் காமவிகாரம் என்றும், மற்றும் சிலர் அது அவரைத் துன்பப்படுத்தின எதிரிகள் என்றும் சொன்னாலும், வேதத்தைப் பார்த்தால் அது ஒருவிதமான வியாதியாயிருந்திருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. அவர் 2 கொரி. 12. 7-ல் அதைப்பற்றிச்

சொல்லுகிறார். கலா. 4. 13-15 வரையிலும் பலமுறை அவர் அதே வியாதியைக்குறித்துப் பேசுகிறார். அந்த வியாதி என்னவென்று யாராலும் திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஒருவர் அது விஷக்காற்றினால் உண்டான ஜுரம் என்றும், இன்னொருவர் அது அதிக வேதனையை உண்டாக்கக்கூடிய கொடிய தலைநோய் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அது கண்நோய் என்றாவது, காக்காய்வலி என்றாவது சொல்லலாம்.

அவர் கலா. 4. 15-ல் அந்தக் கலாத்தியர் தங்கள் கண்களைப் பிடுங்கித் தமக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பார்கள் என்று சொல்லுகிறார். அந்நிருபம் 6. 11-ல் மூலபாஷையிலிருக்கிற பதமானது, 'எவ்வளவு பெரிதான எழுத்துக்களை நான் எழுதினேன்' என்பதாக மொழிபெயர்க்கலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது அவர் பார்வையில் குறைவுள்ளவராயிருந்தாரென்பதைத் தெரிவிக்கிறதென்கிறார்கள். மேலும் சாதாரணமாய் அவர்தாமே தமது நிருபங்களை எழுதாமல் ஒரு லிகிதரைக்கொண்டு அவைகளை எழுதினபடியால் எழுதுவது தமது கண்ணோயினால் அவருக்குக் கஷ்டமாயிருந்ததென்பது தெரியவருகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சிற்சில சமயங்களில் அவர் ஜனங்களைக் கூர்ந்து பார்த்தார் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லியிருப்பது இந்த அபிப்பிராயத்திற்குச் சற்று விபரீதம் என்று சொல்லலாம்.

# Eternal Life

**By the Rev. C. H. Monahan**

## நித்திய ஜீவன்

### நித்திய ஜீவ பரீக்ஷை

(தொடர்ச்சி.)

ஆகவே தேவனுடைய பட்சத்தில் பரிசுத்தம், அன்பு, சத்தியம் என்கிற இவைகள் உண்டு. வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிற இயேசுகிறிஸ்துவின்மூலமாய்த் தேவனுடைய பரிசுத்த அன்பில் ஐக்கியப்பட்டவர்கள் மேற்சொல்லிய மூன்று சத்தியங்களுக்கேற்ற மூன்று விசேஷித்த குணங்களை உடையவர்களாய் இருப்பார்கள். 'தேவனுடைய பரிசுத்தத்தை உணரும் ஆத்துமா நீதியை உடையதாயிருக்கும்; அவருடைய அன்பை ருசித்துப் பார்த்தவன் அன்புள்ளவன்.



ஆவான்; தேவனுடைய சத்தியமாகிய இரட்சகரைப் பற்றிக்கொண்டால் மெய்விசுவாசம் இருக்கும். அதாவது,

1. தேவனுடைய பரிசுத்தத்துக்கு ஏற்க நமக்கு நீதி அவசியம்;
2. அவருடைய அன்புக்கு ஏற்க நமக்கும் அன்பு வேண்டும்;
3. அவருடைய சத்தியத்தைப் பற்றிக்கொள்ளும் விசுவாசமும் தேவை.

இம்மூன்றும் நம்மிடத்தில் உண்டானால் போதும். இவைகளில் எல்லாம் அடங்கியிருக்கிறது. நீதி, அன்பு, விசுவாசம் அல்லது நம்பிக்கை என்னும் இம்மூன்றையுங்குறித்துப் பரி. யோவான் இந்நிருபத்தில் அடிக்கடி எழுதியிருக்கிறார். இவைகளைக்கொண்டுதான் தம்மையும் தம்முடைய சகோதரரையும் பரீட்சைசெய்தார்.

மேலும் இம்மூன்றும் தேவனைப்பற்றிய மூன்று சத்தியங்களோடு பொருந்தியிருப்பதுமல்லாமல் நமது நர ஆத்துமாவில் அடங்கியிருக்கிற விசேஷித்த மூன்று தத்துவங்களுக்கும் ஏற்றதாய் இருக்கின்றன. மனுஷராகிய நமக்குப் புத்தி, சித்தம், உணர்வு என்னும் மூன்று தத்துவங்கள் உண்டு அல்லவா? அவைகளுக்கேற்றபடி யோவான் அப்போஸ்தலன் நித்திய ஜீவ பரீட்சை நடத்தியிருக்கிறார். அதாவது,

1. நமது புத்திக்கு ஏற்க சத்தியத்தைப் பற்றிக்கொள்ளும் விசுவாசத்தைப்பற்றியும்,
2. நமது சித்தத்துக்கு ஏற்க பரிசுத்தத்தை நடப்பிக்கும் நீதியைப்பற்றியும்,
3. நமது உணர்வுக்கு ஏற்க தேவனுடைய அன்புக்குப் பதிலன்பைப் பாராட்டுவதைப்பற்றியும் அதிகமாய் எழுதியிருக்கிறார்.

இம்மூன்றும் ஒன்றாயிருக்கிறது. எப்படியென்றால், உண்மையான அன்பு இருந்தால் நீதியும் இருக்கும். விசுவாசம் இருந்தால்தான் அன்பு உண்டாகும். விசுவாசமில்லாத நீதியுமில்லை, நீதியில்லாத அன்புமில்லை. என் சகோதரரே, உங்களைச் சோதித்து அறியுங்கள்.

உங்களிடத்தில் நீதி உண்டா? 'அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்.' (1 யோவா. 2. 23.)

உங்களிடத்தில் அன்பு உண்டா? 'பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.' (1 யோவா. 4. 7, 8.)

உங்களுக்கு விசுவாசம் உண்டா? 'இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.' (1 யோவா. 5. 1) 'தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.' (1 யோவா. 5. 4.)

தேவனுடைய சத்தியத்தை நம்முடைய முழு மனதோடும் பற்றிக்கொள்ளும் விசுவாசமும், நமது முழு உணர்வோடும் அவரில் அன்புகூரும் நேசமும், நமது முழு சித்தத்தோடும் அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளும் நீதியும் நம்மிடத்தில் இருந்தால், பரிசுத்த அன்பின் ஐக்கியமாகிய நித்திய ஜீவனில் நமக்குப் பங்குண்டு என்று நிச்சயித்துக்கொள்ளலாம். அன்பு, நீதி, விசுவாசம் என்னும் மூன்றும் இல்லாதவனோ தேவனை அறியவுமில்லை அவரைச் சேரவுமில்லை. அப்பேர்ப்பட்டவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்பது அபத்தம்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

MADRAS

No. 71 ஏப்பிரல் 1912

# வேதியர் விளக்கு

## A Bible Reading—The Sufferings and Death of Christ

**By the Rev. S. A. Vedanayagam**

## கிறிஸ்துவின் திருப்பாடுகளும் மரணமும்

(தொடர்ச்சி)

நமதருமை இரட்சகர் சிலுவையிலிருந்து மொழிந்த ஏழாவது வசனம்.

1. அவருடைய கடைசி வார்த்தைகள் ஜெப வசனங்களாயிருந்தன. *அவருடைய முழு ஜீவியமும் ஜெபஜீவியமாயிருந்ததினால் இயற்கையாக இந்தக் கடைசி நேரத்திலும் தேவனோடு சம்பாஷித்தார். நமக்கும் ஜெபம் இயற்கையாயிருப்பதாக.*

2. அவருடைய கடைசி வார்த்தைகள் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள். *தம்முடைய ஜீவியம் முழுவதிலும் வேதத்தை ஒரு ஆயுதமாக உபயோகித்தார். அவருடைய மரணகாலத்திலும் வேதம் அவருக்கு ஆறுதலைக் கொடுத்தது. அவருடைய திவ்வியமான வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் பேணிவைப்போமேயானால், அவைகள் ஆபத்துக்காலத்தில் நம்மைப் போஷிக்கும்.*

இவ்வார்த்தைகள் சங். 31. 5—லிருந்து சொல்லப்பட்டன.

கவனிப்பு. *சிலுவையிலிருந்து சொன்ன வசனத்திற்கும் இந்தச் சங்கீத வசனத்திற்கும் உள்ள வித்தியாசம் துவக்கத்தில் 'பிதாவே' என்பதைச் சேர்த்தும், கடைசியில் 'நீர் என்னை மீட்டுக்கொண்டீர்' என்பதை நீக்கியும் சொன்னார். கிறிஸ்து, மரணத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் உடையவராயிருந்தாரென்பதை இந்த வாக்கியம் வெளிப்படுத்துகிறது.*

## அடையாளங்கள்

தேவன் சாட்சியில்லாமல் தமது சாதனையை விட்டுவிடவில்லை. மாற். 15. 38, 39; லூக். 23. 44-47.

மூன்று திரைகள் கிழிபட்டன.

1. தேவ பிரசன்னத்தை மறைத்த திரை.
2. நித்தியத்தை மறைத்த திரை.
3. மனுஷ இருதயத்தை மறைத்த திரை.

'திரை.' மகா பரிசுத்த ஸ்தலத்தின் வாசலை மறைத்த அதிக கனதியான சீலை.

இந்த அடையாளம் காட்டினது என்னவெனில்,

1. தேவன் தேவாலயத்திலிருந்து வெளிப்பட்டுப்போனார். எருசலேமில்மாத்திரம் தேவனை மனுஷர் தொழவேண்டுமென்பது எடுபட்டுப்போயிற்று. 2 கொரி. 12. 18.

2. யூதருக்கும் புறஜாதியாருக்குமுள்ள தடுப்புச் சுவர் இடிந்தது.

3. ஒவ்வொருவரும் கிறிஸ்துவின்மூலமாய்த் தேவனிடத்தில் போகும் வழியை உடையவர்கள் ஆனார்கள். எபி. 10. 19-22. மறைத்த திரை நீக்கப்படவே தேவனுடைய பரிசுத்தமும் அன்பும் பிரத்தியட்சமாகக் காணப்படுகிறது.

பிரேதக் கல்லறைகள் திறப்புண்டு மரித்தோர் காணப்பட்டார்கள். இதை மத்தேயுமாத்திரம் சொல்லுகிறார்.

உலக சரித்திரத்தில் கிறிஸ்துவின் மரணம் அதிக விசேஷித்ததாயிருக்கிறபடியால், இப்படிப்பட்ட அடையாளங்கள் சம்பவிப்பதை எதிர்பார்த்தல் கூடியதுதான். இவ்வுலகத்தார் இச்சம்பவத்தைக் குறித்து ஏனோதானோவென்றிருந்தபோதிலும், காணப்படாத உலகத்திலோ அப்படி இருக்கமாட்டாது.

இது மரணம் என்கிற இன்னொரு திரை கிழிவதைக் குறிக்கிறது. ஏசா. 25. 7. கிறிஸ்துவானவர் மரணத்தின் வழியிலுள்ள எல்லா இரகசியத்தையும் நீக்கிப்போட்டார்.

நூற்றுக்கு அதிபதி குணப்படுதல். கிறிஸ்து விசாரணைக்குட்பட்டதுமுதல் இவன் அவருடன் நெருங்கியிருந்து எல்லாவற்றையுங் கேட்டும் கவனித்துமிருந்தான். கிறிஸ்து நீதிமான் என்று இவைகள் அவனை உணரச்செய்தது. ஆகவே, அவன் பூமி அதிர்ச்சியினால் பயந்து அறிக்கைசெய்தான்.



மத்தேயு, மாற்கு. 'இவர் நீதிபரர்.'

லூக்கா. 'இவர் தேவனுடைய குமாரன்.' இது சந்தேகமாகிய திரையைக் கிழித்தது.

மரித்த கிறிஸ்து. யோவா. 19. 31-37. ரோமர் பிரேதங்களைக் கழுகுகள் தின்னும்வரைக்கும் சிலுவையில் தொங்கவிடுவது வழக்கம். இது யூதபிரமாணத்துக்கு விரோதம். உபா. 21. 22, 23. மேலும் கிறிஸ்து மரித்த நாளுக்கு அடுத்த நாள் (1) ஒரு ஓய்வுநாள் (2) ஒரு விசேஷித்த ஓய்வுநாள். ஆகவே, அப்படிப்பட்ட நாளில் பிரேதத்தைப் பார்ப்பது தீட்டு. உலகத்தில் நடந்த பழிகளில் பெரியவற்றைச் செய்த இந்த ஜனங்கள் சடங்காசாரமாகிய தீட்டாவதைக்குறித்து அதிக கவலையுள்ளவர்களாயிருந்தார்கள்.

யோவா. 19. 34-37. ஏன் யோவான் அப்போஸ்தலன் இதைக் குறித்துக் குறிப்பாய்ச் சொல்லுகிறார்? 'அவருடைய தேகம் நிஜரூபமல்ல. அவர் மெய்யான மனுஷனாயிருக்கவில்லை' என்று ஆதிச் சபையில் எழும்பின தப்பான உபதேசத்தைக் கண்டிக்க ஒருவேளை யோவான் இப்படிச் சொல்லியிருக்கலாம். வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக மூடரும் கொடூரமுள்ளவர்களுமான போர்ச்சேவகர் செய்ததும் யோவானின் மனதில் பட்டிருக்கலாம்.

'அவருடைய எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படவில்லை.' யாத். 12. 46. யோவான் இவரை மெய்யான பஸ்காவாகப் பார்க்கிறான். ஒவ்வொரு விஷயத்திலும் இவர் அப்படிப்பட்டவரென்கிற குறிகளைக் காண்கிறான்.

'அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள்.' சக. 12. 10. இந்தத் தீர்க்கதரிசனம் இன்னம் நிறைவேறவில்லை. ஆனால் சீக்கிரத்தில் சம்பவிக்கும்.

இரத்தமும் தண்ணீரும். இதினால் கிறிஸ்து அதிக துயரத்தினால் குலை வெடித்து இறந்தாரென்று சொல்லலாம்.

அடக்கம். மத். 27. 57-61; மாற். 15. 42-47; லூக். 23. 50-55; யோவா. 19. 38-42.

யோசேப்பு. இவன் ஒரு ஐசுவரியவான். சனதிரீம் சங்கத்தான். கிறிஸ்துவைக் குற்றவாளியாகத் தீர்க்கும் சமயத்தில் பயத்தினாலோ அல்லது இந்த அநியாயத்தைக் கண்ணாரக்கண்டு சகிக்க மனமற்றதினாலோ சங்கத்துக்கு வாராதிருக்கலாம். அவன் நல்லவனும் கிறிஸ்துவுக்கு அந்தரங்க சீஷனுமாயிருந்தான். இப்பொழுது அவன் தன் கோழைத்தனத்தைக்குறித்துத் துக்கப்பட்டு மனந்திரும்பித் தைரியமாய்ப் பலப்படுத்தப்பட்டான்.

நீக்கோதேமு. இவனும் சனதிரீம் சங்கத்து அவயவமாயிருந்தான். யோவான். 3. அதி. அக்காலம்முதல் இவன் அந்தரங்க சீஷனாயிருந்தான். ஒருதடவை இவன் இயேசுவுக்காகப் பரிந்துபேசினான். ஆனால் மற்றவர்களால் வாயடைக்கப்பட்டான். யோவா. 7. 51. இந்தக் கடைசி சமயத்தில் இவன் தைரியமுள்ளவனாய்க் காணப்பட்டான்.

# St. Paul

## பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி)

பரி. பவுலுக்குக் கொடுக்கப்பட்ட முள்ளாகிய வியாதியானது காக்காய்வலி என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்த அபிப்பிராயத்திற்குக் கலா. 4. 14-ஐ ஆதாரமாகக் கொள்ளுகிறார்கள். அந்த வாக்கியத்திலே 'அரோசியாமல்' என்கிற பதத்திற்கு மூலபாஷையிலே 'காறித்துப்பாமல்' என்று அர்த்தமாம். அதின் கருத்தென்னவெனில், பூர்வீகத்திலே காக்காய்வலி என்னும் வியாதியானது அதிக அகோரமான ஒரு வியாதி என்றும் அது தேவர்களால் ஒரு வாதையாக அனுப்பப்பட்ட வியாதி என்றும், மனுஷனைத் தீட்டுப்படுத்திய ஒரு வியாதி என்றும் பாவித்து அந்த வியாதி பிடித்த ஒரு மனிதனைப் பார்க்கும்போது எல்லாரும் துப்புவார்கள். கலாத்தியரோ அவர் அப்படிப்பட்ட வியாதியையுடையவரென்று அறிந்தும் அவரை அரோசியாமலும், அசட்டைபண்ணாமலும், துப்பாமலும் அவரை ஓர் தேவதூதனாக ஏற்றுக்கொண்டார்கள்.

மேலும் 2 கொரி. 13-ம் அதிகாரத்தைப் பார்த்தால் அந்த வியாதிக்கும், அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனங்களுக்கும் ஒருவிதமான சம்பந்தம் உண்டாயிருந்ததென்பதை நாம் காணலாம். அதாவது இந்த வியாதியானது காக்காய்வலியாயாவது அல்லது அதைப்போன்ற நரம்புக்குரிய ஓர் வியாதியாய்வது இருந்திருக்கலாம். ஆகிலும் அந்த முள்ளானது எதுவென்று திட்டமாய் யாராலும் சொல்ல முடியாது.

இதுவரையிலும் நாம் கண்டதையெல்லாம் சுருக்கிச் சொல்லவேண்டுமானால் பரிசுத்த பவுல் நல்ல ஸ்திதியிலுள்ள ஓர் குடும்பத்தில் பிறந்து எபிரெயு, கிரேக்கு, லத்தீன் என்கிற இம்மூன்று ஜாதியாரின் நாகரீகத்திலும், ஞானத்திலும் வளர்ந்து தேகத்திலே அவ்வளவு பெலசாலியாயிராவிட்டாலும் அதிக களைப்பு, ஆயாசம் முதலியவற்றை



உண்டாக்கக்கூடிய வேலைகளைச்செய்யச் சக்தியுள்ளவரும் ஆவியிலே அதிக உற்சாகமுள்ளவருமாயிருந்தாரென்று நாம் சொல்லலாம்.

இப்படிப்பட்டவரைத் தேவன் தம்முடைய திருப்பணிவிடையைச் செய்யும்படிக்கும், புறச்சாதியாருக்கு அப்போஸ்தலனாகும்படிக்கும் தன் தாயின் வயிற்றிலிருந்து தெரிந்தெடுத்து இப்படியாக ஆயத்தப்படுத்திக் கடைசியாய்த் திடீரென அவரை அழைத்தார். அந்த அழைப்புச் சடுதியாய் அவருக்கு வந்தபோதிலும் அவருடைய முந்தின ஜீவியம் எல்லாம் அதற்கென்றே அவரைப் பக்குவப்படுத்தினது. அக்காலத்திலிருந்த மற்றெல்லா மார்க்கங்களிலும் சிரேஷ்டமுள்ள மார்க்கமாகிய யூதமார்க்கத்தில் தேறினவராகி, மனச்சாட்சிக்குச் சமாதானத்தைக் கொடுக்க நியாயப்பிரமாணம் சக்தியற்றதென்பதை அறிந்து, அதின் பலவீனத்தையும் கிறிஸ்துவின் பலத்தையும் எடுத்துக்காட்டும் யுக்தியுள்ளவராயிருந்தார். ரோமாபுரிச் சிலாக்கியங்களையுடையவராகிய அவர், ரோமருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தகுதியுள்ளவராயிருந்தார். கிரேக்க தத்துவசாஸ்திரத்தைப் படித்த அவர், கிரேக்கருக்கு மெய்ஞ்ஞானத்தை அறிவிக்கத் திறமையுள்ளவராயிருந்தார். இப்படியாக அவர் செய்யவேண்டிய வேலைக்கு ஒவ்வொரு விஷயத்திலும் அவர் ஆயத்தப்படுத்தப்பட்டவராயும் பாத்திரராயுமிருந்தார்.

கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தில் நடந்த எல்லாச் சம்பவங்களிலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மரண சம்பவத்தைத்தவிர இவருடைய குணப்படுதலின் சம்பவம் விசேஷித்ததாயிருக்கிறது. அதற்கிசைவாக நான்கு சுவிசேஷங்களிலும் எழுதியிருக்கும் சங்கதிகளையொழிய புதிய ஏற்பாட்டிலே எழுதிய சகல விஷயங்களிலும் இவரது குணப்படுதல் அதிக தெளிவாயும் விவரமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அது மூன்று தடவைகளில் எழுதியிருக்கிறது. அப். 9. 1–16; 22. 4–16; 26. 9–18. அவைகளில் சிற்சில வித்தியாசங்களுண்டு. 9-ம் அதிகாரத்தில் பரி. லூக்கா சரித்திரமாக எழுதி அனனியாவினிடத்தில் 10–16 வசனங்களில் சொல்லப்படும் விவரங்களை அறிந்துகொண்டிருக்கவேண்டும். 22, 26–ம் அதிகாரங்களில் பரி. பவுல் எருசலேமில் ஜனங்களை நோக்கிச் சொன்ன வசனங்களும், பெஸ்துவுக்குமுன்பாக அவர் செய்த பிரதிவாதமும் எழுதியிருக்கிறது. 26–ம் அதிகாரத்தில் அவர் இந்தச் சங்கதியைச் சுருக்கிச் சொன்னதினிமித்தம் அனனியாவைப்பற்றியொன்றும் சொல்லாமல் கர்த்தர் அனனியாவைக்கொண்டு தமக்குச் சொன்ன வார்த்தைகள், ஆண்டவர் தாமே தமக்கு நேராகப் பேசியதைப்போல் சொல்லுகிறார். 22-ம் அதிகாரத்தில் அவர் யூதரிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது அனனியாவைக்குறித்து விவரமாய்ச் சொல்லுகிறார்.

26-ம் அதிகாரத்தில்மாத்திரம் 'முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்' என்கிற பதங்கள் வருகின்றன. [இவற்றை 9-ம் அதிகாரத்திலும் எழுதுவது பிசகு என்று மூலபாஷையைக்கொண்டு அறியலாம்.] 'முள்' என்கிற பதத்திற்கு 'முட்கோல்' என்று அர்த்தம். அதாவது எப்படி முரடான ஒரு மாடு தனக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு முட்கோலினால் நடத்தப்பட்டுப் போகிறதோ அப்படியே பவுலானவர் ஒருவித மனக்கலக்கத்தினால் ஏவப்பட்டுத் தாம் அறியாத ஓர் கதிக்குத் தள்ளப்பட்டார்போலிருந்தது. அந்த மனக்கலக்கம் என்னவென்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆயினும் தாம் துன்பப்படுத்தின கிறிஸ்தவர்களின் தைரியத்தையும் பொறுமையையும் கண்டு. அதினால் தாம் செய்துவந்த இந்த வேலையைக்குறித்து ஓர் வேளை சந்தேகமுடையவராய் இருந்திருக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். அல்லது இயேசுவானவர் கற்றுக்கொடுத்த கொள்கைகள் யூதமார்க்கத்தை முற்றிலும் அப்புறப்படுத்தும் என்பதை அறிந்து அந்தக் கொள்கைகளுக்கு விரோதமாய்த் தம்மால் இயன்றமட்டும் செய்யவேண்டுமென்று கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினாலும், தாம் நம்பிக் கைக்கொண்ட யூதமார்க்கத்தின் கட்டளைகளின்படி எவ்வளவு ஜாக்கிரதையாய் நடந்தாலும் அவை தமக்குச் சமாதானத்தையும் மனத்திருப்தியையும் கொடுக்கவில்லை என்று தமது உள்ளத்திலே ஒத்துக்கொண்டு இவ்விஷயத்தைப்பற்றிய சமுசயத்திற்குத் தாம் செய்ய வேண்டியது இன்னதென்று அறியாததினாலே மனக்கிலேசமுடையவராயிருந்தாரென்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

எப்படியோ அவர் மனக்கலக்கமுடையவராயிருந்தார் என்பதை நாம் இவ்வார்த்தைகளினால் அறியலாம். அந்த மனக்கலக்கத்தை ஆண்டவர் தாமே அடக்கி அவருக்குச் சமாதானத்தைக் கட்டளையிட்டார். எப்படியெனில் பரி. பவுல் கண்ட காட்சி ஒரு சொப்பனமுமல்ல, தோற்றமுமல்ல, ஆவிக்குரிய ஓர் தரிசனமுமல்ல. அவர் வாஸ்தவமாகவே தமது சரீர கண்களினாலே ஆண்டவரைக் கண்டார். அதைச் சிற்சில இடங்களிலே திட்டமாய்ச் சொல்லுகிறார். 1 கொரி. 9. 1-ம். வசனத்திலே சொல்லப்பட்ட அப்போஸ்தலரைப்போல் தாமும் இயேசுவைக் கண்டு அவரிடத்திலிருந்து அவர்களைப்போல் தாமும் அப்போஸ்தல ஊழியத்தைப் பெற்றதாகச் சொல்லுகிறார். 15. 5-8-வரை காண்கிறபடி இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின் அவரைக் கண்டவர்களில் தம்மைக் கடைசியாக எழுதி மற்றவர்கள் அவரைக் கண்டதுபோலத் தாமும் வாஸ்தவமாக அவரைக் கண்டதாகச் சொல்லுகிறார். அந்தத் திவ்விய காட்சியினாலே அவர் மனந்திரும்பி குணப்பட்டவராய்த் தமது திருஊழியத்தை ஆரம்பித்தார்.



# The Mission Commission

**By the Rev. N. Devasagayam**

## ஜீவதூதுக் கட்டளை

'ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள்.' (1 கொரி. 15. 22) பாவஞ்செய்கிற நாளிலே மரிப்பாய் என்ற தேவ எச்சரிப்பை மீறின நிமிஷம்முதல் ஆதாம் மரித்தான், அவனுக்குள் அவன் சந்ததி முழுமையும் மரித்தது. அந்தப் பயங்கர சாபம் கிறிஸ்துவினாலும் கிறிஸ்துவுக்குள்ளும்மாத்திரம் நிவிர்த்தியாகும். 'கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.' அந்தச் சாவு 'ஜெயத்தினால் விழுங்கப்பட்டு' ஒழிகிற கடைசிகாலம்வரையும் ஆதாமிலிருந்து விரிந்து பெருகுகிற எல்லா மனுஷரையும் வளைத்துக்கொண்டு ஆளுகிறது. அவ்வாறே, கிறிஸ்துவுக்குள் கிடைக்கிற ஜீவனும் கிறிஸ்துவுக்குப் பிந்தின காலத்தியரைமாத்திரமல்ல, அவருக்கு முந்தின காலத்தியரையும் வளைத்துக்கொண்டு ஆளுகிறது. அவர் நம் பாவத்தின் பொருட்டு மரித்து நம்மை நீதியர் ஆக்குவதற்காக மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து பரலோக சிம்மாசனத்தில் வீற்றிருக்கப்போகிற தறுவாயில், உலகத்துக்கு உயிர்கொடுக்கிற மகா உபகாரியாகிய தம்மை, செத்து ஜீவனை இழந்திருக்கிற மானிடர் யாவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்கிற கட்டளையைத் தம்மவர்களுக்குக் கொடுத்தார். இந்தக் கட்டளைக்கு ஜீவதூதுக் கட்டளை என்று பெயர். அவர் உலகத்துக்குச் சஞ்சீவி மருந்து; அந்த மருந்தைப்பற்றிய செய்தி ஜீவதூது; அந்தத் தூது சொல்லவேண்டும் என்கிற கட்டளை ஜீவதூதுக் கட்டளை. இதை அந்தத் தூது சொல்வதில் பெயர்பெற்ற நிபுணராகிய வார்நெக் (Warneck) வேதசாஸ்திரியாரின் வார்த்தைகளால் விளக்குவோம். அவர் சொல்வதில் சிலருக்குச் சம்மதமில்லாத கருத்து வரினும் அதைப் பாராட்டாமல் குணத்தை அங்கீகரிக்க வேண்டுகிறேன்.

'மிசியோன் தூதுக் கட்டளை மிகச் சுருங்கச் சொல்லப்பட்டிருக்கின்றது (மத். 28. 18-20; மாற். 16. 15; லூக். 24. 47; யோவா. 20. 21; அப். 1. 8). அந்தக் கட்டளையை அவருடைய பிரதான ஆசாரியத்துவ கடைசி ஏற்பாடு என்று சொல்வது செல்லும். அதை அவர் தம் சீடருக்கு உள்ளத்தில் உறுத்துகிற தம் மரண சாதன ஏற்பாடாக வைத்தார். அது தம் மனதிற்கு எவ்வளவு அருமை என்பதை அவர்கள் மறவாமல் எந்நாளும் சிந்தையில் வைத்து அதை ஊக்கமாய் நிறைவேற்ற அவர்களை வற்புறுத்தும்பொருட்டே அவர் அதை அவ்வித ஏற்பாடாக்கினார். நம்மவர்கள் நமக்குத் தங்கள் சாவுவேளை

யில் ஏற்படுத்தி நிறைவேற்றக் கேட்பதை நாம் அருமையாய் மதித்து நிறைவேற்றுவோமல்லவா?

‘இந்தக் கட்டளைக்கு ஆதாரம் என்ன? ‘வானத்திலும் பூமியிலும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.’ அதினிமித்தம் போங்கள்! இது பெரிய இராஜவல்லமையுள்ள சொல். சிலுவையில் அறையப்பட்ட இயேசு தேவனால் எல்லாவற்றிற்கும் மேலான பதவிக்கும் அதிகாரத்துக்கும் உயர்த்தப்பட்டார். பிலி. 2. 9–11. அதினால் முழு பூமியின்மேலும் அவருக்கு ஆளுகை செல்லும். இந்த ஆளுகையைக்கொண்டு செலுத்தவேண்டிய உபகரணமும் அவருக்கு உண்டு. அதைப் பார்த்து, நமக்கு அவர் விதித்திருக்கிற இந்தப் பாரமான பெரிய கட்டளையை நிறைவேற்ற மனத்துணிவு வரும்.

‘இந்தக் கட்டளையுடன் அவர் சேர்த்திருக்கிற வாக்குத்தத்தமும் கவனிக்கத்தக்கது. ‘நான் உலக முடிவுமட்டும் ஒவ்வொருநாளும் உங்களோடிருக்கிறேன்.’ நமக்குச் செய்தற்கருமையான வேலையில் அவர் நமக்கு முந்திச் சென்று, நமக்குப் பக்கத்துணையாயிருக்கிறார். அவர் நமக்குமுன் நடந்து நமக்கு வழியைச் செவ்வையாக்குவது நமக்குச் சகலத்துக்கும் சகலமாகின்றது.

‘மேற்சொன்ன ஆதார வார்த்தையும் இப்போது சொன்ன வாக்குத்தத்த வார்த்தையும் இரண்டு கன்மலைகள். இந்த இரண்டு கன்மலைகள்மேல் அந்த ஜீவதூதுக் கட்டளை நிற்கின்றது. அவைகளை இரண்டு வற்றாத ஊருணிகள் என்றும் சொல்லலாம். நாம் விசுவாசத் துணிவடைந்து மிசியோன் வேலை செய்கையில் அவைகளில் தாகமடங்கப் பருகி ஆனந்தமடையலாம்.

‘இந்தக் கட்டளையை உள்ளிட்டு ஆராய்ந்தால், அதில் இரண்டு முக்கிய விஷயங்கள் புலப்படும். முதலாவது, மிசியோன் கிரியையில் நடைபெறும் வேலை. இரண்டாவது, இந்த வேலையைச் செய்வதற்கு உபயோகிக்கவேண்டிய சாதனங்கள்.

I. மிசியோன் வேலை. இதைப்பற்றி நம் ஆண்டவர் திருவாய்மலர்ந்ததை உள்ளபடி மொழிபெயர்த்தால்: ‘நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லாச் சாதிகளையும் என் சீஷராக்குங்கள்’ என்று வரும். ‘நீங்கள் புறப்பட்டுப் போங்கள்.’ உலகத்தின் சகல இடங்களுக்கும் ஒரு இடமும் பாக்கிவையாமல் போங்கள். உலகத்து அஞ்ஞானிகள் தாங்களே உங்களிடம் வருவார்கள் என்று ஆலசியம்செய்து காத்திராதேயுங்கள். நாம் எல்லாரும் ஒருமித்துப் புறப்பட்டுப் போக முடியுமா? முடியாது. இது ஒருவரும் சொல்லாமலே தெரியும். தம் உள்ளத்திலே தெய்வேத்தனமாய்த் தூண்டப்பட்டுப் புறப்பட்



டுப்போக ஆயத்தமுள்ளவர்கள்மாத்திரமே போகவேண்டும். இவர்களை நாம் அனுப்பி, அனுப்பினபின் ஆதரிப்பது நம் கடமை. அதுவுந்தவிர நாம் அவரவர் இருக்கும் இடங்களிலே, நாம் அனுப்பி வைத்திருக்கிற மிசியோன் கிரியையாளரை நம் ஜெபங்களாலும் கொடைகளாலும் தாங்குகிறவர்களாயும் இருக்கவேண்டும். போங்கள் என்ற சொல்லுள் மிசியோன் கிரியையில் பிரயாணம் வெகு பெருமிதமாய் நடைபெறவேண்டும் என்பது அடங்கி இருக்கின்றது. நீர்மேற்பயணம், நிலமேற்பயணம், கப்பல் முதலிய கலங்களிற் பயணம், கால்நடைப்பயணம், இப்படி அந்தந்த இடத்துக்கும் ஆங்காங்கு நிற்கும் நாகரீகத்துக்கும் தக்கபடி பிரயாணம் பலவகைப்படும். மேலும், பெரும்பாகங்களில் அது நெடுந்தொலைப் பயணமாயிருக்கும். இளைப்புக்களைப்பும், உயிருக்கவசியமானவை அகப்படாமையும், பிராணமோசங்களும் நிறைந்ததாயுமிருக்கும். வெகு மிசியோன் கிரியையாளர் தம்முயிரை இழந்திருக்கிறார்கள், பலர் தம் சுகத்தைப் பறிகொடுத்தார்கள். பிரயாணங்களினால், திருவசனமாகிய ஜீவவிதை விதைக்கப்படும். அப்படி விதைக்கப்பட்டது முளைக்கும்படி நீர்ப்பாய்ச்சி முளைத்தது கெடாமல் காப்பாற்றவேண்டுமே. அதினிமித்தம் மிசியோன் கிரியையாளன் எப்போதும் பிரயாணம் செய்துகொண்டே இருக்கலாகாது. அவன் ஒரு தாபரஸ்தலத்தை நிலையாக ஏற்படுத்தி அதிலிருந்துகொண்டு மிசியோன் வேலை செய்யவும் வேண்டும். அப்படி நிலையாக ஏற்பட்ட ஸ்தலங்களுக்கு மிசியோன் ஸ்தானங்கள் என்று பெயர். மிசியோன் ஸ்தானத்திலிருந்து ஒருவன் புறப்பட்டுப் போய் வேலைசெய்து மறுபடியும் அதற்குத் திரும்பிவந்து இவ்வாறு அதைத் தன் வேலைக்கு மத்திய ஸ்தானமாக்கிக்கொள்ளலாம். அந்த ஸ்தானத்திலே கிறிஸ்தவ மந்தையைச் சேர்த்து அதை மேய்க்கும்படி வரமும் பொறுப்பும் உள்ள ஒரு சுதேசியை மேய்ப்பனாக்கினபிற்பாடு மாத்திரமே ஒரு மிஷனெரி புது மிஷன் ஸ்தானத்தை ஏற்படுத்தப் புறப்படலாம்.

‘எல்லா ஜாதிகளையும் எனக்குச் சீஷராக்குங்கள்.’ ‘எல்லா!’ இது எவ்வளவு சிறிய சொல். ஆயினும் அதனுள் தேவ அன்பின் எப்பேர்ப்பட்ட நிறைவு இருக்கின்றது. நம் ஆண்டவராகிய இயேசு தம் உருவக் குத்தப்பட்ட கையை உலகத்தின் எல்லா ஜாதிகள்மேலும் விரித்து, இவர்கள் எல்லாரும் எனக்கு வேண்டும், இவர்கள் எல்லாரையும் நான் இரட்சிக்க விரும்புகிறேன் என்கிறார். ஆயினும், அவர் எல்லா ஜாதிகளையும் ஒரே காலத்தில் தம் மந்தையில் கூட்டுகிறதில்லை. அந்தந்த ஜாதிக்கு அதனதின் காலமுண்டு. அந்தக் காலத்தில் அதை அழைத்துச் சேர்த்துக்கொள்வார். ஒவ்வொரு தனிமந்தை

யிலும் ஒரு சிறுமந்தைதான் உள்ளபடி இயேசுவின் சீஷராயிருக்கும். ஆயினும் கோவிலிலும் பள்ளிக்கூடங்களிலும் கிறிஸ்துவுக்குள் இருக்கிற இரட்சிப்பைத் தெளிய உபதேசிப்பதினால் அந்த முழு மந்தையும் மெய்யான சீஷராகக் கூடும்படி செய்யவேண்டும்.

II. மிசியோன் சாதனங்கள்.—'அவர்களைப் பிதா, குமாரன், பரிசுத்தாவி நாமத்தில் ஞானஸ்நானம் செய்வித்து, நான் உங்களுக்குக் கற்பித்த யாவையும் கைக்கொள்ள அவர்களை உபதேசித்து, எனக்குச் சீஷராக்குங்கள்.' ஆகவே, எவ்விதக் கட்டாயமும் இம்சையும் செய்யாதேயுங்கள். ஞானஸ்நானமும் ஞானவுபதேசமும் இவ்விரண்டுமே போதும். அவைகளைக்கொண்டே உலகத்தின் மானிடரைக் கிறிஸ்துவின் சீஷராக்கிவிடலாம். இந்த இரண்டு சாதனங்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கலாகாது. நம் ஆண்டவர் ஞானஸ்நானத்தை எத்தனங்களுள் முந்தினதாகத் தெரிவிக்கிறார். சிற்சில சமயங்களில் அது உபதேசத்திற்கு முன்னரே உபயோகிக்கத்தக்கது என்று அதினால் புலப்படும். திருஷ்டாந்தமாக, குழந்தைகளை அதினால் சீஷராக்கலாம். ஆயினும் அதுவிஷயத்தில் மிகுந்த சாவதானம் வேண்டும். பிள்ளைகளுடைய பெற்றோர் கிறிஸ்துவின் சீஷராயிருக்கவேண்டும். தவிர, குழந்தைகளுக்கு ஞானோபதேசம் கற்பிக்கிற பள்ளிக்கூடங்களும் இருக்கவேண்டும். இப்படிக் குழந்தைகள் கிறிஸ்தவ உபதேசம் அடைவார்கள் என்கிற நிச்சயம் இருந்தால்மாத்திரம் அவர்களை ஞானஸ்நானம் பண்ணுவிக்கலாம். மேலும் ஞானஸ்நானத்திற்கு ஒரு பெரிய சிலாக்கியம் உண்டு என்பதை அஞ்ஞானிகள் கண்ணாரப் பார்ப்பதினாலேயும் அது மிசியோன் கிரியையில் முக்கியம்பெற்று முதற்சொல்லப்படுகிறது. அது ஒருவேளை தேவனுக்குப் பிள்ளையாகவும், இயேசுவுக்குச் சீஷனாகவும், பரிசுத்த ஆவிக்கு ஆலயமாகவும் வல்லவனாக்குகிறது. மேலும், அது ஒருவனுக்குள் புதிய ஜீவனைக் காட்டி, அந்தப் புதிய ஜீவனுக்குத் தேவையான தேவ பெலத்தையும் கொடுக்கிறது. அதுவுந்தவிர, ஞானஸ்நானம் மிசியோன் ஸ்தானங்களில் ஒருவனுடைய பழைய ஜீவியத்திற்கும் புதிய ஜீவியத்திற்கும் நடுவே வந்து, ஜீவியத்தின் ஒரு புதுக்காலப் பகுதியை உண்டாக்குகிறது. இந்தியாவில், ஞானஸ்நானம் பெறுவது அவசியமல்ல என்று நினைத்து, கிறிஸ்துவுக்கு இரகசிய சீஷராக அஞ்ஞானத்திலேயே நிலைத்திருக்கலாம் என்னும் யோசனையுள்ள வெகுபேர் இருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றதினால் ஜாதி ஜனம், உலக வாழ்வு, இன்னும் மற்ற உலக நன்மைகளை இழந்துவிட்டவர்களைப் பார்த்து அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். இப்படிச் செய்வதினால் அவர்கள் தங்கள் ஜீவியத்தை பழமையிலே நிலைகொண்டுபோகிறார்கள், கிறிஸ்



துவின் சீஷராகும்பொருட்டு எல்லாவற்றையும் விடமாட்டார்கள் என்பது தெளிவு. வேறு சிலர் இரட்சிக்கிற கிறிஸ்தவ விசுவாசத்தின் தன்மையை உள்ளிட்டு அறியாமல் மேற்பூச்சாயும் தெளிவில்லாமலும் அறிகிறதினாலே ஞானஸ்நானம் அவசியமற்ற வெறும் சடங்கு என்று நினைக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியோ ஒருவன் அவருடைய சீஷனாவதற்கு ஞானஸ்நானம் தவிர்க்கமுடியாத ஆவசியகம் என்பது வெளிப்படை.

'கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள்.' அறிந்திருக்க மாத்திரமல்ல, கைக்கொள்ளப் போதிப்பது அவசியம். போதிப்பு ஞானப்பிரசங்கத்தினாலும் பள்ளிக்கூடப் படிப்பினாலும் வரும். வாய்வார்த்தையினாலும் பிரசுரிக்கும் எழுத்தினாலும் மிசியோன் வேலையாளன் செய்யவேண்டியதெல்லாம் அதனுள் அடங்கும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து செய்த எல்லாத்தையும் பேசின எல்லாத்தையும் வேதபுத்தகத்தில் உள்ளபடி தெளிவாயும் லேசாயும் உணர்த்துவது அவனுடைய கடமை. அப்படி உணர்த்துவதினால் அஞ்ஞானிகள் விசுவாசித்துக் கிறிஸ்துவின் சீஷர் ஆவார்கள். அதாவது, அவர்கள் இயேசுவை மாதிரியாக வைத்துப் பின்பற்றி அவருடைய வசனம் சொல்வதின்படியே செய்வார்கள். உணர்த்தவேண்டியபடி உணர்த்தினால் அஞ்ஞானிகளுக்குச் சத்தியத்தின் அறிவூட்டவும் அவர்களுடைய உள்ளத்தைத் தம் வசப்படுத்தவும் தம் வசனத்திற்குப் போதுமான வல்லமையுண்டு என ஆண்டவர் அதினால் விளம்பரஞ்செய்கிறார்.

## The Great Salvation — A Sermon

## பெரிய இரட்சிப்பு

### ஓர் பிரசங்கம்

'இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்.' எபி. 2. 4.

யூதேயா தேசத்திலிருந்த கிறிஸ்தவர்களான யூதர்களுக்கு எபிரெயர் என்று பெயர். மற்ற யூதர்களிலிருந்து இவர்களை வித்தியாசப்படுத்த இப்பெயரால் அழைக்கப்பட்டார்கள். பரிசேயர் முதலான யூதர்கள் தங்கள் மார்க்கந்தான் மேன்மையுள்ளதென்று சொல்லி எபிரெயரை மறுளவிழுத்தப் பிரயத்தனித்தார்கள்.

எப்படியெனில், (1) மோசேயின் நியாயப்பிரமாணங்கள் தேவதூதர்களின் உதவியினால் கொடுக்கப்பட்டன. கிறிஸ்தவர்களுடைய

சுவிசேஷமோ அப்படியல்ல. (2) மோசே மகிமையுள்ளவராயிருந்தார், தேவனை முகமுகமாய்த் தரிசித்தார், தேவனோடு பேசினார். ஆனால் உங்கள் கிறிஸ்துவோ இழிவான சிலுவையின் மரணத்தையடைந்தார். (3) மோசேயின் பிரமாணத்தின்படி நடத்தப்பட்ட ஆராதனைகள் எல்லாம் ஆசாரியர் பலி, பலிபீடம் முதலியவைகளோடும் அரும் பிரயாசங்களோடும் நடத்தப்பட்டன. ஆனால் கிறிஸ்தவ ஆராதனையிலோ அப்படிப்பட்ட சடங்காசாரங்கள் யாதும் கிடையாதாகையால் யூதமார்க்கமே மேன்மையுள்ளது என்று சொன்னதினாலே எபிரெயர் கலங்கி நின்றார்கள். அதைக்கண்ட இந்நிருபத்தை எழுதின அப்போஸ்தலன் அவர்கள் கலங்கி மறுளவிழுந்துவிடாதபடிக்குக் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும், சுவிசேஷத்தின் மகத்துவத்தையும் எடுத்துக் காட்டி மோசேயின் பிரமாணம் நிழல் என்றும் கிறிஸ்துவின் சுவிசேஷம் பொருள் என்றும் நிழலைவிட பொருளே மேன்மையுள்ளது. ஆகவே சுவிசேஷமாகிய பொருள்வர நிழலாகிய மோசேயின் பிரமாணங்கள் கழிந்தன. நியாயப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் இரட்சகர் நிறைவேற்றினதினாலே சுவிசேஷத்தினாலுண்டான இரட்சிப்பே பெரியதென்கிறார்.

அது எப்படிப் பெரிய இரட்சிப்பென்று பார்ப்போம்

இரட்சிப்பென்றாலென்ன?

பகைஞருடைய கைகளினின்றாவது ஆபத்தினின்றாவது விடுதலையாகிறது அல்லது விடுதலையாக்கப்படுவது இரட்சிப்பென்னப்படும். சரீரசம்பந்தமான ஆபத்திலிருந்து விடுதலையாக்கப்படுவது சரீர மீட்பென்றும், ஆத்தும மோசங்களிலிருந்து மீட்கப்படுவது ஆத்தும மீட்பென்றும் சொல்லப்படும். இங்கே சொல்லப்பட்ட இரட்சிப்போ ஆத்துமாவைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும் அதன் தண்டனையிலிருந்தும் விடுதலையாக்கி தேவகிருபையினால் ஆவிக்குரிய ஜீவனை அடைவதைக் குறிக்கும்.

எப்படிப் பெரிய இரட்சிப்பென்பதை மேல்வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் நியாயங்களைக்கொண்டு பார்ப்போம்.

(1) அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் முத்திரிக்கப்பட்டது: ஆகையால் பெரிய இரட்சிப்பு.

அடையாளங்கள் என்பதும், அற்புதங்கள் என்பதும், பலவித பலத்த செய்கைகள் என்பதும் ஏறக்குறைய ஒரே அர்த்தத்தில் சொல்லலாம்.



எப்படியெனில், இஸ்ரவேல் ஜனங்களை மீட்க மோசே தேவனால் பார்வோனுக்குமுன் அனுப்பப்பட்டபோது நீர் எங்களுக்கு என்ன அடையாளத்தைக் காட்டுகிறீர் என்று கேட்டதற்கு மோசே பார்வோனுக்குமுன் சில அற்புதங்களைக் காட்டினான். ஒரு காலத்தில் ஜனங்கள் இயேசுவானவரிடம் நீர் எங்களுக்கு என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர் என்றபோது யோனாவின் அற்புத அடையாளத்தைக் காண்பித்தார். இரட்சகருடைய அற்புதங்களைக் கண்ட ஜனங்கள் அவரைப் பார்த்து 'தேவன் உம்மோடிராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட பலத்த செய்கைகளைச் செய்யமாட்டீர் என்றார்கள்.

தேவ பராமரிப்பாகிய அடையாளம். பவுல் மெலித்தாத் தீவிலிருந்தபோது அவன் விரியன்பாம்பினால் கடிபட்டும் யாதொரு சேதமுமில்லாததைக் கண்ட ஜனங்கள் இவன் தேவதூதன் என்று சொல்லிக்கொண்டார்கள். அப். 28. 1-10. இந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாதென்று ஏரோதினால் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட பேதுருவை அற்புதவிதமாய்ச் சங்கிலிகளின் கட்டுகள் அறுக்கப்பட்டு விடுதலையாக்கி இந்தப் பெரிய இரட்சிப்பைப் பிரசங்கிக்கச் செய்தார்.

இந்தப் பெரிய இரட்சிப்பைக் கூறியவர்களைக்கொண்டு நடபித்த அற்புதங்கள். பேதுருவும் யோவானும் சப்பாணியைத் தேவாலயத் தண்டை சுகப்படுத்தினதும், அப். 5. 15-ல் காண்கிறபடி பேதுருவின் நிழல்பட்ட அநேக பிணியாளிகள் சுகமாக்கப்பட்டதும், அப். 9. 40-லும் 20. 9-லும், நாம் வாசிக்கிறபடி பேதுரு தபீத்தாளையும், பவுல் ஐத்திகு என்பவனையும் உயிரோடெழுப்பினதுமாகிய இப்படிப்பட்ட அற்புதங்களினாலும் இந்தச் சுவிசேஷத்தைக் கூறி இதினால் உண்டானது பெரிய இரட்சிப்பென ஸ்தாபித்தார்கள்.

(2) பரிசுத்தாவியின் வரங்களைக்கொண்டு முத்திரிக்கப்பட்டது: ஆகையால் பெரிய இரட்சிப்பு.

பல பாஷைகளைப் பேசுதல் கலிலேயரென எல்லாராலும் அவமதிக்கப்பட்ட சீஷர்கள் பரிசுத்தாவியின் வரமளிக்கப்பட்ட பின்பு, அவர்கள் பற்பல பாஷையில் பேசக்கேட்டுப் பிரமிக்கிறார்கள். முன் வேலைக்காரப்பெண்ணுக்குமுன் இந்த இரட்சிப்பைச் சம்பாதித்த வரை மறுதலிக்கும் பேதை பேதுரு அப். 1. 8-ல் நாம் காண்கிறபடி பரிசுத்தாவியைப் பெற்றுப் பெலனடைந்து ராஜாக்கள், அதிகாரிகள், பிரபுக்கள் ஆகிய இவர்கள்முன் தைரியமாய்ச் சுவிசேஷத்தைக் கூறி ஒரே நாளில் 3000 பேரைக் குணப்படுத்தினதைக்கொண்டு இதைப் பெரிய இரட்சிப்பெனக் காட்டுகிறார்.

(3) தேவன் தாமே கொடுக்கும் சாட்சியினால் முத்திரிக்கப்பட்டது: ஆகையால் பெரிய இரட்சிப்பு.

தூதரின் சாட்சி. 'இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.'

யோவானின் சாட்சி. 'இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டி.'

தேவசாட்சி. 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்' என்னும் இவ்வார்த்தைகளைக்கொண்டும் இந்த இரட்சிப்பு பெரியதென ஸ்திரப்படுத்துகிறார்.

(4) இந்த இரட்சிப்பைச் சம்பாதித்த வகையிலும் இது பெரியது.

அரும்பிரயாசையுடன் சம்பாதிக்கும் பொருள் அருமையுடையதென்போம். ஒரு பொருளுக்குண்டாகும் மதிப்பு அதைச் சம்பாதித்த வகையினாலும் அதற்குக் கொடுக்கப்பட்ட கிரயத்தினாலும் எண்ணப்படுகிறது. உலகத்தில் சில மனிதருடைய சரீர நன்மைக்கானவைகள் எல்லாம் தம்முடைய வார்த்தையினாலானவைகள். நம்முடைய சரீரத்தைப் போஷிக்க விளைச்சலையும், வியாதியைப் போக்கப் பச்சிலைமூலிகைகளையும் உண்டாக்கினார். இந்த இரட்சிப்பைச் சம்பாதிக்க தேவன் தம்மையே அருளினார். தேவன் தம்மையே பாதாளம் வரைக்கும் தாழ்த்தி மனித அவதாரஞ்செய்து சம்பாதித்த இரட்சிப்பு ஆகையால் பெரியது.

இதற்குக் கொடுக்கப்பட்ட கிரயத்திலும் இது பெரியது. கொடுக்கப்பட்ட கிரயத்தினாலும் மதிப்புண்டாகிறது. 5 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கும், 500 ரூபாய்க்கும் கொள்ளப்படும் பொருள்களுக்கு மதிப்பு வித்தியாசமே. அதிக கிரயம் கொடுத்தது அதிக அருமையெனக் கொள்வோம். தொகையைக் கொடுத்து ஜாமீன் நிற்பதிலும் தன்னையே ஒருவன் ஜாமீனாகக் கொடுப்பது சிரேஷ்டம். அதிலும் தன் ஜீவனையே ஈடாகக் கொடுப்பது அதிமேன்மை. முற்பிதாக்கள் தேவநீதிக்குத் திருப்தியுண்டாக்க மிருகங்களின் இரத்தத்தைக் கிரயமாகச் செலுத்தினார்கள். ஆனால் வாக்கியத்தில் சொல்லப்பட்ட இரட்சிப்பைச் சம்பாதிக்க மிருகங்களின் இரத்தமல்ல, தேவகுமாரன் தம்முடைய சொந்த இரத்தத்தையே கிரயமாகக் கொடுத்துத் தேவநீதிக்குத் திருப்தியுண்டாக்கினார். எபி. 12. 9. 'வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நித்திய மீட்பை உண்டாக்கினார்.' 1 பேது. 1. 18, 19. 'வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்' குற்றமில்லாத



மாசற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.' ஆகையால் இது பெரிய இரட்சிப்பு.

(5) இது அளிக்கும் பலனைக் கவனித்தாலும் இது பெரிய இரட்சிப்பே.

அடையும் அந்தஸ்துக்குத்தக்கதாக மேன்மையுண்டாகிறது. ஒரு குடும்பத்திலுள்ள இரண்டு சகோதரரில் ஒருவன் ஒரு கலெக்டரோடும் மற்றவன் கவர்னர் துரையோடும் சம ஆசனம் வகிப்பார்களானால் இரண்டாவதானவனே சிரேஷ்டமாக எண்ணப்படுவான். அதிலும் அடிமையாகக் கொள்ளப்பட்ட ஒருவன் இவ்வித பதவியை அடைவானால் எல்லாவற்றிலும் மேன்மையாகக் கொள்ளப்படும். எபே. 2. 1, 12-ம் வாக்கியங்களில் நாம் காண்கிறபடி பாவத்தில் மரித்தவர்களும், கோபாக்கினையின் பிள்ளைகளும், கிறிஸ்துவைச் சேராதவர்களும், அவருடைய வாக்குத்தத்தத்திற்கு அன்னியரும், தேவனற்றவர்களுமாயிருந்தோம். ஆனால் இந்த இரட்சிப்பைப் பெற்றவன் தேவனோடு ஒப்புரவானவனும், எபே 2. 16. தேவனுடன் வலதுபக்கத்தில் நிற்பவனும், தேவபுத்திரனுமாகிறான். ஆகையால் இது பெரிய இரட்சிப்பு. தன் பாவத்தினால் நித்திய மரணதண்டனைக்குப் பாத்திரனாயிருந்த அவன் இந்த இரட்சிப்பை அடைவதினாலே நித்திய ஜீவனுக்குட்பட்டு ஜீவகிரீடத்தை அடைகிறான். யோவா. 11. 24, 25. ஆகையால் இது பெரிய இரட்சிப்பே.

இந்தப் பெரிய இரட்சிப்பைப்பற்றி வாசிக்கும் சிநேகிதனே! உன் நிலைமை என்ன? நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? நமதாண்டவர் தாமே இந்த இரட்சிப்பைப்பற்றிப் பேசும்போது விருந்தில் பெரிய விருந்தென்றும், முத்தில் ஆணிமுத்தென்றும் சொல்லிப் பெரியதென்கிறார். பவுல் அப்போஸ்தலனுங்கூட இந்தப் பெரிய இரட்சிப்பை அடைய தனக்குண்டாயிருந்த எல்லாச் சிலாக்கிய பாக்கியங்களையும் குப்பை என்று சொல்லி, நான் கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டேன் என்கிறார். இந்தப் பெரிய இரட்சிப்பை அடைந்திருக்கிறாயா? நீ வியாதியால் பீடித்திருந்து அவ்வியாதிக்குச் செய்துகொள்ளும் சிகிச்சையினால் சுகப்பட்டு வரும்போது உன் வியாதியின் பெலன் படிப்படியாய்க் குறைந்துவர கடைசியாய் உனக்குப் பூரண சுகமுண்டாயிற்று என்று நீ சொல்லக்கூடுமல்லவா? அதுபோலவே உன்னிலுள்ள பாவவியாதியின் பெலன் குறைந்து பரிசுத்தமாய் ஜீவிக்கிறேன் என்று நீ உணருவாயானால் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடுமல்லவா?

சிலர் இந்த இரட்சிப்பு இவ்வுலகத்தில் கிடைக்கக்கூடியதல்ல என்பார். அப்படிப்பட்டவர்களுக்குத் திருவசனம் சொல்வதைக் கேட்போம். யோவா. 6. 47. என்னிடத்தில் விசுவாசமாயிருப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று இரட்சகரும் எபே. 2. 6. 8-ம் வாக்கியங்களில் கிருபையினாலும், விசுவாசத்தினாலும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று எதிர்காலமாய்ச் சொல்லாமல் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று இறந்தகாலமாகப் பரி. பவுல் அப்போஸ்தலனும் சொல்லுகிறார்.

சகோதரனே, நீ இதுவரை இரட்சிக்கப்படவில்லையானால் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள் என்று இரட்சகர் இப்போது அழைக்கிறார். மத். 11. 28.

இப்போதே இரட்சணிய நாள்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

MAY 1912 MADRAS

No. 72 மே 1912

# வேதியர் விளக்கு

## Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

'பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.' *யோவா. 7. 37-39.*

முகவுரை:—*ஓ, தாகத்தால் வருந்திநிற்கும் ஏழை ஆத்துமாவே இவ்வருமையான அருள்நிறைந்த திருமொழிகளைச் சற்று உற்றுக் கேள். நீ உன் தாகவிடாயினால் வறண்டு சோர்ந்துபோகிறதைக் கண்டு மனம் பொறுதவராய், உன்மீது மனதுருகி, ஒரு தாய்ப்பசு தன் கன்றை நோக்கிக் கதறுமாப்போல், உன் தாகவிடாய்த் தணியவும், நீ களை நீங்கி சதா உயிரையும் பெலனையும் பெற்று மனத்திருப்தியோடு வாழவும், உன் மூலமாய் வறண்டு விடாய்த்திருக்கும் உலகமும் களை நீங்கி ஜீவன் பெற்று வாழவும், தக்க பாக்கிய நிலையை நீ வெகு லேசாய்க் கண்டறிந்தடைய உன்மீது கருணைகூர்ந்து உன்னை நோக்கி மிக வாஞ்சையோடு உரத்த சத்தமாய்க் கூவிநிற்கும் இம்மகா உத்தம புருஷன் யார் என்பதைச் சற்று நோக்கிப்பார். இத்திருவாசகங்கள் வசனிக்கப்பட்ட இடமும் சந்தர்ப்பமும் எவ்வளவு பொருத்தமானவையென்று பார். எருசலேம் பட்டணத்தில் கூடாரப் பண்டிகையைக் கொண்டாடும்படியாகப் பல தேசங்களிலிருந்து யூத ஜனங்கள் லட்சக்கணக்காய்க் கூடி வந்திருக்கிறார்கள். டிஸ்ரி (Tisri) என்கிற ஏழாம் மாதமாகிய செப்டெம்பர் மாதத்தில் ஏழு நாளுக்கென்று கூடாரங்களில் பண்டிகை ஆசரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜனங்கள் யாவரும் தங்கள் பூர்வ பிதாக்களான இஸ்ரவேலரை வனாந்தரங்களில் கர்த்தர் அதி அற்புதமாய்ப் போஷித்துக் காத்து வழிநடத்*

தினத்தையும், அவர்களைக் கூடாரங்களில் வாசஞ்செய்யச் செய்ததையும் நினைவுகூரவும், பிறகு கானானில் அவர்களுக்கு நிலையுள்ள குடியிருப்பைக் கர்த்தர் தந்ததற்காக நன்றிசெலுத்தவும் தக்கதாக, (லேவி. 23. 33-44-ல்) கட்டளைபெற்றபடியே, எருசலேம் பட்டணத்தின் வீதிகளிலும், வீடுகளின்மேலும், முற்றங்களிலும், தண்ணீர்வாசல் வீதியிலும், ஆலயப் பிராகாரங்களிலும், ஒலிவக்கிளைகளையும், மிருதுவான செடிகளின் கிளைகளையும், பேரீச்சின் மட்டைகளையுங்கொண்டு கூடாரங்கள்போட்டு, இஸ்ரவேல் யாவரும் ஒருவரும் பாக்கியில்லாமல், பண்டிகை நடக்கிற எழு நாளும் வீடுகளில் வாசஞ்செய்வதைவிட்டுக் கூடாரங்களில் வாசஞ்செய்கிறார்கள். இரவுகளில் தேவாலயத்தின் கட்டடங்களெல்லாம் தீபாலங்காரம் பெற்றுப் பிரகாசம் பொருந்தியிருக்கின்றன. பண்டிகையின் ஒவ்வொரு காலையிலும் தேவாலயத்தில் விசேஷித்த பலிகளும் ஆராதனைகளும் நடக்கின்றன. லேவி. 23. 39, 40-ல் உள்ளபடி கர்த்தருக்குச் சேர்ப்பின் பண்டிகையையுங் கொண்டாடி, விருக்ஷங்களின் கனிகளையும், பேரீச்சின் ஓலைகளையும், தழைத்த கிளைகளையும், ஆற்றலரிகளையும் கர்த்தர் சந்நிதிக்குக் கொண்டுவந்து மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்.

பண்டிகையின் கடைசி நாள் பிரதானமான நாள். இந்த நாள் ஜனங்கள் யாவருக்கும் சந்தோஷகரமான நாள். இந்த நாளில், இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் தேவன் கன்மலையிலிருந்து அற்புதமாய்த் தண்ணீர் வருவித்துத் தாகந்தீர்த்ததை நினைவுகூரும்படியும், தங்களுக்குச் சரியானபடி காலமழைபெய்ய விசேஷித்த ஜெபங்கள் செய்யும் பலிபீடத்தின்மேல் நீரூற்றின் ஜலம் ஊற்றப்படும் காக்ஷியைப் பார்க்கும்படியும், ஜனங்கள் யாவரும் அதிகாலையில் கூடாரங்களைவிட்டுக் கிளம்பி, பண்டிகை உடுப்புகளை யுடுத்தி, ஒவ்வொருவரும் தங்கள் வலது கையில் பேரீச்சின் ஓலையையும் ஆற்றலரியையும், தங்கள் இடதுகையில் அலங்காரமான விருக்ஷக்கனியையும் எடுத்துக்கொண்டு தேவாலயத்திற்குப் போகிறார்கள். இவ்விதமாய்த் தேவாலயத்தில் கூடின திரளான ஜனம் மூன்று பிரிவுகளாகப் பிரிகிறது. இவைகளில் ஒரு பிரிவு, தேவாலயத்தில் எக்காளவாத்தியம் முழங்கினவுடனே, தேவாலயத்திலிருந்து ஒரு பொன் குடத்தை ஏந்திக்கொண்டு புறப்படுகிற ஒரு ஆசாரியனுக்குப் பின்னால் செல்லுகிறது. இது தேவாலயத்திற்குத் தெற்கிலிருக்கும் பள்ளத்தாக்கிலுள்ள சீலோவாம் என்கிற நீரூற்றண்டைக்குப் போகிறது. இங்கே ஆசாரியன் பொன் குடத்தில் நீரூற்றின் ஜலத்தைப் பக்திவிநயத்துடன் மொண்டு எடுத்துக்கொண்டு, ஜனங்கள் யாவரும் பெரிய ஆரவாரத்துடனும், பல வாத்திய கோஷ்டத்துடனும் குதூகலித்துப் புடைசூழ்ந்துவர, தேவா



லயத்தின் தண்ணீர் வாசலின் வழியாய்ப் பலிபீடத்தண்டைப் போகிறான். இந்தச் சமயம் காலையில் சாதாரண பலி செலுத்தும் ஆராதனை முடிந்து, தகனபலிகளின் பெரிய பலிபீடத்தின்மேல் பலிகளின் துண்டுகளைக் கிடத்திவைக்கும் சமயமாயிருக்கிறது. எக்காளச்சத்தங்கள் மிகக் கெம்பீரமாய் முழங்கும்போது அந்த ஆசாரியன் பலிபீடத்தின் சரிவின் உச்சிக்குப் போய்ப் பலிபீடத்தின் கீழ்ப்பக்கத்திலுள்ள வெள்ளிப் பாத்திரத்தில் திராக்ஷரசம் வார்க்கப்படுகையில், மேற்குப்பக்கத்திலுள்ள வேறொரு வெள்ளிப் பாத்திரத்தில் தான் கொண்டுவந்த நீரூற்றின் ஜலத்தை ஊற்றுகிறான். அப்போது ஆசாரியர்கள் 'நீங்கள் சந்தோஷத்தோடு இரக்ஷிப்பின் கிணறுகளிலிருந்து தண்ணீரை மொண்டுகொள்ளுங்கள்' என்று ஒருவருக்கொருவர் பாடுகிறார்கள். பிறகு உடனே 113–118 சங்கீதங்களாகிய பெரிய அல்லேலூயா கீதங்கள் பாடப்படுகின்றன. அவைகளையே திரும்ப நாகசுரங்களும் பாடுகின்றன. இப்படியே பாடி 'கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது என்கிற வசனத்திற்கு வரும்பொழுது பலிபீடத்தண்டையில் நின்று தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவனும் மகா ஆர்ப்பரிப்புடனே தன் கையிலுள்ள பேரீச்சங்கிளையை ஆட்டுகிறான். ஜனங்கள் எல்லாருக்கும் சொல்லமுடியாத சந்தோஷமுண்டாகிறது. அப்போது தண்ணீர் மொள்ளும் சந்தோஷகரமான காக்ஷியைப் பாராத எந்த மனுஷனும் உலகத்தில் மெய்ச்சந்தோஷம் இன்னதென்று அறியாதவன்' என்று ரபிமார்கள் சொல்லுகிறார்கள். இவ்விதமாய்ப் பண்டிகையின் காலை ஆராதனை முடிவுபெறுகிறது. இப்போது ஆசாரியன் இந்த நாளுக்குரிய விசேஷித்த பலிகளைச் செலுத்த ஆரம்பிக்கிறான். இந்தச் சமயம் ஆராதனை ஒன்றும் நடவாமல் கொஞ்சம் நிறுத்தப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் தேவாலயத்திலுள்ளவர்கள் யாவரும் கேட்கத்தக்க அவ்வளவு உரத்த சத்தமாய் இயேசுவானவரின் சத்தம் கிளம்புகிறது. மனுஷ ஆத்துமாவின் தாகவிடாயைத் தணித்து, அதின் வாஞ்சையைப் பூர்த்திசெய்து, அதற்கு எப்போதும் நீங்காத ஆநந்தம் பெருகச் செய்யும்படி பூமியில் அவதரித்துத் தங்கள் மத்தியில் அதைத் தேடிவந்திருக்கிற ஆத்துமநாயகனாகிய தம்மை இன்னாரென்று அறிந்து தீர்க்கதரிசிகளாலும், பரிசுத்தவான்களாலும் முன்னுரைத்தபடி தாமே மெய்யான இரக்ஷிப்பின் நீரூற்று, தம்மில் மொண்டுகொள்ளவேண்டும் என்றும் (ஏசா. 12. 3), தாமே அவர்கள் பூர்வ பிதாக்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையென்றும், கன்மலையாகிய தம்மில் புறப்பட்ட தண்ணீரைக் குடித்தார்கள் என்றும் 1 கொரி. 10. 4), சுட்டிக்காட்டி, அவர்கள் உண்மையாய்த் தாக

முடையவர்களாயிருந்தால் மெய்யான கன்மலையும், மெய்யான இரக்ஷிப்பின் நீரூற்றுமாகிய தம்மிடத்திலே வந்து பானம்பண்ண வேண்டுமென்றும், வெறுஞ்சடங்கை அநுசரிப்பதால் ஆத்துமதாகம் தணியாது என்றும் விளக்கிக் காட்ட இயேசு நின்று உரத்த சத்தமாய் 'ஒருவன்... ஓடும்' என்றார். நமது ஆத்துமாக்களுக்குப் பிரயோசனமாக,

1-வது ஜீவத்தண்ணீரின் நதிகள் என்றால் என்ன என்றும்,

2-வது ஜீவத்தண்ணீரின் நதிகள் விசுவாசியின் உள்ளத்தில் எப்படி உற்பத்தியாகிறது என்றும்,

3-வது ஜீவத்தண்ணீரின் நதிகள் விசுவாசியின் உள்ளத்தில் எப்படிப் பூரணப்படுகிறது என்றும்,

4-வது ஜீவத்தண்ணீரின் நதிகள் அவன் உள்ளத்திலிருந்து எப்படி ஓடுகிறது என்றும் கவனிப்போம்.

1. ஜீவத்தண்ணீரின் நதிகள் என்றால் என்ன?

ஜீவத்தண்ணீர் என்றால் ஜீவனாகிய தண்ணீர், ஜீவனையுடைய தண்ணீர், அல்லது ஜீவனைக் கொடுக்கும் தண்ணீர் என்றாகும். இத்தண்ணீரைப் பானம்பண்ணுகிறவர்கள் தாகவிடாய்த் தீர்ந்து செழித்து எக்காலமும் ஜீவிப்பார்கள். இத்தண்ணீர் பாயும் இடமெல்லாம் செழிப்பும் ஜீவனுள்ளதுமாயிருக்கும். பூமிக்குரிய தண்ணீரை யருந்துகிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்; ஜீவத்தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாமல் அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாகி அவனை நிரப்பி அவனிலிருந்து வறண்டுகிடக்கிற மற்ற ஆத்துமாக்களுக்கும் பாயும் தன்மையுள்ளதாயிருக்கிறது.

ஆகவே ஜீவத்தண்ணீர் பூமிக்குரியதாயிராமல் கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையிலிருந்து சுரக்கிறதாயிருக்கிறது. இக்கன்மலையிலிருந்தே ஜீவத்தண்ணீர் பாவத்தால் வறண்டு விடாய்த்திருக்கிற பூலோகத்தாருக்கு ஏராளமாய்ப் பாய்ந்துகொண்டிருக்கிறது. தாகம் எடுக்கிறவன் எவனோ, அவன் பணமும் கிரயமுமின்றி இலவசமாய் இந்தக் கன்மலையண்டையில் போய் அருந்தலாம் (ஏசா. 55. 1). அருந்த அருந்த அவன் உள்ளம் ஒரு தடாகமாகி, அவனிலிருந்து ஜீவத்தண்ணீர் வழிந்து விடாய்த்திருக்கும் மற்ற உள்ளங்களில் பாய்ந்து உயிர்ப்பிக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி தரிசனம் கண்டபடி, தேவாலயமாகிய விசுவாசியின் உள்ளத்திலிருந்து பாய்ந்து ஓடுகிற பரிசுத்த தீர்த்தம் வறண்ட நிலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அகன்றும் ஆழ்ந்தும் பாய்ந்து, பாய்கிற இடத்திற்கெல்லாம் செழிப்பையும் ஜீவனையும் கொடுக்கிற வல்லமையுடையதாயிருக்கிறது (எசேக். 47. 1-12).



அப்பேர்ப்பட்ட ஜீவத்தண்ணீர் எது? பரி. யோவான் அடுத்த வசனத்திலேயே (8. 39-ல்) அதைக் கிறிஸ்து தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்துச் சொன்னதாகச் சொல்லுகிறார். அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவாகிய கன்மலையிலிருந்து புறப்பட்டு, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் உள்ளத்தில் பிரவேசித்து, அவனில் நிரம்பி, அவன்மூலமாய்ப் பூலோகத்தாருக்குக் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் ஜீவனையும் கிருபைகளையும் நதிகளாகப் பாயச்செய்கிறார் என்று பார்க்கிறோம். கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு கிருபையும் ஒரு நதியாகப் பூலோகத்தாருக்குப் பாய்கிறது. ஒரு கால்வாயாகவல்ல, ஒரு ஓடையாகவல்ல, பெரிய நதியாகப் பாய்கிறது. கன்மலை பிளக்கப்பட்டபிறகு தண்ணீர் ஓடிவந்ததுபோலக் கிறிஸ்து சிலுவையில் மரித்து மகிமைப்பட்ட பிறகுதான் பரிசுத்த ஆவி அருளப்பட்டார். ஆகவே விசுவாசியின் உள்ளத்தில் இயேசு மகிமைப்பட்டால்தான் பரிசுத்த ஆவியானவர் அவன் உள்ளத்தை நிரப்பி அவன்மூலமாய் உலகத்தாருக்கு அருளப்படுவார்.

(இன்னும் வரும்.)

## The Pastor's Missionary Duty

### By the Rev. N. Devasagayam

## சபைமேய்ப்பன் தன் சபையை மிஷன் வேலையைப்பற்றி அறிவூட்டிவைக்க உத்தரவாதி

'மிஷன்வேலையே சபை செய்யவேண்டிய பிரதம வேலை. அந்த வேலைக்கே நம்மாண்டவர் சபையை நியமித்திருக்கிறார். சபை செய்யவேண்டிய பல வேலைகளுள் அது ஒன்றல்ல. அது ஒன்றேதான் சபைக்கு முதன்மையும் முக்கியமுமான வேலை. அந்த வேலை செய்யாத சபை இருப்பதினால் எப்பயனுமில்லை. சபையிலிருக்கிற ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் மிஷன் வேலை செய்வதற்காகவே தான் உலகில் இருக்கிறதை உணர்வுழுந்த அறிந்திருக்க வேண்டும். ஒரு சபையின் கடமை அதின் ஒவ்வொரு தனி அவயவத்தின் கடமையேயாம்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் யாருடைய உள்ளத்தில் புகுந்து பற்றிக்கொண்டாலும் அந்த உள்ளத்தை அது உயிர்ப்பித்து மாற்ற வல்லதாயிருக்கும். இதை ஒவ்வொரு தனிக் கிறிஸ்தவனும் 'தன்

அநுபவத்தில் கண்டிருக்கவேண்டும். அப்படி அநுபவங்கண்டவன் தனக்குக் கிடைத்திருக்குமாறு உயிர்கிடைக்கப் பெறாத மற்றவர்களுக்காகப் பரிதபித்து உருகுவான். உருகுவதோடே விடாமல், அவர்களுக்கும் உயிர்கிடைக்க விடாமுயற்சி செய்வான். அவனுக்குள் பற்றியெரிகிற பரிதாபம் அற்பமான ஒரு சிறு இடத்திலேமாத்திரம் எரியாமல் விசாலமான முழு உலகத்திலுமே எரியும். கிறிஸ்துவின் இராச்சியம் நாளுக்குநாள் இடம் விசாலித்து எல்லாப் பூமியையும் நிரப்பவேண்டும் என்பது அவனாசை. இந்த ஆசை அப்போதைக்கப்போது வெளிப்படுவதல்ல. அது அவனுக்கொரு இணைபிரியாத இலக்ஷணமாயிருக்கும். முழு பூமியையும் இரட்சிக்கிற கிறிஸ்துவின் வல்லமைக்குட்படுத்த முயலாத கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் ஏதோ பழுது இருக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களுடைய உள்ளத்தில் மிஷன் உத்தரவாதம் எங்களுக்கில்லை, அந்த வேலைக்குப் பிரித்துவைக்கப்பட்ட சிலருக்கே இருக்கிறது என்கிற கெடுநினைவு மறைந்திருக்கிறது. கிறிஸ்து போதித்திருக்கிற பரிசுத்த ஜீவியம் அதற்காகக் குறிக்கப்பட்ட சிலருக்குமாத்திரம் இருக்கவேண்டியதா, எல்லாருக்கும் இருக்கவேண்டியதா? எல்லாருக்கும் என்றால், உயிர்ப்பிக்கிற சுவிசேஷத்தை உலகெங்கும் கொண்டுபோங்கள் என்கிற கட்டளைமாத்திரம் எப்படிச் சிலருக்குமாத்திரமாகும்? கிறிஸ்து உன் ஜீவியத்தை மேன்மையானதாய் மாற்றுகிற ஜீவவல்லமையாய் உனக்குள் இருக்கிறாரா? அப்பேர்ப்பட்ட வல்லமையாய் அவர் மற்றவர்களுக்குள் இருக்கவேண்டாமா? வேண்டுமானால், அதற்காகக் கவலைப்படவேண்டியதார்? மன்னுயிர்களை இரட்சிப்படைவிக்க அவரேதவிர வேறு பெயர் இல்லையே. இது தெரிந்த நாம் சும்மா இருக்கலாமா? அவரை உலகெங்கும் தெரியப்படுத்தவேண்டாமா? அப்படித் தெரியப்படுத்துகிற விசுவாசமே உயிருள்ள விசுவாசம். அது நம்முள் இருக்குங் காலமெல்லாம் சுவிசேஷத்தைப் பிறருக்குக் கொண்டுபோவோம். எப்போது சுவிசேஷத்தைப் பிறருக்குக் கொடுக்க மறக்கிறோமோ அப்போது விசுவாசம் நமக்கு அற்றுப் போயிற்று என்பதில் சந்தேகமேயில்லை. உயிர் உயிரைப் பலுகச் செய்யும். நம்முள் உயிருள்ள விசுவாசம் இருந்தால் அது ஓயாமல் பலுகிக்கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வுலகில் கிறிஸ்தவ ஜீவனில் அடையக்கூடிய பூரண வளர்ச்சியை அடையவேண்டும். வளர்ச்சி ஒருவனுக்கு எப்படி வரும்? அவனுக்கிருக்கிற பெலன்களை உபயோகிப்பதினால் வரும். அவ்வாறே கிறிஸ்தவ ஜீவ வளர்ச்சியும் அந்த ஜீவனை உபயோகிப்பதினால் வரும். அதை உபயோகிப்பது



எப்படியென்றால், கிறிஸ்து இரட்சிக்கிற தமது அன்பினால் முழு உலகத்தையும் அணைத்துக்கொண்டிருக்கிறதை நாமும் கண்ணாரக் கண்டு அவருடைய சுவிசேஷத்தையும் முழு உலகத்திற்கும் கொண்டுபோக முயற்சி செய்வதினாலேதான். சுவிசேஷ விருத்தி முயற்சியினாலேதான் நம் கிறிஸ்தவ ஜீவியம் ஆழமும் அகலமும் உயரமும் உள்ளதாய் மேம்பட்டு உயரும்.

இரட்சிக்கிற சுவிசேஷமில்லாமல் உலகம் என்ன பாடுபடுகிறது என்கிறதைத் துடிக்கப் பதைக்கக் கிறிஸ்தவர்களுடைய உள்ளத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும். அப்படிக் காட்டாவிட்டால் அவர்கள் உலகத்தின் துயர நிலைமையைப்பற்றி நிர்விசாரிகளாய் இருப்பார்கள். உள்ளம் உருகினால் புத்திசித்தமெல்லாம் உருகும். சுவிசேஷமில்லாத காலத்தில் நாம் எப்படியெப்படி மனவாதையும் ஆத்தும சரீர வாதைகளும் அடைந்து தவித்தோமோ அப்படியே நம் சபைகள் மனதில் பட்டுருவத்தக்க மாதிரி சுவிசேஷமில்லாத உலகம் படுகிற பாடுகளையும், தவிக்கிற தவிப்புகளையும் எடுத்துச் சொல்லவேண்டும். இப்படிச் சொல்வது ஒவ்வொரு சபைமேய்ப்பன்மேலும் விழுந்த கடன்.

தூண்டப்படாத வைராக்கியம் சுறுக்காய் அவிந்துபோம். சபையில் இந்த வருஷம் இருக்கிற வைராக்கியம் வருகிற வருஷம் இராது. வைராக்கியமானது ஒருதரம் மூட்டிவிட்டால் ஓயாமல் எரிந்துகொண்டே இருக்குமா? சபையில் மிஷன் கரிசனம் காயாமல் எப்போதும் பச்சையாகவே இருக்க விரும்பினால், சபையை மேய்க்கிறவன் நாள் தவறாமல், கொஞ்சமும் சலிக்காமல் சபையின் கவனத்தை மிஷன் வேலையில் செலுத்திக்கொண்டேயிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட கவனமுண்டாக்குவதற்குச் சபைகுரு தன் சபையில் மிஷன் வேலையில் நடக்கிற சமாசாரங்களைப்பற்றி அறிவு உண்டாக்கிக்கொண்டிருக்கவேண்டும். அப்படி அறிவு உண்டாக்கவேண்டிய சபைகுரு தானே மிஷன் சமாசாரங்களை பத்திரிகைகள் மூலமாயாவது, நேரில் விசாரித்தாவது, எப்படியாவது திட்டவட்டமாய் அறிந்து அவைகளைப்பற்றித் தன் நெஞ்சிலேயே மூழ்கி இளகி யுருகி யிருக்கவேண்டும். மிஷன் கிரியைகளைப்பற்றி நம் சபைகள் எவ்வளவு அறியுமோ அந்த அறிவுக்குத் தக்கபடி அதின் மிஷன் வைராக்கியமும் இருக்கும். சபைகளை அவியா வைராக்கியமும் ஓங்குகிற வளர்ச்சியும், காரியசித்தியும் உள்ளவைகளாக்க விரும்புகிற குருமார் அவைகளை ஓயாமல் மிஷன் வேலைகளைப்பற்றிச் செவ்வையாய் அறிந்திருக்கப் பண்ணவேண்டும். உலகத்தில் சென்ற நூற்றாண்டில் மிஷன் ஸ்தானங்கள்தோறும் செய்யப்பட்ட வேலையைப்

பற்றின சரித்திரங்கள் சொல்லி முடியாதனவாம். அவைகளைச் சொல்லச் சொல்ல கேட்போருக்கு மனது உடைந்து உருகும். மிஷன் வேலை இங்கே பலிக்காது என்று கடினமாய்த் தோன்றின இடங்களிலேகூடக் கிறிஸ்து பிரவேசித்து ஆச்சரியமான ஜெயங்களை அடைந்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட ஜெயங்களைச் சபைமேய்ப்பன் ஜனங்களுடைய உள்ளத்தில் தைக்க எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால்மாத்திரம் சபைகளிலே மிஷன் வேலைக்கு உயிரும் உற்சாகமும் வரும்.

மிஷனரிகள் அந்தந்த ஸ்தானங்களில் செய்கிற அரிய பெரிய வேலைகளையும் அந்த வேலைகளில் அவர்களுக்கு நேரிடுகிற அநுகூல பிரதிகூலங்களையும் இடைவிடாமல் சபைகளுக்கு விளங்க உணர்த்தினால், மிஷன் வேலைக்கு வேண்டுமளவு பணம் சபையார் உற்சாகமாய்க் கொடுப்பார்கள். மிஷன் வேலையை அறிந்து கொடுக்கிறது அது மனதில் தைக்கிறதினால் கொடுப்பதாகும். அப்படிக் கொடுப்பதே சரி. ஏனெனில், ஓயாமல் மனதில் மிஷன் வேலை தைத்துக்கொண்டேயிருக்கக் கொடுக்கிறவர்கள் இடையறாமல் எப்போதும் போதுமானது கொடுப்பார்கள்.

மேலும், மிஷன் கிரியை ஜெபவல்லமையில் நிற்கிற கிரியை. ஆங்காங்கு தற்காலம் மிஷனுக்காகச் செய்யப்படுகிற ஜெபம் ஜெபமேயல்ல. எந்த ஸ்தானத்தில் எந்த வருத்தம், எந்த ஆவசியகம், எந்த ஒத்தாசைக்கு எதிர்பார்க்கை இருக்கிறது என்பது ஒன்றுந் தெரிவிக்காமல் சபையைப் பொத்தாம்பொதுவில் ஜெபம்செய்யக் கேட்பது சரியேயல்ல. நம் சபைகளைப் பொதுவில் ஜெபத்துக்குத் தூண்டுவது மாத்திரம் போதாது. ஆண்டவர் இன்னின்ன நன்மைகளை நம் ஜெபத்துக்கு அருளுகிறார், அதில்லாவிட்டால் அருளார் என்று ஜெபத்தின் அவசியம் மனதில் தைக்கச்செய்யவும் வேண்டும். அந்தந்த நன்மைகளை வகுத்துக் குறித்துக் கேட்டு வாங்கி ஜெபசித்தியுள்ள சபைகள்மாத்திரமே ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கும்.

ஒவ்வொரு சபையிலும் இந்த விஸ்தாரமான உலகத்தில் நடக்கிற சகல மிஷன் கிரியைகளையும் அறிகிற அறிவு இருக்கவேண்டும். இப்பூமண்டலத்து ஜனங்களில் மூன்றிலிரண்டு பாகத்தார் குடும்பங்களிலும், தேசத்திலும், தெய்வாராதனையிலும் நடைபெறுகிற பற்பல தீமைகளினால் சொல்லொணாத நிர்ப்பந்தங்களை அநுபவித்துத் துன்பப்படுகிறார்கள். யார் யார் எந்த எந்தப் பூபாகங்களில் அப்படித் துயருற்றுத் தவிக்கிறார்கள் என்று தெரிந்தால்தானே சபை வாலிபர்கள் எந்த இடத்திற்கு எந்த வேலைக்குத் தங்களை ஒப்புவிக்கலாம் என்று அறிவார்கள்? ஆதலால், முழு உலகத்தின் துயரத்தையும் பிட்டு



வைத்து அதற்கு நம் சபைகள் என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்திக்கப் பண்ணவேண்டும்.

எந்தச் சபையும் மிஷன் வேலை செய்துகொண்டேயிருந்தால் மாத்திரம் அதற்கு உயிர் இருக்கும். மற்றப்படி அது செத்துப் போகும். ஒரு சபையின் நிர்வாகம் அதின் சொந்தத் தேவைகளுக்குப் போதாதிருக்கும்போதுகூட அது மிஷன் வேலையை விடாமல் தொடர்ந்து செய்யவேண்டும். உடம்பில் நம் இரத்தம் இரத்தாசயத்திலிருந்து உடம்பின் சகல பாகங்களுக்கும், எல்லாவற்றிலும் ஈறுங் கடைசியான தூரபாகங்களுக்கும் சென்று சுழன்றால்மட்டும் நம் உயிர் காக்கப்பட்டிருக்கும். இரத்தச் சுழற்சி ஓய்ந்து இரத்தமானது இரத்தாசயத்தில் உறைந்து கட்டியாகுமானால் நமக்கு ஜீவன் போய் விடும். மிஷன் வேலையில் ஒரு நிமிஷமும் ஓய்வு இல்லாமல் எந்நேரமும் அதே முயற்சியாயிருக்கிற சபைகளில்மட்டும் ஞானவுயிர் நிலைபெற்றிருக்கும். மிஷன் கிரியைக்கு அசதியுள்ள சபைகள் செத்தேயிருக்கும் என்பதற்கு ஐயமேயில்லை.

இதுவரைச் சொன்னவற்றால், சபைகளை மேய்க்கிற குருமார் தங்கள் சபைகளை மிஷனுயிர் உள்ளவைகளாக்கி வைத்திருப்பது எவ்வளவு அவசியமென்று விளங்கும். சபையினுயிருக்கு அவர்களே உத்தரவாதிகளாகையால் அவர்கள் இதை அலக்ஷியம் செய்யலாகாது.

(மோட்டு வேத பண்டிதர்.)

## The Epistle to the Romans

**By the Rev. F. Goodwill**

## ரோமருக்கு எழுதின நிருபம்

'பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் உயிரற்ற வெறும் வார்த்தைகளாயிராமல், ஜீவவார்த்தைகளாயிருக்கின்றனவென்றும், புதிய ஏற்பாடு முழுவதிலும் சிரேஷ்ட ஆகமம் ரோமர் நிருபமே என்றும், கலப்பற்ற சுத்த சுவிசேஷம் இதிலடங்கியிருக்கிறது' என்றும் லூதர் ஐயர் சொல்லியிருக்கிறார்.

பவுலினால் எழுதப்பட்டனவென்று யாவரும் ஒத்துக்கொள்ளுகிற நான்கு நிருபங்களில் [1] இதொன்று. பவுல் எழுதின நிருபங்களை ஒன்றாய்த் திரட்டின காலமுதல் இந்நிருபம் பவுலால் எழுதப்பட்ட நிருபமாகத் திருச்சபை ஒத்துக்கொள்ளுகிறது. புதியேற்பாட்டிலுள்ள

[1] அதாவது: 1, 2 கொரிந்தியர், கலாத்தியர், ரோமர் என்பவைகளே.

பிந்தின ஆகமங்களை எழுதினவர்களும், பூர்வ கிறிஸ்தவ கிரந்தகர்த்தாக்களுமானவர்கள் புதியேற்பாட்டிலுள்ள மற்ற ஆகமங்களிலுள்ள வசனங்களை எடுத்து உபயோகிப்பதைப்பார்க்கிலும் இந்த நிருபத்திலுள்ள வசனங்களை வெகு சாதாரணமாய் உபயோகிக்கிறார்கள். கி. பி. 91–100-வரை ரோமை அத்தியட்சராகிய கிளெமெந்து, கி. பி. 78–107-வரை அந்தியோகியாவுக்குப் பிரதம குருவாகிய இக்னேஷியஸ், கி. பி. 166-ம் வருஷத்தில் மரணமடைந்த சிமர்ணாவின் அத்தியட்சராகிய போலிகார்ப், கி. பி. 150-ம் வருஷத்தில் இரத்தச்சாட்சியாய் மாண்ட ஜஸ்டின் மாட்டர் முதலான பூர்வ சபைத்தலைவர் இதிலடங்கிய வார்த்தைகளை ஒப்பனையாக எடுத்து உபயோகிப்பதினால், இந்த நிருபத்தின் பூர்வீகத்துக்கும் மேன்மைக்கும் சொல்வன்மைக்கும் ஏற்ற சாட்சிகளாயிருக்கிறார்கள்.

புற அத்தாட்சிகள் யாவற்றிலும் இந்நிருபத்திலுள்ள அகச்சாட்சி நமது புத்தியில் பதியத்தக்கதாகவும் மிக அருமையானதாகவுமிருக்கிறது. இது பவுலின் ஜீவிய சரித்திரத்துக்கும் பலவித உபந்நியாசங்களில் அவன் போதிக்கிற கொள்கைக்கும் ஒத்ததாயிருக்கிறது. நாம் இதை வாசிக்கும்போது இலேசாய்க் கிரகிக்கக்கூடாத பல அபிப்பிராயங்களுண்டு. ஆகிலும் இந்த நிருபத்தை அறிந்துகொள்வதின் கஷ்டம் ஆக்கியோனுடைய பாண்டியத்துவத்தின் குறைவினாலாகிலும், அஜாக்கிரதையாய் எழுதுவதினாலாகிலுமுண்டாகாமல், தான் எழுதப் பிரயாசப்படுகிற பொருளின் ஆழ்ந்த கருத்தும் உயர்ந்த மேன்மையுமே இதற்குக் காரணம். தேவனுடைய கிருபையாலும் வரப்பிரசாதத்தினாலும் இவன் பரம காரியங்களைக் கண்டிருக்கிறான். ஆனாலும் மனுஷர் எண்ணங்களும் வார்த்தைகளும் அதின் மகிமையை விளக்காது. தான் ஸ்தாபித்துச் சந்தித்துவராத சபை ஒன்றுக்கு நிருபம் எழுதி, லத்தீன் பாஷைக்குத் தலைநகரியாகிய ரோமாபுரியில் வாசம்பண்ணுகிற ஜனங்களுக்குக் கிரேக்க பாஷையில் இந்நிருபம் எழுதுவது சற்று வியப்பான காரியந்தான். பவுல் தன் பிரசங்கத்தினால் குணப்பட்ட கிரேக்கரை ஓர் சபையாகச் சேர்த்துக் கிரேக்க பாஷையில் மற்ற நிருபங்களை எழுதியனுப்பினான்.

ரோமசபையார் என்ன ஜாதிக்காரர்.

பல ஜாதியார் ரோம சபையில் சேர்ந்திருந்தார்கள் என்பதை நுட்பமாய் இந்நிருபத்தை வாசிக்கிறதினால் கற்றறியலாம். பதினாறும் அதிகாரத்தைக் கவனமாய் வாசித்துப் பார்க்கையில் பவுல் தனக்கு அறிமுகமானவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். நிருபத்தில் வருகிற அவர்கள் பேரை நாம் கவனித்தால் சிலர் யூதரும், லத்தீன்



பாஷை பேசின சிலரும், கிரேக்க பாஷை பேசின சிலருமான புறஜாதியாரும் கலந்து இருந்தார்கள் என்று பார்க்கிறோம். இந்த நிருபத்தை வாங்கி வாசித்தவர்களில் அநேகர் இயேசுவானவரை விசுவாசித்த யூதர்களாய் இருந்தார்களென்று கீழே வரும் சில திருஷ்டாந்தங்கள் காட்டுகின்றன.

(a) யூதருடைய நியாயப்பிரமாணத்தின் பலனும், தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்துகொள்ளுதலும், மனுஷன் நீதிமானாக்கப்படுவதும் இந்நிருபத்திலடங்கிய முக்கிய பொருள்கள். இந்த விஷயங்களைப் பவுல் பழைய ஏற்பாட்டோடு சம்பந்தப்படுத்தி இவைகளின் மெய்யான உட்கருத்தை வெளிப்படுத்துகிறான். உதாரணமாக, ஆபிரகாமுங்கூடக் கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினாலே நீதிமானாக நிர்ணயிக்கப்பட்டான் என்பதாய் ரூபிக்கிறான். ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி ஆதாமின் பாவம் எவ்வளவு தூரம் எட்டி அதின் நாசக்கிரியையை நடப்பிக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமான தூரம் இயேசு மீட்பருடைய நீதிக்கிரியையானது சென்று ஜீவனாகிய பலனைத் தருகிறதாயிருக்கிறது.

(b) சில விடங்களில் பவுல் யூதரை நோக்கி 'நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம்' என்று சொல்லுவதினால், தான் யூதனாயிருக்கிறது போல தன் நிருபத்தை வாசிக்கிற அவர்களும் யூதர்களாயிருக்கிறார்கள் என்று காட்டுவதாகத் தோன்றும் (4. 1). இதுவரைக்கும் பிரமாணங்களை அநுசரித்து வந்தவர்களான யூதர்கள், கிறிஸ்துவின் மூலமாய் அப்பிரமாணங்களினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறான் (7. 1-6). 2. 16-23-வரையுள்ள சங்கதிகள் பவுல் ஒரு யூதனோடு சம்பாஷணை செய்கிறாற்போல் இருக்கின்றன. பவுல், யூதருக்கு அநேக சிலாக்கியம் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறான் (3. 2, 29). சபையில் அநேகம்பேர் யூதராயிராவிட்டால் அப்படி எழுதியிருக்கமாட்டான் என்று நினைக்கத்தகும். பதினான்காம் அதிகாரத்தில் யூதர் அதிக நுட்பமாகக் கைக்கொண்டுவந்த பெருநாட்களையும், அவர்கள் உணவுகளையும்பற்றி எழுதுகிறான். ஏனெனில் இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றி யூதரும் புறஜாதியாருமான கிறிஸ்தவர்களுக்குள் சச்சரவுகளும் பிரிவினைகளும் உண்டாகத்தக்க அபாயமிருந்தது. ஆதலால் இப்படி அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறான்.

பவுல் இந்த நிருபத்தை புறஜாதியாருக்கும் எழுதுகிறான். இந்த நிருபத்தில் தான் புறஜாதியாருக்குள் வேலைசெய்யும்படி அனுப்பப்பட்ட அப்போஸ்தலன் என்று சொல்லி, புறஜாதியாராகிய அவர்கள் தன் கண்காணிப்பில் இருப்பதாகக் காட்டுகிறான் (15. 15, 16, 31;

1. 6, 7, 14). பதினோராம் அதிகாரத்தில் புறஜாதியாரான அவர்களுடைய ‘சுபாவத்திற்கு விரோதமாய்’ நல்ல ஒலிவமரத்திலே ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நீண்ட தர்க்கத்தினால் காண்பித்து, 13-ம் வசனத்தில் புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன் என்பதாய்ச் சொல்லி அவர்களிடத்தில் பேசுகிற பாவனையை நாம் பார்க்கலாம். ஆகவே யூதர் புறஜாதியாரான இருதிறத்தாரும் இச்சபையில் சேர்ந்திருந்தார்கள் என்று சொல்லலாம். கிறிஸ்துமார்க்கம் பொதுவாய் யூதமார்க்கத்தை அநுசரித்துவந்த புறஜாதியாருக்குள் நிலைகொண்டபடியால் சுத்த யூதரைப்பார்க்கிலும் புறஜாதியார் இன்னும் அதிகமாய் இச்சபையில் சேர்ந்திருக்கலாம். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது முதலாவது ஒரு திறத்தாருக்கும் அப்புறம் இன்னோர் திறத்தாருக்கும் எழுதினாலும், அப்போஸ்தலனுக்கு ஜாதிபேதம் என்னும் எண்ணமானது கிஞ்சித்தேனும் இருந்ததில்லை என்பதைக் காணலாம். யூதனானாலும் புறஜாதியானானாலும் பிதாவாகிய தேவனுடைய சமூகத்தில் ஒன்றுதான்; வித்தியாசமே இல்லை; எல்லாரும் ஒன்றுபோல் அநீதியுள்ளவர்கள்; விசுவாசத்தினால் நீதிமான்களாகிறதும் ஒன்றுபோலத்தான் என்று காட்டுகிறான்.

சபையின் உற்பத்தி.

பெந்தெகோஸ்தே நாளில், நூற்றுக்கணக்கான பேர் கூடிய அத்திரள் கூட்டத்தில் வந்திருந்த எருசலேமில் சஞ்சரித்த ரோமாபுரியாரில் சிலர் பேதுருவினுடைய அந்த வல்லமையான பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் குத்துண்டு, குணப்பட்டுக் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். அவர்கள் சீக்கிரத்தில் எருசலேமைவிட்டும் அப்போஸ்தலரைவிட்டும் பிரிந்துபோக வேண்டியதாயிருந்தது. அவர்கள் அத்தருணத்தில் அடைந்த போதனை கொஞ்சமாயிருந்தபடியால், அவர்கள் ரோமையில் ஒன்றுசேர்ந்து சபையை ஸ்தாபித்திருப்பார்கள் என்று எண்ண இடமில்லை. பதினாறும் அதிகாரத்தைக் கவனிக்கையில் பவுலுக்கு அறிமுகமானவர்கள் அநேகம்பேர் ரோமையில் கூடி வந்திருந்தார்கள் என்று தோன்றுகிறது. பவுல் ஆசியாவிலுள்ள நாடுகளைச் சுற்றிவந்தபோது சில பட்டணங்களில் இவர்களைச் சந்தித்து அவர்களைக் குணப்படுத்திச் சபையில் ஒருவேளை சேர்த்திருக்கலாம் என்று சொல்ல ஏதுவுண்டு. அவர்களில் சிலர் தலைநகரிக்கு அலுவல் பார்க்கவும், சிலர் கல்விகற்கவும், வேறு சிலர் அந்நகரத்தைப் பார்த்துப் போகவும் வந்திருக்கலாம். இந்தியாவில் இக்காலத்தில் பிரயாணஞ் செய்வது சுளுவும் க்ஷேமமுமானதுபோல் அக்காலத்தில் ரோமை ராஜ்ஜியத்திலுமிருந்தது. பவுல் நெடுநாட்களாய்த் தீமதித்த விடங்க



ளாகிய எபேசு, கொரிந்து, அந்தியோகியா என்னும் பட்டணங்களிலிருந்து ராஜ்ஜிய முழுவதிலும் தரைமார்க்கமாயும் சமுத்திரமார்க்கமாயும் போக்குவரவு செய்வது சர்வ சாதாரணமாக விருந்தது. விசுவாசிகளான இந்தக் கிறிஸ்தவர்கள் பிரதான பட்டணத்தையடைந்து ஒருவரையொருவர் கண்டுபிடித்து மினவி ஒன்றாய்ச் சேர்ந்திருக்கையில் பெந்தெகோஸ்தே நாளில் குணப்பட்ட கிறிஸ்தவர்களும் அவர்களோடு சேர சபை உண்டானது. 16. 5, 13, 15-ம் வசனங்களைப் பார்க்கையில் கிறிஸ்தவர்கள் சிறு சிறு கும்பாய்க் கூடி, பற்பல வீடுகளில் ஆராதித்து, ஜெபக்கூட்டங்களை நடத்திவந்தார்கள். பவுல் இந்நிருபத்தை எழுதுவதற்குமுன் இவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடி பவுல் ஏற்படுத்தின மற்றச் சபைகளிலுள்ள ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் கையாடினதில்லை. இந்நிருபத்தை வாசித்து அறிந்தபின் ரோமாபுரியிலுள்ள ‘தேவப்பிரியரும் பரிசுத்தவான்களும்’ தனிக் கிறிஸ்தவர்களாயிராமல் உயிருள்ள சபையில் இணைக்கப்பட்டிருந்தார்கள்.

பேதுரு அப்போஸ்தலன் இந்தச் சபையை ஸ்தாபித்ததாகவும், 42-ம் வருஷம்முதல் 67-ம் வருஷம்வரை 25 வருஷம் அதற்கு அத்தியக்ஷராயிருந்ததாகவும் ரோமான் மார்க்கத்தில் பாரம்பரியமாகச் சொல்லியிருக்கிறது. இதைவிடப் பூர்வ பாரம்பரியம் ஒன்றுண்டு அதாவது, பேதுருவும் பவுலும் சேர்ந்து ரோம சபையை ஸ்தாபித்து இருபேரும் சரிசமமான குருக்களாயும், பெரியவர் சிறியவர் என்கிற பேதம் அற்றவர்களாயும் இருந்து ரோமாபுரியில்தான் இரத்தச்சாட்சிகளாய் மரித்தார்கள் என்பதே. இருவரும் அதை ஸ்தாபித்து இரத்தச்சாட்சிகளாய் மரித்தார்கள் என்கிற இந்தப் பாரம்பரியமானது பொதுவான சபையால் இரண்டாம் நூற்றாண்டில் நம்பப்பட்டு வந்தது. ஏதோ ஒருகாலத்தில் பேதுரு ரோமாபுரியைச் சந்தித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, விசுவாசத்தைத் திடப்படுத்தி அங்கே மரணமடைந்திருக்கலாம். மேலும் இந்நிருபம் முதல் அதிகாரம் ஆறும் வசனத்தையும் பதினைந்தாம் அதிகாரம் பதினைந்தாம், பதினாறும், இருபதாம் வசனங்களையும் பார்த்தால், இதற்குமுன் அவன் ரோமைக்குப்போய்ச் சபையை ஸ்தாபித்துக் குருத்தொழில் புரியவில்லை என்பதாய்த் தோன்றுகிறது.

(இன்னும் வரும்.)

# St. Paul

## பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி.)

பரி. பவுல் குணப்பட்டவுடனே தமது அப்போஸ்தல ஊழியத்தை ஆரம்பிக்கவில்லை. கலா. 1. 16–18-ல் சொல்லுகிறபடி அவர் முதல் முதல் அரபிதேசத்துக்குப்போய், மூன்று வருஷமளவும் தாம் கண்ட காட்சியைக்குறித்தும், அதின் உள்ளான கருத்தைக்குறித்தும் தியானம்பண்ணித் தம்முடைய வேலையைச் செய்வதற்குத் தம்மை ஆயத்தப்படுத்தினார்.

ஆகவே, அப். 9. 21–ம் வசனத்திற்கும் 22-ம் வசனத்திற்கும் நடுவிலே மூன்று வருஷகாலம் சென்றதென்று நாம் நினைக்கலாம். 20–ம் வாக்கியத்தில் சொல்லப்பட்ட அறிக்கைக்கும் 22–ம் வாக்கியத்தில் சொல்லப்பட்ட தர்க்கத்துக்கும் அதிக வித்தியாசமுண்டு. அதிலே பவுலானவர் குணப்பட்டவராக, இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கைசெய்கிறதைக் காண்கிறோம். இதிலேயோ இயேசு கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தைப்பற்றியும், அவர் செய்யும்படியாய் வந்த வேலையைப்பற்றியும் முழு கொள்கையுடையவராயும், அவைகளைக்குறித்துத் தர்க்கம் செய்யக்கூடியவராயும் இருப்பதைக் காண்கிறோம். கலாத்தியர் நிருபத்தில் சொல்லியிருக்கிறதை இதோடு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், அரபிதேசத்தைவிட்டுத் தமஸ்குவுக்குத் திரும்பிவந்தபோதே அவர் இவ்விதமாய்த் தர்க்கம்பண்ணியிருக்க வேண்டும் என்று நாம் சொல்லலாம்.

அவர் காட்டின வைராக்கியத்தினால் அங்கிருந்த யூதர்கள் சினங்கொண்டு அவரைக் கொலைசெய்யும்படியாகப் பிரயத்தனம் செய்தார்கள். அப். 9. 24, 25–லும் 2 கொரி. 11. 32, 33–லும் சொல்லிய வண்ணமாய் அவர் தப்பித்துக்கொண்டு எருசலேமுக்குப் போனார். அங்கே பர்னபாவால் சீஷர்களிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டு அங்கே அவர்களால் சேர்த்துக்கொள்ளப்பட்டார். பேதுருவையும், கர்த்தருடைய சகோதரனும், எருசலேமிலிருந்த சபைக்குத் தலைவருமாகிய யாக்கோபையும் தவிர அப்போஸ்தலரில் வேறொருவரையும் அவர் அக்காலத்தில் காணவில்லை (கலா. 1. 18, 19). எருசலேமிலே அவர் பதினைந்துநாள்மாத்திரம் தங்கியும், தமஸ்குவிலே செய்ததுபோல, அங்கேயும் அவர் தைரியமாய்ப் பிரசங்கித்து யூதர்களால் பிராணபாயத்திலிருந்தார். (அப். 9. 29–ல் சொல்லியிருக்கும்



‘கிரேக்கருடனே’ என்பது கிரேக்கு பாஷையைப் பேசின யூதர்களுடனே என்பது பொருள்.) ஆதலால் அவர் சீஷர்களால் அனுப்பப்பட்டுச் சிலிசியா நாட்டுக்குப் போனார் (அப். 9. 30; கலா. 1. 21).

அப். 9. 15, 16; 26. 16–18; கலா. 1. 15, 19-ஐப் பார்த்தால், அவர் குணப்பட்ட நாள் முதற்கொண்டு தாம் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாயிருக்கத் தெரிந்துகொள்ளப்பட்டதாக அறிந்தார் என்பதை நாம் காணலாம். அவர் முதலில் தமஸ்குவிலேயும் எருசலேமிலேயும் தம்முடைய இனத்தாராகிய யூதர்களுக்குப் பிரசங்கித்தாலும் அவர்கள் அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் நாம் காண்கிறோம். அதுவுமன்றி அப். 22. 17, 18-லே தாம் தேவாலயத்திலே ஓர் தரிசனத்தைக் கண்டதாகவும், அதினால் புறஜாதியாரிடத்தில் சுவிசேஷத்தைக் கூறும்படி தாம் மறுபடியும் ஏவப்பட்டதாகவும் சொல்லுகிறார். அந்தத் தரிசனத்தை, அவர் மேற்சொல்லிய பதினைந்து நாளாய் எருசலேமிலே இருக்கும்போது கண்டார் என்று நாம் நிச்சயிக்கலாம்.

அவர் சீஷர்களால் அனுப்பப்பட்டுச் சிலிசியாவிலுள்ள தர்சு என்னும் தம்முடைய ஜனன ஊருக்கு வந்து அங்கிருந்த புறஜாதியாருக்குப் பிரசங்கம்செய்து, தம்முடைய அப்போஸ்தல ஊழியத்தை ஆரம்பித்தார். அவ்விடத்திலே அவர் ஏழு வருஷகாலமாக வேலைசெய்தார் என்று, அப்போஸ்தலருடைய நடபடிகளிலும், அவர் எழுதிய நிருபங்களிலுமிருக்கிற விவரங்களைக்கொண்டு அறியலாம். மேலும், அப். 15. 23-ல் எருசலேமிலிருந்த சங்கத்தார் சீரியாவிலும் சிலிசியாவிலுமுள்ள சபைகளுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறதைப் பார்த்து, அவர் அத்தேசங்களிலே சபைகளை ஸ்தாபித்தார் என்றும் நாம் சொல்லலாம். அவ்விடங்களில் மற்ற அப்போஸ்தலர் அதற்குமுன் வேலை செய்யாததினால், அவரே அந்தப் புறங்களில் முதல் சுவிசேஷகன் என்றும் யூகிக்கலாம். அன்றியும் அவர் தனிமையாய் இந்த வேலை செய்ததினிமித்தம், வேலை செய்யவேண்டிய விதம் மற்றவர்களால் போதிக்கப்படாமல், அவர் பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்பட்டு வேலைசெய்தார் என்றும் நாம் சொல்லலாம்.

இதற்குள்ளே, வேறு சிலர் சீரியா என்னும் நாட்டுக்கு வந்து அதின் தலைநகரமாகிய அந்தியோகியாவிலே பிரசங்கம்பண்ணி சபை ஸ்தாபித்தார்கள். அதைப்பற்றி எருசலேமிலுள்ள சபை மூப்பர்கள் கேள்விப்பட்டு, பவுலை முதலாவதாக அவர்களிடம் அழைத்துக்கொண்டு வந்த பர்னபாவை (அப். 9. 27) அந்தச் சபைகளைப் பார்க்கும்படி அனுப்பினார்கள் (அப். 11. 22). அவர் அந்தியோகியாவுக்கு வந்து,

அங்கே செய்யவேண்டிய வேலை பெரிதென்று பார்த்துத் தமக்கு உதவியாகப் பவுலைத் தர்சுவிலிருந்து வரவழைத்தார் (11. 25). அந்தியோகியா பட்டணம் ரோம ராஜ்ஜியத்திலிருந்த விசேஷித்த பட்டணங்களில் மூன்றாம் பட்டணமாயிருந்தபடியால் அதிலுள்ள சபையும் விசேஷித்ததாயிருந்தது.

அங்கே ஒரு வருஷமாக அவர்கள் கூடி வேலை செய்துவந்தார்கள். அதின்பிறகு அப். 11. 29-லே சொல்லப்பட்ட தர்ம கொடையை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படி அவர்கள் இருவரும் நியமிக்கப்பட்டுப் போனார்கள். அப். 12-ம் அதிகாரத்தைப் பார்த்தால் பேதுரு சிறைச்சாலையினின்று தேவதூதனால் விடுதலை செய்யப்பட்ட காலத்தில் அவர்கள் எருசலேமிலே இருந்தார்கள் என்று சொல்லலாம். செய்யும்படியாக அவர்கள் போன வேலையைச் செய்துமுடித்து, திரும்பவும் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.

அப்போதே அவர்கள் ஓர் விசேஷித்த வேலை செய்வதற்குப் பரிசுத்த ஆவியினால் பிரிக்கப்பட்டார்கள் (அப். 13. 1-3). இப்படியாக, அவர்கள் அந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, முதல் சுவிசேஷ பிரயாணம்செய்யத் தலைப்பட்டார்கள்.

[மேற்சொல்லியவைகளுக்கு இசைவாக, அப். 9. 1-30; 11. 19-30; 12. 25; 13. 1-3; கலா. 1. 13-24-ஐ வாசிக்கவும்.]

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 73 ஜூன் 1912

# வேதியர் விளக்கு

## Missionary Work and the Church's Life

By the Rev. N. Devasagayam

### மிஷன்வேலை செய்யாத சபை செத்த சபை

உலகத்திற்கு ஜீவன் வரும்பொருட்டுக் கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுத்தார். அவர் நம்பொருட்டுத் தம் பிராணனைக் கொடுத்த அன்பை நம் உள்ளங்கள் ஆகிய கலன்களில் ஊற்றி இதை நீங்கள் உலகத்துக்குக் கொண்டுபோய்க் கொடுங்கள் என்கிறார். உயிர்ப்பிக்கிற அவருடைய அன்பை உலகெங்கும் கொண்டுபோக உயிர்ப்பிக்கப்பட்டவர்களுடைய உற்சாகமுள்ள ஊழியம் அவசியம். மடிகிறவர்களை மரணத்தின் வாய்க்குத் தப்புவித்து அவர்களைச் சதா ஜீவிகளாக்குகிற அவருடைய பிராணத்தியாக அன்பை உலகத்தவர்க்கு விளங்கவைத்து அவர்களை அவருக்குச் சம்பாதிக்க நம் முள்ளங்களில் அவருடைய உள்ளத்து இரக்கம் மூண்டெரியவேண்டும். அவருடைய இரட்சிப்பினால் களிகூருகிறோம் என்று சொல்லுகிற வெகுபேர் இருக்கிறார்கள். இருந்தும், அவர்களுடைய சொல்லுள் உண்மையுள்ள ஈடிருப்பதாய்த் தெரியவில்லை. அவ்வுள்ளீடிருக்குமாயின் அவர்கள் மடிகிற உலகத்தைப் பார்த்துச் சும்மா இருப்பார்களா? செத்தவர்களுக்கு ஜீவன் கொண்டுபோய் உதவுவதே அவர்களுடைய ஜீவிய இலக்காயிற்றே. அந்த இலக்குத் தவறிப் பிழைக்க அவர்களுக்கு மனம் வருமா? ஆகிலும், இப்படி இலக்குத் தவறிப் பிழைக்கிறதே இக்காலத்துச் சபைகளில் சர்வ சாதாரணம் எனப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன? அந்தந்தத் தனிக் கிறிஸ்தவனும் அந்தந்தத் தனிச் சபையும் இரட்சிக்கப்பட்ட நோக்கத்தை உணராமையே அதற்குக் காரணமாம். பிறரை இரட்சிப்பதற்கே அவனவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான். உலகத்தைக் கிறிஸ்துவின் அன்பால் இரட்சிப்பதற்கே திருச்சபை இரட்சிக்கப்பட்டிருக்கிறது. சாகிற உலகத்திற்கு ஜீவனைக் கொண்டுபோகாமல் இருக்கிற சபைகள் செத்தவைகளா உயிருள்ளவைகளா?

பூவுலகமெங்கும் சுவிசேஷ ஜீவஒளியை வீசுவிக்கிறது திருச்சபையின் இலக்கேயானால், அந்த இலக்குக்கு ஏற்ற திராணி அதற்கு உண்டா? ஒருவனைச் சக்திக்கு மிஞ்சினதைச் செய்யச்சொன்னால் செய்ய அவனாலாகுமா? ஆகாதே. அது மெய்தான். தற்காலத்துத் திருச்சபைக்கு இவ்வேலை சக்திக்கு மிஞ்சினதல்ல. முழு உலகத்தையும்விட்டு நம் இந்தியாவைப் பார்ப்போம். கிழக்கிந்தியா கம்பெனி நம் தேசத்தை ஆண்ட காலத்தில் வெகுகாலமாய்ச் சுவிசேஷ ஜீவதூது கொண்டுவருகிற மிஷனரிகள் இங்கே கால்வைக்க உத்தரவில்லை. இப்போதோ முழு இந்தியாவும் மிஷன்வேலைக்குத் திறந்திருக்கிறது. ஏறத்தாழ எண்பது வருஷங்களுக்குமுன் கப்பல்பயணமும் கரைப் பயணமும் காலநீட்சியும் ஜீவஅபாயமும் உள்ளதாயிருந்தது. இப்பொழுது நீராவியும், மின்சாரமும் இடத்துக்கிடம் முன்னிருந்த தூரத்தை மூன்றிலிரண்டு பங்கு குறைத்துவிட்டது. சுவிசேஷம் உள்நுழையாமல் தடைசெய்த காரணங்கள் முன்போல இப்போது அவ்வளவு உறுதியாய் இருக்கிறதில்லை. ஐரோப்பிய கல்விகளும் சாஸ்திரங்களும் அபிவிர்த்தி செய்யப்படுகிற இக்காலத்தில் நம் தேசத்து மார்க்கங்களின் ஆபாசங்கள் வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறபடியால் கல்விமான்களுக்கு அவைகள்மேல் முந்தின அபிமானமில்லை. இல்லாவிட்டாலும், அம்மார்க்கங்களை நிலைநிறுத்தக் கல்விமான்கள் முன்னிலும் அதிகமாய் முயற்சிசெய்கிறது மெய்தான். அது எதினிமித்தம்? மார்க்க அபிமானத்தினிமித்தமல்ல, தேச அபிமானத்தினிமித்தம். கிறிஸ்துவின் வெளிச்சம் ஜோதியாய்ப் பிரகாசிக்கும்போது அது சரியான தேசாபிமானமல்ல என்பது வெளிப்படும். நம் தேசத்துச் செல்வாக்கர்கள் வித்தையின்பொருட்டுப் பிறதேசங்களுக்குப் போக்குவரத்துச்செய்ய இப்போது தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஜாதி என்னும் கொடிய தீமையைக் களைய முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஜாதித்தீமை விழுந்தால், சுவிசேஷம் தலையெடுத்து ஓங்கத் தடையிராது. இத்தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் பலங்கொண்டு விர்த்தியாகி இருக்கிற இடங்களில் ஜனங்கள் கிறிஸ்தவர்களுடைய புறம்பும் உள்ளுமான ஜீவியத்தையும் இதர சமயத்தவர்களுடைய ஜீவியத்தையும் சீர்தூக்கிப் பார்க்கக்கூடியதாயிருக்கிறது. பெரும்பாலும் கிறிஸ்துமார்க்கம் இகத்துக்கும் பரத்துக்கும் போதுமான வல்லமையுள்ள ஜீவியத்தை உண்டாக்க வல்லது என்று நம் தேசத்தில் இப்போது யாவருக்கும் தெரியும். அதுவுந் தவிர, நம் தேசத்துச் சுதேச கிறிஸ்தவர்கள் முற்காலத்தில்போலப் பிறதேசத்துக் கிறிஸ்தவர்களுடைய உதவியினால் பிழைக்கிற எடுப்பார்கைப் பாலக நிலைமையை மேலும்மேலும் விட்டுச் சுய ஆதரிப்புச்



செய்துகொள்ளுகிற நிலைமைக்கு வருகின்றார்கள். அவர்களுடைய ஞானஜீவ நிலைமையும் முன்னிலும் இப்போது அதிக மேம்பாடு உடையதென்றே சொல்லவேண்டும். அவர்களைத் தூண்டி முன் நடக்கிற சிறந்த தலைவர்கள் கிடைத்தால் நம் தேசம் சீக்கிரத்திலேயே கிறிஸ்துவின் அன்பின் வல்லமைக்கு வசப்படும். சுவிசேஷ வேலையை ஊக்கமாய் நடப்பிக்கிற மிஷனரிகளின் தொகையும் இந்திய குருக்கள், சுவிசேஷகர்களின் தொகையும் முன்னிலும் பலமடங்கு இப்போது அதிகப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துவின் பிராணத்தியாக அன்பை வாய்ச்சொல்லாலும் ஜீவிய சாதனையாலு மாத்திரமல்ல, வேறு அநேக விதங்களாயும் இத்தேசத்தார்க்கு உணர்த்துகிற வழிகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட வழிகளுள், வைத்திய மிஷன்கள் நம் தேசத்திலும் வேறு அநேக தேசங்களில்போல மிகச் சிறந்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுகின்றன. வீடுகள்தோறும் பெண்பாலாருக்கு உபதேசிக்கிற பெண்பாலாரான கிறிஸ்தவ முயற்சிக்காரர்கள் தொகை மேலும்மேலும் அதிகப்பட்டு வருகின்றது. கிறிஸ்தவ வேத புஸ்தகத்தையும், வேத அறிவைத் தெளிவாய் யாவருக்கும் விளங்கவைக்கும் சிறு புஸ்தகங்களையும் ஆயிரக்கணக்காய்ப் பதிப்பித்து வெளிப்படுத்துகிற அச்சியந்திரச் சாலைகளும் முன்னிலும் இப்போது பெருமிதமே. இதுகாறும் சொன்னவற்றால், இத்தேசத்தில் சுவிசேஷ ஜீவஒளியைச் சகல ஜாதிகளுக்கும் சகல சீமைகளிலும் வீசுவிக்கப் பலமுள்ள சாதனங்கள் ஏற்பட்டிருக்கிறதை யறியலாம். ஆகவே, நம் காலத்துத் திருச்சபை சுவிசேஷ பிரபலியம்செய்யப் போதுமான சாதனங்கள் கிடைக்கவில்லையே என்று சொல்ல ஏதுவில்லை. அத்தனை சாதனங்களைப் பெற்றிராத அப்போஸ்தலர் காலத்துத் திருச்சபை வேறு எந்தக் காலத்துத் திருச்சபையும் செய்யாதவண்ணம் மிகப் பரவி மிக ஆழ்ந்து, மிக வல்லமையுள்ள வேலை செய்திருக்கிறதைப் பார்க்கிறோம். அவர்களை ஆட்கொண்டு நடத்தின திரு ஆவியானவரின் வல்லமை அக்காலத்தோடே ஒழியாமல் திருச்சபைக்கு எக்காலத்துக்கும் கிடைத்திருக்கிறது நமக்குத் தெரியும். அக்காலத்து மனிதருள்ளங்களை உருக்கி வசப்படுத்தின கிறிஸ்துவின் பிராணத்தியாக அன்பு அப்போதுபோலவே இப்போதும் நெஞ்சுருக்க வல்லமையுள்ளதே. அக்கால உலகத்தை ஜெயித்துக் கிறிஸ்துவுக்கு ஆட்படுத்தின பலமே இக்கால உலகத்தையும் ஜெயித்து ஆட்படுத்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு உண்டாயிருக்கிறது. அக்காலத்தார் தாம் கிறிஸ்துவால் அடைந்த ஜீவ மகத்துவத்திற்குச் சாட்சிகளாய் உலகத்தின் முன் நின்றதுபோலவே இக்காலத்தாரும் நிற்கலாம். அக்காலத்துத் திரு

வடியார் சத்தியத்தினிமித்தம் படாத பாடுகளையெல்லாம் பட்டவாறே இக்காலத்துத் திருவடியாரும் படலாம். அந்நாளில் ஆடவரும் பெண்டிரும் பாலர்முதல் விருத்தர்வரையும் கிறிஸ்துவுக்குத் திருத்தொண்டு செய்வதற்குப் பற்றி மூண்டு எரிகிற அன்புவைராக்கியத்துடன் தம்மைத் தத்தம்செய்தவண்ணம் இந்நாளில் கிறிஸ்தவ ஆடவரும் பெண்டிரும் தம்மைத் தத்தம்செய்யத் தடையில்லை. ஆயினும், நம் காலத்துத் திருச்சபையில் ஆங்காங்கு மேய்ப்பராயுள்ளவர்கள் தம் பொறுப்பை உணராமல், உலகில் மயங்கிப் பரலோக சிந்தை குறுகிப்போயிருப்பதினால் ஜீவசெய்தி மடிகிற மாந்தருக்கு அகப்படாமலிருக்கிறது. இது பரிதாபம் பரிதாபமே!

மேய்ப்பரை மாத்திரமல்ல மந்தைகளையும் இக்காலத்தில் தேவ ஜீவனை ஒடுக்குகிற ஞானவியாதி பிடித்திருக்கிறது. உலகசிந்தையும் ஜெபத்தாழ்வும் அந்த வியாதிக்கு முக்கிய காரணங்களாக வெளிப்படுகின்றன. கிறிஸ்துவும் திருவேதமும் பலமுறை வற்புறுத்துகிற உண்மை அவருடைய இராச்சியம் இவ்வுலகத்தது அல்ல, உலகசிந்தை தேவனுடைய காரியங்களை அறியச் சக்தியற்றது என்பதும் உலகத்தோடு உறவை ஒழித்துப் பரலோகத்திலிருந்து வருகிற தேவ ஆவியானவருக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னை முழுமையும் ஒப்புவித்துப் பிழைக்கவேண்டும் என்பதுமே. இது இக்காலத்துச் சபையில் மங்கிப்போயிற்று. மாமிசத்துக்கு விருப்பமான இரைபோடுவதற்குக் கிறிஸ்தவர்களுக்கு இக்காலத்தில் வேண்டிய பணம் இருக்கும். மடிகிறவர்களுக்கு ஜீவதூது அனுப்பப் பணமிராது; இருந்தாலும், பெரும்பாலும் மனமில்லாமல் கொடுக்கப்படும். இதினால், கிறிஸ்தவர்களுடைய மனது உலகத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறது தெரியும். அப்படி உலகமயலில் அகப்பட்டவர்களை விடுதலைசெய்ய உலகமயலை அறத்தொலைத்துப் பிழைத்த கிறிஸ்து ஒருவரால்மாத்திரம் ஆகும். அவர் தம் ஆவியை நம் காலத்துச் சபைகள்மீது பெருமிதமாய்ப் பொழிந்துத் தமக்குள்ள உலகமயலை அறுக்கும் வல்லமையைக் கிறிஸ்தவர்களுக்கு ஊட்டினால்மாத்திரம் அவர்கள் மயக்கம் தெளிந்து, செத்த உலகத்துக்கு ஜீவன் கொண்டுபோகப் பரிதாபத்துடன் தீவிரிப்பார்கள். மேலும் தற்காலத்தில், ஜெபத்துக்கு எல்லாம் தரத்தக்க வல்லமை இருக்கிறதுதென்று கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது. கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்து, ஜெபித்தபடி சகலத்தையும் தேவனிடத்தில் வாங்கிக்கொள்ளலாம் என்பதை அறியாமல் இக்காலத்துச் சபைகள் சுயவல்லமை, சுயசாதனங்கள், சுயபுத்திக்கூர்மை இவை முதலிய விதங்களால் உலகத்தில் மிஷன்வேலை செய்கிறதினால் சித்திபெறாமல் கெடுகின்றன.



# The Epistle to the Romans

**By the Rev. F. Goodwill**

## ரோமருக்கு எழுதின நிருபம்

(தொடர்ச்சி)

### நிருபம் எழுதப்பட்ட நோக்கமும் சமயமும்

(a) இராஜதானி பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்கிற தீராவாஞ்சை பவுலுக்கு வெகுகாலமாக விருந்தது. ஆதலால் இந்த வாஞ்சையை ரோமை பட்டணத்தாருக்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் திரும்பத் திரும்பத் தெரிவிக்கிறான் (அப். 19. 21; ரோ. 1. 13; அதி. 15. 22, 23). தான் அங்கே போகிறதற்குச் சில வருஷமாகத் தடையுண்டானதினால் இப்போது தன் நிருபத்தின்மூலமாய் அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும்படிக்கும், தன் வருகைக்கு அவர்களை ஆயத்தம்பண்ணும்படிக்கும் நிருபத்தை எழுதியனுப்புகிறான். (அதி. 1. 11.)

(b) பதினாறாம் அதிகாரத்தில் தான் வாழ்த்துகிற தன் சிநேகிதரான சிலபேர் புதுக் கிறிஸ்தவர்களாக அப்போஸ்தலனுடைய போதனையின்றி இருந்ததினால் அவர்களுக்குச் சகாயமாக இதை எழுதவது தகுதியாய் இருந்தது.

(c) அக்காலத்தில் பவுல் மக்கெதோனியாவில் சேகரித்த காணிக்கையை எருசலேமுக்குக் கொண்டுபோக வேண்டியதாயிருந்தது. யூதர் அவனைப் பகைத்து, கொலைசெய்யப் பிரயாசப்படுவார்கள் என்று தனக்குள்ளே அறிந்துகொண்டு, இனி ரோமாபுரிக்குப் போகவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் சமயம் வாய்க்காது என்று பயந்து இந்த முக்கிய பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதி, இராஜநகரிக்குப் போக எத்தனமாயிருந்த பெபேயாள் வசம் கொடுத்து அனுப்பினான்.

### நிருபம் எழுதப்பட்ட இடமும் காலமும்.

பவுல் இந்த நிருபத்தை எழுதினபோது கொரிந்து பட்டணத்தில் வசித்துக்கொண்டிருந்தான். இப்பட்டணத்திலிருந்தே இந்நிருபத்தை எழுதினான் என்று ரூபிக்கிற சில வசனங்களைச் சுருக்கமாய்ப் பார்க்கலாம்.

(a) கொரிந்து பட்டணத்தில் தான் ஞானஸ்நானங்கொடுத்த (1 கொரி. 1. 14) காயுவின் வீட்டில் தங்கியிருந்தான் (அதி. 16. 23).

(*b*) கொரிந்து பட்டணத்துக்கருகாமையிலிருந்த கப்பல்துறையாகிய கெங்கிரேயா ஊரிலிருந்து, அச்சபைச்கு ஊழியக்காரியாகிய பெபேயாள் இந்த நிருபத்தைக் கொண்டுபோகப் புறப்படுகிறாள்.

(*c*) தீமோத்தேயுவும் சொசிபத்தரும் கொரிந்து பட்டணத்தில் பவுலோடு இருந்தார்கள். பவுல் நிருபத்தை எழுதுகிற சமயத்திலும் அங்கேயிருந்து ரோம சபையாருக்கு வாழ்த்துதல் அனுப்புகிறார்கள். (அப். 20. 4.)

(*d*) கி. பி. 58 ௵ வசந்தகாலத்தில் கொரிந்துவில் பவுல் தாமதித்திருந்த மூன்றுமாசகாலம் முடிவாகும் தறுவாயில் மக்கெதோனியா சபைகளிலுள்ள புறஜாதியார் கொடுத்த காணிக்கைகளை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படி பயணப்படவிருந்த காலத்தில் இந்நிருபம் எழுதப்பட்டதென்கலாம் (அதி. 15. 22-26; அப். 20. 1-3; அப். 24. 17-19). இந்த வசனங்களை ஒத்துப் பார்க்கவும். (1 கொரி. 16. 1-4; 2 கொரி. 8. 1-4).

யூதருடைய தர்க்கங்கள் நின்றுபோய் கலாத்தியர் நிருபம் எழுதப்பட்டபின் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கலாம். ஆதலால் இந்த நிருபத்தில் சுத்த சுவிசேஷத்தை விவரித்தெழுதும் சிலாக்கியமும் சகவாசமும் பவுலுக்குக் கிடைத்தது.

பொருளடக்கம்.

இராஜதானி பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டதினால் மனிதன் நீதிமானாக்கப்படவேண்டும் என்கிற சுவிசேஷ ஒழுங்கின் நீதி அதில் கண்டிருக்கிறது. முதல் ஐந்து அதிகாரங்களும் இந்த அபிப்பிராயத்தைத்தான் விவரிக்கின்றன. நிருபத்திலுள்ள போதனையின் சாரம் இன்னதென்று சொல்ல பலர் முயன்றிருந்தாலும், அவர்கள் கொண்ட தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று பேதித்து வெவ்வேறாய் இருக்கின்றன. சிலர் ஒரு போதனையையும், வேறு சிலர் இன்னொரு போதனையையும் முக்கியப்படுத்தி நிருபத்திலடங்கிய மற்றப் போதனைகளை அவைகளுக்குத் தாழ்வுப்படுத்துகிறார்கள். உதாரணமாக, 9-ம் 10-ம் 11-ம் அதிகாரங்களில் அடங்கிய போதனைகளே நிருபத்தின் சாரம் என்று ஒரு கூட்டத்தார் நிர்ணயிக்கிறார்கள். இந்தத் தீர்மானம் சரியல்லவென்று நம்பி முதலாம் அதிகாரம்முதல் ஐந்தாம் அதிகாரம்வரை சொல்லப்பட்டிருக்கிற பொருள்கள் முக்கியமான போதனைகளென்று தற்கால வியாக்கியானிகளில் பெரும்பாலார் எண்ணுகிறார்கள். இந்த அதிகாரங்களில் மனுஷர் எல்லாரும் தங்கள் மனச்சாட்சியிலுண்டாகும் தீர்மானத்துக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும் உள்ளானவர்கள் என்றும், மனுஷர் யாவ



ரும் பாவிகள் என்றும், அவர்கள் செய்யும் புண்ணியக்கிரியைகள் அபத்தமென்றும் பவுல் காட்டுகிறான். ஆனால் தேவனுடைய அன்பினாலும் நீதியினாலும் கிறிஸ்துவின் அரிய கிரியைகளின்மூலமாய் மனுஷருக்கு மீட்பு உண்டாகிறதென்றும் போதிக்கிறான். ஆறும் ஏழாம் எட்டாம் அதிகாரங்கள் முந்தின அதிகாரங்களில் அடங்கிய போதனைகளை அஸ்திபாரமாகக் கொண்டு, மனுஷர் நியாயமாய் நீதிமான்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது மாத்திரமல்ல, பரிசுத்தமாக்கப்பட்டுமிருக்கிறார்கள். கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு அவருடைய பரிசுத்த ஜீவியத்தில் பங்கு பெறுகிறார்கள். இவைகளினால் அவர்களுடைய நடத்தையும் மாறுதலடைகிறதென்று காட்டுகின்றன. 9-ம் 10-ம் 11-ம் அதிகாரங்கள் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ச் செய்கிற இந்த வேலையைத் தீர்க்கதரிசிகளைக்கொண்டு செய்த வேலையுடன் சம்பந்தப்படுத்துகின்றன. அநேக நூற்றாண்டுகளாய்த் தேவன் யூதர்களிடத்தில் செய்த வேலை விருதாவாய்ப் போகும்படி அவர்களைப் புறக்கணித்துவிடவில்லை. எப்படியெனில், யாவருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதும் இயேசு மேசியா அளிக்கிறதுமான ஆசீர்வாதத்தில் அவர்களுக்கும் பங்குண்டு என்று காட்டுகின்றன. 12-ம் அதிகாரம்முதல் 16-ம் அதிகாரம்வரையுள்ள அதிகாரங்களில் சன்மார்க்க நடத்தையையடுத்த பல புத்திமதிகளும் தனித்தனி வாழ்த்துதல்களும் அடங்கியிருக்கின்றன.

நிருபத்திலுள்ள விசேஷித்த பொருளை நாம் சில வார்த்தைகளில் சுருக்கிச் சொல்லவேண்டுமானால், மூன்றாம் அதிகாரம் 21—25-ம் வசனங்களே இந்த நிருபத்தின் சுருக்கமும் சாரமுமாய் இருக்கின்றன என்று நிச்சயிக்கலாம். இந்த நிருபத்தின் உபதேசத்தைப் பூரணமாகக் கீழே வரும் சுருக்க பொருள் அட்டவணையில் பார்க்கலாம்.

## பொருள் அட்டவணை

I. முகவுரை.

(1) வாழ்த்துதல். 1. 1-7.
(2) பவுலின் விருப்பம். 1. 8-17.

II. மனுஷருடைய பாவஸ்திதி.

(1) புறஜாதியானும் அவன் பாவமும்; விக்கிரகாராதனையும் காமமும்; தேவகோபாக்கினை. 1. 18—2. 16.

(2) யூதனும் பிரமாணத்தை மீறி, கோபாக்கினைக்குள்ளானவன். 2. 17—3. 20.

III. மனுஷன் இயேசுவின்மூலமாய் நீதிமானாக்கப்படுதல்.

(1) கிரியைகளாலல்ல இயேசுவின் புண்ணியத்தினாலேயே நீதி உண்டாகிறது. 3. 21-31.

(2) ஆபிரகாமும் கிரியைகளாலல்ல, விசுவாசத்தினாலே நீதிமானானான். 4. 1-25.

(3) விசுவாசத்தினாலுண்டாகிற நீதியின் சந்தோஷம், நம்பிக்கை, பரிபூரணம். 5. 1-21.

IV. விசுவாசிக்கிறவன் பரிசுத்தத்தையுமடைகிறான்.

(1) பாவத்துக்குச் சாகிறான். 6. 1-23; பிரமாணத்தினின்று விடுதலையடைகிறான். 7. 1-25.

(2) கிறிஸ்துவானவரோடு இணைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டுவருகிறான். 8. 1-25.

(3) நம்பிக்கையோடு எல்லா உபத்திரவங்களையும் சகிக்கிறான். 8. 26-39

V. இஸ்ரவேலரின் அவிசுவாசம்.

(1) பிரமாணத்தின் கிரியைகளால் நீதியைத் தேடுகிற அவர்களைப் புறக்கணிக்கும்படி, சிருஷ்டி கர்த்தாவுக்கு அதிகாரமும் சுயாதீனமுமிருக்கிறது. 9. 1—10. 4.

(2) விசுவாசத்தினால் உண்டாகிற நீதி எல்லாருக்கும் சமீபமாயிருக்கிறது. 10. 5-13.

(3) இந்த நீதியே இஸ்ரவேலருக்குப் பிரசங்கிக்கப்பட்டது. 10. 14-21.

(4) அவிசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லை. 11. 1-10.

(5) அவிசுவாசம் சொற்பக்காலத்துக்குரியது. 11. 11-32.

(6) தேவகிருபைக்காகவும் வல்லமைக்காகவும் ஸ்தோத்திரம். 11. 33-36.

VI. கிறிஸ்தவனுடைய நடத்தையைப்பற்றிய போதனை.

(1) வெவ்வேறு புத்திமதிகள். 12. 1-21.

(2) கிறிஸ்தவனும் சர்க்காரும். 13. 1-7. சில எச்சரிப்புக்கள். 13. 8-14.

(3) பொறுமை; பலவானும் பலவீனனும். 14. 1—15. 7.

(4) யூதனும் புறஜாதியானும். 15. 8-13



VII. முடிவுரை.

(1) பவுல் தன் சொந்தக் காரியத்தைப்பற்றியும், ரோமாபுரிக்குப் போகிறதைப்பற்றியும். 15. 14-33.

(2) வாழ்த்துதல். 16. 1-16.

(3) எச்சரிப்பு. 16. 17-21.

(4) ஸ்தோத்திரமும், ஆசீர்வாதமும். 16. 24-27.

## St. Paul

### பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி)

அப்போஸ்தலருடைய நடபடிகளின் புஸ்தகத்தை நாம் இரண்டு பாகமாய்ப் பிரிக்கலாம். முதல் 12 அதிகாரங்களில் பரி. பேதுரு செய்த வேலையைக்குறித்து அதிகமாய்ச் சொல்லப்படுகிறது. 13-ம் அதிகாரம்தொடங்கி விசேஷமாய்ப் பரி. பவுலைக்குறித்தும் அவர் செய்த வேலையைக்குறித்தும் சொல்லப்படுகிறது. 13-ம் 14-ம் அதிகாரங்களிலே முதல் சுவிசேஷ பிரயாணத்தின் விவரங்கள் எழுதியிருக்கிறது. இந்தப் பிரயாணம் கிறிஸ்தவ சபைக்கு அதிக விசேஷித்ததாய் இருந்தது. அதற்குமுந்தி அந்தச் சபை அநேகமாய் யூதர்களுக்குள்ளே பரவியிருந்தது. சில பேர் புறஜாதியாருக்குப் பிரசங்கித்திருந்தாலும் கிறிஸ்தவ சபையானது ஒழுங்குள்ள வேலையை ஒரு சபையாக அவர்களுக்குள் இன்னும் செய்யவில்லை. இப்போதோ பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு, இந்த வேலை செய்வதற்கென்றே பரி. பவுலையும் பர்னபாவையும் நியமித்து அவர்களை புறஜாதியாரிடத்தில் அனுப்பினார்கள். அந்நாள் முதற்கொண்டு சுவிசேஷம் ரோமர் ஆண்ட தேசங்களில் பிரசங்கிக்கப்பட்டு, பரவி, ரோம ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியும்கூடக் கிறிஸ்தவன் ஆகும்மட்டும் சித்திபெற்றது.

அவர்கள் பர்னபாவின் இனத்தானாகிய யோவான் என்னப்பட்ட மாற்கு என்பவனை உதவிக்காரனாய்த் தங்களோடு வரவழைத்து, பர்னபாவின் ஜனனதீவாகிய சீப்புருவுக்கு வந்து அத்தீவின் கிழண்டையிலிருக்கிற சாலமி என்னும் துறைமுதல், மேற்குத்திசை நோக்கிப் பிரயாணம்பண்ணி, எங்கெங்கே யூதருடைய ஜெப ஆலயங்கள் இருந்தனவோ அங்கங்கே யெல்லாம் பிரசங்கம்செய்தார்கள். பாப்போ பட்டணத்தில் ரோம தேசாதிபதியாகிய செர்கியு பவுல் என்பவனைக்

குணப்படுத்தினார்கள். அங்கேயும் மாயவித்தைக்காரனாகிய எலிமாவைச் சந்தித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் பரி. பவுல் தமக்கிருந்த தேவவல்லமையைக் காட்டித் தம்மோடிருந்தவர்களில் தலைவனாக விளங்கினார். அந்நாள் முதற்கொண்டு அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதிய பரி. லூக்கா அவரைப் பவுலாக அழைத்து, அவரைத் தலைவராக எழுதுகிறார். இதற்குமுன் பவுலைவிடப் பர்னபா வயது சென்றவராயிருந்தபடியால் பர்னபாவும் சவுலும் என்று சொல்லப்பட்டது. இதற்குப்பின்போ, பவுலும் பர்னபாவும் என்றும், பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் (13-ம் வசனம்) என்றும் சொல்லப்படுகிறது.

அதின்பிறகு அவர்கள் கப்பல் ஏறி பம்பிலியாதேசத்தைச் சேர்ந்தார்கள். அவர்கள் பெர்கே என்னும் ஊருக்கு வந்து அத்தேசத்தில் தாங்கள் செய்யவேண்டிய பிரயாணத்தின் விவரங்களை ஆலோசிக்கையில், யோவான் என்னப்பட்ட மாற்கு உள்தேசத்துக்குப் போக மனமில்லாமல் அவர்களைவிட்டுப் பிரிந்து, எருசலேமுக்குப் போனார். அவர் ஏன் அவர்களை இவ்விதமாய் விட்டார் என்று பரிஷ்காரமாய்த் தோன்றுகிறதில்லை. அவன் தாயார் எருசலேமிலே கொஞ்சம் மேலான ஸ்திதியிலே இருந்ததாக அப். 12. 11-17 ஐக்கொண்டு அறிவோம். [சபையார் எல்லாரும் கூடிவரும்படியான ஓர் வீட்டிலே வாசம்செய்ததாலும், பேதுரு உடனே அந்த வீட்டுக்குப் போனதினாலும், அதிலுள்ளவர்கள் கிறிஸ்தவர்களுள் முக்கியமானவர்களாயிருந்திருக்கவேண்டும்: கதவைத் திறக்கும்படி ஓர் பெண்ணை வைக்கும்படியான ஸ்திதியிலே இருந்தார்கள்.] ஆகவே அவன் இப்பேர்ப்பட்ட வேலை முந்திச் செய்யாதவனாயிருந்து, ஒருவேளை அதின் கஷ்டத்தைப் பார்த்துப் பயந்திருக்கலாம், அல்லது ஒருவேளை, தன் இனத்தானாகிய பர்னபா இனித் தலைவனாயிராதிருப்பதைப் பார்த்து அதினிமித்தம் அவன் போகாமலிருக்கலாம். எப்படியோ அவன் அவர்களை மாத்திரமல்ல, ஊழியத்தையும் விட்டான் என்று பவுல் எண்ணினார் (15. 38). மாற்கு போனபிற்பாடு, அவர்கள் உடனே பெர்கேயை விட்டு 100 மைலிலுள்ள மலைகள்வழியாய் அதி கஷ்டமான ஓர் பிரயாணத்தைச் செய்து பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அந்தப் பட்டணம் கலாத்தியா நாட்டிலே விசேஷித்த பட்டணமாயிருந்தது. அத்தேசத்திலே ரோமருக்கு முக்கிய ஸ்தானமாயிருந்ததுமல்லாமல் யூதர்கள் அங்கே ஓர் தேவாலயத்தைக் கட்டியிருந்ததினால் அவர்கள் அநேகராயிருந்திருக்கவேண்டும். அதற்கு ஓய்வுநாளிலே பவுலும் பர்னபாவும் போனார்கள். ஜெப ஆலயத் தலைவர்கள், இவர்கள் சாதாரணப் பிரயாணக்காரரல்லவென்று கண்டு



அவர்களை ஜனங்களிடத்தில் பேசும்படி கேட்டார்கள். அதற்குப் பவுல் இணங்கிப் பிரசங்கம்செய்தார். (13. 16-41.)

நாம் அந்தப் பிரசங்கத்தைப் பார்த்தால் அவர் தமஸ்குவிலேயும் எருசலேமிலேயும் இப்படிப் பிரசங்கித்தார் என்பதை அறியலாம். முதலில் அவர்கள் அவர் பேசியதைப் பொறுமையாய்க் கேட்டார்கள். ஆனாலும் புறஜாதியார் இந்தச் சுவிசேஷத்தை ஆவலாய்க் கேட்டு அதற்கு இசைந்தார்கள் என்பதை யூதர்கள் பார்த்து, அதிக பொறாமைகொண்டு அப்போஸ்தலருக்கு எதிர்பேசி, அதிகாரிகளும், வைராக்கியமுள்ள யூதர்களும், அவர்களைத் துன்பப்படுத்தும்படியாக ஏவி எழுப்பி, அவர்களைத் துரத்திவிட்டார்கள்.

இந்த ஊரைவிட்டு, சற்றேறக்குறைய 80 மைல் தூரமாயிருந்த இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள். அங்கே அவர்கள் யூதர்களால் துன்பப்பட்டாலும் அநேகநாளாய் வேலைசெய்து அநேகம் பேரைக் குணப்படுத்தினார்கள். ஆனாலும் அவர்கள் கடைசியாய் இந்தப் பட்டணத்தையும் விட்டுவிடவேண்டியவர்களாகி, 20 மைல் தூரத்திலுள்ள லீஸ்திராவுக்குப் போனார்கள். அங்கே அவர்கள் ஓர் சப்பாணியைச் சொஸ்தமாக்கினதினால் ஜனங்கள் அவர்களைத் தேவர்களாய்ப் பாவித்து அவர்களுக்குப் பலியிடப் போனார்கள். ஆனாலும் கொஞ்சநேரத்திற்குள் அந்தியோகியாவிலிருந்து சில யூதர்கள் வந்து அங்கிருந்த யூதர்களை எழுப்பி, பவுலைக் கல்லெறியச் செய்தார்கள். ஆகவே அவர்கள் அப்பட்டணத்தை விட்டு, தெர்பைக்குப் போய் அங்கே பிரசங்கம்செய்தார்கள். அது லீஸ்திராவிலிருந்து 50 மைல் தூரமாயிருந்தது.

அவர்கள் போன இந்த நாலு பட்டணங்களும் அத்தேசத்து முக்கியமான பட்டணங்களாயிருந்தன. மேலும் 2 கொரி. 11. 24-29-ல் பரி. பவுல் சொல்லியிருக்கிற கஷ்டங்களில் அநேகத்தை அவர் இப்பிரயாணத்தில் சகித்தார். பெர்கேயிலிருந்து அந்தியோகியாவுக்குப் போகையில் பலமுறை மலைகளில் கள்ளரால்வந்த மோசங்களை அவர் சகித்திருக்கலாம் ஒவ்வொரு பட்டணத்திலும் தம் சுய ஜனங்களாகிய யூதர்களால் அவருக்கு மோசம் நேர்ந்தது. லீஸ்திராவிலே கல்லெறியுண்டார். இவ்விதமாய் அவரும் பர்னபாவும் பலவாறாகக் கஷ்டப்படவேண்டியவர்களாயிருந்தும் அவர்கள் திரும்பவும் அதே வழியாக வந்தார்கள்.

இதுவரைக்கும் அவர்கள் ரோமரால் துன்பப்படுத்தப்படவில்லை. அவர்களைத் துன்பப்படுத்தினவர்கள் யூதர்களும், பட்டணத்து ஜனங்களும், அதிகாரிகளுமே. அந்த அதிகாரிகள் யாரெனில், ரோமரால் நியமிக்கப்பட்ட அத்தேசத்து அதிகாரிகள்தான். அவர்கள் ஒரு

வருஷத்திற்குமாத்திரம் அந்த உத்தியோகத்தைப் பெற்று, மறுவரு
ஷத்தில், ரோமரால் நியமிக்கப்பட்ட இன்னொருவருக்கு ஒப்புவிக்க
வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆதலால் அப்போஸ்தலர் திரும்பி
வரும்போது அவர்களுக்கு யாதொரு துன்பமும் கஷ்டமும் நேரிடாத
தினால் முன் அவர்களைத் துன்பப்படுத்திய அவ்வதிகாரிகள் தங்கள்
உத்தியோகத்தை ஒப்புவித்து விட்டிருக்கவேண்டும் என்று நினைக்க
லாம். அவர்கள் பெர்கேயிலே பிரசங்கம்பண்ணி அதின் சமீபத்தி
லிருந்த அத்தலியா என்னும் துறையினின்று அவர்கள் விட்ட அந்தி
யோகியா போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் செய்த இந்த முதல் பிர
யாணம் இரண்டு வருஷத்துக்குமேலே பிடித்திருக்கவேண்டும் என்று
நாம் நினைக்கலாம்.

# Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

(தொடர்ச்சி)

'பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு
நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து
பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்
னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்தி
லிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசு
வாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்
சொன்னார்.' யோவா. 7. 37-39.

2. ஜீவத்தண்ணீரின் நதிகள் விசுவாசியின் உள்ளத்தில் எப்
படி உற்பத்தியாகிறது?

*அதாவது, பரிசுத்த ஆவியானவர் மனுஷன் உள்ளத்தில் எப்படிப்
பிரவேசிக்கிறார்?*

பூமியின்மீது எப்போதும் ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் நதி
கள் தங்கள் உற்பத்தியைச் சாதாரணமாய் மேகத்தினால் புடைசூழ்ந்த
மலைகளிலும், அவைகளுக்கடுத்த நீரூற்றுகளிலுமிருந்து பெறுகின்
றனவென்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படியே ஜீவத்தண்
ணீரின் நதிகளுக்கும் உற்பத்திஸ்தானம் மலையும், நீரூற்றுமாகவே
யிருக்கவேண்டும். சத்தியவேதத்தில் பலவிடங்களில் மேற்படி மலை
யைப்பற்றியும் நீரூற்றைப்பற்றியும் பேசியிருக்கின்றது. அந்த
மலை ஞானக்கன்மலையென்றும், அக்கன்மலை கிறிஸ்துவேயென்றும்



(1 கொரி. 10. 2), அந்த நீரூற்று இரக்ஷிப்பின் நீரூற்று என்றும்
(ஏசா. 12. 2), அந்நீரூற்று கர்த்தர் என்றும் (எரே. 2. 13) சொல்லி
யிருக்கிறது. ஆகவே ஜீவத்தண்ணீரின் நதிகள் ஞானக்கன்மலையும்
இரக்ஷிப்பின் நீரூற்றுமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலிருந்தே
உற்பத்தியாகின்றனவென்று தெளிவாயறியலாம்.

அப்படியிருக்க, இந்நதிகள் மனுஷன் உள்ளத்திலிருந்து எப்படி
உற்பத்தியாகக்கூடும்? அவன் உள்ளத்தில் பிளவுண்ட கன்மலையும்,
வற்றாத நீரூற்றுகளும் இருந்தாலொழிய இது கூடிய காரியமல்லவே.
இது மெய்தான், ஆயினும், மனுஷ உள்ளம் ஞானக்கன்மலையையும்,
நித்திய நீரூற்றையும் தனக்குள் சதா பெற்றுக்கொள்ளும் சூக்ஷம
வழியை வேதம் பலவிடங்களில் எடுத்துரைக்கின்றது. மனுஷ
ஆத்துமா ஞானக்கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவினிடம் நெருங்கி,
அவரிலிருந்து புறப்படும் ஜீவத்தண்ணீரை அருந்துவதே அந்தச்
சூக்ஷம வழியாம். நமது ஆண்டவர் சமாரிய ஸ்திரீயோடு செய்த
சம்பாஷணையில், யோவா. 4. 14-ல், மனுஷ உள்ளத்தில் நித்திய ஜீவ
காலமாய் ஊறுகிற நீரூற்று உண்டாகும் வழி தாம் கொடுக்கும் தண்
ணீரைக் குடிப்பதினாலேதான் என்று கூறினார். மேலும், அவர்,
கூடாரப்பண்டிகையின் கடைசிநாளிலே பலிபீடத்தின்மேல் சீலோ
வாம் நீரூற்றின் ஜலத்தை வார்ப்பிக்கும் புறம்பான சடங்கின் காக்ஷி
யைக் கண்டு களிக்கும் ஜனத்திரளை நோக்கி, தாகத்தால் வறண்டு
தவிக்கும் மனுஷ உள்ளம் தன்னில் சதா ஊறும் நீரூற்றைமாத்திர
மல்ல, தன்னிலிருந்து ஜீவத்தண்ணீரை உலகத்தாருக்கு ஓடிப் பாய்
விக்கும் பல நதிகளையும் உடையதாயிருக்கும் அவ்வளவு பெரிய பாக்கிய
நிலையை அடையக்கூடும் என்றும், அந்நிலையை யடையும் வழி தம்
மிடத்தில் வைக்கும் விசுவாசமே, அதாவது, தாகமாயிருக்கிற உள்ளம்
கன்மலையாகிய தம்மிடத்தில் வந்து பானம்பண்ணுவதே என்றும்
திருவாக்கருளினார். 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன்' என்
பது 'என்னிடத்தில் வந்து பானம்பண்ணுகிறவன்' என்னும் பொரு
ளுடையது. இப்படியாக, கிறிஸ்துவினிடத்தில் வந்து அவர் கொடுக்
கும் தண்ணீரைப் பானம்பண்ணுகிற மனுஷ ஆத்துமா அவரோடு
ஐக்கியமாகிறது. அவரே தமது ஆவியின்மூலமாய் விசுவாசியின்
உள்ளத்தில் ஜீவஊற்றாகவும், கன்மலையாகவும் வீற்றிருந்து அவன்
மூலமாய் உலகத்தைச் செழிப்பிக்க திருவுளங்கொள்ளுகின்றார்.

நாம் இனி இச்சத்தியத்தை வெளிப்படையான பொருளில் கவ
னிப்போம். அதாவது, பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் உள்ளத்
தில் எப்படிப் பிரவேசிக்கிறார் என்னும் சத்தியத்தையே. இச்சத்தி
யத்தை மனுஷருக்குப் போதிக்க ஜீவத்தண்ணீரின் உபமானத்தைத்

தவிர வேறு எந்த உபமானமும் அவ்வளவு விளக்கமாய்ப் பொருந்தாது என்று ஞானமுள்ள ஆண்டவர் கண்டு ஏழை மனுமக்களுக்காக மிகவும் கருணைகூர்ந்து இவ்வுருவகத்தை உபயோகிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தம்மிலிருந்து எப்படிப் புறப்பட்டு, தம்மிடத்தில் விசுவாசம் வைக்கிற அடியார்களின் உள்ளத்தை எவ்விதமாய் ஆதாயப்படுத்துகிறார் என்றும், அவர்களுக்குத் தம்மை எவ்விதமாய் வெளிப்படுத்தி அவர்களை ஆளுகிறார் என்றும், அவர்களை நிரப்பி எவ்விதமாய் அவர்கள்மூலமாய் உலகத்திற்குத் தம்முடைய பரிபூரண ஜீவனை ஏராளமாய்த் தந்தருளுகிறார் என்றும் காண்பிக்க நமது இரக்ஷகர் இவ்வுருவகத்தை உபயோகிப்பது மிகவும் பொருத்தமானதுதான்.

ஜீவாத்துமாவாகிய மட்டுள்ள பாவ மனுஷன் பரமாத்துமாவாகிய மட்டில்லாத பரிசுத்த கிறிஸ்து இயேசுவோடு விசுவாசத்தின்மூலமாய்ச் சம்பந்தப்பட்ட தக்ஷணமே, பிதாவாகிய தேவன் தமது பரிசுத்த ஆவியானவரை அவனுக்குள் தந்து அவனைத் தமது சுவிகாரப் புத்திரனாக்கிக்கொள்ளுகிறார். (எபே. 1. 13; 2 கொரி. 1. 22. கலா. 4. 6). ஜலத்தினால் நிறைந்த ஒரு ஏரியோடு சம்பந்தப்பட்ட ஒரு மதகானது, ஏரியின் ஜலத்தை தனக்குள் பெற்றுத் தனக்கு வெளியிலுள்ள வயல்களுக்குப் பாய்விப்பதுபோலவும், ஒரு திராட்சச்செடியோடு ஒட்டப்பட்ட கொடியானது செடியின் சாரத்தைத் தனக்குள் பெற்றுத் தன்னைச் சேர்ந்தவைகளைச் செழிப்பிப்பதுபோலவும், ஒரு டிராம்வண்டியின் இருப்புக்கோல் மின்சாரம் நிறைந்த கம்பியோடு தொட்டிருக்கும்போது, இருப்புக்கோல் கம்பியிலுள்ள மின்சாரத்தை இழுத்து வண்டிக்குப் பாயச்செய்து அதை யோட்டுகிறதுபோலவும், பாவத்தில் மரித்த ஆத்துமா ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவோடு விசுவாசத்தின் மூலமாய்ச் சம்பந்தப்படும்போது, அவருடைய நித்திய ஆவியானவரை அந்த ஆத்துமா தனக்குள் பெற்று மற்றவர்கள் இரக்ஷிப்புக்கென்று ஜீவிக்கிறது என்று நிச்சயமாயறியலாம். மேற்கண்ட திருஷ்டாந்தங்களில், குறைவுள்ளது நிறைவுள்ளதோடு சம்பந்தப்பட்டபோதுதான். தானும் நிறைவைப்பெற்று மற்றவைகளுக்கும் அந்நிறைவிலிருந்து வாங்கிக் கொடுத்தது என்று பார்க்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள மனுஷன் கைக்கொள்ளவேண்டிய நிபந்தனைகள் எவையென்று இப்போது சற்றுக் கவனிப்போம். தாகம்தீர விரும்புகிறவன் தண்ணீரண்டைக்குப் போய் அதை அருந்தவேண்டியதுபோல், ஆத்தும தாகம் தணிய விரும்புகிறவனும் 2 காரியம் செய்யவேண்டும். (1) கிறிஸ்துவினிடம் போகவேண்டும், (2) அவரிடம் பானம்பண்ணவேண்டும்; அதாவது, ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவனிடத்தில் 2 காரியம்



காணப்படவேண்டும். (1) மனந்திரும்புதல், (2) கிறிஸ்துவை விசுவாசித்தல். அப்படியே பரி. பேதுரு பெந்தெகோஸ்தே என்னும் மகாநாளில் செய்த பிரசங்கத்தில் 'நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்' என்றான் (அப். 2. 38). 'சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்' என்று தங்கள் பாவங்களினிமித்தம் குத்தப்பட்டவர்களாய் வெகு ஆவலோடு கேட்கிற ஜனங்களுக்கு முன்பாக, தேவன் பரி. பேதுருவின்மூலமாய் அவசியமான 2 நிபந்தனைகளை வைக்கிறார். அதாவது, (1) மனந்திரும்புதலும், (2) பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவில் விசுவாசம்வைத்தலும், அதாவது, அவர் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதலுமே. இந்த 2 நிபந்தனைகளையும் கைக்கொண்டால் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று வாக்குக்கொடுக்கிறார். வேறு எந்த நிபந்தனையையும் தேவன் வைக்கிறதில்லை. தேவன் காண்பிக்கிற இந்த 2 சுலபமான நிபந்தனைகளைமாத்திரம் மனுஷன் கைக்கொண்டால், பரிசுத்த ஆவியின் வரமாகிய மகத்தான பெரிய ஈவை அவனுக்கு அளிப்பதாகப் பொய்யுரையாத தேவன் வாக்கருளியிருக்கிறார். இந்த 2 நிபந்தனைகளும் வெகு அவசியம்; ஒன்று இருந்து மற்றொன்று இல்லாவிட்டால் ஆவியானவர் அருளப்படார். ஒருவன் எவ்வளவாகப் பாவங்களைவிட்டு மனந்திரும்பினாலும், கிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் ஆவியானவரின் பிரசன்னம் அவன் உள்ளத்தில் இல்லை; ஏனெனில் முக்கியமான மற்றொரு பெரிய நிபந்தனையைக் கைக்கொள்ளாது விட்டுவிட்டான். அப்படியே கிறிஸ்துவைத் தன் சொந்த மீட்பர்தானென்று நம்பி அவரை விசுவாசித்தாலும், அவனில் மெய்யான மனந்திரும்புதல் இல்லாவிட்டால் ஆவியானவரின் பிரசன்னம் அவனில் இல்லை; ஏனெனில் மற்றொரு முக்கியமான நிபந்தனையைக் கைக்கொள்ளாமல் விட்டுவிட்டான்.

அநேகர் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர்களாயிருந்தாலும், அவர்களின் ஜீவியம் குணப்பட்ட ஆவிக்குரிய ஜீவியமாய்க் காணப்படுகிறதில்லை. அவர்கள் அபஜயப்பட்டவர்களாகவும், ஓயாது கவலையிலும், துக்கசாகரத்திலும் மூழ்கித் தவிக்கிறவர்களாகவும், அவர்கள் உள்ளம் அருளும், ஒளியுமற்று இருண்டு பாழடைந்திருக்கிறதாகத் தங்கள் தினசரி ஜீவியத்திலும், சகவாசத்திலும், சம்பாஷணையிலும் காண்பித்துப் பாவஜீவியம் செய்கிறவர்களாகவும் தோன்றுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அவர்கள் இன்னும் தங்களுக்குள் தேவாவியானவரின் அருளைப் பெறவுமில்லை, அல்லது, ஒருவேளை முதலில்

பெற்றவர்களாயிருந்தாலும் அவர் தங்கள் இருதயத்தை ஆளாதபடி மாமிசத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தபடியால் அவர் பிரசன்னத்தை இழந்துவிட்டார்கள். இதுவே காரணம். அவர்கள் தேவன் கொடுத்திருக்கிற 2 நிபந்தனைகளையும் கைக்கொள்ளாமலாவது, அல்லது, அந்த இரண்டில் ஒன்றைக் கைக்கொண்டு மற்ற ஒன்றைத் தள்ளிவிட்டாவது இருந்திருக்கவேண்டும்.

இதற்குச் சத்தியவேதமும் சாக்ஷிகூறுகிறது. மனந்திரும்புதல் மாத்திரம் இருந்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் இல்லாவிட்டால் ஆவியானவர் அருளப்படார். இதை ரூபிக்க, அப். 19. 1-6 வசனங்களைக் கவனிப்போம் : இந்த எபேசிய ஜனங்கள் உண்மையாய் மனந்திரும்பினவர்கள்தான். ஆனால் அவர்கள் ஆவியானவரை அறியாதிருந்தார்கள். அப்பொல்லோ என்பவன் யோவான் கொடுத்த மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்து ஆவியில் அனலுள்ளவனாய் எபேசுவில் கர்த்தருக்கடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிவந்தான். இவனை விசுவாசித்தவர்கள் சுமார் 12 பேர் எபேசுவில் இருந்தார்கள். பவுல் எபேசுவுக்கு வந்தபோது இந்தச் சீஷர்களைக் கண்டு 'நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா' வென்று கேட்டான். அதற்கு அவர்கள் 'பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவேயில்லை' என்றார்கள். அப்போது பவுல் அதன் காரணத்தையறிய அவர்களை நோக்கி 'நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்' என்றான். அதற்கு அவர்கள் 'யோவான் கொடுத்த ஞானஸ்நானம்' என்றார்கள். அப்பொழுது பவுல் அவர்கள் விட்டுவிட்ட நிபந்தனையை யெடுத்துக் காண்பிக்க விரும்பி, அவர்களை நோக்கி 'யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய இயேசுவில் விசுவாசிகளாகவேண்டுமென்று சொல்லி, மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றும், அவர்கள் கிறிஸ்துவையும் விசுவாசிக்கவேண்டும் என்றும் போதித்தான். அப்போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்.

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 74 ஜூலை 1912

# வேதியர் விளக்கு

## Abraham—A Character Sketch

**By the Rev. G. S. Vedanayagam**

### ஆபிரகாம்

ஆபிரகாமின் சிறு வயதின் சரித்திரமும், அவனது இல்லற வாழ்க்கைக்கு முந்திய வாலிப பிராயத்தின் நடபடிகளும் இன்னதென்று நமக்குத் தெரியாதிருப்பினும் அவை உத்தம நெறிக்குட்பட்டிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதாம் முதற்கொண்டு தெய்வபக்தியானது சந்தான பரம்பரையாகப் போதிக்கப்பட்டு வந்தது, பெரும்பான்மையான சந்ததியார் அவபக்தியில் சாய்ந்துபோனார்கள் என்றாலும் சிறுபான்மையார் மெய்ப்பக்திமார்க்கத்தை விடாது பற்றி வந்தனர். உத்தம மக்களைப் பெற்றார் பாட்டன்மார், தங்கள் மடியில் வைத்து மெய் உபதேசத்தை அவர்களுக்கு ஊட்டிவந்தார்கள். ஆதாமின் காலமுதல் ஜனங்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களாய் இருந்தபடியால் பக்திமார்க்கப் பயிற்சியானது, இடையூறின்றித் தொடர்ந்துவளரவேதுவிருந்தது. மெத்தூசலா 243 வயதாகும்பரியந்தம் ஆதாம் உயிரோடிருந்தான். நோவாவின் குமாரன் சேம், 98 வயதாகும்பரியந்தம் மெத்தூசலா ஜீவனோடிருந்தான். ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய பக்தனாகிய இந்த சேம் என்பவனும் ஆபிரகாம் பிறந்து 150 வயதாகுமட்டும் கூட இருந்ததுமன்றி ஈசாக்குப் பிறந்து 50 வயதடையுமட்டும் உயிரோடிருந்தான். ஆகவே உத்தம பக்திமார்க்கமானது, மறக்கப்படாமலும் சீர்குலையாமலும் போதிக்கப்பட்டு வந்ததென்று இதனால் அறியலாம். என்றாலும் ஆபிரகாமின் தகப்பன் வீட்டில் விக்கிரக வணக்கம் இருந்தது (யோசு. 24. 2). இது ஆபிரகாமுக்கு மகா சோதனையாயிருந்ததென்றும் தோன்றுகிறது. மகமதியர் பாரம்பரியத்தில் ஆபிரகாம் இந்தச் சோதனையில் அடைந்த வெற்றியைப்

பற்றிக் கதைகள் வருகிறது. ஆயினும் ஆபிரகாம் விக்கிரக பக்தி நிறைந்த குடும்பத்திலிருந்தாலும் அந்த அவபக்தியில் அமிழ்ந்துபோகாமல் காக்கப்பட்டது தேவனுடைய பலத்த கிருபையே. யாக்கோபு லாபான் வீட்டிலும், யோசேப்பை எகிப்தியர் குடும்பங்களிலும், மோசேயைப் பார்வோன் அரமனையிலும் மீதியான் தேசத்திலும், தானியேல் முதலியோரைப் பாபிலோனிலும் விக்கிரக அவபக்தியினால் மாசுபட்டுக் கெட்டுப்போகாமல் காத்துக்கொண்டுவந்த எகோவாவே ஆபிரகாமையும் சிறு பிராயம்முதல் காத்து வந்திருப்பார். ஆபிரகாம் வாலிபனானபோது தன் குடும்பத்திலேயே தான் நன்றாய் அறிந்தவளும் தன்னைப்போல் ஏக விசுவாசமுள்ளவளுமான சாராளை மணம் புரிந்துகொண்டான். அவளது ஒப்பற்ற சௌந்தரியம் ஒன்றுதவிர மற்ற எந்த லக்ஷணமும் ஆபிரகாமின் பக்திக்குத் தடையாயிருந்ததில்லை (ஆதி. 12. 11). அந்த அம்மாளின் மகா ரூபலாவண்யம் ஆபிரகாமின் உயிர்ச்சேதத்திற்கும் இரண்டு முடிமன்னர்களின் ஆத்தும சேதத்திற்கும் தங்கள் ராஜ்ஜியங்களின்மேல் வர இருந்த சாபத்திற்கும் ஏதுவாயிருந்தும் கர்த்தர் தமது நாம மகிமைக்கும் ஆபிரகாமின் ஜீவிய பாதுகாப்புக்கும் ஏற்றவிதமாக அந்த அழகைக் காத்துக்கொண்டுவந்தார். நமது தமிழ் நாட்டில் திருவள்ளுவர் மனைவியைக்குறித்துப் புகழ்ச்சியாக எவ்வளவு சொல்லக்கூடுமோ சாராளைக்குறித்து அவ்வளவு சொல்லலாம். 'சாராள் ஆபிரகாமை ஆண்டவனென்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்' என்ற வசனத்தில் இல்லறவாசியான பேதுரு அப்போஸ்தலன் ஆழ்ந்த கருத்தை அமைத்து இருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை (1 பேது. 3. 6). ஆனால் திருவள்ளுவர் தன் மனைவியைச் சமசுயாதீனமற்று நடத்தினதுபோல, ஆபிரகாம் சாராளை நடத்தவில்லை. ஆபிரகாமும் சாராளும் பரஸ்பர இணக்கமுள்ளவர்களாய் இருந்தார்கள். சாராள் சொன்ன ஒரு ஆலோசனைக்கு இணங்க ஆபிரகாம் தாமதித்தபோது எகோவா சாராள் பட்சம் ஏற்பட்டு சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள் என்பதாகத் திருவுளம்பற்றினார் (ஆதி. 21. 12). ஆகவே ஆபிரகாமின் இல்லற துணைவியும் ஆபிரகாமின் பக்திநெறிக்கு ஏற்ற கருவியுமாகவே இருந்தாள். உலகத்தில் அநேகம் பக்தர்களுக்கு இந்த இல்லற சிலாக்கியம் இருந்ததில்லை. மோசேக்கு அவபக்தியும் பிடிவாதமுமுள்ள ஒரு மனைவி இருந்தாள். மோசே இஸ்ரவேலரை மீட்க எகிப்துக்குப் போகும்போது தன் பிள்ளை விருத்தசேதனமில்லாதிருப்பது தகுதியல்ல என்று வாதாடமாய்ச் சாகவிருந்தான் என்று பார்க்கிறோம் (யாத். 4: 24-26). இல்லற அவன் மனைவி அதற்கிணங்காமையால் மோசே இடைவழிப் பிண



பெருமையினால் குடும்பத்தில் பெரிய கலகம் விளைந்தது (எண். 12. 1). ஓசியா தீர்க்கதரிசிக்கு உண்மைத் தப்பான ஒரு மனைவி இருந்தாள். அர்சாகை சட்டமும் சன்மார்க்க நெறித் திட்டமும் இல்லாத இருளடர்ந்த காலத்தில் ஆபிரகாமுக்கு ஒரு உத்தம மனைவி கிடைத்தது தேவனது மகா கிருபையே.

என்றாலும் இவ்விருவரும் நம்மைப்போலப் பூரடுள்ள மனுஷரும் பலவீனருமாகவே இருந்தார்கள் என்பதையும் நாம் மறக்கக் கூடாது. உலகத்திலுள்ள சகல விசுவாசிகளுக்கும் முன்மாதிரியும் ஞானத்தந்தையுமாக ஏற்படுத்தப்பட்ட ஆபிரகாமின் சரித்திரத்தைச் சொல்லவந்த பரிசுத்த ஆவியானவர் அவனது குறைவுகளையும் நமக்கு யதார்த்தமாக எழுதி வைத்திருக்கிறார். இதனால் நம்முடைய சத்திய வேதத்தின் மகத்துவம் விளங்குகிறது. ஆபிரகாம் தனது தனித்த புஜபலமற்ற நிலைமையையும் அக்கால கொடுங்கோன்மையையும் அரசரின் வரம்புகடந்த இல்லொழுக்கத்தையும் உணர்ந்தவனாய்த் தன் உயிர் போகுமென்ற அச்சத்தால் தன்னை ஆட்கொண்ட தெய்வத்தின் வல்லமையை மறந்து பொய் சொல்லித் தப்பவும் தன் மனைவியையும் தனக்காகப் பொய் சொல்லும்படி ஏவி அவளைப் பயங்கர நிலைமைக்குட்படுத்தவும் சம்மதித்தான். ஏசுவைப் பாராமல் கடற்கோஷ்டத்தைப் பார்த்து விசுவாசம் குன்றிச் சமுத்திரத்தில் ஆழ்ந்தின பேதுருவைப்போல் ஆபிரகாம் தேவனைப் பாராமல் உலகத்தைப் பார்த்து விசுவாசம் தடுமாறி நின்றான். மேலும் சாராள் தானும் தேவவாக்கைச் சரியானபடி கருத்தறிந்து நம்பிக் காத்திராமல் அவசர புத்தியாலும் தீராத ஆத்திரத்தாலும் விசுவாசம் குறைந்து தேவவாக்குத்தத்தத்துக்கு வேறே அர்த்தம்பண்ணித் தன் வேலைக்காரி மூலமாய்த் தன் மடிக்குப் பிள்ளை கிடைக்கும்படி ஆபிரகாமை ஏவி ஆகாரை மணஞ்செய்துகொள்ளச் சம்மதிக்கப்பண்ணினாள். இவ்விரு செய்கையிலும் அவர்களுக்குள்ளே பெலவீனங்களைப் பார்க்கிறோம். அன்புநிறைந்த கடவுள் அந்தப் பலவீனங்களைப் பெரிதாய் எண்ணாமல் தமது பக்தர் இதனால் தாழ்ந்து சீர்குன்றிப்போகாதபடி தமது காருண்யத்தால் காத்து தமது சர்வவல்லமையால் அவர்களைப் பெலப்படுத்தி உலகமே பின்பற்றத்தக்க உத்தம விசுவாசிகளாக்கினார். 'நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்குமுன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு' (ஆதி. 17. 1). பெலவீனப் பாவிகளாகிய நம்மையும் சர்வவல்லமையுள்ள தேவன் உத்தமராய் நடக்கப்பண்ணுவது நிச்சயமே. நமது பெலவீனங்களே தேவனுடைய சர்வவல்லமையால் நிரப்பப்படக்கூடிய பாத்திரங்களாகிறது. 'என் கிருபை உனக்குப் போதும்; பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்.'

'இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவஞல் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறேம்.' (2 கொரி. 4. 7.)

(இன்னும் வரும்)

# The Pastor's Missionary Methods

**By the Rev. N. Devasagayam**

## மேய்ப்பன் சபையை ஜீவதூதுக்குத் தூண்டும் விதங்கள்

I. ஜனங்களை இந்தப் பெரிய தெய்வவேலைக்குத் தூண்டப் பிரசங்க மேடை மிக ஏற்றதாகும். ஜீவதூது ஆகிய மிஷன்வேலையை விஷயமாய் வைத்துப் பிரசங்கித்தால் சபையில் பெரும்பாலாருக்கு அதைப்பற்றி அறிவூட்டலாம். சபையில் முக்கால்வாசிப்பேர் மிஷன் வேலையைப்பற்றிய விபரம் தெரிவிக்கிற பத்திரிகைகளைப் படிக்கிறதேயில்லை. ஆகவே கோவிலில் பிரசங்கிப்பதைத் தவிர அவர்களுக்கு அதை அறிவுறுத்த வேறு எந்த வழியிருக்கிறது? சபையை எல்லா விதத்திலும் வழிகாட்டி நடத்துகிறவரே இதுவிஷயத்திலும் அதற்கு வழிகாட்டுவது பிரயோசனமாகும் என்பது அநுபவத்திற்கு அகப்பட்ட

முதலாவது: பிரசங்கமேடை வாயிலாய்

காரியம். வருஷத்தில் எத்தனை தரம் மிஷன் பிரசங்கம் செய்யலாம்? ஒரு அத்தியக்ஷர் வருஷத்தில் இருபது மிஷன் பிரசங்கங்கள் செய்யவேண்டும் என்கிறுர். மிஷன் சங்கங்களின் காரிய நிர்வாகிகள் சிலர் அநுபவத்திற் கண்டபடி வருஷத்துக்குப் பன்னிரண்டு போதும் என்கிறுர்கள். மிஷன் வேலையில் வெகு ஊக்கமுள்ள இருபத்தைந்து சபைகளை எடுத்து அவைகளில் சராசரி மிஷன் பிரசங்கக் கணக்குப் பார்த்தால், அது வருஷத்திற்கு ஐந்தாகிறது. வருஷத்தில் நாலுமுறையாவது அவை சபைகளில் நடைபெறுமாஞல் பெரும்பயன் விளையும். உலகெங்கும் நடக்கும் விஸ்தாரமான மிஷன் வேலையை அது அங்கங்கே விளைவிக்கிற உயிருண்டாக்குகை தேசாதேசங்களில் தக்க தருணத்தில் வந்து உதவுதல், இத்தியாதி விஷயங்களை மனதிற்படச் சவிஸ்தாரமாய்ச் சொல்வதைச் சபைகுரு இலக்காக வைத்துக்கொள்ளவேண்டும். மிஷன் வேலையைச் சொல்ல எந்தத் துறையில் இறங்கிஞலும் அந்தந்தத் துறைக்கு விஷயம் எடுக்க



எடுக்கக் குறையாத களஞ்சியமாய் அகப்படும். விஷயங்களின் வராளத்திலே எதைத் தெரிந்துகொண்டு பேசலாம் என்பது எளிதல்ல. அப்படியிருக்கப் பெரும்பாலும் மிஷனைப்பற்றிப் பொதுப்படப் பேசுவது வழக்கமாயிருப்பது சரியல்ல. பின்வரும் விஷயங்கள் முக்கியமானவை. அவைகளைப்பற்றி எவ்வளவு பேசிஞலும் சங்கதி குறையாது. அவையாவன:

மிஷன் அல்லது ஜீவதூது வேதத்தில் தெள்ளுறக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்கிற விஷயம். வேதத்திற்கு யாவரும் மரியாதை கொடுப்பார்கள். அது ஒன்றை நம் கடமை என்று எடுத்துக் காட்டிஞல் அதற்கு யாவரும் அடங்குவோம். அது முழுமையும் மிஷனெரிப் புத்தகம். ஜீவதூதைச் சகல ஜாதிகளுக்கும் கொண்டுபோகவேண்டும் என்று அது சகல ஆகமங்களிலும் வற்புறுத்துகிறது.

ஏதோ வதத்துக் குறித்த ஒரு மிஷன் காரியமாய் விஷய விபரஞ் சொல்லுதல். கேட்போர் கவனத்தைப் பல காரியங்களில் இழுத்து ஒன்றும் மனதில் உறுத்தாமல் செய்வது சரியல்ல. ஒரே காரியத்தைக் கவனம்பற்றி மூஞம்விதமாய்ச் சொல்லி அதிலே அவர்கள் சிரத்தை வைக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதிஞல் இன்ன காரியமாய் எங்களுக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு என்று அவர்களுடைய மனதில் அறுத்துக்கொண்டிருக்கும்.

மிஷன் சம்பந்தமான ஜீவிய விருத்தாந்தங்கள். இவைகள் கேட்போர் மனதில் தைத்து நாமேன் இவ்வாறு நடந்துகொள்ளலாகாது என்று நினைக்க ஏவும்.

உலகத்தின் பல பாகங்களில் உண்டாகும் அசைவுகள் எப்படி மிஷனுடன் சம்பந்தப்பட்டிருக்கும். இதை விளக்குவதற்கு 'மிஷன்களும் நம் காலத்துச் சரித்திரமும்' என்ற பெயரால் ராபர்ட் ஸ்பீயர் ஆசிரியர் ஆங்கில பாஷையில் இயற்றியிருக்கிற நூலும் அதுபோன்ற வேறு நூல்களும் உதவும்.

தனித்தனிப் பேர்களையும் பற்பல ஜாதிகளையும் அவர்களுடைய சீரழிந்த இழிந்த ஜீவியத்திலிருந்து உயர்த்துகிறதில் சுவிசேஷத்திற்குள்ள ஆச்சரிய வல்லமை. இந்த விஷயம் அவிசுவாசிகளுடைய மனதிலும் இயேசுவின் சுவிசேஷ வல்லமையைத் தட்டி உணர்த்தும். சீர்திருத்துவதற்கு முடியாதென்று நினைத்த இடங்களில் ஆச்சரியமான சீர்திருத்தமுண்டாக்கின சுவிசேஷ வல்லமைக்குத் திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டினதிஞல் அநேக சபைகளில் ஜீவதூதாகிய மிஷன்வேலைக்கு உயிர் முளைத்தெழும்பிற்று.

ஜீவதூது கொண்டுபோவதற்கு ஆங்காங்கு கிடைத்திருக்கிற தருணவாய்ப்புகள்; தருணம் தப்பிஞல் அது திரும்பக் கிடைக்கிறதுள்ள [illegible]

சங்கடங்கள், அதைத் தாமதமின்றிச் செய்யவேண்டுமென்பதற்குள்ள நியாயங்கள். இந்த விஷயங்களை மாதாமாதம் வெளிப்படுகிற மிஷன் பத்திரிகைகள்மூலமாய் விஸ்தாரமாய் அறிந்து உள்ளம் உருகச் சொல்லலாம்.

உலகத்திற்கு ஜீவதூதுக் கடமையைத் தாழாமல் கொண்டு செலுத்த விரும்புகிற சபைகள் அநுசரிக்கவேண்டிய ஜீவியப் பழக்கங்கள். உதாரணமாக, தனக்கு உடம்புக்குணர்க்கையாய் அநுபவிக்கப் பழகியிருக்கிற பதார்த்தங்களை மிஷன் வேலையின்பொருட்டு நிறுத்தி அதனால் வரும் மீதத்தை மிஷன் வேலைக்குக் கொடுத்தல், பணத்தைக் கொடுத்ததே போதுமென்றிராமல் ஆத்துமாக்கள் ஆதாயமாகக் கிடைக்கவேண்டுமென்று ஜெபித்தல். பிரசவவேதனையின்றிப் பிள்ளை பிறக்காது. அவ்வாறே ஆத்துமாக்கள் உயிரடையவேண்டுமென்று ஆத்தும வேதனைப்பட்டு ஜெபித்தாலொழிய ஆத்துமாக்கள் தேவனுடைய இராச்சியத்திற்குள் வரமாட்டார்கள்.

மிஷன் கடமைத்துத் தங்களுக்கிருக்கிற பொறுப்பைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கிறிஸ்துவர்கள் செய்கிற பாசாங்குகள், சொல்லுகிற வீண்சாக்குகள், இவைகளை அவர்களுடைய மனதில் உறுத்தும்படி எடுத்துக் காண்பித்தல். இதை அவர்களுடைய மனதில் கோபம் எழும்பும் விதமாய்ச் சொல்லலாகாது. வெட்கமும் விசனமும் உண்டாகச் சொல்வதுடன் அந்த வேலையில் கவனம்வைப்பதினால் வரும் ஆசீர்வாதங்களையும் எடுத்துக் காட்டவேண்டும்.

II. இதுகாறும் பிரசங்கமேடையில் சபைக்குப் பேசுகிற குரு எந்தெந்த விஷயங்களை வற்புறுத்தலாம் என்று காட்டினோம். அப்படி வற்புறுத்துங்கால், அவருடைய மனதில் எந்த நோக்கமும் இலக்கும் இருக்கவேண்டும் என்றும் காட்டுவோம். மிஷன்வேலை செய்யத் தவறுகிற சபைக்கு உயிர்நஷ்டம் வருதல், மிஷன்வேலையில் நடைபெறுகிற அதிசய சம்பவங்கள், தங்கள் காலத்து மிஷன்வேலை செய்யத் தாங்களே கடமையுள்ளவர்கள், இத்தியாதி விஷயங்களைச் சபைக்குத் தெரிய விளக்கிக் காட்டி, அந்தக் கடமையை ஊக்கமாய்ச் செய்ய அதைத் தூண்டுவதே குருவின் மனதில் மாறா இலக்காயிருக்கவேண்டும்.

சபையார் பிரசங்கத்தில் பிரியம் வைப்பதற்குக் குரு தன் பிரசங்கங்களைக் கவனத்துடன் முந்தியே ஆயத்தம் செய்யவேண்டும். மிஷனெரிப் பிரசங்கங்கள் வேளாவேளைகளில் மாத்திரம் செய்யப்படுமாகையால் அவைகளைக் கேட்க சீக்கிரம் நாள்வராதா என்று சபையார் ஆவலாய்க் காத்திருக்கச் செய்ய போதுமான சாவகாசத்துடன் ஆய்ந்தோய்ந்து குரு அந்தப் பிரசங்கங்களை ஆயத்தஞ்செய்வது அவசியம்.



இப்படிச் செம்மையாய் மிஷன் விஷயங்களை அவதானம்செய்து ஊக்கமாய்ப் பிரசங்கிக்கிற சாமானியக் குருக்கள் அநேகரை நெஞ்சுருக்கிச் சபைகளில் மிஷனுக்காகப் பெரிய அசைவு உண்டாக்க வல்லவர்களாயிருக்கையில், அவ்வித ஆயத்தமில்லாதவர்கள் மிகுந்த வரம் பெற்ற அறிவாளிகளாயினும் காரியசித்தியில்லாமல் போகிறதைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கலாம்.

'பக்கச்சொல் பதினாயிரம்' என்கிற உலகநீதிக்கு ஏற்ப, குரு தானே மிஷன் விஷயங்களைப் பிரசங்கிப்பதைத் தவிர, அவைகளை நன்கறிந்த வேறு பேர்களைக்கொண்டும் சபைக்குச் சொல்லவேண்டும். பற்பல மிஷன் சங்கங்களின் காரியதரிசிமார் மிஷன் ஸ்தானங்களில் பலநாளுழைத்துத் திரும்பிவந்திருக்கிற ஜீவதூதாட்கள், இவர்கள் செம்மையாய் அறிந்திருக்கிற அநேக விஷயங்கள் கேட்கக்கேட்க இனியவாயும் கேட்போரைத் தட்டியசைக்க வல்லனவாயுமிருக்கும். அப்படிப்பட்டவர்களைச் சபையில் பேசுவிக்கவேண்டும். ஜீவதூதர்களாய்வலியப் போவதற்கு வைராக்கியமுள்ள மாணவர்களைப் (Student Volunteers) பேசக் கேட்டுக்கொள்ளலாம். மிஷன்வேலைக்குப் புறப்படக் காத்திருக்கிறவர்களையும் பேசச் சொல்லலாம். சுயசபையில் மிஷன் விஷயங்களையறிந்திருக்கிற பல அவயவங்களைத் தூண்டி அவர்கள் சிலர் முறையே பிரசங்கிக்கப்பண்ணலாம். ஞாயிறுதோறும் எடுத்த வாக்கியத்தை விளக்குவதற்கு முந்தி ஐந்து நிமிஷம் மிஷன் விஷயங்களில் ஒன்றைக் கேட்போர் மனதில் அழுந்த உணர்த்துவது ஒரு குருவுக்கு வழக்கம். இன்னொருவர் மிஷன் ஸ்தானங்களில் எங்கேனும் அதிசயிக்கத்தக்க சம்பவங்கள் நடந்திருந்தால் அவைகளைத் தம் பிரசங்கங்களினூடேயூடே விரவிக் கேட்போர் மனதைப் பற்றியெரியப்பண்ணுவாராம். ஆயினும், இவையெல்லாம் சமயம்போல அநுசரிக்கத்தக்க உபாயங்களே தவிர அவை சபைகுரு மிஷன் பிரசங்கஞ்செய்வதை நீக்கிவிடுவதற்குக் குறுக்கே வரலாகாது. விஷயங்கள் காதுவழியாய் அன்றிக் கண்வழியாயும் மனதிற்படச் செய்வது சில குருமார் பிரயோசனகரமாய் அநுஷ்டிக்கும் உபாயம். நடைபெறுகிற காரியங்கள் இன்னின்ன நிலையில் இருக்கின்றன என்று கண்ணில் தைக்கக் காட்டப் படங்கள் நேர்த்தியாய் உதவும். ஒரு சபை மிஷன் விஷயமாய் இவ்வளவு செய்திருக்கிறது, இன்னம் இவ்வளவு செய்யவேண்டும் என்று பகுத்துக் காட்டுகிற அளவுப் படங்கள் வல்லமையாய் மனதை அசைக்கும். இப்படிப் பிரசங்கவாயிலாய்ச் சபையை மிஷன்வேலைக்குத் தட்டியெழுப்பின குரு பொதுஜெபம் கோவிலில் செய்யும்போது மிஷன் அவசியங்களுக்கு உதவ ஆண்டவரைப் பார்த்துப் பரிந்துபேசுகிற உருக்கமன்றாட்டுகளைப் பண்ணு

வதும் தவிர்க்கமுடியாத அவசியம். அது சபையார் மிஷன் காரியங்களை மனதில்வைத்துத் தினஜெபத்தில் பரிந்துபேசப் பழக்குவதுந் தவிர அவர்களுடைய ஆவியையும் பரவசப்படுத்திப் பரமசிந்தையுள்ளதாக்கும்.

மிஷன் பிரசங்கங்கள் செய்வதை ஒரு குரு தமக்கியல்பான வயலைவிட்டு அந்நிய வயலில் பிரவேசித்து உழைக்கிற உழைப்பாய் நினைக்கலாகாது. திருச்சபை மிஷன் வேலைக்கே உலகில் இருக்கிறது. ஆகையால் சபையில் மிஷன் பிரசங்கம்பண்ணுவது அதற்கு அந்நியமல்ல சுயம். ஒவ்வொரு சுவிசேஷப் பிரசங்கமும் மிஷன் ஆவி நிறைந்ததாயிருக்கவேண்டும். அந்த ஆவியுள்ள பிரசங்கங்கள் சிலருக்குக் கேட்க வெறுப்பாயிருந்தால் அவைகளை இனிப்பாக்குகிற மிஷன் சம்பவங்களையும் சரித்திரங்களையும் கலந்து ஊட்டலாம். அதினால் வெறுப்பு நீங்கி உவப்பு ஊறும். மேலும், திருப்பந்தி பரிமாறுகிற காலங்களில், திருவிருந்தில் ஆழ்ந்து நிறைந்திருக்கிற மிஷன் அர்த்தத்தை விளக்கி விருந்தினர் மனதில் அழுந்தச் செய்வது குருவின் கடமை.

(மொட்டு வேத பண்டிதர்)

## St. Paul

### பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி)

பவுலும் பர்னபாவும் செய்த இந்த முதல் சுவிசேஷப் பிரயாணத்தினால் இரண்டு காரியங்கள் தெளிவாய்க் காணப்பட்டது. முதலாவதாக, அதினால் புறஜாதியாரில் அநேகம்பேர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள் என்பதையும், இரண்டாவதாக, அவர்களில் வேலை செய்வதற்குப் பரி. பவுல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராயிருந்தார் என்பதையும் சபை அறிந்தது. ஆனாலும் தற்காலத்தில் அவர் திரும்பவும் அந்தியோகியாவிலே வேலை செய்துவந்தார். சற்றேறக்குறைய ஒரு வருஷமாய் அங்கே வேலை செய்தபின் (அப். 14. 28) யூதேயாவிலிருந்து வந்த சில யூதர்களோடு தர்க்கம்செய்ய வேண்டியதாயிற்று. ஏனெனில் கிறிஸ்தவ சபையில் தோன்றிய முதல் கட்சிக்காரர் இவர்களே. இந்தக் கட்சிக்காரரோடு பரி. பவுல் அப்புறம் அதிகமாய் வாக்குவாதம் செய்யவேண்டியவராயிருந்தார். அவர் செய்த வேலையை அநேக இடங்களில் கெடுக்கும்



படி பார்த்தார்கள். அவர்கள் சொன்னதாவது, 'ஒருவன் கிறிஸ்தவனாயிருக்க விரும்பினால் அவன் முதலாவதாக யூதமார்க்கத்தமைந்த விருத்தசேதனமடையவேண்டும்' என்பதே. அப்படியிருக்க, கிறிஸ்தவர்கள் எல்லாரும் யூதர்களாயிருந்திருக்கவேண்டியதாகும். அதாவது, சுவிசேஷம் எல்லாருக்கும் பொதுவாயிராமல் யூதர்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லுகிறாற்போல் இருந்தார்கள். இயேசுவானவர் பரத்துக்கு ஏறும்முன் அப்போஸ்தலரும் அப்படியே நினைத்தார்கள் (அப். 1. 6 காண்க). ஆனாலும் பெந்தெகோஸ்தே நாளுக்குப்பின் அந்தத் தப்பிதமான கொள்கை மாறிப்போயிற்று. இந்தக் கட்சிக்காரரோ, கிறிஸ்தவர்களாயிருந்தாலும் யூதமார்க்கத்திற்காக அதிக வைராக்கியம்கொண்டு இவ்விதமாய்ச் சொன்னார்கள்.

ஆதலால், பவுலும் பர்னபாவும் எருசலேமுக்குப் போய் இதெல்லாவற்றையும் அங்கிருக்கிற அப்போஸ்தலருக்குச் சொல்லி, காரியத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்து, அந்தியோகியாவிலிருந்த சபையாரால் உத்தரவு பெற்றுப்போனார்கள்.

எருசலேமிலே நடந்த இந்த முதலாம் ஆலோசனைக் கூட்டத்தைப்பற்றி அப். 15. 1–30-யிலும்; கலா. 2. 1–10-யிலும் சொல்லப்படும். நடபடிகளில், பரி. லூக்கா வெளியான கூட்டங்களைக்குறித்து எழுதுகிறார்: கலாத்தியரிலோ, பரி. பவுல் தாம் செய்தவைகளை விவரமாய் எழுதுகிறார். அதினாலே, அவர் பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு எருசலேமுக்குப் போனதாகவும், அவர் புறஜாதியானும் விருத்தசேதனமற்றவனுமாகிய தீத்துவைத் தம்மோடு அழைத்துக்கொண்டு போனதாகவும், அங்கிருக்கும்போது இவ்விஷயத்தைப்பற்றி வெகுதூரமாய் மற்ற அப்போஸ்தலரோடு தனிமையாய்ப் பேசினதாகவும், அவர்களால் அவர் புறஜாதியாருக்குப் பிரசங்கம்பண்ணும்படியாய்க் கையளிக்கப்பட்டவராய் அங்கீகரிக்கப்பட்டதாகவும் நாம் காண்கிறோம். வெளியரங்கமான கூட்டத்திலே நடந்ததை, நாம் அப். 15-யிலே வாசிக்கலாம். சங்கத்தார், தேவாவியானவரால் நடத்தப்பட்டு (15. 29) ஓர் நிருபத்தை அந்தியோகியாவிலிருந்த சபையாருக்கு எழுதி, பவுலாலும் மற்றவர்களாலும் அதை அனுப்பினார்கள். அவ்விதமாய்ப் பரி. பவுல் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாக மற்ற அப்போஸ்தலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

பரி. பவுல் செய்த வேலையை நாம் ஆறு பாகமாய்ப் பிரிக்கலாம். முதல் பாகமானது, அவர் அரபிதேசத்தைவிட்டு தர்சுப் பட்டணத்திற்கு வந்ததுமுதல், அவர் அந்தியோகியாப் பட்டணத்திற்கு பர்னபாவால் அழைக்கப்பட்டுப்போனதுவரைக்கும் என்பதே.

இரண்டாம் பாகத்தில் அவர் எருசலேமுக்குப் போய் அந்தியோகியா சபையாரால் அனுப்பப்பட்ட தர்மக்கொடையைக் கொண்டு போவதும், முதல் சுவிசேஷப் பிரயாணமும், எருசலேமிலே நடந்த ஆலோசனைக் கூட்டமும் அடங்கியிருக்கும். மூன்றாம் பாகத்தை நாம் இப்போ பார்ப்போமாக.

அதிலே பரி. பவுல் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தைச் செய்தார். அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்த சிலநாளைக்குப்பின்பு (அப். 15. 36) அவர் இந்தப் பிரயாணம் செய்யத் தலைப்பட்டார். ஆனால் பர்னபா மறுபடியும் மாற்குவைக் கூட அழைக்க ஆசையாயிருந்ததினால் பவுல் அதற்குச் சம்மதியாமல் சீலாவைத் தெரிந்துகொண்டுபோனார். [பிலே 24; கொலோ. 4. 10; 2 தீமோ. 4. 11 பார்த்தால், மாற்கு அப்புறம் பவுலோடு ஒப்புரவாக்கப்பட்டான் என்பதைக் காணலாம்.]

சீலாவு எருசலேம் சபையில் விசேஷித்தவனாயிருந்தபடியால், சங்கத்தாரால் அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கே போய், தீர்க்கதரிசியாகச் சபையாருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லியிருந்தான். அவனோடுவந்த பர்சபா திரும்பிப்போனபோது, அவன் போகாமல் இன்னும் சிலநாளாய் அந்தியோகியாவிலே தங்கினான் (அப். 15. 22, 32, 34). அவன் பவுலைப்போல் ரோமை பேருடைய ஓர் யூதனாயிருந்து, ரோமாபுரிச் சிலாக்கியங்களில் பங்கு பெற்றவனாயிருந்தான் (16. 37-யைக் காண்க). அவன் இந்தப் பிரயாணத்திலே மாத்திரம் பவுலோடு போனான். 1 பேது. 5. 12-ஐப் பார்த்தால், அதற்கப்புறம் அவன் பேதுருவோடிருந்தான் என்பதைக் காணலாம். அங்கே சொல்லப்படும் சில்வானு, இந்த சீலாவுதான். அடுத்த வசனத்தைப் பார்த்தால், பரி. பவுலோடு ஒப்புரவாக்கப்பட்ட மாற்குவும் பரி. பேதுருவோடிருந்தான். பரி. பவுலுக்கும், பரி. பேதுருவுக்கும் இருந்த சம்பந்தத்தை இதினாலே நாம் அறியலாம்.

இந்த இரண்டாம் சுவிசேஷப் பிரயாணம் அப். 15. 36 முதல் 18. 22-வரை விவரித்துச் சொல்லப்படும். பவுலும், சீலாவும், முதலாவதாக, பவுலின் நோக்கத்துக்கு இசைவாக அவர் முந்திப்போன சில இடங்களுக்குப் போய்ச் சீஷர்களைச் சந்தித்தார்கள். தாம் கல்லெறியப்பட்ட லீஸ்திராவுக்கு வந்து அங்கே தீமோத்தேயுவைக் கண்டு மாற்கு முந்திச்செய்த ஊழியத்தைச் செய்யும்படி அவனைத் தெரிந்துகொண்டு, அவன் தாயார் யூதஸ்திரீயாயிருந்தபடியால் யூதர்கள் இடறலடையாதபடிக்கு அவனுக்கு விருத்தசேதனம் செய்தார்கள். அவர்கள் எங்கே போனாலும் எருசலேம் சங்கத்தார் செய்த தீர்மானத்தைச் சபையாருக்குத் தெரிவித்தார்கள் (16. 4, 5). அதினாலே எருசலேமி



லிருந்து வந்த யூதமார்க்கத்தமைந்த கட்சிக்காரர் செய்யப்பார்த்த பிரிவினையை நிறுத்திவிட்டார்கள். தேசப்படத்தைப் பார்த்தால் சீரியாவிலிருக்கும் அந்தியோகியாவும், பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவும் நடுவிலே, தர்சு, தெர்பை, லீஸ்திரா, இக்கோனியா என்கிற பட்டணங்கள் ஒரே பெரும்பாதையிலிருக்கின்றனவென்பதை நாம் காணலாம். இவை எல்லாவற்றிலும் கிறிஸ்து சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு பெருகிவந்தன.

இப்பட்டணங்களையெல்லாம் சந்தித்தபிற்பாடு, அப்போஸ்தலர் வேறுவிதமான வேலையைச் செய்வதற்குத் தேவனால் அழைக்கப்பட்டார்கள். இதுவரை அவர்கள் செய்த வேலையெல்லாம் ஆசியாக் கண்டத்திலேயே செய்யப்பட்டது: இப்போதோ ஐரோப்பாக் கண்டத்தில் வேலைசெய்ய பரிசுத்த ஆவியானவரால் அழைக்கப்பட்டார்கள்.

## Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

(தொடர்ச்சி)

'பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.' யோவா. 7. 37-39.

இந்த எபேசுவின் ஜனங்கள், மறுபடியும் தாகம் எடுக்கிற பூமிக்குரிய தண்ணீருக்குச் சமானமான உலகம், மாமிசமாகிய இவைகளின் இச்சையை வெறுத்தவர்களாய்க் காணப்பட்டாலும், அவர்கள் உள்ளம் இன்னும் வறண்டு விடாய்த்துதானிருந்தது. ஏனெனில் அவர்கள் தங்கள் மனந்திரும்புதலிலே மாத்திரம் மனச்சமாதானத்தைத் தேடினார்கள். அவர்கள் இன்னும் கிறிஸ்துவினிடம் போய் அவர் கொடுக்கும் தண்ணீராகிய ஆவியானவரை உட்கொள்ளவில்லை. அவரிடம் போய் அவரை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டபோதோ ஆவியானவர் அருளப்பட்டார்.

2-ம் நிபந்தனையைக் கவனிப்போம், அதாவது, கிறிஸ்துவை விசுவாசித்தால்மாத்திரம் போதாது, மனந்திரும்புதலும் அத்தியாவசியம்.

இல்லாவிட்டால் ஆவியானவர் அருளப்படுவதில்லை. இதை ரூபிக்க
அப். 8. 5-25 வரையிலும் கவனிப்போம். இங்கே சமாரிய ஜனங்கள்,
பிலிப்பு கிறிஸ்துவைப்பற்றிப் போதித்தபோது, அவர்கள் அவரு
டைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்படியிருந்தும்
அவர்கள் ஏன் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவில்லை.
ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள்; மெய்தான்.
ஆனால் அது போலி விசுவாசமாயிருந்தது. அவர்களிடத்தில் தேவ
னுக்கேற்ற மனந்திரும்புதலில்லையாதலால் அவர்கள் இருதயம் கிறி
ஸ்துவுக்குத் தூரமாயிருந்தது; அவரோடு உண்மையான ஐக்கிய
மில்லை. அவர்களில் விசேஷித்தவனாயிருந்த மாயவித்தைக்காரனாகிய
சீமோன் என்பவனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான் என்று
சொல்லியிருக்கிறது. மற்றவர்கள் எல்லாரும் பிறகு பரிசுத்த ஆவியான
வரைப் பெற்றதாகச் சொல்லியிருந்தாலும், இவனோ அந்த வரத்திற்
குப் பாத்திரனற்றவனாய்ப் போனான். ஏனெனில் 'அவன் இருதயம்
தேவனுக்குமுன்பாகச் செம்மையாயில்லை.' அவன் தன் பாவங்களை
முற்றிலும் வெறுத்து மனந்திரும்பாமல், பரிசுத்த ஆவியானவரை
பணத்தினால் பெறலாம் என்று எண்ணினான். ஆகவே மெய்யான
மனந்திரும்புதலும் அவசியம் வேண்டும்.

மேற்படி 2 நிபந்தனைகளையும் சரியாய்க் கைக்கொள்ளுகிறவன்
உள்ளத்தில் மெய்யாகவே பரிசுத்த ஆவியானவர் தமது பிரசன்னத்தை
வெளிப்படுத்துகிறார். அவனை ஒரு புது நிலைமையிலும், புது அனு
பவத்திலும், புது ஜீவியத்திலும் நடத்தப் பார்க்கிறார். அவன் ஆவி
உயிர்ப்பிக்கப்படுகிறது. அவன் தன் உள்ளத்திலிருந்த பாவ அடி
மைத்தனத்திலிருந்து நீங்கி விடுதலைப்பெற்றவனாக, அவன் ஆநந்தங்
கொள்ளுகிறான். அவன் உள்ளம் அன்பினாலும், சந்தோஷத்தினா
லும், சமாதானத்தினாலும் நிறைந்திருக்கிறதாகக் காட்டுகிறான். அவன்
தேவனைத் தன் பிதாவென்றும், மற்ற மனுஷனைத் தன் சகோதரன்
என்றும் எண்ணி அவனை நேசிக்க ஆரம்பிக்கிறான்.

## பரிசுத்த ஆவி

ஒருவன் மெய்யாய் மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தில் விசு
வாசம் வைக்கும்போது மெய்யாகவே அவன் பரிசுத்த ஆவியைப்
பெற்றுக்கொள்ளுகிறான் என்று இதுவரையிலும் கவனித்தோம்.
நாம் இனி இந்தப் பரிசுத்த ஆவியைப்பற்றி இன்னம் அதிக திட்ட
மாய் அறியவேண்டும். பரிசுத்த ஆவி யாரென்றும், அவர் தன்மை,
தொழில் இன்னதென்றும் நாம் அறியாவிட்டால் நாம் கிறிஸ்து
வுக்குள்ளான ஞானவளர்ச்சியில் சரியானபடி வளரமுடியாது. பிதா



வாகிய தேவன் பாவிகளான மனுஷருக்குத் தமது குமாரனுக்குள்
ஏற்படுத்தியிருக்கிற இரக்ஷிப்பை அடைந்துகொள்ள எப்படி ஒரு
மனுஷன் இயேசுகிறிஸ்துவை அறிந்து விசுவாசத்தினால் அவரை
ஏற்றுக்கொண்டு, அவர் மரணம் உயிர்த்தெழுதலில் பங்குபெற வேண்
டியவனாயிருக்கிறானோ, அப்படியே அவர்மூலமாய் வரும் இரக்ஷிப்பு
அந்த மனுஷன் உள்ளத்தில் நிறைவேற, அவன், பரிசுத்த ஆவி
யானவரைப் பெற்று அவரை அறிந்து அவரால் நடத்தப்படவேண்
டும். பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் மனுஷ உள்ளத்
தில் இரக்ஷிப்பின் கிரியை நிறைவேறுவது அசாத்தியம். ஆகவே
நாம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும் சரியான அறிவுடையவர்களா
யிருக்கவேண்டியது அத்தியாவசியம். பாவிகளாகிய சகல தேசத்து
மனுஷர்களுக்கும், எக்காலத்தாருக்கும், எந்நிலைமையுள்ளோருக்கும்
இரக்ஷிப்பை உண்டுபண்ண, தேவகுமாரன் ஒரு இடத்தையும், ஒரு
காலத்தையும், ஒரு சாதியையும் தெரிந்துகொண்டு, உலகத்தாரின்
பாவத்திற்காகத் தமது சரீரத்தில் பாடுபட்டுச் சிலுவை மரத்தில்
ஒரேதரம் தம்மைத்தாமே ஏகபலியாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து,
மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, தேவனுக்கென்று பிழைக்க மறு
படியும் உயிர்த்தெழுந்திருக்கச் சித்தங்கொண்டார் என்று சுவிசே
ஷங்கள் கூறுகிறது. இவர் ஒரு இடத்திலும் ஒரு சாதியின் மத்தி
யிலும் செய்த கிரியையைச் சகல தேசமும், சகல சாதிகளும் அறிந்து
விசுவாசிக்கத்தக்கதாக அது கூறி யறிவிக்கப்பட்டாலொழிய மற்றப்
படி அவர்கள் எப்படி அதை அறிவார்கள்? இவர் சகல இடத்தி
லும், சகல மனுஷர் நடுவிலும் ஏககாலத்தில் போய் வசிக்கவும் தாம்
நிறைவேற்றின இரக்ஷிப்பைக் கூறி யறிவிக்கவும் அவர்கள் உள்ளங்
களில் இரக்ஷிப்பை நிறைவேற்றவும் அவர் மனுஷ சரீரத்தில் இருக்
கும்வரையில் கூடாத காரியம். ஆகவே தம்மோடு வசித்து, தாம்
செய்தவைகளைக் கண்டவர்களும், அவர் அடைந்த மரணத்தையும்
உயிர்த்தெழுதலையும் கண்ணாரக் கண்டு விசுவாசித்தவர்களுமான தமது
சீஷர்களை நோக்கி: 'நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல ஜாதிகளையும்
சீஷராக்கிப் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்
களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளை
யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உப
தேசம்பண்ணுங்கள்' என்று கட்டளைகொடுத்தார். அந்தச் சீஷர்கள்
இந்தக் கட்டளையைப் பெற்றாலும், முதலில் சில நாள்வரையிலும்
அதன்படி செய்யக்கூடாதிருந்தார்கள். ஏனெனில் அவர்களே இன்
னம் கிறிஸ்து உண்டாக்கின இரக்ஷிப்பின் பெலனைத் தங்கள் உள்
ளத்தில் உணரவில்லை. அவர் உண்டாக்கின இரக்ஷிப்பின் கிரியை

JL
Ω6m211,N10VE
N12
16128

யைக் கண்ணாரக் கண்டு விசுவாசித்தார்களானாலும் அவர்கள் உள்ளத்தில் யாதொரு பெரிய மாறுதல் உண்டாகவில்லை. இன்னம் அவர்கள் பயங்காளிகளாகவும், அறிவில்லாதவர்களாகவும், உலகசிந்தையுள்ளவர்களாகவும், தைரியமற்றவர்களாகவும், அநேக விஷயங்களில் தவறுதலுள்ளவர்களாகவுமிருந்தார்கள்; கிறிஸ்துவைப் பகிரங்கமாய் அறிக்கையிட பயந்தார்கள். காரணம் என்ன? அவர்கள் இன்னும் உன்னத பலத்தால் இடைகட்டப்பட்டுப் போஷிக்கப்படவில்லை; அவர்கள் இன்னம் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறாதிருந்ததே காரணம். கிறிஸ்து அவர்களோடு இருந்தாலும், அவர் அப்போது சரீரத்திலிருந்தபடியால், அவர்கள் உள்ளத்தில் வாசம்செய்யக்கூடாதிருந்தது. அவர் பரத்திற்கேறி இன்னம் மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை. ஆகையால் கர்த்தர் சீஷர்களை நோக்கி: 'நீங்கள் எருசலேமைவிட்டுப் போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்றார் (அப். 1. 5, 8). அவர் அவர்களுக்குமுன் சொன்னபடியே பரத்திற்குப் போய்ப் பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்று அவர்கள்மேல் பொழிந்தருளினார். அந்தச் சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபிறகு, அவர்கள் மெய்யாகவே பெலனடைந்து மாக்ஷிமையான காரியங்களைச் செய்துமுடித்தார்கள் என்பதற்கு அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகமே சாக்ஷி. ஆகவே பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு உள்ளத்திலும் பிரவேசித்த பிறகுதான் இயேசுகிறிஸ்து சரீரத்தில் செய்துமுடித்த இரட்சண்ய கிரியை அந்த உள்ளத்தில் ஆவியின் பிரகாரம் நிறைவேறுகிறது. எப்படியெனில், கிறிஸ்து பாவத்திற்காகத் தமது சரீரத்தில் எப்படிப் பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, தேவனுக்கென்று ஜீவிக்கிறாரோ, அப்படியே கிறிஸ்துவை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொருவனும் ஆவியின் பிரகாரம் பாவத்திற்காகப் பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து தேவனுக்கென்று ஜீவிக்கிறவனாயிருக்கிறான் என்று பரி. பவுல் ரோ. 6. 1-11-ல் சொல்லுகிறார். விசுவாசிக்குள் இப்பேர்ப்பட்ட மாறுதல் காணப்படுவதற்குக் காரணமென்ன? அவன் உள்ளத்தில் கிறிஸ்துவின் ஆவியானவர் வாசம்செய்கிறதே காரணம். (ரோ. 8. 10, 11.)

பாவிகளின் ஈடேற்றத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரின் சகாயமும் அதிக தேவையாயிருப்பதால், புதிய ஏற்பாட்டின் புஸ்தகங்களில்



அவரைப்பற்றியும் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர்களில் விசேஷித்தவர்களான பரி. யோவான், பரி. பேதுரு, பரி. பவுல் என்பவர்கள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் குறிப்புகளாகக் கவனித்தால் அதிக பிரயோஜனமாயிருக்கும்:—

பரி. யோவான் தமது சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி எழுதினதோடு, பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும் கிறிஸ்து சொன்னப்பிரகாரமே அதிக விளக்கமாய் எழுதியிருக்கிறார். ஆவியானவரைப்பற்றிய வசனங்கள் அவருடைய முதலாம் நிருபத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் அங்குமிங்கும் காணப்படுகின்றன. அவருடைய சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியானவர் எவ்விதமாய் மனுஷன் உள்ளத்தில் பிரவேசித்துப் புதுப்பிக்கிறார் என்று 3-ம் அதிகாரத்திலும், அவர் அந்த உள்ளத்தில் எவ்விதமாய்ப் பெருகி நிரம்பித் தமது பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார் என்று 4-ம் அதிகாரத்திலும், அவர் அந்த உள்ளத்திலிருந்து எவ்விதமாய் வழிந்து அநேக நதிகளாகப் பூலோகத்துக்குப் பாய்ந்து செழுப்பிக்கிறார் என்று 7-ம் அதிகாரத்திலும் குறிப்பாய்க் காட்டுகிறார். மேலும் 14, 15, 16-ம் அதிகாரங்களில் ஆவியானவரைப்பற்றியும், அந்த ஆவியானவரால் தமது தொண்டர்களுக்கு உண்டாகப்போகும் பெரும் நன்மைகளைப்பற்றியும் இயேசு சொன்னவைகளைத் தெளிவாய் எடுத்துக் கூறுகிறார். (இந்தப் பின் 3 அதிகாரங்களில் ஆவியானவரைப்பற்றி எழுதியிருப்பதை பிறகு விபரமாய்க் கவனிப்போம்).

பரி. பேதுரு பரிசுத்த ஆவியின் வருகையைப்பற்றி, அப். 2-ம் அதிகாரத்திலுள்ளபடி, பெந்தெகோஸ்தே என்னும் மகா நாளில் செய்த பிரசங்கத்தில் எடுத்துக் கூறி அவரைப் பெற்றுக்கொள்ளும் வகையைக் காண்பித்ததைக் கவனிப்போம். பரிசுத்த ஆவிக்காகக் காத்திருந்து ஜெபஞ்செய்துவந்த அப்போஸ்தலர் முதலான சீஷர்களின் மேல் ஆவியானவர் இறங்கி அவர்களை நிரப்பி, பல பாஷைகளைப் பேசச்செய்ததைக் கண்ட ஜனங்களில் சிலர் அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரிகாசம்பண்ண ஆரம்பித்தபோது, பரி. பேதுரு அவர்களை நோக்கி, அவர்கள் நினைத்தது பிசகு என்றும், தேவன் பூர்வத்தாருக்குப் பரிசுத்த ஆவியின் வருகையைப்பற்றித் தீர்க்கதரிசிகளின்மூலமாய் முன்னறிவித்தபடி (யோவே. 2. 28-32; ஏசா. 44. 3; எசே. 36. 27; 39. 29; சக. 12. 10) நடந்தேறி வருகிறது என்றும், முன்னுள்ள தீர்க்கதரிசிகளும் பக்திமான்களும் மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையைப்பற்றியும், அவர் பாடுகளைப்பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தபடியே நடந்தேறினபடியால்,

மேசியாவின் காலமாகிய கடைசிநாட்களில் பரிசுத்த ஆவியை ஊற்றுவதாகச் சொன்ன தீர்க்கதரிசனமும் நிறைவேறவேண்டியது அவசியம் என்றும் காட்ட யோவேல் கூறின தீர்க்கதரிசனத்தை (யோவே. 2. 28-32-ல்) எடுத்துக் கூறுகிறார். மேலும், அவர்கள் சிலுவையில் அறைந்த இயேசுகிறிஸ்துவே தேவனுடைய கரத்தினால் உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று அவர்களி அப்பொழுது கண்டதும், கேட்டதுமாகிய அதைப் பொழிந்தருளினார் என்றார் (அப். 2. 33). இதை அவர்கள் கேட்டபோது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து: 'சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்' என்றார்கள் (37-ம் வசனம்). அப்பொழுது பேதுரு, அவர்கள் யாவரும் தங்கள் எசமானனும் ஆண்டவருமாகிய இயேசுவைக் கொலைசெய்த பாதகராயிருந்தாலும், அப்பேர்ப்பட்டவர்களுக்கும் இயேசு மரித்தபடியால், பரிசுத்த ஆவி அவர்களுக்காகவும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருப்பதை (யோவே. 2. 28) எண்ணி, அவர்களை நோக்கி, பரிசுத்த ஆவியின் 'வாக்குத்தத்தம் உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது. நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்றார். (வச. 38, 39.)

(இன்னும் வரும்)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
RECEIVED
13 AUG 1912
MADRAS.

No. 75 ஆகஸ்டு 1912

# வேதியர் விளக்கு

## Abraham—A Character Sketch

By the Rev. G. S. Vedanayagam

## ஆபிரகாம்

(தொடர்ச்சி)

### I. ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்

'என் சிநேகிதனான ஆபிரகாம்' (ஏசா. 41. 8): 'உலகத்துக்கு
சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்'
(யாக். 4. 4): 'உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூரா
திருங்கள். ஒருவன் உலகக்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதா
வின் அன்பில்லை' (1 யோவா. 2. 15). ஆபிரகாம் தேவனுடைய சிநே
கிதனாயிருக்கும்படி அவனுக்குச் சென்ற செலவை இவ்வளவு என்று
அறிந்துகொள்வது மிகவும் நல்லது. ஒருவர் சொல்லுகிறபடி அவன்
தேவனுக்குச் சிநேகிதனாயிருக்க விரும்பி உலகத்தின் சப்தபந்தங்களை
யும் கட்டறுத்துவிட்டானாம். அதாவது அவன் சரித்திரத்தை வாசிக்
கும்போது உலகத்தில் ஏழு காரியங்களை அவன் துறந்துவிட்டுத் தேவ
னைப் பின்சென்றான் என்று வாசிக்கிறோம். மேற்சொன்ன வாக்கி
யங்களில் வருகிற உலகம் என்ற சொல்லுக்கு அர்த்தம் அறிந்து
கொள்வது உசிதம். இங்கே உலகம் என்றால் தேவனுடைய மகிமைக்
கும் நமது பக்திக்கும் இடையூறாயிருக்கிற யாவுமே. அது நன்மை
யானாலுஞ் சரி, தீமையானாலுஞ் சரியே. நமக்கு உலகத்தில் ஞாயமாய்
இருக்கிறதும் இருக்கவேண்டியதுமான சகல பாக்கியங்களுங்கூடப்
பக்திக் கிடையூறாகும்பக்ஷத்தில் உலகமாகிறது. ஆபிரகாமின் சரித்
திரத்தில் இவைகளை அறிந்துகொள்ளலாம். அவன் தேவநேசத்தை
நாடி உலகபாசத்தை எவ்விதமாய் விட்டுவிட்டான் என்பதைக் கவ
னிப்போமாக.

1. குடும்பத்துறவு: 'நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ' (ஆதி. 12. 1) என்று கர்த்தர் ஆபிராமுக்குக் கட்டளையிட்டார். அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தான் போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் (எபி. 11. 8): தன் இனத்தைவிட்டு அன்னியர் நடுவில் அலைந்து திரிகிறவனானான். வீட்டைவிட்டுக் கூடாரவாசியாயிருக்கச் சம்மதித்தான். கண்கண்ட பாக்கியங்கள் யாவையும் வெறுத்துக் காணாத பாக்கியத்தை மனதில் எண்ணிக்கொண்டு தேவனைப் பின்சென்றான். நாம் தேவனுடைய சிநேகிதராய் இருக்கவேண்டுமானால் நாம் வெறுத்துவிடவேண்டியவைகள் நம்மிடத்தில் இல்லையா? நமது அருமை ரக்ஷகரான எகோவா இதேவிதமாகச் சொல்லி அழைத்த சீஷரையே பிற்காலத்தில் சிநேகிதர் என்று அழைத்தார் என்று பார்க்கிறோம். 'தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல.' 'என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைவான்' என்றார் (மத். 10. 37, 38; 19. 29). இவ்வார்த்தைகளைக் கேட்டுத் தம்மைப் பின்சென்ற சீஷரை நோக்கி நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை. நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்' என்பதாகச் சொல்லுகிறார். (யோவா. 15. 14, 15.)

2. துணைவற்றுறவு: ஆபிரகாம் அந்நிய தேசத்திலே துணைக்குத் துணையாகத் தொடர்ந்துவந்த தன் சகோதர புத்திரனை நீதிமானாகிய லோத்தையும் விட்டுப் பிரியவேண்டியதாயிருந்தது. தன் சமாதான ஜீவியத்தையும் சகோதர நேசத்தையும் பழுதாக்கக்கூடிய ஒரு நல்ல தோழனோடு இருந்து மிகுந்த சகாயங்களைப் பெற்றுக்கொள்வதைவிடத் தேவ துணையைக்கொண்டு தனித்திருப்பதே நலமென்று எண்ணினான். தன் ஆத்துமாவிலும் குடும்ப வாழ்விலும் தனது சம்பாத்தியத்திலும் தனக்கு ஆலோசனை சொல்லும் லோத்தின் கூடாரத்தை நோக்கிப் போய் நல்ல சம்பாஷணைசெய்து மனமகிழ்ச்சியோடு தன் கூடாரத்துக்குத் திரும்பிவரும் ஆபிரகாமுடைய பாக்கிய நிலைமையை



நமது ஞானக்கண்ணினால் பார்த்திருக்கலாம். இவ்விரு குடும்பத்தாரும் ஒருவர்வீட்டுக் கொருவர்சென்று, பரம காரியங்களைப் பேசி ஜெபித்து பக்தி வளர்ச்சியடைந்து பரஸ்பர விருந்துண்டு மகிழ்ந்திருந்த சந்தோஷத்தை நமது மானதக்கண்ணால் பார்த்திருக்கலாம். என்றாலும், இவ்விரு குடும்பத்தாருக்குள்ளும் வேலைக்காரருக்குள்ளும் உண்டான அற்ப வாக்குவாதங்களினால் இம்மனவருத்தமான பிரிவு உண்டாக நேரிட்டது. 'ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்தினுடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும், பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்' (ஆதி. 13. 7). இவ்வசனத்தில் கோடிட்ட வார்த்தைகளைக் கவனித்தால் மெய்த்தேவனை வணங்கும் இவ்விரு குடும்பத்தாருக்குள்ளும் அன்பு தாழ்ச்சி நேரிடுவதை மேற்படி அஞ்ஞானிகள் கவனித்தால் மெய்ப்பக்திமார்க்கத்துக்கு அவர்களால் அவதூறு உண்டாக ஏதுவாயிருந்ததென்று ஊகிக்கலாம்.' 'உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு என்று நமது இரட்சகர் சொன்ன கட்டளையை, அவரை முன்னாடியே கண்டு களிகூர்ந்த ஆபிரகாம் நிறைவேற்றினானென்று பார்க்கிறோம். இந்த அருந்துறவைத் தேவன் அங்கீகரித்தார் என்று அடுத்த வாக்கியங்கள் காட்டுகின்றன. 'லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு கர்த்தர் ஆபிராமை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப் பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்' என்றார் (ஆதி. 13. 14, 15). 'கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் நீர்வளம் பொருந்தினதாயிருந்த' சோதோமை லோத்து தெரிந்துகொள்ள, ஆபிரகாம் வேறு பாகத்தைத் தெரிந்துகொண்டு லோத்தைவிட்டுப் பிரிந்ததால் கர்த்தர் இந்த ஆசீர்வாதவாக்கை அவனுக்கு அருளினார் என்று பார்க்கிறோம். 'என் நாமத்தினிமித்தம் ஒன்றை விட்டவன் நூறத்தனை அடைவான்' என்று நமது ரட்சகரின் வார்த்தைகளை இது நினைப்பூட்டவில்லையா? நமது உடன் சகோதரரோடு நாம் இப்படி நடந்துகொண்டால் நாமும் தேவனுடைய சிநேகிதராவோம் என்பதற்குச் சந்தேகமென்ன? தேவ ஊழியருக்குள் சம்பள உயர்ச்சி, இடவசதி, உத்தியோக மேன்மை இவைகளைப்பற்றி உண்டாகும் போட்டி வாதங்களுக்கு மாற்று மருந்து இங்கே இல்லையா? சபையாருக்குள் உண்டாகிற தாயாதி வழக்கு, சுதந்தரவாதங்களுக்கு இதிலே பரிகாரமில்லையா? 'உன் வஸ்திரத்தை

எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும்
விட்டுவிடு, உன்னை ஒருவன் ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணி
ளுல் அவனோடுகூட இரண்டு மைல்தூரம் போ' என்று நமது ரட்சகர்
சொன்ன சுயவொறுப்பின் பிரமாணத்தை நாம் சிரமேற்கொண்டு
நடப்போமாயின் தற்காலத்தில் திருச்சபையில் நடந்துவருகிற எத்
தனையோ குழப்பங்கள் நின்றுபோய் நமது தேவனுடைய நாமம்
புறஜாதிகளுக்குள்ளே எத்தனையோ மகிமை பொருந்தினதாயிருக்கும்.

3. நேட்டத்துறவு: தேவனுக்குச் சிநேகிதனுக நடந்துகொள்ள
தீர்மானித்த ஆபிரகாம் தன் உழைப்புக்குரிய பலனுகிய சம்பளத்தை
யும் விட்டுவிட்டான். எப்படியெனில், சோதோமின் ராஜாவையும்
அவர் கூட்டாளிகளான நான்கு அரசர்களையும் கெதர்லாகோமேரு
என்ற அரசனும் அவன் சிநேகிதர்களான மூன்று அரசர்களும்
சேர்ந்து போர்புரிந்து முறியடித்துச் சிறைப்பிடித்துச் சொத்துக்
களையும் கொள்ளைகொண்டுபோனுர்கள். "எட்டியோடு சேர்ந்த இலவும்
தீப்பட்டது" என்ற பழமொழிப்படி சோதோமிலிருந்த லோத்தின்
குடும்பமும் அத்துடன் சிறைப்பட்டுப்போனது. இதைக் கேள்விப்
பட்ட ஆபிரகாமின் உதிரம் கொதிகொண்டது. அவன் தன் அய
லகத்தாரையும் தன் வேலைக்காரரையும் திரட்டிக்கொண்டு கெதர்லா
கோமேரைத் தொடர்ந்துபோய் 'ராக்காலத்திலே அவனும் அவன்
வேலைக்காரரும் பிரிந்து பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து அவர்
களை முறியடித்துச் சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவந்தான்.
தன் சகோதரனுகிய லோத்தையும் அவனுடைய பொருள்களையும்
ஸ்திரீகளையும் ஜனங்களையும் 'திருப்பிக் கொண்டுவந்தான்' (ஆதி. 14.
13, 14). இதைக் கேள்விப்பட்ட சோதோமின் ராஜா மகா சந்தோஷத்
தோடு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுவந்து 'ஆபிரகாமை நோக்கி,
ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்
ருன். அதற்கு ஆபிரகாம் சோதோமின் ராஜாவைப் பார்த்து, ஆபிர
காமை ஐசுவரியவானுக்கினேன் என்று நீ சொல்லாதபடிக்கு நான்
ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்
டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று
வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுகிய
கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்ருன்' (ஆதி.
14. 21-23). ஆபிரகாம் யுத்தவீர பராக்கிரமனுயிருந்தாலும் இந்த மண்
ணுலகின் மகிமையை நாடும் மன்னர்களைப்போன்றவன் அல்ல என்று
காட்டினதுமன்றித் தான் சேவிக்கிற எகோவாவையும் இப்பூவேந்
தர்களுக்குமுன் உயர்த்திக் காட்டினுன் என்று இதனுல் அறிகிறோம்.



இந்தப் பூமி முழுவதையும் கர்த்தர் எனக்கும் என் சந்ததிக்கும் என்
றென்றைக்கும் சுதந்தரமாய்க் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்
கிருரே. நானும் யுத்த பராக்கிரமனுக ஒரு சிறிய சேனையைக்
கொண்டு நாலு வெற்றிவேந்தர்களின் சேனைகளை முறியடிக்கக்கூடிய
வனுயிருக்கிறேன். என்னை மதிக்கும் சிநேகிதர்களும் என் தயவை
நாடும் அரசர்களும் என்னை ஆசீர்வதிக்கக் குருராஜனுகிய மெல்கி
சேதேக்கு மிருக்கிறபடியால் நான் ஏக சக்ராதிபதியாகிறதற்கு
இதுவே சமயம் என்று அவன் எண்ண இடமிருந்தது. என்ருலும்
தேவசித்தத்தையே நோக்கி நடக்கிற தேவனுடைய சிநேகிதனுன
ஆபிரகாம் இந்தச் சுதந்தரங்களையெல்லாம் நாடினவனல்ல. இந்த மகுட
முடிமன்னர் சிலாக்கியத்தையும் அவன் உலகமென்று வெறுத்து
நடந்தான். 'நான் உலகத்தான் அல்லாததுபோல நீங்களும் உலகத்
தாரல்ல' என்று நமது ரட்சகர் சொன்னுர். சகோதரரே! நமது
ஊழியத்தின் நோக்கமென்ன, சம்பளம் வாங்குவதா? நமது பிரயாசத்
தின் கருத்தென்ன, ஐசுவரியராவதா? நமது உழைப்பின் நோக்க
மென்ன, அதிகாரமடைவதா? நமது சித்தி செல்வாக்குகளின் மகிழ்ச்சி
என்ன? உன்னதமான தேவனை உயர்த்திக் காட்டுவதா? நமது ஜீவிய
நோக்கத்தை ஆராய்ந்து பார்ப்போமாக. நாம் தேவனுடைய சிநேகி
தராயிருப்போமாக,

இச்சம்பவத்தில் இன்னொரு படிப்பனையும் நமக்குண்டு. ஆபிரகாம்
இந்த ஜெயத்தால் ஒரு பெரிய கூட்டமான வல்லமையோடு எதிரி
யாகிக்கொண்டான். கெதர்லாகோமியரும் அவனைச்சேர்ந்த மூன்று
அரசர்களுமே அந்த மகா வல்லமை. உலகப்பிரகாரமாக இவன் தன்
னைக் காத்துக்கொள்ளும்படி சோதோமின் அரசன் முதலானவர்க
ளோடு சிநேகம் பண்ணிக்கொள்ளவேண்டியவன். ஆனுல் ஆபிர
காமோ அப்படிச் செய்யவில்லை. அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் எதிரி
களை மடக்கும்படி சமயத்துக்கென்று குணப்படாதவர்களையும், துன்
மார்க்கரையும் சிநேகமாக்கிக்கொள்ளுகிறதில்லையா? பாவத்தோடு
எதிர்த்துநிற்கும்படி வேறு சில பாவங்களைக் கருவியாக உபயோகிக்
கிறதில்லையா? துன்மார்க்கத்தைச் சங்கரிக்க, துன்மார்க்கமான யோச
னைகளையும் தந்திரங்களையும் கையாடுகிறதில்லையா? இப்படிச்
செய்வோமானுல் நாம் தேவனுடைய சிநேகிதர்களாயிருக்கமுடியாது.
தேவனுடைய சிநேகிதனுன ஆபிரகாம் தனக்கு வரவேண்டியிருந்த
அபாயங்களைக் கண்டும் மாம்சத்தையும் ரத்தத்தையும் ஆலோசனை
கேளாமலும் மனுஷரை நம்பாமலும் கர்த்தரையே துணையாகக்கொண்
டான். இதனுல் வந்த பாக்கியத்தைப் (15. 1-ல்) பார்க்கலாம்.

‘இந்தக் காரியங்கள் நடந்தபின்பு கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி அவர் ஆபிரகாமே நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும் உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்’. நீ எதிரிகளுக்குப் பயப்படாதே, நான் உன் கேடகம். நீ என்னை மகிமைப்படுத்தும்படி உனக்குரிமையான சொத்துக்களைத் துறந்துவிட்டாய். அதற்குப் பதிலாக நான் உனக்குப் பெரிய பலனாக இருக்கிறேன் என்று தேவன் சொல்லுகிறதாகத் தெரிகிறது. பிற்காலத்தில் இஸ்ரவேலர் தங்கள் எதிரிகளுக்குப் பயந்து கர்த்தரிடத்தில் அடைக்கலம் தேடாமல் அன்னிய அரசர் பெலத்தை நாடிப்போன காலத்தில் எரேமியா தீர்க்கதரிசி, அவர்களைக் கடிந்துகொண்டு ‘மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு கர்த்தரை விட்டுவிலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல் வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும் குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான். கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்துக் கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும் உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும் மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்’ (எரே. 17. 5-8) என்று கூறுகிறார். தேவஊழியனே, உன் நம்பிக்கை என்ன? உன் பெரிய சபையா? அதின் அருமையான ஆலோசனைக் கூட்டத்தாரா? உன்னை மேற்பார்க்கிற மிஷனெரியா? உன்னை ஏற்படுத்தின சங்கத்தாரா? அல்லது உன்னதமான தேவனா என்று யோசித்துப்பார். முதலாவது தேவனும், இரண்டாவது மிஷனெரி துரையாகிய நீங்களும், மூன்றாவது எங்கள் போதகருந்தான் எங்கள் தஞ்சம் என்று சொன்ன ஒரு ஸ்திரீயைப் பார்த்து, அந்த மிஷனெரி துரை முதலாவது தேவனும் இரண்டாவது தேவனும் மூன்றாவது தேவனும் என்று மறுமொழி சொன்னாராம்.



# The Pastor's Missionary Methods

**By the Rev. N. Devasagayam**

## ஜீவதூதுக்குக் குரு சபையைத் தூண்டும் விதங்கள்

(தொடர்ச்சி)

பிரசங்கபீட வாயிலாய் குரு சபையை ஜீவதூது ஆகிய மிஷன் வேலைக்குத் தூண்டுவது விசேஷமாய் ஞாயிறு வாரங்களில் நடைபெறுவதாகும். அதைத்தவிர வேறு காலங்களில் சபையைக் கூட்டிப் பேசுவதும் அவசியம். அதற்கு மிஷனரிச் சபைக்கூட்டம் அல்லது ஜீவதூதுக் கூட்டம் என்று பெயரிடலாம். ஞாயிறொழிந்த வேறு நாட்களில் ஆங்காங்கு சபைகளில் ஆராதனை வைப்பது வழக்கமே. இந்த ஆராதனை நாளையே ஒருமுறை ஜீவதூதுக் கூட்டநாளாக்கலாம். அப்படிச் செய்யும்போது, அதை முந்தியே சபைக்கு அறிவித்து, அதின் நடவடிக்கை விபரத்தையும் சபைக்கு வெளிப்படுத்தவேண்டும். வழக்கமான பிரகாரமே நடவடிக்கை நடத்துவதில் சபையின் உற்சாகத்தை மூட்டிவிடுதல் சங்கடமாகுமென்று கண்டால், ஒருவாறு மாற்றலாம். இடையிடையே கேட்போர் மனதிற் கினிய வாத்திய வாசிப்பாவது கீதமுழக்கமாவது தமிழ் இராகங்களில் எளியவும் இனியவுமான இராகங்களிற் செய்த ஞானப்பாடல்களாவது விரவிவரலாம். பாடலுக்குப் பின் பாடலாய் பாடல்களே வரலாகாது. ஜெபமும் முகமுகமாய்ப் பேசும் ஜீவதூதுப் பேச்சுகளும் முக்கியம். ஆகையால், அவைகளுக்கு உதவியாகவே பாடல்கள் இருக்கவேண்டும். மிஷனரிப் பிரசங்கம் உபந்நியாசமாய் எழுதிப் படிக்கப்படக்கூடாது. எழுதிப் படிக்கிறது சரியாய்ச் செய்யக்கூடியவர்கள் ஆயிரத்துக்கொருவரே. ஆகவே, எழுதிப் படித்தால் ஜனங்கள் உறங்குவார்கள். முகமுகமான பேச்சே பிரதானம். இந்தமாதிரிக் கூட்டங்கள் வருஷத்துக்குப் பன்னிரண்டு போதும். அவைகளை ஜீவனற்றவிதமாய் நடத்துவதில் பயனே வராது. உயிர்ப்பாயும் இனிப்பாயும் தடவைதோறும் கூட்டங்களை நடைபெறச்செய்ய வல்லவர்களைப் பொறுக்கி ஒரு கம்மிட்டி ஏற்படுத்தவேண்டும். இந்தக் கம்மிட்டிக்குக் குரு ஒரு விசைக்கயிறாயிருக்கவேண்டும். குரு முன்னரே தீர யோசித்து மேற்சொன்ன பன்னிரண்டு கூட்டங்களிலும் வரிசைக்கிரமமாய்ப் பேசவேண்டிய விஷயங்களைக் குறிப்பிட்டுப் பட்டிசெய்யவேண்டும். ஒவ்வொரு விஷயத்தையும்

இரண்டாவது: ஜீவதூதுக் கூட்ட நாட்கள் வாயிலாய்

கேட்போர் மனதிற்குக் கண்ணாடித் தெளிவாய்க் காட்டும்படி குரு முந்தியே பரிபூரணமாய் ஆராய்ந்து அவசியமற்றவைகளை நறுக்கித் தள்ளி முக்கியமானவைகளை இனிப்பாய்க் கோர்த்து சாதுரியமாய்க் காட்டக்கூடியவராயிருப்பது அவசியம். சமயத்தில் மனதிற்கு வந்ததைச் சொல்லலாம் என்றிருக்கிற குரு மடிகிற மானிட ஆத்துமாக்களின் விலையுயர்த்தி யறியாதவர். அவருடைய பேச்சு உள்ளங்களுக்குள் வரவே வராது. குருவே இவ்விதக் கூட்டங்களில் பேசுவதில் முக்கியமான பாகத்திற்குப் பொறுப்பாளியாயினும், பேச வரம்பெற்ற சபையின் அவயவங்களையும், சாமர்த்தியமுள்ள அயலாரையும் இந்தக் கூட்டங்களில் பேசுவிக்கலாம். சபையை மனவுற்சாகமூட்டி ஜீவதாதுக்குத் தூண்டத்தக்க மனதசைக்கும் சங்கதிகளைப் பொறுக்கி யெடுத்து இந்தக் கூட்டங்களில் பேசுவது தகும். ஒருவரே நீளப் பேசுவதைவிட இருவர், மூவர் பேசுதல் நலம். இவ்வாறு இருவர், மூவர் பேசுங்கால் விஷயம் நீண்டு, கேட்போர் சலிக்காமல், அவரவர் பாகத்தைப் பத்து நிமிஷங்களுக்குள் அடக்கிப் பேசவேண்டும். நாகரீகம் பெருத்த இக்காலத்தில் இப்பேர்ப்பட்ட கூட்டங்களுக்கு உதவியாக அநேக உபகரணங்களுண்டு. மிஷன் ஸ்தானங்களையும் அவ்விடங்களில் மிஷன் வேலை நடக்கும் துறைகளையும் விளக்க பொருட்களை நிஜரூபில் காட்டும் கருவி (Stereophion) சிறந்தது. அதற்குத் தகுந்த படம்வரைந்த கண்ணாடிகளை அந்தந்த மிஷன்களின் தலைமை ஸ்தானங்களில் வாங்கலாம். அளவுகாட்டும் படங்களை அப்போதைக்கப்போது வேண்டியதற்குத் தக்கதாய் வரைந்துகொள்ளலாம். அவைகளைக்கொண்டு ஜீவதாது எவ்வளவு பலித்தது எவ்வளவு இன்னம் பலிக்கவேண்டுமென்று காட்டலாம். தேசம், இடம் இவைகளைக் காட்டும் படங்கள் அநேக மிஷன் சங்கதிகளுக்கு மகா அவசியமாகும். இவைகளைத் தவிர, மிஷன் ஸ்தானங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுகிற மிஷன் ரிப்போர்ட்டுகளைப் படிக்கிறதும் ஒருவாறு சரியே. ஆனால், அவைகளை நீளப் படிப்பது சரியல்ல. மனதைத் தட்டி யசைக்கும் சிறு சிறு பாகங்களைப் பொறுக்கி யெடுத்து, பேசுகிற குரல்போலவே படிக்கிற குரலுமிருக்கப் பழகினவர்கள் அவைகளை ஜனசமூகத்தில் படிக்கவேண்டும். இப்படி விஷயங்களைப் பொறுக்கிச் சேர்க்கத் திறமைசாலியான ஒருவரை அதற்கு நியமித்திருக்கவேண்டும். உலகத்தில் நடைபெறும் ஜீவதாது வேலையைப் பல்லோருக்கும் விளக்கும் நூதன புத்தகங்கள் வெளிப்பட்டு வாசிப்போருக்காகக் காத்திருக்கும்; வேளாவேளைகளில் அப்புத்தகங்களுள் சிறந்த எதையேனும் விஷயமாக்கி அது சொல்லுகிற காரியங்களை அம்சம் அம்சமாய் விளக்கிப் பேசலாம். ஆனால்,



இது செய்வதில் நேரம் பாழாகாமல் சாவதானமாய் வெள்ளிடை மலை போன்ற காரியங்களையே எடுத்துப் பேசுவது புத்தியாகும். சிற்சில வேளைகளில், ஜீவதாதுப் புத்தகங்கள் நிறைந்த ஒரு சாலைக்கு ஜனத்தை அழைத்துப்போய், இன்னின்ன முக்கிய விஷயங்கள் இன்னின்ன நூலில் அகப்படும் என்று சொல்லலாம். அப்படிச் சொல்லும்போதே சொல்லுகிற விஷயம் இனிப்பாய் மனதில்படும்படி சொல்லவேண்டும். அதினால், கல்வியறிவுள்ள சபையார் அப்பேர்ப்பட்ட நூல்களைத் தேடி வாசிக்கப் பழகுவார்கள். ஆனால், இப்படிப் புத்தக சாலைக்குள் பேசுகிறவர், தாம் எந்தப் புத்தகங்களைச் சுட்டுகிறாரோ அந்தப் புத்தகங்களை நன்கு ஆராய்ந்திருக்கவேண்டும். இல்லாவிடின், அவர் சுட்டினவற்றுள் தேடினது அகப்படாமையைக் காண்போர் நகைப்பார்கள்.

‘சிறுவத்தில் கல்வி சிலையிலெழுத்து’ ‘இளமைப் பழக்கம் சுடுகாடு மட்டும்.’ இப்படி அறிவுள்ள பெரியோர் சொல்லுகிறார்கள். செத்த உலகத்திற்கு ஜீவதாது அனுப்பவேண்டும் என்கிற சிறந்த முக்கிய கடமையை வளர்ந்தோருக்கு மாத்திரமேயன்றி இளமைப் பருவத்தோருக்கும் வலியுறுத்துவது குருவின் கடன். இளையாரைத் திரட்டி அவர்களைப் பற்பல பகுதிப்படுத்தி வேத உபதேசம் புகட்டுகிற ஓய்வுநாட் பாடசாலைகள், வாலிபரைத் திரட்டி அவர்களைக் கிறிஸ்துவின் இராச்சியத்திற்காக முயற்சியூட்டுகிற கிறிஸ்தவ முயற்சி சங்கங்கள், இப்பேர்ப்பட்டவை நம் காலத்தில் ஏற்பட்டுத் தழைத்துவருகின்றன. இளையார் கவனத்தையும் சிரத்தையையும் ஞானகாரியங்களில் செல்லுவித்து, அவர்களைத் திருமுயற்சிகளில் பழக்குவது எப்பேர்ப்பட்ட வல்லமை செய்யும் என்று திருச்சபை தற்காலத்தில்தான் அறியத் தலைப்பட்டிருக்கிறது.

**மூன்றாவது: கிறிஸ்தவ இளையோர் சங்கங்கள் வாயிலாய்**

வளர்ந்தோரொருவனைக் கிறிஸ்தவ முயற்சியில் கருத்துவைக்கத் தூண்ட எவ்வளவு பிரயாசை பிடிக்குமோ அவ்வளவே பிரயாசையைச் செலவிட்டால் இருபது இளையார்களை அந்த முயற்சியில் மனதுவைக்கப் பழக்கலாம். உலகெங்கும் கிறிஸ்தவ வாலிபர்களையும் பாலர்களையும் பதினைந்து, இருபது வருஷம், கிறிஸ்தவ ஜீவதாதில் பிரியம்கொள்ளும்படி போதித்துப் பழக்கினால் முழுத்திருச்சபையும் ஜீவதாதுக்கு வைராக்கியம் பற்றி யெரிகிறதாயிருக்கும். இளையோராலாவது பின்னுக்குப் பெரும்பயனாதலால், அவர்களைச் செவ்வையே பயிற்றி ஆளாக்குவதில் உலகில் கலைபயிற்றும் தவறாமுறைகளை குரு அநுசரிக்கக் கவனமும் சுறுசுறுப்புமுடையவராயிருக்கவேண்டும். சிற்றில்

கட்டியும் சிறு பறை கொட்டியும் விளையாடுகிற பாலப்பருவத்தார்
துவக்கிக் கல்வித் துறைகளில் இறங்கிப் பயில்கிற வாலைப்பருவத்தார்
வரையும் இளையோரை வசப்படுத்தி ஜீவதூதில் மனங்கவியச் செய்
வதே குருவுக்குப் பெருமை.

ஆதிவாரப் பாடசாலைகளில் தேவவசனத்தைப் புகட்டுகிறது
எங்கும் நடைபெறுகிற நன்முயற்சி. தேவதிருப்பணியையும் அவை
களில் அறிவுறுத்துகிறதும் அதையொத்த நன்முயற்சியாம். கனடிய
பிரஸ்பித்தீரிய சபை தன் ஆதிவாரப் பாடசாலைப் பத்திரிகைகளில்
பத்து நிமிஷத்திற்குக் காணத்தக்க மிகச் சிலவாகிய கேள்விகளையும்
அந்தக் கேள்விகளை யாதாரமாய் வைத்துச் சுருக்கமும் இனிப்புமாய்
மிஷன் விஷயங்களை விளக்கத்தக்க சங்கதிகளையும் பிரசுரிக்கின்றது.
ஆதிவாரப் பாடசாலைகளில் பாதி வருஷமேனும் முழுவருஷமேனும்
ஆரம்பத்தில் பத்து நிமிஷத்திற்குள் இனியவும் மனதசைப்பவுமான
மிஷன் சங்கதிகளை மாணுக்கருக்குத் தெவிட்டாத தெள்ளமுதாய்த்
தரவல்லார் இல்லாவிடின், அப்பாடசாலைகளில் வருஷத்தில் நாலு
முறையாவது, எட்டுமுறையாவது, இயன்றபிரகாரம், வழக்கமான
பாடங்களுக்குப் பதிலாய் ஜீவதூதுப் பாடங்கள் கொடுப்பது தகும்.
இதற்கு மேற்சொன்ன பாடசாலை மாணுக்கருக்கு ஏற்ற சிறு மிஷன்
சரித்திரப் புத்தகங்கள் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்
கள் கிடைக்கும்வரையும் குருவும் அவருக்கு உதவியாளரும் இளை
யோர் மனதைக் கவருகிற விஷயங்களைச் சேர்த்து உபயோகிப்பது
நலம். ஆதிவாரப் பாடசாலைகளில் கூட்டிவைக்கிற புத்தகங்களோடு,
மிஷன் சமாசாரங்களையும் சரித்திரங்களையும் வாங்கிவைக்கவேண்டும்.
புத்தகவைப்பே போதுமென்றிருக்கலாகாது. நம் மனதிற் பதியும்
அறிவுள் கண்வாயிலாய் வருவது நூற்றுக்கு எண்பது எனக் கணக்
கப்பட்டிருக்கிறது. ஆதலின், உலகத்திற்கு ஜீவதூது சொல்லுகிற
சங்கதிகளை மனதிற் சிலையிலெழுத்துப்போல் பதியப்பண்ண உருப்
படங்கள், அளவைக் காட்டும் படங்கள், தேசப்படங்கள், மிஷன் ஸ்தா
னங்களின் நூதன பண்டங்கள், இவை முதலிய சேர்ப்புகளும் இருக்க
வேண்டும். ஜீவதூதுக்கு மனவைராக்கியத்தைப் பாடசாலைகளில்
மூட்டிவிட்டபின் அது அவியவிடலாகாது. அந்த வைராக்கியம்
மிஷன்களுக்குப் பணம் கொடுத்தல், அவைகளுக்காக ஜெபித்தல்,
அவைகளின்பொருட்டு இயன்ற அளவு உழைத்தல், இவை முதலிய
முயற்சிகளில் பாயப்பண்ணவேண்டும்.

ஆதிவாரப் பாடசாலைகளைத் தவிர, கிறிஸ்தவ முயற்சி சங்கம்
(C. E. S.), வாலிபரின் கிறிஸ்தவ ஒற்றுமைப்பாடு (Y. M. C. A.),



வாலிபரின் ஐக்கிய சமாஜம் (Young People's League) இவை முத
லிய வேறுவகை இளையோர் சபைகளும் பல கிறிஸ்தவ தேசங்களில்
இருக்கின்றன. அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள், கனடாப் பிர
தேசம். இவைகளில்மட்டும் 6,000,000 வாலிபர்கள் உளராம். இப்
பேர்ப்பட்ட வாலிபர்திரளை மிஷன் சிந்தையில் பழக்கி, ஆளாக்கி
விட்டால் உலகத்தைச் சுவிசேஷத்திற்கு ஜெயிக்கு எப்பேர்ப்பட்ட
பெருஞ்சேனை நம் கையிலிருக்கும்! இவ்வகைய இளையோர் சங்கங்
களை நம் தேசத்திலும் உளவாக்கி, ஜீவதூதுக்குப் பயிற்றல் குருமார்
கடமையேயாம். அவைகள் எந்தெந்தச் சபைகளில் ஏற்பட்டிருக்கின்ற
னவோ அங்குள்ள குரு மேற்படி மாணுக்கருக்கு மிஷன் பாடப்புத்த
கங்கள். மிஷன் பிரசங்கங்கள், மிஷன் சமாசாரப் பத்திரிகைகள்,
இவை வாயிலாய் அறிவூட்டியும், மிஷன்களுககாக ஜெபம் செய்ய
வும் கொடுக்கவும் பழக்கியும், மிஷன் திருவூழியத்திற் பிரவேசிக்கத்
தூண்டியும், இப்படிப் பல வேறுவகையாய் ஜீவதூதில் கரிசனமுண்
டாக்கலாம். பலதுறைப்பட்ட இளையோர் சங்கங்களின் சரித்திரம்,
வேலை மாதிரிகள், இவைகளைச் சவிஸ்தாரமாய் விளக்குகிற நூல்களும்
பத்திரிகைகளும் தற்காலத்தில் ஏராளமாய்ப் பிரசுரமாகும். அவை
களைக் குரு தாமே செவ்வையே ஆராய்ந்து மனதில் வைத்திருந்தா
லன்றி இளையோர்களை மிஷன் சங்கதிகளில் கருத்துவைக்கச் செய்ய
ஏலாதவராயிருப்பார்.

வாலிபர்களையும் வாலிபைகளையும் போதித்துத் திடப்படுத்துகிற
காலம் அவர்களை மிஷன் வேலையில் அறிவூட்டி, அதற்காக வைராக்
கியங்கொள்ளப்பண்ணுகிற காலமாயிருக்கலாம். ஆண்டவர் என்னை
எங்கே வைத்தாலும் அங்கே அவருடைய இராச்சிய விர்த்திக்குக்
கவலையுள்ளவனுயிருப்பேன் என்கிற எண்ணம் அழியாமல் ஜீவகால
மெல்லாம் அவர்கள் மனதில் பதியச்செய்வது குருவின் கடமையே.
அப்படிச் செய்ததில், சிலர் பின்னிட்டு மிஷனரிகளாகத் தங்களை
ஒப்புக்கொடுக்க நேர்ந்தது.

(மோட்டு வேத பண்டிதர்.)

# St. Paul

## பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி)

பரி. பவுல் தேவாவியானவருடைய விசேஷித்த செயலால் குணப்படுத்தப்பட்டதுபோல ஐரோப்பாக் கண்டத்தில் வேலைசெய்ய அவ்வாவியானவராலேயே விசேஷித்த வண்ணமாய் நடத்தப்பட்டார்.

அப். 16. 6-8-ஐ வாசித்துப் பார்த்தால் அவர் எவ்விதமாய்த் தன்னைப் பரிசுத்தாவியானவருடைய நடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்தார் என்பதைக் காணலாம் (அப். 16. 6). இது பவுலின் ஜீவிய சரித்திரத்தில் மாத்திரமல்ல கிறிஸ்தவ சபையின் சரித்திரத்திலும் ஓர் முக்கியமான சம்பவமாயிருந்தது. அந்த வசனத்தைப் பார்த்தால் பவுலும் சீலாவும், தீமோத்தேயுவும் இக்கோனியாவைவிட்டுக் கலாத்தியா, பிரிகியா முதலிய நாடுகளின் வழியாய்ப் போய்ச் சின்னாசியா என்கிற ரோமை ஜில்லாவிலே வேலைசெய்யத் தீர்மானித்திருந்தார்கள் என்பதை நாம் அறியலாம். அவர்கள் பலமுறை அத்தேசத்தின் முக்கிய நகரமாகிய எபேசுவிலே பிரசங்கம்பண்ண ஆசையாயிருந்தார்கள். ஆனால் பரிசுத்தாவியானவராலே தடைப்படுத்தப்பட்டார்கள்.

அந்த வசனத்தில் அவர்கள் கலாத்தியா நாட்டைக் கடந்துபோனதாகச் சொல்லியிருக்கிறது. என்றாலும் அவர்கள் தீவிரமாய்ப் போனார்களோ அல்லவோ என்பதைப்பற்றியொன்றும் சொல்லப்படவில்லை.

பவுலானவர் தாம் செய்த மூன்றாம் பிரயாணத்தில் அவர் வெகு நாளாய் அவர்களை அறிந்தவர்போல் கலாத்தியா நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்கப்போனார் என்பதை அப். 18. 23-ஐக்கொண்டு அறிந்துகொள்ளுகிறோம். மேலும் கலா. 4. 12-20-ஐப் பார்த்தால் அவர் வியாதியாயிருந்தும் முதலாம் தரம் அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்பதை நாம் காண்கிறோம். ஆகவே அவர் எப்படியும் கொஞ்சகாலமாவது அந்நாட்டிலே தங்கி அங்கே பிரசங்கம்பண்ணிச் சிலரைக் கிறிஸ்தவர்களாக்கினார் என்று நாம் சொல்லலாம். ஆனாலும் அங்கே நடந்தவைகளைவிட துரோவாவிலே நடந்த காரியம் அதிக முக்கியமாயிருந்தபடியினாலும், நடபடிகளை எழுதின லூக்கா ஓர் கிரேக்கனாயிருந்ததினால் தன் ஜெனன தேசத்திற்கு அப்போஸ்தலர் எவ்விதமாய் வந்தார்கள் என்று சொல்லும்படி அதிக ஆசையாயிருந்தபடியினாலும் கலாத்தியாவில் நடந்த வேலையைப்பற்றி அவர் விபரமாய் எழுதாமல் பின் சம்பவித்தவைகளைச் சொல்ல ஆசைப்பட்டவராய் எழுது



கிறார். அப்போஸ்தலர் இடதுபக்கத்திலுள்ள ஆசியாவிலே பிரசங்கம் செய்யப் பரிசுத்தாவியானவர் அவர்களைப் போகவொட்டாததினால் வலதுபக்கத்திலுள்ள பித்தினியா நாட்டுக்குப் போகப் பார்த்தார்கள். மறுபடியும் ஆவியானவர் அவர்களைத் தடைசெய்தார். அவர்கள் வந்த வழியாய்ப்போகாதிருக்கத் தடுக்கப்பட்டதினால் அவர்கள் முன்னேறிச் செல்லவேண்டியவர்களாயிருந்தார்கள். அப்படிப் போனால் கடற்கரைக்குப் போகவேண்டும். அப்படிப் போவது அவர்கள் செய்த ஏற்பாட்டிற்கு விரோதமாயிருந்தாலும் தங்களை முற்றிலும் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்துத் துரோவாவுக்கு வந்தார்கள். இரண்டு தடவை அவர்களைத் தடுத்த ஆவியானவர் மூன்றாந்தரம் அவர்களை நடத்தித் தேவனுடைய சித்தத்தைப் பவுலுக்குச் சொப்பனத்தில் தெரிவித்தார். துரோவாவிலே அவர்கள் லூக்காவைச் சந்தித்தார்கள். அதை அவர் உபயோகிக்கிற பிரதிபெயர்களைக்கொண்டு அறிந்துகொள்ளுகிறோம். 10-ம் வசனத்தில் 'நாங்கள் போனோம் என்கிறார்.' அதினாலே அவர் துரோவாவிலிருந்து பவுலோடு மக்கெதோனியாவுக்குப் போனதாகத் தெரியவருகிறது. அதற்குமுன் அவர் பவுலை அறியவில்லை என்று நாம் நினைக்கலாம். அவர்கள் தெய்வச்செயலால் ஒருவரையொருவர் துரோவாவிலே சந்தித்தார்கள். பவுலைச் சந்தித்ததினால் லூக்கா கிறிஸ்தவரானார் என்று சிலர் நினைக்கிறார்கள். பவுலானவர் சொப்பனத்தில் கண்ட மக்கெதோனியா தேசத்தான் லூக்காதான் என்று ஒரு பெரியவர் சொல்லுகிறார். எப்படியெனில், பவுல் லூக்காவைச் சந்தித்து அவரைக் குணப்படுத்தி அவருடைய இனத்தாரையும் தேசத்தாரையும்பற்றி அவரோடு பேசியிருந்தார். இதைப்பற்றி அவர் தியானிக்கத் தியானிக்க இந்தச் சொப்பனத்தைக் கண்டார். எப்படியோ இந்தத் தரிசனத்தை அவர் கண்டவுடனே அவரும் அவரோடிருந்தவர்களும் மக்கெதோனியா நாட்டிற்குப் போகத் தலைப்பட்டார்கள். அவர்கள் முதலாவதாகச் சேர்ந்த பட்டணம் பிலிப்புப் பட்டணத்திற்குத் துறையாயிருந்தது. ஆதலால் அவர்கள் அங்கே நிற்காமல் நேரே பிலிப்புப் பட்டணத்திற்குப் போனார்கள். அது ஒரு விசேஷித்த பட்டணமாயிருந்ததுமல்லாமல் லூக்கா அறிந்த ஒரு பட்டணமாயுமிருந்தது. அவர் அப்பட்டணத்தை அறியாதவராயிருந்தால், 13-ம் வசனத்திலே 'ஓர் ஆறு' எனச் சொல்லியிருப்பார். மேலும் ஆற்றினருகே யூதர்கள் ஜெபஞ்செய்தார்கள் என்பது அவருக்குத் தெரியும். என்றாலும் அவர்கள் எல்லாரும் லீதியாளின் வீட்டிலே சஞ்சரித்ததினால் அவர் அப்பட்டணத்தான் அல்லவென்றும், அப்பட்டணத்தில் அவருக்கு வீடு இருந்ததில்லை என்றும் நிச்சயிக்கலாம்.

நாம் முன் பார்த்தபடி பிலிப்புப் பட்டணத்திலே குணப்பட்ட முதல் மூன்றுபேரும் யூத, கிரேக்க, ரோமராகிய மூன்று மதஸ்தரே. ஐரோப்பாவில் முதல் முதல் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட லீதியாள் யூதமார்க்கத்தமைந்தவளாய் இருந்தாள். அவள் முன் வாசம் செய்த தியத்தீரா ஊரிலே யூதர்கள் அநேகராயிருந்தபடியால் அவள் அவ்வூரிலே யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அவள் நல்ல ஸ்திதியிலிருந்தாள் என்று நாம் சொல்லலாம். அவள் இரத்தாம்பரம் விற்றதாகச் சொல்லியிருக்கிறது. அதாவது மற்ற வஸ்திரங்களை விற்றாலும் முக்கியமாய் விலையேறப்பெற்ற இந்த வஸ்திரங்களை விற்றாள். நல்ல ஸ்திதியிலுள்ள வியாபாரிகள்மாத்திரம் இப்பேர்ப்பட்ட சீலைகளை விற்கச் சக்தியுள்ளவர்களாயிருந்தபடியால் அவளும் கொஞ்சம் நல்ல ஸ்திதியிலே இருந்தாளென்று நாம் சொல்லலாம். அவளுடைய புருஷனைப்பற்றி யொன்றும் சொல்லாதிருப்பதினால் அவள் விதவை யென்றும் நாம் யூகிக்கலாம்.

## Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

(தொடர்ச்சி)

'பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.' யோவா. 7. 37-39.

பரி. பவுலும் தமது நிருபங்களில் பரிசுத்த ஆவியின் தன்மை தொழில் இவைகளைப்பற்றி அடிக்கடி எழுதியிருக்கிறார்:—ஒரு பாவியான மனுஷன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்தபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சொத்து என்று காட்ட முத்திரைப் போடப்பட்டான் என்று எபே. 1. 13; 2 கொரி. 1. 22-லும், தேவனுக்குச் சொந்தமாகிய அவன் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவான் என்பதற்கு ஆவியானவர் அவனுடைய சுதந்தரத்தின் அச்



சாரமாய் இருக்கிறார் என்று எபே. 1. 14; 2 கொரி 5. 5-லும், விசுவாசியின் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறதென்று 1 கொரி. 3. 16; 6. 19; 2 கொரி. 6 16-லும், விசுவாசியின் உள்ளத்தில் வாசஞ்செய்கிற ஆவியானவர் தேவனை அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் விசுவாசிக்கு அளிக்கிறவர் என்று எபே. 1. 17-லும், விசுவாசிகளான தேவபுத்திரர்கள் தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்பட்டு மாமிசத்தையும் அதின் இச்சைகளையும் ஜெயிக்கிறார்கள் என்று ரோ. 8. 1-16; கலா. 5. 16—18, 25-லும், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறவர்கள் உள்ளத்தில் தேவனுக்கேற்ற கனிகளை விளையச்செய்கிறார் என்று கலா. 5. 22, 23; எபே. 5. 9-லும், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு வெவ்வேறான வரங்களைக் கொடுத்துவருகிறார் என்று 1 கொரி. 12. 1-3-லும், ஆவியானவர் நமது பலவீனங்களில் உதவிசெய்கிறார் என்றும், நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார் என்றும் ரோ. 8. 26. 27-லும், தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார் என்றும், தேவனுக்குரியவைகளைத் தேவனுடைய ஆவியானவரே வெளிப்படுத்தக்கூடியவரென்றும் 1 கொரி. 2-ம் அதிகாரத்திலும், பரிசுத்த ஆவி நம்முடைய சரீரங்களைக் கடைசிநாளில் உயிர்ப்பிக்கப்போகிறவரென்றும் ரோ. 8. 11-லும், பரிசுத்த ஆவி ஒரு ஆள் என்றும், அவரைத் துக்கப்படுத்தாதிருக்கவேண்டும் என்றும், மீட்கப்படும் நாளுக்கென்று அவரை விசுவாசி முத்திரையாகப் பெற்றிருக்கிறான் என்றும் எபே. 4. 30-லும், விசுவாசிகள் பரிசுத்த ஆவியால் எப்போதும் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும் என்று எபே. 5. 18-லும் சொல்லுகிறார்.

மேற்படி 3 அப்போஸ்தலர்மார்களும் பேசினவைகளையும் எழுதினவைகளையும் கூர்ந்து கவனிப்போமானால், ஒரு பாவி தன் பாவ நிலைமையிலிருந்து நீங்கிப் பரிசுத்த ஜீவியம் செய்ய விரும்பினால் அவன் கிறிஸ்துவை அறிந்து அவரை விசுவாசிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமாய் விசுவாசத்தின்மூலமாய் தனக்குள் பெற்ற பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும் அறிந்து ஒவ்வொரு விஷயத்திலும் அவருக்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் கிறிஸ்து அவன் உள்ளத்தைப் பூரணமாய் இரக்ஷித்து மீட்டுக்கொள்ளக்கூடும் என்று பார்க்கிறோம்.

நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவரைப்பற்றிச் சொல்லும் வசனங்களைக் கவனிப்பது மிகவும் அவசியம். நமது கர்த்தா ஒருவர்மாத்திரந்தான் பரிசுத்த ஆவியானவரைப்பற்றித் திட்டமாய்

மனுஷர்களுக்குப் போதிக்கக்கூடும். ஆவியானவருடைய ஆளத்துவம், தெய்வத்துவம், தேவனோடும், மனுஷனோடும் ஆவியானவருக்குண்டான சம்பந்தம், ஆவியானவரால் மனுஷனுக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் ஆகிய இவைகளைக் கர்த்தர் ஒருவர்தான் திட்டமாய்ப் போதிக்கக்கூடும். மனுஷ ஈடேற்றத்திற்கு அவர் போதித்த மகா போதனைகளில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய போதனையும் ஒன்று. மனுஷனுக்கு ஆவியானவரைப்பற்றிப் போதித்திராவிட்டால், கிறிஸ்து மனுஷ ஈடேற்றத்திற்கென்று செய்துமுடித்த சகல காரியங்களும் மனுஷ இருதயங்களில் கிரியை நடப்பிக்கக்கூடாதபடி தடைப்பட்டுப்போம். ஆகவே பரிசுத்த ஆவியானவரின் அவசியத்தைச் சீஷர்கள் அறிந்துகொள்ள கிறிஸ்து தகுந்த சமயத்தைத் தெரிந்துகொண்டு, அவரைப்பற்றியும், அவர் தமது கிரியையை மனுஷ இருதயங்களில் நடப்பிக்கப்போகிற விதத்தைப்பற்றியும் தெளிவாய்க் கூறி, அவரை, தாம் பிதாவினிடத்திற்குப் போனபிறகு, பிதாவினிடத்திலிருந்து அனுப்பப்போவதாகவும், அவர் மூலமாகவே தாமும், பிதாவும் மனுஷ இருதயங்களில் வாசஞ்செய்யப் போவதாகவும் திருவுளம்பற்றினார். இதற்கு ஆதாரமாக யோவா. 14. 12-27-யும்; 16. 1-15-யும் கவனிப்போம். இயேசு, தாம் மரிக்கு முன்னாள் இராத்திரி வீட்டின் மேலறையில் இராப்போசன விருந்தைக் கொண்டாடின பின்பு, அப்போஸ்தலர்களை நோக்கி, தாம் கூடிய சீக்கிரத்தில் பூலோகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகப்போவதாகவும், இனி அவர்கள் தம்மைச் சரீரப்பிரகாரமாய்க் காணமுடியாதென்றும், ஆயினும் தம்மிடத்தில் விசுவாசம் வைக்கிறவன் எவனோ அவன் தாம் செய்கிற கிரியைகளைச் செய்வதுமல்லாமல், அவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்றும், ஆகையால், அவர்களுக்குத் தாம் கடந்த மூன்றரை வருஷகாலமாய்ப் போதித்துவந்த தேவராஜ்ஜியத்தைப் பூலோகத்தில் அவர்கள் ஸ்தாபிக்கவும், பாவிகளைப் பாவத்திலிருந்து திருப்பவும், சகல தேசத்தாரும், சகல ஜாதிக்காரரும் கிறிஸ்துவின் அடியார்கள் ஆகச் செய்யவும் தக்கதாக, அவர்கள் தமது நாமத்தினால் எதைக் கேட்டாலும் செய்வதாகவும் சொல்லி வாக்கருளினார்.

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 76 செப்டெம்பர் 1912

# வேதியர் விளக்கு

## The Pastor's Missionary Methods

**By the Rev. N. Devasagayam**

## மேய்ப்பன் சபையை ஜீவதூதுக்குத் தூண்டும் விதங்கள்

(தொடர்ச்சி)

**நாலாவது: ஜீவதூது மகளீர்—ஆடவர் கூட்டங்கள் வாயிலாய்**

வட அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டிஷ் தீவுகள் இவ்விடங்களில் ஜீவதூதுக்காகப் பெண்பாலார் செய்துவருகிற வேலை மிகச் சிறப்புடையது. அவ்விடங்களிலுள்ள ஜீவதூது மகளீர் குழுவைச் சேர்ந்தவர்கள் கொண்டு செலுத்துகிற தளராமையும் அடைந்திருக்கிற சித்திகளும் வியப்புக்குரியவை. நம் தேசத்திலும் மேய்ப்பர்கள் தத்தம் சபைகளில் அப்பேர்ப்பட்ட ஜீவதூது மகளீர் கூட்டங்களை ஏற்படுத்தி, அக்கூட்டங்களைத் தாங்களே கண்காணித்துப் பழக்கினால், அவரவர் சபைகளில் ஜீவதூதில் பெரிய வைராக்கியம் மூளும்.

ஆயினும், உலகத்தை ஆண்டவருக்கு வசப்படுத்துகிறதில் காரியாகாரியங்களைப் பூரணமாய் அறிந்து புத்தியாய் யோசித்து ஊக்கமாய் உழைக்க வல்லவர்களாகிய ஆடவர்கள் முக்கியமல்லவா? சபைகள்தோறும் ஆடவர்கள் மிஷன்வேலையில் கரிசனம் பாராட்டி அதற்குக் கைகொடுத்து உதவவேண்டுமானால் ஜீவதூது ஆடவர் கூட்டங்களும் ஏற்படவேண்டும். சபைகுரு தாமே ஏற்பட்ட சகல கூட்டங்களையும் நேரில் நடத்த ஏலாதாயினும், அவருடைய கண் பார்வையும் அநுசரணையும் அவைகளுக்கு அவசியமாகும். அப்பேர்ப்பட்ட கூட்டங்களில் கூடியமாத்திரம் ஒவ்வொரு அவயவத்திற்கும் நேரமும் நினைப்பும் உழைப்பும் கொடுத்து முயல்கிற முயற்சிகள் குறிக்கப்பட்டிருப்பது நலம். அல்லாவிடின், அவர்களுடைய ஊக்கம் குன்றித் தேய்ந்துபோம்.

ஜீவதூது ஆகிய மிஷன் சம்பந்தமாய் ஒருவர் விஷய மறிய விரும்பினல், அதற்கு ஆகும் நூல்களும் பிரபந்தங்களும், பத்திரிகைகளும் முட்டில்லாமல் கிடைக்கும். மிஷன்வேலை நடைபெறும் அநேக துறைகளுண்டு. ஒவ்வொரு துறையையும் வெள்ளிடை மலைபோல் விளக்குகிற புத்தகங்களும் பிரசுரங்களும் மிகப் பலவாய் அகப்படும். அவைகளை வடித்துப் பிழிந்து சாரம் ஆக்கித் தருகிற பாடப் புத்தகங் களும் இப்போது தேசாதேசங்களில் கிளம்பியிருக்கின்றன. கிறிஸ் தவ தேசங்களில் இந்தப் பாடப் புத்தகங்கள் படிக்கப்படுகின்றன. துரைத்தனத்தாருடைய பாடசாலைகளில் அல்ல. பின் எங்கேயென்

**ஐந்தாவது: ஜீவதூதுப் பாட வகுப்பு வாயிலாய்**

ருல், ஒவ்வொரு சபையிலும் ஏற்பட்டிருக்கிற மிஷன் பாட வகுப்புகளில். இவைகளில், மிஷனின் பலதுறை விஷயங்களையும் படிப்பார்கள். படிக்கிற மாணுக்கர் யார் என்ருல், பாலியரும், புருஷரும், கிழவரும் ஆகிய பல வயதினர். அவர்கள் பற்பல உத்தியோகங்களை யுடையவர்களாயிருப்பினு மிருப்பார்கள். ஆகிலும், மிஷன் விஷயத்தைப் படிக்க ஆவல்வைத்து அவர்கள் வாரத்தில் ஒருமுறையாயினும் மிஷன் பாட வகுப்புக்கு வந்து படிப்பார்கள். உபாத்தியாயர் எப்போதும் முதிர்ந்த வயதினரல்லர். மிஷன் விஷயத்தை அபாரமாய்க் கற்று அறிந்தவரும் பாடம் சொல்ல வல்லவருமாகிய ஒருவர் எந்த வயதுடையவராயிருந்தாலும் வகுப்பின் நன்குமதிப்புப்பெற்றுப் பாடங் கொடுப்பார். பாடப் புத்தகத்தின் படியே விஷயங்களைப் படிப்பார்கள். படிக்கிறவர்கள் யாவரும் புத்தி விசாலமுள்ள அறிவாளிகளாதலால் அவர்கள் சும்மா வரமாட் டார்கள். குறிக்கப்பட்ட பாடசம்பந்தமான நூல்களைத் தாங்களும் ஆராய்ந்துவருவார்கள். மிஷன் பாட வகுப்புகளின் உபயோகத்துக் காக அவ்வகுப்புகளைப் பரிபாலிக்கும் சபைகளில் சிறந்த புத்தகச் சேர்ப்பு சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். எந்தத் துறையைப்பற்றிப் பாடம் நடக்குமோ அந்தத் துறையைச் சில பாடங்களில் கற்று முடிப் பார்கள். அதற்குச் சுமார் இரண்டு மூன்று மாதங்கள் செல்லும். இப்படித் துறைதுறையாய் மிஷன் விஷயங்களில் இறங்கி அறிவுத் தடாகங்களில் மூழ்கிக் கரையேறினவர்கள் சபைகள்தோறும் இருந் தால், அவர்கள் தத்தம் சபைகளில் மிஷன்வேலை ஒவ்வொரு கிறிஸ் தவ ஆண் பெண்ணின் பொறுப்பு என்று சகல அவயவங்களுக்கும் வற்புறுத்தி அவர்களுக்குள் மிஷன் வைராக்கியத்தை அவியாமல் மூட் டிக்கொண்டேயிருப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட பாட வகுப்புகள் அமெரிக்கா முதலிய கிறிஸ்தவ தேசங்களில் ஏற்பாடாகி இப்பொழுது ஏறத்தாழ இருபது வருஷங்க



ளாகிறது. ஆரம்பத்தில் அவைகள் மாணவர் மனப்பூர்வ முயற்சி சங்கத்தின் (Student Volunteer Movement) சலியா வுழைப்பினல் கலாசாலை மாணவர்களுக்குள் தோன்றின. பிறகு, சபைகளில் வாலி பர்களுக்குள் அந்தப் பாடத்தின்மேல் ஆசை மூண்டது. வாலிபர் கள் தெவிட்டாத ஆவலுடன் ஜீவதூது விஷயங்களைப் படிக்கிறதைப் பார்த்து இப்போது பற்பல சபைகளில் வாலிபிகளுழ் அந்தப் பாடங் களைப் படிக்கிற வகுப்பு ஏற்படுத்திக்கொண்டார்கள். வரவர, வாலி பர்களும் வாலிபிகளும் மாத்திரமல்ல, வளர்ந்தவர்களும் அப்பேர்ப் பட்ட பாட வகுப்புகளில் மாணுக்கராய்ச் சேரலாஞர்கள்.

நம் தேசத்திலும் சபைகள்தோறும் இவ்வகை மிஷன் பாட வகுப் புகள் ஏற்படுவது மிக அவசியம். அவைகளில் பாடங் கொடுக்கத் திறமையுள்ளவர்கள் இருக்கவேண்டும். சபைகளில் மிஷன் வைராக் கியம் மூட்டவல்ல செல்வாக்கர்கள் அவ்வகுப்புகளில் படிக்கத் துணிய வேண்டும். வாரத்தில் ஒருமுறை ஒருமணிநேரப் படிப்புப் போதும். அப்படிப் படித்தே ஒவ்வொரு மிஷன் துறை விஷயத்தையும் இரண்டு மூன்று மாதங்களில் படித்து முடிக்கலாம். சுயபாஷையில் பாடப் புத்தகங்கள் எழுதப்பட்டு அச்சிட்டிருக்கவேண்டும். பாடப் புத்தகங்கள் பெருகின விஷயத்தைச் சுருங்கச் சொல்லும். ஆதலால், படிக்கிற விஷயத்தை விரிவாய் விளக்குகிற புத்தகங்களைக் காலா காலந்தோறும் வாங்கிச் சபைப் புத்தகசாலையில் வைத்திருப்பது அவ சியமாகும்.

இப்படிப் பற்பல சபைகளில் ஏற்பட்டு நடைபெறுகிற மிஷன் பாட வகுப்புகள் சங்கேதம் செய்து தெரிந்த ஓரிடத்தில் வருஷத்தில் ஒருமுறையாயினும் சங்கமித்து ஒருமித்துக் கூடி ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிற வழக்கமும் இருக்கிறது. இது மிக நல்ல வழக்கம். அதினல், இந்த மாதிரிப் பாட வகுப்புகள் விரும்பப்படத் தக்கவாகி, தடவைதோறும் அதிகமான மாணவர்கள் அவைகளில் சேர்வதற்கிடமாகும். இந்தப் பலசபைப் பாட வகுப்புகள் ஒருமித்த கூட்டத்திற்குச் சங்கமக் கூட்டம் (Rally) என்று பெயர்.

மேலும், ஜீவதூதுச் சமாசாரங்களைச் சபை அவயவங்களுக்கு எளி தில் கிடைப்பிக்கத்தக்க சாதனங்கள் ஒவ்வொரு சபையிலும் ஏற்பட் டிருக்கிறது தகுதி. அறிய விரும்புவோருக்கு

**ஆறவது: தக்க சாதனங்கள் வாயிலாய்.**

அறியக் கிடைக்காவிட்டால் அவர்களுடைய ஊக்கம் குறைந்துபோகும். சில முக்கிய சாத னங்கள் வருமாறு:—

மிஷன் செய்தியடங்கிய நூல்கள், பத்திரிகைகள் முதலியவற் றின் சேர்ப்பு. இவ்வகைப் புத்தகச் சேர்ப்பு ஒவ்வொரு சபையிலும்

இருக்கவேண்டும். அது வைக்கப்பட்டிருக்கிற இடம் சபையார் யாவருக்கும் எளிதில் தெரியக்கூடிய இடமாயிருக்கவேண்டும். படிக்கத் தெரிந்த யாவரும் அந்தப் புத்தகச் சேர்ப்பிலிருந்து புத்தகங்களை இரவலாக வாங்கிப் படிக்கத் தூண்டவேண்டும். விசேஷமாய் ஜீவதூதுக் கூட்டத்தாரும், ஜீவதூதுப் பாடம் படிக்கிற மாணுக்கரும் அந்தப் புத்தகங்களை மனோகரமாய்ப் படிக்க அவர்களை ஏவலாம். மாணவர் மனப்பூர்வ முயற்சி சங்கத்தார் வெளிப்படுத்தியிருக்கிற புத்தகங்கள் மேற்படி புத்தகசாலைக்கு மிக ஏற்றவை. சில மிஷன் சங்கங்கள் அதிக சிறந்த நூல்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளும் மேற்படி சேர்ப்புக்குத் தக்கவையாம். சமயந்தோறும் புதுப் புதுப் புத்தகங்கள் வெளிப்படும். அவைகளுள் சிறந்தவைகளை ஆய்ந்தெடுத்துப் புத்தகசாலையைப் புதுப்பித்துக்கொண்டேயிருத்தல் தகும்.

தற்காலத்தில் தனித்தாள்களிலும் குறுந்தாள் சிறுநூல்களிலும் ஜீவதூதுச் செய்திகள் ஒருவிதமாய் வெளிக்கு வருகின்றன. அவைகளின் பொருள் மிக முக்கியமுள்ளவை. ஆதலால், அவ்வகைத் தாள்களையும் குறுந்தாள் நூல்களையும் சேதமாகாமல் தொடுத்துக் கோவைசெய்து புத்தகசாலையில் காப்பாற்றவேண்டும்.

மேலும் வெவ்வேறு பிரிவுச்சபைகள் தம் தம் அவயவங்களுக்காகப் பிரசுரிக்கும் அவ்வப்பிரிவுக்குரிய பத்திரிகைகளையும் வாங்கிக் காப்பாற்றுவது நலம். விசேஷமாய், அந்தந்தப் பிரிவுப் பத்திரிகைகளை அந்தந்தப் பிரிவுச் சபையார் தம் தம் குடும்பங்களில் வாங்கிப் படிக்க சபைகுரு அவர்களைத் தூண்டவேண்டும்.

புத்தகங்களைத் தவிர, வேறு சாதனங்கள் எவையென்றால், மிஷன் வேலையின் அளவைத் தெரிவிக்கிற அளவைப் படங்கள். இன்ன தேசத்தில் ஜனத்தொகை இவ்வளவு. அதில் இவ்வளவு பேர் கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவை அநுசரிக்காதவர்கள் தொகை இவ்வளவு என்று கணக்குச் சொல்வது சாமானியருடைய மனதில் தைக்காது. அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்டினவுடனே, கண்ணில்தைத்து மனதில் பதியும் அளவுகாட்டிப் படங்கள் செய்துகாட்டினால் அதினால் உண்டாகும் பிரயோசனம் பெரிதாகும். அவ்வாறே ஒவ்வொரு தேசத்திலும் வெளிச்சம் பிரவேசித்திருக்கிற பாகம் அது பிரவேசிக்காத பாகத்தோடு இன்ன அளவாயிருக்கும் என்று படம் வரைந்து காட்டலாம். இப்பேர்ப்பட்ட படங்களை ஒவ்வொரு சபையிலும் புத்திசாலிகளான வாலிபர்களையும் பாலியைகளையும் கொண்டு செய்வித்து அவைகளைப் புத்தகசாலையில் காப்பாற்றிக்கொள்ளலாம்.

மேலும், உலகத்தின் வெவ்வேறு சமயங்கள் எவ்வெவ்விடங்களில் பரவியிருக்கின்றன என்று காண்பிக்கிற பூகோளப்படமும்



சிறப்பாய் வரைந்து சமயப்பகுதிகளுடாடுகிற தேசங்களை அந்தந்தச் சமயத்துக்குக் குறித்த வர்ணங்களால் குறியீடுசெய்து சபையார் பார்க்கக்கூடிய இடத்தில் கோவிலில் தொங்கவைக்கலாம். இதுவுந்தவிர அந்தந்தப் பிரிவுச் சபை தான் அனுப்பியிருக்கிற ஜீவதூது ஆட்கள் வேலைசெய்கிற தேசத்தின் படமும் வரைந்து, அந்தத் தேசத்தில் அந்தச் சபையின் மிஷனுட்கள் வேலைசெய்கிற ஸ்தானங்களைக்குறித்துக் காட்டுகிற படமும் தொங்கவிடலாம்.

தவிர, தனித்தனிச் சபைதோறும் மிஷன் பொருட்காட்சி சாலையொன்று பொறுக்கி யெடுத்ததும் பார்க்கிறவர்கள் மனதைக் கவர்கிறதுமான பண்டங்கள் உள்ளதாய் ஏற்படுவது உசிதமாகும். மிஷன் வேலை நடைபெறு மிடங்களில் அது நடைபெறும் பற்பல துறைகளுக்குரிய காட்சிகளை விளக்கும் படங்களும், பண்டங்களும் ஏராளமாய் அகப்படும். அவைகளைச் சேர்த்துத் தொகுப்பது அறிவூட்டும் சாதனங்களுள் முக்கியமானதாகும்.

(மோட்டு வேத பண்டிதர்)

## St. Paul

## பரிசுத்த பவுல்

(தொடர்ச்சி)

*பிலி. 4.* 1-3-ஐப் பார்த்தால் இச்சபையிலே ஸ்திரீகள் அதிக வேலை செய்ததாகவும் சபையை யொருவராக நடத்தினதாகவும் காணலாம். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட முதல் மூன்றுபேரில் இரண்டுபேர் ஸ்திரீகளே. இரண்டாம் ஸ்திரீ குறிசொல்லிய பெண்ணாயிருந்தாள். அவள் உதரபாஷிதி* என்பதை மூலபாஷையினால் அறியலாம்.

அவளுடைய எஜமான்கள் அப்போஸ்தலரைக் குற்றப்படுத்தும்படியான முகாந்தரத்தைத் தேடி ரோமச்சட்டத்தின்படி இரண்டு விசேஷித்த குற்றங்களை அவர்கள்மேல் சாட்டினார்கள். ரோமாபுரி ஆண்ட தேசங்களில் அநேக மதங்களிருந்தன. அவைகளில் சில மதங்கள் சட்டத்தின்படி அநுமதிக்கப்பட்டன. அவற்றைத்தவிர வேறு மதத்தைப் போதிப்பது ஓர் பெருங் குற்றமாகும். ஆகையால் கலகம்பண்ணு

* உதரபாஷிதி (Ventriloquist) என்பது பேசுகிறவர் தான்தானென்று தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் அறிந்துகொள்ளக்கூடாமல் வேறு இடத்திலிருந்து வருகிறதென்று எண்ணத்தக்கதாய்த் தன் வாயை அசைக்காமலே சப்தத்தையும் வார்த்தைகளையும் உபயோகிக்கக் கற்றுக்கொண்டவன் என்பதாம்.

வதோடுகூட இந்தச் சட்டத்திற்கு விரோதமாய் அவர்கள் நூதன
மான உபதேசத்தைக் கொடுத்ததாகச் சொல்லி அதிகாரிகளுக்கு
முன்பாக அவர்களைக் குற்றப்படுத்தினார்கள்.

அதிகாரிகள் அவர்களைப் பிடித்துக் கோலால் அடித்து (2 கொரி.
11. 25 காண்க), காவலில் வைத்தார்கள். பவுல் தன்னை அடிக்காத
படிக்குத் தான் ரோமனென்று ஏன் சொல்லவில்லை என்று கேட்டால்,
அவர் ஒருவேளை அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால் ஜனங்கள்
அதிக சத்தம் போட்டதினால் அவர் சொன்னது யாருக்கும் கேட்டி
ருக்கமாட்டாதென்று நினைக்கலாம்.

லூக்கா பிடிக்கப்படவில்லை (வச. 19). பவுலும் சீலாவும் பிலிப்புப்
பட்டணத்தை விட்டபோது அங்கே அவரை விட்டுவிட்டார்கள்.
அவர்கள் திரும்பிவந்தபோது அவர் அங்கிருந்து அவர்களோடு எரு
சலேமுக்குப் போனார் (அப். 20. 5 6). பிலிப்புப் பட்டணத்திலும்
அதைச் சூழ்ந்த ஊர்களிலும் அவர் அதிக ஊக்கமாய் வேலைசெய்து
சுவிசேஷத்தைப் பிரபலியமாக்கினார். (2 கொரி. 8. 18-ல் சொல்
லப்பட்ட ஆள் இவரே.)

பிலிப்புப் பட்டணத்தில் மூன்றாவதாகக் குணப்பட்டவன் ரோமச்
சிறைச்சாலைக்காரன். நடு இராத்திரியிலே பூமியதிர்ச்சியினாலே
சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசைக்கப்பட்டுக் கதவுநிலைகள்
உடைக்கப்பட்டதினால் கதவுகள் திறந்தன. சுவர்கள் வெடித்ததினால்
சிறைப்பட்டவர்களைக் கட்டியிருந்ததும் சுவர்களில் பதிந்திருந்தவை
களுமான சங்கிலிகள் சுவர்களிலிருந்து பெயர்ந்துவிழுந்தன. சிறைச்
சாலைக்காரன் காவலில் வைக்கப்பட்டக் கைதிகளைப் பத்திரமாய்க்
காக்காவிட்டால் மரணதண்டனை சகிக்கவேண்டியவனானபடியால், கத
வுகள் திறந்ததாகப் பார்த்துக் கைதிகள் எல்லாரும் ஓடிப்போன
தாக நினைத்துத் தற்கொலை செய்துகொள்ளப் போனான். பவுலோ
அவனைத் தடுத்து அவனுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவ
னைக் குணப்படுத்தினார்.

மறுநாளிலே அதிகாரிகள் விசாரணையில்லாமல் அவர்களை அனுப்
பிவிட்டார்கள். ஒருவேளை பூமியதிர்ச்சியினால் பயப்பட்டிருக்கலாம்,
அல்லது ஒருவேளை, பவுலும் சீலாவும் ரோமரென்று கேள்விப்பட்
டுப் பயப்பட்டிருக்கலாம். எப்படியோ அவர்களை அதிக மரியாதை
யாய் அனுப்பிவிட்டார்கள். (அப். 16. 39.)

அப்போஸ்தலர் சிலநாள்தான் பிலிப்புப் பட்டணத்திலிருந்தார்
கள். அப்பட்டணத்தை விட்டபோது, மக்கெதோனியா நாட்டி
லுள்ள தலைநகரமாகிய தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்.
சீரியாவிலேயிருந்த அந்தியோகியாவைத் தவிர, பரி. பவுல் போன



மற்றெல்லாப் பட்டணங்களைவிட, இதுதான் விசேஷித்தது. அத்
தேசத்துக்கு இந்தப் பட்டணம் முக்கியமான வியாபார ஸ்தானமா
யிருந்ததுமல்லாமல், அதிலே ரோம துரைத்தனத்தார் குடியிருந்தார்
கள். அதோடு யூதர்கள் அதிலே அநேகராயிருந்து, ஓர் பெரிய
தேவாலயம் கட்டியிருந்தார்கள். வழக்கம்போல் அப்போஸ்தலர் அவ்
வாலயத்துக்குப் போய் மூன்று வாரமாகப் பிரசங்கம்செய்தார்கள்.
அநேகம் பெயர் அவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை ஏற்றுக்கொண்
டார்கள். 1 தெச 1. 6-10-ஐப் பார்த்தால், அவர்கள் அங்கே செய்த
வேலையின் பலன் காணலாம். ஆனாலும் மற்ற இடங்களிலே நடந்
ததுபோல் இங்கேயும் யூதர்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி,
அதிகாரிகளுக்கு முன்பாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டினார்கள்.
இவர்கள் சாட்டின குற்றம், நமது ஆண்டவருக்கு விரோதமாய்
சொல்லப்பட்டக் குற்றத்தைப்போல் இருந்தது. தாம் இராஜாவென்று
அவர் சொன்னதாகப் பிலாத்துவுக்குமுன் யூதர்கள் ஆண்டவர்மேல்
குற்றஞ்சாட்டினார்கள். அப்போஸ்தலர் இயேசுகிறிஸ்து இராஜா
வென்று பிரசங்கித்ததாகச் சொல்லி இராஜதுரோகம் என்கிற குற்
றத்தை அவர்கள்மேல் சாட்டினார்கள். அது எல்லாக் குற்றங்களை
விட ரோமச் சட்டத்தில் விசேஷித்ததாயிருந்ததினால், அதிகாரிகள்
அதை விசாரிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். பட்டணத்திலே
கலகமிராதபடிக்குக் கிறிஸ்தவர்களிடத்தில் ஜாமீன் வாங்கினார்கள்.
ஆதலால் அப்போஸ்தலர் பட்டணத்தை விட்டுவிட வேண்டியதா
யிற்று. ஏனென்றால் அவர்கள் இன்னும் பிரசங்கம் செய்திருந்தால்
யூதர்கள் கலகம் செய்திருப்பார்கள். அதின்பேரில் கிறிஸ்தவர்
களுக்கு மரணதண்டனைவரையும் சேதம் வந்திருக்கலாம். அப்பேர்ப்
பட்ட கஷ்டம் வாராதபடிக்கு அப்போஸ்தலர் பட்டணத்தை விட்டு
விட்டார்கள். தாங்கள் சீக்கிரத்திற்குள் திரும்பிவர நினைத்தும்
தடைப்பட்டார்கள் (1 தெச. 2. 17, 18; 3. 10), அதற்குப் பதிலாகப்
பவுல் தீமோத்தேயுவை அவர்களிடத்திற்கு அனுப்பினார் (1 தெச.
3. 1, 2). அவர் எப்போதும் பிலிப்பு தெசலோனிக்கே பட்டணங்களி
லிருந்த கிறிஸ்தவர்களின்மேல் அதிக அன்பையும் பட்சத்தையும்
வைத்தார்.

அவர்கள் பெரோயா பட்டணத்துக்குப் போய் அங்கிருந்தவர்க
ளால் நன்குமதிக்கப்பட்டார்கள். ஆனால் தெசலோனிக்கே பட்ட
ணத்து யூதர்கள் அங்கும் வந்து கலகம்பண்ணி பவுலை அவ்வூரையும்
விடும்படி செய்தார்கள். அவர்களால் அவருக்கு நேரிட்ட அபாயம்
கொஞ்சமல்லவென்று நாம் சொல்லலாம். ஏனென்றால் அவர்
உடனே சகோதரரால் அனுப்பிவிடப்பட்டு, சமுத்திரவழியாய்ப்

போகவேண்டியதாயிற்று. அதோடு, அவருக்குத் தீங்கு வராதபடிக்கு அத்தேனே பட்டணம்வரைக்கும் அவர்கள் காவலாக அவரோடு போனார்கள். கலகம்பண்ணின இந்த யூதர்களைப்பற்றி 1 தெச. 2. 14–16-வரையில் சொல்லுகிறார்.

அப்படியே 'அவர் கிரேக்குத் தேசத்து முக்கியமான நகரமாகிய அத்தேனே பட்டணத்துக்கு வந்தார். அங்கே அவர் நாலைந்துவார மாத்திரமிருந்தார். அப்பட்டணம் நாகரீகத்திலும் கல்வியிலும் மற்றெல்லாப் பட்டணங்களைவிட அதிக சிரேஷ்டமுள்ளது. அக்காலத்தில் உலகத்திலே இருந்த எல்லாச் சர்வகலாசாலைகளிலும் முக்கியமான கலாசாலைகள் அதிலே இருந்தன. தர்க்கசாஸ்திரிகளும், கலைஞரும் மற்றெல்லாக் கல்விமான்களும் அப்பட்டணத்துக்குப் போவார்கள். என்றாலும், ஓர் விக்கிரகம் ஒன்றுமில்லை என்று சாதித்த தர்க்க சாஸ்திரிகள் அதிகமாய்க் கூடின இடத்திலேயே விக்கிரகங்கள் அதிகம் என்று கண்டு, அதைப்பற்றியே அவர் அங்கே பிரசங்கம் செய்யவேண்டியதாயிற்று.

## Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

(தொடர்ச்சி.)

'பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.' யோவா. 7. 37–39.

ஆனால் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டபோதோ சீஷர்களின் நிலைமை அதிக மாறுதலாகக் காணப்பட்டது. எப்படியெனில், சீஷர்கள் எதற்காக வேண்டிக்கொள்வதென்று அறியாதிருந்தார்கள். ஆட்டுக்குட்டிகள் ஓநாய்களினால் சூழப்படுவதுபோல், அவர்களும் துன்பம், அபாயம், மாறுபாடு நிறைந்த உலகத்தில் இருந்தார்கள். அவர்கள் பூமியின் ராஜ்ஜியங்களைவிட ஒரு மேலான பலத்த ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கவேண்டியவர்களாயிருந்தார்கள். ஆனால் அந்த ராஜ்ஜியத்தின் தன்மையையும், அதை ஸ்தாபிக்கவேண்டிய வழிவகைகளையும் இன்



னம் அறியாதிருந்தார்கள். அவர்களுக்குப் பெலன், புத்தி, யுக்தி, சாமர்த்தியம் ஒன்றும் கிடையாது. தங்களை நடத்தவோ ஒரு தலைவனும் இல்லை. அவர்கள் மற்றவர்களின் கண்களில் ஒரு மதிப்பையும் பெற்றவர்கள் அல்ல. அவர்கள் கிறிஸ்துவோடு உலாவினவரையிலும் அவர்களுக்கு ஒருவித மதிப்பு இருந்தது. கிறிஸ்து அவர்களை விட்டுப் போனபிறகோ அவர்களை மதிப்பார் ஒருவருமில்லை. அவர்கள் நம்பிக்கையும் தைரியமுமற்றவர்களுமாய்க் காணப்பட்டார்கள்.

இவைகளையெல்லாம் கர்த்தர் முன்னதாகவே நன்றாய் அறிந்தார். ஆகையால் கர்த்தர் சீஷர்களை நோக்கி, அவர்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருக்கவும், தேவன்பேரிலும் தமதுபேரிலும் விசுவாசமாயிருக்கவும் புத்தி சொல்லித் தாம் அவர்களை ஒருக்காலும் திக்கற்றவர்களாய் விடுவதில்லையென்றும், மறுபடியும் அவர்கள் தம்மைக் காண்பார்கள் என்றும், அவரே அவர்களுக்குத் தலைவராயிருந்து, கடைசியாக அவர்களை, தாம் இருக்கும் இடத்தில் அவர்களும் இருக்கத்தக்கதாகச் சேர்த்துக்கொள்ளுவார் என்றும் உறுதிகூறினார். இந்த விதமாய்த் தமக்கும் தமது சீஷர்களுக்கும் மறுபடியும் உண்மையான ஐக்கியமுண்டாகி, அவர்கள் ஒருவரிலொருவர் நிலைத்து ஜீவிக்கும்படியான வழி உண்டாகப்போகிறதென்றும், அது இரண்டு ஏதுக்களால் உண்டாகும் என்று கூறினார். அதாவது, (a) தாம் பிதாவினிடத்திற்குப் போகிறபடியாலும், (b) போய்ப் பிதாவை வேண்டிக்கொண்டு, என்றென்றைக்கும் அவர்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனைப் பிதா அவர்களுக்குத் தந்தருளச் செய்வதினாலுந்தான் என்றார்.

(a) தாம் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால் எந்தவிதமாய்க் கிறிஸ்து தமது சீஷர்களோடு ஐக்கியமாகக்கூடும். (1) அவர் பிதாவினிடத்திற்குப் போனதினாலே, அவர் இனித் தமது இரக்ஷணிய கிரியையை மனுஷ உள்ளத்தில் செய்துமுடிக்க ஒரு காலத்திற்காவது ஒரு இடத்திற்காவது மட்டுப்பட்டவராய் இராமல், எந்தக் காலத்திலும் உலகத்தின் எப்பாகத்திலும், எல்லாத் தொண்டர்களின் மத்தியிலும், அவர்கள் உள்ளத்திலும் பிரசன்னமாய் இருக்கக்கூடியவரானார். (2) இவ்வானத்திலிருந்து ஆளக்கூடிய ஆவிக்குரிய இராஜாவானார். (3) இவ் விதமாய்ப் பரிசுத்த ஆவியானவராகிய வேறொரு தேற்றரவாளன் மூலமாய் மனுஷ இருதயங்களில் ஆளுகை செய்யக்கூடியவரானார். (4) அவர் பரத்திற்குப்போனதினால், அவர் மனுஷருடைய இருதயங்களைத் தொடவும், அன்பினாலே எல்லா ஜாதிகளையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளவும், இவ்விதமாய் அவர்களைச் சகல நற்கிரியைகளையும் செய்யத்தக்க தம்முடைய ஆயுதங்களாக உபயோகிக்கவும் கூடிய

படி அவ்வளவாக உயர்த்தப்பட்டார். இதை உண்மையென்று நாம் எப்படி நம்பலாம்? அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தபடி பரிசுத்த ஆவியானவரைத் தமது பக்தர்களின்பேரில் பொழிந்தருளும் மகிமையடைந்ததினாலேயே. (அப். 2. 33.)

(b) பரிசுத்த ஆவியானவரை, தாம் விசுவாசிகளுக்குத் தந்தருளப் போவதினால் தழக்கும் தமது சீஷர்களுக்கும் ஞானஐக்கியம் அவரால் உண்டாகும் என்று கிறிஸ்து திருவுளம்பற்றினார். கிறிஸ்து நாம் முன் கவனித்தபடி பிதாவினண்டைக்குப் போனதினாலேயே பிதாவினால் மகிமையடைந்தார் என்று பார்க்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினால் உயர்த்தப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெற்று, அவரை விசுவாசிகளின்பேரில் பொழிந்தருளும் அதிகாரத்தையும் பெற்றார். ஆகவே இந்தப் பரிசுத்த ஆவியானவர் பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்பட்டு மனுஷ இருதயங்களில் வாசம்பண்ண வருகிறார். இதனாலேயே இவர் தேவ ஆவியென்றும், கிறிஸ்துவின் ஆவியென்றும் அழைக்கப்படுகிறார். இந்த ஆவியானவர் மனுஷ உள்ளத்தில் கிறிஸ்துவை வெளிப்படுத்தி, அவரை நித்திய ஜீவனுக்கென்று ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார். ஆகவே எந்த உள்ளத்தில் ஆவியானவர் வாசஞ்செய்கிறாரோ அந்த உள்ளத்தில் கிறிஸ்துவும் வாசஞ்செய்கிறார் என்று பார்க்கிறோம்.

இனி ஆவியானவர் கிறிஸ்துவின் ஊழியத்தை நடப்பிக்கிறவிதம் எப்படி என்று பார்ப்போம்.

நாம் யோவான் சுவிசேஷம் 14. 15–27 வசனங்களையும், 16. 1–15 வசனங்களையும் கூர்ந்து ஆராய்வோமானால், பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் மெய்யாகவே கிறிஸ்துவின் இரக்ஷிப்பின் கிரியைகளை நிறைவேற்றி முடிக்க அனுப்பப்பட்டார் என்று பின்வரும் சில நியாயங்களினால் கண்டறியலாம்:—

(a) பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனுடைய ஊழியத்தை செய்வதால். (யோவா. 14. 16.)

(b) 1. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் நாமத்தில் வந்து அவர் சித்தத்தை நிறைவேற்றுவதால். (வச. 26.)
2. அவர் விசுவாசிகளின் உள்ளங்களில் கிரியை நடப்பிப்பதால். (வச. 36.)
3. அவர் அவிசுவாசம் நிறைந்த உலகத்தில் நடப்பிக்கிற ஊழியத்தால். (16. 8–11.)

(c) பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியாயிருக்கிறபடியால். (14. 17–20.)



(d) பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் உள்ளத்தில் வாசஞ்செய்து அன்பையும் கீழ்ப்படிதலையும் பெருக்குகிறதினால். (14. 17, 21–24.)

(e) பரிசுத்த ஆவியானவர் போதகஊழியஞ் செய்வதினால். (14. 25, 26.)

(f) பரிசுத்த ஆவியானவர்மூலமாய்ச் சமாதானம் அளிக்கப்படுவதினால். (14. 27.)

இந்த 6 பிரிவுகளையும் இனி ஒவ்வொன்றாய்க் கவனிப்போம்.

(a) பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனுடைய ஊழியத்தை நடப்பிக்கிறார். 'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.' யோவா. 14. 16, 17

இவ்வசனங்களில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய சத்தியங்களில் அநேகத்தை அறிந்துகொள்வதோடு, அவர் மனுஷர்களுடனே என்றென்றைக்கும் வாசம்பண்ணக்கூடிய வேறொரு தேற்றரவாளன் என்கிற மகா சத்தியத்தையும் அறிந்துகொள்ளுகிறோம். இவரும் பிதாவினால் அனுப்பப்படுகிறார். மனுஷர் இரக்ஷிப்புக்காகவே அவர்கள் மத்தியில் கிரியை நடப்பிக்க வருகிறார். ஆனால் இவர் நடப்பிக்கும் கிரியை இயேசுவானவரின் இரக்ஷண்ய கிரியைக்கு எவ்விதத்திலும் மாறான தன்மையும் நோக்கமுமுடையது என்று ஒருக்காலும் எண்ணாதிருப்போமாக. அப்படியானால் வேறொரு தேற்றரவாளன் என்பதின் பொருளென்ன? இங்கே வேறொரு என்கிற பதம் தொழிலின் பேதத்தைக் குறிக்காமல் அத்தொழிலை நடப்பிக்கும் ஆளின் பேதத்தையே குறிக்கிறது. குமாரனாகிய தேவன் அன்பின் பிதாவினால் அனுப்பப்பட்டு, மாமிசத்தில் உதித்து, மாமிசமானவர்கள் மத்தியில் வசித்து, அவர்கள் பிணியைத் தீர்த்து, அவர்களுக்காகப் பரிந்துபேசி, அவர்களைப் பல வழியில் ஆற்றித் தேற்றிக் கடைசியாக அவர்கள் ஈடேறும் வழியை ஏற்படுத்தி இவ்விதமாய் அவர் உயிரோடு சரீரத்தில் இருந்தவரையிலும் ஒரு தேற்றரவு ஊழியத்தை நடப்பித்துவந்தார். ஆனால் அவர் புறம்பாகச் சரீரத்தில் செய்துமுடித்த இரக்ஷிப்பு உலகமெங்குமுள்ள மனுஷர்

தேற்றரவாளன் இயேசுவானவரின் ஸ்தானத்தை வகித்துக்கொள்வது.

உள்ளங்களில் நிறைவேறிப் பூரணப்படவேண்டுமானால், அவர் அவர்கள் உள்ளங்களில் வாசம்பண்ணவேண்டியிருந்தது. அவர் தமது ஆவியின்மூலமாய் மனுஷ உள்ளங்களில் வாசஞ்செய்ய வேண்டியவராகையால், தமது ஸ்தானத்தில் நின்று தமது இரக்ஷண்ய கிரியை மனுஷருக்குள் பூர்த்தியாக்கும்படியாக அவர் இகத்தைவிட்டுப் பரத்திற்குப் போய்ப் பிதாவினிடத்தில், திரித்துவத்தில் மூன்றாம் ஆளாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்பும்படி வேண்டிக்கொண்டார். அந்த ஆவியானவர் மனுஷருக்குள் பிரவேசித்து, கிறிஸ்து இயேசுவைப்பற்றி மனுஷரிடத்தில் பரிந்துபேசி அவரை ஏற்றுக்கொள்ளும்படி செய்து இரக்ஷிப்பை நிறைவேற்றிவருகிறார். நமது ரக்ஷகர் பூமியில் சரீரத்தில் இருந்தபோது சீஷர்களுக்கு எவ்விதமாய்த் தேற்றரவுஊழியம் செய்துவந்தாரோ அவர் மரித்துப் பரத்துக்குச் சென்றபின்பு, அதேவிதமான ஊழியத்தைக் கிறிஸ்துவின் ஸ்தானத்தில் நின்று பரிசுத்த ஆவியானவர் மனுஷர்களிடத்தில் நடப்பித்துவருவதால் அவரும் தேற்றரவாளன் என்று அழைக்கப்படுகிறார். நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறபடி தற்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் நடப்பித்துவருகிற கிரியைகளெல்லாம் கிறிஸ்துவானவரே நடப்பிக்கிறார் என்பது தப்பல்ல. கிறிஸ்துவானவர் சரீரத்தில் இருந்து மனுஷர் நடுவில் நடப்பித்தக் கிரியைகளைப்பற்றி 4 சுவிசேஷங்களும், அவர் மரித்தபிறகு நடப்பித்துவந்த கிரியைகளைப்பற்றி நடபடி புஸ்தகமும் சாக்ஷி பகருவதால், மறுபடியும் உங்களிடத்தில் திரும்பி வருவேன் என்று சொன்ன இயேசுவே ஆவியின்மூலமாய் இப்போது மனுஷர் மத்தியில் கிரியைசெய்து வருகிறார் என்பது சத்தியம்.

தேற்றரவாளன் என்கிற பதம் கிரேக்குப் பாஷையில் 'Paraclate' என்றும், இலத்தீன் பாஷையில் 'Advocate' என்றும் வருகிறது.

(1) பரிசுத்த ஆவியானவர் பரிந்து பேசும் ஒரு நியாயவாதி.

இப்பதங்களின் பொருளைக் கவனித்தால் நியாயஸ்தலத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவனுக்கு உதவிசெய்ய அவனுக்கு அருகாமையில்நின்று அவனுக்காக நியாயாதிபதியினிடத்தில் வழக்காடி பரிந்துபேசுகிறவன், அல்லது குற்றவாளிக்குப் புத்திமதி ஆலோசனை முதலானது கூறுகிறவன் என்று பொருள் கொடுக்கிறது. இயேசு தமது சீஷர்களோடு இருந்தபோது அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவராயிருந்தார். 1 யோவா 2. 1-ல் இயேசு நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறார் என்று சொல்லியிருக்கிறது. சர்வ உலகத்தை யுண்டாக்கினவரும், சர்வ ஞானமும் சர்வ சக்தியுமுள்ள தேவகுமாரனாகிய அவர், சீஷர்களோடு நின்று அவர்களுக்கு ஆலோசனை கூறி, அவர்களுக்காகப் பரிந்துபேசிவந்தார். இப்போது இந்த வேலையைப் பரிசுத்த ஆவியானவர் தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறவராய் இருக்கிறார்.



(இன்னும் வரும்)

## A Sermon

By Mr. T. Ponnusami

### ஓர் பிரசங்கம்

'நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி.' 2 தீமோ. 2. 3.

லௌகீகார்த்தமாய் இவ்வுலகின்கண்ணுள்ள சகல ஜாதிக்காரருக்குள்ளும் எல்லாப் பாஷைக்காரருக்குள்ளும் பற்பல விதமான தொழிலாளிகளை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்களுக்குள் போர்ச்சேவகர்களென் றழைக்கப்படும் தொழிலாளிகளையும் அவர்களுடைய உத்தரவாதமான வேலைகளையும் நாம் சற்று ஆய்ந்துணர்ந்து பார்க்குமளவில் அவர்கள் உத்தரவாதமான பெருத்த வேலைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள் என்று காண்கிறோம்.

போர்ச்சேவகன் தான் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தில் உத்தரவாதமுள்ளவனாய் இருப்பது மாத்திரமல்ல, தன்னைச் சேவகத்தில் அமர்த்திக்கொண்ட தன்னுடைய எஜமானுக்கும் அவன் உண்மையும் உத்தரவாதமுமுள்ளவனாயிருத்தல் மிகவும் அவசியம். எல்லாத் தொழில்களைப்பார்க்கிலும் இந்தப் போர்ச்சேவகத்தொழில் உத்தரவாதமானதும் மகா விசேஷித்ததுமாயிருக்கிறது.

ஒரு ராஜாவின் ஆளுகைக்குட்பட்ட தேசம் சத்துராதிகளின் கைகளுக்கு நீங்கலாகக் காக்கப்படும் விஷயத்தில் ஓர் போர்ச்சேவகன் எவ்வளவோ உத்தரவாதமுள்ளவனாய் இருக்கவேண்டியவனாயிருக்கிறான். இத்தியாதி காரணங்களினால் உத்தரவாதமான ஊழியத்தைப் பெற்றிருக்கிற ஓர் போர்ச்சேவகனிடத்தில் அத்தியாவசியமாய் இருக்கவேண்டிய இலட்சணங்கள் நான்கு.

1. ஊழியத்தில் உண்மையுள்ளவனாய் இருக்கவேண்டும்.
2. ஊழியத்தில் ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கவேண்டும்.
8. யுத்தத்துக்குரிய போராயுதங்களை அணிந்தவனாய் இருக்கவேண்டும்.

**4. தன் ஊழியத்தில் நேரிடக்கூடிய எல்லாத் தீங்குகளையும் அனுபவிக்கக்கூடியவனாகவும் இருக்கவேண்டும்.**

சகோதரரே! நாம் நமது பிரசங்க வாக்கியத்தைக் கவனித்தால் அப்போஸ்தலனாகிய பரி. பவுல் தீமோத்தேயுவை உத்தரவாதமான இந்தச் சிறந்த ஊழியத்தில் அமர்த்தி இவ்விதமாய் எச்சரிப்பதை அறியலாம். இந்தச் சிறந்த ஊழியத்திற்கென்றழைக்கப்பட்ட அப்போஸ்தலனாகிய தீமோத்தேயு தன்னுடைய ஜீவியகாலம்முழுவதும் கர்த்தருக்கென்று தனது ஊழியத்தில் உண்மையுள்ளவராயும் ஜாக்கிரதையுள்ளவராயும் இருந்ததுமாத்திரமல்ல, எப்படிப்பட்ட கஷ்டநஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கக்கூடியவராகவும் இருந்திருக்கிறாரென்றும் பார்க்கிறோம். ஆதலால் ஒரு போர்ச்சேவகனிடத்தில் இருக்கவேண்டிய மேற்கண்ட நான்கு லட்சணங்களைப்பற்றிச் சுருக்கம் சுருக்கமாய்ச் சிந்திக்கக்கடவோம்.

1. ஊழியத்தில் உண்மையுள்ளவனாய் இருக்கவேண்டும்.

ஒரு போர்ச்சேவகன் தனக்குக் குறிக்கப்பட்ட இடங்களிலும் சமயங்களிலும் தன் வேலைகளைச் செய்வதில் உண்மையுள்ளவனாய் இருக்கவேண்டும். ஒரு கோட்டை சத்துராதிகளின் கைகளுக்கு நீங்கலாகக் காக்கப்படும் விஷயத்தில் குறிக்கப்பட்ட இடத்திலிருந்து கோட்டையைக் காவல்செய்வது அவனுடைய விசேஷித்த கடமை. அப்படிச் செய்வானேயாகில் அவன் தன் ஊழியத்திலும் தன் எஜமானுக்கும் உண்மையுள்ளவனாய் இருக்கிறான். நமதாண்டவர் சொன்ன உவமையில் பத்து தாலந்துகளைப் பெற்றவன் மேலே பத்து தாலந்துகளையும் ஐந்து தாலந்துகளைப் பெற்றவன் அதிகமாய் ஐந்து தாலந்துகளையும் சம்பாதித்ததினால், அவர்களிடத்தில் காணப்பட்ட உண்மையினிமித்தம் எஜமான் அவர்களைப் பார்த்து 'உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று சொன்னதாக மத். 25. 21-ல் நாம் பார்க்கிறோம்.

பரி. பவுல் அப்போஸ்தலன், தானும் தமது ஜீவியகாலம் முழுவதிலும் தம்முடைய ஊழியத்தில் எவ்வளவோ உண்மையுள்ளவராய் இருந்திருக்கிறார் என்பதைத் தாம் எழுதியிருக்கும் நிருபங்களின் போக்குகளை நாம் கவனிக்கும்போது தெளிவாய் அறிகிறோம். 'மரணபரியந்தம் உண்மையுள்ளவனாய் இரு, அப்பொழுது ஜீவகிரீடத்தைத் தருவேன்' (வெளி. 2. 10) என்று கர்த்தர் வாக்களித்ததைப் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும், விசுவாசிகளான அநேக தேவதாபக்தர்களும் மரணபரியந்தம் தங்கள் ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்து பெற்று அனுபவித்திருக்கிறார்கள்.



2. ஊழியத்தில் ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கவேண்டும்.

போர்ச்சேவகன் உண்மையுள்ளவனாய் இருப்பது மாத்திரமல்ல, அவன் தன் ஊழியத்தில் ஜாக்கிரதையுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அவன் அஜாக்கிரதையாயும் கவலையற்றவனாயும் இருப்பானேயாகில் சத்துராதி அவனை மேற்கொள்வது சத்தியம். தேசம் அவன் கைக்குள் படுவது இலகு. பத்துக் கன்னியாஸ்திரீகளின் உவமையில் நாம் பார்க்கிறவண்ணம் யாதொரு ஆயத்தமுமின்றி அஜாக்கிரதையாயிருந்த ஐந்து கன்னிகைகளின் நிலைமை எவ்வளவோ பரிதபிக்கப்படக்கூடியதாக விருந்தது. போர்ச்சேவகனிடத்தில் ஜாக்கிரதை என்பது மிகவும் அவசியமான காரியமாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் இதுவிஷயத்தில் தீமோத்தேயுவைப் பார்த்து 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்குமுன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு' (2 தீமோ. 2 15) என்று வெகு கண்டிப்பாய் எச்சரிக்கிறார். பவுல் அப்போஸ்தலனும் தமது ஜீவகாலபரியந்தம் தமது ஊழியத்தில் வெகு ஜாக்கிரதையுள்ளவராய்த் தமது பந்தய ஓட்டத்தை முடித்திருக்கிறார் என்று பார்க்கிறோம்.

3. யுத்தத்துக்குரிய போராயுதங்களை அணிந்தவனாய் இருக்கவேண்டும்.

போர்ச்சேவகன் உண்மையுள்ளவனாயும் ஜாக்கிரதையுள்ளவனாயும் இருப்பதுமாத்திரம் போதாது. அவன் ஆயுதங்களணிந்தவனுமாயிருக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் அந்தந்தத் தொழில்களுக்குரிய ஆயுதங்கள் இல்லையானால் அவன் பிரயோஜனமற்றவனாயிருக்கிறான். போர் செய்வதற்குரிய ஆயுதங்களையுடையவனாய் இருப்பானேயாகில் அவனை எதிர்த்துவரும் சத்துராதிகளை அவன் மேற்கொள்ளக்கூடும். தன்னையும் காப்பாற்றிக்கொள்ளக்கூடும்.

பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையிலிருந்த விசுவாசிகளான பரிசுத்தவான்களுக்குத் தாம் எழுதிய நிருபத்தில் 'நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்' (எபே. 6. 15) என்று வற்புறுத்தி எழுதுகிறார். ஏனென்றால், 'மாமிசத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்

தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு' (எபே. 6. 12) என்று சொல்லுகிறார். சத்தியம் என்னும் கச்சை, நீதி என்னும் மார்க்கவசம், ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசமென்னும் கேடயம், இரட்சண்யமென்னும் தலைச்சீரா, தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் (எபே. 6. 14-17) ஆகிய இப்படிப்பட்ட ஆயுதங்கள் பிசாசு, உலகம், மாமிசம் என்னும் மூச்சத்துருக்களையும் எதிர்த்துப் போர்செய்வதற்கு அத்தியாவசியமானவைகளா யிருக்கின்றன.

4. தன் ஊழியத்தில் நேரிடக்கூடிய எல்லாத் தீங்குகளையும் அவன் அனுபவிக்கக்கூடியவனாகவும் இருக்கவேண்டும்.

போர்ச்சேவகன் தன் ஊழியத்தில் உண்மையுள்ளவனும் ஜாக்கிரதையுள்ளவனும் ஆயுதமணிந்தவனுமாத்திர மிருப்பது போதாது. எவ்விதக் கஷ்ட நஷ்டங்களையும் அனுபவிக்கக்கூடியவனாகவுமிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சிறந்த இலட்சணங்கள் அவனில் இல்லையானால் இந்த உத்தரவாதமான ஊழியத்துக்கு அவன் முற்றிலும் அபாத்திரன்.

ஒரு ராஜன் தன் சேனைகளோடு சத்துராதிகளை எதிர்த்து யுத்தம் செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இரவிலோ, பகலிலோ, காலையிலோ, மாலையிலோ எந்நேரமும் யுத்தகளத்தில் யுத்தம் நடக்கிறதானால் போர்ச்சேவகனுக்கு உண்ணவோ, உறங்கவோ, இளைப்பாறவோ இடமில்லை. பனியோ, குளிரோ, மழையோ எதுவானாலும் அவைகளை அவன் பொறுமையாய் அனுபவித்துக்கொள்ளக்கூடியவனாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவனே போர்வீரன் என்றழைக்கப்படுவான்.

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 77 அக்டோபர் 1912

# வேதியர் விளக்கு

## Abraham—A Character Sketch

By the Rev. G. S. Vedanayagam

### ஆபிரகாம்

### I. ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்

(தொடர்ச்சி.)

4. லௌகீக நாமத்துறவு. ஆபிராம், சாராய் என்ற நாமதேயங்
களைத் தேவன் மாற்றி ஆபிரகாம் சாராள் என்ற புதிய நாமங்களைத்
தரிப்பித்தார் (ஆதி. 17. 5, 15). அவர்களுடைய சிறப்புப் பெயர்,
பொதுப்பெயராக மாற்றப்பட்டது. ஆபிராம் என்றால் உயர்ந்த
தகப்பன் என்று அர்த்தம். ஆபிரகாம் என்றால் திரள் ஜாதிகளின்
தகப்பன் என்றர்த்தம். அப்படியே சாராய் என்றால் எனது பெரு
மாட்டி என்று அர்த்தம். சாராள் என்றால் ஓர் பெருமாட்டி என்
றர்த்தம். ஒடுங்கிய அர்த்தமுள்ள பேர்கள் விசாலமான அர்த்தமுள்ள
பேர்களாயிற்று. சுயநயப் பேர்கள் பரநயப் பேர்களாயிற்று. உலக
மேன்மையை அல்லது சடநன்மையைப்பற்றியப் பேர், வைதீகமேன்
மையை அல்லது ஆத்தும நன்மையைப்பற்றியதாக மாற்றப்பட்டது.
ஒரு ஜாதிக்குப் பெற்றாராயிருந்த அவர்கள் ரட்சிக்கப்படும் சர்வ ஜாதி
களின் ஞானப் பெற்றாராகினர். இவ்விதமாய்ச் சர்வ ஜீவர்களின்
தந்தையாகிய தேவனுடைய அந்தஸ்துக்கு அவர்கள் நெருங்கிவந்
தார்கள். இவ்வுலகத்தின் அதிபதியும் அவனுக்குள் கிடக்கும் இம்
மாயப் பிரபஞ்சமும் கொடுத்த ஜாதிப்பேர்களை மாற்றாமல் பெருமைக்
காக வைத்துக்கொள்ளுகிற கிறிஸ்தவர்கள் இல்லையா? அல்லது
தங்கள் ஞானஸ்நான பேர்களுடன் சாத்தான் பெருமைக்கென்று
ஏற்படுத்தின சில ஜாதிப் பட்டப்பெயர்களைத் திருடிச் சேர்த்துக்
கொள்ளுகிறவர்களும் இல்லையோ. கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளை
களுக்கு வைக்கிற பேர்களைக்கொண்டு அக்குடும்பத்தாரின் ஆத்தும
நிலைமையை ஒருவாறு கண்டுபிடிக்கலாம். அவர்கள் சிந்தை பாத்துக்

குரியதோ, அநித்திய மேன்மையான இவ்வுலகத்துக்குரியதோ என்று அவர்கள் விரும்பி வைத்துக்கொண்ட பேர்களே பெரும்பாலும் காட்டிவிடும். நமக்குப் பொருந்திய புகழ்ச்சிகளையே தேவமகிமைக்கென்று வெறுத்துத் தள்ளவேண்டியிருக்க பொருந்தாப் புகழைக் கவர்ந்துகொள்வது பெரிய குற்றமல்லவா?

'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்' என்ற குறளின் அர்த்தம் பெயரைப்பற்றியும் சொல்லக்கூடியது. பெருமைக்கென்று பேர் வைப்பது கிறிஸ்தவ ஜீவியத்திற்குரியதல்ல. சவுல் குணப்பட்டபின் பவுல் என்னும் பேரைத் தரித்துக்கொண்டதில் நமக்குச் சிறந்த படிப்பினைகள் உண்டு. சவுல் என்றால் உயர்ந்தவன் என்றர்த்தம், பவுல் என்றால் சின்னவன் என்றர்த்தம். அவன் கிறிஸ்துவுக்குட்படுமுன் தனக்கிருந்த மேன்மையான பேரை மாற்றிக் கிறிஸ்துவுக்குட்பட்டபின் தாழ்மையான பேரைத் தரித்துக்கொண்டான். பேர்பெற்ற பென்னியமீன் கோத்திரத்துக்குரிய பேரைவிட்டு யூதரால் நாய்கள் என்று இகழப்பட்ட புறஜாதியாரின் பேரை அச்சாதிகளை இரக்ஷிக்கும்பொருட்டுத் தரித்துக்கொண்டான். அப்படியே முதற் சுவிசேஷகனாகிய மத்தேயு தனக்கிருந்த லேவி என்னும் உயர்ந்த பெயரை மறைத்துவிட்டான். லூக்கா சுவிசேஷகன் அதை வெளியிட்டிருக்கிறான். கிறிஸ்தவ ஜீவியம் பேர்மாற்றுகிறதில்கூடக் காணப்படும்.

5. பொருந்தா நட்புத்துறவு. இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளு (ஆதி. 21. 10). அவசரப்புத்தியினாலும் விசுவாசக் குறைவினாலும் தேவாலோசனையின்றித் தொடுத்துக்கொண்ட குடும்பச் சம்பந்தமானது ஆபிரகாமின் வாக்குத்தத்த வித்துக்கு இடறுண்டாக்கும் பெரிய சோதனையாக முற்றிவிட்டது. தன் சரீர சம்பந்தமான யவ்வனப் பிராயமுடைய ஆகாரையும் தன் சத்துவத்தின் முதற்பலனானவனும் தன் கண்மணியைப்போல் நேசிக்கப்பட்ட மகனுமாகிய இஸ்மவேலையும் அவன் துறக்கவேண்டுமென்று தேவன் ஆக்கியாபித்தார். ஆபிரகாம் உடனே கீழ்ப்படிந்தான். நமது ஜீவிய காலத்தில் இதேவிதமான எண்ணத்துடன் நமக்கு நலமென்றும் அவசரமானதென்றும் கருதி அனுசரித்துக்கொண்ட அநேக காரியங்கள் உண்டு. அவை பிற்காலத்தில் நமது பக்திக்கு இடையூறான விலங்காக மாறிப்போயிருக்கலாம். இவற்றையும் துறந்துவிடாமல் நாம் தேவனுக்குச் சிநேகிதராயிருக்க முடியாது. இப்பொருந்தா நட்புகழ் சரீர சம்பந்தமாகச் சிநேகக்கூட்டாக உடன்படிக்கைக் கட்டாக இருந்தாலுமிருக்கலாம். அல்லது 'நித்திய ஜீவனை அடையும்படி நான்



என்ன செய்யவேண்டும்' என்று ஆண்டவரிடம் வேண்டிக்கொண்ட வாலிபனையும் லோத்தின் மனைவியையும் கெடுத்த ஆஸ்தியாயிருக்கலாம்.

மேலும் தெய்வபக்திக்கு இடையூறான அந்தஸ்து, ஜாதி, உத்தியோகம், வியாபாரம் ஆகிய இவற்றில் ஒன்றாயிருக்கலாம். ஆண்டவர் அதை விட்டுவிடும்படிச் சொல்லும்போது ஆபிரகாமைப்போல் உடனே கீழ்ப்படிந்தால் நாம் அவருடைய சிநேகிதராவோம். ஒரு கிறிஸ்தவ மாது ஒரு பெரிய படிப்பாளியும், காரியநிர்வாக சமர்த்தனும், சீமானும், மகா செல்வாக்குடையவனுமான ஒரு பிரபுவை மணம் புரிந்தாள். அவனோ நாஸ்திகனாக ஜீவித்து வேதத்துக்கு விரோதமாகப் பல இடங்களில் பிரசங்கித்தும் புஸ்தகம் எழுதியும் வந்தான். இது அவன் மனைவிக்கு அதிக மனவேதனையாயிருந்தது. அவன் குணப்படும்படி வெகுகாலமாக அவள் ஜெபம் பண்ணிவந்தும் காரியமாகவில்லை. ஒருதரம் அவர்கள் குடியிருந்த மாகாணத்துக் கவர்னருத்தியோகம் காலியாக, அதற்கேற்பட்ட பலரில் இப்பிரபுவும் ஒருவராயிருந்தார். கவர்னர் தெரிந்துகொள்ளும் மகாஜன சபைக்கூட்டத்தில் சீட்டுப்போட்டு ஆள் ஏற்படுத்தும் விஷயத்தில் பெரிய குழப்பம் உண்டானது. இவர் அக்கூட்டத்திலிருக்கையில் மனிதர் வல்லமைக்கும் ஞானத்துக்கு மேற்பட்ட இன்னொரு வல்லமை அக்கூட்டத்தைப் பிடித்து நடத்துவதாக ஒரு எண்ணம் அவரைப் பற்றிக்கொண்டது. இதை மறக்கும்படி அவர் வெளியேபோய் அங்குமிங்கும் உலாவி இளைப்பாறிப் பசிக்களையாறிப்பார்த்தும் அந்த எண்ணம் போகவில்லை. அவர் மனதுக்கு ஆறுதலுமில்லை. பிற்பாடு அவர் வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் இதைப்பற்றிச் சொல்ல அந்த அம்மாள் தானும் சில உத்தமிகளும் சேர்ந்து நீர் குணப்படும்படி ஊக்கத்தோடு ஜெபம்பண்ணினோம் என்றாள். இவர்கள் ஜெபித்த நேரமும் அவருக்குள் அந்த எண்ணம் போராடின நேரமும் ஏகசமயமென்றறிந்து அவர் குணப்பட்டார். அன்றுமுதல் இன்றுவரை அவர் உலக சுகம் செல்வம் உத்தியோகம் யாவையும் வெறுத்துக் கிறிஸ்து பிரசங்கித்துவருகிறார்.

அப்புருஷனும் மனைவியும் இப்போது தரித்திரர்களாயிருக்கிறார்களாம். அந்தத் துரைசானியை ஒருவர் கண்டு அநேக வருஷங்களாக உங்கள் ஜெபம் கேட்கப்படாத காரணமென்னவென்று கேட்டபோது, அந்த அம்மாள் சொன்னதாவது: 'நான் ஜெபம் பண்ணினபோதெல்லாம் ஆண்டவர் என்னைப் பார்த்து உன் புருஷன் குணப்படுவதால் வரப்போகும் கஷ்டங்களையெல்லாம் தாங்கிக்கொள்ளப் பிரியமாயிருக்கிறாயா?' என்று கேட்டார். நான் அதற்கு வெகுகாலம் சம்

மதிக்கவில்லை. எனக்கு உலகமேன்மையும் வேண்டும், என் புருஷன் குணப்படவும் வேண்டும் என்று ஜெபித்துவந்தேன். கடைசியாகத் தான் நான் சரியாய் ஜெபித்தேன். கர்த்தர் கேட்டார், இப்போது விசுவாசத்தில் ஐசுவரியவான்களாயிருக்கிறோம் என்பதே.

## The Pastor's Missionary Methods

### By the Rev. N. Devasagayam

### சபையை ஜீவதாதுக்குப் போதித்துத் தூண்டுகிற குரு அநுசரிக்கவேண்டிய விதிகள்

இதுகாறும் ஜீவதாதுக்குச் சபையைத் தூண்டுகிற விதங்களைச் சொன்னோம். தலைமைவகித்துப் பிறரைத் தன்வசப்படுத்தி நடத்த வல்லமை ஒரு குருவுக்கு இருக்குமாயின் அவர் எந்த விதத்தைக்கொண்டும் காரியசித்தி பெறுவார். அந்த வல்லமை அவருக்கு இராதாயின், அவர் எப்பேர்ப்பட்ட சிறந்த முறையைக்கொண்டும் சித்திபெறார். ஆதலால், முறைகளைவிட அவைகளைக்கொண்டு செலுத்தவல்ல ஆளே பிரதானம்.

ஜீவதாதுக்குப் போதிக்கவும் தலைமைவகித்து நடத்தவும் தனக்கு எப்போதும் திராணியுண்டாயிருப்பதற்குக் குரு ஒரு வரையறுத்த ஒழுங்கைப் பின்பற்றவேண்டும். சிலர் இதுவிஷயத்தில் முற்றும் பயன்படாதவர்களாயிருப்பதற்குக் காரணம் அவர்கள் செய்கிற முயற்சிக் குறைவல்ல, அல்லது அதற்குண்டாகும் இடையூறுகளுமல்ல; வகுத்துக் குறித்த ஒழுங்கும் அவ்வொழுங்கை இடைவிடாது பின்பற்றுதலும் இல்லாமையே. திருச்சபையின் ஒரே இலக்கு ஜீவதாது வேலையேயாதலால், இந்த அதி முக்கிய வேலைக்குத் தன்னைப் பக்குவியாக்கிக்கொள்ளல் ஒவ்வொரு குருவின் முக்கிய கடமையாம். அப்படிச் செய்யாத குரு கிறிஸ்துவை எப்படித் தம் சபைக்கு உள்ளது உள்ளபடி போதிப்பார்?

மிஷன் சங்கதிகளைப் பரிபூரணமாய்த் துலக்குகிற நூல்களும் பலதேச மிஷன்களைப்பற்றி விரிவாய் விவரிக்கிற நூல்களும் சபை குருவின் புத்தகச் சேர்ப்பில் இருக்கவேண்டும். ஆயுதமில்லாமல் அவர் என்ன வேலை செய்யலாம்? குருமாரின் புத்தகசாலைகளை விஷயம் விஷயமாய் வகையறுத்துச் சோதித்ததில், அவர்களுள் பெரும்பாலாருக்கு மிஷன் நூல்கள் வெகு குறைவு என்று கணக்கு அகப்பட்டது. தற்காலத்தில் மிஷன் நூல்கள் கணக்கில்லாமல் கிடைக்



MADRAS

கும். அவைகளை நிதானித்து வாங்கிச் சேர்க்கவேண்டும். தக்க வரும்படியுள்ள குரு சில வருஷங்களுள் மதிப்புக்குரிய புத்தகச் சேர்ப்புச் செய்யலாம். அப்படிச் செய்ய நிர்வாகமில்லாத குருவுக்குச் சபை தன் பொதுச் சொத்தில் அவ்வகைய புத்தகசாலை ஏற்படுத்தவேண்டும்.

இதுவுந்தவிர, பத்திரிகைகள் வாயிலாய்ப் பல நூறு மிஷன்கள் விஷயங்கள் பற்பல தேசங்களைப்பற்றி மாதந்தோறும் வெளிவரும். அவைகளை இடப்பகுதியும் விஷயப்பகுதியும் விளங்க ஒட்டேட்டுப் புத்தகத்தில் (File-Book) நறுக்கி ஒட்டிக்கொள்ளவேண்டும். நறுக்கி ஒட்டலால் சிதைவுபடும் என்று விளங்குகிற பத்திரிகைகளையும் சிறு நூல்களையும் முன் சொன்னவாறே இடமும் விஷயமும் தோன்றத் தனித்தனி குறியிட்ட சேர்ப்பட்டைப் புத்தகங்களில் திரட்டி வைக்க வேண்டும். தவிர, குரு தம் வாசிப்புக்குள் கண்ட முக்கிய விஷயங்களையும் பலபேரிடத்தில் விசாரித்தறிந்து பதிவுசெய்கிற சிறந்த விஷயங்களையும், தாமே சிந்தித்து முடிவுசெய்த சங்கதிகளையும் இவ்வாறே பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். பத்திரப்படுத்துதல் மாத்திரமே போதாது. அவைகளைச் சமயந்தோறும் திரும்ப வாசித்து எந்த விஷயம் வேண்டுமோ அந்த விஷயத்தை அரைநொடிப்பொழுதில் எடுத்துவரப் பழக்கமிருக்கவேண்டும்.

ஜீவதாதின் பல துறைகளையும்பற்றிச் சபை குரு இடைவிடாமல் படித்தறியவேண்டும் என்பது சொல்லவேண்டுவதில்லை. இப்படியிருக்க, 1901-ம் ஹ நவம்பர் மீ 16உ வெளிப்பட்ட காங்கிரிகேஷனலிஸ்ட் என்ற பத்திரிகையில் குருமார்களுக்கு ஒரு கேள்வி போட்டிருந்தது. அது: 'நீர் எந்தக் கல்வித்துறையை உமக்கு விசேஷித்த துறையாக்கி ஆராய்கின்றீர்?' என்பது. அதற்குப் பதிலனுப்பின அறுபது குருமாரில் இருவர்மாத்திரமே 'ஜீவதாது' என்று எழுதினார்கள். ஜீவதாதுவிஷயமாய்ச் சபை குருக்களை முகமுகமாய்க் கண்டு பேசப்போனவர்கள் அறிந்தது என்னவெனில், அந்த விஷயத்தைச் சொல்லுகிற நூல்களை ஆராய்கிற குருமார் மிகமிகச் சிலரே என்பது. பல குருமார் காலமுறைதோறும் ஒன்றுகூடுகிற குருக்கள் சமுதாயங்களில் பேசுகிற விஷயப் பட்டிகளைப் பரிசோதித்ததில் மிஷன் விஷயங்களை அவர்கள் மிக அருகிலே ஆலோசித்தார்கள் எனத் தெரியவந்தது. அமெரிக்காவில் மிஷன் விஷயங்களை அறிந்த அறிவுக்களஞ்சியம் என்று பேரெடுத்த ஒருவரை நேரில் விசாரித்த போது, அவர் வருஷத்துக்கு ஒரு மிஷன் நூல்மாத்திரமே தாம் வாசிப்பதாகத் தெரிவித்தார்.

வருஷத்தில் இருபது முறையுமல்ல, பன்னிரண்டு முறையுமல்ல, ஒரு குரு வாசித்தறிய நாலேமுறை மிஷன் பிரசங்கம் செய்வதற்கு

வேண்டியது அளவின்றிப் பரந்திருக்கும். வருஷத்தில் ஒரேமுறை மிஷன் பிரசங்கம்செய்து கேட்போர் கவனத்தைச் சிதறாமல் வசப்படுத்திக்கொள்வதற்காகிலும் வாசிக்கவேண்டிய நூல்கள் ஏராளமாகும். வாரந்தோறும் பொதுஜெபத்தில் அந்தந்த இடங்களின் அவசியங்களை யெடுத்துக்காட்டி மிஷன்களுக்காகப் பரிந்துபேசுகிற குருவுக்கு ஓயாமல் வாசிக்கிற பழக்கமிருக்கவேண்டும்.

மிஷன் பொதுவிஷயங்களைப் படித்தறிந்துகொண்டிருப்பதுமாத்திரமே இக்காலத்தில் போதுமென்று நினைக்கலாகாது. பலதுறைப்பட்டுப் பரந்திருக்கிற மிஷன் விஷயங்களில் ஏதேனும் ஒரு துறையைத் தான் சிறப்புப் படிப்புக்குத் தெரிந்துகொண்டு படிப்பதே தகுதியாகும். இப்படிச் சபைகுரு வருஷத்துக்கொரு சிறப்புத்துறையைத் தெரிந்து படித்தால் அவர் வரவர மிஷன் விஷயஞ் சொல்வதில் தேர்ந்த வித்தியார்த்தியாவார். கல்விமான் எவனுமே ஒரு கல்வித் துறையைத் தனக்குச் சிறட்புத்துறையாக்குவது இக்காலத்தில் அவசியமாயிற்று. தம் சுய ஞானஜீவனுக்கும் தம் ஊழியத்திற்கும் பெரும் பயனுண்டாக ஒரு சபைகுரு உலகெங்கும் நடைபெறும் மிஷன்களின் சங்கதிகளையன்றி வேறெதைத் தம் சிறப்பாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளலாம்? அவர் மேலும் மேலும் அதிக விரிவாய் மிஷன் சங்கதிகளை யாராய்ந்து மனதில் வைத்திருந்தாலொழிய மற்றப்படி பிரசங்கபீட வாயிலாயாகிலும் சரி, மிஷன் முயற்சிகளில் தலைமைக்காரராயிருப்பவர்களிடத்தில் செல்லும் செல்வாக்கு வாயிலாயாகிலும் சரி, திருச்சபையில் அவர் மிஷன் காரியத்தில் கையாலாகாதவராயிருப்பார்.

ஜீவதாது சம்பந்தமாய் உலகில் பல்வேறு சங்கங்கள் செய்துவரும் முயற்சிகளைப்பற்றி ஆலோசிக்க அவ்வச்சங்கங்கள் கூடுங் கூட்டங்களில் போயிருந்து கவனிக்கக்கூடுமாகில் அது மிகப் பிரயோசனமாகும். திருஷ்டாந்தமாக, அமெரிக்கன் மிஷன் போர்டு, மாணவர் சுவிசேஷப் பிரபல்லிய சுயமுயற்சிச் சங்கம், இவைகள் கூடுங் கூட்டங்கள், எவ்வளவு பணச்செலவும் நேரச்செலவும் நேரிட்டாலும் அதையெல்லாம் பாராமல் போய்க் கவனிக்கத்தக்கவைகளே. உலகில் நிறைந்திருக்கிற இருளோடு போராடி ஜெயிக்கச் சபை கூடுகிற இந்த ஆலோசனைச் சபைகளில் போயிருந்துவந்த குருமார்கள் தாங்கள் அப்படிப் போய்வந்ததால் நஷ்டமடைந்ததாகச் சலித்துப் பேசினதேயில்லை. நம் இந்தியாவில் இப்பேர்ப்பட்ட சபைகள் இன்னம் பிரபல்லியமாய் எழும்பவில்லை. நம் தேசத்தில் சுவிசேஷப் பிரபல்லியம் செய்ய ஏற்பட்டிருக்கிற திருநெல்வேலி தமிழ் கிறிஸ்தவ மிஷன் சங்கம், இந்திய நாஷனல் மிஷனரிச் சங்கம், இவைபோன்றவை



மிகச் சிறு பாலகர்கள். இவையும் இவைபோன்ற இனியுண்டாகப் போகிறவையும் விருத்தியடையுங்காலத்தில் முன்சொன்னமாதிரி மிஷன் சங்கக்கூட்டங்கள் இங்கும் நடைபெறும். கையில் உண்டான குருமார்கள் ஐரோப்பா, அமெரிக்கா இப்பகுதிகளில் நடக்கும் சங்கங்களைக் கவனித்து வருவார்களாகில் அவர்கள் அறிவுக் களஞ்சியங்களாகவும், மிக விஸ்தாரமான இடத்தைப் பார்க்கிறவர்களாகவும், மனுஷத் தொகுதிமேல் மாளாத அநுதாபமுடையவர்களாகவும், விசுவாசத்தில் முன்னிலும் உறுதியடைந்தவர்களாகவும், வைராக்கியம் மூண்டு எரிகிறவர்களாகவும் இருந்து தங்கள் சுய சபைகளைச் செம்மையாய் மேய்ப்பதுந்தவிர, உலகில் சுவிசேஷம் பெறாத ஜனங்களுக்கு அதை அனுப்புவதிலும் சரிவாக் கருத்துடையவர்களாவார்கள்.

பிறதேசங்களில் ஜீவ தாதாட்களாயுழைத்து ஜனனதேசத்திற்குச் சிறிதுகாலம் இளைப்பாற வந்திருக்கிற மிஷனரிகள், உலகுசுற்றிப் பிரயாணஞ்செய்து திரும்பின மகா யாத்திரிகர் பல மிஷன் போர்டுகளின் காரியதரிசிகள், இவர்களைக் கண்டு சம்பாஷிப்பதினால் சபைகளின் குருமார் மிஷன்களைப்பற்றிய உயிருள்ள அறிவு நிறைந்தவர்களாகலாம். 'மிகக் கேள்வி கேட்பவன் மிகக் கல்விமானாவான், விசேஷமாய் ஒருவர் எந்தக் கல்வியில் சிறந்தவரோ அந்தக் கல்வியில் நுழைந்து அவரைக் கேட்பவனே அப்படியாவான்' என்று பேக்கன் மகா ஞானியார் சொல்லுகிறார். இந்தவகையால் நம் தமிழ் நாட்டில் குருமார் உயிரறிவடைய இன்னம் சிலகாலம் பிடிக்கும். நம் தேசத்தில் சுயமிஷன்கள் அதிகரிக்கும் நாட்கள் வரும்போது இவ்வகையை நம் குருமார் அநுசரிப்பார்கள் என்று நம்பலாம்.

ஏதேனும் ஒரு பத்திரிகைக்கு ஒரு விசேஷமான மிஷன் சமாசாரம் அனுப்புதல், மிஷன் சங்கதி படிக்கிற வகுப்புகளில் ஒரு சிறந்த விஷயத்தைப் பாடஞ் சொல்லுதல், மிஷன் சங்கதி கேட்கக் கூடியவர்களுக்குத் திட்டவட்டமாய் வகுத்துக்கொண்ட ஒரு சங்கதியைத் தேட்டையடங்க ஊட்டுதல், இத்தியாதி காரியங்களில் தலையிட்டுப் பொறுப்பேற்றுக்கொள்வது சபைகுருவுக்கு அநுகூலமாகும். அந்த விஷயத்தைப் பிழையறவும், அகலமாகவும், மனதிற்கினிப்பாகவும் தருவதற்கு அவர் விசேஷ ஆராய்ச்சியும் வாசிப்பும் செய்ய நேரும். இது செய்யும்போது அவர் பல நூல்களில் துண்டு துண்டாய்க் கிடந்து சிதைந்திருப்பவற்றை ஒன்று சேர்த்துத் தம் மனதில் தம்மதாய் முளைத்த வொன்றாக்கிக்கொள்வதுந் தவிர ஆழ்ந்து சிந்திக்கும் திறமைசாலியுமாவார். அப்படிச் சிந்தித்து விஷய முடிவுசெய்யும் வல்லமை கைகூடினால் அவர் சிறந்த மிஷன் நூல்கள் இயற்றுகிற உலகோபகாரியாகலாம். ஜெர்மனி, உலாந்துதேசம், ஸ்காந்தி

நேவிய மகா நாடுகள் இவற்றுள் சபைகள் இப்பேர்ப்பட்ட அநேக விர்ப்பன்னர்களான சபைகுருக்களைப் பிறப்பித்திருக்கின்றன. அவர்கள் மிஷன்வேலை செவ்வனே நடைபெறப் பல சிறந்த முறைகளைக் கண்டு சொல்லுகிறார்கள். நம் தேசத்திலும் அத்தகைய குருமார் எழும்புவது அவசியமல்லவா?

சபைகளின் குருமார் மிஷன் ஆவி நிறைந்தவர்களாயிருப்பது மிகப் பிரதானம். அப்போது அவர்கள் செய்கிற ஒவ்வொரு பிரசங்கமும் ஜெபமும் சம்பாஷணையும் மிஷன்வேலைக்குத் தூண்டுகிற வல்லமையும் உயிரும் நிறைந்திருக்கும். தம் மனதிலிருக்கிற எந்த நோக்கமும் கைகூடுவதற்கு அது தம் ஜீவியத்தைப் பிடித்து ஆட்டுகிற வல்லமையாயிருப்பது அவசியம் என்று ஒவ்வொரு குருவுக்கும் தெரியும். ஜீவதூதின்மேல் ஆசை ஒரு குருவைப்பற்றி மூண்டு எரியுமானால் அந்த அக்கினி அவருடைய சபையிலும் பற்றி யெரியும். 'ஜீவதூதின்மேல் ஆசைமூளாத குருமார் புதிய ஏற்பாட்டுக்குத் தக்க குருமாரேயல்லர். இந்த வேலைக்கு வேண்டிய திராணியும், பக்குவமும், ஆயத்தப்பாடும் அவர்களுக்கு இல்லவேயில்லை. அவர்கள் கிறிஸ்துவின் ஆவியில் பரிபூரணப் பேறு பெறாத அபக்குவிகள்' என்று கத்பெர்ட் ஹால் என்ற விர்ப்பன்னர் விளம்புகிறார்.

(மோட்டு வேத பண்டிதர்)

# A Sermon

**By Mr. J. Ponnusami**

## ஓர் பிரசங்கம்

'நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி.' 2 தீமோ. 2. 3.

(தொடர்ச்சி)

அப்போஸ்தலனாகிய பவுல் தம்மைக்குறித்து என்ன சொல்லுகிறார்? 'இந்தச் சுவிசேஷத்தின் நிமித்தம் நான் பாதகன்போல் கட்டப்பட்டுத் துன்பத்தை அனுபவிக்கிறேன்' (2 தீமோ. 2. 9) என்றும், தாம் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் 'அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்குண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களையும் சகித்தேன்' (2 தீமோ.



3. 11) என்றும் எழுதுகிறார். இன்னும் தமக்கு நேரிட்ட துன்பங்களையும் அவைகளை அனுபவித்த விதங்களைப்பற்றியும் 'நான் அதிக மாய்ப் பிரயாசப்பட்டவன், காவலில் வைக்கப்பட்டவன், மரண அவதியில் அகப்பட்டவன், யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துமுறை அடிபட்டவன், மூன்றுமுறை மிலாறுகளால் அடி பட்டவன், கல்லாலெறியப்பட்டவன், மூன்றுதரம் கப்பல் சேதத்தி லகப்பட்டவன், கள்ளராலும் சுயஜனங்களாலும் வெகு மோசத்துக் குட்பட்டவன், பசியிலும் குளிரிலும் வெகு கஷ்டப்பட்டவன்' என்று கொரிந்து சபையாருக்குத் தாம் எழுதிய இரண்டாம் நிருபத்தில் தெளி வாய் எழுதுகிறார் (2 கொரி. 11. 23-28). இன்னும் பூர்வகாலத்துத் திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களான அநேக தேவதாபக்தர்கள் அநேக கஷ்ட நஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்துக் கடைசி யாய் இரத்தச்சாக்ஷிகளாயும் மரித்துமிருக்கிறார்கள்.

சகோதரரே! அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவைப் பார்த்து எச்சரித்ததுபோல் இந்தச் சமயத்தில் நம்மையும் அவ்வித மாய் எச்சரிக்கிறார். ஏனென்றால், கிறிஸ்து நமது ராஜாதிராஜன். அவருடைய ராஜ்ஜியத்தில் போர்புரிவதற்காக நம்மைப் போர்ச் சேவகர்களாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். நாம் அவருடைய இராஜ்ஜியத்தில் போர்புரிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். நமக்குச் சத்துராதிகள் உண்டு. அவன் இப்பிரபஞ்சத்தின் அதிபதி யாகிய பிசாசானவனே. அவன் ஒவ்வொரு நிமிஷமும் நம்மை மேற் கொள்ளப் பார்க்கிறான். அவன் பற்பல தந்திரோபாயங்களாகிய ஆயுதங்களைக்கொண்டு நம்மை எதிர்த்து யுத்தஞ்செய்ய வருகிறான். அவனிடத்தில் பற்பலவிதமான ஆயுதங்கள் உண்டு. பொய், வஞ் சகம், விபசாரம், வேசித்தனம், குடி, வெறி, களியாட்டு, சூதாட்டம், பெருமை, பகை, விரோதம் முதலிய ஆயுதங்கள் அவனுக்குண்டு. இவனுடைய இப்படிப்பட்ட ஆயு தங்கள் நாம் அணிந்திருக்கவேண்டிய சர்வாயுதவர்க்கங்களுக்கு நிக ரில்லை. ஆதலால் நாம் அழைக்கப்பட்டிருக்கும் இந்த அழைப்புக்கும் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கும் இந்தச் சிறந்த ஊழியத்துக்கும் பாத்திரராய் இருக்கிறோமா? மோசம் போகாதிருப்போமாக.

முதலாவது நாம் நமது ஊழியத்தில் நமது பரம ராஜனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமா, இல்லையானால் நாம் கர்த்தருடைய பட்டாளத்தில் போர்ச்சேவகர்களாய் இருக்கமுடியாது. உண்மையுள்ளவர்களாய் இருந்தோமானால் அநேகத்தின்மேல் அதிகாரிகளாக வைக்கப்படுவோம். எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்போம். முடிவுபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருந்தோ

மாறுல் வாக்களிக்கப்பட்ட ஜீவகிரீடத்தைப் பெறுவோம் (வெளி. 2. 10) என்பது நிச்சயம்.

இரண்டாவதாக நாம் நமது ஊழியத்தில் ஜாக்கிரதையுள்ளவர் களாய் இருக்கிறோமா? அப்படி இருக்கவேண்டியது அவசியமே. எந்தச் சமயத்தில் நாம் கவலையீனராய் அஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்போமோ என்று நமது சத்துராதியாகிய பிசாசானவன் அல்லும் பகலும் ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறான். அப்படி இருந்தோமானால் நம்முடைய சத்துரு நம்மை மேற்கொள்ளுவான். நாமும் நமது பரம ராஜனால் புத்தியற்ற கன்னியாஸ்திரீகளைப் போல் புறக்கணிக்கப்படுவோம். அப்படிக்கில்லாமல் நாம் முடிவு பரியந்தம் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருந்து ஜெயங்கொண்டோ மானால் இரண்டாம் மரணத்தினால் நாம் சேதப்படுத்தப்படுவதில்லை. (வெளி. 2. 11.)

மூன்றாவதாக நாம் ஆயுதம் அணிந்தவர்களாய் இருக்கிறோமா? போராயுதங்கள் அணிந்திராதவனை நாம் போர்ச்சேவகனென்று அழைக்கமாட்டோம். அவன் ஆயுதங்கள் அணிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அவன் நினையாத நேரத்திலுங்கூட அவன் போர் புரியக் கூடியவனாக இருப்பான். நாம் உண்மையும் ஜாக்கிரதையு முள்ள போர்ச்சேவகர்களானால் நமக்கு ஆயுதம் அவசியம். நமக்குச் சர்வாயுதவர்க்கங்களாகிய பலத்த ஆயுதங்கள் மாத்திரமல்ல, இரு புறமும் கருக்குள்ள பட்டயமாகிய திருவசனங்களடங்கிய சத்திய வேதமும் நமக்கு உறுதியுள்ள ஓர் போராயுதமாயிருக்கிறது. சகோ தரரே! நாம் இந்த வல்லமையுள்ள ஆயுதத்தை அடிக்கடி கையாடி வருகிறோமா? அணிந்திருக்கிறோமா? அப்படியானால் நாம் ஆயுத மணிந்த போர்ச்சேவகர்கள்தான். ஆயுதம் அணிந்தவர்களாய் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தோமானால் இருபுறமும் கருக்குள்ள பட்ட யத்தை யுடையவரும் (வெளி. 2. 12), சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடு யுத்தம்பண்ணுவேன் (வெளி. 2. 16) என்று சொல்லுகிறவருமான கர்த்தர் அவ்வாக்குத் தத்தத்தை நம்மில் நிறைவேற்றுவார் என்பது சத்தியம்.

நாலாவதாக நாம் பெற்றுக்கொண்டிருக்கிற இந்தச் சிறந்த ஊழியத் தில் எல்லாத் துன்பங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் அனுபவிக்கக் கூடியவர்களாயிருக்கிறோமா? அப்படி இருக்கிறோமானால் நாம் உண் மையும் ஜாக்கிரதையுமுள்ள போர்ச்சேவகர்கள்தான். சோதனைகளைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்பது திருவாக்கு. நாம் உண்மை யும் ஜாக்கிரதையும் போராயுதங்களுமணிந்த போர்ச்சேவகர்களாய் இருக்கிறோமானால் நமக்குத் துன்பங்கள் அவசியம் நேரிடும். பவுல்



அப்போஸ்தலனுடைய ஜீவியத்தில் அவருக்கு நேரிட்ட துன்பங்களை யும் அவர் அவைகளை மேற்கொண்டு அனுபவித்த விதங்களையும் நாம் பார்க்குமளவில் அவர் சகல விஷயங்களிலும் நமக்கு முன்மாதிரி யாய் இருக்கிறார்.

நமதாண்டவர் தாமும் தமது உலக ஜீவியத்தில் எத்தனையோ சோதனைகளை மேற்கொண்டார். துன்பங்களைச் சகித்தார். சிலுவை யின் மரணபரியந்தம் உறுதியும் ஸ்திரமுமுள்ளவராய் இருந்ததினால் மரணத்தை மேற்கொண்டார். பிசாசை ஜெயித்தார். இலவசமான மீட்பை உண்டுபண்ணினார். பிதாவின் திருச்சித்தத்தை நிறை வேற்றினார்.

ஆதலால் சகோதரரே! நாம் அழைக்கப்பட்டிருக்கும் இந்த அழைப்பில் உண்மையுள்ளவர்களாயும் ஜாக்கிரதையுள்ளவர்களாயும் ஆயுதமணிந்தவர்களாயும், தீங்கனுபவிக்கக்கூடியவர்களாயும் இருந் தோமானால் ‘என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால் பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக் கும்படியாகப் ‘பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்துக்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்’ (வெளி. 3. 10) என்று வாக்களித்த கர்த்தர் சகலவித கிருபையின் வரங்களினால் நம்மை முடிசூட்டி, தாம் தமது பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந் ததுபோல நாமும் அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்கார்ந்து என்றென்றைக்கும் அரசாளுவோம். ஆமென்.

## Babylonian Religions

## பாபிலோனியருடைய மார்க்கக் கொள்கைகள்

அமெரிக்கா தேசத்துப் பட்டணங்களிலொன்றாகிய பென்சில் வேனியாவிலுள்ள சர்வகலாசாலையில் பாபிலோனிய பாஷையை நன்றாய் அறிந்த ஜாஸ்திரோ (Jastrow) என்னும் வேதசாஸ்திரி கி. பி. 1911-ம் வருஷத்தில், பாபிலோனியர் அநுசரித்துவந்த மார்க்க ஒழுக்கத்தைப்பற்றியப் புத்தகமொன்றை எழுதி, நாம் கவனிக்கவேண் டியதும், அறிந்துகொள்ளவேண்டியதுமான சில விஷயங்களைத் தெரி வித்திருக்கிறார்.

1. பாபிலோனிய தேசத்து ஜனங்களுக்குச் சன்மார்க்கத்தைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராயங்கள் இருந்தது. அத்தேசத்துச் சாதாரண ஜனங்கள் பேய்பிசாசுகள் உண்டென்றும், அவைகள் மந்திர

வாதிகளின் ஆதிக்கத்தில் இருக்கிறதென்றும் நம்பி, சூனியம் மந்திரம் முதலானவைகளைச் செய்கிறவர்களோடு இணங்கியிருந்தார்கள்.

அந்த மார்க்கத்தையமைந்த ஆசாரியரோ, தத்துவசாஸ்திரம் முதலானவைகளைக் கற்றறிந்து, வித்துவான்களாயும், சாதாரண ஜனங்களைப்போல் பேய்பிசாசுகள் உண்டென்று நம்பினாலும், அவைகளுக்குப் பயப்படாதபர்களாயும் இருந்ததாகத் தோன்றுகிறது.

2. பாபிலோனியருக்குள் 'மரித்துப்போனவர்களுடைய நிலைமை' என்னவென்று விசாரித்துப் பார்க்கையில், சாதாரண ஜனங்களுக்கும் வித்துவான்களான ஆசாரியருக்கும் பெருத்த வித்தியாசம் இருந்ததாக விளங்குகிறது.

சாதாரண ஜனங்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் என்னவென்றால்:—மரித்துப்போன ஆண்களும் பெண்களும் ஆவிக்குரிய இன்னொரு நிலைமைக்குள்ளாகி உயிரோடிருக்கிறார்கள். அந்த நிலைமையிலிருக்கையில் அவர்களுக்குப் பூரண அறிவு உண்டோ இல்லையோ என்று சொல்வது அரிது. அவர்கள் இருக்கும் அந்த நிலைமை சுகக்ஷேமமானதல்ல, அவர்கள் ஒன்றும் செய்யாமல் அங்கே சும்மா இருப்பார்கள். அவர்கள் இருக்கும் அந்த இடம் பூலோகத்துக்குக் கீழிருக்கும் காரிருள் நிறைந்ததும் ஈரமும் பயங்கரமுமுள்ளதுமான ஒரு பெரிய கெபியேயன்றி வேறல்ல. அந்த இடத்தைப்பற்றி பாபிலோனியர் இயற்றிய செய்யுளில், அது தூசி நிறைந்து, ஒட்டரைபிடித்து, பாசிபற்றின சுவர்களுள்ள குடியில்லாத ஒரு ராஜமாளிகைக்கும், இருள் மூடியிருக்கிற ஒரு பட்டணத்திற்கும், மந்தாரமான பிராகாரங்களுள்ள ஒரு தேவஸ்தலத்திற்கும் ஒப்பிட்டு எழுதியிருக்கிறது. யோபின் புஸ்தகத்தில் இவ்விடத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதாவது:—'காரிருளும் மரணாந்தகாரமுமான இருண்ட தேசமும், இருள் சூழ்ந்த ஒழுங்கில்லாத மரணாந்தகாரமுள்ள தேசமும், ஒளியும் இருளாகும் தேசமுமாகிய, போனால் திரும்பிவாராத தேசத்திற்கு நான் போகுமுன்னே' (யோபு, 10. 21) மரித்தவர்களுடைய ஆவியானது சில சமயங்களில் பூலோகத்திலுள்ள ஜனங்களைத் தொந்தரவுசெய்யும்படி வந்தாலல்லாமல் மற்றப்படி இவ்விடத்திற்குப்போன மரித்தவர்கள் திரும்ப வருகிறதில்லை. இருள் நிறைந்த இவ்விடத்தில் போனவர்களுக்கு எவ்விதத்திலும் மீட்பு இல்லை. இவ்விடத்திற்கு 'அரளு' (Arlu) என்னும் பெயர் வழங்கிவந்தது. வித்துவான்களாகிய ஆசாரியரோ மரித்தவர்ளில் அநேகர் இருள்நிறைந்த இந்த 'அரளு' என்னும் இடத்திற்குப் போனாலும், தெரிந்துகொள்ளப்பட்ட சிலர் அவ்விடத்திற்குப்போகாமல், பாக்கியம் நிறைந்த ஒரு தீவுக்குப் போய், அங்கே எல்லாச் சுகவாழ்வும் பெற்று இருப்பார்கள் என்னும் அபிப்



பிராயமுடையவர்களாயிருந்தார்கள். இந்த நல்ல தீவுக்குப் போகும் சலாக்கியம் ஆசாரியராகிய தங்களுக்கும், தங்கள் மதத்துக்குப் பெரியவர்களாகிய ராஜாக்களுக்குமே உரியது என்று சொல்லுகிறவர்களாயிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்தாலும், அவர்கள் அப்படிச் சொல்லாமல், இந்தப் பாக்கியமானது தேவர்கள் தங்கள் இஷ்டத்தின்படி தெரிந்துகொண்டவர்களுக்குமாத்திரம் வருகிறது என்று சொல்லுவது அவர்கள் கொள்கையாயிருந்தது.

3. பாபிலோனிய மார்க்கக்கொள்கைகளைப் பரிசோதித்த வேத சாஸ்திரிகள், அந்தத் தேசத்தார் நியாயத்தீர்ப்பைப்பற்றி விசேஷித்த கொள்கையுடையவர்களாயிருந்தார்கள் என்று சொல்லுவதற்கு யாதொரு அத்தாட்சியையும் இதுவரைக்கும் கண்டுபிடிக்கவில்லை. எகிப்தியரின் மார்க்கக்கொள்கைகளை நாம் பார்த்தால், அவர்கள் வணங்கிவந்த சூரிய தேவன் மனுஷர் செய்கிற ஒவ்வொரு கிரியைகளையும் நியாயம் விசாரித்து அவைகளுக்குத் தக்க பலாபலன்களை அளிக்கிறான் என்கிற நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள் என்று காண்கிறோம். பாபிலோனியரோ, ஒருவன் இந்த ஜீவியத்தில் தான் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்க பலனை மறுமையிலே அநுபவிக்கவேண்டும் என்று கற்பிக்காமல், உயிரோடிருக்கும்போதே பாவத்தை அறிக்கையிட்டு, சடங்காசாரங்களை நிறைவேற்றி, தேவகோபத்தைச் சாந்திசெய்து, இந்த ஜீவியகாலத்தில்மாத்திரம் அத்தேவர்களின் தயவினால் இன்பசுகங்களை அடையவேண்டும் என்று போதித்தார்கள்.

எபிரெயரும், ஒருவன் நன்னடக்கையுள்ளவனாயிருந்தால் யேகோவா அவனுக்கு இம்மையிலே சுகத்தையும் மறுமையிலே ஆசீர்வாதத்தையும் அருளுவார் என்றும், ஒருவன் துர்நடத்தையுள்ளவனாயிருந்தால் அவர் அவனுக்கு இம்மையிலே துக்கத்தையும் மறுமையிலே சாபத்தையும் விதிப்பார் என்றும், ஆதிகாலம்முதல், அடிக்கடியும், கண்டிப்பாயும், மிகத் திட்டவட்டமாயும் போதித்துவந்ததினாலே எபிரெயருடைய மார்க்கம் பாபிலோனியருடைய மார்க்கத்தைப்பார்க்கிலும் சன்மார்க்க விஷயத்தில் எந்தக்காலத்திலும் மேலானது என்று தைரியமாய்ச் சொல்வதற்கு இடமுண்டு.

# PRIZE LYRIC

**By Mr. G. S. Devasirvatham of Madura.**

## The Beauty of God's Word.

### கீர்த்தனம்

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

வேதம்—மகிமை—மா விநோதம், சத்ய—நாதன்
பாதகியடைய நீத போதனை செய்யும்.—

அனுபல்லவி.

பூதலமீதில் வந்த—பாதகம் தொலைந்திட
நாதன் ஏசுவால் வந்த—நீதம் நிறைந்த இந்த— வேத.

சரணங்கள்.

1. பாவியை யேற்கும் தாபம்—பாதைக் குகந்த தீபம்
ஆவலுடன் கொள்வோரின் ஆத்ம மீடேற்றும் லாபம்
கூவியழைத்து விலை கொள்ளாமல் தீர்க்கும் தாபம்
மேவிப்பாவியைச்சேர்க்கும்மேலாம்நன்மைப் பிரதாபம்—வேத.

2. தேனினி மையதிலும்—தெளிதே னினிமையிலும்
வான்புவி தனிலுள்ள—மாண் புகழ் யாவினிலும்
நானிலத்தோர் பதவி—நாடும்முறை யாவிலும்
மேன்மையாம் திருமறை மெய்மையே யாவற்றிலும்— வேத.

3. நம்மை நமக்குக் காட்டும்—நல்நிலைமையில் மாற்றும்
தம்முயிர் விட்ட மீட்பர்—தன்மையால் முடிசூட்டும்
இம்மையிலேயே தேவ—ஈவுகளினால் தேற்றும்
எம்பெருமான் ஏசுவின் இன்ப நகரில் ஏற்றும்— வேத.

4. எத்தனை தத்தென்றாலும்—சத்யவேதம் பிழைக்கும்
இத்தரை யொழிந்தாலும்—சுத்த விதை நிலைக்கும்
பக்தரின் உள்ளமதில்—நித்ய ஜீவன் தழைக்கும்
எத்திறத்தோர் சமயப்—பற்றறவே தொலைக்கும்— வேத.



# Some Ancient Letters

## சில பூர்வீக கையெழுத்துப் பிரதிகள்

இந்த வருஷ ஆரம்பத்திலே கிளாஸ்கோ சர்வகலாசாலையில் வேதசாஸ்திர பாஷைகளின் வித்தியாபாரகராகிய ஜியார்ஜ் மில்லிங்கன் (George Millingan) என்பவர் எகிப்து தேசத்தில் புதிதாய்க் கண்டுபிடித்த சில கையெழுத்துப் பிரதிகளைப்பற்றிச் செய்த உபந்நியாசத்தில் நாம் கவனிக்கவேண்டிய சில விஷயங்களாவன:—எகிப்து தேசத்திலே மழைபெய்வது அபூர்வமானபடியால் மரம் காகிதம் முதலியவை பல நூற்றாண்டுகளாக அழிந்துபோகாமல் இருக்கும். ஆகையால் நாற்பது நூற்றாண்டுகளுக்குமுன்னே பலகைகளின்மேல் வரையப்பட்டதும், நாணற்காகிதத்தின்மேல் எழுதப்பட்டதுமான நூல்களும் தஸ்தாவேஜுக்களும், கணக்கு வழக்கு சாதனங்களும், இந்நாள் வரைக்கும் கெட்டுப்போகாமல் நிலைக்கக்கூடும். மில்லிங்கன் வேதசாஸ்திரி அந்த நூல் முதலியவைகளைப்பற்றிப் பேசவேயில்லை. அவர் ஆக்சிரிங்கஸ் (Oxyrrhynchus) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதும், கல்வி அதிகமில்லாத சாதாரண ஜனங்கள் எழுதினதுமான, வாடகைப் பத்திரங்கள், குடிமதிப்புக் கணக்குகள், உடன்படிக்கைப் பத்திரங்கள், குடும்பவிஷயங்களைப்பற்றி எழுதின கடிதாசிகள் முதலியவைகளைப்பற்றிப் பேசினார். இவைகள் அப்போஸ்தலனாகிய பவுல் முதலியவர்கள் சுவிசேஷப்பிரயாணம் பண்ணிய காலத்திலே எழுதப்பட்டவைகளானபடியால், அக்காலத்து ஜனங்களுடைய வழக்க பழக்கங்களை இவைகளின்மூலமாய் நன்றாய் அறியலாம்.

லூக். 15. 13-ல் கெட்டுப்போன மகன் 'துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணித் தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்' என்று வாசிக்கிறோம். புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட பிரதிகளில் ஒன்றிலே இதே பதங்களைக் காண்கிறோம். கஸ்தோர் என்னும் வாலிபனுடைய தாய்தந்தையர் 'எங்கள் மகனாகிய கஸ்தோர் சில தோழருடனே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணித் தன் ஆஸ்தியை எல்லாம் அழித்துப்போட்டான்' என்று சொல்லி, அவன் பட்ட கடனைத் தீர்ப்பதற்குத் தாங்கள் உதவிசெய்யமாட்டார்கள் என்று விளம்பரஞ் செய்தார்கள்.

இன்னொரு கடிதாசியில் தன் தாயாரைவிட்டுப் பிரிந்து அவள் சொன்ன புத்திமதிகளை மறந்து பலவித தீமைகளைச் செய்துவந்த அந்தோனியஸ் லாங்கஸ் என்னும் வாலிபன் தான் செய்த குற்றங்களுக்காக மனஸ்தாபப்பட்டு கரனிஸ் என்னும் ஊரில் வாசம்செய்த

தன் தாயாருக்கு எழுதின காரியங்களைப்பற்றி வாசிக்கிறோம். இது கிறிஸ்து மரித்தபிறகு ஏறக்குறைய 80-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இந்தக் கடிதத்திலே 'கானிஸ் ஊருக்கு வருவது எனக்கு வெட்கமாயிருக்கிறது. என் உடுப்பெல்லாம் கந்தை. நிர்வாணியைப்போலிருக்கிறேன். என் தாயே, என்னோடு சமாதானமாகுவீராக. எனக்கு வந்த கஷ்டமெல்லாம் நான் செய்த குற்றத்தினாலே வந்தது, என்று இப்போது அறிகிறேன். அதற்காகத் தண்டனையடைகிறேன். நான் பாவம் செய்தேன் என்பதை நன்றாய் உணருகிறேன்' என்று அந்தோனியஸ் தன் தாயாருக்கு எழுதுகிறான். இதற்கு இவன் தாயார் அனுப்பிய பதில் இன்னதென்று தெரியாது. ஆனால் இதிலிருந்தே அந்த மகனுடைய பரிதாபமான நிலைமையைத் தெளிவாய்ப் பார்க்கலாம். இதிலுங்கூட வேதவாக்கியங்களுக்கு ஒப்பான பதங்களை நாம் பார்க்கலாம்.

ஒருவேளை கிறிஸ்து பிறந்த வருஷத்திலேயே எழுதின இன்னொரு கடிதத்தில் ரோமருடைய தேசப்பிரமாணத்தில் அநுமதி பெற்ற ஒரு துர்வழக்கத்தைப்பற்றி அறிகிறோம். அலெக்சந்திரியா பட்டணத்திற்குப் போயிருந்த ஹிலாரியோன் என்னும் ஒருவன் பிரசவகாலம் சமீபமாயிருந்த தன் மனைவிக்கு இக்கடிதத்தை எழுதி 'இப்போது நமக்கு இருக்கிற பிள்ளையைப்பற்றி அதிக ஜாக்கிரதையாயிரு. எனக்குச் சம்பளம் கிடைக்கவும் அதெல்லாவற்றையும் உனக்கு அனுப்புகிறேன். பிரசவகாலத்தில் உனக்கே நன்மையுண்டாவதாக. நீ பெறப்போகிற குழந்தை ஆண்குழந்தையானால் அதைக் காப்பாற்றவேண்டியது. அது பெண்குழந்தையாயிருந்தால் ஊர்த்தெருவிலே அதைப் போட்டுவிடவேண்டியது' என்று சொல்லுகிறான். ரோம ராஜாங்கத்தில் தகப்பன்மார்களுக்குத் தங்கள் குடும்பவிஷயங்களில் உள்ள மேலான அதிகாரத்தையும், அக்காலத்தில் பெண்குழந்தைகளுக்குச் செய்துவந்த அநியாயத்தையும் இதினாலே தெளிவாய்க் காண்கிறோம்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 78 நவம்பர் 1912

# வேதியர் விளக்கு

## The Wisdom of Sirach

### சீராகுவின் நீதி நூல்

### சீராகுவின் மகனாகிய இயேசுவின் நீதி நூல்

### The Wisdom of Jesus the Son of Sirach

### எக்லெசியாஸ்டிக்கஸ் Ecclesiasticus.

I. பெயர்.

'நீதிமொழி' 'சாலொமோனுடைய நீதி' முதலிய நீதி நூல்களைப்போல இதுவும் ஒரு நீதி நூல். இதற்குச் சாதாரணமாய் 'சீராகுவின் நீதி நூல்' என்னும் பெயர் வழங்கிவந்தது. திருச்சபையிலே இந்த நூல் அதிகமாய் வாசிக்கப்பட்டுவந்ததினால் 'சபைக்குரியது' என்று அர்த்தங்கொண்ட 'எக்லெசியாஸ்டிக்கஸ்' என்னும் லத்தீன் பெயர் இதற்கு இடப்பட்டது. இந்த லத்தீன் பதம் கிரேக்க பாஷையிலும் வழங்கிவந்ததினாலே வேதசாஸ்திரிகளில் அநேகர் இந்த நூலைப்பற்றிப் பேசும்போது 'எக்லெசியாஸ்டிக்கஸ்' என்னும் பதத்தையே உபயோகிப்பார்கள். இந்த நூலின் முகவுரையில் கண்டபடி இதை இயற்றியவன் 'சீராகுவின் மகனாகிய இயேசு' ஆனதினாலே சிலர் இதற்கு 'சீராகுவின் மகனாகிய இயேசுவின் நீதி நூல்' என்று பெயர் வழங்கிவருகிறார்கள்.

II. ஆக்கியோன்.

இந்த நூலை இயற்றியவனைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இந்நூலின் முகவுரையிலே இதன் ஆக்கியோன் தன் பாட்டனாகிய இயேசு என்றும், அவன் நியாயசாஸ்திரத்தையும் தீர்க்கதரிசன ஆகமங்களையும் ஆராய்ந்துபார்த்து, ஜனங்களுக்குப் புத்திபோதனை கொடுக்கும்படியாகவும், சன்மார்க்கத்தை விருத்திசெய்யும்படியாகவும் இந்த நூலை எழுதினான் என்றும் சொல்லுகிறான். இந்தப் புஸ்தகத்தின் தலைப்பின்படி இந்த இயேசு சீராகு என்பவனுடைய மகன். இந்த

இயேசு என்பவனும் இந்த சீராகு என்பவனும் இன்னார் என்று நமக்குத் தெரியாததினாலே, இவ்விரண்டு நாமங்களையல்லாமல் இந்த நூலின் ஆசிரியரைப்பற்றி நாம் வேறொன்றும் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. 50. 27-ல் இந்நூலாசிரியன் தான் 'எருசலேமில் வசித்த எலெயாசார் ஆகிய சீராகுவின் மகனாகிய இயேசு' என்று தனது பெயரை விபரமாய்ச் சொல்லுகிறான். ஆனால் இதினால் இவனுடைய நிலைமையையும் இவன் இருந்த காலத்தையும்பற்றி நாம் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது. வேதசாஸ்திரிகளில் சிலர் எபிரெய, கிரேக்க, அரமேய பாஷைகளிலுள்ள கை எழுத்துப் பிரதிகள் பலவற்றை ஆராய்ச்சிசெய்து, பின்வருமாறு இவர்களுடைய வம்ச அட்டவணையை வரைகிறார்கள்.

1. இந்த நூலைக் கிரேக்க பாஷையில் மொழிபெயர்த்த இயேசு.
2. இவனுடைய தகப்பனாகிய சீராகு.
3. இந்நூலை மொழிபெயர்த்தவனுடைய பாட்டனாகிய இயேசு.
4. இயேசுவின் தகப்பனும் எலெயாசார் என்று மறுநாமங் கொண்டவனுமாகிய சீராகு.

III. பாஷை.

1896-ம் வருஷம்மட்டும் சீராகுவின் நீதி நூல் கிரேக்க பாஷையில் முதல் முதல் எழுதப்பட்டது என்று வேதசாஸ்திரிகள் நம்பிவந்தார்கள். சில வித்துவான்கள் எபிரெய பாஷையில் எழுதப்பட்டு அந்தக் காலம்வரையில் தெரியாத சில கையெழுத்துப் பிரதிகளை அந்த வருஷம்முதல் விசாரித்து இப்புஸ்தகத்திலுள்ள 51 அதிகாரங்களில் 39 அதிகாரங்களைக் கண்டுபிடித்து வந்திருக்கிறார்கள். இதுமட்டும் ஆராய்ச்சி செய்யப்படாத சில எபிரெய கைப்பிரதிகளில் மீதியான அதிகாரங்கள் கிடைக்கும் என்று நினைக்கிறதற்கு இடமுண்டு. இப்போது எபிரெய பாஷையில் இதைக் கண்டுபிடித்ததினாலே, இதன் மூலபாஷை எபிரெயபாஷைதான் என்று சந்தேகமின்றிச் சொல்லத் துணிவோம். அந்தக்காலத்தில் எபிரெயபாஷை பேசின யூதர்கள் சிலர் ஆனதினாலும், அவர்களில் அநேகருக்குச் சாதாரண பாஷை கிரேக்க பாஷை யானதினாலும், சீக்கிரத்தில் இந்த நூல் எபிரெய பாஷையிலிருந்து கிரேக்கபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது என்று நினைக்கலாம். மேலும், எபிரெயபாஷை பேசுகிற யூதர்களுக்குத் தங்கள் பாஷையில் இந்த நூலைக்கொண்ட கைப்பிரதிகள் சொற்பமானதினால், கிரேக்கபாஷையில்மாத்திரம் இதை வாசித்தவர்கள் இதன் மூலபாஷை கிரேக்கபாஷைதான் என்று அபிப்பிராயம் கொண்டுவந்தார்கள்.



IV. காலம்.

வேதசாஸ்திரிகள் நினைக்கிறபடி சீராகுவின் மகனாகிய இயேசு என்னும் ஒரு சாஸ்திரி கிறிஸ்துவுக்குமுன் மூன்றாம் நூற்றாண்டில் மூலபாஷையாகிய எபிரெயபாஷையில் இதை இயற்றினான். இவனுடைய பேரன் ஏறக்குறைய கி. மு. 132-ம் வருஷம் இதைக் கிரேக்கபாஷையில் மொழிபெயர்த்தான்.

V. பொருள்.

இப்புஸ்தகத்தில் அடங்கிய பொருளைச் சுருக்கிச் சொல்லுதல் கூடாத காரியம். ஏனென்றால், இந்நூலாசிரியன் இதை எழுதும் போது யாதாமொரு வரிசைக் கிரமத்தையும் அனுசரியாமல் பற்பல விஷயங்களைத் தன் மனதில் தோன்றியபடியே இங்கும் அங்குமாக எழுதிவைத்தான் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்திலும் இன்னும் பல விஷயங்களிலும் நீதிமொழி என்னும் புஸ்தகத்திற்கும் இதற்கும் ஒற்றுமை உண்டு. இந்நூலிலே ஞானியாகிய ஒருவன் எபிரெயர்களுக்குத் தெரிந்த ஞானத்தின்படி தன் மனதில் உண்டான அபிப்பிராயங்களைச் சொல்லுகிறான். கடவுளைப்பற்றி இவன் பேசும்போது யூதமார்க்கத்தில் அதிக பக்தியுள்ளவனானாலும் கிரேக்க தத்துவசாஸ்திரத்தில் இவன் அதிக தேர்ச்சியுடையவன் என்பதைக் காண்கிறோம் (18. 1[illegible]; 42. 21; 43. 27). இவ்வசனங்களில் கடவுள், சர்வேஸ்வரன், நியாயாதிபதி, பக்தியுள்ள பரமராஜா, கருணாகரன் என்று சொல்லுகிறான். வேறு சில வசனங்களை நாம் பார்த்தால் இந்நூலாசிரியன் சதுசேய சமயக் கொள்கைக்கு இசைந்தவனாய்த் தோன்றுகிறான். இந்த நூலிலே தேவதூதர்கள் சரீர உயிர்த்தெழுதல், நித்தியஜீவன் என்பவைகளைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. மரணத்துக்குப் பின்பு மரித்தோருடைய நிலைமையைப்பற்றிச் சங்கீதம் பாடினவர்கள் என்ன நினைத்தார்களோ அப்படியே இந்நூலாசிரியனும் நினைக்கிறான். இந்நூலிலுள்ள 51 அதிகாரங்களில் சன்மார்க்கத்தையும் நல்நடக்கையையும்பற்றி விரிவாய்ப் பேசுகிறான். இந்த விஷயங்களைப்பற்றிப் பற்பல புத்திபோதனை புகட்டுவதுதான் இவனது முக்கிய நோக்கம். இவ்விதமாய் 'தாழ்மையுள்ளவன் செய்யும் ஜெபம் மேக மண்டலங்களை ஊடறுத்துச் செல்லும்.' 'கழுதைக்குத் தீனியும், தடியும், பாரமும்; வேலைக்காரனுக்கு ஆகாரமும், சிக்ஷையும், ஊழியமும்;' 'திராட்சரசம் பலரை அழித்துப்போட்டிருக்கிறது;' 'மட்டான சாப்பாட்டால் நல்நித்திரை உண்டாகும்;' 'தன் மகனைச் சிக்ஷைசெய்கிறவனுக்கு அவனால் லாபம் உண்டாம்;' 'கசப்பான ஜீவ

னைப்பார்க்கிலும் மரணம் நல்லது' என்னும் பல வசனங்களை இங்கே காண்கிறோம். சில வசனங்களிலே இவன் பெண்களைக் கண்டித்தும், வைத்தியம், வியாபாரம், பணம், தர்மம், இரக்கம் இவைகளை விசேஷமாய்ச் சிறப்பித்தும் பேசுகிறான்.

VI. இதின் மேன்மை

இந்நீதி நூலை இயற்றிய காலம்முதல் இதுவரையும் இதின் மேன்மை அதிகரித்து வந்திருக்கிறது. முன்கூறியபடி வெகு சீக்கிரம் இது கிரேக்கபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. கிறிஸ்தவ திருச்சபை உண்டானதுமுதல் கிறிஸ்தவர்கள் இந்நூலை அதி பிரியத்தோடு வாசித்துவந்தார்கள். போலிக்கார்ப்பு, தெர்த்துல்லியன் முதலிய திருச்சபைப் பிதாக்கள் தாங்கள் எழுதிய நூல்களில் இப்புஸ்தகத்திலிருந்து பல வசனங்களை மேற்கோளாக எடுத்து எழுதியிருக்கிறார்கள். தள்ளுபடியாகமத்திலுள்ள சகல புஸ்தகங்களிலும் இதுதான் சிறந்தது.

## Abraham—A Character Sketch

**By the Rev. G. S. Vedanayagam**

### ஆ பி ர கா ம்

### ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்

(தொடர்ச்சி.)

6. பொருந்திய நட்புத்துறவு. 'இந்தக் காரியங்கள் நடந்தபிறகு தேவன் ஆபிரகாமைச் சோதித்தார். எப்படியெனில் அவர் உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியாதேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு' என்றார் (ஆதி. 22. 1, 2). பலியிடு என்ற ஒரே சொல்லுடன் புத்திரன், ஏகசுதன், நேசகுமாரன், ஈசாக்கு என்ற நாலு அருமையான சொற்களைத் தேவன் உரைத்தது ஆபிரகாமின் இருதயத்தில் எவ்வித உணர்வை உண்டாக்கியிருக்குமென்று நாம் நினைத்துப் பார்க்கலாம். ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் சோதிக்கும்படி தேவன் ஏற்படுத்திய ஏழு சோதனைகளிலும் இதுவே மகா அகோரமான சோதனை. இதற்குமுன் ஆபிரகாம் தனது முதற்சாயலான இஸ்மவேலின் முகத்தை மறக்க நேரிட்டது. சாராளோடு



ஒத்திருந்தால் ஒருவேளை இன்னொரு குமாரனையும் பெறத்தக்க ஆகாரையும் துறக்க நேரிட்டது. தன் மடியில் விளையாடி தன் கண்முன் நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாய்ச் சரீரத்திலும் அறிவிலும் விர்த்தியடைந்து மகாமேருபோல் வளர்ந்து பாலிய வயதான மகனை, பலியிடும்படி தேவன் கேட்டுவிட்டார். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்குச் சமானம் என்றபடி ஆபிரகாமூக்கு வலிக்காரன்போல் இருந்த மகனைப் பிரிவது லேசான காரியமா? அத்துடன் மூன்றுநாட்களாகத் தன் கையிலே கத்தியும் தன் மகன் சிரசிலே விறகும் எடுத்துக்கொண்டு தன் மகனை முன்னே போகவிட்டுத் தான் பின்னே நடந்து அவன் வளர்த்தி, வடிவம், நடையழகு முதலியவைகளைக் கவனித்துக்கொண்டும் அவனது மதுரமொழிகளைக் கேட்டு மாறுத்தரம் சொல்லிக்கொண்டும் போகிற ஆபிரகாமின் இருதயத்தில் உண்டான எண்ணங்களை நினைத்துப் பார்ப்போமாக. தேவனுக்குப் பலியிடப்போகும் தகப்பனும் மகனும் தேவனைக்குறித்தும் அவரது மகத்துவ லக்ஷணங்களைக்குறித்தும் அவரை வணங்கும் உத்தம நெறிமுறைகளைக்குறித்தும் சம்பாஷித்துக்கொண்டு போகும்போது ஆபிரகாமின் இருதயம் எவ்வண்ணம் இருந்திருக்குமென்று உத்தேசிக்கலாம். என்றாலும் ஆபிரகாம் தன் மகனைப் பார்ப்பதைவிடத் தன் மகனைத் தனக்கு அற்புதமாய்த் தந்த தேவனையே பார்த்துக்கொண்டு தலைவணங்கி தைரியத்தோடு நடந்திருக்கவேண்டும். அவனுக்கு இந்த உத்தரவு பிறந்த நாள்முதல் நாலு நாட்களாக முறையே தேவனுடைய அன்பின் ஆழமும் நீளமும் அகலமும் உயரமும் இன்னதென்று தியானித்துக்கொண்டுதான் போயிருக்கவேண்டும். ஆபிரகாமுக்குத் தேவன் கொடுத்த இம்மை மறுமைக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்கும் ஈசாக்கு ஏக சுதந்தரவாளியாயிருந்தான். தேவனருளிய சகல பாக்கியங்களையும் பூட்டிவைத்துப் போகக்கூடிய பொக்கிஷ பெட்டியாக ஈசாக்கு எண்ணப்பட்டிருந்தான். ஆபிரகாமுக்குண்டான சர்வ ஆசீர்வாதங்களாகிய தேவனதியானது உலகமெங்கும் பாய்ந்தோடி வளம் பெருகச் செய்யக்கூடிய ஒரே வாய்க்காலாக இருந்த வாக்குத்தத்த புத்திரன் ஈசாக்கு என்று நாம் ஒருவாறு சொல்லலாம். இந்த ஒரே மகனையும் துறந்துவிடவேண்டுமென்று தேவன் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டார். நமக்கும் இன்றியமையாத அவசியமானதாக ஆசீர்வாதங்களும் நன்மைகளும் தேவனால் அருளப்பட்டிருக்கிறது. இவ்வித ஆசீர்வாதங்கள் இவற்றைத் தந்தவர் முகத்தை மறைக்கத்தக்க கருவியாவதுமுண்டு. அப்பொழுது இவ்வாசீர்வாதங்களே நமக்கு விக்கிரகங்களாகும், நாம் சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவிக்கும் மூல பாவம் இதிலும் துவங்கக்கூடியதே. ஆண்

டவர் நமக்குக் கொடுத்த கற்புடைய மனைவி, நட்புடைய மக்கள் சிறப்புடைய சொத்து, புகழ்ச்சிக்குடைய பேர், மகிழ்ச்சிக்குடைய ஆதாயம் ஆகிய யாவும் நமக்கும் தேவனுக்கும் இடையிலே தடுப்புச் சுவராக நிற்கும் சோதனை மகா கொடியதே. 'எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் ஒன்றுக்கும் அடிமைப்படமாட்டேன்.' 1 கொரி. 6. 12.

நமது ஞானப்பந்தய ஓட்டத்தில் தடையாக நிற்பது நமது பாவ மாத்திரமல்ல, நமக்கு நன்மையும் செம்மையும் ஞாயமும் பாக்கியமுமாக நமக்குத் தேவனால் அருளப்பட்ட ஆசீர்வாதங்களுங்கூடத் தடையாக மாறக்கூடும். அவ்வாசீர்வாதங்கள் தன்னிலே அப்படியாகக் கூடியனவல்லவென்றாலும் நாம் அதை உபயோகிக்கும் விதத்திலே அவைகள் பெருந் தடைகளாகக்கூடும். ஆகையால் பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டுத் தேவமார்க்கத்தில் ஓடவேண்டுமென்று எபிரெய நிருபாக்கியர் சொல்லுகிறார். பிள்ளையில்லாத காலத்தில் கோவில் ஒழுக்கம் தவறாதிருந்த கிறிஸ்தவர்கள் பிள்ளைப்பாக்கியம் பெற்றவுடன் பிள்ளைத்தொந்தரவால் கோவிலுக்கு வர முடியவில்லை என்று சொல்லுகிறவர்களும் தரித்திரம் இருக்கும்போது கோவில் ஒழுக்கம் தவறாதிருந்து கர்த்தர் சொத்து பாக்கியம் தந்தவுடன் தொல்லை மிகுதியால் வரவில்லை என்பவர்களும் விவாகமாகுமுன் கூட்டங்களுக்குத் தவறாமல் வந்தவர்கள் ஆண்டவர் இல்லற பாக்கியந் தந்தவுடன் மணமக்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறதற்குமாத்திரம் நேரம் செலவிட்டுத் தேவன் முகத்தையும் திருவாசக முகத்தையும் பார்க்க நேரமில்லை என்பவர்களும் ஆபிரகாமுக்கு நேரிட்ட இந்தக் கடைசி சோதனையைக் கவனிப்பது நன்மையாயிருக்கும். ஆபிரகாமுக்குத் தன் மகனைத் துறந்த இந்தத் துறவில் ஒரு பெரிய இரகசியம் வெளிப்பட்டது. கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியமே அந்த இரகசியம். இந்த இரகசியத்துக்கு 'மற்றற்ற பற்றென்றும் துறவாதுறவு என்றும்' பெயரிடலாம். அதாவது ஆபிரகாம் தன் மகனைத் துறந்தும் துறவாதிருந்தான். 'தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான், மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்' (எபி. 11. 19) என்று சொல்லப்பட்டபடி ஆபிரகாம் தன் மகனைத் துறந்து பின்பு பெற்றுக்கொண்டான். அதாவது அவன் தன் மகன்மேல் இருந்த பற்றை அறுத்து பற்றுவைத்தான். இன்னும் தெளிவாய்ச் சொன்னால் தன் மகன்மேலிருந்த பற்றை அறத்துறந்து தேவன்மேலே தன் முழுப் பற்றையும் வைத்துப் பின்பு தேவன்மேல் வைத்த பற்றி



னால் மகன்மேல் பற்றுவைக்கலானான். தன் சுய சித்தப்படியல்ல, தேவ சித்தப்படி தன் மகனை நேசித்தான், வேத பாஷையில் சொன்னால், நேசிக்கவேண்டியதையெல்லாம் தேவனுக்குள் நேசிக்க வேண்டும். நான் என் மனைவிக்குள் தேவனை நேசிக்கிறது ஒன்று, தேவனுக்குள் என் மனைவியை நேசிக்கிறது வேறொன்று. முந்தினது விக்கிரக ஆராதனை; பிந்தினது தேவாராதனை. இப்படியே ஒருவன் தேவனுக்காக உலக ஆசீர்வாதங்களையும் உலக ஆசீர்வாதங்களுக்காகத் தேவனையும் தேடலாம்.

உலகத்துக்குள் தேவனைப் பாராமல் தேவனுக்குள் உலக முழுவதையும் பார்ப்பதே மெய் மதிப்பு.

'பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைபற்றுக பற்றுவி டற்கு'

உலகத்துக்குச் சிநேகிதனாக விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.

(இன்னும் வரும்.)

# The Evangelisation of the Middle Classes: The Message

By the Rev. G. E. Philips and Mr. Masilamoney

## மத்தியதர ஜாதியாருக்குள் செய்யும் சுவிசேஷ வேலை

### பிரசங்கப் பொருள்

இந்த வியாசமானது தெருப்பிரசங்கம் கடைப்பிரசங்கம், உயர் ஜாதிப் பள்ளிக்கூடங்களில் வேதாகமத்தைக் கற்பித்தல், தனித்த ஆட்களோடு செய்யும் சம்பாஷணை, ஸ்திரீகளுக்காகச் செய்யும் வேலை, கைப்பிரதி முதலியவற்றை எழுதுதல் முதலான பலவற்றையுங்குறித்துக் கூறும். வேலைசெய்யவேண்டிய வழிவகைகளைப்பற்றிக் கூறுவது எமது கருத்தல்ல. பிரசங்கிப்பதும், சம்பாஷிப்பதும், எழுதுவதும் இன்னின்ன விஷயங்களைப்பற்றி என்பதை ஆராய்வதே கருத்து. ஆகவே எந்தவிதமாய்ப் பிரசங்கிக்கவேண்டுமென்பதல்ல, எந்த விஷயத்தைப்பற்றிக் கூறவேண்டுமென்பதை யடுத்துச் சில குறிப்புகள் சொல்லுகிறோம்.

கிறிஸ்துமார்க்கத்தை இங்கிலீஷ் பாஷையில் பிரசங்கிக்கும்
போது ஜனங்கள் அதிக கவனமாயும் மரியாதையாயும் கேட்கிறது
போல், அதே சத்தியத்தைச் சுயபாஷையில் பிரசங்கிக்கும்போது அதில்
பிரியப்படுகிறதில்லை என்பது யாவரும் ஒத்துக்கொள்ளவேண்டிய
விஷயம். இங்கிலீஷ் பிரசங்கங்களில் கிறிஸ்து மார்க்கக் கொள்கைகள்
மறைபொருளாயல்ல, தெளிவாயும் பலமாயும் புகட்டுவிக்கப்பட்ட
போதிலும் அறிவாளிகளும், செல்வாக்குள்ளவர்களுமான புறமதஸ்தர்
கள் அதிபிரீதியோடும் மரியாதையோடும் கவனித்துக் கேட்கிறார்கள்.
சுயபாஷையில் செய்யப்படும் கிறிஸ்தவ பிரசங்கங்களைக்குறித்தோ
இவ்விதம் ஒன்றும் சொல்லமுடியாது. இதற்குச் சில காரணங்க
ளுண்டு. இவ்வித இங்கிலீஷ் பிரசங்கங்களைக் கேட்டுக் கூடுமானால்
முடிவில் நடக்கும் தர்க்கத்தில் சேர்வதால் இங்கிலீஷ் பாஷையின்
அறிவை விர்த்திபண்ணலாம் என்று எண்ணி அநேகர் இப்படிச்
செய்கிறார்கள் என்பது உண்மையே. ஆயினும் துரைத்தன உத்தி
யோகஸ்தர் முதலிய பெரியோர்கள் இங்கிலீஷ் பிரசங்கங்களைக் கேட்க
வருவதற்கு இந்தக் காரணத்தைச் சொல்லுதல் பொருந்தாது. உண்
மையும் விவேகமுமான பிரீதியுடன் இவர்கள் இங்கிலீஷ் பாஷையில்
செய்யப்படும் கிறிஸ்தவ பிரசங்கங்களைக் கவனமாய்க் கேட்கிறார்கள்.
ஆனாலோ அடுத்தநாட் காலையில் கடைத்தெருவில் கிறிஸ்துமத சத்தி
யத்தைச் சுயபாஷையில் பிரசங்கித்துக்கொண்டிருக்கும் பிரசங்கி
களைக் கவனியாமல் இகழ்ச்சியான பார்வையுடன் அவர்களைக் கடந்து
செல்லுகிறார்கள். இதற்கு அதி முக்கியமான காரணம் என்ன
வென்றால், அநேக நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ கொள்கைகளும்
எண்ணங்களும் இங்கிலீஷ் பாஷையின்மூலமாய் வெளியிடப்பட்டு
வந்திருக்கிறபடியால் இந்திய சுயபாஷைகளில் கிறிஸ்துமார்க்கத்தைப்
பிரசுரம்பண்ணுகிறதைவிட இங்கிலீஷ் பாஷையில் வெளியிடுவது
அதிக பொருத்தமாயிருக்கிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலு
முள்ள கிறிஸ்தவர்கள் இருதயானுபவங்களை வெளியிடுவதற்கு நெடுங்
காலமாக அந்தப் பாஷையை உபயோகித்துவந்தமையால் அப்பாஷை
யே இவ்விஷயத்திற்குச் சிறந்த கருவியாயும் சுத்த சுவிசேஷத்தின்
சத்தியத்தைச் சுமந்து செல்லக்கூடியதாயுமிருக்கிறது. இவ்விஷயத்
தில் நமது சுயபாஷைகள் இன்னும் அபிவிர்த்தியடையவேண்டும்.
இதைக்குறித்து போப்பையர் 'கிறிஸ்தவ தமிழானது பூரண ஸ்திதி
யடைவதற்கு இன்னும் சற்றே குறையுள்ளதென்றும் தமிழருக்குள்
தெய்வகடாட்சம் பெற்ற ஒருவர் எழும்பி இறந்த நிகழ்கிற பாஷைகள்
யாவிலும் இதையே இனிமையும் பெருமையும் வாய்ந்ததாக்கும்படி
காத்து நிற்கின்றது' எனவும் கூறுகின்றார்.



இவையெல்லாம் இப்படியிருப்பினும் நாம் கருதித் துக்கிக்கத்தக்க
விஷயங்கள் சில உள. சாதாரணமாய் இங்கிலீஷ் பாஷையில் செய்யப்
படுகிற பிரசங்கமானது சுயபாஷையில் செய்யப்படுகிற பிரசங்கத்
தைக்காட்டிலும் அதிகமாய்ப் பொருள் நிறைந்ததும், திட்டமானதும்
அனுதாபம் பொருந்தியதுமாயிருக்கிறது. இப்பிரசங்கங்களைக் கேட்
கிறவர்கள் கிறிஸ்துவானவர் அழிக்கிறதற்கல்ல, நிறைவேற்றுகிற
தற்கே வந்தார் என்று உணரக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.
மத்தியஜாதி ஹிந்துக்களில் அநேகர் நமது தெருப்பிரசங்கங்கள்
தாங்கள் கவனிக்கத்தக்க யோக்கியதையுடையவைகளென்று நினைக்கிற
தில்லை. சில ஹிந்து பிரசங்கிகள் நமது கிறிஸ்தவ தெருப்பிரசங்கங்
களைப் பழித்துக் கூறிப் பரிகாசஞ்செய்வதைக் கேட்டிருப்போம்.
குறையே கூறவரும் இவர்கள் மிகைப்படக் கூறுகிறார்களாயினும் இவர்
கள் பழிப்பிலும் நமது குற்றங்கள் பலவற்றை நாம் உணரக்கூடியவர்
களாயிருக்கிறோம்.
சுயபாஷையில் செய்யப்படுகிற கிறிஸ்தவ பிரசங்கங்களை ஜனங்
கள் நன்றாய்க் கவனியாததற்குக் கிறிஸ்துமதத்தை அவர்களுக்குக்
காண்பிக்கிறதிலுள்ள சில குற்றங்களே காரணம் என்னலாம்.
முதலாவது கொள்கைக் குற்றம். அதிசாதாரணமான ஒரு கொள்
கைக்குற்றத்தைப்பற்றி இங்கே கூறுகிறோம். சாதாரண கிறிஸ்தவ
தெருப்பிரசங்கங்களின் திரண்ட பொருள் பின்வருவதென்னலாம்.
'விக்கிரகங்களை வணங்குவது பாவமும் மதியீனமுமாயுமிருக்கிறது.
ஒரே ஒரு உண்மையான கடவுள்மாத்திரம் இருக்கிறார். அவர் ஒரு மனு
ஷனாகத் தம்மை உலகத்தில் வெளிப்படுத்தினார். ஆனால் தாம் செய்த
அற்புதங்களினால் தாம் மனுஷனல்ல தாம் தேவன் என்பதைக் காண்
பித்தார். அவரை விசுவாசிக்கிறவர்கள் மோட்சத்துக்குப் போவார்கள்.
அவரை விசுவாசியாதவர்கள் நரகத்துக்குப் போவார்கள்' என்பதே.
இன்னும் இதைச் சுருக்கிச் சொன்னால் 'ஒரே தேவன் உண்டு, அவர்
பேர் இயேசுகிறிஸ்து' என்பதே இவர்கள் பிரசங்கத்தின் பொழிப்பு.
இதே வார்த்தைகளில் அவர்கள் தங்கள் பிரசங்கத்தைத் திரட்டிச் சொல்
வதை நாம் பலதரம் கேட்டுள்ளோம். இப்படிப்பட்ட உபதேசம் சுவி
சேஷம் அல்ல என்பதை இங்கு யாம் எடுத்துக் கூறவேண்டுவதில்லை.
திருச்சபைச் சரித்திரத்தில் நாம் காண்கிற செபல்லியு என்னும் மார்க்
கப்புரட்டனின் சித்தாந்தம் இது. தேவன் மனிதருக்கிட்ட அழைப்பை
இது எவ்வளவு விபரீதமாக்குகின்றது. இதில் நமது கர்த்தருடைய
மனுஷீகம் எங்கே?
ஹிந்துமார்க்க அவதாரங்களில் கடவுள் தாம் ஒரு ஜீவான்மாவின்
ரூபத்தைத் தரித்துக்கொண்டபோதிலும் அவருடைய உண்மையான

தன்மை மாறுமலிருக்கின்றது என்னும் கொள்கையைப்போலவே
இவர்களுடைய உபதேசமு மிருக்கின்றது. ஹிந்துமத அவதாரக்
கொள்கைக்கும் கிறிஸ்துமத அவதாரக் கொள்கைக்குமுள்ள அரிய
பெரிய வித்தியாசங்களைக் காண்பிக்கச் சிறிதும் முயலாமல் கிறிஸ்து
ஒரு அவதாரம் என்றுமட்டும் சொல்லுகின்றார்கள். இதுவோ சுவி
சேஷம். அவர் எல்லாவற்றிலும் தமது சகோதரரைப்போ லாக்கப்
பட்டுத் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினுல் சோதிக்கப்படுகிற
யாவருக்கும் உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். பாடுபட்டதினுலே
அவர் பூரணரானுர். தமது மாண பாடுகளினிமித்தமே அவர் மகிமை
யினுலும் கனத்தினுலும் முடிசூட்டப்பட்டார்.

தமக்குரிய நாமங்களில் அவருக்குப் பிரியமான பேர் 'மனுஷ
குமாரன்' என்பதே. அவருடைய சீஷர்கள் எல்லாரும் அவருடைய
மனுஷீகத்தின மூலமாகவே அவருடைய தெய்வீகத் தன்மையின்
இரகசியத்தை உணர வல்லவர்களாயிருந்தார்கள். இயேசுவானவர்
எருசலேமின் வீதிகளிலும் கப்பர்நகூமின் தெருக்களிலும் நின்று
அவரை அதற்குமுன் கண்டிராத ஜனங்களை நோக்கி 'நானே
தேவன் நீங்கள் என்னை விசுவாசியாவிட்டால் நரகத்துக்குப் போவீர்
கள் என்று சொல்லியிருக்கலாமோ என நினைப்பதும் எத்தனை விப
ரீதமாக இருக்கின்றது. பிரசங்கம் பலவிதமாய்ச் செய்யபபடலாம்.
எப்போதும் ஒரேவிதமாகவே சுவிசேஷப் பிரசங்கம் செய்யவேண்டு
மென்று யாம் சொல்லுகிறதில்லை. ஆனுல் ஒருவிதம் எங்கும் சாதா
ரணமாய் இருக்கக்கூடிய தென்னலாம். அதாவது, கிறிஸ்துவின்
சரித்திரத்தை அன்பு நிறைந்த பூரண புருஷனது கதையைப்போல்
சொல்லுதல். அவர் நம்மைப்போல் மனுஷனுகப் பிறந்து நாச
ரேத்து மலைகளண்டையில் வளர்ந்ததைக்குறித்தும், அவர் பிதாவைப்
பற்றியும், தேவனுடைய இராச்சியத்தைப்பற்றியும், பிரசங்கித்த
தைக்குறித்தும், பின்பு அவரோடு வசித்து உண்டு உலாவி உறங்கி
வந்தவர்கள் அவரே தங்கள் குரு அவரில் தேவன் தங்களோடிருக்
கிறார் என்னும் தீர்மானத்திற்கு வந்ததைக்குறித்தும் சொல்வதே
சிறந்தவழி. இப்பேர்ப்பட்ட பிரசங்கங்கள் இன்னும் சகஜமாக இல்லை.

ஆனுல் நம்முடைய ஆண்டவருடைய அற்புதங்களைப்பற்றி
நாம் கூறவேண்டாமா? அவைகளைப்பற்றிச் சொல்லத்தான் வேண்டும்.
ஏனென்றுல் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தில் இவைகள்
ஒரு பாகம். மனுஷருடைய கஷ்ட நஷ்டங்களையும், துன்ப துயரங்
களையும் கண்டபோது அவரில் கனிந்துருகிய அன்பும் அனுதாபம்
முதலியவைகளின் வெளிப்படுத்தலே இவ்வற்புதங்களென நாம் எடுத்
துக் காண்பிக்கவேண்டும். மனுஷரில் விசுவாசமாகிய வாய்க்கால்



திறக்கப்படும்போது தேவனுடைய சர்வ சக்தியானது அவருடைய
கிருபாகிரியைகளை முடிக்க ஆயத்தமாயிருக்கிறது. கர்த்தருடைய
அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் குஷ்டரோகியைக் குண
மாக்கினதல்ல, துன்மார்க்கத்திலும் பாவத்திலும் மூழ்கியிருந்தவர்க
ளைத் தேவனுடைய பிள்ளைகளாக்கினதே என்றும், குருடருக்குப்
பார்வை யளித்ததல்ல ஆன்ம அந்தகார இருளிலிருந்தவர்களுக்கு
வெளிச்சத்தை ஈந்ததே என்றும் நாம் சொல்லி முடிப்போமானுல்
நம்மைப்பற்றி ஹிந்துமதப் பிரசங்கிகள் குறைகூறமாட்டார்கள்.
இப்படிச் செய்யாமல், அற்புதங்களை வெறும் அதிசயங்களாகவும்
அவருடைய தெய்வீகத்தைக் காட்டுகிறதற்காகச் செய்யப்பட்ட
அடையாளங்களாகவும் மாத்திரம் பாவித்துப் பிரசங்கிப்போமானுல்
புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிற அதி உன்னத அதிசயமான
அற்புதங்களை நமக்குப் பிரதியுத்தரமாக எடுத்துக் கூறுவார்கள்.

இந்தக் கொள்கைக் குற்றங்களைப்பற்றிப் பேசும் இச்சமயத்தில்
இன்னும் ஒரே ஒரு காரியத்தைப்பற்றிமாத்திரம் பேசி இதை முடிக்
கிறேன். அனுதாபமற்ற ஜனங்களிடத்தில் நமது ஆண்டவருடைய
பாடுகளைப்பற்றிப் பேசுவதிலும் கஷ்டமான் காரியம் வேறில்லை.
அது சில சமயங்களில் பன்றிகளுக்குமுன் முத்தைப் போடுவது
போல் தோன்றுகிறது. ஆயினும் நாம் ஒரு காரியத்தை ஞாபகத்தில்
வைத்துக்கொள்ளவேண்டும். அது என்னவென்றுல், யூதருக்கு இடற
லாகவும் கிரேக்கருக்குப் பைத்தியமாகவும் இருந்த இக்காரியமே
நமது கொள்கையின் சாரமாயிற்று. ஆகவே கிறிஸ்துவை அதாவது
சிலுவையி லறையப்பட்ட கிறிஸ்துவை நாம் பிரசங்கியாவிட்டால்
தேவ ஞானத்தை நாம் பிரசங்கிக்கிறேமில்லை. ஆனுல் மனுஷ
ருடைய இருதயங்களை ஊடுருவிச் செல்லத்தக்கவிதமாய் இதைக்
கூறவேண்டும். அவ்வித வழியை நாம் கண்டுபிடிக்கவேண்டும்.
நாம் கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றிப் பிரசங்கியாமல் மௌனமா
யிருக்கவேண்டுமென்று சொல்லிவரவில்லை. கிறிஸ்துவின் சிலுவை
அவருடைய சகல அற்புதங்களைப்பார்க்கிலும் நமக்கு விசேஷம்.
அதைப்பற்றியே நாம் விசேஷமாய்ப் பிரசங்கிக்கவேண்டும். ஆனுல்
இப்போதும் பல பிரசங்கிகள் செய்வதுபோல் துன்மார்க்கரால் பாடு
பட்ட ஒரு சன்மார்க்கனைப்போலக் கிறிஸ்துவைக் காண்பிப்பது சரி
யல்ல. சர்வ மார்க்கங்களிலும் காணுத ஒரு சத்தியத்தை இங்கு
காண்கிறேம். அது என்னவென்றுல், கிறிஸ்துவைப் பாடுபடுகிற
தேவனுக இங்கே காண்கிறேம் என்று கேட்கிறவர்களுடைய மன
தில் படும்படி சொன்னுல் இந்த ஒரு காரியமே கிரியை செய்யக்
கூடியதாயிருக்கும்.

(இன்னும் வரும்.)

# Missionary Financial Responsibility

**By the Rev. N. Devasagayam**

## ஜீவதூதுக்குப் பொருளீட்டல்

## சபை மேய்ப்பன் பொறுப்பு

பொருள் வாயிலாய் ஒருவன் தான் இருந்த விடத்தில் இருந்துகொண்டே பல தேசங்களில் தன் வல்லமையைச் செலுத்துவிக்கலாம். புவியில் ஒருவனுக்கு வாழ்நாள் முடிந்துவிட்டபின்பும் அவன் இன்னம் அநேகமநேக ஆண்டுகளுக்கு உயிரோடிருக்கிறவன்போலவே பொருள் வாயிலாய் தன் ஜீவிய வேலை அறாமல் தொடர்ந்து நடைபெறச் செய்யலாம். பொருள் பூவுலகின் பாஷைகளையெல்லாம் பேசும். ஒருவன் தான் போகாத இடத்துக்குப் பொருள் மூலியத்தில் சென்று அங்கு தான் செய்ய விரும்புகிற வேலையைச் செய்யலாம். சில வருஷங்கள் முன்னர் நியுயோர்க்கு நகரில் ஒரு கோடீஸ்வரன் இறந்தார். இறந்தும், அவர் அளித்திருக்கிற நன்கொடைகள் வழியாய் இந்தப் பூமண்டலமெங்கும் இருநூறு இடங்களில் சபைகளிலோ, கலாசாலைகளிலோ, மானிட ஜீவியத்தை மேம்பாடு செய்யமுயலும் சங்கங்களிலோ இன்னம் இருந்துகொண்டு செயல் இயற்றுகின்றார். ஒருவன் தோன்றின இடதிலேயே எவ்விதப் புகழுமில்லாமல் மறைந்திருந்து தன் கைப்பொருள் வாயிலாய் தாழ்ந்த நிலையில் உருவழியப் பார்க்கிற தேசத்தையோ ஜனத்தையோ உயர்ந்த நிலையில் எடுத்து நிறுத்தலாம். உள்ளதைச் சொன்னால், இந்த நூற்றாண்டில் இருக்கிற ஒருவன் தன் செல்வ வல்லமை உலகெங்கும் உலாவிச் செல்லுமாறு பிழைக்கவேண்டும்.

பொருளுக்கு இருக்கிற பெரிய வல்லமை

பொருள் தன்னிலேயே வெறுங் குப்பைதானாயினும், அதினாலேயே உலகில் பென்னம்பெரிய தொழில்கள் நடைபெறலாகும் என்பது பிரத்தியட்சம். திருஷ்டாந்தம் பாருங்கள். இங்கே வேதபுத்தகசாலையில் ஐந்நூறு வேதபுத்தகங்கள் இருக்கின்றன. இவை நாடெங்குஞ்போய் விலைப்படவேண்டுமானால் அதற்குப் பணமின்றி அமையாது. பணம் கிட்டுமானால், அத்தனை புத்தகங்களும் வெளிப்பட்டு வாசிப்போருக்கு அகப்படும். அவற்றுள் ஒன்றாயினும் படிக்கிறவனுடைய உள்ளத்தைத் தன் வசப்படுத்துமானால், அவ்வொருவனுள்ளத்திலிருந்து புறப்பட்டு அந்தவசப்படுத்துகிற வல்லமை இன்னம் இருபது முப்பதுபேரைப் பற்றிப் பிடிக்குமே. இன்னொரு திருஷ்டாந்தம் பாருங்கள். இங்கே இரண்டு வாலிபர்கள்



இருக்கிறார்கள். அவர்கள் நல்ல வரமுள்ளவர்கள். வாத்தை வழி
யாக்கிக்கொண்டு கல்வியில் தேற ஆவல் உள்ளவர்கள். ஆயினும் அந்த
ஆவலைத் திருப்திசெய்யப் பொருளில்லாதவர்கள். பணக்காரன் ஒரு
வன் மனமிரங்கி அவர்களுக்குப் பணக்கடனுதவி கலாசாலைக்கு அனுப்
புகிறான். அதிவிரைவில் அவர்கள் கல்வி முயன்று வித்தியார்த்தி
களாய்த் தேறி வெளிப்படுகிறார்கள். ஒருவன் இன்னம் சுவிசேஷ
மறியாத ஒரு ஜனத்திடம்போய் அவர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்
கித்து அறிவுறுத்துகிறான். இன்னொருவன் ஒரு கலாசாலையில் கலை
பயிற்றும் மேலோனாய் அமர்ந்து, பல நூறு மாணவர்களை நன்னெ
றியில் நிறுத்தவும் அந்நெறி அறியாத பல்லாயிரம் சிறுவரை அவர்களைக்
கொண்டு உணர்த்தவும் வல்லவனாகின்றான். ஆகவே, பொருள்
இந்தப் பூவுலகில் நடைபெறுகின்ற சகல முயற்சிகளையும் கைதூக்கும்
வல்லமை என்பது சொல்லவேண்டுமோ? எவ்வளவு பணமும் ஒரே
ஆத்துமாவை ரட்சிக்காது; பணத்திரட்சியினால் ஒருவனையாயினும்
நன்னெறி பயிற்றலாகாது. பணம் தானேபோய் எந்தவூரிலும் சுவி
சேஷம் பிரசங்கிக்காது. ஆயினும் பணமின்றி இந்த நன்முயற்சி
கள் ஒன்றும் வாய்க்காது.

நம் காலம் குபேரர்கள் பெருகும் காலம். குபேரன் என்று யாருக்
குப் பெயர் என்றால் கணக்கில்லாத செல்வமுடையவனுக்கு. நாக
ரீகமும் வித்தைகளும் ஓங்க வோங்க முன்காலத்தில் நினைக்கமுடியாத
செல்வத்தை இக்காலத்தில் ஈட்டமுடியும். உலகில் வேறெந்தத் தேசத்
திற்கும் கிடைத்திராத கோடியில்லாச் செல்வப்பேறும் நாளுக்குநாள்
ஓங்கும் சுகவாழ்வும் அமெரிக்காவின் ஐக்கியநாடுகளுக்குக் கிடைத்திருக்
கிறது. உழவுச்செல்வம், நிலம்படு திரவியம், உழைப்புக்கு ஊதியம்,
வணிகநிதிப்பெருக்கு இவையெல்லாம் அத்தேசத்தில் செழிக்கும்
விதத்தைப் பார்த்தால் வெகு வியப்பாயிருக்கும்! 1850-ம் ஆண்டில்
அந்தத் தேசத்தில் இருந்த ஜனத்தொகை இந்த இருபதாம் நூற்றாண்
டில் மூன்றரைமடங்கு அதிகரித்தது. செல்வமோ அப்போதிருந்த
திலும் இப்போது பதினான்குமடங்கு அதிகம். இந்த நிதிப்பெருக்கு
பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்து வருஷத்தில் அதற்கு
முந்தின சகல காலப் பகுதிகளிலும் மேம்படக் கிடைத்தது. 1903-ம்
ஆண்டின் ஜூன்மீ 30உயோடு முடிவடைகிற ஐந்து வரு
ஷங்களுள் ஐக்கிய நாடுகளில் வரத்துச் சரக்கின் மதிப்பும் போக்குச்
சரக்கின் மதிப்பும் ஒத்துப்பார்க்கில், வரத்துச் சரக்கின் மதிப்பைப்
போக்குச்சரக்கின் பதிப்பிலிருந்து கழிக்க, மீதிப்பட்ட வியாபார
வருமானம் 2,500,000,000 டாலர் (வெள்ளி). இது உலகத்தில் இப்
போதுள்ள பொன் சுரங்கங்கள் ஒருங்குசேர்ந்து எட்டு வருஷங்களில்

தாத்தக்க பொன்னுக்குச் சரி. ஐந்து வருடங்களுக்குமுன்னே ஐக்கிய நாடுகளின் தலைநகரில் பிரக்கியாதியுள்ள வர்த்தமானப் பத்திரிகையில் பத்துலட்சம் நிதி சேர்த்து மரித்தவனுடைய பெயரைப் பிரஸ்தாபித்தார்கள். இப்போது ஒரு கோடியே ஐம்பது லட்சம் சேர்த்துச் செத்தவன் பெயரைமாத்திரம் தெரிவிப்பார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே வேறு எந்தத் தேசத்திலும் இராதவிதமாய்த் திரவியஸ்தர் தொகை அதிகமாயிருப்பதும் தவிர, மற்றத் தேசங்களைவிட அதிலே சீரான செல்வத்தார் தொகையும் அதிகமே. திரவிய லாபம் ஒரேயொருவனிடமே போய்க் குவியாமல் பலரிடமும் போகும்படியான அநுட்டானங்கள் அங்கேயுண்டு. 1903-ம் வருடந் துவக்கி அதற்கு முந்தின ஐந்து வருடங்களில் ஸேவிங்ஸ் பாங்கில் வந்த தொகையை வருஷவாரி வீதம் பார்த்ததில், அது வருஷத்துக்கு வருஷம் சராசரி 173, 914, 709 டாலர் அதிகப்பட்டு வந்ததாய்த் தெரிந்தது. அந்த ஐந்து வருடங்களில் ஜனங்களால் மீதிசெய்யப்பட்ட மொத்த ஸேவிங்ஸ் பாங்குத் தொகை 2,935, 204,000 டாலர்.

**தற்கால அபரிமித நிதித் திரட்சி**

டென்னிஸ் வேதபண்டிதர் 1900-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் புரொட்டெஸ்தாந்தர் கைவசமாயிருந்த நிதி 22,066, 317,000 டாலர் என்று மதிப்பிட்டார். 1890-ம் ஆண்டுமுதல் 1900-ம் ஆண்டுவரையும் அவர்கள் வருஷந்தோறும் சராசரி 684, 754, 410 டாலர் வீதம் தங்கள் நிதியை அதிகப்படுத்திவந்தார்கள் என்றும் அவர் கணக்கெடுத்துச் சொன்னார். இவ்வளவும் அவர்கள் நடைமுதல் செலவுபோகச் சிக்கனத்தால் மீதி செய்தது. அந்தத் தொகையில் அவர்கள் மிஷன் காரியமாய்ப் பதில் ஒன்று கொடுத்தால் அது அவர்கள் அதுவரையில் அந்த விஷயத்திற்காகக் கொடுத்த தொகையை நூற்றுக்கு 1252 வீதம் அதிகப்படுத்தியிருக்கும். நம் இந்தியாவின் சுவிசேஷ கிறிஸ்தவர்கள் வருஷவாரி மீதி செய்கிற தொகை இவ்வளவென்று கணக்கெடுப்பாரில்லை. எடுப்பாருண்டானால், அவர்கள் இப்போது கொடுக்கிற தொகையைவிட வெகுமடங்கு அதிகம் கொடுக்கமுடியும் என்று தெரியும்.

நம் பூவுலக இயல்களின் விஷயமாய் இப்போது செலவாகுந் தொகையை நம்முன்னோர் காதால் கேட்டால், மலைவடைந்து திகைப்பார்கள். அமெரிக்கர் ஸ்பானிய யுத்தத்திலும் பிலிப்பைன் யுத்தத்திலும் செலவிட்ட தொகையையும் ஆங்கிலேயர் தென் ஆபிரிக்க யுத்தத்தில் அழித்த தொகையையும் ஒருங்கு சேர்த்தால் அது 20,000 மிஷனரிகளை ஒரு தலைமுறைக்குப் பிறதேசங்களில் ஆதரிக்கப் போதுமானது.



நம் காலத்தில் கல்வி, உலகோபகாரம், அநுசரிக்கிற மார்க்க காரியம் இவ்விஷயங்களுக்காகக் கொடுக்கப்படுகிற நன்கொடைகள் வருஷத்துக்கு வருஷம் அதிகப்பட்டுவருகிறது. கடந்த சில வரு ஷங்களுக்குள் கல்வியபிவிர்த்தி, உலகத்தில் சமாதான நிலைப்பாடு இவைகளுக்காக நொர்வே தேசத்து ஆல்பிரட்டு நோபேல் நிதிவந்தர் ஒரு கோடி டாலர் தயாளக் கொடைசெய்தார். இங்கிலாந்து தேசத் தவராகிய செசில் ரோடேஸ் குபேரர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் கலைபயிலும் மாணவர்க் குபகாரமாக 30,000, 000 டாலர் தத்தம் செய்தார். இந்தமாதிரி மிகப் பெரும் நற்கொடைகளை உலகத்துக்குச் சுவிசேஷம் சொல்லும் விஷயமாய்க் கொடுப்பவர்கள் இதுவரையில் எழும்பவில்லை. சுவிசேஷ சபைகள் இதுவிஷயத்தில் சிரத்தை வைத்துச் சிக்கறுக்கவேண்டிய கேள்வி என்னவென்றால், உலகத்தி லிருக்கிற பணம் என்னும் வல்லமையைக் கிறிஸ்தவ வல்லமையாக்கு வது எப்படி என்பதே.

(மோட்டு வேத பண்டிதர்.)

## Rivers of Living Water

## ஜீவத்தண்ணீருள்ள நதிகள்

(தொடர்ச்சி)

'பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்.' யோவா. 7. 37-39.

**(2) பரிசுத்த ஆவியானவர் தேற்றரவு செய்கிறவர். ஓர் உபகாரி.**

பரிசுத்த ஆவியானவர் நமக்காக ஒரு அட்வொகேட் (Advocate), அதாவது, நியாயவாதியின் தொழிலை மாத்திரமல்ல, ஒரு பாரக்ளீட் (Paraclete), அதாவது, நமக்குச் சகாயராகவும், ஆலோசனை கூறுகிறவராகவும், தேற்றுகிறவராகவும், சிநேகிதராகவும் நமக்கு எப்போதும் அருகாமையினின்று தேற்றரவு ஊழியத்தையும் நடப்பிக்கிறவருமாயிருக்கிறார். தேவாவியானவர் விசுவாசிக்குள் எப்போதும் தமது பிரசன்னத்தையும், சுறுசுறுப்பையும் தந்து, அவனை ஆற்றித் தேற்றுகிற ஓர் உண்மையான சிநேகிதன்.

இயேசுவானவர் பூமியில் வசித்தபோது தமது சீஷர்களுக்கு ஒரு பாரக்ளீற்றுயிருந்தார். சீஷர்கள் தங்களுக்குத் துன்பம் நேரிட்டபோதெல்லாம், அவரிடம் திரும்பிச் சகாயம் பெற்றார்கள். ஒரு சமயம் அவர்கள் ஜெபஞ்செய்ய அறிந்துகொள்ள விரும்பினபோது அவரிடம் திரும்பி, 'ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதியும்' (லூக். 11. 1) என்றார்கள். இன்னொரு சமயத்தில், பேதுரு கலிலேயாக்கடலில் நடக்கையில் காற்றுப் பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில் 'ஆண்டவரே, என்னை இரட்சியும்' என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து இரட்சித்தார் (மத். 14. 30, 31). சீஷர்கள் தங்கள் உள்ளம் கலங்கினபோதெல்லாம் இயேசுவினிடமிருந்து ஆறுதல் வரக் கண்டார்கள். ஆனால் இப்போதோ இயேசுநாதர் சரீரப்பிரகாரம் நமது மத்தியிலில்லை. ஆயினும் இப்போது நமக்கு வேறு ஒரு பாரக்ளீற்று உண்டு. இவர் இயேசுவானவரைப்போலவே தெய்வீகப் புருஷனாகவும், ஞானமுடையவராகவும், வல்லமையும் விருப்பமுமுடைய சகாய புருஷராகவும், அன்புடையவராகவும், எப்போதும் நமதண்டையில் வீற்றிருந்து நாம் நமது ஆலோசனைக்காகவும், போதனைக்காகவும், உதவிக்காகவும், நமது வெற்றிக்காகவும், அவர் நமது ஜீவனை முழுவதும் ஆட்கொண்டு நடத்துவதற்காகவும் அவரை நோக்கிப் பார்க்கும்போதெல்லாம் நமக்குச் சகாயஞ் செய்யக்கூடிய தேற்றரவாளனுயிருக்கிறார்.

மனுஷஜீவியத்தில் கணக்கில்லாத ஆபத்துகளும் கலக்கங்களும் நேர்ந்துகொண்டிருக்கின்றன. அப்போது மனுஷன் தன்னை அவைகளினின்று விடுவித்து உதவிசெய்ய யாருமில்லையோவென்று அங்கலாய்க்கின்றான். அவன் அவிசுவாசியானல் தன் ஆத்துமக் கிலேசத்தை நீக்க உலகத்திற்காவது, அதிலுள்ள எப்பொருளுக்காவது சிஞ்சித்தேனும் சக்தியில்லையென்று காணும்போதெல்லாம் துடிதுடித்துப் பதறுகிறான். அவன் விசுவாசியாகில் சகாயத்திற்காகத் தன் ஆத்தும நேசநாயகனை நோக்கிப் பார்க்கின்றான்; அப்போது அவன் உள்ளத்தின் பெருமூச்சுக் கலக்கங்கள் சூரியனைக்கண்ட பனிபோல அவனுக்குத் தெரியாமலே பறந்துபோகத்தக்கதாகத் தேற்றரவாளன் அவனில் மனுஷபுத்திக்கு எட்டாத தேவசமாதானத்தினாலும் தேவ அன்பினாலும் நிரப்புகிறார். இதுவே தெய்வதாபக்தர்கள் கொடுந்துன்பத்தின் மத்தியிலும் பூரண முகமலர்ச்சியோடு காணப்படுவதற்கும், உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுவதற்கும் மூலகாரணம் என்றறிவோமாக. (ரோ. 5. 3-5.)

(இன்னும் வரும்.)

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

No. 79 டிசெம்பர் 1912

# வேதியர் விளக்கு

## The Evangelisation of the Middle Classes: The Message

By the Rev. G. E. Philips and Mr. Masilamoney

## மத்தியதர ஜாதியாருக்குள் செய்யும் சுவிசேஷ வேலை

### பிரசங்கப் பொருள்

(தொடர்ச்சி.)

இன்னொரு காரியமிருக்கிறது. சிலருடைய பிரசங்கங்கள் கேட்கிறவர்களுடைய மனதை எவ்வளவோ வருத்தப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. 'நீங்கள் செய்கிறதெல்லாம் தப்பிதமும் புத்தியீனமுமாயிருக்கிறது. நாங்கள் சகல சத்தியத்தையும் அறிந்தவர்களாய் உங்களைச் சரிப்படுத்த வந்திருக்கிறோம்' என்பதுபோல் சிலர் பிரசங்கிக்கிறார்கள். இதுவா கிறிஸ்தவர்களுக்கடுத்த மாதிரி? நமது உடனொத்த மனுஷர்களும் நம்மைப்போலவே தேவதரிசனத்தை அடையவேண்டுமென்னும் அன்பினாலே அவர்களண்டை போய் நாம் காண்கிற பாமகாட்சியை அவர்களும் காணும்படிமாத்திரம் செய்வோமானால் காணும் காட்சி அவர்களைப் பற்றிக்கொண்டு நித்தியஜீவனுக்கு நடத்தும் என்ற நம்பிக்கையுடனே அவர்களுக்குச் சாட்சி பகரவேண்டும். 'நாங்களும் எங்கள் கூட்டாளிகளும் எங்கள் பிரசங்கங்களைக் கேட்கிறவர்களைக்காட்டிலும் மேலானவர்கள்' என்று எண்ணுகிற மேட்டிமையான எண்ணத்தை நாம் நிராமுயற்சியினால் நீக்கிவிடவேண்டும். இப்படிப் பிரசங்கிப்பது கிறிஸ்தவ தாழ்மைக்கு முற்றிலும் விரோதமானது.

நாம் வற்புறுத்திக் கூறுகிற விஷயங்களைப்பற்றிய சில துறைகளுமுண்டு. உதாரணமாக, மனிதர்கள் எல்லாரும் பாவிகள் என்பதற்கு அத்தாட்சியாகப் பத்துக் கற்பனைகளையும், ஓய்வுநாளாசரிப்பை

யும், விக்கிரகங்களை வணங்கக்கூடாதென்பதையும் கூறுவது சகஜம்
மேற்சொன்ன கற்பனைகளுக்கும் நமது பிரசங்கங்களைக் கேட்கிறவர்
களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதை நமது பிரசங்கிகள்
உணருகிறார்களில்லை. இக்கற்பனைகளும் சாதாரண சன்மார்க்கக் கற்
பனைகளும் ஒரே தன்மையுடையனவென்று நினைக்கிறார்கள். சில
வேளைகளில் நமது ஆதித்தாய்த் தந்தையர்களின் சரித்திரத்தைச்
சொல்லி நமது தீர்ச்செய்கையின் உத்தரவாதத்தை அவர்கள் தலைமேல்
ஊற்றிவிடுகிறார்கள். பிறர் ஆதாம் ஏவாள் கிறிஸ்தவர்களுடைய
தேவதேவிகள் என்று நினைக்கத்தக்கதாக அவ்வளவு அதிகமாய் ஆதாம்
ஏவாளைப்பற்றிச் சில கிராமப் பள்ளிக்கூட உபாத்திமார்கள் கற்றுக்
கொடுக்கிறார்கள்.

மனிதர்கள் எல்லாரும் பாவிகள் என்பது நமது உபதேசத்தின்
ஒரு பாகம். தற்காலத்திலும் இந்துக்களில் சிலர் விசேஷமாய்
விவேகானந்த சுவாமியுடைய உபதேசத்தின் வாசனையை ஏற்றவர்கள்
மனிதர்கள் பாவிகள் என்பதை மறுத்துக் கிறிஸ்தவர்கள் இதைச்
சதா பிரசங்கிக்கிறதற்காகக் கிறிஸ்தவ உபதேசிமாரை இகழுகிறார்
கள். இவ்வாறு அவர்கள் நம்மை இகழுகிறதற்காக நாம் சந்தோஷப்
படுகிறோம். இவர்களுடைய இகழ்ச்சியின்மூலமாகக் கிறிஸ்துமதம்
எல்லாரும் பாவிகள் என்று உணர்த்துவிக்கும் மதம் என்பதைப் பிறர்
அறிந்துகொள்ளுகிறதற்கு ஏதுவாயிருக்கிறது.

இதனால் நாம் தளர்ச்சியடையாமல் முன்னிலும் அதிகமாய்ச்
சொல்லவேண்டும். ஆனால் மனச்சாட்சியின் வாயிலாய் இப்படிச்
சொல்லவேண்டுமேயொழிய ஆதாம் ஏவாள் என்பவர்களுடைய
சரித்திரத்தினாலேயாவது நாலாம் கற்பனையின் தாற்பரியத்தினாலே
யாவது இப்படிச் சொல்லக்கூடாது.

நமது பிரசங்கிகள் இரண்டாம், நாலாம் கற்பனைகளை விசேஷ
மாய் வற்புறுத்திக் கூறுகிறார்கள் என்று நாம் சொன்னோம். இதி
லிருந்து ஒரு முக்கிய கேள்வி எழும்புகிறது. நம்முடைய பிரசங்கங்
களில் விக்கிரகாராதனையைப்பற்றி நாம் மட்டுமீறிப் பேசுகிறதில்
லையா? அதைப்பற்றி நாம் பேசுகிறதா இல்லையா என்பதைப்பற்றி
இப்போது ஒன்றும் சொல்ல வரவில்லை. அதைப்பற்றிப் பேசாம
லிருப்பது கூடாத காரியம். ஆனால் கேள்வி என்னவென்றால் 'கிறிஸ்
துவின் சுவிசேஷத்தைக் கூறும்போது விக்கிரக வணக்க நிக்கிரகம்
அத்தனை விசேஷமானதா' என்பதே. சிலவேளைகளில் கிறிஸ்தவப்
பிரசங்கிகள் செய்கிற பிரசங்கம் முழுவதும் பல தேவ வணக்கத்துக்கு
விரோதமாகவேயிருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் வெளிப்படுத்
தப்பட்ட தேவனைப்பற்றிச் சொல்லுமுன் தன் பிரசங்கத்தைக் கேட்

கிறவர்களுடைய மனதை ஆயத்தப்படுத்தும்படி இப்படிச் செய்கிறார்
கள். கிறிஸ்துவின் திருவடிகளண்டை வருமுன் விக்கிரக வணக்கம்
நிக்கிரகமாகவேண்டியது உண்மையே. ஆனால் கிறிஸ்துவினிடத்
திற்கு வாராதபடி தடுக்கிற இடறற்கற்கள் வேறே அநேகமில்லையோ.
அவைகளைப்பற்றி யோசிக்கிறார்களில்லை.

கர்வம் எத்தனையோ பேரைக் கிறிஸ்தவர்களிடம் வாராதபடி தடுக்
கிறது. பரிசேயருக்குள்ளிருந்த சுபாவம் இப்போது இந்தியாவில்
இல்லையோ? உண்மையான விக்கிரகாராதனையாகிய பொருளாசை
யினாலே எத்தனையோ ஜனங்கள் கிறிஸ்துவினிடத்திற்கு வராதவர்
களாயிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் கிறிஸ்துவுக்குச் சத்துருக்
களாகப் பாவிக்கவேண்டும். விக்கிரகாராதனை இவைகளுக்கு ஒரு கருவி
யாகமாத்திரமிருக்கிறது. இது வாஸ்தவமானால் நமது பிரசங்கங்
களில் செய்யும் இவ்வித தப்பிதங்களை நிவிர்த்திசெய்யவேண்டியிருக்
கிறது. நமதாண்டவர் இந்த விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்
என்பதை நாம் பார்க்கும்போது என்னத்தைக் காண்கிறோம். அக்
காலத்திலே அழகான அஞ்ஞான கோவில்கள் இருந்தன, அவைகளிலே
கிரேக்க தேவதைகளை வணங்கிவந்தார்கள். இதையெல்லாம் நமதாண்
டவர் பார்த்திருந்தவரே. சிலவேளைகளில் நாம் இதை மறந்து
விட்டுக் கலிலேயா ஒரு பிரத்தியேகமான நாடு என்றும் அங்கே யூத
ஜெபாலய ஆராதனைகள் தவிர வேறே வணக்கம் ஒன்றும் நடக்கவில்
லையென்றும் நினைக்கிறோம். இதைக்குறித்து ஜார்ஜ் ஆடம் ஸ்மித்
என்பவர் 'நமது ஆண்டவருடைய காலத்தில் கலிலேயாவுக்குப் பக்கத்
தில் ஹாரான் என்ற செழிப்பான இடத்திலே கிரேக்கர் குடியிருந்
தார்கள்' என்றும் 'கிலேயாத்திலும், தெக்கப்போலியிலும் கிரேக்கரு
டைய நாடகசாலைகளும் பந்தயசாலைகளும் தேவாலயங்களும் இருந்தன'
என்றும் சொல்லுகிறார்.

நமது கர்த்தருடைய ஊழியம் யூதருக்குள்ளே செய்யப்பட்டதென்
பதை நாம் அறிவோம். ஆனால் விக்கிரக வணக்கம் எப்போதும் அவர்
கண்முன் நின்றது என்பதை நாம் கவனிக்கும்போது அவர் இதைப்
பற்றி யொன்றும் பேசாததற்குக் காரணம் என்ன என்னும் கேள்வி
எழும்புகிறது. அஞ்ஞானிகளைக்குறித்து அவர் பேசிய ஒரே ஒரு
சமயம் அவர்களுடைய விக்கிரகாராதனையைப்பற்றியதாயிராமல் அவர்
களுடைய உலகநேசத்தைப்பற்றியதாயிருந்தது. தற்காலத்துக் கிறிஸ்
தவ பிரசங்கிகள் நினைக்கிறதுபோல் விக்கிரகாராதனை கிறிஸ்துவின்
பார்வையில் கிறிஸ்துமதத்திற்கு முக்கிய விரோதமாயிருந்திருக்கும்
பட்சத்தில் அவர் ஏதாவது ஒரு கிரேக்க ஆலயத்திற்கு முன்நின்று
தமது சொந்த உதட்டினால் அங்கு நடக்கிற விக்கிரகாராதனையைக்

கண்டித்துக்கொண்டிருப்பார். அப்படி அவர் கடிந்துகொண்டிருக்கும் பட்சத்தில் அது சீஷர்களுடைய ஞாபகத்தில் தங்கி சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்குமே.

விக்கிரக வணக்கத்தைக்குறித்துப் பேசும்போது நாம் வேறொரு முறையைக் கையாடக்கூடாதா? சித்திரம் வரைதலைப்போலச் சிலை நிருமிக்கும் காரணம் என்னவென்றால், ஆவிக்குரிய காரியங்களைப் புலநுகர்ச்சிக்கேதுவாகக் காட்ட முயல்வதே. ஒரு சொரூபம் எவ்வளவுதான் கேவலமானதாகவிருந்தாலும் தைரியம், பயம், பெருமை முதலிய தெய்வங்களின் குணத்தைக் காட்டும்படி நிருமிக்கப்பட்டிருக்கின்றதல்லவோ. ஆனால் கடவுளைப்பற்றி இவைகளிலும் மேலான எண்ணங்கள் நமது மனதில் உண்டாகும்போது இவ்வித எண்ணங்களைச் சிலைகளாலும் சொரூபங்களாலும் வெளியிடல் முடியாது என்பதை அறியலாம். இவைகளைக் காட்டக்கூடிய ஒருவிதம் நம்மைப் போல் ஜீவனுள்ள ஒரு மனிதனுல்தான் ஆகக்கூடியது. அந்த மனிதன் கிறிஸ்துவே. அவரே அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாயிருக்கிறார் (கொலோ. 1. 15). ஆகவே மனிதர் என்ன நோக்கத்தோடு சிலைகளையும் சொரூபங்களையும் நிருமிக்கத் தொடங்கினார்களோ அந்த நோக்கமே அவர்களைக் கிறிஸ்துவினிடத்திற்கு நடத்தக்கூடியதாயிருக்கிறது. மற்ற விஷயங்களைப்போலவே இதிலும் கிறிஸ்து அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தார்.

# Abraham—A Character Sketch

**By the Rev. G. S. Vedanayagam**

## ஆ பி ர கா ம்

### ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்

(தொடர்ச்சி)

இந்த அநந்துறவுக்குப் பின் ஆபிரகாமுக்குண்டான ஆசீர்வாதம். 'சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.' ஆபிரகாம் தன் மகனைப் பலியிடத் துவங்கினபோது தேவன் அவன் கிரியையை அங்கிகரித்தவராய் அவனுடன் அருமையாகப் பேசுகிறார். 'நீ அவனை உன் புத்திரனென்றும் உன் ஏக சுதனென்றும் பாராமல்



எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறேன். நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நக்ஷத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும் உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றும் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்றார். ஆதி. 22. 12, 17, 18.

இவ்வாக்கியங்களில் தெய்வபயம், கீழ்ப்படிதல், ஒப்புக்கொடுத்தல் என்ற மூன்று செயல்களை ஆபிரகாமிடத்தில் காண்கிறோம். தேவ பக்தியுள்ள சந்ததி விர்த்தி அடைதல், சத்துருக்களின்பேரில் ஜயம் கொள்ளல், பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாயிருக்குதல் ஆகிய இந்த மூன்று பாக்கியங்களும் ஆபிரகாமுக்கு ஆணையின்பேரில் அளிக்கப்பட்டதாகவும் பார்க்கிறோம். இதன் நிறைவேறுதலை யூத சபையிலும் கிறிஸ்தவ சபையிலும் நாளதுவரை பார்த்துவருகிறோம். இந்தியாவில் இவ்வித ஆசீர்வாதம் நிறைவேறவேண்டுமானால் அதாவது இந்தியாவின் சபை பக்திவிர்த்தி அடைந்து பெருகி அதின் சத்துருக்களாகிய இதர மதங்களை ஜயித்து அவற்றின் பாக்கியங்களையெல்லாம் கொள்ளைகொண்டு இந்த உலகமுழுவதுக்கும் ஆசீர்வாதமாக இருக்கவேண்டுமானால் முதலாவது தெய்வபயம் நமக்கு இருக்கவேண்டும். இது அடிமையின் பயமல்ல, அன்பின் பக்தியே.

இரண்டாவது அவருடைய சத்தத்துக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் எத்தனை முறையோ நமக்கவசியமும் ஆசீர்வாதமுமாயிருக்கிற இன்னின்ன காரியங்களைக் கர்த்தருக்காகவும் அவருடைய சபை விர்த்திக்காகவும் அஞ்ஞானிகளை அவருக்காக ஆதாயப்படுத்துகிறதற்காகவும் உடன் கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரி காட்டும்படியாகவும் விட்டுவிடவேண்டுமென்ற தேவ சத்தத்தைத் தெளிவாகக் கேட்டிருக்கிறோம். ஆனால் நாம் அதற்குக் கீழ்ப்படிந்ததுண்டா, இதை வாசிக்கிற ஆத்துமாவே, இந்த வாசிப்பை நிறுத்தி ஒரு ஐந்து நிமிஷம் உன் மனதைத் தட்டி இந்தச் சத்தங்கள் உனக்குண்டானதில்லையா என்று விசாரி. நீ உடனுக்குடனே கீழ்ப்படியாததினாலே உனக்கும் பிறருக்கும் நன்மையாயிருக்கக்கூடிய எத்தனையோ ஆசீர்வாதங்களை இழந்துவிட்டிருக்கிறாய் என்பதைக் கவனித்துப் பார்.

மூன்றாவது ஆபிரகாம் தன்னை ஒப்புக்கொடுத்தான். அவனுடைய மகனைமாத்திரம் ஒப்புக்கொடுத்தான் என்று நினைக்கப்படாது. தன்னை

யும் தன் மனைவியையும் தன் மகனையும் தனக்குண்டான யாவற்றையும் தன் ஆசை விருப்பம் யாவற்றோடும் சேர்த்து அன்றைக்கு அந்தப் பலிபீடத்தில் கர்த்தருக்கென்று தகனபலியிட்டான் என்று ஐயமறச் சொல்லலாம். கிறிஸ்தவ ஜீவியத்தில் பயன்படும் ஜீவியம் துவங்குவது இங்கேதான். பூரணமாய்த் தன்னை ஒப்புக்கொடுக்கும் ஜீவியமே தேவனுக்கு மகிமையாகவும் சர்வலோகங்களுக்கும் நன்மையாகவும் பயன்பட ஆரம்பிக்கிற முதற்படியாம். இந்திய சபையிலுள்ள ஒவ்வொரு தேவ ஊழியனும் சபையானும் தங்களை ஒப்புக்கொடுக்க ஆரம்பிக்கும் விஷயத்தில் தேவன் ஆபிரகாமுக்கு ஆணையிட்டபடி இந்தியா முழுவதும் ஆசீர்வதிக்கப்படும் என்பது திண்ணம்.

முற்றிற்று.

# Christ the Sun of Righteousness
## Christmas Sermon

### By the Rev. Dr. Wycoff

## கிறிஸ்து நீதியின் சூரியன்

மல். 4. 2.

கிறிஸ்துநாதரின் மகிமையையும் மகத்துவத்தையும் சாதாரண பாஷையால் உரைத்துக் காண்பிக்க முடியாது. அவரது சிறந்த லக்ஷணங்களையும் மாசற்ற முன்மாதிரியையும் அவருடைய பாடுகளினாலும் மரணத்தினாலும் விளங்கிய அன்பையும் செவ்வையாய் விளக்கிக்காட்ட எந்தப் பாஷையிலும் ஏற்ற வார்த்தைகளில்லை. ஆகையால் வேதத்தை எழுதினவர்கள் பல உபமானங்களைக்கொண்டு அவருடைய மகிமையைச் சுட்டிக் காட்டுகிறார்கள். சிங்கம் அவருடைய பராக்கிரமத்தையும், ஆட்டுக்குட்டி அவருடைய சாந்தத்தையும், புறா அவருடைய கபடின்மையையும் விளக்கும்படி திருமறையானது உபயோகிக்கும் உவமைச்சொற்களாயிருக்கின்றன.

பிரசங்க வாக்கியத்திலே, தீர்க்கதரிசியானவர் கிறிஸ்துநாதரை நீதியின் சூரியனுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். அவர் நீதியுள்ளவரானதினால் மாத்திரமன்று, மனிதனை இரட்சிக்கும் நீதியைச் சம்பாதித்துத் தந்ததினாலேயும் அந்நாமம் அவருக்குச் சூட்டப்பட்டது. மானிடர் இழந்துபோன நீதியை அவர்களுக்குத் திரும்பக் கொடுப்பதே அவரது அவதாரத்தின் முக்கிய நோக்கம்.

இந்த உபமானத்தைக்கொண்டு கிறிஸ்துவினுடைய லக்ஷணங்களில் சிலவற்றைக் கவனிப்போமாக.



I. சர்வ சிருஷ்டிப்பும் கிறிஸ்துநாதரைத் தனக்கு மையமாகக்
கொண்டிருக்கிறதினாலே, அவர் சூரியனுக் கொப்பாயிருக்கிறார் என்று
சொல்லலாம். வானஜோதிகளுக்குள்ளெல்லாம் சூரியன் சிரேஷ்ட
மானது. நாம் வாசஞ்செய்யும் பூமிமாத்திரமன்று, மற்ற எல்லாக்
கிரகங்களும் உபகிரகங்களும் வால் நட்சத்திரங்களும் சூரியனைச் சுற்
றிச் சென்று அதற்குப் பணிவிடை செய்கின்றன. அப்படிப்போலவே
நமதருள்நாதர் சகலத்துக்கும் மூலாதாரமாயிருக்கிறார்.

1. அவர் பரம இராஜ்யத்தில் எல்லாரும் வணங்கும் பொருளா
யிருக்கிறார். 'தேவன் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிர
வேசிக்கச் செய்தபோது தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது
கொள்ளக்கடவர்கள் என்றார்' (எபி. 1. 6). பேதுரு அப்போஸ்தலன்
தம்முடைய நிருபத்தில், இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போய்த்
தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்க, தேவதூதர்களும் அதி
காரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன வென்
கிறான். யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் (5. 11), 'பின்
னும் நான் பார்த்தபோது சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்
களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்.
அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிர
மாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்
டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும்
பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்
றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்' என்று பாடினதைத் தரிசனத்
தில் கண்டதாக எழுதியிருக்கிறான்.

2. பூலோகத்தில் கிறிஸ்து சகல ஜாதியாரும் வழிபடும் வஸ்
துவாயிருக்கிறார். ஏறக்குறைய ஒவ்வொரு தேசத்திலும் அவரைத்
தொழுதுகொள்ளும் வித்து உண்டு. ஐரோப்பா, அமெரிக்கா கண்
டங்களிலுள்ள கோடாகோடி ஜனங்கள்மாத்திரமல்ல, இந்தியா, சீனா,
ஜப்பான் முதலிய தேசங்களிலும் பல தீவு தீவாந்தரங்களிலும் அநேக
மாயிரம்பேர் அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவர்
நாமத்தைத் துதிக்கிறார்கள். தற்காலம் சில ஜாதியார் அவரைப் பூசிக்
காதிருந்தபோதிலும், பூதலத்தோர் சமஸ்தரும் அவரைத் தொழுது
கொள்ளும் காலம் வரும். உலக இராஜ்யங்கள் அனைத்தும் கிறிஸ்துவி
னுடைய இராஜ்யமாகுமென்றும், கிறிஸ்து நதிதொடங்கிப் பூமியின்
எல்லைகள்வரைக்கும் அரசாளுவாரென்றும், இஸ்ரவேலின் இன்பக்
கவிஞனாகிய தாவீது விளம்பியிருக்கிறான். தானியேலும் தன் தீர்க்க
தரிசனத்தில், 'சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவ
ரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜ

ரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய இராஜ்யம் அழியாததுமாயிருக்கும்' என்றுரைத்தான்.

3. கிறிஸ்து வேதசரித்திரத்தின் மூலப்பொருளாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுச் சத்தியங்கள் யாவும் அவருடைய வருகைக்கு முன் குறிப்பானவை; புதிய ஏற்பாடு அவர் மானிட இரட்சிப்புக்காகச் செய்த கிரியையைப் பற்றினதாயிருக்கிறது. பலிகள் முதலான முன்னடையாளங்களும் தீர்க்கதரிசனங்களும் அவருக்குள்ளேயே நிறைவேறுதல் பெற்றன. கிறிஸ்துவை வேதாகமத்திலிருந்து நீக்கிவிட்டால், பழைய ஏற்பாடு குழப்பமும் தாறுமாறுமான சங்கதிகளும் அர்த்தமும் ரூபகாரமுமற்ற பொருளும் உள்ளதாயிருக்கும்; புதிய ஏற்பாட்டாகமம் இருக்கவேமாட்டாது. இயேசுகிறிஸ்துவை மூலப்பொருளாக வைத்தாலோ, இரண்டு ஏற்பாடுகளும் ஒன்றையொன்று மெய்ப்பிக்கிற இசைவுள்ளதும் தேவனால் அருளப்பட்டதுமான ஒரே புஸ்தகமென்று பரிஷ்காரமாய்த் துலங்கும்.

4. உலகசரித்திரத்துக்கும் கிறிஸ்து ஆதாரப்பொருளாயிருக்கிறார். சரித்திரக்காரர் அவருடைய பிறப்பிலிருந்து சகல சம்பவங்களையும் கணிக்கிறார்கள். நாஸ்திகரும் யூதரும் அஞ்ஞானிகளும் தாங்கள் அசட்டைசெய்கிற இவரையே கால எல்லையாகக்கொண்டு, தங்கள் நிருபாரம்ப தினங்களை இவருடைய பிறப்பிலிருந்து ஆரம்பித்த ஆண்டுக்கணக்கின்படியே குறிப்பிடுகிறார்கள் என்பது ஆச்சரியமான சத்தியமல்லவா?

II. கிறிஸ்து தமது மகத்துவத்திலும் மேன்மையிலும் சூரியனுக்கொப்பாயிருக்கிறார். சூரியன் எவ்வளவு பிரமாண்டமானது! இப்பூமி மிகப் பெரிதென்று நாம் எண்ணுகிறோம். ஆனாலும் ஆதித்தன் அதைப்பார்க்கிலும் 355,000 மடங்கு விஸ்தாரமுள்ளது. அதினுடைய காந்தி எவ்வளவோ பிரகாசமாய் ஜொலிக்கிறது! எத்தனையோ உலகங்களுக்கு அது வெளிச்சம் கொடுக்கிறது! ஒன்பதுகோடியே இருபதுலக்ஷம் மைல்தூரத்துக் கப்பாலிருந்தாலும் அது எவ்வளவு வல்லமையாய்ப் பிரகாசிக்கிறது! இப்படியே கிறிஸ்து எத்தனை மேன்மையுள்ளவராயிருக்கிறார்! அவர் சமஸ்த மனிதரிலும் சிரேஷ்டமானவர். ஆபிரகாம், மோசே, பவுல் என்பவர்களும், அரிஸ்தாத்தல், ஷேக்ஸ்பீயர், நெப்போலியன், உவாஷிங்ற்றன் முதலானவர்களும் தம்தம் நாட்களில் பேர்போனவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவோ அவர்கள் எல்லாருக்கும் மேலானவர். அவர்களுடைய மனோபல புஜபல பராக்கிரமச்செயல்கள் அவரவர் காலத்திலும் தேசத்திலும் மதஸ்தருக்குள்ளும்மாத்திரம் செல்வாக்காயிருந்தன. கிறிஸ்துவின்



சொல்வலிமையோ உலகமுழுவதுக்கும் எட்டுகிறதாயிருக்கிறது. ஹிமயகிரி இந்தியாவின் சமவெளிகளுக்குமேல் மிக ஓங்கி உயர்ந்து நிற்பதுபோல, கிறிஸ்துவானவர் பூலோகத்தில் தோன்றுகிற எல்லா மனிதரிலும் மகோன்னதமானவராயிருக்கிறார். அவருடைய ஒளி எவ்வளவு தூரம் பிரகாசிக்கிறது! நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஆதாமும் ஆபேலும் ஏனோக்கும் கிறிஸ்துவிலிருந்து பிரதிவிம்பித்த வெளிச்சத்தினாலேயே இரட்சிக்கப்பட்டார்கள். ஈராயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஆபிரகாம் அவருடைய நாளைக் காணஆசித்தான்; கண்டும் களிகூர்ந்தான். அவரிலிருந்து பிரதிவிம்பிக்கும் வெளிச்சம் அதிக பிரகாசமுள்ளதானபடியால், மனுஷர்கள் ஆரம்பத்திலேயே அதின் சம்பூரணத்தைத் தாங்கமுடியாது. ஆகையினாலே அவர்கள் நாலாயிரம் வருஷமாகப் படிப்படியாய் நானாவித அநுஷ்டானங்களினாலும் தீர்க்கதரிசனங்களினாலும் அவரை ஏற்றுக்கொள்ளும்படி ஆயத்தப்படுத்தப்பட்டார்கள். கதிரோன் உதயகாலத்தில் மங்கலாயும் பின்பு நடுப்பகல்மட்டும் அதிகமதிகமாயும் பிரகாசிக்கிற வண்ணமாய்க் கிறிஸ்துவானவர் ஆதி மனுஷருடைய காலத்திலேயே தோன்றாமல், ஏதேன் தோட்டத்தில் கொடுத்த முதல் வாக்குத்தத்தத்தினால் மங்கலாயும், ஆபேல், நோவா, ஈசாக்கு முதலானவருடைய பலிகளினால் கொஞ்சம் தெளிவாயும், ஆசரிப்புக் கூடாரத்தினாலும் அதிலே நடந்த சடங்குகளினாலும் இன்னும் சற்றுத் துலாம்பரமாயும், அவருடைய அவதாரத்தினாலும் பாடுகளினாலும் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் பரிசுத்த ஆவியை அனுப்பினதினாலும் முன்னிலும் அதிக துலக்கமாயும், இப்படியே யுகாந்தகாலம்வரைக்கும் மென்மேலும் தம்மை வெளிப்படுத்தினபின், கடைசியாய்த் தம்முடைய சபையோடே மகிமைப்படும்போது பூரண பிரகாசத்தோடே விளங்குவார்.

III. கிறிஸ்துவானவர் யாதொரு பேதமின்றிச் சர்வத்திராளுக்கும் தம்முடைய ஆசீர்வாதங்களை அருளுவதினாலே அவர் சூரியனுக்கு ஒப்பாயிருக்கிறார். சூரியனானது தன் கிரணங்களை ஓரிடத்தில் மாத்திரமன்று எங்கும் வீசுகின்றது. குடிசைகளில் வசிக்கும் ஏழைகளும் அரண்மனைகளில் சம்பிரமமாய் வாழும் அரசர்களும் ஆப்பிரிக்காக் கண்டத்து மிலேச்சரும் ஐரோப்பாக் கண்டத்து நாகரீகரும் வித்தியாசமில்லாமல் அது அளிக்கும் நன்மைகளை அனுபவிக்கிறார்கள். இது சுவிசேஷத்தின் நிறைவையும் அதின் ஆசீர்வாதங்கள் இலவசமாய்ப் பகிர்ந்துகொடுப்பதையும் எவ்வளவு நேர்த்தியாய்க் குறிப்பிக்கிறது! கிறிஸ்து ஒரு ஜாதியாருக்கும் ஒரு பாஷைக்காரருக்கும் மாத்திரமல்ல, சகல மனிதருக்காகவும் வெளிப்பட்டார். சர்வ சிருஷ்டிகளுக்கும்

சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்களென்று அவர் கட்டளை கொடுத்திருக் கிறார். பூமியின் எல்லைகளெல்லாம் தம்மை நோக்கிப் பார்த்து இரட் சிப்படையும்படி கோருகிறார். ஏழைகளும் ஐசுவரியவான்களும், பெரியோரும் சிறியோரும், கறுப்பு மனிதரும் வெள்ளை மனிதரும், பலவான்களும் பலவீனரும் ஆகிய எல்லாரையும் எந்தப் பேதாபேதமு மின்றிச் சுவிசேஷ நன்மைகளை ருசிக்கும்படி அழைக்கிறார். 'கிறிஸ் துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படு வான்.' 'விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்.' 'தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்.'

கிறிஸ்துமார்க்கத்துக்கும் மற்ற மதங்களுக்குமுள்ள வித்தியாசம் எத்தனை பெரிது! ஹிந்துமதம் இந்தியாதேசம் தவிர வேறெந்தத் தேசத்துக்கும் ஏற்றதல்ல. புத்தமதம் ஆசியாக் கண்டத்தின் கீழ்ப்பா கத்திலும், மகம்மதுமார்க்கம் அதின் மேல்பாகத்திலும்மாத்திரம் பரம் பியிருக்கிறது. பிராமணராவது புத்தசமயத்தாராவது மகம்மதியரா வது தாங்கள் பிறந்த கண்டத்துக்கப்பால் அவ்வளவாய் மார்க்க பிர பல்ய முயற்சி பண்ணவில்லை. கிறிஸ்து ஸ்தாபித்த மதமோ உலகமுழு வதிலும் செல்வாக்குள்ளதாயிருக்கிறது. அவர் ஆசியாவில் அவதரித் தவராயும் அவரது மார்க்கம் முதலாவது அங்கே ஸ்தாபிக்கப்பட்ட தாயுமிருந்தபோதிலும் அது அக்கண்டத்தோடே நின்றுபோகாமல் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலும் பிரசுரமாகிப் பூமியனைத்தை யும் தன் கொடியின்கீழ் அடக்கத்தக்கதாக அவ்வளவு சக்தியுள்ளதா யிருக்கிறது.

IV. கிறிஸ்துவானவர் மனிதருக்கருளும் நன்மைகளினிமித்தம் அவரைச் சூரியனுக்கு உவமிக்கலாம்.

1. அவர் நல்கும் நன்மைகளுக்குள் வெளிச்சம் ஒன்று. அவர் வெளிச்சம் தருகிறார். அவர் தேவனுடைய யதார்த்த தன்மையை வெளிப்படுத்தினார். மோசேயும் தாவீதும் தீர்க்கதரிசிகளும் தேவ னுடைய தன்மையை வெளிப்படுத்தினார்களாயினும், அவ்வெளிப் படுத்தல் நிறைவானதல்ல. கிறிஸ்துவிலோ, தேவலக்ஷணங்களாகிய அன்பும் இரக்கமும் நீதியும் பரிசுத்தமும் நன்மையும் பிரத்தியக்ஷமாய் விளங்கினது. மேலும் அவரே பாவியின் யதாஸ்திதியையும் மனித னுடைய சீர்கேட்டையும் அவன் இருதயத்தின் திருக்கையும் பாவத் தின் அகோரத்தையும் விசதமாய் புலப்படுத்தினதுடன், மனிதர் கேட்டுக்கு நீங்கும் வழியையும் காண்பித்துத் தாமே வழியும் சத்திய மும் ஜீவனுமாயிருக்கிறதாகத் திருவாய்மலர்ந்தருளி, மோட்சலோகத்



தின் மகிமைகளையும் எடுத்துரைத்தார். அவர் ஜீவனையும் அழியா மையையும் வெளியரங்கமாக்கினார்; தமது பிதாவின் வீட்டையும் அங்குள்ள வாசஸ்தலங்களையும் பரமானந்தங்களையும் தெரியப்படுத்தி னார். இவைகளையெல்லாம் நமது ரக்ஷகர் தம் திருவாக்கினாலும் நன் மாதிரியினாலும் உயிர்ப்பிக்கும் சக்தியினாலும் வெளிப்படுத்துகிறார்.

2. கிறிஸ்துவானவர் சகல திவ்விய அலங்காரத்துக்கும் ஆதி காரணராயிருக்கிறார். மனிதன் சுபாவமாயிருந்த அந்தகாரமும் அலங் கோல ஒழுக்கமுமுள்ளவன். அவன் குணம் மெத்த முரடும் இருத யம் கடினமுமுள்ளது. மோசம், கீழ்ப்படியாமை, பெருமை, பகை முதலான துர்க்குணங்களினாலே அவன் கெட்டுப்போனவன். அப் படிப்பட்ட மனிதனுடைய இருதயத்தின்மேல் நீதியின் சூரியன் தமது கிரணங்களை வீசினாலோ, எவ்வளவு பெரிய மாறுதல் உண்டா கிறது! பெருமைக்குப் பதிலாகத் தாழ்மையும், பகைக்குப் பதிலாக அன்பும், கீழ்ப்படியாமைக்குப் பதிலாகக் கீழ்ப்படிதலும் உண்டாகி, இவ்விதமாய் அவன் கிருபை வரப்பிரசாதங்களினால் அலங்காரம் பெற்று மிகவும் சௌந்திரியமுள்ளவனாகிறான். இந்தப்பிரகாரமாக, சுவிசேஷ ஒளி பிரவேசியாத ஒரு தேசத்தில் பெருங்கொடுமைகளும் அவலட்சணமான சடங்குகளும் இருள்நிறைந்த செய்கைகளும் அநி யாயங்களும் நடப்பாயிருக்கிறதென்று நாம் பார்க்கலாம். நீதியின் சூரியனுடைய ஆரோக்கியத்துக்கேதுவான கதிர்கள் அத்தேசத்தின் மீது பாயும்போதோ, மகா பெரிய மாறுதல் உண்டாகிறது. நீதியுள்ள சட்டங்களும் பரோபகார ஏற்பாடுகளும் அங்கே ஸ்தாபிக்கப்பட, பாழான காடானது செழிப்பான நாடாகிறது. ஹிந்துமதம் ஆங்கி லேயருடைய மதமாகிறதென்று வைத்துக்கொள்வோம். அப்படி யானால் அத்தேசத்தின் அலங்காரமும் மகிமையும் எவ்வளவு சீக்கிரம் அற்றுப்போம். அதற்கு மாறாகக் கிறிஸ்துமார்க்கம் இந்தியாவின் மத மானாலோ, விவேகமுள்ள ஹிந்துக்கள் தேவகுமாரனின் சீஷர்களாகி, கிருஷ்ணனுடைய மாதிரியைப் பின்பற்றுவதைவிட்டுக் கிறிஸ்து வின் மாசற்ற மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாகவும், முப்பத்து முக்கோடி தேவர்களைப் பூசிப்பவர்கள் ஒன்றான மெய்க்கடவுளை வழிப் படுகிறவர்களாகவும், தமிழர் மகாராஷ்டிரர் வங்காளர் முதலிய பல ஜாதிகளாய்ப் பிரிந்திருக்கிறவர்கள் ஒரே ஜனக்கூட்டமாக இணைக்கப் பட்டவர்களுமாவார்களே: அவ்வண்ணம் நேரிடும் பக்ஷத்தில், இது எவ்வளவு மகிமையும் சிறப்பும் பொருந்திய தேசமாயிருக்கும்! ஜக ஜோதியானவராகிய இயேசுபெருமான் இத்தேசத்தின்மேல் பூரண மாய்ப் பிரகாசிக்கும்வரையில் இப்பேர்ப்பட்ட சந்தோஷகரமான மாறுதல்கள் சம்பவிக்கும் என்றெண்ண வொண்ணாது.

3. கிறிஸ்துநாதர் எல்லா ஆவிக்குரிய விர்த்திக்கும் காரணரா யிருக்கிறார். சூரியனுடைய கதிர்கள் வீசப்பெறுவதினாலேதான் பூமியில் புல்பூண்டு விருட்சங்கள் தழைத்துச் செழிக்கின்றன. இதுவும் நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவுக்கு ஏற்ற உபமானமாயிருக்கிறது. அவரையல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது. அவர் அறி வுக்கு ஊற்றாயிருக்கிறார். நம்முடைய அறிவு எவ்வளவு விசால முள்ளதாயிருந்தபோதிலும் மெஞ்ஞான விர்த்தியையோ அவரிட மிருந்துதான் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்தான் இரட்சிப் படையும் வழியைக் காண்பிக்கிறவர். மனந்திரும்புதலுக்கும் அவர் காரணர். அவர் ஒருவரே மனிதனை அந்தகாரத்தினின்று திருப்பக் கூடியவர். அவர்களுடைய கண்களைத் திறக்கவும், காதுகள் கேட்கச் செய்யவும், சித்தத்தை நடத்தவும், மனதைப் புதுப்பிக்கவும் திராணி யுள்ளவர் அவரே. அவர் சமாதானத்துக்கும் சந்தோஷத்துக்கும் ஊற்றாயிருக்கிறார். வருத்தப்படுகிறவர்களுக்கு இளைப்பாறுதலையும் துக்கப்படுகிறவர்களுக்கு மகிழ்ச்சியையும் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலையும் கொடுக்கிறவர் அவர்தாம். கீழ்ப்படிதலுக்கும் அவர் காரணர். அவர்மூலமாய் நமக்குள் நீதியின் கனிகள் உருவாகி முதிர் கின்றன. அவர் கிருபை நமக்குப் பலத்தைக் கொடுக்கும்.

மேற்கண்டவைகளிலிருந்து மூன்று காரியங்கள் அநுமானிக்க லாகும்:—

1. கிறிஸ்துமார்க்க விரோதிகளாகிய அவிசுவாசிகளுடைய பிர யத்தனங்களுக்கு நாம் அஞ்சவேண்டிய அவசியமில்லை. சூரியனைச் சேதப்படுத்த யாராலாகும்? அதுபோல நம்முடைய நீதியின் சூரிய னாகிய கிறிஸ்துவுக்கும் அவர் குடையின்கீழடங்கிய நமக்கும் யாதொரு சேதமுண்டாக்க ஒருவராலும் கூடாது.

2. நம்மில் நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவினிடமிருந்து ஒளி பெற்றவர்கள் எவ்வளவுதூரம் அவ்வொளியை மற்றவர்களுக்குப் பிரதிவிம்பிக்கிறோம்? கிறிஸ்து சுய ஒளியுள்ளவர்; நாமோ அவரிட மிருந்துவரும் வெளிச்சத்தைக்கொண்டு பிரகாசிக்கிறோம். இந்த வெளிச்சம் நம்மிலிருந்து மற்றவர்களுக்கும் வீசும்படி செய்வது நமது கடமை. நம்முடைய உடன் மனிதரில் ஏராளமானவர்கள் இன்ன மும் இருளிலிருக்கிறார்கள். உன்னதத்திலிருந்து தோன்றிய அரு ணோதயம் இதுவரையும் அவர்கள்மேல் உதிக்கவில்லை. சுவிசேஷ ஒளி அவர்களுக்குக் கிடைக்கும்படி நாம் செய்கிறதென்ன?

3. நீதியின் சூரியனுடைய அருணோதயக் கதிர்கள் உள்ளத்தில் உதயமாகப் பெறாதவர்கள் நமக்குள் உண்டா? ஆரோக்கியம் தரும் கிரணங்கள் வீசிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் நாம் அவரை



ஏற்றுக்கொள்ளாதேபோனால் ஆரவாரத்தோடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் பாவிகளை நியாயந்தீர்த்து ஆக்கினை செலுத்தவரும் கடைசிநாளில் அவருடைய வருகையின் பிரசன்னத்தை எப்படிச் சகிப்போம்? ஆகையால் இந்த அநுக்கிரக காலத்திலேயே அவரிடத்தில் சேருங்கள். இரட்சிப்பின் இந்த நாளிலேயே அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். தூங்குகிற நீங்கள் விழித்து மரித்தோரை விட்டெழுந்திருங்கள். அப்பொழுது கிறிஸ்து உங்களைப் பிரகாசிப்பிப்பார்.

## Missionary Financial Responsibility

### By the Rev. N. Devasagayam

### ஜீவதூதுக்குப் பொருளீட்டித் தருதல்
### சபை மேய்ப்பன் பொறுப்பு

#### உலகைச் சுவிசேஷ வல்லமைக்குக் கொணரப்
#### பெருந்திரவியம் தேவை

கிறிஸ்தவர்கள் இதன்பொருட்டு இதுவரையும் கொடுத்துவரு கிற தொகை மிகச் சிறு தொகையே. வட அமெரிக்காவில் சுவிசே ஷக் கிறிஸ்தவர்களுள் திருப்பந்திக்கு அருகராயிருப்பவர்கள் கணிதி யை எடுத்து அவர்கள் ஜீவதூதுக்குக் கொடுக்கிறதைச் சராசரி பார்த்த போது, நூற்றுக்கு அறுபதுபேர் ஒன்றுமே கொடுக்கிறதில்லை என்று வெளிப்பட்டது. 1902-ம் வருஷத்தில் தொரொண்டோ நகரில் சுயேஷ்ட சுவிசேஷ சங்கக் கூட்டம் வைத்தபோது ஐக்கியநாட் டிராச்சியத்திலும் கனடாவிலும் நாலு பெரும் சுவிசேஷ சபைப் பகு திகளில் 12,000 இடத்துச் சபைகள் உலகில் சுவிசேஷம் போகாத ஸ்தானங்களுக்கு அதை அனுப்ப ஒரு செல்லாக்காசும் கொடுக்க வில்லை என்று விளங்கிற்று. இயேசுகிறிஸ்து தம் திருச்சபைக்கு வெளிப்படையாய்த் தெரிவித்திருக்கிற விருப்பங்கள் நோக்கங்களு டன் இந்த நடவடிக்கையை ஒத்துப்பார்த்தால், கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கைக்கு அவர் ஒப்புவித்திருக்கிற பணத்தை சுய பிரயோசனத் திற்கு அபகரித்துக்கொண்டார்கள் என்று திடுக்கிட்டுச் சொல்ல வேண்டும்.

உலகில் திருச் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டிய இடங்க ளின் பெரிய விஸ்தாரத்தையும் அதின்பொருட்டுப் பொருள் வழங்க வேண்டியவர்களுக்கு இருக்கிற கைப்பொருள் திரட்சியையும் சரி

யொத்து நோக்கினால், திருத்தூதின் பொருட்டு அளிக்கப்படும் கொடை மிகச் சிறிதேயாகும். கிறிஸ்தவர்கள் ஜீவதூதுக்குத் தரும் பொருள் முன்னிலும் இப்போது அதிகமேயானாலும், அது அவர்களுக்கு முன்னிலும் இப்போது அதிகமாயுள்ள செல்வப் பெருக்குக்குமுன் ஒன்றுமில்லையாகும். மிஷன் நடத்திவருகிற மிஷன் ஆலோசனைச் சங்கத்தார்கள் வட அமெரிக்காவில் 1902-ம் ஆண்டு ஒன்றுகூடி, அங்குள்ள சபைகள் தம் தம் சுய செலவுக்கு எவ்வளவு கொடுக்கின்றன மிஷன் செலவுக்கு எவ்வளவு கொடுக்கின்றன என்று கணக்கெடுத்தபொழுது, சுய செலவுக்கு இருபதுமடங்கும் மிஷன் செலவுக்கு ஒரு மடங்கும் கொடுக்கின்றன என்று அறிந்தார்கள். சுயசபை ஆத்துமாக்களுடன் உலகிலுள்ள சுவிசேஷமறியாத ஆத்துமாக்களின் இலக்கம் ஒன்றுக்குப் பல நூறுமடங்கு அதிகமாயிருக்கையில், இது சரியாகுமா?

மிஸியோன் வேலை ஸ்தானங்களைக் கண்ணுற்றால் பணம் உதவ இதுவே நல்ல சமயம். எங்கும் வேலைக்குக் கதவு விரியத் திறந்திருக்கிறது. வயல்கள் பழுத்து முதிர்ந்த தானியம் நிறைந்திருக்கின்றன. அறுக்கிறதற்கு ஆட்கள் போகக் காத்திருக்கிறார்கள். இரட்சிக்கிற சுவிசேஷ அபிவிர்த்திக்கும் உலகில் வியாபித்திருக்கிற தீமைகளின் நிவிர்த்திக்கும் இதுவே நல்ல தருணம். இந்தத் தருணத்தைச் சரியாய் உபயோகித்துக்கொண்டால் திரளான பலனைச் சேர்த்துக்கொள்ளலாம். நாலாபக்கத்திலும் இப்படித் தருணம் வாய்த்திருந்தும் கிறிஸ்தவர்களுக்கு இப்போது முன்னிலும் அதிக சொத்துக் கிடைத்திருந்தும் ஜீவதூதுக்காக அவர்களுடைய பணக்கொடை அதிகப்படவில்லை. அந்தத் தூதுக்காகப் பிரித்துப் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிற திரவியம் இப்போது பேரவசியம். ஆதலால் கிறிஸ்தவர்கள் ஒன்றில் சமயங்களையும், வேலையாட்களையும், ஆத்துமாக்களின் இரட்சிப்பையும் தாரும் ஆண்டவரே என்று ஜெபிப்பதை நிறுத்தவேண்டும் அல்லது ஜீவதூதுக்குப் பொருள் தருதலை அதிகப்படுத்தவேண்டும். மேலும், கிறிஸ்தவ தேசங்கள் தங்கள் கிறிஸ்தவ உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கே கிறிஸ்தின் இராட்சியம் உலகில் இடம் பரந்து விசாலிக்கப்பண்ணவேண்டும். இதுகாறும் உலகில் நிகழ்ந்த சரித்திரத்தைச் சோதித்தால், எந்தத் தேசத்திலே திரவியம் வெள்ளமாய்ப் புரண்டு வழிகிறதோ அந்தத் தேசத்திற்கு அநர்த்தக்காலம் வந்துவிட்டது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். தானியேல் உவெப்ஸ்தர் என்பவர் அமெரிக்காவுக்குப் போய்த் திரும்பினபோது கூறினதாவது: ‘அமெரிக்காவுக்குக் காத்திருக்கிற அழிவை நான்கு சொல்லுள் அடக்கிச் சொல்லலாம். திரவியப்பெருக்கு, மாம்சத்திற்குரிய ஜீவியம், நிலைகுலைவு, நாசம்.’ வெள்ளைக்காரர் சில வருஷங்களாய் ஜப்பான், சீனா சக்கிரவர்த்த மண்டலங்கள் நாகரீகச் சீர்திருத்தங்களில் உயர்கதி அடைவதைப் பார்த்து ‘வெள்ளை நிறத்துக்கு மஞ்சள் நிறத்தால் ஹானி வரும்’ என்று கூவுகிறார்கள். ‘காங்கிரிகேஷனலிஸ்ட்டு’ பத்திரிகை சொல்லுகிறபடி வெள்ளை நிறத்துக்கு மஞ்சள் நிறத்தால் அழிவு வரும் என்று பயப்படுகிறவர்கள் மஞ்சள் நிற மனுஷரை நினைக்கவேண்டியதில்லை; மஞ்சள் நிறப் பொன்னையே நினைக்கவேண்டும். பொன்னை அளவிறந்து மலைபோல் குவிப்பதும் குவித்த பொன்னைத் துர்உபயோகப்படுத்துவதுமே உள்ளபடி ‘மஞ்சள் நிறத்தால் வரும் அபாயம்.’

செல்வம் பெருகப் பெருக அதைச் சரியாய் உபயோகியாமை தேசங்களுக்கும் சீமைகளுக்கும் நாசத்தை உண்டாக்குமானால், அந்தப் பெருக்கையடைந்திருக்கிற திருச்சபை அதைச் செவ்வனே கையாடாவிடின் அது என்ன கதியாகும்? திருச்சபை பொருளாசை, செருக்கான ஜீவியம், உலகசிந்தை இவற்றால் சிதைந்து சீரழியாதிருக்கவேண்டின், அது தன் திரவியத்திற்குத் தகுந்த கால்வாய் வெட்டி அதிலே அதைப் பாய்விக்கவேண்டும். ஒருமுறை தம்மைப் பார்க்க வந்திருந்த தோமாஸ் அக்வீனாவை நோக்கி, பாப்பானவர் தம் அருகிலிருந்த தங்கநாணயக் குவியலைக் காட்டி ‘பார், தோமாஸ், முன்காலத்திலே ‘வெள்ளியும் பொன்னும் எனக்கில்லை’ என்று பேதுரு சொன்னதை இக்காலத்துத் திருச்சபை சொல்ல நிமித்தியமில்லை’ என்றாராம். அது கேட்ட தோமாஸ் ‘உண்மைதான், ஆண்டவனே! ஆனாலும் இந்தக்காலத்துச் சபைக்குச் சப்பாணியைப் பார்த்து ‘எழுந்து நட’ என்று சொல்லுந் திராணியுமில்லை’ என்றாராம்.

## ஜீவதூதுக்குத் திரவியம்தேடுவதில் சபைகுரு அநுசரிக்கவேண்டிய முறைகள்

‘தன் சபைக்குப் பொறுப்பான தருமங்களைச் செலவுபண்ணும் சாமர்த்தியம் ஒரு குருவுக்கு இருந்தால், அவரே அதை மேய்த்து நடத்த வல்லவர் என்று துணிந்து சொல்லலாம்.’ இப்படிக் காரியம் அறிந்த ஒருவர் சொல்லுகிறார். நம் காலத்தில் ஒரு பக்கத்தில் சபைகளின் திரவியம் அதிகரிக்கிறது, இன்னொரு பக்கத்தில் உலகத்தைக் கிறிஸ்துவுக்கு ஜயிக்க திருச்சபை சூழ்ச்சி செய்துவருகிற சாதனங்களும் சங்கங்களும் அதிகரிக்கின்றன. திருச்சபை ஏற்படுத்திவருகிற சாதனங்களைக் கடைப்பிடித்து உலகத்தைத் திருச்சுவிசேஷத்திற்கு வசப்படுத்த குரு தம் சபையைத் தூண்டி அதின் திரவியத்தை விநியோகஞ்செய்வது இந்தக் காலத்தில் மிக்க கஷ்டமே. இது விஷயத்தில் நெடுநாள் அநுபவம் கண்டிருக்கிற சில சபைகள், சங்கங்

களின் அநுஷ்டானங்களைக்கொண்டு சபைகுருவானவர் சித்தியுடன் அநுசரிக்கத்தக்க சில முறைகளை இங்கே சொல்லுவோம்.

**முதலாவது:** செல்லுஞ் செலவையெல்லாம் தப்பாமல் அடக்குகிற மொத்தக்கணக்கு எடுத்து அதைச் சபையில் வசூல் செய்யத் தகுந்த வழிவகை ஏற்படுத்தி, அந்த வழிவகையைக்கொண்டு செலுத்தப் பக்குவமுள்ள நிர்வாகச் சங்கத்தைக் குரு தன் சபையில் நியமிக்க வேண்டும். தன் சபை எந்தெந்த நல்ல பரோபகாரச் செயல்களில் தலையிட்டு உழைக்கிறதோ அந்தந்த உபகாரச் செயல்கள் ஒன்றுந் தாழாமல் சகலமும் நடைபெறப் பொருள் ஈட்டும் திராணி அந்த நிர்வாகச் சபைக்கு இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அதனுள் சேர்ந்துள்ள ஆட்கள் கர்மம் சிதையாமல் கண்ணோடே வல்லவர்களும் உலகில் நடைபெறுகிற ஜீவதூதில் அபிமானமுள்ளவர்களுமாய் இருக்கவேண்டும். தன் சபை செய்யக் கடமைப்பட்டுள்ள ஜீவதூதுக்கென்று வருஷச் செலவின் மொத்தமதிப்பில், ஒரு வரையறுத்த மதிப்பு இருக்கவேண்டும். இப்படிச் செய்யாமையினாலேயே அநேக சபைகள் உலகில் ஜீவதூது அனுப்பவேண்டிய கடமையில் தாழ்ந்துபோயின.

இரண்டாவது:—ஜீவதூது சபையின் ஒவ்வொரு தனி அவயவத்தையும் பொறுத்ததாதலால், சபையிலிருக்கிற ஒவ்வொரு பொறுப்பறியும் ஆளையும் அதற்குப் பொருள் கொடுக்கப் பயிற்றவேண்டும். செல்வர் வறிஞர், இளையோர் முதியோர், கோவிலாராதனைப் பிரியர் வெறுப்பர், ஜீவதூதை அபிமானித்தவர்கள் அபிமானிக்காதவர்கள், இவர்கள் எல்லாரையும் அயரவிடாமல் சிரத்தையுடன் தூண்டினால் சபையிலுள்ளார் யாவரையும் கடமை தாழாமல் பொருள் கொடுக்கப் பழக்கலாம். ஜமேயிக்காத் தீவில் ஒரு பிரஸ்பித்தீரியச் சபைகுரு திருப்பந்திக் கருகான தம் சபையார் யாவரும் தலைக்கு இவ்வளவென்று விதித்த விழுக்காட்டைக் கொடுக்கப் பயிற்றினார். அப்படி மூன்று வருஷப் பழக்கமானபின் இப்போது அநேக வருஷங்களாகியும் ஜீவதூதுக்கு ஆள் தவறாமல் கொடுக்கிற பழக்கம் நிற்கவில்லை. கிளீவ்லாந்தில் ஒரு காங்கிரிகேஷனல் சபையில் திடப்படுத்தப்படுகிற ஒவ்வொரு ஆளும் ஜீவதூதுக்குப் பணந் தருவேன் என்று வாக்குச் சத்தியம் எழுதிக்கொடுக்கிற வழக்கமுண்டாம். திடப்படுத்தல் நிறைவேறின சில தினங்களின் பின்னர் ஒவ்வொரு ஆளுக்கும் அந்தச் சபை கொண்டு செலுத்தவேண்டிய பரோபகாரக் கிரியைகளின் பட்டியும் அததற்கு ஒவ்வொரு ஆளுக்கு வரும் வீதமும் செப்பியுள்ள ஒரு கடிதம் அனுப்பப்படுமாம். அதற்குப் பெரும்பாலார் பிரீதியுடன் அநுகூலமான உத்தரமனுப்புகின்றார்களாம்.

(மொட்டு வேத பண்டிதர்)

800 00
161287

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# அறிவிப்பு

இப்பத்திரிகையை அதிகமாய்ப் பரவச்செய்யும் நோக்கத்துடன் 1913-ம் ௵ ஜனுவரிமாதம் முதல் வெளியாகும் புத்தகத்தில் இங்கிலீஷிலும் ஓர் வியாசம் பிரசுரிக்க நாம் உத்தேசித்திருக்கிறோம்.

இப்பத்திரிகைக்குக் கையொப்பக்காரரான நண்பர்கள் இதைத் தங்கள் நேயர்களுக்குந் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.